தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—141

பொருளாதார வளர்ச்சிக் கட்டுரைகள்

(ESSAYS IN ECONOMIC DEVELOPMENT)

ஆசிரியர் :

வி. கே. ஆர். வி. ராவ்

தமிழாக்கம் :

எம். கே. சுப்பிரமணியன், எம்.ஏ.,
பொருளாதாரப் பேராசிரியர்,
சிக்கைய நாயக்கர் மஹாஜனக் கல்லூரி,
ஈரோடு.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு-அரசாங்கம்

First Edition—April 1967

B.T.P. No. 141

ESSAYS IN ECONOMIC DEVELOPMENT

V. K. R. V. RAO

Translation
M. K. SUBRAMANIAN

Price Rs. 7-75

This Tamil edition is published by arrangement with ASIA PUBLISHING HOUSE, BOMBAY, publishers of the original English edition entitled 'ESSAYS IN ECONOMIC DEVELOPMENT'.

Printed by
THE UNITED PRINTERS,
MADRAS-1.

அணிந்துரை

(திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்லமெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும், மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றுன 'பொருளாதார வளர்ச்சிக் கட்டுரைகள்' என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் **141**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **176** நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலை மண்டபத்தில் கொலுவீற்றிருக்கிருள். எனவே, இவ் அன்னையை வாழ்த்துவோமாக! உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

முகவுரை

கடந்த இருபது ஆண்டுகளாக நான் எழுதியவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற கட்டுரைகளே இந் நூலில் இடம்பெற்றுள்ளன. நான் டெல்லி பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியபொழுது, 1943ஆம் ஆண்டு, ஜனவரித் திங்களில் நிகழ்த்திய துவக்க விழாச் சொற்பொழிவுதான் 'பொருளாதார நடவடிக்கையின் இயல்பும் குறிக்கோளும்' என்ற தலைப்புடைய கட்டுரையாகும். வளர்ச்சியுற்ற நாடுகளில் விஞ்ஞானம், தொழில் நுண்ணியல் ஆகியவற்றின் பிரயோகப் பயன்குறித்த ஐ.நா. சபையின் மாநாடு ஜெனீவாவில் 1963ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நடந்தபொழுது, நான் வழங்கிய கட்டுரைதான் 'பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சம்' என்ற தலைப்பின்கீழ் வரும் ஒன்றாகும். மற்றவையனைத்தும் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் எழுதப்பட்டவைகளாகும். இந்தியப் பிரச்சினைகள் குறித்து ஆசிரியர் எழுதியவைகள் இக் கட்டுரைகளில் இடம் பெறவில்லை. ஆனால், இக் கட்டுரைகள், பொருளாதார வளர்ச்சியின் சில கோட்பாட்டு ரீதியான கூறுகளையும் பன்னாட்டுக் கூறுகளையும் மட்டும் உள்ளடக்கியுள்ளன. இக் கட்டுரைகள் அனைத்தும் முதலில் எழுதப்பெற்ற நிலையிலேயே மாற்றமேதுமின்றி வெளியிடப்படுகின்றன. ஆனால், வேலைநிறைவுபற்றிய கட்டுரையைத் திருத்தியுள்ளேன். பற்றாக்குறை நிதியாக்கம் பற்றிய கட்டுரையைப் பெரிதும் மீண்டும் எழுதியுள்ளேன்.

ஆசிரியரின் பொருளாதாரத் தத்துவத்தையும், அவரது சமதர்மத்தின் இலட்சிய அடிப்படைகளையும் உண்மையில் முதல் கட்டுரை விளக்குகிறது. வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தின் பிரச்சினைகளில் கீனிசியப் பெருக்கிக் கோட்பாட்டின் பங்குபற்றியே இரண்டாவது கட்டுரை ஆராய்கிறது. வேலைநிறைவுக் கோட்பாடுபற்றியும், வளர்ச்சியுற்ற, தொழில்மயமான பொருளாதாரங்களில் அக் கோட்பாட்டின் நிலையுடன் ஒப்பிடும்பொழுது வளரும் பொருளாதாரத்தில் அதன் நிலை என்ன என்பதுபற்றியும் மூன்றாவது கட்டுரை விளக்குகிறது. தேசிய வருமானத்தின் பன்னாட்டு ஒப்புமைகள் குறித்த சலிப்பூட்டும் பிரச்சினைபற்றியும், அதில் அடங்கியுள்ள குறைபாடுகள்பற்றியும் நான்காவது கட்டுரை விவரிக்கிறது. பொருளாதார வளர்ச்சியில் பற்றாக்குறை நிதியாக்கக் கோட்

பாட்டின் பங்குபற்றி ஆராய்ந்து, வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில் பற்றாக்குறை நிதியாக்கத்திற்கும் விலைப்பெருக்கிற்கும் உள்ள தொடர்புபற்றிய மாதிரியம் (model) ஒன்றினை ஐந்தாவது கட்டுரை உருவாக்கியுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்குப் பொருத்தமான விலைக் கைக்கோளினைப்பற்றிய சில கருத்துகளை ஆறாவது கட்டுரை வழங்குகிறது. பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சத்தின் பங்கினை உருவாக்குகின்ற முதல் முயற்சிதான் ஏழாவது கட்டுரையாகும். சுதந்தர சமுதாயத்தில் பொருளாதார வளர்ச்சி விளைவிக்கும் சவாலினை எட்டாவது கட்டுரை விவாதிக்கிறது. ஆஸ்திரேலியாவில், 1959 மாரிக்காலத்தில், ஆசிரியர் நிகழ்த்திய டயாசன் நினைவுச் சொற்பொழிவுகளின் (Dyason Memorial Lectures) அடிப்படையில் இக் கட்டுரை எழுதப்பெற்றது. ஐ.நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய துணைக் குழுவின் தலைவராக 1949, 1950ஆம் ஆண்டுகளில் பணியாற்றியபொழுது, வரலாற்று ரீதியாகக் கருத்துகளை விமரிசனம் செய்து, பொருளாதார வளர்ச்சிக்குக் குறிப்பாகத் தேவைப்படுகின்ற சமூக, பொருளாதார உள்ளார்ந்த கட்டமைவுடன் (infra - structure) தொடர்புள்ள, பாங்கு ஏற்காத திட்டங்களுக்கு நிதி வழங்கக் கூடிய ஒரு பன்னாட்டு வளர்ச்சி அமைப்பு தேவை என்பதனை ஆசிரியர் விளக்குவதுதான் ஒன்பதாவது கட்டுரையாகும். லீட்ஸ் பல்கலைக் கழகத்தில் (University of Leads) 1960ஆம் ஆண்டின் மாரிக்காலத்தில் ஆசிரியர் நிகழ்த்திய மான்டேகு பர்டன் சொற்பொழிவுதான் (Montague Burton Lecture) பத்தாவது கட்டுரையாகும். பொருளாதார வளர்ச்சியில் பன்னாட்டு உதவியின் சாத்தியங்களைப்பற்றியும் வரையறைகளைப்பற்றியும் இக் கட்டுரை விளக்குகிறது. ஐ.நா. சபையின் உணவு, விவசாய அமைப்பிற்கு 1961ஆம் ஆண்டில் ஆசிரியர் தயாரித்தும் வெளியிடாத கட்டுரைதான் பதினோராவது கட்டுரையாகும். உலகத்தில் கிடைக்கும் உணவின் அளவைப் பற்றியும், பொருளாதார வளர்ச்சியில் அதன் உபயோகம் பற்றியும் இக் கட்டுரை விளக்குகிறது. கடைசிக் கட்டுரை, முதல் கட்டுரையைப்போலவே தத்துவ விளக்கம் உடையதாகும். இன்ஸ்டிடியூட் டீ சயன்ஸ் இக்கனாமிகே அப்ளிகே (Institut de Science Economicque Appliquee) சார்பில் 1960ஆம் ஆண்டில் பாரிஸ் நகரில் ஆசிரியர் நிகழ்த்திய சொற்பொழிவு தான் இக் கட்டுரையாகும்.

டெல்லி, லீட்ஸ் பல்கலைக் கழகங்கள், இந்தியப் பொருளாதார விமரிசனத்தின் ஆசிரியர், உலக நடவடிக்கைகளின் ஆஸ்திரேலியப் பத்திரிகை ஆசிரியர், பொருளாதார வார

ஏட்டின் ஆசிரியர், கேம்பிரிட்ஜின் போவஸ் அண்டு போவஸ் (Messrs Bowes and Bowes) ஆகியோர் அனைவருக்கும், இக் கட்டுரைகளை வெளியிட அனுமதித்தமைக்காக எனது உளங் கனிந்த நன்றி உரித்தாகும். இவற்றின் கையெழுத்துப் பிரதிகள் அனைத்தையும் படித்துச் சில திருத்தங்களும் கொடுத் துதவிய எனது நண்பர் டாக்டர் தார்ம் நாராயின் (Dr. Dharm Narain) அவர்களுக்கும் என் நன்றி. அச்சகத்தின்மூலம் இவை விரைவாக வெளிவருவதைப் பொறுப்புடன் கவனித்துக் கொண்ட திரு. கே. இராமநாதன் (பொருளாதார வளர்ச்சி இன்ஸ்டிடியூட்டின் ரெஜிஸ்ட்ரார்) அவர்களுக்கும் என் நன்றி. அகரவரிசைத் தொகுப்பு அட்டவணையைத் தயாரித்துதவிய திரு. என். கே. கோயில் (Mr. N. K. Goil) அவர்களுக்கும் நான் கடன்பட்டுள்ளேன்.

புது டெல்லி

வி. கே. ஆர். வி. ராவ்

மொழிபெயர்ப்பாளரின் முன்னுரை

இந்த மொழிபெயர்ப்பு என்னுடைய இரண்டாவது முயற்சியாகும். முன்னதைப் போன்றதா அல்லது அதனினும் சிறந்ததா என்பதனைப் படிப்போர் முடிவு கட்டவேண்டும். மொழிபெயர்ப்பு வேலையில் இடர்ப்பாடுகள் பல உள. மூல ஆசிரியரின் கருத்தோட்டத்தைப் புரிந்துகொண்டு, நெகிழ்ச்சி நிரம்பிய ஆங்கில நடையை நெகிழ்ச்சி குறைந்த தூய தமிழ் நடைக்கு மாற்றவேண்டும். அப்பப்பா, எத்தகைய தொல்லையும் பொறுப்பும் நிரம்பிய வேலை தெரியுமா, இது! மொழி பெயர்ப்பு வேலையில் மொழிபெயர்ப்பாளன் மூல ஆசிரியருக்கு எதிராகச் சதிசெய்வோனாக மாறிவிடக்கூடாது.

பேராசிரியரும் பெரும் பொருளாதார நிபுணருமாகிய டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்களுடைய சிந்தனைப் படையலை மொழிபெயர்க்கும் மகத்தான பொறுப்பினை அளித்து, எனக்கு ஊக்கமளித்துள்ள தமிழ் வெளியீட்டுக் கழகத்திற்கும் அதன் செயலர் அவர்களுக்கும் நான் பணிவன்புடன் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந் நூலின் மொழிபெயர்ப்பில் குறைபாடுகள் இருப்பின் பொறுத்தருள்க. சுட்டிக்காட்டப்பெறின், திருத்தவேண்டிய கடமை உடையேன் யான்.

மு. க. சுப்ரமணியம்

பொருளடக்கம்

1. பொருளாதார நடவடிக்கையின் இயல்பும் நோக்கமும்

பொருளாதாரத்தைப்பற்றிய சொற்பொழிவுகளைத் துவக்கும் பொருளாதார நிபுணர், பொருளாதார விஞ்ஞானத்தின் உட்பொருளினையும் விரிவினையும் சம்பிரதாய முறையில் விளக்குகின்ற முயற்சியில் ஈடுபடுவார். இத்தகைய வழக்கமான முறையிலிருந்து விலகி, சமஅளவு முக்கியத்துவம் உடையதாகத் தோன்றியும், அதே அளவு கவனம் செலுத்தப் பெருத பிரச்சினையுமாகிய 'பொருளாதார நடவடிக்கையின் தன்மையும் நோக்கமும்' என்பதுபற்றி இச் சிறு கட்டுரையில் விளக்கலாம் எனக் கருதுகிறேன். பொருளாதார விஞ்ஞானத்தின் தன்மையையும் முக்கியத்துவத்தையும்பற்றி இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்வதற்குமாத்திரமன்றி, நடைமுறைப் பிரச்சினைகளைச் சமாளித்துச் செயற்படுத்துவதற்கு வேண்டிய பொருளாதாரக் கைக்கோளின் (policy) ஆய்வு முறைகளை (criteria) வகுப்பதற்கும் இவ் விவாதம் உதவும் என்று எனக்குத் தோன்றுகிறது.

பொருளாதார நடவடிக்கை என்ருல் என்ன? இது போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது, சாமானியமான மனிதனின் பதிலிலிருந்து அல்லது மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ள பதிலிலிருந்து துவக்குவதையே நான் விரும்புகிறேன். 'மக்கள் குரலே தெய்வத்தின் குரல்' என்ற கருத்தினை நான் முக்கியமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்றபோதிலும், பொருளாதாரப் பிரச்சினைகள்குறித்துப் பொதுமக்களிடம் நிலவும் நம்பிக்கைகளும், இன்னும் முற்சாய்வுகளும் (prejudices) பகுத்துணரும் வரலாற்றடிப்படையில் அமைந்துள்ளன என்று கீன்ஸ் (Keynes) போலவே நானும் நம்புகிறேன். பொருளாதார நடவடிக்கை என்ருல் என்ன என்று தெருவில் நடந்து செல்லும் சாமானிய மனிதனைக் கேட்டால், இது ஆரவாரச் சொல்லாலான பகட்டான கேள்வி என்று அவன் எண்ணிய

போதிலும், தான் ஓர் தச்சன் என்றோ, தையற்காரன் என்றோ, மருத்துவன் என்றோ, அல்லது பேராசிரியன் என்றோ பதில் சொல்வான். பணம் ஈட்டி வாழ்க்கையை நடத்துவதற்கு எந்த வேலையில் அவன் ஈடுபட்டிருக்கிறானோ அந்த வேலையைப் பொறுத்துதான் அவனுடைய பதில் அமையும். பிரச்சினைக் குரிய மனிதன் சொத்துப்பேறு உடையவனாக இருந்து, எந்த வேலையும் செய்யாமல் வாழ்க்கையை நடத்துபவனாக இருப்பின், 'சொந்த வருமானத்தில் வாழ்பவன்' என்று மக்கள்தொகைப் புள்ளிவிவரக் கணக்கில் வகைப்படுத்தப்பெற்றவனாக இருப்பின், இக் கேள்வியை அவன் விரும்பமாட்டான். 'என்ன? என்னுடைய பொருளாதார நடவடிக்கையா? ஓகோ, இல்லை. நான் ஓர் கனவான்' என்ற பதிலையே அவன் அளிப்பான்; அல்லது உணர்வில் மாறுபட்டவனாக அவன் இருப்பின், சிறிது வெட்கிப் பதில் அளிப்பதைத் தவிர்ப்பான். பிரச்சினைக்குரிய மனிதன் வேலைவாய்ப்பு இல்லாதவனாக இருப்பின், தான் எந்தப் பொருளாதார நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்றும், தனக்கு வேலை இல்லை என்றும், தான் வேலையில்லாது திண்டாடுபவன் என்றும் பதில் அளிப்பான். பொருளாதார நடவடிக்கைபற்றி நிலவும் செல்வாக்கான கருத்து வேலை என்பதாகும்; அல்லது, இன்னும் சரியாகக் குறிப்பிடவேண்டுமெனில், ஒருவன் தன்னுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்ளுதல் என்பதாகும். இதுவே தெளிவான கருத்தாகத் தோன்றுகிறது.

பொதுவாகக் குறிப்பிட்டால், இத் தலைப்பைப் பொறுத்த வரையில், பொருளாதார நிபுணரின் எண்ணங்களும், மக்களிடத்துச் செல்வாக்குப்பெற்றுத் திகழும் கருத்துகளும் ஒன்றுக்கொன்று பொருந்தி இணைந்துள்ளன. மார்ஷல் (Marshall) அவர்களுடைய 'கோட்பாடுகள்' (Principles) என்னும் நூலில் பொருளாதார நடவடிக்கைபற்றிய விளக்கமோ இலக்கணமோ நான் காணவில்லையெனினும், பொருளாதார விஞ்ஞானத்தின் தன்மையையும் விரிவினையும்பற்றிய அவரது விவாதத்திலிருந்து பொருளாதார நடவடிக்கையின் இலக்கணம் குறித்து முடிவாக ஊகித்தறிய முடியும். எடுத்துக்காட்டாக, 'வாழ்க்கையின் சாதாரண அலுவல்களில் ஈடுபட்டுள்ள மனித குலத்தைப்பற்றிய ஆராய்ச்சியே' பொருளாதாரம் ஆகும் என்று அவர் இலக்கணம் வகுக்கிறார். 'வாழ்க்கையை நடத்துவதற்குப் பணம் சம்பாதிக்கும் மனிதனைப்பற்றிய ஆராய்ச்சியே பொருளாதாரம் ஆகும்' என்று பிறிதோ

ரிடத்தில் குறிப்பிடுகிறார். செல்வத்தைப்பற்றிய விஞ்ஞானமே பொருளாதாரம் என்று சில பொருளாதார நிபுணர்கள் விளக்கம் தந்துள்ளார்கள். செல்வத்தை ஈட்டுகின்ற நடவடிக்கைகள், அதனைப் பயன்படுத்துகின்ற நடவடிக்கைகள் ஆகியவற்றுடன் தொடர்புகொண்டுள்ள மனிதனைப்பற்றிய ஆராய்ச்சியே பொருளாதாரம் என அண்மையில் சில பொருளாதார நிபுணர்கள் விளக்கியுள்ளனர். பொருளாதார நடவடிக்கைபற்றி ஆராய்ந்து கஸ்டவ் காசல் (Gustav Cassel) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: 'நாம் குறிப்பிடும் பொருளாதாரம் என்பது எதுவெனில், தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டி மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் தொகுப்பே எனினும், அவை முழுத் திருப்தி அடைதல் எனும் நிலையுடன் முழுதும் ஒத்திருப்பதில்லை.' மேலும், அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'தேவைகளைப் பொறுத்த வரையில் ஓரளவிற்குத்தான் நிறைவு காணமுடியும் என்ற சூழ்நிலையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளையே பொருளாதார நடவடிக்கைகள் எனக் குறிப்பிடுகிறோம்.'

விக்செல் (Wicksell) பின்வருமாறு கூறுகிறார்: 'பொருள் சார் தேவையைப் (material need) பூர்த்திசெய்யவேண்டி மேற்கொள்ளும் ஒவ்வொரு சீரான முயற்சியும் பொருளாதார நிகழ்ச்சி அல்லது நடவடிக்கை எனப்படும்; அல்லது இன்னும் சரியாக விளக்கவேண்டுமெனில், கிடைத்த வழிவகைகளைக் கொண்டு கூடுமானவரையில் மிகப் பெருமளவு நலனை அடைதல் அல்லது குறிப்பிட்ட நலனை அடைவதற்குக் கூடுமானவரையில் குறைந்தபட்ச வழிவகைகளைப் பயன்படுத்துதல் என்பதனையே பொருளாதார நடவடிக்கை எனலாம்.' ஆங்கில மொழியில் பொருளாதாரம்பற்றிய மிகச் சிறந்த நூல்களில் ஒன்றினை எழுதிய பென்ஹாம் (Benham), 'வாழ்க்கையை நடத்துவதற்கு மேற்கொள்ளும் பொருள் ஈட்டும் வழிமுறைகளைப்பற்றியதே பொருளாதார நடவடிக்கை' என்று விளக்கி, மேலும் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'முக்கியமாகப் பணவருமானத்திற்காகவே பெரும்பாலான மக்கள் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். துய்ப்போர் பண்டங்களை அப் பணத்தைக்கொண்டு வாங்க அவர்கள் விரும்புகிறார்கள்.' எனவே, துய்ப்போர் பண்டங்களை உற்பத்தி செய்து மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே பொருளாதார நடவடிக்கையின் அடிப்படை நியாயமாகும் என அவர் முடிக்கிறார். மேற்கோள்களைப் பெருக்கிக் கொண்டேபோகாமல், மேலே குறிப்பிட்டுள்ள இலக்கணங்

களைப் பகுத்து ஆராய்வதன்மூலம் பொருளாதார நிபுணர்கள் வழக்கமாகப் புரிந்துகொள்ளும் பொருளாதார நடவடிக்கையின் முக்கிய அம்சங்களை நாம் உணரமுடியும்.

எனினும், இதனைத் தொடர்ந்து விவாதிப்பதற்கு முன்னர், 'பொருளாதார நடவடிக்கை என்று தனியாகப் பாகுபடுத்தப் பெற்ற ஒரு நடவடிக்கை இல்லை என்றும், நடவடிக்கைகள் அனைத்திலும் ஒரு குறிப்பிட்ட கூறு (aspect) பொருளாதார நடவடிக்கை எனப்படும் என்றும், அது ஒரு தனிப்பட்ட வகை இனம் (category) அன்று என்றும் பொருளாதாரத்துறையினர் சிலர் கொண்டுள்ள கருத்தினை ஆராய்வது இன்றியமையாததாகும். 'அரசியற் பொருளாதாரத்தின் பொது அறிவு' (The Commonsense of Political Economy) என்ற செல்வாக்கு மிக்க நூலில் விக்ஸ்டீட் (Wicksteed) அவர்கள் இக் கருத்தினை வெளியிட்டுள்ளார்: 'பொருளாதாரம், நிர்வாக நடவடிக்கையின் ஓர் அம்சத்தை விவரிக்கிறதேயன்றி அதன் ஒரு கிளையையன்று' என்றும், 'குறைந்தபட்ச விரயத்தை உள்ளடக்கிய நிர்வாகமே பொருளாதாரம்' என்றும் அந் நூலில் அவர் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் லயனல் ராபின்ஸ் (Lional Robbins) இக் கருத்தின் தற்காலத்திய தீவிர ஆதரவாளர் ஆவார். 'பொருள் சார் நலனின் (material welfare) காரணங்களைப்பற்றிய ஆராய்ச்சியே பொருளாதாரம் என்று அதனை வகைப்படுத்திப் பிரிக்கும் கருத்தினை (classificatory conception) மறுத்துவிட்டு, அதனைப் பகுத்துணரும் கருத்தினை (analytical conception) ராபின்ஸ் அவர்கள் முன்னிறுத்தியுள்ளார்கள். அக் கருத்தின் படி, பற்றாக்குறையினால் தூண்டப்பெற்று அமைந்த மனித நடத்தையின் ஒரு குறிப்பிட்ட கூறின்மீது கவனம் செலுத்துதலே பொருளாதாரத்தின் வேலையாகும். கொடுக்கப்பட்டுள்ள இலட்சியங்களை அடைவதற்கு வேண்டிய சாதனங்களின் பற்றாக்குறையில் விளைந்த மனித நடத்தையின் ஒரு கூறினை விளக்குவதே பொருளாதாரம். இலட்சியங்களைப் பொறுத்தவரையில், பொருளாதாரம் நடுநிலை வகிக்கிறது என்பது இதனால் பெறப்படுகிறது. எந்த இலட்சியத்தையும் நிறைவேற்றுதல் சாதனத்தின் பற்றாக்குறையைச் சார்ந்திருக்கும்வரையில் அது பொருளாதார நிபுணனின் முன்னீடுபாட்டுடன் (pre-occupations) இசைந்தே இருக்கும் என்பதும் இதனால் பெறப்படுகிறது.' இக் கருத்தை விளக்கும் முறையில் ராபின்ஸ் பின்வருமாறு கூறுகிறார்:

'பிரார்த்தனைக்கும் நல்ல வேலைகளுக்குமிடையில் காலத்தைப் பிரித்துக் கொடுப்பதில் பொருளாதாரக் கூறு எந்த

அளவுக்கு இருக்கிறதோ, அந்த அளவுக்குக் கூத்து களியாட்டத்திற்கும் தூக்கத்திற்கும் இடையில் காலத்தைப் பிரித்துக் கொடுப்பதிலும் இருக்கிறது.' அவர் மேலும் பின்வருமாறு கூறுகிறார்: 'மூல இலக்கணங்களிலிருந்து பொருளாதாரத்தின் ஆய்வுமுறையாகத் தெரிவது எதுவெனில், குறைந்தபட்ச சாதனங்களைக்கொண்டு குறிப்பிட்ட இலட்சியங்களை அடைதலே ஆகும். எனவே, சில இலட்சியங்களை அடையத் தேவைக்குக் கூடுதலான பற்றாக்குறைச் சாதனங்களைப் பயன்படுத்தும் வகையில் ஒரு திட்டம் அமைந்தால், அதனைச் சிக்கனத்திற்குப் புறம்பானது எனக்குறிப்பிடுவது நியாயமே. சிக்கனத்தினைச் சார்ந்த இலட்சியங்கள் என்பதாக ஒன்றுமில்லை. கொடுக்கப்பட்ட இலட்சியங்களை நிறைவேற்றச் சிக்கனத்தைச் சார்ந்த வழி முறைகளும், சிக்கனத்திற்குப் புறம்பான வழிமுறைகளும் மட்டுமே உள்ளன.'

ராபின்ஸின் கருத்து ஏற்கப்பட்டால் பொருளாதாரப் பகுத்தாய்வில் சாராத மனித நடவடிக்கையின் எத்துறையும் இல்லை எனலாம். எனினும், நமது நேரடியான அனுபவத்தில் இது உண்மையன்று என்பது நமக்குத் தெரியும். கொடுக்கப்பட்டுள்ள இலட்சியங்களை நிறைவேற்றும் வெறும் சாதனங்களின் உருவத்தில் நமது நடவடிக்கைகள் அனைத்தும் அமையவில்லை என்பதே இதற்கு விளக்கமாகும். உண்மையில், மனித நடவடிக்கையின் கணிசமான பகுதி அந்த நடவடிக்கைக்காகவே மேற்கொள்ளப்படுகிறது; அதுவே இலட்சியமாகவும் அமைகிறது. மனிதனின் குடும்ப வாழ்க்கையை எடுத்துக்கொள்வோம். மக்கள் திருமணம் செய்துகொள்ளும்பொழுதும், குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடி நேரத்தைக் கழிக்கும் பொழுதும் அவர்கள் அவையனைத்தும் தங்களுடைய பொருளாதார முயற்சியைச் சார்ந்தவை என எண்ணுவதில்லை. தனிப்பட்ட மக்கள் நட்பினைப் பேணிப் பாராட்டும்பொழுதோ, இசையில் திளைத்திருக்கும்பொழுதோ, ஓவியத்தைக் கண்டு களிக்கும்பொழுதோ சாதனங்கள் விரயமாகின்றன அல்லது சிக்கனமாகப் பயன்படுத்தப்படுகின்றன என அவர்கள் எண்ணுகிறார்கள் என்று நினைத்தால், அது கேலிக்குரியதாகும். குறிப்பிட்ட இலட்சியங்களை அடைய மேற்கொள்ளும் சாதனங்களை மனித நடவடிக்கையாக ஒருவன் நினைத்தால்தான் இத்தகைய கருத்துகள் பொருத்தமானவைகளாக அமையும்; ஆனால், மனித நடவடிக்கைகள் அனைத்தும் இலட்சியத்தை நிறைவேற்றப் பயன்படும் சாதனங்களாக இருப்பதில்லை;

இலட்சியத்தை நிறைவேற்றும் சாதனங்களாக மனித நடவடிக்கைகள் எந்த அளவுக்கு அமையவில்லையோ அந்த அளவுக்கு அவை பொருளாதாரக் கூறு உடையன அல்ல.

குறிப்பிட்ட இலட்சியத்தை நிறைவேற்ற மேற்கொள்ளும் சாதனங்களாக மனித நடவடிக்கை அமைந்தபோதிலும் கூட, சிக்கனத்தைப்பற்றிய ஆராய்வுகள் எப்பொழுதும் முக்கியமானவை அல்ல. எடுத்துக்காட்டாக, தேர்வில் முதல் வகுப்புப் பெறுவதே இலட்சியம் எனில், குறைந்த அளவிற்குக் காலத்தைச் செலவழித்துக் குறைந்தபட்ச முயற்சி எடுத்து அந்த இலட்சியத்தை அடைவதே சிக்கன முறையாகும். அதன் பொருள் என்னவெனில், தரம் குறைந்த குறுக்கு வழிப் புத்தகங்களைப் பயின்று, பாடத்தில் போதுமான அளவுக்கு அறிவு பெருமல் இருப்பதாகும். இந்த வழியினைப் பேராசிரியர் தம் மாணவர்களுக்கு நிச்சயமாகச் சுட்டிக்காட்டமாட்டார் என்பது திண்ணம். இருந்தபோதிலும், முதல் வகுப்பில் தேர்வதற்கு அதுவே சிக்கனமான வழி என ராபின்ஸ் மறுமொழி பகரலாம். கல்வித்துறையைப் பொறுத்தவரையில் அவர் அதனை ஏற்கமாட்டார். எனவே, மனித நடவடிக்கைகள் அனைத்திலும் பொருளாதாரக் கூறு உண்டு எனக் கூறுவதில் என்ன கருத்து இருக்கிறது? ஒரு ரோஜா மலரின் தரத்தை அதன் தோற்றத்திலிருந்தும், நிறத்திலிருந்தும், அல்லது அதன் மணத்திலிருந்தும், அல்லது அவை இரண்டிலிருந்தும் ஒருவன் மதிப்பிடுகின்றான். ரோஜா மலருக்கு நிறை உண்டு அல்லது பருமன் உண்டு என்ற உண்மையைக்கொண்டு நாம் அதன் தரத்தை மதிப்பிடுவதில்லை. எல்லாவிதச் சாதனங்களையும் சார்ந்த நடவடிக்கைகளுக்குப் பொருளாதார ஆய்வு முறை பொருந்தும் எனச் சொல்வது சரியன்று. சிலவகைத்தான நடவடிக்கைகளில் பொருளாதார ஆய்வுமுறை பொருந்தாது என்பதுமாத்திரமன்றி, இலட்சியத்தை அடைவதில் தொல்லையை உண்டாக்கித் திண்ணமாக ஊறு விளைவிக்கும் என்பதும் உண்மையாகும். மாருக, மோட்சத்தையோ, இறைவனுடன் ஐக்கியமாவதையோ குறிக்கோளாகக் கொண்ட மக்கள் குறைந்த அளவு வழிமுறைகளைப் பின்பற்றிக் குறைந்தபட்ச செலவில் தங்களுடைய இலட்சியங்களை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்று நினைப்பதில்லை. எனவே, குறிப்பிட்ட இலட்சியங்களை நிறைவேற்ற மேற்கொள்ளும் வழிமுறைகளை உண்மையாகவே சார்ந்த சில வகைத்தான மனித நடவடிக்கைகளில் பொருளாதாரக் கூறு உண்டு எனப் பேசுவது உண்மைக்குப் புறம்பானது எனலாம்.

எனினும், பொருளாதார ஆய்வுமுறையைப் பயன்படுத்த வேண்டிய மனித நடவடிக்கையின் வகையுருக்கள் (categories) நிறைய உள்ளன என்ற உண்மையை மறுக்க முடியாது. பொருளாதார ஏடுகளில் விவாதிக்கப்பெறும் உற்பத்தி, பரிவர்த்தனை, பண்டங்களையும் சேவைகளையும் பங்கீடு செய்தல் ஆகிய நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் இது பெருமளவிற்கு உண்மையாகும். அதிக உரம் போடுவதா, குறைந்த அளவுக்கு உரம் போடுவதா என்பதில் முடிவெடுக்கும் விவசாயியும், உற்பத்தி செய்வது குறித்துத் திட்டமிட்டு உற்பத்தி செய்வதில் உள்ள பல்வேறு முறைகளில் ஒன்றினைத் தேர்ந்தெடுக்கும் தொழில் நிபுணரும், தான் விரும்பும் பண்டத்தை வாங்குகின்ற அல்லது விற்கின்ற வியாபாரியும் சிக்கன ரீதியாகவே சிந்தித்து முடிவு எடுக்கிறார்கள். இக் கோட்பாட்டின்கீழ்ப் பல்வேறு பயன்பாடுகளைக் கொண்ட பற்றுக்குறைச் சாதனங்களைப் பயன்படுத்துவதில் எதனைத் தேர்ந்தெடுப்பது என்ற பிரச்சினையும் அவர்களை நோக்கி எழுகின்றது. சொந்த வாழ்க்கையிலும்கூட ஒருவன் ஒரு வேலையை ஒரே ஒரு வேலைக்காரன் செய்யமுடியும் எனில், இரண்டு வேலைக்காரர்களை நியமிக்கமாட்டான்; அவனுடைய இல்லத்தலைவி பண்டத்தைப் பாழாக்குவதையும் ஆதரிக்க மாட்டாள். மார்ஷல் அவர்களால் குறிப்பிடப்பெறும் 'வாழ்க்கையின் சாதாரண அலுவல்களில் ஈடுபடும் மனித இனத்தினை'ச் சார்ந்த மனித நடவடிக்கை எனும் மாபெருந் துறையில் சாதனங்களைப் பயன்படுத்துவதில் சிக்கனம் எனும் ஆய்வு முறையினையும், விரயத்தைத் தடுத்தல் எனும் ஆய்வு முறையினையும் மிகவும் முக்கியமானவைகளாகப் பொருளாதாரத் திட்டத்தில் கருதுகிறார்கள்.

சுருங்கக்கூறின், பொருளாதாரக் கூறு ஏதுமற்ற மனித நடவடிக்கைத் துறைகள் சில இலட்சியங்களாகவே மிளிர்கின்றன. அறிவுத்துறையிலும் சமயத்துறையிலும் குறிப்பிட்ட இலட்சியங்களை அடைவதற்குரிய வழிமுறைகளைச் சார்ந்த சிலவகைத்தான நடவடிக்கைகள் இருக்கின்றன; அவற்றைப் பொறுத்தவரையிலும் பொருளாதார ஆய்வு முறைகளைப் பயன்படுத்தமுடியாது. அதே வேளையில், சிக்கனமும் விரயத் தவிர்ப்பும் மிகமுக்கியமான அங்கம் வகித்து, மனித நடவடிக்கையின் பெருந் துறைகளுக்கு உரைகல்லாகத் திகழும் உரிமை பெற்றுள்ளன என்பதையும் நாம் ஏற்றுக் கொள்வோம். எனவே, நடவடிக்கைகள் அனைத்திலும் பொருளாதாரக் கூறுகள் இல்லையெனினும், அவற்றின் பெரும்

பகுதிகளில் அக் கூறுகள் உள்ளன என்பது தவிர்க்க இயலாத முடிவாகும். பொருளாதாரக் கூறுகள் நிறைந்த நடவடிக்கைகளைப் பொருளாதார நடவடிக்கைகள் எனலாம். இவற்றைப் பற்றிய பயிற்சியும் விளக்கமுமே பொருளாதார விஞ்ஞானத்தில் இடம்பெறுகின்றன.

இப் பொருளாதார நடவடிக்கையின் தன்மை என்ன? அதன் குறிக்கோள் என்ன? பொருளாதாரக் கைக்கோளின் ஆய்வுமுறைகளை வகுப்பதற்கோ, அல்லது பொருளாதாரத் துறையில் மனித நடத்தையை இயக்குவதற்கோ, பொருளாதார நடவடிக்கையின் தன்மையைப்பற்றியும் குறிக்கோளைப் பற்றியும் பயில்வதால் கிடைக்கப்பெறும் படிப்பினைகள் யாவை? இக் கேள்விகள்குறித்துப் பின்வரும் பக்கங்களில் நாம் விவாதிப்போம்.

'பொருள்சார் நலனைப் பெறுவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கையே பொருளாதார நடவடிக்கை' என மார்ஷலும் கேனனும் (Cannan) ஆராய்ச்சி செய்து விளக்கியுள்ளனர். ஆனால், பொருளாதாரப் பண்டங்கள் அனைத்திற்கும் சடப் பொருண்மை (materiality) உண்டு எனக் கருதலாகாது. பயன்பாடு உடைய சேவைகள் அளவைப் பொறுத்தவரையில் பற்றாக்குறை உடையன; அவை பரிவர்த்தனை செய்யத் தக்கன; மேலும், அவை பொருளாதாரப் பண்டங்களாகவும் திகழ்கின்றன. விவசாயி, தச்சன் அல்லது நெசவாலைத் தொழிலாளி மேற்கொள்ளும் முயற்சி எந்த அளவுக்குப் பொருளாதார நடவடிக்கை என்று விளக்கப்படுகிறதோ, அதே அளவுக்குப் பாடகன், நடனமாடுவோன் அல்லது வீட்டு வேலைக்காரன் மேற்கொள்ளும் முயற்சியையும் பொருளாதார நடவடிக்கை எனக் குறிப்பிடலாம். எனவே, பயன்பாடும், பரிவர்த்தனையும், பற்றாக்குறையும் உடைய பண்டங்களையும் சேவைகளையும் பெறுவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அனைத்தும் வளங்கள் குறைவாக இருப்பதாலும், தேவைகள் அளவுமீறிப் பெருகியிருப்பதாலும் பண்டங்களிலும் சேவைகளிலும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

மதிப்புப் பெற்றுள்ள பரிவர்த்தனைக்குரிய பண்டங்களையும் சேவைகளையும் அடைவதற்கு மேற்கொள்ளும் முயற்சியாகிய பொருளாதார நடவடிக்கையின் தன்மை இத்தகையதாக இருப்பதால், இந்த நடவடிக்கை ஓர் இலட்சியத்தை அடையும் வழிமுறையேயன்றி இதுவே இலட்சியமாகாது என்பதே முடிவாகும். நிலம் அல்லது மூலதனம்போன்ற ஜீவனற்ற

உற்பத்திச் சாதனங்களைச் சார்ந்த பொருளாதார நடவடிக்கை எனில் இது வழிமுறையேயன்றி இலட்சியமாகாது என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மையாகும். ஆனால், மிகவும் முக்கியமான உற்பத்திச் சாதனம் மனிதனே. மனிதன் எனும் சாதனத்தின் நடவடிக்கையே பொருளாதார நடவடிக்கையின் மிகவும் முக்கியமான பகுதியாகும். ஆனால் மனிதன் பொருளாதார நடவடிக்கையின் சாதனம் மட்டுமன்று; அதன் இலட்சியமும் அவனே. 'மனிதர்கள் உற்பத்தி சாதனங்களாகவும், அவர்களே இலட்சியங்களாகவும் திகழ்கிறார்கள்' எனப் பேராசிரியர் பிகு (Pigou) குறிப்பிடுகிறார். பொருளாதார உலகில் இயங்கும் மனிதனின் இவ்விரு கூறுகளைப் பிரித்துக் காண்பது கடினம். வெறும் சாதனமாக இயங்கும் மனிதனுக்கே பொருளாதார நடவடிக்கை எனில், சிக்கனத்தைத் தவிர வேறு எதனையும் கருதாது, அந் நடவடிக்கையின் பல்வேறு வடிவங்களைத் தேர்ந்தெடுப்பதில் அவன் அக்கறை காட்டமாட்டான். ஆனால், உண்மையில் அவன் அவ்வாறு இருப்பதில்லை. இன்பமூட்டக்கூடிய, பெருமித உணர்வு ஏற்படக்கூடிய, மனநிறைவு தரக்கூடிய, பயனுள்ள காரியத்தில் ஈடுபட்டுள்ளோம் என்ற உணர்ச்சியில் திளைக்கக்கூடிய வேலைகளைச் செய்யவே மனிதர்கள் விரும்புகிறார்கள். இலட்சியத்திற்காக என்று கருதாது வழிமுறையாகமட்டுமே மேற்கொள்ளக்கூடிய வேலைகள் நிறைய உள்ளன என்பதை மறுக்கமுடியாது. உதாரணமாக, கல் உடைப்பதையோ பஞ்சு எடுப்பதையோ மகிழ்வூட்டும் வேலையாக யாரும் கருதமாட்டார்கள்; ஆனால், வேலைகள் அனைத்தும் துன்பம் தரக்கூடியன என்று கொள்ளமுடியாது. ஏவாளின் (Eve) பால் உணர்ச்சித் தூண்டுதலுக்குப் பலியாகிப் பழைய ஆடம் (Adam) செய்த மன்னிக்க முடியாத பாவத்திற்கு மனிதன் நிரந்தரமாக அனுபவிக்கும் தண்டனையாக வேலை அமைந்திருக்கிறது என்று பைபிளின் பழைய ஏற்பாடு (Old Testament) கருதலாம்.

ஆனால், தற்கால உலகினை ஒருவன் சுற்றிப்பார்த்து, ஓர் வீட்டு வேலைக்காரனும், மருத்துவரும், பேராசிரியரும், வாயிற் காவலனும், தெருப் பெருக்குவோனும், வியாபாரியும் ஈடுபட்டுள்ள நடவடிக்கைகளில் வேலையின் தன்மை எவ்வாறு அமைந்திருக்கிறது என்று ஒத்துப்பார்த்தால், வேலைகளனைத்தும் துன்பம் தரக்கூடியவை என்றோ, பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் வெறும் சாதனங்கள் என்றோ ஒருவன் முடிவிற்கு வரமுடியாது. ஒரு சாதாரணப் பகுத்தாய்வில் புரிந்துகொள்வதற்கு மாறாக, வேலையின் தன்மை மிகவும் சிக்கல்

நிறைந்ததாக உள்ளது. விக்ஸ்டீடு (Wicksteed) பின்வருமாறு கூறுகிறார்: 'ஏதேனும் ஒரு வேலையில் ஈடுபட்டால், அதனைச் செய்யும்பொழுது துன்பமோ மகிழ்ச்சியோ ஏற்படுகிறது; ஒரு வேலையைச் செய்து முடித்தவுடன் அதற்கு ஒரு முக்கியத்துவமோ சிறப்போ உண்டு என்ற உணர்வு ஏற்படுகிறது; வேலையில் கிடைத்த பண்டங்கள், சேவைகள்மீது உடைமையுணர்வு ஏற்படுகிறது..............செய்யும்பொழுது மகிழ்வூட்டி நேரடியான பலனளித்துத் தன்னுடைய பொது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளத் துணையாக அமையும் வேலையைச் செய்யும் ஒருவன் மிக்க மகிழ்ச்சியான சூழ்நிலையில் திளைத்திருக்கிறான்.' இதே கருத்தினை இன்னும் தெளிவான மொழியில் நைட் (Knight) பின்வருமாறு எழுதுகிறார்: 'மனித சமூகத்தின் பெரும்பாலான மக்களின் வாழ்க்கையே உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதால், உற்பத்தி என்பது சாதனம் என்றும், தேவையான ஒரு கேடு என்றும், உற்பத்திப் படிமுறைக்கு முற்றிலும் வெளியே ஏதோ ஒரு நலனுக்கு மேற்கொள்ளும் தியாகம் என்றும் ஆராய்ச்சியோ விசாரணையோ செய்யாது முடிவு எடுக்கக்கூடாது. பொருளாதாரப் படிமுறையில் வெறும் துய்ப்பை நோக்காது இலட்சியங்களையே காண விழைகின்றோம். பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டுப் படைப்புச் சாதனைகள் புரியவும், தன் வெளிப்பாட்டினைப் (self-expression) பேணவும் வாய்ப்புகள் உள்ளனவா என்பதையும் ஆராய விரும்புகிறோம்.'

பொருளாதார நடவடிக்கை என்பது வெறும் சாதனத்தை மட்டும் பொறுத்ததன்று; காசல் (Cassel) குறிப்பிடுவது போல், தேவையில் நிறைவுபெற மேற்கொள்ளும் வெறும் முதலீடுமட்டுமன்று; ஆனால், அது இன்பமும் துன்பமும் நிறைந்த நடவடிக்கையின் தொகுப்பு ஆகும்; வழியான செயல்களும் உயிர்ப்புத்திறமற்ற செயல்களும் கலந்த தொகுப்பாகும். தேவையில் நிறைவு காண மேற்கொள்ளும் சாதனங்களைச் சார்ந்த நடவடிக்கைகளாகப் பொருளாதார நடவடிக்கைகள் கருதப்படுகின்றன. அவை தாமே இலட்சியங்களாகவும் கொள்ளப்படுகின்றன. திருப்தியை அளிக்கக் கூடிய நடவடிக்கைகள் என்பதனால்மாத்திரமன்றி, நடவடிக்கைகளில் ஈடுபடும்பொழுதே திருப்தி கிடைக்கிறது என்பதனாலும் அவை மதிப்புப்பெறுகின்றன. பொருளாதாரக் கைக்கோளுக்குரிய ஆய்வு முறைகளை வகுப்பதில் பொருளாதார நடவடிக்கையின் இலட்சிய, சாதனக் கூறுகள் எத்தகைய பங்கு வகிக்கின்றன என்பதைப் பின்னர் கவனிப்போம்.

பொருளாதார நடவடிக்கையைப் பொறுத்தவரையில் சிக்கனம் அல்லது திறன் எனும் ஆய்வுமுறையும், குறைந்த பட்ச வழிமுறைகளைப் பயன்படுத்தி, குறிப்பிட்ட இலட்சியத்தினை நிறைவேற்றுதல் அல்லது விரயத் தவிர்ப்பு எனும் ஆய்வு முறையும் மிக முக்கியமான உரைகல்லாகத் திகழ்கின்றன. இந்த உரைகல் பொருளாதார நடவடிக்கையின் சாதனக் கூறினைப் பொறுத்த ஒன்றாகும். இதனைப் பொறுத்தவரையில், ராபின்சும் அவரால் தாக்கி விமர்சிக்கப்பட்டோரும் ஒரே கருத்தினைக் கொண்டுள்ளனர். பற்றாக்குறையே உயிர்ப் பண்திறம் (keynote) ஆகும் என்றும், உங்களுடைய பொருளாதார நிபுணன் உண்மையான ஒரு துன்பியல்வாதி என்றும் ராபின்ஸ் குறிப்பிடுகிறார். இலட்சியங்கள் பல ; ஆனால், அவற்றை நிறைவேற்றும் சாதனங்களோ சில. எனவே, சாதனங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள் ; சாதனங்களைக் கூடுமானவரையில் பெருக்குங்கள் ; பொருளாதாரத்தின் போக்கு அதுவே.

இவ்வாறாக, பொருளாதார நடவடிக்கையைச் சாதனங்களைச் சார்ந்த நடவடிக்கையாக மேற்கொண்டு, ராபின்சைப் போல வெளிப்படையாகவோ அல்லது ஏனைய பொருளாதார ஆசிரியர்கள் தங்கள் புத்தகங்களில் எழுதியுள்ளதுபோல் மறைமுகமாகவோ இலட்சியங்களைப்பற்றிக் கவலை இல்லை என்று அறிவித்து, பொருளாதார நடவடிக்கையின் முக்கிய விதியாகவும், உற்பத்தியைச் சார்ந்த பொருளாதாரப் பொதுமைகளின் (generalisations) அடிப்படையாகவும் சிக்கன ஆய்வு முறை அமைகிறது என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள். இத்தகைய மனப்பான்மையை ஏற்றுக்கொள்ள நம்மால் முடியாது. இம் மனப்பான்மையை நாம் ஏற்றுக் கொள்ளாததற்குக் காரணம், பொருளாதார நடவடிக்கை வெறும் சாதனங்களைச் சார்ந்ததுமட்டுமன்று என்பதால் மாத்திரமன்று; அப்படி இல்லை என்று வைத்துக்கொண்டாலும் இலட்சியத்தைத் திறமையுடன் நிறைவேற்றப் பயன்படும் சாதனங்களால் என்ன விளைவு ஏற்படுகிறது என்பதையும் பரிசோதிக்கும் உரிமை நமக்கில்லையா? பொருளாதார நடவடிக்கையின் இலட்சியம் என்ன? எவ்வளவு விருப்பங்களைப் பூர்த்தி செய்ய இயலுமோ அவ்வளவு விருப்பங்களையும் பூர்த்தி செய்வதே அதன் இலட்சியம் எனப் பொருளாதார நிபுணன் கூறலாம். வேறு வகையில் கூறவேண்டுமானால், பொருள்சார் நலனின் பல்வேறு கூறுகளை அடைதலே பொருளாதார நடவடிக்கையின் உடனடி இலட்சியம் எனலாம். இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமெனில், பொருளாதார மதிப்புள்ள பண்டங்

களையும் சேவைகளையும் அடைதலேயாகும். ஆனால், அதுவே இலட்சியமாகாது. மனிதன் ரொட்டித் துண்டைக்கொண்டே வாழ்வதில்லை. வெண்ணெயும் பழப்பாகும் தடவப்பெற்ற ரொட்டித்துண்டாக இருந்தாலும் அதனைக்கொண்டே வாழ்வ தில்லை. நல்வாழ்வு வாழ ரொட்டித் துண்டிற்குமேலும், சில தேவைகள் உள்ளன. மனித நடவடிக்கைகளனைத்திற்கும் உரிய இலட்சியத்துடன் பொருளாதார நடவடிக்கையின் இலட்சியத் தையோ குறிக்கோளையோ இணைத்துப் பார்க்காமல் அதனைப் பற்றிப் பேசமுடியாது. மனித நடவடிக்கையின் ஒரு பகுதியே பொருளாதார நடவடிக்கை ஆகும். முழுமையின் பகுதியாக இருக்கும் ஒன்று முழுமையைவிடப் பெரிதாகவோ மாறுன தாகவோ இருக்கமுடியாது. இருந்தபோதிலும், பொருளாதார நடவடிக்கை என்றால் ஏதோ ஒரு தனியான உலகம் என்றும், மனித நடவடிக்கைகளனைத்திலும் தொக்கி நிற்கும் பரந்த குறிக்கோளுடன் அது ஒன்றி நிற்காது என்றும் பொருளாதார நிபுணன் கருதுகிறான். தன்னுடைய தொழிற்சாலையின் திறன் பற்றியும், அதில் பொருத்தியிருக்கும் நவீன சாதனங்கள்பற்றி யும் உயர்வு நவிற்சியாகப் பேசிய அதன் நிர்வாகியிடத்தில் வியப்படைந்த பிரீஸ்ட்லியின் பேராசிரியர் வேதனையுடன் பின் வருமாறு கூறுகிறார்: 'நீங்கள் சொல்லியதுபோல், மிகவும் புத்திசாலித்தனத்துடன் இதனை நிறைவேற்றியுள்ளீர்கள்.

ஆனால், எனக்கு ஒன்றுமட்டும் புரியவில்லை. பயனுள்ள பண்டங்களை உருவாக்குதலும், விற்றலும், வாங்குதலும், சொந்தமாக்கிக்கொள்ளுதலும் ஆகிய நடவடிக்கைகளனைத்தும் இலட்சியத்தை அடையும் சாதனங்களாகமட்டுமன்றி இலட் சியமாகவும் இருப்பதுபோல் தாங்கள் பேசுவதுதான் எனக்குப் புரியவில்லை.' விருப்பங்களின் பெருக்கமும், சாதனங்களின் கிடைப்பருமையும், இவற்றால் விளைந்த கருத்தாகிய சாதனங் களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதலும், அவற்றைப் பெருக்கு தலும் பொருளாதார நிபுணனின் அறிவைக் குழப்புகின்றன; எனவே, அவற்றை இலட்சியங்களாகவே ஏற்றுக்கொண்டு விடுகிறான். விக்ஸ்டீடு பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: 'நாகரிக வாழ்க்கையின் சூழ்நிலைகளும் நவீன சித்தாந்தங் களின் போக்குகளும் ஒன்றிணைந்து, இறுதி இலட்சியங்களைப் பற்றிய விவாதத்தை மூலவளங்களின் நிருவாகத்தைப்பற்றிய விவாதத்திலிருந்து தனியாகப் பிரித்துவிடுகின்றன. சமூக இலட்சியங்களை அடைதல்பற்றியல்லாமல் சமூக சாதனங் களைப் பெருக்குதல்பற்றியே அரசியற் பொருளாதாரம் கவலை கொள்கிறது எனக் கருதுவது வழக்கமாகிவிட்டது.'

இவ்வாறாக, பொருளாதாரப் பண்டங்களின் ஓட்டத்தினை எந்த அளவுக்குப் பெருக்க முடியுமோ அந்த அளவுக்குப் பெருக்குதலே பொருளாதார நடவடிக்கையின் குறிக்கோள் என்று பொருளாதார நிபுணர்கள் கருதுகிறார்கள். எனவே, அவர்கள் பொருளாதாரக் காரியங்களை ஒழுங்குற இயக்கச் சிக்கன ஆய்வு முறையை வலியுறுத்துகிறார்கள். சிக்கனக் கோட்பாட்டினை நுட்பத்திறன் (technical efficiency) கோட்பாட்டுடன் கலந்து குழப்பிக்கொள்ளக்கூடாது. ராபின்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ‘நுட்பவினைமுறை (technique) பற்றிய பிரச்சினையும் சிக்கனப் பிரச்சினையும் அடிப்படையில் மாறுபட்டவையாகும். இந்த வேற்றுமையைப் பேராசிரியர் மேயர்ஸ் (Mayers) மிகவும் நேர்த்தியுடன் எடுத்துக்காட்டுகிறார். ‘ஒரே ஓர் இலட்சியமும் பன்மடங்கு பெருகிய சாதனங்களும் நிலவும் பொழுது நுட்பவினைமுறைபற்றிய பிரச்சினை எழுகிறது. இலட்சியங்களும் சாதனங்களும் பன்மடங்கு பெருகியிருக்கும் பொழுது சிக்கனப் பிரச்சினை எழுகிறது.’ வேறு வகையில் சொல்லவேண்டுமானால், பொருளாதார நடவடிக்கை என்பது மாற்றுச் சாதனங்களில் ஒன்றினையோ, அல்லது சாதனங்களின் தொகுப்புகளில் ஏதேனும் ஒன்றினையோ தேர்ந்தெடுப்பது மாத்திரமன்று; பல்வேறு பொருளாதாரப் பண்டங்களையும் சேவைகளையும் கொண்ட இலட்சியங்களில் ஏதேனும் ஒன்றினைத் தேர்ந்தெடுப்பதும் ஆகும். இலட்சியங்களிலிருந்து ஏதேனும் ஒன்றினைத் தேர்ந்தெடுக்கும் பிரச்சினைதான், பொருளாதாரக் கோட்பாடுகளில் ஒன்றான மதிப்புக் கோட்பாட்டிற்கு (theory of value) முக்கியத்துவத்தை வழங்கியுள்ளது. இலட்சியங்களில் ஏதேனும் ஒன்றினைத் தேர்ந்தெடுப்பதில் தனிப்பட்டோர் உணர்ச்சி, அழகு, பயன்பாடு இவற்றில் எக் காரணத்தினாலேனும் தூண்டப்பட்டிருந்தாலும், தேர்ந்தெடுக்கப்பெற்ற இலட்சியங்களே பொருளாதார நிபுணனுக்கு எடுகோளாக அமையும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட இலட்சியங்களின் விருப்பத் தராதரம் (order of preference) அவற்றின் பணமதிப்பைப் பொறுத்து அமையும். குறிப்பிட்டுள்ள இலட்சியங்களையே எடுகோளாகப் பொருளாதார நிபுணன் ஏற்றுக்கொள்ளலாமா என்பதே சர்ச்சைக்குரியது.

சில பொருளாதாரப் பண்டங்களும் சேவைகளும் நலன் பயப்பன அல்லவென்றும், அவற்றை நலன் நல்கும் பண்டங்களிலிருந்தும் சேவைகளிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டவேண்டும்

என்றும் பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். தனிப்பட்டோரின் விருப்பத் தராதரங்களின் அடிப்படையிலேயே பொருளாதார மதிப்புகள் அமையவேண்டுமென்றும், ஆனால், தங்களுடைய விருப்பத் தராதரங்களை நிர்ணயிக்க அவர்கள் பயன்படுத்தும் அடிப்படை சர்ச்சைக்குரியது என்றும், உற்பத்தியைத் தூண்டுகின்ற இத்தகைய மதிப்பீடுகளே (valuations) உற்பத்தி நடவடிக்கையின் இயல்பினால் பெருமளவிற்கு எவ்வாறு தூண்டப்படுகிறது என்றும், ஆகவே, இத்தகைய மதிப்பீடுகள் உண்மையில் எடுகோளாக அமைய முடியாது என்றும் வேறு சிலர் எடுத்துக்காட்டுகின்றனர். இது எந்த அளவுக்கு உண்மையோ, அந்த அளவுக்கு இலட்சியங்களிலிருந்து ஏதேனும் ஒன்றினைத் தேர்ந்தெடுக்கும் பிரச்சினையில் சிக்கனக் கோட்பாட்டைப் புகுத்துவதில் இடர்ப்பாடுகள் ஏற்படும். இப் பிரச்சினைகுறித்துப் பின்னர் ஆராய்வோம்.

பொருளாதார நடவடிக்கை, சாதனங்கள் ஆகியவற்றின் ஆய்வு முறையானது சிக்கனக் கோட்பாடே; அது பொருளாதார நிபுணனே தேர்ந்தெடுத்த ஆய்வு முறையாகும். ராபின்சின் கருத்துப்படி, 'குறைந்தபட்ச சாதனங்களைக் கொண்டு குறித்த இலட்சியங்களை நிறைவேற்றுவதே' சிக்கனக் கோட்பாடாகும். சிக்கனக் கோட்பாட்டின் முக்கிய அம்சமே விரயத் தவிர்ப்பாகும். இதைப் பொறுத்தவரையில் ராபின்சுக்கும் ஏனைய பொருளாதார அறிஞர்களுக்குமிடையில் கருத்து வேற்றுமை கிடையாது. எனவேதான், நோக்கத்தில் அடிப்படை வேற்றுமை ஓரளவுக்கு இருந்தபோதிலும், தன்னால் தாக்கி விமர்சிக்கப்பெற்ற அறிஞர்களின் பொருளாதாரக் கோட்பாடுகளின் முழு அமைப்பினையும் தன்னுடைய பொருளாதாரப் பகுத்தாய்வுமுறையுடன் இணைத்துப் பார்க்கமுடியும் என்று ராபின்ஸ் சுட்டிக் காட்டுகிறார். எனவேதான், பரிவர்த்தனைக்குரிய மதிப்புள்ள பண்டங்களையும் சேவைகளையும் எண்ணிக்கையில் கூடுமானவரையில் வேண்டுமளவிற்கு உற்பத்தி செய்வதையே பொருளாதார நடவடிக்கையின் குறிக்கோள் என்பது நிபுணனின் கருத்தாகும்; மேலும், அத்தகைய பண்டங்களையும் சேவைகளையும் பாழாக்காது சேர்ப்பதும், ஒவ்வொரு பண்டத்தையோ அல்லது, சேவையையோ அடைய மிகக் குறைந்தபட்ச சாதனங்களை ஈடுபடுத்துவதும் பொருளாதார நடவடிக்கையின் குறிக்கோள் என்பதும் நிபுணனின் கருத்தாகும்.

பொருளாதார நடவடிக்கையின் குறிக்கோள்பற்றிய இக் கருத்தை இக் கட்டுரை ஆசிரியர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது வாசகர்களுக்குத் தெரிந்த ஒன்றே. ஆசிரியரின் காரணங்கள் பின்வருமாறு:

(1) சாதனங்களின் பற்றுக்குறை எனும் கருத்தில் அடங்கியுள்ள சில விஷயங்களின் உண்மைக்கு மாறான நிலை.

(2) அளவற்ற விருப்பங்கள் என்ற எடுகோளின் சர்ச்சைக்குரிய இயல்பு.

(3) பொருளாதார நடவடிக்கையின் குறிக்கோளினைப் பொதுவாக மனித நடவடிக்கையின் இலட்சியத்துடன் அல்லது குறிக்கோளுடன் இணைத்துப் பார்க்கத் தவறியமை.

சாதனங்களின் பற்றுக்குறை எனும் எடுகோளினைப்பற்றி முதலில் ஆராய்வோம். மற்றப் பண்டங்களின் உற்பத்திக்கும் வழிவகுக்கும் வகையில், ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் உற்பத்தியில் ஈடுபடுத்தும் மூலவளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டியது அவசியம் என்பதே இதன் பொருளாகும். வேறு வகையில் சொல்லவேண்டுமானால், உற்பத்திச் சாதனங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தும்பொழுது [இன்றைய வழக்கில் உள்ள சொல் 'தொழிற் சீரமைப்பில் ஈடுபடுத்துதல்' (rationalized)], அச் சாதனங்களைப் பொறுத்தவரையில் உற்பத்தி பெருகுவதோடுமாத்திரமன்றி, விடுவிக்கப்பட்ட உற்பத்திச் சாதனம் அதே உற்பத்தித் துறையில் அல்லது வேறு துறைகளில் பயன்படுத்தப்படும். கீன்ஸ் (Keynes) குறிப்பிடுவதுபோல, மேலே குறிப்பிட்ட நிலைதான் தொன்மைப் பொருளாதாரக் கோட்பாட்டில் (classical theory of economics) பயின்றுவரும் வேலைநிறைவு (full employment) என்ற எடுகோளாகும். ஆனால், இந்த எடுகோள் உண்மையன்று என்பது யாவரும் அறிந்ததே. மாறாக, தற்காலத்துப் பொருளாதாரப் பிரச்சினைகளில் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பிரச்சினையே மிகவும் முக்கியமானது; குறிப்பாக, நுட்பத் தொழில்சார் வேலையில்லாமையே (technological unemployment) மிகவும் முக்கியமான பிரச்சினையாகும். பற்றுக்குறை உள்ள சாதனங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன்மூலம் வேலை நிறைவு ஏற்படும் என்பதில் அவ்வளவு உண்மையில்லை. வேலை என்பது வாழ்வதற்குரிய சாதனம்மட்டுமன்று; அதுவே மதிப்பும் ஆகும். சிக்கனக் கோட்பாட்டினைப் பயன்படுத்துவதால் வேலையில் நிகரக் குறைப்பு (net decrease) ஏற்படுகிறது என்றால், பொருளாதார நடவடிக்கையை ஒழுங்குற இயங்கச்

செய்யும் ஆய்வு முறையை வரம்பின்றிப் பயன்படுத்துவதில் ஏதோ குறை இருக்கிறது என்று தெரிகிறது. இதன் காரணமாகத்தான் மகாத்மா காந்தி அவர்கள், வேலையற்ற மனிதர்களையும் வேலை குறைவாகப்பெற்ற மனிதர்களையும் பெருமளவில் உள்ளடக்கி இயங்கும் முழு இயந்திர அடிப்படையில் அமைந்த பொருளாதாரத்தை இந்தியாவில் உருவாக்குவதை எதிர்த்தார். பிறழ்ச்சி காரண வேலையின்மை (frictional) தீர்ந்து, மாருக வேலையில்லாமை என்பது தீராத நோக்காடாக மாறும்பொழுது, உற்பத்தி வழிமுறைகளைத் (methods of production) தேர்ந்தெடுக்கும்பொழுது சிக்கனக் கோட்பாட்டினைக் கைவிடவேண்டிய நேரம் வந்துவிட்டது எனலாம்.

அளவற்ற விருப்பங்கள் எனும் இரண்டாவது எடுகோளைப் பொறுத்தவரையில், முடிந்தவரையில் நிறையப் பண்டங்களை உற்பத்தி செய்யவேண்டும் என்பதும் கேள்விக்குரியதே. சமயத்துறை ஆசான்கள் அளவற்ற விருப்பங்கள் என்ற கருத்தினை அவ்வப்பொழுது அடிப்படையில் எதிர்ப்பது ஒரு புறமிருக்க, பெரும்பாலான மக்களைப் பொறுத்தவரையில் திருப்தியடையக்கூடிய விருப்பங்கள் உண்மையில் அளவோடு அமைந்துள்ளன என்பது அளவற்ற விருப்பங்கள் என்ற கருத்திற்கு ஏற்படும் நடைமுறை எதிர்ப்பாகும். எண்ணிக்கையில் குறைவான பணக்காரர்களைப் பொறுத்தவரையில், விருப்பங்களின் பெருக்கம் வலுவுள்ள காரணமாக இயங்குகிறது. இவர்களைப் பொறுத்தவரையிலும்கூட, விருப்பங்கள் ஒரேமாதிரியான தீவிரம் உடையன அல்ல. ஒவ்வொரு பண்டத்தையும் துய்க்கும்பொழுது குறைந்து செல்லும் பயன்பாடு நிகழ்கிறது என்ற உண்மையைப் பொருளாதார நிபுணன் ஏற்றுக்கொள்கிருன். ஆனுல், இக் கருத்தினைப் பண்டங்களனைத்தும் கொண்ட முழுமைக்குப் (totality) பொருத்திப் பார்க்க மறுக்கிருன். பண்டங்களைத் தனித்தனியாகத் துய்த்துப் பார்க்கும்பொழுது இறுதிநிலைப் பயன்பாடு குறைந்து செல்லும் வீதம் அதிகமாக இருப்பதுபோல, பண்டங்கள் அனைத்தையும் முழுமையாகத் துய்த்துப் பார்க்கும்பொழுது இருப்பதில்லை. துய்ப்புப் பண்டங்களின்மீதுள்ள ஈடுபாடு ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் ஏற்படுவதில்லை; அந்த எல்லைக்கு அப்பால், தனிப்பட்ட ஒரு மனிதனின் பொருளாதார நடவடிக்கை பரிவர்த்தனைக்குரிய பண்டங்களையும் சேவைகளையும் பொறுத்துத் தூண்டப்படுவதில்லை; அதற்கு மாருக, அதிகாரம், பகட்டு, போட்டியில் உயர்நிலை முதலான திருப்திநிலைகளை அடைவதற்கு மேற்கொள்ளும் முயற்சியாகவே

பொருளாதார நடவடிக்கை அமைகிறது. அளவற்ற விருப்பங்கள், முடிந்தவரையில் உற்பத்தியைப் பெருக்குதல் முதலானவற்றை உள்ளடக்கிய கருத்து இன்னுமொரு தீங்கினை உடையது என்பதை விக்ஸ்டீடு அவர்கள் தெளிவான மொழியில் பின்வருமாறு கூறுகிறார்: 'நல்ல குடும்பம் அமையாத நிலையில் அநேக வீடுகளை வாங்குவது எளிதாக இருப்பதுபோல, பொதுவாகப் பரிவர்த்தனைக்குரிய பண்டங்களைச் சொந்த ஆளுகைக்குக் கொண்டுவரும்பொழுது, ஒரு கட்டத்தில், இறுதியில் விரும்பத்தக்க நமது நல்லனுபவங்களை அவை போற்றிப் பாதுகாக்காமல் அழிக்கவும் முற்படலாம்.' தனது பொருளாதாரக் கோட்பாட்டின் பகுத்தாய்வில் விக்ஸ்டீடு இக் கருத்தினைத் தொடர்ந்து வலியுறுத்திச் செல்லாமல் விட்டது வருந்தத்தக்கதே. பொருளாதாரப் பண்டங்களின்மீதுள்ள நமது விருப்பம் அளவற்றதன்று; அளவோடு நிற்பதுதான் என்ற கருத்தினை ஏற்றுக்கொண்ட அதே வேளையில் சிக்கனக் கோட்பாட்டின் அடிப்படை தகர்ந்து விடும். இனி, வளர்த்திக்கொண்டு செல்லவேண்டியதில்லை. விருப்பங்களின் அளவற்ற நிலை, மூலவளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும் என்பதற்குத் தூண்டுதலாக அமைகிறது என்பது அறிவு செறிந்த தருக்கத்திற்கு உகந்ததாக இருக்கலாமேயன்றிப் பெரும்பாலான மக்களைப் பொறுத்த வரையில் அது முக்கியமன்று.

பொருளாதார நடவடிக்கையின் குறிக்கோளை மனித நடவடிக்கையின் பொதுவான குறிக்கோளுடன் இணைக்கத் தவறியதால், பழைமைப் பொருளாதார நிபுணனின் கருத்தை மறுக்க நேர்ந்தது. இதுவே நிபுணனின் கருத்தை மறுக்க மூன்றாவது காரணமாகும். இதனை நிரூபிக்க, மனித நடவடிக்கையின் இலட்சியம் என்ன என்பதையும், பொருளாதார நடவடிக்கையில் இது எந்த அளவுக்குப் பொருந்தியுள்ளது என்பதையும், சிக்கன ஆய்வுமுறை எந்த அளவுக்கு இதில் இசைவாக அமைந்துள்ளது என்பதையும் ஆராய்ந்துபார்க்க வேண்டியது அவசியமாகும்.

மனித நடவடிக்கையின் இலட்சியம் எளிய முறையில் விளக்கக்கூடிய கூற்று அன்று. அதனைப்பற்றி எல்லோருக்கும் ஒத்த கருத்தும் இல்லை. நல்வாழ்வு வாழ்வதுதான் அதன் இலட்சியம் என்று சிலர் கூறுகிறார்கள். இறைவனுடன் இரண்டறக் கலப்பதையோ அல்லது மோட்சத்தையோ மனித நடவடிக்கையின் இலட்சியமாக வேறு சிலர் கருதுகிறார்கள்.

உண்மையும் அழகும் கலந்த வாழ்க்கையைக் கவிஞர்கள் கனவு காண்கிறார்கள். பலாத்காரமற்ற வாழ்க்கையில் நிலவும் சத்தியத்தை காந்திஜி வலியுறுத்துகிறார். போரினால் பாதிக்கப் பட்ட பிரிட்டனிலிருந்து எழுதும் பிரீஸ்டிலி (Priestley) உல கத்தின் முக்கிய அலுவல்களில் அழகுணர்வும், அன்புணர்வும், அறிவும் இழைந்தோடுகின்றன என்று குறிப்பிடுகிறார்.

'அந்த உண்மையான வாழ்க்கையை நடத்தமட்டுமே பண்டங்களை உற்பத்தி செய்து விற்கிறோம். அனைவரும் தங்களுடைய நெஞ்சத்தின் ஆழத்தில் இக் கருத்தினைக் கொண்டுள்ளனர். கரையோரத்திற்கு விரைந்து சென்று கீழ்த்தரமான விலைமாதர் விடுதியில் குடித்துப் புரளும் மிகவும் முரட்டுத்தனமான கப்பலோட்டிகூட அழகுணர்ச்சிக்கும், அன் புணர்ச்சிக்கும், அறிவிற்கும் ஏங்கித் தவிக்கிறான். எல் லோருடைய நெஞ்சத்தின் அடித்தளத்திலும் இவ்வுணர்வுகள் நின்று நிலவுகின்றன. நெஞ்சத்தின் ஆழத்தில் மிதக்கும் இவ்வுணர்வுகளின் குரலைக் கேட்கச் சிலர் மறுக்கும்பொழுதும், கெட்டியான சிறு மூளையை உடையோர் அத்தகைய உணர்வு களே தங்களுடைய நெஞ்சத்தில் இடம்பெறவில்லை என்று உரைக்கும்பொழுதும் மனிதர்கள் சலிப்பும் வேதனையும் அடைந்து கொடிய உணர்வுகளுக்கு ஆளாகின்றனர். அதனால் தான், உலகில் வன்முறைச் செயல்களும் கொடுங்கோல் உணர்வும் மிகுந்து பயங்கர நிலை ஏற்பட்டிருக்கிறது.' மனித கௌரவத்தைப்பற்றியும் ஒவ்வொரு மனிதனின் தனித் தன்மைபற்றியும் தத்துவஞானிகள் பேசுகிறார்கள். மனித ஆளுமையைப் (personality) போற்றிப் பேணுதல், மனித ஆத்மா மலர்தல், ஏனைய ஜீவராசிகளிலிருந்து வேறுபட்ட மனித னிடத்தில் மறைந்து குவிந்திருக்கும் செயலாற்றலின் பயன் ஆகிய இவையனைத்தும் நிச்சயமாக மனித வாழ்வின் குறிக்கோ ளாக அமைகின்றன. மனிதனின் தூண்டுதல்களிலேயே மிக உயர்ந்தது படைப்புத் தூண்டுதலே. தியாகமுங்கூடப் படைப் பிற்கு ஒரு வழியாகும். பொருளாதார நடவடிக்கையுடன் அத னைப் பொருத்திப் பார்க்கும்பொழுது, களிப்பினாலும் மகிழ்ச்சி யினாலும் தன்நிறைவேற்றத்தினாலும் (self-fulfilment) முழுத் திருப்தியடைந்து, கவிஞன் ஆவேசத்தில் பைத்தியக்காரனைப் போல் கற்பனையில் மிதக்கின்ற நிலைமைக்கும், நல்ல குறிக் கோள் உள்ள இன்பமூட்டும் தன்மையதான, ஆக்கபூர்வமான வேலையில் ஈடுபடும் தொழிலாளி உல்லாசமாகப் பாடி மகிழும் நிலைமைக்கும் இணை வேறு ஒன்றுமில்லை. இந்த முறையிலேயே மனித நடவடிக்கைகளனைத்தும் கொண்டுள்ள இலட்சியத்

துடன் பொருளாதார நடவடிக்கை இணைந்து, மனித ஆளுமை வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. இத்தகைய மனித ஆளுமை வளர்ச்சியே வாழ்க்கையின் குறிக்கோளாகும்.

மனித நடவடிக்கைகளனைத்தின் இலட்சியத்திற்கும், பொருளாதார நடவடிக்கைகளுக்கும் இடையில் உள்ள தொடர்பினை இப்பொழுது நாம் ஆராய வேண்டும். அத்தொடர்பினை மனித ஆளுமை வளர்ச்சியாகவே விளக்கியுள்ளோமேயன்றி அதற்கு இலக்கணம் வகுக்கவில்லை. பொருளாதாரப் பண்டங்களை உற்பத்தி செய்து அவற்றை அடைவதற்கோ அல்லது பொருளாதார நடவடிக்கைக்கோ மேற்கொள்ளும் வழிமுறைகள் மனித ஆளுமையை வளர்த்துப் போற்றலாம் அல்லது தடை செய்து கெடுக்கலாம். அது வேலையின் வெவ்வேறு தன்மைகளைப் பொறுத்ததாகும். வெவ்வேறு தன்மைகள் உள்ள வேலையைப் பற்றிப் பின்வருமாறு விளக்கலாம் :

(1) தனி மனிதனின் படைப்பாற்றலைத் தூண்டுவதற்கும், துவக்க ஆற்றலைப் (initiative) பிரயோகிப்பதற்கும் வேலையின் இயல்பும் விரிவும் எப்படிப் பயன்படுகிறது என்பது ஒன்று. இதனைச் சுருக்கமாக வேலையின் கலையார்வக் கூறு (art element in work) எனலாம்.

(2) வேலையைப்பற்றித் தொழிலாளி கொண்டுள்ள மனப் பான்மையும் பொருளாதார நடவடிக்கையின் சூழ்நிலைகளும் இதனை வேலையின் கௌரவமும் பெருமையும் நிறைந்த கூறு எனலாம் (dignity and pride element in work).

(3) தொழிலாளி வேலை ஒன்றினை மேற்கொள்ளும் பொழுது, அவனுடைய ஆளுமை வளர்ச்சிக்குரிய வல்லமை குறையும் நிலைமையோ அல்லது சில காரியங்களில் அழியும் நிலைமையோ ஏற்படுவதுண்டு. இதனை வேலையில் ஆளுமையை அழிக்கும் கூறு (personality-killing element in work) எனலாம்.

(4) தொழிலாளி கொண்டுள்ள வாழ்க்கையைப்பற்றிய மனப்பான்மையிலும், அவன் நடத்தையிலும், அவன் வாழும் முறையிலும், அவன் பின்பற்றும் பழக்கவழக்கங்களிலும் அவன் செய்யும் வேலை ஒரு மாறுதலை ஏற்படுத்தும். வேலையினால் ஏற்படும் இத்தகைய மாற்றம், தனி மனிதன் ஒருவனின் ஆளுமையை வளர்க்கவோ அல்லது கெடுக்கவோ கூடும். இதனை நைட் (Knight) அவர்களுடைய சொல்லில் குறிப்பிட வேண்டுமெனில், வேலையின் ஒழுக்கம் பேணும் கூறு (character-forming element in work) எனலாம்.

சுருங்கக் கூறின், பொருளாதார நடவடிக்கையில் நான்கு கூறுகள் உள்ளன. அக் கூறுகளாலேயே மனித ஆளுமை வளர்ச்சியில் மாற்றம் ஏற்படுகிறது. எனவே, மனித நடவடிக்கையின் இறுதி இலட்சியத்திலும் அக் கூறுகள் இடம்பெறுகின்றன. அவையாவன:

(1) வேலையின் கலையார்வக் கூறு.

(2) வேலையின் கௌரவமும் பெருமையும் நிறைந்த கூறு.

(3) வேலையின் ஆளுமையை அழிக்கும் கூறு.

(4) வேலையின் ஒழுக்கம் பேணும் கூறு.

பொருளாதாரக் கைக்கோளின் ஆய்வுமுறைகளை வகுக்கும் பொழுது அக் கூறுகளைப் பயன்படுத்தவேண்டும் என்பது வெளிப்படையான உண்மையாகும். இல்லையெனில், பொருளாதார நடவடிக்கை மனித நடவடிக்கையின் இறுதி இலட்சியத்திலிருந்தும், பொருளாதார நடவடிக்கையின் குறிக்கோளிலிருந்தும் முரண்பட்டுவிடும்.

பொருளாதார நடவடிக்கையைப்பற்றி விவாதிக்கும் பொழுது பொருளாதார நிபுணர்கள் பொதுவாக இக் காரணக் கூறுகளை (factors) அவ்வளவாகக் கருதுவதில்லை என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும். உதாரணமாக, கலையார்வத்தைத் தூண்டும் உற்பத்தி முறை ஒன்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளி ஒருவன் தான் மேற்கொண்டுள்ள அவ் வேலையின்மூலம் தன்னுடைய ஆளுமையை வளர்த்துக்கொண்டபோதிலும், அந்த உற்பத்திமுறைமூலம் ஓர் அலகு பணச்செலவிற்குக் (unit cost in terms of money) கூடுதலான உற்பத்தி கிடைத்தாலன்றிப் பொருளாதார நிபுணன் அந்த உற்பத்தி முறையை ஏற்றுக் கொள்ளமாட்டான். இந்தப் போக்கு மனித நடவடிக்கையின் இலட்சியத்திற்கு மாறாக உள்ளது என்பதை ஹாப்சனின் (Hobson) எழுத்துமூலம் பின்வருமாறு அறியலாம்: 'பொருளாதார நலனையும், அதற்கும் உயர்ந்த மனித நலனையும் உயர்ந்தபட்ச அளவிற்குப் பெறவேண்டிக் கலைகளின் இயல்புக்கு இசைந்த வகையில் உற்பத்தியையும் துய்ப்பையும் கூடுமான வரையில் பெருக்கிப் பேணவேண்டும் என்பது விரும்பத்தக்கதே.... பொருளாதார மொழியில் இயம்பவேண்டுமெனில், இரண்டு முனைகளிலும் அவனுக்குப் பயன்பாடு கிடைக்கிறது; ஆக்கவும் ஆக்கியதை அனுபவிக்கவும் உரிய தூண்டுதலுக்கு வழி பிறக்கிறது.'

சிக்கனக் கோட்பாட்டில் வேலையின் கௌரவமும் பெருமையும் நிறைந்த கூறுக்கு இடம் இல்லை. தான் செய்வது ஏதேனும் ஒரு நல்ல காரியம்தானா என்று அவன் நினைப்பதைப் பொறுத்தும், தன்னுடைய சுயமரியாதையையும் மனிதன் என்ற முறையில் தன்னிடமிருக்கும் கௌரவத்தையும் பாதுகாக்கின்ற வகையில் வேலையின் நிலைமைகள் இருக்கின்றனவா என்பதைப் பொறுத்தும், தொழிலாளிக்கு வேலையைப்பற்றிய மனப்பான்மை ஏற்படுகின்ற அளவுக்கு அவன் எடுக்கும் முயற்சியின் தீவிரத்தையும் அதில் ஏற்படும் இன்பமின்மையையும் பொறுத்தும் அது ஏற்படுவதில்லை. முந்தியதன் விளைவைச் சமதர்ம சமுதாயங்களில் காணலாம். வேலையின் இயல்பு எப்படி இருந்தபோதிலும், அச் சமதர்ம சமூகங்களில் வேலை செய்யும் தொழிலாளி தான் ஒரு சமூகக் கடமை செய்வதாகவும், மதிப்புள்ளதாக அவன் கருதும் சமூக அமைப்பை விஸ்தரிக்கவும் பேணவும் தன்னால் இயன்றதைச் செய்வதாகவும் கருதுகிறான். தான் நம்பும் நாகரிக வாழ்க்கையைப் பேண, இரண்டாம் உலகப் போரின்போது பிரிட்டிஷ் தொழிலாளி வேலையின் தீவிரத்திலும், வேலை செய்யவேண்டிய மணியளவிலும் அதிகரிப்பு ஏற்பட்டதை ஏற்றுக்கொண்டு உழைத்ததிலும் மேற்குறிப்பிட்ட கருத்து அமைந்திருக்கிறது. தொழிலாளியின் உளவியலில் வேலையின் நிலைமைகளால் ஏற்படும் விளைவு ஒரு முக்கியக் காரணக் கூறாக உள்ளது. தொழிலாளி வெறும் வேலை செய்பவனாகமட்டும் இருக்கும்பொழுது, வேலையில் பாதுகாப்பற்றும் உற்பத்தியில் ஆதிக்கமற்றும் அல்லது நிருவாகத்தில் பங்கற்றும் இருக்கும்பொழுது அவனுக்கு வேலையில் தன்னார்ந்த ஊக்கம் ஏற்படுவதில்லை. தன்னுடைய ஆளுமையைப் பேணி வளர்க்கும் வாய்ப்பு அவனுக்கு ஏற்படுவதில்லை. இவ்வாறாக வேலை வெறும் சாதனமாக மாறிவிடுகிறது. தொழிலாளியின் காலத்தின் பெரும் பகுதியை வேலை எடுத்துக்கொள்வதால், தன்னுடைய ஆளுமையை அக்கால அளவில் அவன் பேணி வளர்க்க முடியாது என்றாகிறது.

வேலையின் கலையார்வக் கூறும், கௌரவமும் பெருமையும் நிறைந்த கூறும் பொருளாதார நடவடிக்கைமூலம் மனித நடவடிக்கையின் இலட்சியத்தை அடைய மனிதனுக்கு வழி செய்கின்றன. இவ்வாறு இக் கூறுகளிரண்டும் நேரிடையான பணியாற்றுகின்றன. வேலையில் ஆளுமையை அழிக்கும் கூறாகிய மூன்றாவது காரணக் கூறு, பொருளாதார நடவடிக்கை மூலம் மனித நடவடிக்கையின் இலட்சியத்தை அழிக்கும் மறைமுகப் பணியாற்றுகிறது. இவ்வாறாக, சிக்கனக் கோட்பாடு

ஏற்றுக்கொள்கின்ற, இயந்திரத் தன்மை நிறைந்து இயந்திரத்தையே பயன்படுத்துகின்ற வேலையானது தொழிலாளியின் ஆளுமையை வளர்க்கும் அவனுடைய திறமையைக் குன்றச் செய்து, மனிதத்தன்மையை அழித்துவிடுகிறது. ஹாப்சன் பின்வருமாறு எழுதுகிறார்: "வாழ்க்கை முழுதும் 'வால்வ்' (valve) ஒன்றினைத் திறப்பதிலேயே காலத்தைச் செலவழித்துவந்தான் என்பதும், குண்டூசி ஒன்றின் பதினெட்டாம் பகுதியைத் தவிர வேறு ஒன்றும் செய்ததில்லை என்பதும் தொழிலாளி ஒருவனைப்பற்றிய வருந்தத்தக்க மதிப்பீடாக அமைகிறது."

உடலைப் பொறுத்தும் உள்ளத்தைப் பொறுத்தும் தொழிலாளிமீது மரத்துப்போகும் விளைவொன்று ஏற்படுகிறது. வேலை இல்லாத நேரத்திலுங்கூடத் தன்னுடைய ஆளுமையை வளர்க்கும் திறன் அற்றவனாகத் தொழிலாளியை அது மாற்றிவிடுகிறது. முதலில் குறிப்பிட்ட பிரீஸ்டிலியின் பேராசிரியர் பின்வருமாறு கூறுகிறார்: 'பகட்டும் கசக்கிப் பிழியும் தன்மையும் கொண்ட இயந்திரங்களும், இயந்திர முறையில் சிறு காரியங்களாற்றும் அமைப்பும் கொண்ட நமது உலகு தொழிலாளிகளின் துவக்க ஆற்றலை அழித்து, ஓய்வு நேரத்தில் அவர்கள் சுறுசுறுப்புடனும் படைப்புத்திறனுடனும் இருப்பதற்குப் பதிலாக மந்தமாக இருக்கும்படி செய்துவிடுகிறது. அவர்கள் வேலைக்குரிய தொழிற்சாலையிலிருந்து பொழுதுபோக்குத் தொழிற்சாலைக்கு நகர்ந்துவிடுகிறார்கள். சங்கீதத்திற்குப் பதிலாக இப்பொழுது சினிமாவின் புதுமையான, நடுக்கமூட்டும் இரைச்சல் கேட்கிறது; அல்லது காட்டுமிராண்டித்தனமான, இசை இழைந்தோடாத களியாட்டத்தின் இரைச்சல் கேட்கிறது. இவ்விரு இரைச்சல்களும் நரம்புகளை முறுக்கேற்றிவிடுகின்றனவேயன்றி உள்ளத்திற்கோ, அறிவிற்கோ, ஆன்மாவிற்கோ பயனுள்ளதாக ஏதும் செய்வதில்லை.' ஓய்வு நேரத்தில் தொழிலாளி தன்னுடைய ஆளுமையை வளர்த்துக்கொள்ளலாம். எனவே, வேலையின் இயல்பைப்பற்றிக் கவலைகொள்ளவேண்டாம் என்று திருப்தியடைவதில் பிரயோசனமில்லை. மனிதனுடைய காலத்தின் பல்வேறு பகுதிகளுக்கிடையில் ஒன்றிலிருந்து பிறிதொன்றிற்குச் செல்லமுடியாத பிரிவு இருப்பதில்லை; காலப்பகுதி ஒன்றில் மேற்கொள்ளும் நடவடிக்கை பிறிதொரு காலப் பகுதியில் மேற்கொள்ளும் நடவடிக்கையில் பிரதிபலிக்கும் என்பதையும் மறுக்கமுடியாது. 'நேரம் என்றும், பின் அதிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்ட நேரம் என்றும் கிடையாது.

நேரம் மட்டுமே இருக்கிறது' என்று நேர்த்தியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பகற்பொழுதில் ஒருவன் செய்யும் வேலையின் விளைவாக ஆளுமை மரத்துவிட்டால், வேலை முடிந்த பிறகு பகற்பொழுதின் எஞ்சிய நேரத்தில் ஆளுமைக்கு உடனடியாகத் துடிப்பும் ஜீவகளையும் திரும்ப ஊட்ட முடியாது. தெளிவாகத் தெரிவது என்னவெனில், தொழிலாளி யின் ஆளுமைமீது ஏற்படும் மரத்துப்போகும் உணர்ச்சிக்குக் காரணமான கூறுகளை நீக்க முயல்வதே புத்திசாலித்தனமான காரியமாகும். இதனை முழுதும் செய்ய முடியவில்லை எனில், குறைந்தபட்சம் இதனை எந்த அளவுக்குக் குறைக்கமுடியுமோ அந்த அளவுக்குக் குறைக்கவாவது முயற்சி எடுக்கவேண்டும்.

தொழிலாளியின் ஒழுக்கம், மனப்பான்மை ஆகியவற்றைப் பற்றிய நான்காவது கூறின் விளைவு நேரிடையாகவும் இருக்க லாம் அல்லது எதிரிடையாகவும் இருக்கலாம். தன்னுடைய ஆளுமையை வளர்த்துக்கொள்ளத் தொழிலாளிக்குத் திறமையையும் விருப்பத்தையும் அது வழங்கலாம் அல்லது அவற்றைக் கெடுக்கலாம். சிக்கனக் கோட்பாட்டின்மீது எழுந்துள்ள இன்றைய இயந்திரமயமான தொழிலமைப்பு, தொழிலாளி தன் ஆளுமையை வளர்த்துக்கொள்ளும் திறமையையும் விருப்பத்தையும் அழித்துவிடுகிறது என்பது ஏற்றுக்கொண்ட உண்மையாகும். பண்டங்களைத் தரப்படுத்து தல், வேலைக்கும் இறுதியில் முற்றுப்பெற்ற பண்டத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்படுகின்ற தொலைவு, இயந்திரத்தின் இயக்கத்திற்குத் தக்கவாறு தன்னுடைய நடவடிக்கைகளைச் சரி செய்துகொள்ளுதல் ஆகிய இவையனைத்தும் தொழிலாளிக்கு நானுவித வகையறுக்கள் (variety) மீது எழும் மகிழ்ச்சி, தனித் தன்மை ஆகியவற்றைப் பாதிக்கின்றன; மேலும், இவை ஒருவன் தன்னுடைய ஓய்வுநேரத்தைப் பயன்படுத்துவதிலும், இன்பமாகக் கழிப்பதிலும் பெருமளவு உற்பத்திப் பழக்கத் தைக் கையாள்வதற்கே தூண்டுகின்றன. ஓய்வுநேரப் பிரச் சினை தற்காலத்துத் தொழிலமைப்பில் மிகவும் முக்கியமான பிரச்சினையாகிவிட்டது என்பது தெரிந்ததே. தனித்தன்மை வாய்ந்த ஆளுமையைப் போற்றிப் பேணி வளர்க்கும் வகையில் ஓய்வுநேரத்தைப் பயன்படுத்த ஒருவனை எவ்வாறு தூண்டுவது என்ற பிரச்சினைகுறித்து உலகமுழுவதும் உள்ள சமூகச் சிந்தனையாளர்கள் அலசிப்பார்க்கிறார்கள். சிக்கனக் கோட் பாட்டின்மீது கட்டப்பெற்ற இன்றைய உற்பத்தி நிருவாக அமைப்பே இப் பிரச்சினை எழுவதற்குக் காரணமாக உள்ளது என்று கருதப்படுகிறது. இக் கருத்தில் பெருமளவு உண்மை

இருக்கிறது. தங்களுடைய ஓய்வு நேரத்தை நயத்தக்க நாகரிகத்துடனும் சீராகவும் பயன்படுத்தும் நல்ல நிலையில் இருக்கும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், தொழிற் சாலைகளிலும் மற்றும் இயந்திரமயமாகி நடைபெறும் உற்பத் திச் சாதனங்களின் அமைப்பிலும் மேற்பார்வையிடுதலையோ அல்லது நிருவாகத்தையோ சார்ந்த வேலையில் ஈடுபட்டிருப் போரைப் பொறுத்தவரையில், அவர்கள் தரப்படுத்தப்பெற்ற மாபெருங் கூட்டத்தில் ஓர் அலகாக இல்லாது தனிப்பட்ட நபர்களாகத் திகழ்கிறார்கள் என்பது உண்மையே.

மனிதன் வாழ்க்கையைப்பற்றிக் கொண்டுள்ள மனப் பான்மையையும், அவன் உருவாக்கியுள்ள இலட்சியங்களையும் அவன் சார்ந்துள்ள வேலையானது மாற்றிவிடும். போட்டிக் கோட்பாட்டின்மீது இன்றைய பொருளாதார அமைப்பானது பெரும்பாலும் கட்டப்பட்டிருக்கிறது என்பது இச் சந்தர்ப்பத் தில் தெரிந்ததே. இப் போட்டியில் ஊன்றி நிற்க முடிந்தவரை யில் ஊன்றி நிற்பவன்—ஊன்றி நிற்கமுடியும் என்றிருப்பவன் ஊன்றி நிற்பவர்களிலேயே மிகவும் தகுதி வாய்ந்தவன் என்று கருதவேண்டிய அவசியம் இல்லை. சமூகக் கண்ணோட்டத் துடன் நோக்கும்பொழுது, போட்டித் தூண்டுதலால் உரு வாகும் சில பண்புகள் விரும்பத்தக்கன அல்ல. தற்காலத்துப் பொருளாதார நடவடிக்கையின் போட்டிக் கூறினை அல்லது போட்டிப் பந்தயத்தைப்பற்றி நைட் (Knight) மிகவும் அழகாகப் பகுத்தாய்ந்துள்ளார். போட்டித் தூண்டுதல் தனிப்பட்ட மனிதனிடத்தில் கூர்த்த மதியை உண்டாக்குகிறது என்பதில் ஐயமில்லை. பொருளாதாரப் பண்டங்களைச் சேர்த்து வைப்பதில் கிடைக்கும் ஆனந்தம் தீர்ந்தபிறகு, மற்றவனுக்கு உரியனவற்றைக் கவரவேண்டும் என்ற பேராசையினால் உந்தப் பட்டுப் பொருளாதார நடவடிக்கையில் வியாபாரி பெருமகிழ் வுடன் ஈடுபடுகிறான். ஆனால், அதே நேரத்தில், பொருளாதாரக் குறிக்கோளை அடைய எந்த வழிமுறையையும் கையாளலாம் என்றும், அது நியாயமானதே என்றும் ஓர் உணர்ச்சியைப் போட்டி ஏற்படுத்துகிறது; இன்னும் தனிப்பட்ட மனித னிடத்தில் ஒரு கொடிய உணர்வையும் கலக உணர்வையும் போட்டி ஏற்படுத்துகிறது. வியாபாரத்தில் நேர்மை தேவை யில்லை என்ற உணர்ச்சியைப் போட்டி ஏற்படுத்துகிறது. சாதாரண ஒழுக்கத்திலிருந்து வியாபார ஒழுக்கம் பிரிந்து நிற்கிறது. இலட்சியங்களிலிருந்து வழிமுறைகள் பிரிந்து நிற் கின்றன. சிக்கனக் கோட்பாட்டின் அடிப்படையில் நடை பெறும் நடவடிக்கையின் ஓர் அம்சமாக இலட்சியங்களிலிருந்து

வழிமுறைகள் பிரிந்து நிற்கும் நிலை அமைந்துள்ளது. மேற்கத்திய நாடுகளின் சிந்தனையாளர்களின் எண்ணத்தில் ஊடுருவி நிற்கும் ஆல்டஸ் ஹக்ஸ்லியின் (Aldous Huxley) செல்வாக்கு மிகுந்த 'வழிமுறைகளும் இலட்சியங்களும்' (Means and Ends) என்ற நூலிலிருந்தும், மகாத்மா காந்தியின் போதனைகளிலிருந்தும் நடைமுறைகளிலிருந்தும் தெரியவருவது என்னவெனில், இலட்சியங்களிலிருந்து பிரிக்கப்பட்ட வழிமுறைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதே. ஆனால், இந்த இயக்கமானது பொருளாதார நிபுணர்களின் வர்க்கத்தில் இன்னும் செல்வாக்குப் பெறவில்லை. எனவே, சிக்கனக் கோட்பாட்டினைக் கட்டுப்படுத்துகின்ற காரணக் கூறாக வேலையில் ஒழுக்கம் பேணும் கூறு அமைந்திருக்கிறது என்று அந்த நிபுணர்கள் அதனைத் தள்ளிவைக்கின்றனர்.

இலட்சியங்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கனக் கோட்பாட்டைப் பயன்படுத்துவதில்கூடப் பெருஞ் சிக்கல்கள் உள்ளன. இலட்சியங்களுக்கு இடையில் நடுநிலைமை வகித்தல் என்ற பொருளாதார நிபுணனின் புதிய கருத்தைக் கண்டுபிடித்து வெளியிட்ட ராபின்ஸ், இலட்சியங்களுக்குப் பொருளாதார நிபுணர்களின் உலகில் வேலை இல்லை என்று கருதவில்லை. மாறாக, போட்டியிடுகின்ற இலட்சியங்களிலிருந்து தேர்ந்தெடுப்பதே பொருளாதாரத்தைப்பற்றிய அவருடைய இலக்கணத்தின் அடிப்படையாக உள்ளது. தன்னுடைய சொந்த, சுய விருப்பத்தில் பொருளாதார நடவடிக்கையிலிருந்தும் குறிக்கோள்களிலிருந்தும் தனக்கு வேண்டிய பொருளாதார இலட்சியங்களைத் துய்ப்போன் தேர்ந்தெடுக்கும்பொழுது, அழகு, ஒழுக்கம், சமூகம் ஆகியவற்றைச் சார்ந்த கருத்துகளைப் பொருளாதார நிபுணன் நுழைக்கக்கூடாது என்ற உட்கருத்தை அடக்கியே ராபின்ஸ் இலட்சியங்களில் 'நடுநிலைமை வகித்தல்' என்ற கோட்பாட்டினைத் தருகிறார். தான் விரும்பும் விலை கொடுத்துத் தனக்கு வேண்டுவனவற்றை வேண்டுமளவுக்கு வாங்குவதில் துய்ப்போன் சுதந்திரமாக நடந்து தேர்ந்தெடுக்கிறான். இலட்சியங்களில் தேர்ந்தெடுப்பது பொருளாதார மதிப்பீட்டினைப் பொறுத்ததாகும். நாம் முன்னரே குறித்ததுபோல், விலைவாசிகள்மூலமே பொருளாதார மதிப்பீடு நிர்ணயிக்கப்பெறுகிறது. அடுத்து, விருப்பத் தராதரங்களின் அட்டவணைகளையும், விருப்பத் தராதரங்களின் போக்கின்படி நடக்கத் தனிப்பட்டோருக்குத் தேவைப்படும் பணம்சார் திறமையையும் பொறுத்தே விலைகள் அமைகின்றன. இந்த இணைப்பின்மூலம்தான் பொரு

ளாதார நூல்களில் குறிப்பிடப்படும் உறுதித் தேவை (effective demand) எழுகிறது. இந்த உறுதித் தேவையின் தூண்டுதலுக்குத் தகுந்தாற்போல் உற்பத்தியமைப்பு சுதந்திரமாக இயங்குதலை அனுமதிப்பதையே ராபின்ஸ், 'இலட்சியங்களில் நடுநிலைமை வகிக்கும் மனப்பான்மை' என்கிறார். இத் தூண்டுதலின் முழு வேகத்தில் குறுக்கிடும் பொருளாதார நிபுணனைத் தன் கடமையிலிருந்து நழுவிவிட்டதாக ராபின்ஸ் கண்டிப்பார். துய்ப்போனின் சுதந்திர விருப்பம் அல்லது அவனுக்குள்ள தேர்ந்தெடுக்கும் உரிமை என்பதானது ஓர் எடுகோளே; அந்த எடுகோளும் உண்மைக்கு ஏறத்தாழ ஒத்திருக்கிறது என்பதைவிட மாயைபோன்றது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

எந்த சமூகத்திலும், குறிப்பாக இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்பில் துய்ப்போனின் இலட்சியத் தேர்வு என்பது மரபினையும், வர்க்கத்தரங்களையும், பண்பாட்டு உணர்ச்சிக் கூறுகளின் தொகுப்பையும் பொறுத்திருப்பதால், அவனுக்குள்ள தேர்ந்தெடுக்கும் உரிமை என்பது பிரத்தியட்ச உண்மையாக இருப்பதைவிட வெறும் வார்த்தைக் கோப்பாக இருக்கிறது. மேலும், அளிப்பு தேவையை உண்டாக்குகிறது என்பது துணிச்சலான வியாபாரப் பொருளாதாரத்தின் முதுமொழி என்பது தெரிந்ததே. குறிப்பிட்ட ஒரு பண்டத்தைத் தொடர்ந்து, அதற்காக புத்தி கூர்மையுடன் திட்டமிட்டுப் போதுமான அளவுக்குப் பணம் செலவழித்து விளம்பர ஏற்பாடு செய்யும்பொழுது அந்த முதுமொழி சரியாகிறது. வியாபாரத் துறையை நாடுவோருக்கு விற்பனைத் திறனும் விளம்பரமும் கலைகளாகத் திகழ்கின்றன என்ற கருத்தில் விளைந்ததே தேவை ஆகும். உண்மையில் இன்று பொருளாதார மதிப்பீட்டிற்கு அடிப்படையான தனித்த விருப்பத் தராதரங்களை நிர்ணயிப்பதில் துய்ப்போர் ஈடுபடும் அளவுக்கு உற்பத்தியாளர்களும் ஈடுபடுகின்றனர் என்று கூறுவது தவறாகாது. இத்தகைய சூழ்நிலையில், துய்ப்போரின் தேர்வு உரிமையே தனித்த விருப்பத் தராதரங்களை நிர்ணயிக்கிறது என்றும், எனவேதான் பொருளாதார நிபுணன் இலட்சியங்களில் நடுநிலைமை மனப்பான்மையைப் பேணுகின்றான் என்றும் கருதுவது பொருளாதாரத் தேர்வின் உண்மைக்குப் புறம்பானது ஆகும்.

தனிப்பட்ட தராதர விருப்பங்களைச்சுதந்திரமாக உருவாக்கி அமைத்துக்கொண்ட எடுகோளை ஏற்றுக்கொண்டபோதிலும், அவை பொருளாதார நடவடிக்கையை இயக்குவதில்லை

என்பதை எண்ணிப்பார்க்கும்பொழுது, 'இலட்சியங்களில் நடுநிலைமை வகித்தல்' என்ற மனப்பான்மையை அவ்வளவாக ஏற்றுக்கொள்வதற்கில்லை. தனிப்பட்ட விருப்பத் தராதரங்களுக்குப்பின் அமைந்துள்ள பணம்சார் திறமையோ அல்லது தனிப்பட்ட மனிதனின் வருமானப் பங்கீடோதான் இத்தகைய விருப்பத்தராதரங்களைப் பொருளாதார மதிப்பீடுகளாக மாற்றி விலை நிர்ணயிப்பிற்கும் உறுதித் தேவைக்கும் வழிவகுக்கிறது. ஆனால், முதலாளித்துவ சமூக அமைப்பில், சமவருமானப் பங்கீட்டு நிலை இல்லை; எனவே, அதனால் விளைந்த விலைகளின் நிர்ணயம் தனிப்பட்டோரின் விருப்பங்களின் எண்ணிக்கையையும் தீவிரத்தையும் பிரதிபலிப்பதில்லை. உதாரணமாக, அநேக ஏழை மக்கள் மிகத் தீவிரமான ஆசையுடன் வாங்கும் பண்டங்களின் விலைகளும், பொருளாதார மதிப்பையும்விட ஒருசில பணக்காரர்கள் விரும்பி வாங்கும் பண்டங்களின் விலைகளும், பொருளாதார மதிப்பும் கூடுதலாகவே உள்ளன. 'இலட்சியங்களிலிருந்து தேர்ந்தெடுத்தலானது விலை மதிப்பீடுகளைப் பொறுத்து இருப்பதால், பொருளாதார நடவடிக்கையை நிர்ணயிப்பதில் ஏழைகளைவிடப் பணக்காரர்களுக்கே உரிமை வழங்கவேண்டும் என்பதையே ராபின்சனின் 'இலட்சியங்களில் நடுநிலைமை வகித்த'லானது குறிப்பிடுகிறது. உண்மையில் இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்பில் வழக்கமாக இவ்வாறுதான் நடைபெறுகிறது.

முதலாளித்துவத்தில் பொருளாதார நடவடிக்கை, விலையமைப்பின் தூண்டுதலினால் நடைபெறுகிறது; அதன் விளைவு, உற்பத்தி முறை ஒருசில பணக்காரர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கே முயல்கிறது. பொருளாதார வளங்கள் குறைந்து அளவோடு இருப்பதால், தவிர்க்கமுடியாத அளவுக்கு அநேக ஏழை மக்களைப் பாதிக்கும் வகையில் சில பணக்காரர்களை ஆதரிப்பதாக முடியும். மாற்றி வேறு முறையில் சொல்லவேண்டுமெனில், தன்னுடைய பொருள்சார் தேவைகளைப் பூர்த்தி செய்வதே ஒருவனுடைய பொருளாதார நடவடிக்கையின் உடனடிக் குறிக்கோள் எனின், மக்களனைவருடைய பொருளாதார நடவடிக்கைகளின் விளைவு, அவர்களுடைய முழு மொத்தமான பொருள்சார் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அமைவதில்லை; ஆனால், சிலருடைய தேவை பூர்த்தியாகிப் பலருடைய தேவை பூர்த்தியாகாத விளைவே ஏற்படுகிறது. ஆக, முதலாளித்துவ உலகில் வாழும் பெரும்பாலான மக்கள் தேர்ந்தெடுக்கும் பண்டங்கள் கிடைக்கப்பெறாத உரிமையைத் துய்ப்போனின் தேர்ந்தெடுக்கும் உரிமை எனலாம்.

ஆடம் ஸ்மித் (Adam Smith) 'புலனாகாக் கையின்' (invisible hand) செயலில் காட்டிய நம்பிக்கையின் விளைவால், பொருளாதார நிபுணர்கள் பொதுவாக மனித விருப்பங்களில் நிறைவு காண் பதைப்பொறுத்தவரையில், பொருளாதார இயந்திரத்தின் செய லில் அலட்சியமாக இருக்கத் தொடங்கினர். வருமானத்திலும் வாங்கும் சக்தியிலும் மனிதனே உருவாக்கிய ஏற்றத்தாழ்வு மேலே குறிப்பிட்ட 'புலனாகாக் கையினை'ப் பாதித்துள்ளது. எனவே, இன்றைய உலகில் இலட்சியங்களிலிருந்து தேர்ந் தெடுக்க சிக்கனக் கோட்பாட்டினைப் பிரயோகிப்பதனால், அதா வது, பொருளாதார மதிப்பீட்டின் அடிப்படையில் உற்பத் தியை ஒழுங்குபடுத்துதலினால் சமூகத்தின் பொருளாதாரத் தேவைகளைப் போதுமான அளவுக்கு நிறைவுபெறச் செய்ய முடியாது என்ற விளைவு ஏற்படுகிறது. பொருளாதாரத்தேவை களைப் போதுமான அளவுக்குப் பூர்த்தி செய்ய முடியாமைக்குக் காரணம், சாதனங்கள் போதுமான அளவுக்குக் கிடைக்காமை யன்று; தேவைகளைத் தேர்ந்தெடுப்பதில் விலை அடிப்படையின் செயலாக்கமே ஆகும். இத்தகைய சூழ்நிலைகளில் இலட்சியங் களில் நடுநிலைமை என்பதானது, அதாவது, இலட்சியங்களைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கனக் கோட்பாட்டினை முழுதும் அப்படியே ஏற்றுக்கொள்ளுதல் என்பதானது உண்மையான நடுநிலைமையைக் குறிப்பதாகாது; மாறாக, துய்ப்பிலும் வருமானத்திலும் ஏற்றத்தாழ்வு நிலவுவதை நேர்முகமாக ஏற்றுக்கொள்ளுதலையே குறிப்பதாகும். மேலும், முதலாளித் துவப் பொருளாதார அமைப்பிற்கு ஆதரவாகவே பொருளா தார நிபுணனின் அறிவார்ந்த சமன்நிலை மாறியிருக்கிறது என்று தெரியவருகிறது.

இறந்துபோன தலையிடாமைக் கோட்பாட்டிற்குப் (laissez faire) புத்துயிர் அளிக்க ராபின்ஸ் மேற்கொள்ளும் நடுநிலைமை மனப்பான்மையை நாம் பின்பற்ற முடியாது. போதுமான அளவுக்கு இல்லாத சாதனங்களின்மூலம் கிடைக்கவேண்டிய அளவுக்குப் பொருள்சார் தேவைகளின் திருப்தி கிடைக்கவில்லை எனில், இந்தத் துறையில் சிக்கனக் கோட்பாட்டினைப் பிரயோ கிக்கவும் முடியாது; இலட்சியங்களிலிருந்து தேர்ந்தெடுப்பதில் நடுநிலைமையை அனுஷ்டிக்கவும் முடியாது. ஏனெனில், சமூகக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்பொழுது, பொருளாதார நடவடிக்கையானது உடனடி இலட்சியத்தை மேலே குறிப் பிட்ட அளவுக்குத் திறமையுடன் நிறைவேற்றாது. பொருளா தார நடவடிக்கையின் சமூக இலட்சியம் என்பதாக ஒன்று இருப்பதையே சில பொருளாதார மேதைகள் ஏற்க மறுக்க

லாம். இவ்வாறு மறுப்பதானது எவ்வகையான சமூகமும் அமைவதைக் கண்ணை மூடிக்கொண்டு மறுப்பதற்கு ஒப்பாகும். சமூக அமைப்பு ஏற்படத் துவங்கியவுடனேயே மனிதன் தனக்காகமட்டும் வாழ்வதை நிறுத்திக்கொள்கிறான்; மேலும், சமூக நடவடிக்கை சமூகக் குறிக்கோளை நிறைவேற்றக் கொஞ்சங் கொஞ்சமாக முனைகிறது. பொருளாதாரக் கைக்கோளுக்குரிய ஆய்வுமுறைகளை வகுப்பதில் பொருளாதாரம் பயனுடையதாக இயங்கவேண்டுமெனில், பொருளாதார நடவடிக்கையின் சமூக இலட்சியத்தை உருவாக்கும் பிரச்சினையிலிருந்து அது விலக முடியாது. நாம் முன்னரே குறிப்பிட்டுள்ளதுபோல, தனது பொருள்சார் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதே, குறிப்பாக உணவு, உடை, உறையுள் முதலானவற்றைப் பெற்றுத் திருப்தியடைவதே தனிப்பட்ட மனிதன் ஒருவனின் பொருளாதார நடவடிக்கையின் உடனடி இலட்சியம் ஆகும்.

சமூகத்தைப் பொறுத்தவரையில், சமூகத்திற்கு வேண்டிய பொருள்சார் தேவைகளைப் பூர்த்தி செய்து திருப்தியடைவதே, குறிப்பாக உணவு, உடை, உறையுள் முதலானவற்றைப் பெற்றுத் திருப்தியடைவதே சமூகம் மேற்கொள்ளும் பொருளாதார நடவடிக்கையின் உடனடி இலட்சியமாகும். இத்தகைய திருப்தியின் அவசியத்தையோ அல்லது அதனை சமூகத்திற்குரிய பொருளாதார நடவடிக்கையின் உடனடி இலட்சியமாக ஏற்றுக்கொள்வதையோ மறுக்கக்கூடியவர்கள் பலர் இருப்பர் என்று எனக்குத் தோன்றவில்லை. எனவே, சமூகநலனுக்குரிய பொருள்சார் தேவைகளைத் திறமையுடன் நிறைவேற்றிக்கொள்வதில் இலட்சியத் தேர்வினால் ஏற்படும் விளைவு எப்படி இருக்கிறதோ, அதனைப் பொறுத்து இலட்சியங்களிலிருந்து தேர்ந்தெடுப்பதில் சிக்கனக் கோட்பாட்டினைப் பிரயோகிக்கும்பொழுது கட்டுப்பாட்டுடன் பிரயோகிக்கவேண்டியது அவசியமாகிறது. ஆக, சமூகக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்பொழுது, போகப்பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதிலிருந்து அத்தியாவசியமான பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்யும் வகையில் பொருளாதார நடவடிக்கையைத் திருப்பிவிடவேண்டும் என்பது பொருளாதார ரீதியில் நோக்கும்போது சரியேயாகும்; இவ்வாறு திருப்பி விடுதலானது, அப் பண்டங்களின் விலை விகிதங்கள் காட்டும் போக்கிற்கு மாறானதாக இருந்தபோதிலும் பரவாயில்லை. மக்களனைவருக்கும் தேவையான அத்தியாவசியமான பண்டங்களை உற்பத்தி செய்யும் முக்கியமான பிரச்சினைபற்றியோ அல்லது பொருளாதார நடவடிக்கையின் சமூக இலட்சியத்தை

நிறைவேற்றுவதில் தனியார் பொருளாதார நடவடிக்கை எந்த வகையில், எந்த அளவுக்கு, எத்தகைய திறமையுடன் ஈடுபட்டிருக்கிறது என்ற சர்ச்சைபற்றியோ பொருளாதாரம்பற்றிய நூல்கள் கருத்துச் செலுத்தவில்லை என்பது உண்மையில் வியப்பிற்குரியதே. இந்த நிலை தொன்மைப் பொருளாதார நிபுணர்கள், தொன்மைப் புதுப் பொருளாதார நிபுணர்கள் முதலானோரின் முன்னோக்கு, கற்பனை, இரக்கம் இவற்றைப்பற்றித் தெளிவாக எடுத்துக்காட்டாததால், உணவு, உடை, உறையுள் முதலான அத்தியாவசியப் பண்டங்களை அளித்துத் திருப்திபடுத்துதலையே பொருளாதார மூலவளங்களும் சமூக நடவடிக்கையும் தலையாய கடமையாக மேற்கொள்ளவேண்டும் என சமதர்ம எழுத்தாளர்கள் எடுத்துக்காட்டவேண்டியுள்ளது.

போட்டியிடும் இலட்சியங்களிலிருந்து தேர்ந்தெடுக்கும் பிரச்சினையில் சிக்கனக் கோட்பாட்டினைப் பயன்படுத்துவதில் வேறொரு கட்டுப்பாட்டு விதியும் இருக்கிறது. தனிப்பட்ட மனிதனின் கோணத்திலிருந்து பார்க்கும்பொழுது, தனித்த பொருளாதார நடவடிக்கையின் பொருளாதார சாதனை, சமூகக் கோணத்திலிருந்து பார்க்கும்பொழுது தென்படும் சாதனையுடன் முழுதும் ஒத்திருப்பதில்லை என்று பேராசிரியர் பிகு குறிப்பிட்டுள்ளார்; தனது கருத்தை நிரூபிக்க அனுபவ வாழ்க்கையிலிருந்து அநேக உதாரணங்களை எடுத்தோதுகிறார். ஓர் உதாரணத்தை இங்கே நாம் குறிப்பிடுவோம். தொழிற்சாலையின் புகைபோக்கிகளிலிருந்து கிளம்பும் புகையானது, சமூகத்திற்கு ஈடுசெய்யாத பெருத்த நஷ்டத்தையும், கட்டடங்களுக்கும் காய்கறிகளுக்கும் கேட்டினையும், துணிகளைத் துவைக்கவும் அறைகளைத் தூய்மைப்படுத்தவும் வேண்டிப் பெருஞ்செலவினையும், கூடுதலான செயற்கை விளக்குப்போடும் செலவினையும், வேறு பல வழிகளில் கேட்டினையும் உண்டாக்குகிறது. இங்கு, தொழிற்சாலை அதிபருக்குக் கிடைக்கும் தனித்த இறுதிநிலை நிகர உற்பத்தி சமூகத்திற்குக் கிடைக்கும் சமூக இறுதிநிலை நிகர உற்பத்தியைவிட அதிகமே. இதற்கு எதிரிடையான வகையைச் சார்ந்த உதாரணமும் உண்டு; மூலவளங்களை அடிப்படையான பிரச்சினையாகிய ஆராய்ச்சியில் ஈடுபடுத்துதலே அவ்வுதாரணமாகும்; அவ்வாராய்ச்சியிலிருந்து, எதிர்பாராத வகையில், உயரிய அனுபவப் பயன்பாடு நிரம்பிய கண்டுபிடிப்புகள் பெருகும்; அவையனைத்திற்கும் உரிமைக் காப்பு (patent) கிடைக்காது. தனித்த இறுதிநிலை நிகர உற்பத்தியைவிட (private net marginal product) கூடுதலான சமூக இறுதிநிலை நிகர உற்பத்தியை விளக்கும்

நடவடிக்கைகளில் மூலவளங்களை முதலீடு செய்து நாட்டு ஆக்கத் தொகையை (national dividend) உச்சநிலைக்குப் பெருக்கவேண்டும் என்றும், எதிர்மறையான விளைவுகளை உண்டாக்கும் நடவடிக்கைகளைத் தடுக்கவேண்டும் என்றும் பேராசிரியர் பிகு ஒரு கருத்தினை வழங்கியுள்ளார். இலட்சியங்களில் நடுநிலைமை என்று கூறும் பொருளாதார அறிஞனின் கோட்பாட்டில் இது மற்றுமோர் ஓட்டையாகும். இலட்சியங்களிலிருந்து தேர்ந்தெடுப்பதில் சிக்கனக் கோட்பாட்டைப் பயன்படுத்துவது இதனால் கட்டுப்படுத்தப்படுகிறது.

பொருளாதார நடவடிக்கையின் குறிக்கோள், அதில் தான் பிரயோகிக்க விரும்பும் சிக்கன ஆய்வுமுறை முதலானவை பற்றிப் பழைமையான பொருளாதார நிபுணன் கொண்டுள்ள கருத்திற்கு நாம் அநேக எதிர்ப்புகளை எழுப்பியுள்ளோம். ஆனால், இந்த எதிர்ப்புகள் வெறுங் கருதுகோளைச் சார்ந்தவை மட்டுமல்ல; மக்களிடையே நிலவும் ஒளியூட்டும் கருத்துங்கூட இந்த எதிர்ப்புகளை ஏற்றுக்கொண்டுள்ளது. இன்னும் அரசாங்கம் பொருளாதார நடவடிக்கையைக் கட்டுப்படுத்தி ஒழுங்குறச் செய்ய இவ்வெதிர்ப்புகள் அடிப்படையாக அமைந்துள்ளன. உதாரணமாக, நாகரிக உலக முழுதுமுள்ள அரசாங்கங்கள், இரவு நேரத்தில் பெண்டிரை வேலை செய்யச் சொல்வதையும், சாலை வேலையில் குறிப்பிட்ட வயதுக்குக் குறைந்த வயதினையுடைய குழந்தைகளை ஈடுபடுத்துவதையும் தடை செய்துள்ளன. வளர் இளம் பருவத்தினரும் முதிர் வயதுடையோரும் வேலை செய்யும் நேர அளவும் கட்டுப்படுத்தப் பெற்றுள்ளது. மேலும், சில நாடுகளில் கடின உழைப்புத் தொழில்களில் (sweated industries) குறைந்தபட்ச கூலிமுறை புகுத்தப்பெற்றுள்ளது. தாங்கள் கருதும் சமூகப் பொருளாதார இலட்சியத்தை நல்ல முறையில் அடையவேண்டி, உற்பத்தி நடவடிக்கையில் சுங்கவரி விதிப்பு, கொடைகள், இன்னும் வேறு பல வழிகள் ஆகியவற்றின்மூலம் அரசாங்கங்கள் கணிசமான அளவுக்குக் குறுக்கிடுகின்றன. மனிதன் ஓர் உற்பத்திச் சாதனம் மட்டுமன்று; உற்பத்தியின் இலட்சியமும் அவனேதான் என்ற உண்மையை ஜனநாயக நாடுகளில் மக்கள் கருத்தைப் பிரதிபலிக்கும் அரசாங்கம் உணர்ந்திருக்கிறது என்பதனையே இது தெளிவாக விளக்குகிறது. இந்தக் கோட்பாட்டின் பல அம்சங்களைச் செயற்படுத்தவில்லை என்பது உண்மையே. அதற்குப் பல காரணங்கள் உண்டு; அவற்றில் குறிப்பிடத்தக்கன, சிக்கனக் கோட்பாடும் பொருளாதார நிபுணர்களின் போதனைகளுமே ஆகும்.

இந்தியாவில் காந்தியடிகள், சிக்கனக் கோட்பாட்டின் குறைபாடுகளின் அடிப்படையில் அரசியல், பொருளாதாரக் கோட்பாடுகளின் முழுத்தொகுப்பினை வகுத்துள்ளார். அவருடைய கோட்பாடுகள் அனைத்தையும், குறிப்பாக பலாத்காரமற்ற வாழ்க்கையை வாழ்வதற்காகவேண்டி குறைந்த வாழ்க்கைத் தரத்தைப் பொறுத்துக்கொள்ளவேண்டும் என்ற அவருடைய விருப்பத்தையும் ஒருவர் ஏற்றுக்கொள்ளவில்லை எனினும், பொருளாதார உலகம் இதுவரையில் அக் கோட்பாடுகளை அலசிப்பார்த்ததைவிடச் சற்று அதிகமான பொறுப்பெடுத்து அலசிப்பார்க்கவேண்டும்.

பொருளாதார நடவடிக்கையின் இயல்பையும் குறிக்கோளையும் பகுத்தாய்தலில் பொருளாதாரக் கைக்கோளினைப் பாதிக்கும் மிக முக்கியமான விஷயங்கள் அடங்கியுள்ளன என்பதுபற்றிப் போதுமான அளவுக்கு நான் விளக்கிச் சொல்லிவிட்டதாகக் கருதுகிறேன். மனித நடவடிக்கையின் எந்தக் கிளையையும் சாதனைகளின் நடவடிக்கையாக மட்டுமே கொள்ளமுடியாது என்பதை நமது பகுத்தாய்வு விளக்கியுள்ளது; தனிப்பட்ட மனிதனின் காலத்தின் பெரும் பகுதியை விழுங்கியுள்ள பொருளாதார நடவடிக்கையைப் பொறுத்தவரையில் இது தெளிந்த உண்மையே. எனவே, பொருளாதார நடவடிக்கையில் நேரடியான நிறைவுக் கூறினையோ அல்லது இலட்சியக் கூறினையோ பெருக்க முயற்சிகள் எடுக்கவேண்டும். இவ்வாறு எடுக்கப்படும் முயற்சிகள் எந்த அளவுக்கு வெற்றியடையவில்லையோ அந்த அளவுக்குப் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுதலானது தனிப்பட்ட மனிதனின் கண்டுபிடிக்கும் திறமையையும், அவன் தனது ஆளுமையை வளர்த்துப் பேணும் திறமையையும் பாழாக்காதவாறு பார்த்துக்கொள்ளும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

மனித நடவடிக்கைகளனைத்தின் பொதுக் குறிக்கோளுடன் பொருளாதார நடவடிக்கையை இணைத்தலைப்பற்றி இதுவரையில் விளக்கியது போதும். பொருளாதார நடவடிக்கையின் உடனடி இலட்சியமாகிய, நலன் பேணும் பொருளாதார சாதனங்களை அடைதலைப் பொறுத்தவரையில், உணவு, உடை, உறையுள் ஆகிய பரிவர்த்தனைக்குரிய பண்டங்களும் சேவைகளுமான சமூக அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவேண்டும்; மிகவும் மோசமான வருமான ஏற்றத்தாழ்வு நிரம்பிய சமூகத்தின் விலைப்போக்குகளினால்

ஏற்படும் பொருளாதாரத் தூண்டுதல்கள், சமூக அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாவதைத் தடைசெய்யாது பார்த்து கொள்ள வேண்டும்.

பொருளாதார நடவடிக்கையின் இயல்பையும் குறிக் கோளையும்பற்றிய கருத்தினைக் கூறும் நிலைமைக்கு நாம் இப்பொழுது வந்துள்ளோம். இலட்சியங்கள், சாதனங்கள் பற்றிய நடவடிக்கையைச் சார்ந்ததே பொருளாதார நட வடிக்கையாகும். சமூகத்தின் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளாகிய பொருளாதாரப் பண்டங்களைப் பெற்றுத் திருப்தியடையும் வகையிலும், ஒவ்வோர் உற்பத்தி நடவடிக்கையிலும் விரயமாவதைத் தடுத்து மூலவளங்களைக் குறைந்தபட்சம் பயன்படுத்தும் வகையிலும், மனித நடவடிக்கையின் இலட்சியமாகிய மனித ஆளுமை வளர்ச் சிக்குக் குந்தகம் ஏற்படாமல் ஆதரவு தரும் வகையிலும் பொருளாதார மதிப்புள்ள பரிவர்த்தனைக்குரிய பண்டங்களை யும் சேவைகளையும் அடையப்பெறுதலே பொருளாதார நடவடிக்கையின் குறிக்கோளாகும்.

எனவே, பொருளாதார நடவடிக்கைக்கு வழிகாட்டும் ஆய்வுமுறையாக ஏற்றுக்கொள்ளப்பெற்ற சிக்கனக் கோட் பாடு கீழ்வரும் கட்டுப்பாட்டு விதிகளுக்கு அடங்கியதே :

(1) **சமூகத்தில் வாழும் தனிப்பட்ட மனிதர்கள் அனைவரின் குறைந்தபட்ச பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து திருப்தி படுத்துதல்;** உற்பத்தியின் போக்கையும் அளவையும் சாதாரண மாக நிர்ணயிக்கின்ற விலை நோக்கமும் இலாப நோக்கமும் உணவு, உடை, உறையுள்போன்ற அத்தியாவசியமான பண்டங்களின் உற்பத்தியில் தம்மிச்சையாக இயங்குவதைத் தடுப்பதுதான் இந்த ஆய்வுமுறையின் பிரத்தியட்ச உள் நோக்காகும்.

(2) தனித்த இறுதிநிலை நிகர உற்பத்தியைவிட சமூக இறுதிநிலை நிகர உற்பத்தியை அதிகமாகத் தரும் பொருளாதார நடவடிக்கையின் பல்வேறு வகைகளைத் தூண்டி ஆதரிக்கும் வகையில் உதவிக் கொடைகள் (subsidies), அரசாங்கக் கொடை கள் (bounties), சுங்கவரிகள் (tariffs) அல்லது வேறு முறைகள் முதலானவற்றைப் பயன்படுத்தவேண்டும் ; மற்றும், மேற் குறிப்பிட்ட விளைவுக்கு எதிரான விளைவை ஏற்படுத்தும் பொருளாதார நடவடிக்கையின் வேறு வகைகளைத் தடுக்க வேண்டி வரிகள், கிடைப்புப் பங்குகள் (quotas), வேறு முறை கள் முதலானவற்றைப் பயன்படுத்தவேண்டும்.

(3) **தொழிலாளர் வேலை நிறைவு :** கட்டாய வேலையின்மையால் (involuntary unemployment) யாரும் வேலையின்றித் தவிக்கக்கூடாது என்பதே இதன் பொருளாகும். கட்டாய வேலையின்மை என்பது கீன்ஸ் கையாண்ட சொல்லாகும். வேலையின்மையானது பிறழ்ச்சி காரணமாக (frictional) மட்டுமன்றி வேறு காரணங்களாலும் ஏற்பட்டிருந்தால், மிகவும் குறைந்த மூலவளங்களைப் பயன்படுத்தும் தொழில்நுட்பமான மலிவான உற்பத்தி முறையைச் சிக்கனமானது என்று கருதிப் பின்பற்ற வேண்டியது அவசியமில்லை என்பதே உள்நோக்காகும்.

(4) **படைப்புத்திறன்சார் உள்ளார்ந்த உந்துணர்வின் (creative instinct) வாய்ப்பு :** தங்களிடமுள்ள படைப்புத்திறன்சார் உள்ளார்ந்த உந்துணர்வினைப் பயன்படுத்தும் வாய்ப்பினைத் தாங்கள் மேற்கொள்ளும் வேலையில் தொழிலாளர்கள் உண்டாக்கிக்கொள்ளவேண்டும் ; அதாவது, வேலையில் கலை அம்சம் விரவியிருக்க வேண்டும். கலையம்சமற்று மலிவாக ஒரு பண்டத்தை உற்பத்தி செய்யும் முறை, செலவு அதிகமாகின்ற, ஆனால், கலையம்சம் நிறைந்திருக்கும் உற்பத்தி முறை ஆகிய இரண்டு முறைகளில் பின்னதையே மேற்கொள்ளவேண்டும் என்பதே அதன் உட்கருத்தாகும். ஆனால், இதனைப் பொறுத்த வரையிலும், மனித ஆளுமை வளர்ச்சியுடன் தொடர்புபடுத்திக் கீழே விவாதிக்கப்படும் சிக்கனக் கோட்பாட்டின் மற்றக் குறைபாடுகளைப் பொறுத்தவரையிலும், பிடிவாதத்துடன் இருக்கவும் முடியாது ; அப்படி இருந்தால் அது புத்திசாலித்தனமுமாகாது. இதனை நாம் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். முதலில், பொருளாதாரப் பண்டங்களை அடைவதற்கு மேற்கொள்ளும் வேலைகள் பலவற்றில் கலையம்சம் கிடையாது. கலையம்சமற்ற நிலையிலேயே அவை தொடர்ந்து இருப்பன. மேலும், பண்டத்தை உற்பத்தி செய்வதில் கலையம்சம் உள்ள முறை, கலையம்சம் அற்ற முறை ஆகிய இரு முறைகளில் ஏதேனும் ஒன்றினைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற நிலை வரும்பொழுது உற்பத்தியளவில் இவ்விரு முறைகளுக்குமிடையில் கணிசமான வேற்றுமை இருப்பின், குறிப்பாக சமூகத்தின் மிகவும் அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளப் போதுமான அளவுக்கு மொத்த மூலவளங்கள் கிடைக்கவில்லை எனில், கலையம்சமற்ற உற்பத்தி முறையையே ஏற்றுக்கொள்ள நேரிடும். முன்னேறிய பொருளாதாரங்களைவிட மிகவும் பின்தங்கிய பொருளாதாரங்களிலேயே இச் சிக்கனக் கோட்பாட்டினைப் பிரயோகிக்கும் தடையிலா வாய்ப்பு அதிகம் இருக்கிறது என்பதையே இது காட்டு

கிறது. எனினும், இதில் புரியாத புதிர் என்னவெனில், அக் கோட்பாட்டினைப் பிரயோகிப்பதில் நேர்மாறான நிலையே உள்ளது. தனியார்சார் உற்பத்தி (individualistic production) முறை முன்னேற்றம் குறைந்த பொருளாதாரத்தின் அம்சமாகவும், தரப்படுத்தும் உற்பத்தி முறை (standardized production) மிக்க முன்னேற்றம் உள்ள பொருளாதாரத்தின் அம்சமாகவும் திகழ்கின்றன. இத்தகைய புரியாத புதிருக்கு விளக்கம், முதலாளித்துவ அமைப்பின் இயல்பிலும் இலாப நோக்கின் செல்வாக்கிலும் உள்ளது. இந்த வினாவிற்குப் பொருளாதார நிபுணர்களின் போதனைகளும், தொழில்துறை உற்பத்தி முறையில் தொழிலாளியின் உளவியல் ரீதியான எதிர்நடவடிக்கையும் ஓரளவு காரணமாக அமைந்துள்ளன.

(5) **தனிப்பட்ட மனிதனின் சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் உடன்பாடு**: ஒரே மாதிரியான பண்டங்களை உற்பத்தி செய்வதில் இவ் விதியை நிறைவேற்றாத பல்வேறு மாறுபட்ட உற்பத்தி முறைகள் மிகக் குறைவான மூலவளங்களைப் பயன்படுத்தியபோதிலும், இவ் விதியை நிறைவேற்றும் வேலையையே தேர்ந்தெடுக்கவேண்டும். இயந்திரம் சார்ந்த வேலையா அல்லது இயந்திரம் சாராத வேலையா என்பது குறித்து முடிவு எடுக்கும் தொல்லை இதில் இல்லை. நாம் முன்னரே குறிப்பிட்டதுபோல், இது தொழிலாளி வேலையிடம் கொண்டுள்ள மனப்பான்மையைப் பொறுத்ததாகும். இம் மனப்பான்மை உற்பத்தியின் சூழ்நிலைகளையும் நிருவாக அமைப்பையும் பொறுத்ததாகும். இன்றைய முதலாளித்துவப் பொருளாதாரத்தில், இயந்திரமொன்றில் தான் ஒரு சிறப்பும் குறிக்கோளுமற்ற சக்கரத்தின் பல்லாக இருப்பதாகத் தொழிலாளி நினைக்கிறான். நைட் குறிப்பிடுவதுபோல, தொழிலாளர் சங்கங்கள் இப்பொழுதெல்லாம் தொழிலாளரின் நலனுக்குரிய பொருள்சார் கூறுகளில்மட்டும் வளர்ச்சி ஏற்பட முயலுவதோடு அமையாது, அவர்களுடைய அந்தஸ்தை உயர்த்தவும் நிருவாகத்தில் அவர்களுக்குப் பங்கினை வாங்கித்தரவும் முயல்கின்றன. வேலையின் இந்தக் கூறு முக்கியமானது; ஏனெனில், மேற்குறிப்பிட்ட சூழ்நிலைகள் உருவாகியுள்ள பின்னணியில்தான் இன்று 'வேலை' என்று சொல்லப்படுவதற்குப் பொருள் இருக்கும். இதனை நிறைவேற்றுவதற்கு முதலாளி–தொழிலாளி என்ற தொடர்பு பிரயோசனமில்லை. தோழமையுணர்வும், சமத்துவ உணர்வும், ஏற்கப்பட்ட வேலையின் சமூகப் பயன்பாட்டில் நம்பிக்கைகொண்டு அதிலிருந்து பிறக்கும் குறிக்கோளும் இருப்பின், மேலே குறித்தவற்றை நிறை

வேற்ற முடியும். வருமான ஏற்றத்தாழ்வும், சில பேரிடத்தில் அதிகாரக் குவிப்பும் உள்ள முதலாளித்துவ உற்பத்தி அமைப்பு முறையில் இதனைத் திறமையுடன் நிறைவேற்ற முடியுமா என்பது ஐயமே. வேலையில் பெருமை, கௌரவம் எனும் கூறுகளைப் பேணுவதற்குக் கூட்டுறவு அல்லது சமதர்ம உற்பத்தி அமைப்பு முறை ஒன்றே சிறந்த இறுதியான வழி என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. இக் கருத்து பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றபோதிலும், பொருளாதார நடவடிக்கைமூலம் மனித ஆளுமையை வளர்ப்பதில், பல்வேறு மாறுபட்ட உற்பத்தி முறைகளுக்கிடையில் பெருமை—கௌரவக் கூறு நிலவும் முறைகளுக்குப் பொருளாதார நிபுணன் மதிப்பெண்கள் தரவேண்டும்.

(6) **ஆளுமையை அழிக்கும் கூறு இல்லாமை :** ஆளுமையை அழிக்கும் உற்பத்தி முறைக்குப் பதிலாக அதனை அழிக்காது பேணும் உற்பத்தி முறையைப் பொருளாதார நிபுணன் தேர்ந்தெடுக்கவேண்டும். இதிலுங்கூட நியாயமான ஓர் இறுதி நிலைக்கு அப்பால் சென்று கூடுதலான செலவுள்ள முறையைத் தேர்ந்தெடுக்க முடியாது. எனினும், தொழில்துறை உலகில் சிக்கனத்தின்பேரால் இன்று நிகழும் உற்பத்திப் போக்கின் வேகமும் இயந்திரமயமாக்குதலின் அதிகரிப்பும் பொருளாதார நடவடிக்கையின் இறுதி இலட்சியத்துடன் ஒத்திருக்கவில்லை. ஆக, கணிசமான அளவுக்கு இதில் திருத்தம் ஏற்படவேண்டும்.

(7) **ஒழுக்கம் பேணுதல் :** தனிப்பட்ட மனிதனிடத்தில் சமூக ரீதியான விரும்பத்தகாத பண்பாடுகளை வளர்க்கும் உற்பத்தி முறைகள் எவ்வளவுதான் குறைந்த செலவு உடையனவாக இருப்பினும், அவற்றைப் பொருளாதார நிபுணன் மறுக்கவேண்டும் ; கூடுதலான செலவை உடையனவாக இருப்பினும், விரும்பத்தக்க பண்பாடுகளை வளர்க்கும் உற்பத்தி முறைகளை அவன் ஏற்கவேண்டும். இன்று நிலவும் பொருளாதார அமைப்பினை முழுவதும் கண்டிப்பதாகிவிடும் என்று கருதக் கூடுமாகையால், இக் கோட்பாட்டினைச் செயற்படுத்துவது கடினமே. சிறிது தீவிரம் குறைந்த கருத்தைச் சொல்ல வேண்டுமெனில், போட்டி உற்பத்தி அமைப்பு முறைக்குப் பதிலாகக் கூட்டுறவு முறையையே தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற உட்கருத்து இதில் அடங்கியுள்ளது. மேலும், வெறுப்பு, ஒற்றுமையின்மை, பன்னாட்டுப் போட்டி முதலானவற்றை வளர்க்கும் பொருளாதார அமைப்பைவிட அமைதி, அன்பு, பன்னாட்டுக் கூட்டுறவு முதலானவற்றை வளர்க்கும் அமைப்பே சிக்கனரீதியில் உயர்ந்தது எனலாம்.

மனித ஆளுமையை வளர்க்க அனுபவரீதியாகச் சிக்கனக் கோட்பாட்டினை எந்த அளவுக்கு விளக்கமுடியும் என்பது பற்றிப் பல தடவைகள் விவாதிக்கப்பட்ட கேள்வியை இப்பொழுது நாம் எடுத்துக்கொள்வோம். சிக்கனக் கோட்பாட்டின் குறைபாடுகள்குறித்து நாம் எழுப்பியுள்ள தடைகள் முழுவதையும் நாம் பிரயோகிக்க முடியாது என்பதை முன்னரே ஒத்துக்கொண்டுள்ளோம். அளவோடு கிடைத்துள்ள பொருளாதார மூலவளங்களைக்கொண்டு மனிதனின் குறைந்தபட்ச தேவைகளையுங்கூட நிறைவேற்றுவது கடினமாக இருக்கும் பொழுது, பொருளாதார மூலவளங்களைப் பயன்படுத்துவதில் சிக்கனக் கோட்பாட்டினைப் பிரயோகித்தல் அவசியமாகிறது; எனவே, சிக்கனக் கோட்பாட்டின் குறைகள்குறித்து எழுப்பியுள்ள தடைகளை நாம் முழுதும் பிரயோகிக்க முடியாது. ரொட்டித் துண்டைத் தின்றுமட்டும் மனிதன் வாழமுடியாது என்பது உண்மையே; ஆனால், ரொட்டித் துண்டு இல்லாமல் மனிதன் உயிருடன் இருக்கமுடியாது என்பதும் உண்மையே. இதுவரையில் நாம் விவாதித்த உயரிய விஷயங்களையெல்லாம் அலட்சியம் செய்துவிட்டு வாழும் வாழ்க்கை சிறந்த வாழ்க்கையாகாது என்று கருதுகின்ற சமூகச் சிந்தனையாளர்கள் மேலே குறிப்பிட்ட கருத்தினை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆனால், நடைமுறையில் மக்களுக்கு வாழ்க்கைமீது பற்று இருப்பதால், தங்களுக்காகவும், முக்கியமாகத் தங்களுடைய குடும்பங்களுக்காகவும் வாழ்வதற்குரிய வாய்ப்பினைப் பெறுவதில் ஏற்படும் அநேக இடர்ப்பாடுகளைத் தாங்கிக்கொள்ள அவர்கள் தயாராக உள்ளனர். எனவே, பொருளாதார வளங்களில் பற்றாக்குறை இருக்கும்பொழுது, வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளும் பிரச்சினைகுறித்தே பொருளாதார நடவடிக்கை முக்கியமாக அமைந்திருக்கும்பொழுது, சிக்கனக் கோட்பாட்டின் குறைகளால் அதன்மீது நாம் விதித்திருக்கும் தடைகளைச் சற்றுத் தளர்த்திக்கொள்ளத்தான் வேண்டும். இதன் காரணமாக, பொருளாதார மூலவளங்கள் மிகவும் குறைந்த அளவில் இருந்தபொழுது, அவற்றைப்பற்றிய அறிவும்-நுட்ப வினைமுறையும் மிகவும் குறைவாக இருந்தபொழுது வாழ்ந்த முந்திய பொருளாதார நிபுணர்கள் சிக்கனக் கோட்பாட்டினை வலியுறுத்திப் பேசினர்; மனித ஆளுமையின் தேவைகளுக்கு ஏற்ப அக்கோட்பாட்டினைத் தன்னிச்சையாகப் பயன்படுத்துவதில் உள்ள தேவையான கட்டுப்பாடுகளைக் குறித்து அவர்கள் கவலைப்படவில்லை. எனினும், இன்று நிலைமைகளில் மாற்றம் உள்ளது.

அநேக நாடுகளின் மொத்தப் பொருளாதார மூலவளங்களில் பெரும் பற்றுக்குறை நிலவுவதாகக் கருதுவதில் உண்மையில்லை; உலகத்தையே முழுதும் எடுத்துக்கொண்டாலும், மூலவளங்களின் பெரும் பற்றுக்குறை என்பதில் நிச்சயமாக உண்மை இல்லை. உண்மையில், இன்று நிலவும் அறிவு, நுட்ப வினைமுறை ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தி இன்றைய உலகின் பொருளாதார மூலவளங்களைச் சரியான முறையில் இணைத்துக் கூட்டாக நிருவகித்தால், அடிப்படைத் தேவைகளான குறைந்தபட்ச உணவு, உடை, உறையுள் முதலானவைகளுக்கு அதிகமாகவே பொருளாதாரப் பண்டங்களை உற்பத்தி செய்ய அம் மூலவளங்களே போதுமானவையாகும். நமது கோடீஸ்வரர்கள் இன்று அனுபவிக்கும் உல்லாச வாழ்க்கையை ஒவ்வொருவரும் அனுபவிக்க அவ் வளங்கள் போதுமான அளவுக்கு இல்லாமலிருக்கலாம். ஆனால், அடிப்படை மனிதத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அதிகமாகவே பொருளாதார மூலவளங்கள் கிடைக்கின்றன என்ற நிலை வந்தவுடனேயே, சிக்கனத்தின்மீது நாம் விதித்துள்ள தடைகள் அமலுக்கு வரும். ஏனெனில், வாழ்வது என்பது பொருளாதார ரீதியாக இயலும் என்ற நிலை வந்த பிறகு, பொருளாதார நடவடிக்கையையும் உள்ளடக்கிய மனித நடவடிக்கைகளனைத்தும் மனித ஆளுமையை வளர்த்தல் எனும் அடிப்படை இலட்சியத்துடன் இணைந்துவிட வேண்டும்.

பொருளாதார நடவடிக்கையின் இயல்பு என்ன, குறிக்கோள் என்ன என்று எழும் இரு கேள்விகளுக்கு நம்முடைய விடைகளைத் தரவேண்டிய கட்டத்தில் நாம் இப்பொழுது இருக்கிறோம்.

ராபின்ஸ் கருதுவதுபோல, பொருளாதார நடவடிக்கை மனித நடவடிக்கைகளனைத்தின் குறிப்பிட்ட ஒரு கூறு அன்று. ஆனால், மார்ஷலும் ஏனையபொருளாதார நிபுணர்களும் கருதுவதுபோலப் பொருளாதார நடவடிக்கை வெறும் பொருள் சார் நலனை அடைவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்றும் கருத முடியாது. நமது கருத்துப்படி, பயன்பாடு நிறைந்த, அளவில் பற்றுக்குறை உள்ள பரிவர்த்தனைக்குரிய பண்டங்கள், சேவைகள் அனைத்தின் உற்பத்தி, பரிவர்த்தனை, பங்கீடு முதலானவற்றைச் சார்ந்த நடவடிக்கையே பொருளாதார நடவடிக்கை எனப்படும். இலட்சியத்தை நிறைவேற்றும் பிரதான சாதனமாகமட்டுமன்றி இலட்சியமாகவே மனிதன் மேற்கொள்ளும் வேலையையே பொருளாதார

நடவடிக்கை எனலாம். அநேகமாக, பொருளாதார நடவடிக்கை என்று கூறப்படும் வேலையில் இவ்விரு கூறுகளும் பின்னிக் கிடக்கின்றன.' எனவே, பொருளாதார நடவடிக்கை வெறும் சாதனத்தைமட்டும் சார்ந்தது அன்று; சாதனங் களும் இலட்சியங்களும் ஒன்றுசேர்ந்த இணைப்பே அது.

பொருளாதார நடவடிக்கையின் குறிக்கோளைப் பொறுத்த வரையில், பொருளாதார நடவடிக்கையின் இலட்சியம் என்பதாக ஒன்றில்லை என்றும், சிக்கனக் கோட்பாட்டின் அடிப்படையில் அல்லது பொருளாதார மதிப்பீட்டின் அடிப் படையில் இலட்சியங்களிலிருந்து ஏதேனும் ஒன்றினைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றும் ராபின்ஸ் கூறும் கருத்தினை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனைய பொருளாதார நிபுணர்கள் அல்லது இத் துறையிலேயே பணியாற்றும் பொருளாதார நிபுணர்கள் இலட்சியங்களில் நடுநிலைமை எனும் ராபின்ஸின் கருத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை எனினும், ஏற்றுக் கொண்டதுபோலவே நடந்துகொள்கிறார்கள். பொருளாதார நடவடிக்கையின் இலட்சியம்பற்றிய பிரச்சினைகுறித்துத் தங்களுடைய புத்தகங்களில் கொஞ்சமாக எழுதியுள்ளதி லிருந்தோ அல்லது ஏதும் எழுதாதிருப்பதிலிருந்தோ, வெறும் தனிப்பட்ட மனிதர்களின் தேவைகளுக்குப் பதிலாகக் கூட்டாக எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்வதில் பொரு ளாதார அமைப்பு முறையின் திறமைகுறித்து அவர்கள் கவலையற்றிருப்பதிலிருந்தும் இது தெரியவருகிறது. இந்த மனப்பான்மையின் காரணமாக இலட்சியத் தேர்வில் சிக்கனக் கோட்பாட்டினை முற்கோளாக (postulate) அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் அதே வேளையில், பொருளாதார நிகழ்ச்சியைத் தனித்து நோக்கும் முறையை அவர்கள் மேற்கொண்டிருப் பதால் மற்ற எல்லா மனித நடவடிக்கைகளும் பொருளாதார நடவடிக்கையுடன் தொடர்பு கொண்டிருப்பதையும், மனித ஆளுமை வளர்ச்சிமீது அத் தொடர்பினால் ஏற்படும் விளை வினையும் அவர்கள் கருதிப் பார்க்காது ஒதுக்கிவிட்டனர். இதன் விளைவாக, பொருளாதார நடவடிக்கையிலும் சாதனங் களிலிருந்து தேர்ந்தெடுப்பதிலும் சிக்கனக் கோட்பாட்டினைக் கட்டுப்பாடின்றி அவர்கள் பிரயோகிக்கின்றனர். சிக்கனம் என்பது மதக்கோட்பாடாகிவிட்டது. சிக்கனக் கோட்பாடு சிக்கனத்திற்காகவே என்பது பழைமைப் பொருளாதார நிபுணனின் வேதவாக்காகவும், பொருளாதார நடவடிக்கையில் அவன் மேற்கொள்ளும் ஆய்வுமுறையின் அடிப்படையாகவும் ஆகிவிட்டது. இக் கருத்தை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

மாறுக, பொருளாதார நடவடிக்கையின் உடனடி இலட்சியம் ஒன்றினையும் இறுதி இலட்சியம் ஒன்றினையும் நாம் முற்கோளாகக் கொண்டுள்ளோம். தனித்தனியே இவ்விரு இலட்சியங்களையும் நோக்காது, அவற்றை ஒன்றாக இணைத்து அடிப்படையில் இரண்டறக் கலந்த நிகழ்ச்சியாகக் காணவேண்டும் என நாம் குறிப்பிட்டுள்ளோம். நமது கருத்துப்படி, எல்லா நடவடிக்கைகளும் ஒரே மாதிரியானவையே; மனித நடவடிக்கைகள் அனைத்தின் பொதுக் குறிக்கோளுடன் தொடர்பு கொள்ளாத குறிக்கோளுடைய மனித நடவடிக்கையின் பிரிவே—பொருளாதார ரீதியான அல்லது வேறு முறையான பிரிவே கிடையாது. மனித ஆளுமை வளர்ச்சியே மனித நடவடிக்கையின் பொதுக் குறிக்கோள் என்று தற்சமயம் ஏற்றுக்கொள்ளலாம் என நாம் குறிப்பிட்டுள்ளோம்.

ஆக, மனித ஆளுமை வளர்ச்சியே பொருளாதார நடவடிக்கையின் இறுதி இலட்சியம் ஆகும்; இவ்விலட்சியம், பொருளாதார நடவடிக்கையை ஒழுங்குற இயக்கவேண்டியது அவசியமாகும். அதே வேளையில், பொருளாதார நடவடிக்கைக்கு உடனடிக் குறிக்கோளோ அல்லது இலட்சியமோ ஒன்று இருக்கிறது; எல்லோருக்கும் வேலைவாய்ப்பினை உருவாக்குவதும், உணவு, உடை, உறையுள்போன்ற வாழ்க்கைக்குரிய குறைந்தபட்ச தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருளாதாரப் பண்டங்களை உற்பத்தி செய்வதும், அதற்கு மேலும் ஏனைய மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் கூடுதலான பொருளாதாரப் பண்டங்களை உற்பத்தி செய்வதுமே உடனடிக் குறிக்கோளாகும். 'பொருளாதார நடவடிக்கையின் இறுதி இலட்சியத்தையும் உடனடி இலட்சியத்தையும் சேர்த்துப் பார்க்கும்பொழுது, பயன்பாடுள்ள, பரிவர்த்தனைக்குரிய பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதும், அளவில் பற்றாக்குறை என்பதைப் பொறுத்தவரையில் இறங்கு வரிசையில் உள்ள அத்தியாவசியப் பண்டங்கள், வசதிப் பொருள்கள், போகப்பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதும் பொருளாதார நடவடிக்கையின் குறிக்கோள் என விவரிக்கலாம்; மேலும், கட்டாய வேலையின்மை இல்லை என்ற நிலைமையையும், மனித ஆளுமையை வளர்க்கும் முறையில் பிரச்சினைக்குரிய பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுதலையும் அந் நடவடிக்கையின் குறிக்கோளாக நாம் விவரிக்கலாம்.' எனவே, பொருளாதார நடவடிக்கையின் ஆய்வுமுறையாகச் சிக்கனக் கோட்பாட்டினைப் பிரயோகிக்கும் பொழுது, வேலை நிறைவு, தொழிலாளியின் படைப்பாற்றல்,

சுயமரியாதை, கௌரவம், நல்வாழ்க்கை வாழவேண்டும் எனும் ஆவலைத் தொழிலாளியிடம் தூண்டி அவனிடம் அம் மனப் பான்மையை உண்டாக்குதல் முதலானவற்றைக் கவனத்துடன் கட்டிக்காக்கவேண்டும் என்று நாம் விளக்கியுள்ளோம்.

அதேவேளையில், எவ்வளவுதான் எச்சரிக்கையுடன் பயன் படுத்தியும் குறைந்தபட்ச பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாத அளவுக்கு மிகவும் குறைவாக உள்ள பொது மூலவளங்களைக்கொண்ட நாட்டில் அல்லது ஒரு மக்கள் கூட்டத்தில் மேலே குறிப்பிட்ட சூழ்நிலையை உருவாக்குவது கடினம் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்; ஆனால், உலகத்தை ஒரே பொருளாதார அமைப்பாக ஏற்றுக்கொண்டு பார்த்தால், மேற்குறிப்பிட்டவாறு நாம் ஒப்புக்கொண்டமை யானது நடைமுறையில் சரியாக இருப்பதைவிடக் கோட் பாட்டு ரீதியாகச் சரியாக இருக்கலாம். இன்று, மனித இனத் தின் குறைந்தபட்ச தேவைகளைப் பூர்த்திசெய்ய உலகின் மூல வளங்கள் அனைத்தும் போதுமான அளவுக்குமேல் உள்ளன. உண்மையில், அறிவு வளரவளர, இயற்கைமீது மனிதனின் ஆட்சி பெருகப்பெருக, நாள்தோறும் பொருளாதார மூல வளங்கள் அதிகரிக்க அதிகரிக்க, சிக்கனக் கோட்பாட்டினைத் தடையின்றிப் பிரயோகிப்பதில் நாம் மேற்கொண்டுள்ள விதிகள், நாட்டுப் பொருளாதாரக் கொள்கைகளையும் அகில உலகப் பொருளாதாரக் கொள்கைகளையும் உருவாக்குவதில் முக்கிய இடம் வகிக்கின்றன. இப் போக்கினை ஆதரிக்க வேண்டியது பொருளாதார நிபுணனின் கடமையாகும்; தான் ஒதுக்கித் தனித்து வைத்துள்ள பொருளாதார விஞ்ஞானத் தின் விதிகளைக்கொண்டு இப் போக்கினை அவன் தடை செய்யக் கூடாது. சிக்கனக் கோட்பாட்டினைச் சிக்கனத்திற்காகவே ஆதரிக்காது, மனிதனை வாழும்படி செய்வதற்காகவும் அவனுடைய ஆளுமையை வளர்ப்பதற்காகவும் ஆதரித்துப் போற்றவேண்டும். பொருளாதார நடவடிக்கையின் குறிக் கோளாக இதனை உணரும்பொழுதும், பொருளாதார நடவடிக் கையின் இயல்பையும் நடைமுறையையும் இக் குறிக்கோள் இயக்கும்பொழுதும், பொருளாதாரம் ஓர் உண்மையான சமூக விஞ்ஞானமாக மாறித் தத்துவ சாஸ்திரத்தில் இடம்பெறும் மனித சிந்தனையில் பெருமையான இடத்தைப் பெறும்.

நாம் எழுப்பிய மூன்று கேள்விகளில் கடைசிக் கேள்விக்குப் பதில் தருவோம். அதாவது, பொருளாதார நடவடிக்கையின் இயல்பும் கைக்கோளும்பற்றிய நமது ஆராய்ச்சியைப்

பொறுத்தவரையில், பொருளாதாரக் கைக்கோளின் எந்த ஆய்வுமுறையை உருவாக்குவது என்ற கேள்விக்கு விடை காண்போம்.

உணவு, உடை, உறையுள் போன்ற வாழ்க்கைக்குத் தேவையான குறைந்தபட்ச அத்தியாவசியப் பொருள்களை மக்களுக்கு வழங்கும் வகையில் பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தையும் இயக்கவேண்டும் என்ற விதியே பொருளாதாரக் கைக்கோளின் முதல் ஆய்வு முறையாகும். இது வெளிப்படையான உண்மையாகும். இந்த விதியினைச் செயல்முறையில் நிறைவேற்றத் தேவையானவை பின் வருமாறு: (1) வாழ்க்கைக்குக் குறைந்தபட்ச, அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டி, பண்டங்களையும் பணிகளையும் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டும். (2) இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களையும் பணிகளையும் ஒவ்வொரு குடும்பத்தின் குறைந்தபட்ச தேவைகளை அனுசரித்துப் பகிர்ந்தளிக்கவேண்டும். இதன் பொருள் என்னவெனில், திறமையான ஒவ்வோர் இளைஞனுக்கும் வேலை செய்யும் உரிமையும் வேலைக்குரிய நியாயமான கூலியும் வழங்கவேண்டும். மேலும், முதுமையின் காரணத்தாலும், உடல் பலக்குறைவு அல்லது உடல் நலமின்மை காரணத்தாலும் வேலை செய்ய இயலாது இருப்பவர்களுக்கும் போதுமான வருமானத்தை வழங்க வேண்டும்.

இன்றைய உலகில் அனுபவமிக்க தலைவர்கள் இந்த ஆய்வு முறையினை ஏற்றுக்கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதே. எடுத்துக்காட்டாக, உலகப் போருக்குப் பிந்திய உலகில் வாழும் மக்களுக்கு அட்லாண்டிக் சாசனத்தின் (Atlantic Charter) மூலம் வழங்கப்பெற்ற நான்கு உரிமைகளில் (four freedoms) தேவையிலிருந்து விடுதலை (freedom from want) என்பதும் ஒன்றாகும். தன்னுடைய மக்களுக்கு இந்த உரிமையை வழங்கக் குறைந்தபட்சம் ஒரு துணிச்சலான அரசாங்கமாவது முன்வந்து முயற்சி எடுக்கும் என்பதனை நடைமுறையில் பெவரிட்ஜ் (Beveridge) திட்டம் நிரூபித்துக் காட்டியுள்ளது.

நமது பகுத்தாய்வில், பொருளாதாரக் கைக்கோளின் இரண்டாவது ஆய்வுமுறையாக விளங்குவது, வேலைநிறைவை அடைதலே ஆகும். வேலை செய்ய விரும்புவோனுக்கு வேலை

கிடைக்காமல் இருக்கக்கூடாது ; அவ்வாறே, வேலைசெய்வதில் நெளிவு, சுழிவு பார்த்துப் பொறுப்பினைத் தட்டிக் கழிக்க முயல்வோருக்கு அவ் வாய்ப்பினை வழங்காது வேலை வாங்க வேண்டும். பொதுவாக, ஆட்சியில் இருப்பவர்கள் பிந்திய விதியினை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை எனினும், முந்திய விதியினை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். மேலும், வேலையின்மையிலிருந்து விடுதலை (freedom from unemployment) என்பதை உரிமைகளில் ஒன்றாக அட்லான்டிக் சாசனம் ஏற்றுக்கொண்டுள்ளது.

பொருளாதார நடவடிக்கையின் மூன்றாவது ஆய்வுமுறையின்மூலம் இன்பூட்டும் படைப்பு நடவடிக்கையைக் கூடுமான வரையில் மேற்கொண்டு மனித ஆளுமை வளர்ச்சியில் முழுமை காணவேண்டும். இதனை நடைமுறையில் நிறைவேற்றக் கீழ்க்கண்டவாறு செயலில் ஈடுபடவேண்டும் :

(1) இயந்திரமுறை பயன்படும் தொழிற்சாலை வேலைகளில் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு வேலை நேரத்தைக் குறைக்கவேண்டும். (2) நல்ல சீதோஷ்ண நிலையும் அழகுணர்ச்சியைத் தூண்டும் வாய்ப்பும் உடைய வட்டாரங்களிலேயே தொழிற்சாலை அமைத்து வேலை செய்ய வேண்டும். நகர்ப்புறத்துப் பேட்டைகளில் (suburbs) தங்கி வாழத் தொழிலாளர்களுக்கு வசதி செய்து தரவேண்டும். (3) முதலாளி–தொழிலாளி தொடர்பில், தொழிலாளிமீது முதலாளியின் ஆதிக்கம் இல்லாதவாறு வேலை நிலைமைகள் அமையவேண்டும். (4) பொருளாதார நடவடிக்கையில் கைத் தொழிற் கூறும் கலைக்கூறும் வகிக்கும் பங்கு அதிகரிக்கும் முறையில் அரசாங்கக் கொடையோ அல்லது உதவிக் கொடையோ அல்லது வேறு உதவியோ அளிக்கப்பட வேண்டும்.

உற்பத்தி அமைப்பு முறையில் போட்டிக் கோட்பாட்டினை அகற்றிக் கூட்டுறவுக்கோட்பாட்டினைப் புகுத்துவதே பொருளாதாரக் கைக்கோளின் நான்காவது ஆய்வுமுறையாகும். மேலும், வருமானத்திலுள்ள ஏற்றத்தாழ்வை அகற்றி அல்லது போதுமான அளவுக்குக் குறைத்து, வெவ்வேறு தனித்த விருப்பங்களின் ஒப்பீடு சார்ந்த தீவிரங்களின் (comparative intensities of different individual wants) உண்மையான பிரதிபலிப்பாக விலை இறுதிநிலைகளை (price margins) அமைக்கவேண்டும். தனித்த உற்பத்தி அமைப்புகளின் விளம்பரக் கொள்கைகளை அரசாங்கம் இன்னும் தீவிரமாகக் கட்டுப்படுத்தவேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள மற்ற ஆய்வுமுறைகளுக்கு ஏற்ப, பொருளாதாரக் கைக்கோளின் ஐந்தாவது ஆய்வு முறையை வகுக்கவேண்டும்; அது எதுவெனில், விரயத்தைத் தவிர்த்து மனிதத் தேவைகளைப் பூர்த்திசெய்யப் பொருளாதார மூலவளங்களை உயர்ந்தபட்சம் பயன்படுத்தவேண்டுமென்பதே. இதனை நடைமுறையில் சாதிக்க பின்வரும் காரியங்களைச் செய்ய வேண்டும்:

(1) உற்பத்தியில் காட்டப்படும் திறமைக்குப் பணமாகவோ அல்லது வேறுவகையிலோ சன்மானம் அளிக்க வேண்டும். விரயம் ஏதேனும் ஏற்பட்டால் அதற்குத் தண்டனை அளிக்கவேண்டும். (2) அத்தியாவசியமான பண்டங்களின் உற்பத்தியைத் தவிர, வேறு உற்பத்திகளில் தனிப்பட்ட நபர்களின் மதிப்பீட்டின்படி எந்த விலை கொடுக்க விரும்புகிறார்களோ, அந்த விலைக்கு ஏற்ப உற்பத்தியை நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். (3) சமூகத்திற்குக் கிடைக்கும் பொருளாதார மூலவளங்களின் நிகர மொத்தத்தை அதிகரிக்கச்செய்யும் வகையில், ஆராய்ச்சி முறையையும் கண்டுபிடிப்புகளையும் ஆதரிக்கவேண்டும்; ஆனால், அதனைத் தொடர்ந்து எப்பொழுதும் வேலையின்மை என்ற நிலை உருவாகக்கூடாது.

மேலே விளக்கியுள்ள பொருளாதாரக் கைக்கோளின் ஐந்து ஆய்வுமுறைகளையும் நடைமுறைக்குக் கொண்டுவரும்பொழுது, சோவியத் யூனியனையும் ஏனைய கம்யூனிச நாடுகளையும் தவிர, நாகரிக உலகின் வேறு எந்தப் பகுதியிலும் இதுவரையில் நடைமுறையில் உள்ள கட்டுப்பாட்டினைவிடக் கூடுதலான சமூகக் கட்டுப்பாட்டினையும் பொருளாதார நடவடிக்கையில் கட்டுப்பாட்டினையும் மேற்கொள்ளவேண்டும். சமூகத்தில் இன்று நிலவும் சட்ட ரீதியான, அரசியல் ரீதியான, சமூக ரீதியான, நிருவாக ரீதியான அமைப்புமுறையைக்கொண்ட ஜனநாயக நாடுகளில் பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த எந்த அளவுக்கு மேற்குறிப்பிட்ட ஐந்து ஆய்வுமுறைகளையும் பிரயோகிப்பது என்பதுபற்றியும், நிருவாக, அமைப்புமுறையில் எத்தகைய மாற்றங்கள் தேவைப்படும் என்பது பற்றியும் விளக்க இச் சிறு கட்டுரையின் விரிவில் இடமில்லை. இங்கு சொல்லக்கூடிய மிகவும் சிறிய, ஆனால், முக்கியமான உண்மை எதுவெனில், இந்த ஆய்வுமுறைகளைக்கொண்டு ஆராயும் பொழுது நமது பொருளாதார வாழ்க்கையில் சிறப்பு ஒன்றும் இல்லை என்று தெரியவருவதுதான். இந்த நிலை ஏன் என்று ஆராய்வதும், இத்தகைய ஆய்வுமுறைகளை நிறைவேற்ற

இன்றைய பொருளாதார நடவடிக்கையை எவ்வாறு இயக்கு வது என்பதுபற்றி ஆராய்வதும் சிந்தனையாளருக்கு ஏற்றதே. பொருளாதார நடவடிக்கையில் சமூக இலட்சியங்கள் கிடையா என்று கருதும் ராபின்ஸ் பரம்பரைக்கு இது உகந்த தன்று. இருந்தபோதிலும், முதலாளித்துவ, பூர்ஷுவா பொருளாதாரத்தின் கைப்பாவையாகப் பொருளாதார விஞ்ஞா னம் இயங்குவதை இது தடுக்கும்; மனித நடவடிக்கையின் முக்கியமான பகுதியைக் கட்டுப்படுத்தும் ஒரு நல்ல ஆக்க பூர்வமான வேலையினை இது செய்யும்.

2. வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில் முதலீடு, வருமானம், பெருக்கி

இத் தலைப்பின்கீழ் கீன்ஸ் கோட்பாட்டின் திரண்ட கருத்தினைச் சுருக்கமாக விளக்குவது பொருத்தமுடையதே யாகும். ஆனால், வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களைப் பற்றி கீன்ஸ் கோட்பாடு தனியாக ஏதேனும் விளக்கம் தர முயலவில்லை. மொத்தத் தேவை விலையும், மொத்த அளிப்பு விலையும் சமமாகி இருக்கும் நிலையே வேலை, வருமானம் ஆகியவற்றின் பருமத்தை நிர்ணயிக்கும். Yω அதிகரிக்கும் பொழுது Cω அதிகரிக்கிறது என்றபோதிலும், அதே அளவுக்கு அதிகரிப்பதில்லை என்பதே நுகர்ச்சி நாட்டமாகும் (propensity to consume). இதனால் ஏற்படும் இடைவெளியை Iω எனும் முதலீடு (investment) அடைக்கவேண்டும். வருமானம் அதிகரிக்க அதிகரிக்க, இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் குறைந்து செல்லும் என்பதே நுகர்ச்சி நாட்டத்தின் இயல்பாகும்.

எனவே, போதுமான அளவுக்கு முதலீடு அதிகரிக்கவில்லை யெனில், மொத்த அளிப்பு விலையைவிட மொத்தத் தேவை விலை குறைவாக அமைந்துவிடும். அதன் காரணமாக, அவை இரண்டிற்குமிடையில் சமன்நிலை வரும்வரையில் வருமானமும் வேலையும் குறைந்து செல்லும். சேமிப்பும் முதலீடும் எப்பொழுதும் சமமாகவே இருப்பன; ஆனால், வருமானம், வேலை ஆகியவற்றின் பருமத்தில் பொருத்தமான மாறுதல்களை ஏற்படுத்தியே அவற்றினிடையில் சமன்நிலை கொண்டுவரப்படுகிறது. சேமிப்பு ஓர் எச்சமே; முதலீடே மிகவும் முக்கியமான காரணியாகும். முதலீட்டுப் பெருக்கத் தால் வருமானப் பெருக்கமும், வருமானப் பெருக்கத்தால் சேமிப்புப் பெருக்கமும் ஏற்படுகிறது. இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம், முதலீட்டின் அதிகரிப்பு வீதத்திற்கும் (increment), வருமானத்தின் தகுந்த அதிகரிப்பு வீதத்திற்கும் இடை

யிலுள்ள தொடர்பினை நிர்ணயித்து, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் இடையில் சமன்நிலையை ஏற்படுத்தத் தேவையான சேமிப்பு அதிகரிப்பு வீதத்தைத் தூண்டும். முதலீட்டு அதிகரிப்பு வீதத்திற்கும், வருமான அதிகரிப்பு வீதத்திற்கும் இடையிலுள்ள தொடர்பினை k எனும் பெருக்கி (multiplier) நிர்ணயிக்கிறது. அதன் சூத்திரம் $\triangle \gamma\omega = k \triangle I\omega$ என்பதாகும். இச் சூத்திரத்தில் $I-\frac{I}{k}$ என்பது இறுதிநிலை நுகர்ச்சி நாட்டத்திற்குச் சமமாகும். வருமானம் பெருகப் பெருக இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் குறைந்துவிடுவதால், வருமானம் பெருகும் நிலைகளில், வருமானத்தின் குறிப்பிட்ட அதிகரிப்பு வீதங்களை அடைவதற்கு முதலீட்டின் மிகப் பெரும் அதிகரிப்பு வீதங்கள் தேவைப்படும்.

ஏழ்மை நிறைந்த சமூகங்களில் இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் ஒன்றுக்கு மிகவும் குறைவாக இருக்கப்போவதில்லை என்பதால், அச் சமூகங்களில் 'பெருக்கி' மிகவும் உயர்ந்த ஆற்றல் உடையது எனலாம்; எனவே, முதலீட்டின் சிறிய அதிகரிப்பு வீதங்களே வேலை நிறைவினை (full employment) உண்டாக்கக்கூடும். அதே வேளையில், அச் சமூகங்களின் சராசரி நுகர்ச்சி நாட்டமும் உயர்ந்து இருப்பதால், அவற்றின் வருமானப் பருமமாகிய மொத்த உற்பத்தி மதிப்பின் மிகச் சிறிய பகுதியையே முதலீடு விளைக்கும். எனவே, செழிப்பு மிகுந்த சமூகங்களைவிட ஏழ்மை நிறைந்த சமூகங்களில் முதலீட்டின் ஏற்ற இறக்கங்களால் மொத்த வேலையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் மிகவும் குறைவாக இருக்கும். ஏழ்மை நிறைந்த சமூகங்களைவிடச் செழிப்பு மிகுந்த சமூகங்களில் சராசரி நுகர்ச்சி நாட்டம் குறைவாக இருப்பதால், மொத்த உற்பத்தியின் பெரும் பகுதியை முதலீடு விளைக்கும். ஒரு சமூகம் ஏழ்மை நிலையை அடைய அடைய, வேலைநிறைவினை அச் சமூகம் பெறுவது மிகவும் எளிது; அச் சமூகத்தில் நிகர முதலீட்டின் மாற்றங்களால் விளையும் வேலையின் ஏற்றஇறக்கங்களும் மிகவும் குறைந்த அளவிலேயே இருக்கும். ஆனால், செழிப்பு மிகுந்த சமூகத்தில் வேலை நிறைவினை அடைதல் மிகவும் கடினமே ; அச் சமூகத்தில் நிகர முதலீட்டின் மாற்றங்களால் விளையும் மொத்த வேலையின் ஏற்ற இறக்கங்களும் மிகவும் அதிக அளவிலேயே இருக்கும். இந்த நிலை புரியாத ஒரு புதிர் ஆகும். செழிப்பு மிகுந்த சமூகத்தில் நிகர முதலீட்டின் ஏற்ற இறக்கங்கள் அதிகமாகவே இருக்கும் என்ற உண்மையையும் இத்துடன் இணைத்துப் பார்ப்போம்.

வேலையின் நிலையில்லாமை என்பது வளரும் நாட்டு வருமானத்தின் ஓர் அம்சமே என்பது முடிவாகும். இத்துடன் தலையிடாமைக் கோட்பாட்டினையும் (laissez-faire) சமன் செய்யும் பட்ஜெட் முறையையும் அறவே கைவிட்டு, முதலீட்டுப் பெருக்கத்தின்மூலம் கட்டாய வேலையின்மையை (involuntary unemployment) ஒழிக்காத வரையில், அது வளர்ந்துசெல்லும் போக்கே நிலவும்.

வளம் மிகுந்த சமூகங்களில் நிலவும் கட்டாய வேலையின்மைப் பிரச்சினை குறித்தே கீன்ஸ் (Keynes) மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டார். இத்தகைய நாடுகளில் வேலை நிறைவினை எவ்வாறு அடைவது என்பதுபற்றியே அவர் முழு ஆராய்ச்சி செய்தார். வேலை நிறைவினை முக்கிய இலட்சியமாகக்கொண்ட நாட்டுப் பொருளாதாரத் திட்டங்களில் மலிவுப் பணக் கோட்பாடு (cheap money policy) பற்றுக்குறை நிதியாக்க முறை (deficit financing), வரி விதிப்பில் மறுபகிர்வு (redistributive taxation), பொது முதலீடு முதலானவற்றையே அவர் பரிகாரங்களாகக் குறிப்பிடுகிறார். துரதிர்ஷ்டவசமாக, வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதாரப் பிரச்சினை குறித்தும் கீன்ஸ் சிந்திக்கவில்லை; வளர்ச்சி மிகுந்த, தொழில்மயமான நாடுகளில் பின்பற்ற அவர் குறிப்பிடும் இலட்சியமோ அல்லது கைக்கோளோ வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு எந்த அளவுக்குப் பொருந்தும் என்பது குறித்தும் கீன்ஸ் எண்ணிப் பார்க்கவில்லை. இதன் விளைவு, வளர்ச்சி குறைந்த நாடுகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண கீன்ஸ் பொருளாதாரத்தைப் புத்திசாலித்தனமின்றிப் பிரயோகித்தமையே ஆகும்; இதற்குப் பொறுப்பு கீன்ஸ் அல்ல. ஆக, வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதாரத்தைப்பற்றி எழுதும் அநேக அறிஞர்கள், அவற்றின் பொருளாதார வளர்ச்சிக்கு மக்கள் வாங்கும் சக்தியில் பெருக்கம் ஏற்படவேண்டும் எனக் கருதுகிறார்கள். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கென அதிகாரபூர்வமாகவும், அதிகாரபூர்வமற்றும் விளக்கப்படுகின்ற திட்டங்கள் அனைத்திலும் நடைமுறையில் பற்றுக்குறை நிதியாக்க முறையும் சிருட்டிக்கப்பெற்ற பணமுறையும் (created money) இடம் பெறுகின்றன. தொழில்மயமான பொருளாதாரங்களைப் போலவே வளர்ச்சி குறைந்த நாடுகளிலும் மலிவுப் பணமுறை நிதித்துறையின் கொள்கைக் கூறுகிவிட்டது. எனவே, வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களில் முதலீடு, வருமானம், பெருக்கி ஆகியவற்றின் பிரச்சினைகுறித்து அலசிப் பார்த்து, வளர்ச்சிகுறித்த பிரச்சினையில் எந்த அளவுக்குப் பொருளாதார

கைக்கோள்பற்றிய கீன்ஸ் கருத்துகள் பிரயோகப் பொருத்த முடையன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். எனது தாயகமாகிய இந்தியாவுக்கு இப் பிரச்சினை எப்படிப் பொருந்தி வருகிறது என்பதுபற்றி நான் ஆராய முற்படுகிறேன்.

வேலை நிறைவுப் பிரச்சினையை முதலில் எடுத்துக் கொள்வோம். பொருளாதாரத் திட்டத்தின் விரும்பத்தக்க பெரும் இலட்சியம் வேலை நிறைவே என்ற கருத்தினை எவரும் ஏற்றுக் கொள்வர். கீன்ஸ் கூற்றுப்படி, இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் உயர்ந்தும், அதன் காரணமாகப் பெருக்கியும் உயர்ந்து இருக்கும் ஓர் ஏழை நாட்டில், முதலீட்டின் மிகக் குறைந்த அதிகரிப்பு வீதங்களைக்கொண்டே வேலை நிறைவினை அடையமுடியும். கூலி அலகுகளைக் கொண்டோ, அல்லது உற்பத்தியைக் கொண்டோ அளக்கப்பெறும் உண்மை வருமானத்தின் பெருக்கமும் வேலைப் பெருக்கமும் ஒன்றே எனும் கீன்ஸ் கருத்தினை இங்குக் குறிப்பிட வேண்டும். எனவே, நிலவும் வல்லமையையும் (existing capacity) நுட்பத்தொழில் அறிவையும் (technical knowledge) முழுதும் பயன்படுத்திக் கட்டாய வேலையின்மையை அறவே அகற்றி, உற்பத்தியில் உயர்ந்தபட்சப் பெருக்கத்தைக்காட்டுவதே வேலை நிறைவாகும். இக் கட்டத்தை அடைந்தபிறகு, பண விலைகள் (money prices) அளவில்லாமல் பெருகும் போக்கோ அல்லது வளர்ந்து செல்லும் மொத்த உண்மை வருமானத்துடன் தொடர்பற்ற விலைவாசிகளின் உயர்வைக் குறிக்கும் உண்மைப் பணவீக்க எழுச்சியோ உருவாகும். இக் கட்டத்திற்கு அப்பாற்பட்ட வளர்ச்சி குறித்து கீன்ஸ் விவாதிக்கவில்லை; இதில் அடங்கியுள்ள எடுகோள் என்னவெனில், வேலை நிறைவில் ஓர் சிறப்பான, தனித்த மட்டம் ஒன்று உள்ளது என்பதும் அம் மட்டத்தை அடைந்தவுடன் விரும்பத்தக்க இலட்சியத்தினை சாதித்துவிட்டோம் என்பதும் ஆகும். பின்வந்த அறிஞர்கள் பெருக்கிக் கோட்பாட்டினையும், வேகவளர்ச்சிக் கோட்பாட்டினையும் (acceleration principle) ஒன்றாக இணைத்து விவாதித்த போதிலுங்கூட, மொத்தவேலையில் ஏற்படும் பெருக்கத்தைவிட முதலீட்டுத் தொழில்களில் கூடுதலான வீதாசாரத்தில் ஏற்படும் வேலைப் பெருக்கத்தைக் குறிப்பிடும் வேலை இயல்பின் மாற்றத்தையே அவர்கள் எடுத்துக்காட்டுகிறார்கள். இந்தியா போன்ற வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில் இத்தகைய கோட்பாடுகள் எவ்வாறு பொருந்தியுள்ளன என்பதுபற்றி இப்பொழுது ஆராய்வோம்.

நமது நாடு முக்கியமாக விவசாய நாடாகும். நமது நாட்டில் மூலதன உபகரணமும் (capital equipment) குறைவே. மேற்கத்திய நாடுகளைவிட நமது நாட்டில் உற்பத்தியில் ஈடுபடுத்தும் தொழில் நுட்ப அறிவுத்தரம் மிகவும் குறைவாகவே உள்ளது. மேலும், கூலி பெறும் அடிப்படையில் வேலை வேண்டுவோரின் அல்லது தொழிலாளிகளின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அந்த எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. பெரும்பாலான வருமானக்காரர்கள் சுய முயற்சித் தொழிலாளர்களாகவோ (self employees) அல்லது, இல்லத் தொழில்களில் (household enterprises) ஈடுபட்டிருப்பவர்களாகவோ உள்ளனர். இத்துடன், அங்காடிக்கென்று இல்லாமல் தன் துய்ப்பிற்காகவே (self consumption) நாட்டு உற்பத்தியின் பெரும்பகுதி உற்பத்தியாகிறது என்ற உண்மையும் எண்ணிப் பார்க்கத்தக்கது. இத்தகைய சூழ்நிலைகளில், முக்கியமாகத் தொழில்மயப் பொருளாதாரங்களுக்கென எளிய முறையில் கீன்ஸ் விளக்கும் பெருக்கிக் கோட்பாடு விவசாய நாட்டில் பலனளிக்காது. முதலீட்டின் பெருக்கத்திலிருந்து வருமானப் பெருக்கமும் வேலைப்பெருக்கமும் ஏற்படுகிறது. நுகர்ச்சிப் பண்டத் தொழில்களில் வருமானம், வேலை, உற்பத்தி ஆகியவற்றில் ஏற்படும் இரண்டாம்படி சார்ந்த பெருக்கமே அடுத்த பெருக்கமாகும். இரண்டாம் பெருக்கத்தைத் தொடர்ந்து மூன்றும்படி சார்ந்த பெருக்கமும், அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்துப் பெருக்கங்களும் ஏற்படவேண்டும். முதலீட்டின் துவக்கப் பெருக்கத்தின் 'K' மடங்கு வருமானம், வேலை, உற்பத்தி ஆகியவை பெருகும் வரையில் அடுத்தடுத்து பெருக்கங்கள் நிகழ்வன கூடுதலான முதலீட்டிற்குச் சமமாகச் சேமிப்பும் அதிகரிக்கிறது.

முதலீட்டுப் பெருக்கியும் வேலைப் பெருக்கியும் ஒன்றல்ல என்பதும், உற்பத்தி அதிகரிப்பு பணவருமான அதிகரிப்புடனோ அல்லது, வேலை அதிகரிப்புடனோ ஒரே வீதாசாரத்தில் இருக்க முடியாது என்பதும் நான் அறிவேன். ஆனால், இக் கட்டத்தில் அவ் வேற்றுமைகளை விவாதத்திற்காக ஒதுக்கிவைப்பது சாலச் சிறந்ததாகும். இறுதி நிலை நுகர்ச்சி நாட்டம் உயர்ந்து இருந்த போதிலும், அதன் காரணமாகப் பெருக்கி தீவிரமாக விரைந்து இயங்கவேண்டியிருந்தபோதிலும், தற்பொழுது இந்தியா போன்ற நாட்டில் பெருக்கிக் கோட்பாடு விளக்கும் வருமானம், உற்பத்தி, வேலை ஆகியவற்றில் இரண்டாம்படி, மூன்றும்படி பெருக்கங்களும் ஏனைய தொடர்ந்த பெருக்கங்களும் ஏற்படுவதில்லை. இதற்குக் காரணம் என்னவெனில், அதிகரித்த தேவை

ஏற்படும் நுகர்ச்சிப்பண்டத் தொழில்கள் உற்பத்தியைப் பெருக்கி, உறுதியாகக் கூடுதலான வேலையினைத் தரும் நிலையில் இல்லை. அதிகரித்த தேவை ஏற்படும் மிகமுக்கிய நுகர்ச்சிப் பண்டத் தொழிலாம் உணவுத் தொழிலின் இயல்பே இதற்கு முக்கிய காரணமாகும். மிகவும் வளர்ச்சி குறைந்த நாடுகளில் இது எதனைக் குறிக்கும் எனில், விவசாயத் தொழிலை எனலாம். குறுங்காலத்தில் மிகவும் நெகிழ்ச்சி குறைந்த அளிப்புக்கோடு உள்ள தொழில் உலகிலேயே விவசாயம்தான். மேலும், பயிரிடும் நிலத்தில் 20 சதவீதத்திற்கும் குறைவாக உள்ள நிலப் பகுதியில் மட்டும் நீர்ப்பாசன வசதி உள்ள இந்தியா போன்ற நாட்டில் விவசாய உற்பத்தியில் உள்ள ஏற்ற இறக்கங்கள், இயற்கையின் தன்னிச்சைப் போக்கான தடுமாற்றத்தில் விளை வன. விலை அதிகரிப்புகளினால் ஏற்படும் தூண்டுதலால், தனிப் பட்ட பயிர்களைவிட மொத்த உற்பத்தி குறைந்த பலனையே அடைகிறது. மேலும், விவசாயத் தொழிலின் அளிப்புக்கோடு (supply curve) நெகிழ்ச்சியற்றதாக (inelastic) மட்டும் இருப்ப தோடு அமையாது, பின்புறமாக உயர்ந்து எழுவதாகவும் உள்ளது; எனவே, உற்பத்தி மதிப்பில் ஏற்படும் அதிகரிப்பினால் உற்பத்தி பருமத்திலும் இன்னும் அதிகரிப்பு ஏற்படவேண்டும் என்பது அவசியமில்லை. இந்த நம்பிக்கை பரவலாக இருக் கிறது; இதில் நியாயமும் இருக்கிறது. குறிப்பிட்ட ஓர் முதலீட் டின் அதிகரிப்பு வீதத்தில் விளைந்த மூலாதார வருமானப் பெருக்கம் விவசாய உற்பத்தியிலேயே பெரும்பாலும் செல வழிந்துவிடும். அதன் விளைவாக விவசாய உற்பத்தியாளர் களின் வருமானத்தில் தக்க அதிகரிப்பு ஏற்படும். ஆனால், விவசாய உற்பத்தியாளர்கள் இதனைத் தொடர்ந்து தங்களுடைய சொந்த உற்பத்தியைப் பெருக்கி, வேலையையும் உண்மை வருமானத்தையும் பெருக்கமாட்டார்கள்.

மேலே குறிப்பிட்ட காரணங்களைத் தவிர வேறு காரணங் களும் உண்டு. இலாபப் பெருக்கத்தின் விளைவால் தொழில் முயல்வோர் (enterpreneurs) எவ்வாறு நடந்துகொள்வர் என்ப தைப்பற்றித் தொன்மைப் பொருளாதாரத் துறையினரோ (classical economists) அல்லது, கீன்சோ விளக்கியதுபோல, விவசாய உற்பத்தியாளரும் நடந்துகொள்ள விழைய மாட்டார்கள். விலைக்கட்டுப்பாடும் அரசாங்கக் கொள்முதலும் விவசாய உற்பத்தியாளரிடத்து உளவியல்சார் சலிப்பினை உண்டாக்குகின்றன. மேலும், உயர்விலைகளின் காலநீட்சிபற்றி யும் அவற்றின் எதிர்காலம்பற்றியும் ஓர் தெளிவின்மை நிலவு வதால் விலைத்தூண்டுதலில் ஏற்படவேண்டிய ஊக்கம் தளர்ந்து

குன்றிவிடுகிறது. இன்னும், விவசாய உற்பத்தியாளர்கள் உற்பத்தியைப் பெருக்க விரும்பும் அளவிற்குத் தங்களுடைய விளைவுகளை ஈடேற்றும் வகையில், நுட்ப வினைமுறை (technique) சார்ந்த வசதிகளையோ அல்லது, அளிப்பு வசதிகளையோ பெறுவதில்லை. இவற்றையெல்லாம் குறைபாடுகள் என்றோ நெருக்கடிகள் என்றோ, பற்றாக்குறைகள் என்றோ, உற்பத்திக் காரணிகளுக்குரிய அளிப்புக் கோடுகளின் நெகிழ்ச்சியின்மை என்றோ ஒருவர் குறிப்பிடலாம். இதனால், ஏற்படும் நிகர விளைவு ஒன்றேதான்; பணத்தைச் செலவழிக்க விருப்பம் இருந்தபோதிலும் உற்பத்தியைக் கணிசமான அளவிற்குக் குறுங்காலத்தில் பெருக்கமுடியாது என்பதே. இதன் பொருள் என்னவெனில், வருமானம் அதிகரிக்கும்பொழுது உற்பத்தியும் அதே அளவில் விவசாயத் துறையில் அதிகரிக்காது என்பதே. வேறு முறையில் சொல்ல வேண்டுமெனில், வருமானப் பெருக்கு உண்மை அளவைவிடப் பண அளவில் கூடுதலாக இருக்கிறது; அந்த அளவிற்கு, மொத்த உண்மை வருமான அதிகரிப்பைவிட மிகவும் வேகமாக விலைகள் ஏறுகின்றன.

துவக்க முதலீட்டில் விளைந்த பணவருமானப் பெருக்கத்திற்கிணங்க விவசாயிகள் துய்ப்போர் என்ற முறையில் எவ்வாறு நடந்துகொள்வர் என்பதுபற்றி நாம் சிந்திக்கும்பொழுது மேலே குறிப்பிட்ட அதே முடிவிற்கே வருவோம். இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம் மிகுதியாக இருப்பதால் வருமானப் பெருக்கத்தின் பெரும்பகுதி நுகர்ச்சிப் பண்டங்களை வாங்குவதில் செலவழிந்துவிடும். விவசாயிகளே உணவு உற்பத்தியாளர்களாக இருப்பதால் அவர்களுடைய உணவு தானியத் துய்ப்பில் ஏற்படும் அதிகரிப்பானது, சந்தைக்குரிய உணவுதானிய உபரியைக் குறைத்துவிடுகிறது. அவர்கள் துய்க்கும் உணவுதானியங்களின் அளவு அதிகரிப்பதனாலோ அல்லது மட்ட தானியங்களுக்குப் பதிலாகத் தரமுள்ள தானியங்களை துய்ப்பதனாலோ விவசாயிகளின் உணவுதானியத் துய்ப்புப் பெருகுகிறது. இதன் பொருள் என்னவெனில் விவசாயத்துறையில் தகுந்த அளவிற்கு உற்பத்தி பெருகாததால், விவசாயம் சாராப் பொருளாதாரத்துறை இன்னும் மிகவும் கூடுதலான விலைகளை உணவுதானியங்களுக்குத் தர நேரிடுகிறது. எனவே, கூடுதலான விவசாய வருமானத்தைப் பெறுவோரின் இறுதி நிலை நுகர்ச்சி நாட்டத்தின் விளைவாக, மொத்த உண்மை வருமான அதிகரிப்பு இல்லாமலேயே விலைவாசிகள் ஏறும் போக்கு நிலவுகிறது. விவசாயத் துய்ப்பாளரின் விவசாயம் சாராப் பண்டத்துய்ப்பின் அதிகரிப்பைப் பொறுத்தவரையில்

நிலைமை வேருக இருக்கலாம் என ஒருவர் எதிர்பார்க்கலாம். இதிலும்கூட இந்தியா போன்ற நாட்டில் நிலைமை முற்றிலும் வேருக இருப்பதாகத் தெரியவில்லை. தொழில்களில் உறுதி யான எச்ச வல்லமை இல்லாமை, கூடுதலான உற்பத்திக்கு வேண்டிய கச்சாப்பொருள்களும் ஏனைய பொருள்களும் வேண்டிய அளவுக்குக் கிடைப்பதில் உள்ள இன்னல்கள், நுட்பத் தொழிலாளர்களின் நெகிழ்ச்சியற்ற அளிப்பு, இன்னும் கட்டுப்பாடுகளின் காரணமாகவும், பற்ருக்குறைப் பொருளாதாரத்தின் பொதுச் சூழ்நிலையின் காரணமாகவும் ஏற்படும் பல்வேறு நெருக்கடிகள் முதலான அநேக காரணங் களாலேயே இந்த நிலைமை நிலவுகிறது. எனவே, எந்த அளவுக்கு விவசாயத் துய்ப்பாளர்கள் தங்களுடைய கூடுத லான வருமானத்தின் ஒரு பகுதியை விவசாயம் சாரா பண்டங் களின்மீது செலவழிக்கிருர்களோ அந்த அளவுக்குப் பண வருமானத்தின் மூன்ரும்படி சார்ந்த அதிகரிப்பு நிகழ்கிறது; ஆனுல், உற்பத்தியிலோ அல்லது, வேலையிலோ அந்த அளவிற்கு அல்லது கணிசமான அளவிற்கு அதிகரிப்பு நிகழ்வதில்லை. பண வருமானத்தை மிகவும் அதிகமாக செலவழித்த போதிலும், விவசாயிகள் விவசாயம் சாராப் பண்டங்களைப் பொறுத்து தங்கள் உண்மை வருமானத்தை எந்த அளவுக்குப் பெருக்க முடியவில்லையோ அந்த அளவுக்குக் கூடுதலான வருமானத்தின் இறுதிநிலைப் பயன்பாடு குறைந்துவிடும். விவசாயத் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளரின் உழைப்பில் விளைந்த உற்பத்தியின் பண மதிப்பில் அதிகரிப்பு ஏற்பட்ட போதிலும், அத் தொழிலில் தொழிலாளர் உழைப்புப் பருமம் எம் மட்டத்தில் இருக்கிறதோ அம் மட்டத்தில் விவசாயியின் வருமானத்தைக் குறிக்கும் கூலியின் பயன்பாடும், விவசாயியின் சொந்த உழைப்பைக் குறிக்கும் வேலையளவின் இறுதிநிலைப் பயன்பாடின்மையும் ஒன்ருகவிருக்கும் என்பதே அதன் விளைவாகும்.

தன்னுடைய 'பொதுக் கோட்பாடு' (General Theory) எனும் நூலின் இரண்டாவது அத்தியாயத்தில் கீன்ஸ் விளக்கும் இரண்டாவது கூற்றின்படி, அதுவே விளைவாகும். ஆக, முதலீட்டில் ஏற்படும் முதன்மையான அதிகரிப்பின் விளை வால் வருமானத்திலும் வேலையிலும் அதிகரிப்பு ஏற்படுகிறது; அதனைத் தொடர்ந்து வருமானத்தில் இரண்டாம் படியிலும் மூன்ரும் படியிலும் அதிகரிப்பு ஏற்படுகிறது. ஆனுல்,

விவசாயத்துறையில் அல்லது விவசாயம் சாராத் துறையில் ஏற்படும் உற்பத்தி அல்லது வேலையில் புலனாகும் அதிகரிப்பு ஏதும் நிகழ்வதில்லை. எனவே, பெருக்கிக் கோட்பாடு பண வருமானத்தைப் பொறுத்து இயங்குகிறதேயன்றி, உண்மை வருமானத்தைப் பொறுத்தோ, உண்மை வேலையைப் பொறுத்தோ இயங்குவதில்லை. எந்த அளவுக்குப் பண வருமான அதிகரிப்புகள் விலைவாசி உயர்வில் அழுந்திவிடாமல், விவசாய உற்பத்தியாளர்கள், தொழில்துறை உற்பத்தியாளர்கள் போன்ற சமூக வகுப்பார் சிலரிடையே கூடுதலான உண்மை வருமானத்தின் ஓர் இறுதிப் பகுதியை விட்டுச்செல்கிறதோ, அந்த அளவுக்கு அவை விவசாய உற்பத்தியாளரின் உணவுத் துய்ப்பின் அதிகரிப்பிலும் தொழில்துறை உற்பத்தியாளரின் இறக்குமதி அல்லது ரொக்க இருப்பு (cash balance) அதிகரிப்பிலும் கரைந்துவிடுகின்றன. இவை இரண்டில் எதனை எடுத்துக்கொண்டாலும், சமூகத்திற்கென உண்மை வருமானத்திலோ அல்லது வேலையிலோ எந்தவிதமான அதிகரிப்பும் ஏற்படுவதில்லை.

நிலைமையைக் கீழ்க்கண்டவாறு சுருக்கமாக விளக்கலாம். கீன்ஸ் அமைப்பில், கட்டாய வேலையின்மை நிலவும் சூழ்நிலையில், குறுங்காலத்தில், உற்பத்தியனைத்தின் அளிப்புக்கோடு, பிறிதொன்றுடன் ஒத்திட்டுப்பார்க்கும்பொழுது நெகிழ்ச்சியுடையதாக இருக்கிறது. எனவே, பண முதலீட்டு அதிகரிப்பு வீதத்தைப் பண வருமான அதிகரிப்பு வீதத்துடன் தொடர்புபடுத்தும் பெருக்கி, கூலி அலகுகளில் மதிப்பிடப்படும் பண முதலீட்டு அதிகரிப்பு வீதத்தைக் கூலி அலகுகளிலேயே மதிப்பிடப்படும் பணவருமான அதிகரிப்பு வீதத்துடன் தொடர்புபடுத்தும் பெருக்கி, முதலீட்டு உற்பத்தி அதிகரிப்பு வீதத்தை மொத்த உற்பத்தி அதிகரிப்பு வீதத்துடன் தொடர்புபடுத்தும் பெருக்கி, முதலீட்டுத் தொழில்களின் வேலை அதிகரிப்பு வீதத்தை மொத்த வேலை அதிகரிப்பு வீதத்துடன் தொடர்புபடுத்தும் பெருக்கி ஆகிய பெருக்கிகளுக்கிடையில், மதிப்பைப் பொறுத்த அளவில், முற்றொருமைத் தொடர்பு (relation of identity) இல்லையெனினும், குறைந்தபட்சம் ஒத்திடத் தக்க முற்றொருமைத் தொடர்பு (comparative identity of relation) உள்ளது. இத்தகைய எடுகோள்களின் அடிப்படையில் முதலீட்டு அதிகரிப்பு வீதம், பெருக்கிக் கோட்பாட்டின்படி

உற்பத்தி, உண்மை வருமானம் வேலை ஆகியவற்றைப் பெருக்க உதவி செய்து அதிகரித்த முதலீட்டின் தன்னூர்ந்த நியாக்கத்திற்கு வேண்டி தானே இயங்கும் நிலையை உருவாக்கும்.[1]

பண முதலீட்டின் அதிகரிப்பு வீதத்தைப் பண வருமானத்தின் அதிகரிப்பு வீதத்துடன் இணைக்கும் பெருக்கியைவிட k, k′ எனும் இரு பெருக்கிகளும் நிச்சயமாகக் குறைவாகவே இருப்பன. ஏனெனில், உற்பத்தியின் அளிப்புக்கோடு முழுதும் நெகிழ்ச்சி உடையதன்று, ஆனால், ஓரளவு நெகிழ்ச்சியற்றதாகும். ஆனால், வேலைநிறைவினை அடைய அடைய இந்த நெகிழ்ச்சியின்மை குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரிக்கிறது. கீன்ஸ் ஆய்வினை நடைமுறையில் செயலாக்க வேண்டுமெனில், மேலே குறிப்பிட்ட பெருக்கிகள் அனைத்தும் நேர்க்கணியமாக விருந்து ஒரே திக்கில் நகரவேண்டும் என்பது குறித்து ஐயமில்லை. இதன் உட்பொருள் என்னவெனில், பெருக்கிக் கோட்பாடு இயங்குவதற்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகள் நிலவ வேண்டும்:

(1) கட்டாய வேலையின்மை.

(2) தொழில்மயமான பொருளாதாரத்தில் உற்பத்தியின் அளிப்புக்கோடு, மேல்நோக்கி வலப்புறம் சரிந்து, குறிப்பிடத்தக்க ஓர் இடைவேளைக்குப் பின்னர் செங்குத்தாய் ஏறுதல்.

(3) துய்ப்புப்பண்டத் தொழில்களில் எச்ச வல்லமை.

[1] ‘கூலி அலகுகளில் மதிப்பிடப்படும் சேமிப்புகளை அதிகரிக்கச் செய்ய பொதுமக்கள் தயாராகாதவரையில், கூலி அலகுகளில் நிர்ணயிக்கப்படும் முதலீட்டு அதிகரிப்பு வீதம் நிகழாது. சாதாரணமாகச் சொல்லவேண்டுமெனில், கூலி அலகுகளில் மதிப்பிடப்படும் தங்களுடைய மொத்த வருமானம் அதிகரிக்காதவரையில், பொதுமக்கள் சேமிப்பைப் பெருக்கமாட்டார்கள். ஆக, தேவையான, அதிகப்படியான சேமிப்பினைச் செய்ய அவர்களைப் போதுமான அளவுக்குத் தூண்டும் சேமிப்பின் இறுதிப் பகுதி ஒன்றினை வருமானங்களின் புது மட்டமும் பகிர்வும் உண்டாக்கும்வரையில், தங்களுடைய அதிகரித்த வருமானங்களின் ஒரு பகுதியை அவர்கள் துய்க்கும் முயற்சி, உற்பத்தியைத் தூண்டும். சேமிப்பு, அவர்களுடைய உளவியல் தூண்டுதல்களைச் சார்ந்ததாகும். சேமிப்பு, மாத்திரை எனில் துய்ப்பு பழப்பாகு ஆகும்; கூடுதலான மாத்திரையின் பருமன் எந்த வீதாசாரத்தில் உள்ளதோ அந்த வீதாசாரத்தில் கூடுதலான பழப்பாகினைச் சேர்க்கவேண்டும். நாம் நினைத்ததற்கு மாறாக மக்களுடைய உளவியல் தூண்டுதல்கள் அமைந்தாலொழிய, முதலீட்டிற்காக அதிகரிக்கப்பெற்ற வேலை, துய்ப்புப் பண்டத் தொழில்களைத் தூண்டி மொத்த வேலை அதிகரிப்பை ஏற்படுத்தும் என்ற விதியினை நாம் இங்கு உருவாக்கியுள்ளோம். மொத்த வேலை அதிகரிப்பானது, முதலீட்டிற்காகவே தேவைப்படும் முதன்மை வேலையின் பெருக்கமேயாகும்.’ (கீன்ஸ்: ‘வேலை, வட்டி, பணம்பற்றிய பொதுக் கோட்பாடு’ பக்கம் 117–118).

(4) உற்பத்தியைப் பெருக்கத் தேவைப்படும் நடை முதலின் (working capital) அளிப்பு ஒப்பிட்டுப் பார்க்கையில் நெகிழ்ச்சியுடையதாகவிருத்தல்.

இத்தகைய எடுகோள்கள் வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களுக்குப் பொருந்துவன அல்ல. கீன்ஸ் மாதிரியைச் சார்ந்த கட்டாய வேலையின்மை தனியார் துறைக் கூலிப் பொருளாதாரத்துடன் நிச்சயமாக இணைந்துள்ளது. இத்தகைய தனியார் துறைக் கூலிப் பொருளாதாரத்தில் வருமானக்காரர்களில் பெரும்பாலோர் கூலிக்காக வேலை செய்பவர்கள் ஆவர்; மேலும், அப் பொருளாதாரத்தில், தன் துய்ப்பைவிட பரிவர்த்தனைக்காகவே உற்பத்தி நடைபெறுகிறது. இந்தப் பொருளாதார மாதிரியம் (model) அண்மையில் தோன்றியதே. மனித வரலாற்றின் முழுவீச்சில் வேலையின்மை என்பது, ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது, ஓர் அரிய, வட்டார நிகழ்ச்சியாகும் என்பதனையும் இது விளக்குகிறது. ஓர் ஒழுங்கான வேலையின்மை உதவிநிதி அமைப்பு இல்லாத ஓர் சமூகத்தில், ஏழை நிவாரணமே இல்லாத ஓர் சமூகத்தில், ஏழை நிவாரணம் இருப்பினும் அது தற்கொலை சாராத வேறு எந்த முறையையும் விடத் தகுதி குறைந்ததாக இருக்கும் ஓர் சமூகத்தில், வேலை இழந்து நிற்கும் ஓர் மனிதன் தன் சொந்த முயற்சிகள்மூலம் எப்படியோ வாழ முயலவேண்டும் என ராபின்சன் அம்மையார் (Mrs. Robinson) குறிப்பிட்டுள்ளார். இத்தகைய மனிதர்கள் வேலையற்றோர் பட்டியலில் இடம் பெறவில்லை என்றும், தாங்கள் விட்டுச்செல்லும் தொழில்களில் இருந்த உற்பத்தித் திறனைவிடக் குறைந்த உற்பத்தித் திறனை ஏற்றுக் கொண்டே வேறு வேலையை அவர்கள் நாடுகிறார்கள் என்றும் ராபின்சன் அம்மையார் குறிப்பிடுகிறார்.

மேலும், தொடர்ந்து அம்மையார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ‘தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொதுப் போக்கான பண்டத்தின் தேவையில் ஏற்படும் தாழ்வு, உற்பத்தித் திறன் அதிகமாக உள்ள தொழில்களிலிருந்து உற்பத்தித் திறன் குறைவாக உள்ள தொழில்களுக்குத் தொழிலாளர்களைத் திருப்பிவிடும். இவ்வாறு திருப்பிவிடுதலுக்குக் காரணம் உறுதித் தேவையில் ஏற்படும் தாழ்வே. சாதாரணக் கருத்தில், வேலையின்மையின் காரணமும் அதுவே. வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்கள் தரம் குறைந்த வேலைகளில் ஈடுபடுதலையே உருமறைந்த வேலையின்மை (disguised

unemployment) என்று விவரிப்பது இயற்கையே.'[2] மேலும், பொது வேலைக் கோட்பாட்டின் முறையான திட்டத்தில், உரு மறைந்த வேலையின்மை ஓர் சிக்கலைப் புகுத்திவிடுகிறது என்றும், மொத்த முதலீடு சார்ந்த நிகழ்ச்சியின் தனித்த சிறப்பான நிலை மறைந்துவிடுகிறது என்றும் ராபின்சன் அம்மையார் குறிப்பிட்டுள்ளார். இதற்குக் காரணம் எதுவெனில், எந்த அளவுக்கு வேலையின்மை உரு மறைந்திருக்கிறதோ அந்த அளவுக்கு, குறிப்பிட்ட வீதத்தில் நிகழும் முதலீட்டினைத் தொடர்ந்து துய்ப்பின் வீதமும் அதிகரிக்கும். உருமறைந்த வேலையின்மை பரந்து நிலவுவதில் வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்கள் பேர்போனவை. ஆனால், அப் பொருளாதாரங்களில் நிலவும் உருமறைந்த வேலையின்மை ராபின்சன் அம்மையார் எடுத்துக்காட்டும் மாதிரியைச் சேர்ந்ததன்று. ராபின்சன் அம்மையார் எடுத்துக்காட்டும் உருமறைந்த வேலையின்மை, உறுதித் தேவையில் ஏற்படும் தாழ்வினால் தோன்றுவதாகும். வேலையற்றோருக்கு உதவித் தொகையோ அல்லது அவர்கள் வாழ்வதற்கு வேண்டிய, மனத்துக்கு உகந்த சமூக வசதிகளோ இல்லாதபோது மாத்திரம், உருமறைந்த வேலையின்மை தொழில்மயமான பொருளாதாரத்தில் நிலவும்.

மூலதன உபகரணமே இல்லாத, நுட்பத் தொழிலறிவு ஓரளவுக்குக் கீழான நிலையில் உள்ள இந்தியா போன்ற வளர்ச்சி குறைந்த, விவசாயப் பொருளாதாரத்தில் உருமறைந்த வேலையின்மை ஓர் இயல்பான அம்சமாகும். ராபின்சன் அம்மையார் தவறாகக் கருதுவதுபோல, 'உருமறைந்த வேலையின்மை' எனும் தொடர், வேலையின்மையினால் உற்பத்தித் திறன் குறைந்த வேலைக்குக் கூலிபெறும் பாட்டாளி செல்வதைக் குறிக்காது. இந்தியாவைப் பொறுத்தவரையில் அத் தொடர் எதனைக் குறிக்குமெனில், இல்லத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களை அத் தொழில்களிலிருந்து விடுவித்தும், உற்பத்தியில் ஏதேனும் மாற்றம் ஏற்படவில்லை என்பதனால், அவர்கள் உருமறைந்த வேலையின்மை நிலையிலேயே உண்மையாக இருக்கிறார்கள் என்பதனையே குறிக்கும். 'வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்' பற்றி ஐ. நா. நிபுணர்களின் குழு அண்மையில் வெளியிட்ட அறிக்கையிலிருந்து எடுக்கப்பெற்ற குறிப்புப் பின்வருமாறு: 'சொந்தமாகத் தேடிக்கொண்ட வேலையில் தாங்கள் பயன்படுத்தும் மூலவளங்களின் அளவோடு

[2] ஜோன் ராபின்சன் (Joan Robinson) 'வேலைக்கோட்பாடுபற்றிய கட்டுரைகள்' (Essays in the Theory of Employment).

ஒத்திட்டுப்பார்க்கும்பொழுது, அதனைவிட எண்ணிக்கையில் அதிகமாக உள்ள தொழிலாளர்களில் ஒரு சிலரை வேலையிலிருந்து விடுவித்துப் பொருளாதாரத்தின் வேறு துறைகளில் வேலையில் ஈடுபடுத்தியும் விடுவிக்கப்பெற்ற துறையில் மொத்த உற்பத்தி குறையவில்லை எனில் அத் தொழிலாளர்களை உருமறைந்த வேலையின்மையால் பாதிக்கப்பட்டவர்கள் எனலாம்; அத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பெற்ற துறையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதும் அதன் அமைப்பில் நிகழவில்லை என்ற போதிலும், மூலதனத்திலும் குறிப்பிடத்தக்க பதிலீடு (substitution) ஏற்படவில்லை என்றபோதிலும், அத் துறையின் மொத்த உற்பத்தி குறையவில்லை எனில் அத் தொழிலாளர்களை உருமறைந்த வேலையின்மையால் பாதிக்கப்பட்டவர்கள் எனலாம்.'[3] பெருக்கிக் கோட்பாடு இயங்குவதில் ஒரு குறிப்பிட்ட வேறுபாட்டினை இத்தகைய உருமறைந்த வேலையின்மை ஏற்படுத்துகிறது.

வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களில் வேலையின்மை என்பதானது கட்டாய வேலையின்மையாக இராது. உருமறைந்த வேலையின்மையாக இருப்பின், முதலீட்டின் துவக்க அதிகரிப்பு வீதத்தினால் உருவாகும் துவக்க மூலாதார வேலையில் இரண்டாம்படி சார்ந்த விளைவுகளும், மூன்றாம்படி சார்ந்த விளைவுகளும், ஏனைய விளைவுகளும் ஏற்படுவதில்லை. இதற்கு வேறு காரணங்கள் ஒருபுறமிருக்க, நிலவும் கூலியின் அடிப்படையில் வேலையை ஏற்றுக்கொள்ள விரும்பும் தொழிலாளர் கூட்டம் இல்லை என்பதும், வேலை வாய்ப்புகள் இல்லை என்பதனால் தொழிலாளர்கள் கட்டாய வேலையின்மையினால் பாதிக்கப்படவில்லை என்பதும் ஓர் உண்மையான காரணமாகும். இலக்கணப்படி, கட்டாய வேலையின்மை என்பது நிலவும் கூலி மட்டத்தில் தொழிலாளரின் நெகிழ்ச்சிமிக்க அளிப்பு என்பதனையே குறிக்கும். உரு மறைந்த வேலையின்மையினால் பாதிக்கப்பட்டவர்கள் இப் பகுப்பில் இடம் பெறவில்லை. *முதலில் வேலையற்றிருக்கிறோம் என்று அவர்கள் உணரவில்லை; எனவே, வேலை தேடும் முயற்சியில் அவர்கள் ஈடுபடவில்லை. இரண்டாவதாக, நடைமுறையில் நிலவும் கூலியில் வேலைக்கமர்வதால் எவ்வளவு திருப்தி கிடைக்குமோ குறைந்தபட்சம் அவ்வளவு திருப்தியையேனும் அவர்கள் ஏற்கெனவே பெறும் உண்மை வருமானம் மெய்யாக அவர்களுக்கு அளிக்கிறது. உண்மையில், இப்பொழுது அவர்கள்

அறிக்கையில் ஏழாம் பக்கம்.

செய்யும் தொழில்களில் கிடைக்கும் வருமானத்தைவிடக் கணிசமான அளவுக்கு அதிகக் கூலி கிடைத்தாலன்றி, வேறு வேலைகளுக்குத் தங்களைத் தயாரித்துக்கொள்ளும் ஊக்கம் அவர்களுக்கு ஏற்படாது. வேறு மொழியில் சொல்ல வேண்டுமெனில், கீன்ஸ் பொருளில் அவர்கள் உண்மையில் கட்டாய வேலையின்மையினால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லர். உருமறைந்த வேலையின்மையைத் தெளிவாகப் பொருளாதார ரீதியாக விளக்கி நாம் இலக்கணம் வகுத்தற்கு ஒப்ப, அவர்கள் வேலையற்றிருப்போரே. வளர்ச்சி குறைந்த நாடுகளில் வேலையின்மையானது உருமறைந்த வேலையின்மையின் ஓர் குறிப்பிட்ட மாதிரியைச் சார்ந்திருப்பதால், அது கீனிசிய குறிக்கோள்களுக்காக, அப் பொருளாதாரத்தையும் வேலை நிறைவுப் பொருளாதாரத்தையும் ஒன்றெனக் காட்டுகிறது; அந்த அளவுக்கு வளர்ச்சி குறைந்த நாடுகளின் வேலையின்மையானது, பெருக்கிமூலம் உற்பத்தி அதிகரிப்பு நிகழ்வதையோ அல்லது வேலை அதிகரிப்பு நிகழ்வதையோ தடுத்துவிடுகிறது. ஆக, உருமறைந்த வேலையின்மையானது, கீனிசிய விதி நடைமுறையில் இயங்குவதைத் தடுத்துவிடுகிறது. 'முதலீட்டில் விளைந்த வேலை அதிகரிப்பு நுகர்ச்சிப் பண்டத் தொழில்களைத் தூண்டி, மொத்த வேலையில் அதிகரிப்பினை ஏற்படுத்துகிறது. மொத்த வேலையின் அதிகரிப்பானது முதலீட்டில் எழுந்த முதன்மை வேலையின் பெருக்கமே ஆகும். இதுவே கீனிசிய விதியாகும்.

உருமறைந்த வேலையின்மை நிலவுவதால் ஏற்படும் தொல்லைகள் ஒருபுறமிருக்க வேலைக் கோட்பாட்டினை உருவாக்கும்பொழுது கீன்ஸ் முக்கியமாகத் தன் மனத்தில் வைத்திருந்த தொழில்மயமான பொருளாதாரத்தைவிட விவசாயப் பொருளாதாரத்தில் அளிப்புக் கோடு மிகவும் நெகிழ்ச்சியற்றதாக உள்ளது. இதன் விளைவாகப் பண முதலீட்டு அதிகரிப்பு வீதங்களைப் பண வருமான அதிகரிப்பு வீதங்களுடன் இணைக்கும் பெருக்கிக்கும் முதலீட்டு உற்பத்தி அதிகரிப்பு வீதங்களை மொத்த உற்பத்தி அதிகரிப்பு வீதங்களுடன் இணைக்கும் பெருக்கிக்கும் இடையில் உள்ள வேற்றுமை பெருகுகிறது. இவ்விரு பெருக்கிகளுக்குமிடையில் உள்ள வேற்றுமை பெருகுகின்ற காரணத்தால், உண்மை வருமானங்களையும் உற்பத்தியையும்விட மிக வேகமாக பண வருமானங்களும் விலைகளும் உயருகின்றன. எனவே, சேமிப்பு, முதலீட்டிற்குச் சமமாக உயர முடியவில்லை. தொழில்மயமான அல்லது வளர்ச்சி பெற்ற பொருளாதாரத்

துடன் ஒத்திட்டுப் பார்க்கும்பொழுது, விவசாய அல்லது வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில், பற்றுக்குறை நிதியாக்கத்துடன் சேர்ந்த பணவீக்க நடைமுறை வெகு விரைவில் வந்து மிகவும் வேகமாக இயங்கத் தொடங்குகிறது. எனவே, வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில் பற்றுக்குறை நிதியாக்கத்தினுல் ஆதரிக்கப்பட்ட முதலீடு, உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட அதிகரிப்பினைத் தூண்டும் வலிமையை அவ்வளவாகப் பெற்றிருக்கவில்லை.

வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தின் கட்டமைப் பியல்பினை நோக்கும்பொழுது, இம் முடிவு இன்னும் உறுதி யாகிறது. தொழில்மயமான பொருளாதாரத்தில் வேலை தருவோர் எண்ணிக்கை குறைவாகவும் வேலை செய்வோர் எண்ணிக்கை அதிகமாகவும் உள்ளன; அச் சமூகத்தில் உற்பத்தி, சந்தைக்கென்றே நடைபெறும்; தங்களுக்கு வேண்டிய பண்டங்களையும் பணிகளையும் துய்ப்பாளர் வாங்குவர். இதன் விளைவாக வருமானம் பெருகியவுடன், இறுதி நிலை நுகர்ச்சி நாட்டம், நுகர்ச்சிப் பண்டங்களின் சந்தைத் தேவையை (market demand) அதிகரிக்கச் செய்து, நுகர்ச்சிப் பண்டத் தொழில்களில் உற்பத்தியையும் வேலையையும் அதிகரிக்கச் செய்கிறது. வளர்ச்சி குறைந்த பொருளாதாரத் தில் இல்லத் தொழில்கள் முன்னணியில் உள்ளன. உற்பத்தி தன் துய்ப்பிற்கேயன்றிச் சந்தைக்கன்று; இதன் விளைவாக, வருமானம் பெருகியவுடன் இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம், சந்தையில் உள்ள பண்டங்களின் தேவையை அதிகரிக்கச் செய்யாமல், தன் துய்ப்புப் பண்டங்களின் தேவையையே அதிகரிக்கச் செய்கிறது. அவர்களுடைய உற்பத்திப் பெருக் கமே ஓரளவுக்கு அதிகரித்துள்ள தேவையைச் சமாளிக்கலாம். அதே நேரத்தில், சந்தைக்குரிய உற்பத்தியைத் தன் துய்ப்புக்கு மாற்றிக்கொள்வதன்மூலம், அதிகரித்துள்ள தேவை முழுவதனையும் இல்லை எனினும், அதன் ஒரு பகுதியையேனும் சமாளிக்கக்கூடும். ஆக, பெருகிய வருமானத்தை அடைந்த இவ் வகுப்பினருக்கு வேண்டிய நுகர்ச்சிப் பண்டங்களின் கூடுதலான அளவு, உற்பத்திப் பெருக்கத்தில் ஏற்பட்டதன்று; சந்தைக்குரிய உபரியின் குறைப்பில் விளைந்ததாகும். அந்த அளவுக்கு இவர்களுடைய அதிகரித்தத் துய்ப்பினுல் தூண்டப் பெற்ற கூடுதலான வேலையும் குறைந்தே இருக்கும். சந்தைக் குரிய உற்பத்தியிலிருந்து இவர்களுடைய அதிகரித்த துய்ப்புத் தீர்த்துக்கொள்ளப்படுவதால் ஏற்படும் கூடுதலான வேலையை விடக் குறைவாகவே இருக்கும். கீனிசியக் கூற்றுப்படி, இறுதி

நிலை நுகர்ச்சி நாட்டத்தில் கணக்கிடப்பெறும் மட்டத்திற்கும் குறைவாகவே பெருக்கியின் மதிப்பு விழுந்துவிடும் என்பதே இதன் விளைவு. இறுதிநிலை நுகர்ச்சி நாட்டத்தின் அடிப் படையில் உருவாகியுள்ள பெருக்கிக் கோட்பாட்டின் பெரு மையை இந்த முடிவு அழித்துவிடுவதுபோல் தோன்றக்கூடும். இல்லத் தொழில்களும் தன் துய்ப்பு உற்பத்தியும் ஓங்கி நிற்கும் வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில் இந்த நிலை தவிர்க்க முடியாததாகத் தோன்றுகிறது. எனினும், பெருக்கிக் கோட் பாட்டின் முறையான கட்டுக்கோப்பினைப் பாதுகாப்பது இயலும். அதிகரித்த வருமானத்தில் விளைந்த அதிகரித்த துய்ப்பு, அதிகரித்த இறக்குமதிகளின் உருவத்தில் அமையும் பொழுது ஏற்படும் ஒழுக்கினைப் போலவே தன் துய்ப்பின் அதிகரிப்பு வீதமும் ஓர் ஒழுக்கே (leakage) எனக் கருதுவதன் மூலம் பெருக்கிக் கோட்பாட்டின் முறையான கட்டுக்கோப்பினை காத்துப் போற்ற முடியும். தொழில்மயமான பொருளா தாரங்களில் முந்திய ஒழுக்கும், வளர்ச்சி குறைந்த பொருளா தாரங்களில் பிந்திய ஒழுக்கும் நிலவுகின்றன.

நுகர்ச்சிப் பண்டத் தொழில்களில் எச்ச வல்லமை இல்லாது போதலும், உற்பத்திப் பெருக்கத்திற்குத் தேவை யான நடைமுதலின் அளிப்பு, ஒத்திட்டுப்பார்க்கும்பொழுது நெகிழ்ச்சியற்றதாக இருத்தலும் வளர்ச்சி குறைந்த பொருளா தாரத்தின் அம்சங்களாகும். வருமானப் பெருக்கத்தினைத் தொடர்ந்து, வேலையிலும் நுகர்ச்சிப் பண்டத் தொழில்களின் உற்பத்தியிலும் ஏற்பட வேண்டிய தக்க அதிகரிப்பினைத் தடுக்கும் மற்றொரு காரணியாக மேற்குறிப்பிட்ட வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தின் அம்சங்கள் அமைந்துள்ளன. இந்த நிலை, வேலை நிறைவினை நெருங்கும் தொழில்மயமான பொருளாதாரத்தின் நிலையை ஒத்ததாகும். ஆனால், அதிலும் ஒரு வேற்றுமை நிலவுகிறது. இந்த நிலை வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில் மிகவும் கடிதில் இயங்கி, அதன் உரு மறைந்த வேலையின்மையுடன் ஒத்திருக்கிறது.

வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில், பற்றுக்குறை நிதியாக்கத்தின் அடிப்படையில் உருவாகிய முதலீட்டு அதிகரிப்பு வீதம், உற்பத்தியிலும் வேலையிலும் பெருக்கத்தினை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, விலைவாசிகளின் பணவீக்க உயர்வினை ஏற்படுத்துகிறது. எனவே, அப் பொருளாதாரத் தின் அதிகரித்துச் செல்லும் உற்பத்தி, குறைந்து செல்லும் வேலையின்மை ஆகியவற்றின் பிரச்சினையைப் பொறுத்த

வரையில், கீன்ஸ் குறிப்பிடும் பெருக்கிக் கோட்பாடு வேலைசெய்ய வில்லை என்பதே எனது முடிவாகும். எனினும், வேலை நிறைவு அல்லது கிட்டத்தட்ட வேலை நிறைவு எனும் நிலைமையை அடைந்த பொருளாதாரங்களாக வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தைக் கருதினுல், கீனிசிய விதி முறைப்படி சரியானதே என்று முடிவு எடுக்கலாம். எனினும், பொதுமக்கள், வேலை நிறைவும் உத்தமப் பொருளாதார நிலையும் ஒன்றே எனக் கருதுகிருர்கள். வேலை நிறைவினைத் தொடர்ந்து பொருளாதாரத்தில் உள்ள தொழிலாற்றல், மூலதனம், இயற்கை மூலவளங்கள் ஆகியவற்றை உயர்ந்தபட்சம் பயன்படுத்துதலையும் வேலை நிறைவு என்னும் நிலை தன்னுள் அடக்கியுள்ளது. எனவேதான், இன்றைய தேசிய, அகில உலகப் பொருளாதாரக் கைக்கோளின் முக்கியக் குறிக்கோளாக வேலை நிறைவு திகழ்கிறது ; மேலும், ஐக்கிய நாடுகள் சபை, அதன் சிறப்புத் தேர்ச்சி பெற்ற குழுக் கள் ஆகியவற்றின் குறிக்கோள்களிலும் இலட்சியங்களிலும் வேலை நிறைவு மெருகுடன் பிரகாசிக்கிறது. எனவே, வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களை வேலை நிறைவு அல்லது கிட்டத் தட்ட வேலை நிறைவு என்னும் நிலையில் இருப்பதாக விவரிப்பது, அச் சொற்ருெடருக்குரிய உண்மையான பொருளைச் சிதைப்ப தாகும் ; அவ்வாறு விவரிப்பது கீனிசிய வேலை நிறைவுக் கோட் பாட்டின் முறையான தேவையைப் பூர்த்திசெய்வதாக இருந்தபோதிலும் அச்சொற்ருெடருக்குரிய பொருள் சிதைந்தே விடுகிறது எனலாம். இத்தகைய சூழ்நிலைகளில், வேலை நிறை வினை அடைய கீன்ஸ் குறிப்பிடும் பற்ருக்குறை நிதியாக்கக் கோட்பாடும் சிக்கன மறுப்பும் வளர்ச்சி குறைந்த பொருளா தாரத்தில் பிரயோகிக்கப்பட்டால், அவை வேலைசெய்யமாட்டா.

வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்திற்கு வேண்டிய திட்டம் தொன்மைப் பொருளாதாரத் துறையினர் உருவாக்கி யுள்ள வழிகளில் செல்ல வேண்டும். வளர்ச்சி குறைந்த பொரு ளாதாரங்களில் வேலை நிறைவு நிலவுவதே இதற்குக் காரணம் என கீனிசியவாதிகள் கூறுவரேல் அவர்கள் கூற்றினை மறுக்க வேண்டியதில்லை. வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களில் வருமானங்கள், உற்பத்தி, வேலை முதலானவற்றை அதிகரிக்கச் செய்ய வேண்டி மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் திட்டம் வளர்ச்சியடைந்த அல்லது தொழில்மயமான பொருளாதாரங் களுக்கு கீன்ஸ் வகுத்துச் சிறப்பாகப் பிரயோகிக்கப்படுட் திட்டத்திலிருந்து பெரிதும் வேறுபடுகிறது. இக் கருத்தில் முதலீட்டு அதிகரிப்பு வீதங்களுக்கும், வருமான வரி அதிகரிப்பு வீதங்களுக்கும் இடையில் ஏற்புடைய தொடர்பினையும்,

உற்பத்திக்கும் வேலைக்குமிடையில் ஏற்புடைய தொடர்பினையும் உண்டாக்கும் பெருக்கிக் கோட்பாடு இந்தியா போன்ற வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்திற்குப் பொருந்தாது.

வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தின் அம்சங்களாகிய உருமறைந்த வேலையின்மை, இல்லத் தொழில், தன் துய்ப்பிற்கென உற்பத்தி, விவசாய ஏற்றம், மூலதன உபகரணத்தின் பற்றுக்குறை ஆகிய நிலைமைகள் கீன்ஸ் விளக்கிக் காட்டும் வேலை நிறைவுபற்றிய நிலைமைகள் போன்றே உள்ளன. ஆனால், உண்மையில், பொருளாதாரக் கருத்தில் வழக்கில் இருக்கும், அல்லது செல்வாக்குடன் மக்களிடம் வழக்கில் இருக்கும் வேலை நிறைவு என்னும் நிலையானது வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களில் நிலவவில்லை. பொது வேலைக் கோட்பாட்டின்மீது இதனுடைய முறையான விளைவு என்ன என்பது இன்னும் ஆராயப்படவில்லை. ஆனால், வேலை நிறைவின் தனித்த ஒரு மட்டம் உள்ளது என்ற எடுகோளினைப் புறக்கணிப்பதில்தான் இதற்குரிய பதில் இருக்கிறது என நான் கருதுகிறேன். கீன்ஸ் எடுத்துக்காட்டிய வேலை நிறைவு மட்டம் ஒருபுறமிருக்க, பொருளாதார வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களைச் சார்ந்த பல்வேறு வேலை நிறைவு மட்டங்கள் உள்ளன எனலாம். உண்மையில், பொருளாதார வளர்ச்சிக்குரிய கீழ்க்கட்டத்திற்குப் பொருத்தமான வேலை நிறைவு மட்டத்திலிருந்து மேல்கட்டத்திற்குப் பொருத்தமான வேலை நிறைவு மட்டத்திற்கு மாறுவதே பொருளாதார வளர்ச்சியின் படிமுறையாகும். பொருளாதாரப் படிமுறையில் இரண்டு வெவ்வேறு பகுப்புகள் உள்ளன. அவற்றில் ஒன்று, பொருளாதார வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு மட்டத்தில் இருக்கும்பொழுது, வேலையின் கீழ்மட்டத்திலிருந்து வேலை நிறைவு குறிக்கும் மட்டத்திற்கு நீங்கள் முன்னேறுகிறீர்கள்; மற்றொன்று, பொருளாதார வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு மட்டத்தின் வேலை நிறைவிலிருந்து பொருளாதார வளர்ச்சியின் அடுத்த மட்டத்திலுள்ள வேலை நிறைவிற்கு நீங்கள் முன்னேறுகிறீர்கள். இத்தகைய பகுப்புகளில் ஏதேனும் ஒன்றுக்கு மட்டுமே கீனிசிய ஆராய்ச்சி பொருந்திவரும்; அதாவது, கொடுக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியின் ஓர் கட்டத்தில், நீங்கள் வேலையின் கீழ்மட்டத்திலிருந்து வேலை நிறைவிற்கு முன்னேறும் பகுப்பிற்கே கீன்ஸ் ஆராய்ச்சி பொருந்தும். பொருளாதார வளர்ச்சியின் ஒரு மட்டத்திலிருந்து அதன் மேல்மட்டத்திற்கு நீங்கள் முன்னேறிச் செல்வதைக் குறிக்கும் பகுப்பிற்கே தொன்மைப் பொருளாதாரத்

துறையினரின் ஆராய்ச்சி பொருந்தி வரும். இவ்விரு பகுப்புகளையும் இணைத்துக் குழப்பிப் பொருளாதார வளர்ச்சி குறித்த பிரச்சினைகளில் கீனிசியக் கோட்பாடுகளைக் குருட்டுத் தனமாகப் பிரயோகிப்பதனால், வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதாரங்களுக்குக் கணிசமான அளவுக்குக் கேட்டினை உண்டாக்கிவிட்டோம். மேலும், உலகத்தினை இன்று உலுக்கியுள்ள பணவீக்க சக்திகளுக்கும் ஆக்கம் அளித்துவிட்டோம். 'மிக நன்றாக வேலை செய்; நிறையச் சேமிப்பு செய்', என்ற பழைய விதிமுறையே பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற மருந்தாகும்; வளர்ச்சி குறைந்த நாடுகளைப் பொறுத்தவரையேனும் அப் பழைய விதிமுறையே மருந்து என அறுதியிட்டுக் கூறலாம்.

3. வேலை நிறைவும் பொருளாதார வளர்ச்சியும்

சில ஆண்டுகளுக்கு முன்புவரையில் வேலை நிறைவுக் கோட்பாடு, வளர்ச்சி குறைந்த நாடுகளிலும்கூட, பொருளாதாரத் துறையில் ஆட்சி செலுத்திவந்தது. கீனிசியப் போதனையில் எழுந்த பொருளாதாரக் கைக்கோள்களைப் பிரயோகித்து வளர்ச்சி குறைந்த நாடுகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயன்றனர். 'பொருளாதார வளர்ச்சி' என்ற சொற்றொடரே அண்மையில்தான் இத் துறையைக் கவர்ந்தது. வேலை நிறைவுக் கோட்பாட்டின் வளர்ச்சிபற்றியும், பொருளாதார வளர்ச்சிக் கோட்பாட்டுடன் அதற்குரிய தொடர்பு பற்றியும் விளக்கி, வேலை நிறைவுக் கோட்பாட்டினைப் பொறுத்துப் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாட்டினை உருவாக்கி, தேவை எனத் தெரியும்பொழுது திருத்தங்களையோ, அல்லது குறைபாடுகளையோ எடுத்துக்காட்டுவதே இக் கட்டுரையின் குறிக்கோளாகும்.

வேலை நிறைவுக் கோட்பாடே தெளிவு மிக்க கோட்பாடன்று. இக் கோட்பாட்டினை நன்கு பரப்பியவர் கீன்ஸ் அவர்களே. வேறு எந்தப் பொருளாதார நிபுணனைக் காட்டிலும் கீன்ஸ் அவர்களே இக் கோட்பாட்டினைப் பரப்பியதற்குப் பொறுப்பேற்க வேண்டியவராவர். கீன்ஸ் கூற்றுப்படி, கட்டாய வேலையின்மை இல்லாதிருத்தலே வேலை நிறைவாகும். 'பணக்கூலியுடன் ஒத்திட்டுப்பார்க்கும்பொழுது தொழிலாளர் வாங்கும் பண்டங்களின் விலை சிறிது உயர்ந்திருக்கும் வேளையில், அப்பொழுது நிலவும் பணக்கூலியில் வேலை செய்ய விரும்பும் தொழிலாளர்களின் மொத்த அளிப்பும், அதே கூலியில் அவர்கள்பற்றி எழும் மொத்தத் தேவையும் அப்பொழுது நிலவும் வேலைப் பருமத்தைவிட அதிகமாக இருக்கும்;' இந்த நிலையையே கீன்ஸ் கட்டாய வேலையின்மை நிலை எனக் குறிப்பிட்டு இலக்கணம் வகுக்கிறார்.[1] வேறு

[1] கீன்ஸ், 'வேலை, வட்டி, பணம் பற்றிய பொதுக்கோட்பாடு' பக்கம் 15.

வகையில் சொல்ல வேண்டுமெனில், உண்மைக் கூலி வேலையின் இறுதிநிலைப் பயன்பாட்டின்மைக்குச் (marginal disutility of employment) சமமாக இருக்கும்பொழுது கட்டாய வேலை யின்மை ஏற்படுவதில்லை; ஏனெனில், கட்டாய வேலையின்மை யின் இலக்கணப்படி, குறைந்த உண்மைக் கூலியில் வேலை செய்ய யாரும் விரும்பமாட்டார்கள். உண்மைக்கூலி, வேலையின் இறுதிநிலைப் பயன்பாட்டின்மைக்குச் சமமாக இருக்கும் பொழுது, யாரேனும் ஒருவர் வேலை செய்யவில்லை எனில், அதற்குக் காரணம் அவர் வேலை செய்ய விரும்பவில்லை என்பது தான். இந்த நிலையே வேலை நிறைவுநிலை என கீன்ஸ் விவரிக் கிறார். இவ்வாறு இலக்கணம் வகுக்கப் பெற்ற வேலை நிறை வுடன் பிறழ்ச்சிக்காரண வேலையின்மையும் (frictional un-employment) தன்னிச்சை வேலையின்மையும் (voluntary unemployment) உடன்பாடுடையனவே.[2] இவ்வாறு வேலை நிறைவிற்கு இலக்கணம் வகுக்கப் பெற்றமைக்குப் பின்னால் ஓர் எடுகோள் உள்ளது. அந்த எடுகோளின்படி, 'கொடுக்கப் பெற்ற ஓர் அமைப்பு, உபகரணம், நுட்பவினைமுறை ஆகிய வற்றில் உண்மைக் கூலியும் உற்பத்திப் பருமமும் (எனவே வேலையும்) அபூர்வமாக இணைந்திருக்கின்றன. எனவே, பொதுவாக, உண்மைக் கூலிகள் வீதம் குறைந்தால்தான் வேலையில் அதிகரிப்பு நிகழும்.'[3]. இதனைப் பொறுத்தவரையில், தொன்மைப் பொருளாதாரத் துறையினரிடத்தில் கீன்சுக்குப் பூசல் இல்லை. உண்மைக் கூலிகளில் குறைப்பினைத் தக்க முறையில் உண்டாக்க வேண்டிப் பணக் கூலிகளைக் குறைக்கக் கூடாது என்ற கீன்ஸ் ஆய்வு மொழியிலிருந்துதான் கீன்சுக்கும் தொன்மைப் பொருளாதாரத் துறையினருக்குமிடையில் வேற்றுமை எழுகிறது. இக் கருத்து, கீன்சின் வேலைக் கோட் பாட்டுடன் எளிதில் இணைந்துவிடுகிறது. கீன்ஸின் வேலைக் கோட்பாடு, வேலைப் பருமத்தை உறுதித் தேவைப் பருமத் துடன் இணைத்துக்காட்டுகிறது.

கீன்ஸ் கூற்றுப்படி, 'உறுதித்தேவை' என்பது உற்பத்தி முழுவதைப் பொறுத்தும் எழுகின்ற தேவைப் பருமமாகும்; உற்பத்தியின் மொத்த அளிப்பு விலை உற்பத்தியைப் பொறுத்து எழுகின்ற மொத்தத் தேவை விலைக்குச் சமமாக இருத்தலைக் குறிப்பதாக உற்பத்திப் பருமம் அமைகிறது.[4] வேலை நிறைவுடன் தொடர்புபடுத்தப்பெற்ற உறுதித் தேவைப் பருமத்தினை கீன்ஸ் தனித்த நிலையாகக் கருதுகிறார். மாறாக,

[2] மேல் வரும் புத்தகம், பக்கம் 15-16. [4] மேல் வரும் புத்தகம், பக்கம் 25.
[3] மேல் வரும் புத்தகம், பக்கம் 17.

குறிப்பிட்ட திட்டமில்லாதபொழுது இயல்பான நிலை எதுவெனில், குறைந்த தேவை நிலையேயாகும். குறைந்த தேவை நிலையின் பொருள் என்னவெனில், வேலை நிறைவுடன் உடன்பட்டுள்ள மட்டத்திற்குக் கீழ்மட்டத்தில் உறுதித் தேவை அமைதலே ஆகும்.[5] எனவே, வேலை நிறைவினை அடைவதற்காக வேண்டி உறுதித் தேவையினைப் பெருக்கும் நோக்குடைய பொருளாதாரக் கைக்கோளே இப்பொழுது தேவையாகும். உறுதித் தேவையின் போக்குப்பற்றிய விளக்கமும், வேலை நிறைவினை அடைவதற்கு வேண்டிய முறையில் தக்க அளவிற்கு உறுதித் தேவையினை அதிகரிக்கச் செய்வதற்குத் தேவையான பொருளாதாரக் கைக்கோளினைப் பற்றிய விளக்கமும் கீன்ஸ் எழுதிய 'பொதுக் கோட்பாடு' என்னும் நூல் முழுதும் விரவிக் கிடக்கின்றன. கீன்ஸ் அவர்களுடைய வேலைக்கோட்பாட்டில் உண்மைக் கூலி வீதத்தைச் சார்ந்த ஓர் அம்சமும், உறுதித் தேவைப் பருமத்தைச் சார்ந்த ஓர் அம்சமும் ஆக இரண்டு அம்சங்கள் உள்ளன. கீழ்வரும் பகுதியில் அவ் விரு அம்சங்களும் சுருக்கமாக விளக்கப்படுகின்றன.

உறுதித் தேவை குறைவாக இருக்கும்பொழுது தொழிலாளரிடத்து வேலைக்குறைவு (under employment) ஏற்படுகிறது என்பதை முன்னரே எடுத்துக்காட்டியுள்ளோம். தொழிலாளரிடத்து வேலைக்குறைவு என்பது எதனைக் குறிக்குமெனில், நிலவும் உண்மைக் கூலியை விடக் குறைந்த கூலியில் வேலை செய்வதற்கு வேலையற்றிருக்கும் தொழிலாளர்கள் தயாராக உள்ளனர் என்பதனையே ஆகும். எனவே, உறுதித்தேவை அதிகரித்தால் வேலையும் அதிகரிக்கிறது; நிலவும் கூலிக்குச் சமமான அல்லது குறைவான உண்மைக் கூலியில் வேலை அதிகரிக்கிறது; அச் சமயத்தில் நிலவும் உண்மைக்கூலியில் கிடைக்கக்கூடிய தொழிலாளர்கள் மிகுதியாக இல்லை எனும் கட்டத்தை அடையும் வரையில் வேலை அதிகரித்துச்செல்லும்; அதாவது, அக் கட்டத்திலிருந்து, பணக்கூலிகள் விலைவாசிகளை விட வேகமாக ஏறினால் ஒழிய மேலும் தொழிலாளர்கள் (அல்லது வேலை நேரங்கள்) கிடைக்கமாட்டார்கள்.[6]

இதே கருத்தினை வேறொரு முறையிலும் விவரிக்கலாம். உற்பத்தி அளிப்பு முழுதும் நெகிழ்ச்சியற்றதாகும் கட்டத்தினை வேலை அடைகிறது என்பதே அக் கருத்தாகும். அதாவது, உறுதித் தேவைப் பருமத்தில் மேலும் ஏற்படும் அதிகரிப்பினைத்

[5] மேல் வரும் புத்தகம், பக்கம் 28. [6] மேல் வரும் புத்தகம், பக்கம் 289.

தொடர்ந்து உற்பத்தியில் அதிகரிப்பு இனி ஏற்படாது. அதன் விளைவாக, கீன்ஸ் வேலை நிறைவுபற்றி வேறொரு இலக்கணம் வழங்கியுள்ளார். 'மொத்த வேலையின்மூலம் கிடைக்கும் உற்பத்தியில் எழும் உறுதித்தேவையின் அதிகரிப்பைப்பொறுத்து மொத்த வேலை நெகிழ்ச்சியற்றதாக இருக்கும் நிலையே வேலை நிறைவாகும்,'[7] என கீன்ஸ் இலக்கணம் வகுத்துள்ளார். ஆக, வேலை நிறைவு பற்றிய கீனிசியக் கோட்பாட்டில் மூன்று விதிகள் உள்ளன.

(1) தக்க அளவிற்கு உறுதித்தேவைப்பருமம்.

(2) உண்மைக் கூலியும் தொழிலாளர் இறுதிநிலைப் பயன் பாட்டின்மையும் சமமாயிருத்தல்.

(3) தேவையிலோ, அல்லது வேலையிலோ மேலும், ஏற்படும் அதிகரிப்பின் விளைவாக உற்பத்தியில் ஏதேனும் மாற்றம் ஏற்படாதிருத்தல்.

உறுதித் தேவையினைத் தக்க அளவிற்குப் பெருக்குவதே முக்கியமாக இக் கட்டத்தினை அடைவதற்கு உரிய திட்டமாகும். இக் கட்டத்தினை அடைந்த பின்னர் உறுதித் தேவையில் மேலும் ஏற்படும் பெருக்கமானது, பழைய பணக்கணியக் கோட்பாடு (crude quantity theory of money) செயல்படும் விளைவினை ஏற்படுத்தும்; அதாவது, எந்த வீதாச்சாரத்தில் MV அதிகரிக்கிறதோ அதே வீதாசாரத்தில் சரியாக விலைவாசிகள் ஏறும்; வருமானப் புழக்க வேகத்தை (income velocity) V குறிக்கும்.

'கட்டாய வேலையின்மை இல்லாதிருப்பதே வேலை நிறைவாகும்,' எனும் கருத்தினை ஃபெல்னர் (Fellner) ஏற்றுக் கொள்கிறார். ஆனல், அவர் வேறு ஒரு சிக்கலையும் எடுத்துக் காட்டுகிறார். 'தொழிலாளர் அங்காடியில் அளிப்பு நியதிகள் வேருக இருப்பின், அதாவது, வேறு நிபந்தனைகள்மீது தொழிலாளர்கள் வேலை தேடினல், வேலையற்றிருப்போர் கூட்டத்தில் தனிப்பட்ட சிலர் வேலை பெறுவர். வேலையற்றிருப்போர் கூட்டத்தில் இத்தகைய தனிப்பட்டோரும் உள்ளனர். இதுவே கோட்பாட்டிலுள்ள கடுஞ்சிக்கலாகும்.'[8] வேறு முறையில் சொல்லவேண்டுமெனில், வேலையின் இறுதிநிலைப் பயன்பாட்டின்மை குறைந்தால் வேலை நிறைவினைப் பெருக்கி

[7] மேல் வரும் புத்தகம், பக்கம் 26.

[8] வில்லியம் ஃபெல்னர் (William Fellner), 'பணக் கைக்கோள்களும் வேலை நிறைவும்' (Monetary Policies and Full Employment) பக்கம் 3.

மேல் மட்டத்திற்குக் கொண்டுவரலாம். எனினும், இக் கருத்தினை ஃபெல்னர் தெளிவாக எடுத்துக்காட்டவில்லை. பெண்கள், ஓய்வுபெற்றோர் முதலானோர் சமாதான காலத்தில் தன்னிச்சையாக வேலையற்றிருந்தும், போர்க்காலத்தில் வேலை மீது ஏற்படும் வெறுப்புக் குறைவதால், பல்வேறு நிபந்தனைகள் மீது வேலை தேடுவர். ஆக, வேலை நிறைவு உயர்ந்து மேல் மட்டத்திற்கு வரும். உண்மையில் போர்க்காலத்தில் இதுவே நடைபெறுகிறது. போர்க்காலத்தில் வேலையிலிருக்கும் தொழிலாளர்கள் மிகைநேர வேலை (overtime work) செய்ய மிக்க விருப்பத்துடன் முன்வருதலானது இந்த உண்மையை இன்னும் தெளிந்த ஆதாரத்துடன் விளக்குகிறது. ஆக, கீனிசிய வேலை நிறைவுக் கோட்பாட்டின் எடுகோள்களில் ஒன்று கொடுக்கப்பெற்ற வேலை–பயன்பாட்டின்மைக் கோடு (employment-disutility curve) ஆகும்.

வேலை நிறைவினை அடைய உறுதித் தேவை பொருத்தமான மட்டத்திற்கு உயர்ந்திருக்க வேண்டும் என்ற கீனிசிய ஆய்வு மொழியினை ஓலின் (Ohlin) ஏற்றுக்கொள்கிறார். 'நிலவும் விலைகளில் உள்ள தேவையும், நடப்பு உள்நாட்டு அளிப்பும் சமமாக இருக்கும் நிலையுடன் பண்டங்களின் தேவை மிக உயர்ந்த மட்டத்தில் இருக்கும் நிலையானது ஒத்திருக்கும்பொழுது நிலவும் வேலை அளவே வேலை நிறைவாகும்,' என்று ஓலின் இலக்கணம் வகுத்துள்ளார்.[9] அதாவது, தேவை அதிகரித்தலைத் தொடர்ந்து உற்பத்தி அளிப்பு நெகிழ்ச்சியற்றதாகி விடும்பொழுது வேலை நிறைவு ஏற்படுகிறது. மொத்தத் தேவையில் ஏற்படும் குறைவு மாத்திரம் கட்டாய வேலையின்மைக்குக் காரணமாக இருக்க முடியாது என்பதனையும் அவர் எடுத்துக்காட்டுகிறார். 'வேலை நிறைவினை அடைவதற்கு வெகு காலத்திற்கு முன்பே, மந்த நிலையிலிருந்து (depression) வளர்ந்து செல்லும் படிமுறையில் பல்வேறு நெருக்கடிகள் சாதாரணமாக ஏற்படும். வேலை நிறைவு அந்தஸ்தினை உருவாக்க, மாற்றியமைத்தலிலும் சமநிலையாக்கலிலும் உள்ள அநேகப் பெரும் பிரச்சினைகளைச் சந்தித்துத் தீர்வு காண வேண்டும். முதலீட்டுத் தொகையினையும் மொத்தத் தேவையினையும் பெருக்கி உயர்த்திக் காட்டுவதன்மூலமே இதனை சாதித்துவிட முடியாது. கீனிசியக் கோட்பாடு எந்த அளவுக்கு எதிர்ப்பான உணர்வினை உண்டாக்கியிருக்கிறதோ அந்த அளவுக்கு அதனை விரிவுபடுத்தவேண்டியது அவசிய

[9] ஓலின் (Ohlin), 'வேலையினை நிலைபெறுமாறு செய்தலின் பிரச்சினை.' (The Problem of Employment Stabilization).

மாகிறது.'[10]. இதனைப் பொறுத்தவரையில் கீனிசியக் கோட்பாட்டினை விரிவுபடுத்தவேண்டுமேயன்றித் திருத்தவேண்டியதில்லை என்று ஓலின் குறிப்பிடுவது சரியே. நெருக்கடிகள் வேலை நிறைவிற்குத் தடைகளாக உள்ளன என்பதனையும், வேலைமீதும் உற்பத்திமீதும் விரும்பத்தக்க விளைவினை ஏற்படுத்தும் வகையில் மொத்தத் தேவையில் அதிகரிப்புகளை உண்டாக்க, நெருக்கடிகளைத் தவிர்த்துப் பொருத்தமான திட்டம் ஒன்றினை வகுக்க வேண்டும் என்பதனையும் கீன்ஸ் உணர்ந்திருக்கிறார். எனினும், இதனைப் பொறுத்தவரையில், உற்பத்திச் சாதனங்களின் பருமத்திலோ, அல்லது தரத்திலோ, அல்லது அமைப்பிலோ அடிப்படை மாறுதல்களைச் செய்யவேண்டியதன் அவசியத்தைக் குறிப்பதே நெருக்கடிகள் ஆகும் என முடிவு கட்டுவது வலிந்து பெறப்பட்ட முடிவாகும். இதற்கு மாறாக, இந்த இடத்தில், தான் உருவாக்கும் வேலைக் கோட்பாட்டில், இத்தகைய சாதனங்களைக் கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களின் ஒரு பகுதியாகவே எடுத்துக்கொள்வதாக கீன்ஸ் தெளிவுபடுத்துகிறார். 'நிலவும் திறமை, கிடைக்கும் உபகரணத்தின் தரம், அளவு முதலியன, நிலவும் நுட்பவினை முறை, போட்டியளவு, துய்ப்போனின் சுவையுணர்வு, பழக்க வழக்கங்கள் முதலியன, தொழிலாளர்களின் பல்வேறு தீவிர உணர்ச்சிகளின் பயன்பாட்டின்மைகள், மேற்பார்வை, அமைப்பு ஆகியவற்றின் நடவடிக்கைகளின் பயன்பாட்டின்மைகள், நாம் கீழே தரும் மாறிகளைத் (variables) தவிர்த்து, நாட்டு வருமானப் பகிர்வினை நிர்ணயிக்கும் சக்திகளையும் உள்ளடக்கியுள்ள சமூகக் கட்டமைப்பு (social structure), முதலானவைகளை நாம் முன்னரே கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களாக ஏற்றுக்கொண்டுள்ளோம்'[11]. தான் எடுத்துக்கொண்டுள்ள புள்ளிவிவரங்களில் ஏற்படும் மாறுதலின் விளைவாக வேலையில் அதிகரிப்பு நிகழ்வதைப்பற்றித் தன்னுடைய வேலைக் கோட்பாடு விளக்கவேண்டும் என கீன்ஸ் எதிர்பார்க்கவில்லை. இதற்குப் பொருள் என்னவெனில், பொருளாதார வளர்ச்சியினைத் தொடர்ந்து ஏற்படும் வேலைப் பெருக்கத்தைப் பற்றி கீன்ஸ் கவலை கொள்ளவில்லை என்பதேயாம்.

[10] மேல் வரும் புத்தகம், பக்கம் 135.

[11] கீன்ஸ், op. cit., பக்கம், 245. மேல் குறிப்பிட்டுள்ள மாறிகளை அவர் இரு பிரிவுகளாகப் பகுக்கிறார். அதாவது, நுகர்ச்சி நாட்டம், மூலதன இறுதிநிலைத் திறனின் அட்டவணை, வட்டி வீதம் முதலான இயல்பு மாறிகள் (independent variables) ஒரு பிரிவாகும்; வேலைப்பருமம், கூலி அலகுகளில் அளக்கப்பெறும் நாட்டு வருமானம் போன்ற சார்பு மாறிகள் (dependent variables) மற்றொரு பிரிவாகும்.

கீன்ஸைவிட பெவிரிட்ஜ் அவர்கள் (Beveridge) இன்னும் பரந்த பொருளிலே வேலை நிறைவுக் கோட்பாட்டினை விளக்குகிறார். வேலையற்றிருப்போரின் எண்ணிக்கையைவிடக் காலி வேலைகள் (vacant jobs) அதிக எண்ணிக்கையில் இருக்கும் சூழ்நிலையுடன் அவ் வேலைகள் நியாயமான கூலிக்கே கிடைக்கும் என்ற சூழ்நிலையும், அவ் வேலைகள் கிடைக்கும் இடங்களுக்கே சென்று வேலையற்றிருப்போர் அவ் வேலைகளைச் சுலபமாக ஏற்றுக்கொள்ள முடியும் என்று நாம் நியாயமாக எதிர்பார்க்கும் சூழ்நிலையும் வேலை நிறைவினைக் குறிக்கும் சூழ்நிலைகளென பெவிரிட்ஜ் விவரிக்கிறார். 'தொழிலாளர் தேவையும் (demand for labour), தொழிலாளர் அளிப்பும் (supply of labour) தரவாரியாகவும் எண்ணிக்கைவாரியாகவும் இணைந்துள்ளன என்பதே இதன் பொருளாகும்'[12]. எனவே, பிறழ்ச்சிக்காரண வேலையின்மையானது, கீன்ஸ் வேலை நிறைவுக் கோட்பாட்டைவிட பெவிரிட்ஜின் வேலை நிறைவுக் கோட்பாட்டில் குறைந்த அளவிற்கே இடம் பெற்றுள்ளது. எனவே, வேலை நிறைவினை அடைவதற்கு பெவிரிட்ஜ் உருவாக்கியுள்ள திட்டத்தில் வேலை மட்டத்தினை உயர்த்தும் நடவடிக்கைகளும், தொழில்களின் கட்டுப்படுத்தப்பெற்ற இட அமைவினைப் (location) பெறுகின்ற நடவடிக்கைகளும், தொழிலாளர்களின் அமைப்பு ரீதியான இடப்பெயர்வாற்றலினை (mobility) அடையும் நடவடிக்கைகளும் அடங்கியுள்ளன என்பதில் அதிசயம் ஒன்றுமில்லை.[13]

வேலைநிறைவுக் கோட்பாட்டுடன் பிறழ்ச்சிக்காரண வேலையின்மையானது உடன்பாடுடையதே என்ற கருத்தினை கீன்ஸையும் மீறி ராபின்சன் அம்மையார் ஏற்க மறுக்கிறார். 'பணக்கூலிகளின் ஏற்றத்திற்கு எதிராகத் தொழிலாளர் சார்பில் ஏற்படும் ஒவ்வொரு தடையும் இறுதியில் எக் கட்டத்தில் நீக்கம் பெறுகிறதோ அக் கட்டமே வேலை நிறைவுக் கட்டமாகும்,' [14] என்று அந்த அம்மையார் சொல்லும்பொழுது

[13] மேல்வரும் புத்தகம், பக்கம் 32. அமைப்பு ரீதியான இடப்பெயர்வாற்றல்பற்றிய பெவிரிட்ஜ் இலக்கணம் குறிப்பிடத்தக்கது. 'மாற்றம் தேவைப்பட்டாலும்சரி, மாற்றம் தேவைப்படும்பொழுதும்சரி, ஆண்களும் பெண்களும் சோம்பேறித்தனத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் தங்களுடைய உத்தியோக மாற்றத்தையும், தாங்கள் வேலைசெய்யும் இடமாற்றத்தையும் விருப்பத்துடன் ஏற்றுக்கொள்வர் என்பதனையே சாதாரணமாக அமைப்பு ரீதியான இடப்பெயர்வாற்றல் குறிப்பிடுகிறது.'

[13] பெவிரிட்ஜ், 'சுதந்திர சமூகத்தில் வேலை நிறைவு.' (Full Employment in a Free Society), பக்கம் 20.

[14] ஜோன் ராபின்சன், 'வேலைக்கோட்பாடுபற்றிய கட்டுரைகள்', பக்கம் 13.

வேலைநிறைவுபற்றிய அவருடைய இலக்கணமும் கீன்ஸ் வகுத்துள்ள இலக்கணமும் ஒன்ருகவே உள்ளன. 'வேறு ஒரு முதலாளியின் ஆட்களைக் குறைத்தாலன்றி ஒரு முதலாளி தன்னுடைய ஆட்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்ளமுடியாது என்ற நிலை வரும்பொழுதுதான் வேலை நிறைவு நிலைமைகள் உருவாகின்றன,'[15] என்று அம்மையார் அவர்கள் சொல்லும்பொழுது, ஒருபடி மேலே அவர்கள் சென்றுவிடுகிருர்கள். உறுதித் தேவையினைப் பெருக்குவதன் மூலம் வேலையின்மையின் ஒரு பிரிவுக்குத் தீர்வு காணமுடியும் என்றும், பிறழ்ச்சிகளை நீக்குவதன்மூலம் அதன் மற்றொரு பிரிவிற்குத் தீர்வு காணமுடியும் என்றும் பிரித்துக் காட்டுதல் இயலும் என்ற ஆய்வினை அம்மையார் அவர்கள் எதிர்க்கிருர்கள்.[16] அம்மையார் அவர்கள் மேலும் கூறுவது பின் வருமாறு :

"பிறழ்ச்சிக்காரண வேலையின்மைமட்டும் நிலவும்பொழுது 'வேலைநிறைவு' உள்ளது என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. ஆனுல், நாம் முதலில் ஏற்றுக்கொண்டதுபோல, 'பிறழ்ச்சிக்காரண' வேலையின்மைக் கோட்பாடுபற்றி ஒரு சரியான, தெளிவான விளக்கம் தர இயலாது. ஏனெனில், பிறழ்ச்சிக்காரண வேலையின்மைக்கும் தேவைக் குறைவினுல் ஏற்படும் வேலையின்மைக்குமிடையில் வேற்றுமையை எடுத்துக் காட்ட முடியவேமுடியாது. பிறழ்ச்சிகள் நிறைந்து வலுவுடனும், தேவைகள் எப்பொழுதும் மாறிக்கொண்டும் இருக்கும் வரையில், நாம் முதலில் கண்டதுபோல, முழு வேலை நிறைவு ஏற்படாது. ஏனெனில், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தொழிலாளர் அனைவருக்கும் வேலை நிறைவு என்பது, குறிப்பிட்ட தொழில்களில் குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த தொழிலாளர்களே தேவைப்படுவர் என்பதனையே சுட்டிக் காட்டும்; அதே வகையைச் சேர்ந்த தொழிலாளர்கள் கிடைக்கவில்லையெனில், சிலவகையைச் சார்ந்ததொழிலாளர்களனைவருக்கும்முழுவேலை கிட்டும்; அதே வேளையில் வேறு வகையைச் சேர்ந்த தொழிலாளர்கள் கிடைத்தபோதிலும், அவர்கள் வேலைக்குத்தேவைப்படுவதில்லை. சமூகத்தில் நிலவும் வேலையின்மைக்குத் தெளிவற்ற முறையில் பிறழ்ச்சிகளே காரணம் எனக் குறிப்பிட்டு, அத்தகைய பிறழ்ச்சிக்காரண வேலையின்மைக்கு உடன்பாடுடைய முறையில் 'வேலை நிறைவினை' அடையமுடியும் எனத் தெளிவற்ற முறையில் சொல்வதைவிட, பிறழ்ச்சிகள்

[15] மேல்வரும் புத்தகம், பக்கம் 15.

[16] மேல்வரும் புத்தகம், பக்கம் 40.

நிலவும்வரையில் தெளிவான பொருளில் 'வேலைநிறைவு' என்பதனை அடையவே முடியாது என்று சொல்வதே ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும்'.[17]

எனினும், கீனிசிய வேலைக்கோட்பாட்டினை விரிவாகத் தன்னுடைய சமீபகால நூலில் எழுதிய லேனர் (Lerner) அவர்கள், இதற்கு நேர்மாறான கருத்தினை விளக்கியுள்ளார். 'பொருளாதாரம் முழுதும் போதுமான அளவுக்கு உத்தியோகங்கள் இல்லாமையால் ஏற்படும் வேலையின்மைக்கும் வேலையற்றிருப்போர், அவர்கள் திறன்கள், தொழிலின் இட அமைவுகள் ஆகியோருக்கிடையில் ஒன்றுக்கொன்று பொருந்திவராமையால் ஏற்படும் வேலையின்மைக்குமிடையில் கூரிய வேற்றுமையினை அவர் எடுத்துக்காட்டுகிறார்.[18]

அவர், மேலும், உரைப்பது பின்வருமாறு: 'பொதுவாக உத்தியோகங்கள் போதாமையினால் ஏற்படும் வேலையின்மையை பணவாட்ட வேலையின்மை (deflationary unemployment) எனலாம். கிடைக்கும் வேலைக்குப் பொருந்திவராத திறமைகளைப் பெற்றிருக்கும் தொழிலாளர்களாலும், வேலை கிடைக்காத இடத்தில் தங்கியுள்ளதால் வேலை கிடைக்காதிருக்கும் தொழிலாளர்களாலும் ஏற்படும் வேலையின்மையைப் 'பிறழ்ச்சிக்காரண வேலையின்மை' எனலாம். பிறழ்ச்சிக்காரண வேலையின்மையானது வேலை நிறைவு இருக்கும்பொழுதே நிலவும் வேலையின்மையைக் குறிப்பதாகும்.[19] (பெரும் எழுத்துக்களில் முக்கியத்துவம் கருதி நானே எழுதுவது). எனவே, இக் கருத்திற்கு இணங்கியவாறு, கீன்சினுடைய பண்புசார் தூய்மையுடன் வேலை நிறைவுக் கோட்பாட்டினை லேனர் விளக்கி இலக்கணம் வகுக்க முனைகிறார். "வேலையைத் தேடுவதில் 'அவ்வளவாகத் தொல்லை' இனிமேல் இருக்காது என்ற நிலையைக் குறிப்பிடும் வேலை நிறைவினை அதற்குரிய மட்டத்தினை அடைந்த பின்னர், மேலும் செலவு அதிகரித்தால், கூலிகள், விலைவாசிகள் ஆகியவற்றின் பணவீக்கச் சுழலேறியே (inflationary spiral) ஏற்படும்."[20]

என்றபோதிலும், தான் குறிப்பிடும் பிறழ்ச்சிக்காரண வேலையின்மையைக் குறைப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைத் தன்னுடைய திட்டத்திலிருந்து லேனர்

[17] மேல்வரும் புத்தகம், பக்கம் 57-58.

[18] லேனர், 'வேலையின் பொருளாதாரம்' (Economics of Employment) பக்கம் 18.

[19] மேல்வரும் புத்தகம், பக்கம் 18.

[20] மேல்வரும் புத்தகம், பக்கம் 23-24.

அகற்றிவிடவில்லை. ஆனால், இத்தகைய நடவடிக்கைகள் வேலை நிறைவு ஏற்பட வழிகோலும் என்று அவர் கருதவில்லை. அதற்குப் பதிலாக அவர், வேலை நிறைவு மட்டத்தினையே உயர்த்துவதற்குப் பிறழ்ச்சிக்காரண வேலையின்மையைக் குறைப்பது ஓர் வழியாகும் என்ற கவர்ச்சியான கோட்பாட்டினை வழங்கியுள்ளார். 'குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பொருளாதாரத்தை இயக்குகின்ற இத்தகைய வளர்ச்சிகள் அனைத்தும் வேலை நிறைவினை நோக்கி நகரும் வழிகள் ஆகமாட்டா; ஆனால், அவை வேலை நிறைவு மட்டத்தை உயர்த்துவன........... ..... பணவீக்க கட்டத்தினை அடைவதற்கு முன்னரே வேலையின் மிக உயர்ந்த மட்டத்தினை அடைவதற்கு அது உறுதுணையாக இருக்கிறது. உண்மையான வேலையின் மிக்குயர்ந்த மட்டத்தைக் குறிப்பதே வேலைநிறைவு மட்டம் என்பதாகும். இச்சூழ்நிலையில் அங்கே பிறழ்ச்சிக்காரண வேலையின்மையின் எச்சமும் குறைவாகவே இருக்கும்.'[21] எனினும், குறுங்காலத்துடன் லேனர் இணைத்துக் காட்டும் பிறழ்ச்சிக்காரண வேலையின்மைக் குறைப்பானது, பொருளாதார வளர்ச்சியின் காரணமாக ஏற்படும் வேலை அதிகரிப்பைக் குறிக்காது என்பது தெளிவு.

வேலையின்மைக்குப் பிறழ்ச்சிகளோ அல்லது தேவைக் குறைவோ காரணமன்று, ஆனால், வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களே காரணமென்று 'வேலைநிறைவிற்குத் தேசிய, அனைத்துலக நடவடிக்கைகள்,' என்ற அறிக்கையில் ஐ. நா. நிபுணர் குழு முதன்முதலில் குறிப்பிட்டுள்ளது. அந்த அறிக்கை, வேலையின்மையை மூன்று தலைப்புகளின்கீழ்ப் பகுக்கிறது; அவை பின்வருமாறு: (1) கூலி வருமானக்காரர்களை வேலையில் தொடர்ந்து இருக்கச்செய்வதற்குத் தேவையான நிறைவுசெய் வளப்பொருள்கள் கிடைக்காமையினால் உண்டாகும் வேலையின்மை; (2) பொருளாதாரத்தில் சில தொழில் நிலைமாற்றக் கூறுகளிலிருந்து (structural factors) எழும் வேலையின்மை; (3) உறுதித் தேவையின் போதாமையினாலும் நிலையில்லாமையினாலும் தோற்றுவிக்கப்பெற்ற வேலையின்மை முதல் பகுப்பினைச் சார்ந்த வேலையின்மைபற்றி ஐ. நா. நிபுணர்கள் பின்வருமாறு மொழிகின்றனர்:

'வளர்ச்சி குறைந்த நாடுகளில் பெருமளவு வேலைக் குறைவிற்கு மிக முக்கியமான காரணம் மூலதன உபகரணம் கிடைக்காமையேயாகும். பெருமளவு வேலைக் குறைவானது

[21] மேல்வரும் புத்தகம், பக்கம் 25.

நகரத்து வேலையின்மை உருவில் வெளிவராது என்ற போதிலும், விவசாயத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் மக்களில் பெரும்பாலோரை அத் தொழில்களிலிருந்து விலக்கி மாற்றி விடுதலினால் விவசாய உற்பத்தி குறைந்துவிடாது என்ற உண்மையையே பெருமளவு வேலைக் குறைவு பிரதி பலிக்கிறது. இவ்வகையைச் சார்ந்த உருமறைந்த வேலையின் மையைத் தீர்ப்பதற்கு ஒரே வழி பொருளாதார வளர்ச்சியே. அதுவே இன்று உலகின் மிகப்பெரும் பொருளாதாரப் பிரச் சினையாகும்.'[22]

இப் பிரச்சினை குறித்துச் சிந்திக்க நிபுணர்கள் முனையவில்லை. ஏனெனில், இப் பிரச்சினை வேலை நிறைவைவிடப் பொருளாதார வளர்ச்சிபற்றியே அதிக சிரத்தை எடுத்துக்கொண்டது. வேலை நிறைவுப் பிரச்சினையில் அந்த நிபுணர்கள் பழைய கீனிசியப் பாதையைப் பின்பற்றி, ராபின்சன் அம்மையார் மேற் கொண்ட போக்கிற்கு எதிராக லேனர் மேற்கொண்ட போக்குடன் ஒன்றி இணையும் போக்கினை மேற்கொண்டனர். ஆக, அவர்கள் மொழிவது பின்வருமாறு :

'இவ்வறிக்கையின் நடைமுறைக் குறிக்கோள்களைப் பொறுத்தவரையில், உறுதித் தேவையைப் பெருக்குவதன் மூலம் வேலையைப் பெருக்கமுடியாது என்ற நிலையைக் குறிப்பதே வேலை நிறைவாகும். இப் பிரச்சினையை வேறு வழியில் சொல்லவேண்டுமெனில், பிறழ்ச்சி சார்ந்த காரணிகள் பருவகாலக் காரணிகள் ஆகியவற்றின் விளைவுகளுக்குக் காட்ட வேண்டிய குறைந்தபட்ச சலுகைகளை வேலையின்மை மீறுதிருக்கும் நிலையே வேலை நிறைவினைக் குறிக்கும் நிலையாகும். என நாம் இலக்கணம் வகுக்கிறோம்.'[23]

வேலைக் குறைவு நிலையுடன் தொடர்புள்ள வேலையின்மைப் பிரச்சினையை இக் குழு, தன் ஆய்விலிருந்து ஒதுக்கிவிட்டதால், ஐ.நா. சபை வேறொரு நிபுணர் குழுவை நியமித்து, 'வளர்ச்சி குறைந்த நாடுகளில் நிலவும் வேலையின்மைப் பிரச்சினையையும், வேலைக் குறைவுப் பிரச்சினையையும் ஆராயும்படியும், இத்தகைய வேலைக் குறைவு, வேலையின்மை முதலானவற்றைக் குறைப்பதற்குத் தேவைப்படும் தேசிய, அனைத்துலக நடவடிக்கைகளை உருவாக்கும்படியும் பணித்தது. இக் குழு

[22] வேலை நிறைவுபற்றிய தேசிய, அனைத்துலக நடவடிக்கைகள் ஐ. நா. அறிக்கை, பக்கம் 12.

[23] மேல் வரும் அறிக்கை.

வேலையின்மையை வாணிகச் சுழல்சார் வேலையின்மை (cyclical unemployment), பருவகால வேலையின்மை (seasonal unemployment), நுட்பத் தொழில்சார் வேலையின்மை (technological unemployment), உரு மறைந்த வேலையின்மை என நான்கு தலைப்புகளின்கீழ்ப் பகுத்துள்ளது. இறுதியில் குறிப்பிட்டுள்ள உருமறைந்த வேலையின்மையே வளர்ச்சி குறைந்த நாடுகளின் முக்கிய அம்சம் என்றும், அதுவே வேலையின்மைப் பிரச்சினையின் கருவுள் (core) என்றும் அக் குழு குறிப்பிட்டுள்ளது. எனினும், வேலையின்மை என்ற சொற்றொடரினை இந்த இடத்தில் பயன்படுத்துவது தவறான கருத்தினை உண்டாக்குகிறது என இக் குழு கருதுகிறது. ஏனெனில், வேலையின்மை எனும் சொற்றொடரானது, கூலி பெறும் தொழிலாளர்களையே அடிக்கடி குறிப்பிடுவதாக அமைகிறது. அத் தொழிலாளர்களின் அந்தஸ்து வேலையின்மைபற்றிய புள்ளிவிவரத்தில் இடம் பெறுகிறது. எனவே, வளர்ச்சி குறைந்த நாடுகளின் நிலையை வருணிக்க, வேலைக் குறைவு எனும் தெளிவு குறைந்த, ஆனால், யாவருக்கும் புரியும் தொடரினை அக் குழுவினர் பயன்படுத்துகின்றனர். கிடைக்கும் தொழிலாளர் அளிப்பினை உற்பத்திக்காக வேலையில் ஈடுபடுத்தத் தேவைப்படும் நிறைவுசெய் நடவடிக்கைகள் போதாமையின் காரணமாகவே வேலைக் குறைவு ஏற்படுகிறது என்ற முந்திய ஐ. நா. குழுவினரின் கூற்றை இப் புதிய குழு ஏற்றுக்கொண்டது. வேலைக் குறைவிற்குத் தீர்வு காணப் புதிய வேலை வாய்ப்புகளை இந்த முறையில்தான் உண்டாக்க முடியும் என அக் குழுவினர் விவாதித்தனர். எனவேதான் நிபுணர்கள் பின்வருமாறு முடிவு எடுத்தனர்:

'நுட்பத் தொழில்சார் வேலையின்மையையும் வேலைக் குறைவினையும் பகுத்தாய்ந்ததில், புதிய வேலையினைக் கடிதில் உண்டாக்கவேண்டும் என்ற அதே முடிவிற்கு நாங்கள் வந்தோம் என்பதைப் பார்க்கலாம். இதுதான் பொருளாதார வளர்ச்சியின் கடமையாகும். இதன் காரணமாகவேதான் வேலையின்மைக்குப் பதிலாகப் பொருளாதார வளர்ச்சியையே எங்களுடைய அறிக்கை வலியுறுத்துகிறது.'[24]

உறுதித் தேவையினைத் தகுந்த அளவிற்குப் பெருக்குவதன் மூலம் உயர்ந்தபட்ச வேலையினை அடையமுடியும் என்ற கோட்பாட்டினை கீன்ஸ் வகுத்தார். ஆனால், பின்வந்த பொருளாதார மேதைகள், எவ்வாறு வேலையினைப் பெருக்குவது என்பதுபற்றி

24 'வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்,' பற்றிய ஐ. நா. அறிக்கை, பக்கம் 19.

நேரிடையாகவோ அல்லது உட்பொருள்கொண்டு மறைமுக மாகவோ விளக்கம் தந்தனர். பொருளாதாரத்தில் மாற்றி யமைத்தல் அல்லது சமனுக்கல்மூலமாக வேலையினைப் பெருக்க முடியும் என்று ஓலின் குறிப்பிட்டார். 'தொழிலாளர் தேவை யினையும் தொழிலாளர் அளிப்பினையும் தரவாரியாகவும் எண்ணிக்கைவாரியாகவும் தொடர்புபடுத்துவதன்' மூலமாக வேலையைப் பெருக்கமுடியும் என பெவிரிட்ஜ் விளக்கினுர். வேலை நிறைவு குறித்து எழுந்த பொருளாதார சிந்தனைபற்றி மேலே இதுவரையில் எழுதப்பட்ட விமரிசனமானது, அச் சிந்தனையின் போக்கினைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. கட்டாய வேலையின்மை இல்லாதிருப்பதே வேலை நிறைவினைக் குறிக்கும் என்று கீன்ஸ் வகுத்த இலக்கணத்திற்கு உடன்பாடுடையதே தங்களுடைய கருத்து என்று பெவிரிட்ஜ் அவர்களும் ஓலின் அவர்களும் நியாயமாக வாதிடமுடியும். ஏனெனில், தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் பிறழ்ச்சிக் காரண வேலையின்மையைத் தன்னிச்சை வேலையின்மையாகக் கருதமுடியாது என்பது தெளிவு. வளர்ச்சியுற்ற பொருளா தாரத்தில் கட்டாய வேலையின்மையின் கணிசமான ஓர் பகுதி தேவைக் குறைவினுல் ஏற்படுகிறது என்பது உண்மைதான் என்றபோதிலும், உறுதித் தேவையைப் பெருக்கியும் தீர்வு காணமுடியாத அளவிற்குக் கட்டாய வேலையின்மையின் கணிச மான ஒரு பகுதி நின்று நிலைத்துவிடும் என்பதும் உண்மையே. எனவே, பிறழ்ச்சிகள் இருக்கும்வரையில் சரியான பொருளில் விளக்கப்படும் வேலை நிறைவினை அடையவே முடியாது என்ற ராபின்சன் அம்மையார் அவர்களுடைய கருத்தினை ஒருவர் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

அங்காடியில் நிலவும் கூலி வீதங்களில் வேலையை ஏற்றுக் கொள்ளத் தாங்களே இசைவுடன் முன்வராத தொழிலாளர் களின் வேலையின்மையைக் குறிப்பதே தன்னிச்சை வேலை யின்மை ஆகும். ஏனெனில், உண்மையில் கூறினுல், இரு வேறுபட்ட, ஓரளவுக்கு அடிப்படையில் வேறுபட்ட, இரு பிரிவுகள் தொழிலாளரிடத்து உள்ளன. வேலை நிறைவு குறித்த சிந்தனைபற்றிய நமது விமரிசனம் இதனையே எடுத்துக் காட்டுகிறது. ஆக, வளர்ச்சியுற்ற பொருளாதாரத்தில், வேலைக்குத் தரப்படும் உண்மைக் கூலியின் இறுதிநிலைப் பயன் பாட்டைவிட, வேலையின் இறுதிநிலைப் பயன்பாட்டின்மை கூடுதலாக இருப்பதால், வேலையை ஏற்றுக்கொள்ள விரும்பாத தொழிலாளர்களே தன்னிச்சை வேலையின்மையினுல் பாதிக்கப் பட்ட தொழிலாளர்கள் ஆவர். ஆனுல், வளர்ச்சி குறைந்த

பொருளாதாரத்தில் வேறொரு பிரிவினர் உள்ளனர். அவர்கள் இதுவரையில் விவரிக்கப்பெற்ற வேலையற்றோரின் எல்லாப் பிரிவுகளையும் மீறக்கூடிய அளவிற்கு எண்ணிக்கையில் முக்கியத் துவம் உடையவர்கள் ஆவர். அத் தொழிலாளர்களும் வேலையில் இருக்கிறார்கள் என்பது எதனைக் குறிக்குமெனில், அவர்களும் நேரத்தை வேலையில் செலவழிக்கின்றனர் என்பதனையே ஆகும்; ஆனால், அவர்களால் உற்பத்தியில் எந்தப் பெருக்கமும் இல்லை; அதாவது, அவர்கள் வேலைசெய்யாது இருப்பின் உற்பத்தியில் எந்த மாற்றமும் ஏற்படாது. அவர்கள் தாம் 'உருமறைந்த வேலையின்மை'ப் பிரிவினைச் சார்ந்தவர்கள் ஆவர். கீன்ஸ் கருத்திலோ அல்லது பெவிரிட்ஜ் கருத்திலோ இத்தகைய உருமறைந்த வேலையின்மை, வேலையின்மையைச் சாதாரணமாகக் குறிக்காது. ஏனெனில், உருமறைந்த வேலையின்மையினால் பாதிக்கப்பட்டவர்கள் வேலை தேடுவதில்லை; ஆகவே, அவர்கள் தன்னிச்சை வேலையின்மைப் பிரிவினைச் சேர்ந்தவர்களாகிவிடுவர். கீன்சும் பெவிரிட்ஜும் குறிப்பிடும் வேலை நிறைவுடன் கோட்பாட்டு ரீதியாக உருமறைந்த வேலையின்மை உடன்பாடுடையதே. எனினும், வளர்ச்சியுற்ற பொருளாதாரங்களில் நிலவும் தன்னிச்சை வேலையின்மையிலிருந்து உருமறைந்த வேலையின்மையானது மாறுபட்டது என்பதை மறுக்கமுடியாது. உண்மையில் வளர்ச்சிப் பொருளாதாரத்தில் அது மிகவும் வலிவுள்ள பிரச்சினையாக இருக்கிறது என்பதனையும் மறுக்கமுடியாது. எனவேதான், ஐ. நா. சபையின் முதல் நிபுணர் குழு உருமறைந்த வேலையின்மையை மிகப் பெரும் பொருளாதாரப் பிரச்சினையாக எடுத்துக்காட்டி, அதற்குத் தீர்வுகாணப் பொருளாதார வளர்ச்சிதான் ஒரே வழி என்று சிபாரிசு செய்தது. ஐ. நா. சபையின் இரண்டாவது நிபுணர் குழு, பொருளாதார வளர்ச்சியின் கடமை புதிய வேலையினை விரைந்து உருவாக்குவதே எனச் சுட்டிக்காட்டி அப் பிரச்சினை குறித்து மேலும் தெளிவு படுத்தியது.

கீனிசிய வேலை நிறைவுக் கோட்பாட்டிற்கும் பொருளாதார வளர்ச்சியின் வேலைக்கோட்பாட்டிற்கும் இடையிலுள்ள வேற்றுமையினைத் தெளிவாக இப்பொழுது நாம் காணலாம். மனத் தளர்ச்சியினை உண்டாக்கும் பிறழ்ச்சிக்காரண வேலையின்மை எனும் தலைப்பினை விட்டுவிட்டுப் பொதுவாகப் பேசினால், வேலை வாய்ப்புகளுக்கு இணங்க உத்தியோகங்களின் எண்ணிக்கையை உயர்ந்தபட்ச அளவிற்குப் பெருக்குவதே வேலை நிறைவாகும். உறுதித் தேவையை ஒரு குறிப்பிட்ட

அளவிற்குப் பெருக்கியே வேலை நிறைவை அடையவேண்டும். உறுதித் தேவை குறிப்பிட்ட அளவிற்கப்பால் அதிகரித்தால் பணவீக்கம் ஏற்படும். ஆனால், பொருளாதார வளர்ச்சி என்பது, புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி, வேலை மட்டத்தை உயர்த்துவதாகும். கிடைக்கும் தொழிலாளர்களை உற்பத்திக்கு இயைந்த வேலையில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான நிறைவுசெய் வளப்பொருள்கள் பருமத்தை அதிகரித்து வேலை மட்டத்தை உயர்த்தவேண்டும். வேலை நிறைவினைப் பொறுத்தவரையில் தேவைக் குறைவு வலியுறுத்தப்பட்டது. ஆனால், பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரையில் நிறைவுசெய் வளப்பொருள்களின் குறைவு வலியுறுத்தப் படுகிறது. வேலை நிறைவின் ஒரு குறிப்பிட்ட மட்டத்தை அடையவேண்டும் என வலியுறுத்தியதை விட்டுவிட்டு, கூடுதலான வேலையை உண்டாக்கி முந்திய பொருளாதாரச் சூழ்நிலைக்கு இணக்கமாக உள்ள வேலை நிறைவு மட்டத்தினை உயர்த்தவேண்டும் என வலியுறுத்தப்பெற்றது என்பதை நான் குறிப்பிடவேண்டும்.

நான் மேலே மொழிந்ததிலிருந்து தெரியவருவது என்னவெனில், உறுதித் தேவையின் தக்க அதிகரிப்பின்மூலம் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அடையப்படும் வேலைநிறைவு என்ற வேலையின் தனித்த ஒரு மட்டமானது, முக்கியமாகக் குறுங் காலக் கோட்பாடாகும். ஆனால், இலக்கணப்படி பொருளாதார வளர்ச்சியானது நெடுங்காலக் கோட்பாடாகும். பொருளாதார வளர்ச்சியில் வேலை நிறைவின் கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டத்திற்குச் செல்வது அடங்கியுள்ளது; இந்தப் படிமுறை தொடர்ந்திருக்கும்; வளர்ச்சிவீதம் இதனை நிர்ணயிக்கும். பிறிதோரிடத்தில் நான் குறிப்பிட்டதுபோல, 'கீன்ஸ் எடுத்துக் காட்டிய வேலை நிறைவு மட்டம் ஒருபுறமிருக்க, பொருளாதார வளர்ச்சியில் வெவ்வேறு கட்டங்கள் இருத்தல்போலவே வேலை நிறைவிலும் அந்த அளவிற்குப் பல்வேறு மட்டங்கள் இருக்கின்றன. உண்மையில், பொருளாதார வளர்ச்சிக்குரிய கீழ்க்கட்டத்திற்குப் பொருத்தமான வேலை நிறைவு மட்டத்திலிருந்து மேல்கட்டத்திற்குப் பொருத்தமான வேலை நிறைவு மட்டத்திற்கு மாறுவதே பொருளாதார வளர்ச்சியின் படிமுறையாகும். பொருளாதாரப் படிமுறையில் இரண்டு வெவ்வேறு பகுப்புகள் உள்ளன. அவற்றில் ஒன்று, 'பொருளாதார வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு மட்டத்தில் இருக்கும் பொழுது, வேலையின் கீழ்மட்டத்திலிருந்து வேலை நிறைவு குறிக்கும் மட்டத்திற்கு நீங்கள் முன்னேறுகிறீர்கள்;

மற்ருென்று பொருளாதார வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு மட்டத்தின் வேலை நிறைவிலிருந்து பொருளாதார வளர்ச்சியின் அடுத்த மட்டத்திலுள்ள வேலை நிறைவிற்கு நீங்கள் முன்னேறுகிறீர்கள்.'


வேறு முறையில் சொல்லவேண்டுமெனில், கீனிசியக் கோட்பாட்டில், கொடுக்கப்பட்டுள்ள வளங்கள், முதல், திறன்கள் முதலானவற்றின் புள்ளிவிவரங்களுக்குத் தக்கவாறு வேலை நிறைவின் ஒரு தனித்த வளைகோட்டில் (curve) ஒருவர் நகர்ந்து செல்ல வேண்டும். பொருளாதார வளர்ச்சியில், கீழ் மட்டத்திலுள்ள வேலை நிறைவு வளைகோட்டிலிருந்து மேல் மட்டத்திலுள்ள வேலை நிறைவு வளைகோட்டிற்குச் செல்ல வேண்டும். ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள வேலை நிறைவு வளைகோட்டிற்குத் தக்கவாறு அம் மட்டத்திற்குரிய வளங்கள், மூலதனம், திறன்கள் முதலானவை அமைந்திருக்கும். இதுவே பொருளாதார வளர்ச்சியின் ஏணியாகும். பொருளாதார வளர்ச்சிக் கட்டம் உயர உயர, வேலைநிறைவு வளைகோடும் மேலும், மேலும், நெகிழ்ச்சியுடையதாக இருக்கும் என்பதை நான் குறிப்பிட வேண்டும். எனவே, பொருளாதார வளர்ச்சி, விவசாயப் பொருளாதாரத்துடனேயே இன்னும் தொடர்பு கொண்டிருக்கும்பொழுது, உறுதித் தேவை அதிகரிப்பினுல் வேலையில் அதிகரிப்பு ஏற்படுகிறது; வேலை நிறைவுக் கட்டமும் பணவீக்கமும் தொலைவில் இருக்கின்றன ; ஆனுல், பொருளாதார வளர்ச்சி தொழில்மயமாகும் கட்டத்தை அடையும்பொழுது, வேலையில் அதிகரிப்பு இன்னும் கூடுதல் ஆகிறது ; வேலைநிறைவுக் கட்டமும் பணவீக்கமும் இன்னும் தொலைவிற்குச் செல்கின்றன. இதனை வரிப்படத்தின் (diagram) மூலம் விளக்க முடியும். வரிப்படத்தின்மூலம் விளக்கும் பொழுது, வேலையும் உற்பத்தியும் அலகுகளின் மூலம் அளக்கப்பெறின் ஒன்றே என்றும், அல்லது வேறுமொழியில் உரைப்பின், தொழிலாளர் அலகொன்றின் உற்பத்தித் திறன் நிரந்தரமானது என்றும், பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து ஏற்படும் வேலைப் பெருக்கமானது வேலை வாய்ப்புகளின் பெருக்கத்தையோ அல்லது வேலைப் பருமத்தின் பெருக்கத்தையோ குறிக்கும் என்றும் நாம் கொள்வோம். பொருளாதார வளர்ச்சியில், உருமறைந்த வேலையின்மையினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை கிடைக்கும்பொழுது, தொழிலாளர் அலகொன்றின் உற்பத்தித் திறன் பெருகிவிட்டது எனக் கொள்வது சாத்தியமே. உருமறைந்த வேலையின்மையினுல் பாதிக்கப்பட்டவர்களை வேலை கிடைக்காமல் இருப்ப

வர்கள் என்று கருதமுடியாது; ஆனால், அவர்களை உற்பத்தி ஏதுமில்லாது வேலையில் இருப்பவர்கள் என்றே கொள்ள வேண்டும்; அவர்கள் வேலையை ஏற்றுக்கொண்டவுடன், ஏதோ உற்பத்தி செய்து வேலையிலுள்ள தொழிலாளர் அனைவரின் சராசரி உற்பத்தியைப் பெருக்க உதவியாக இருக்கின்றனர். எனினும், உருமறைந்த வேலையின்மையினால் பாதிக்கப்பட்டவர்களை வேலையற்றிருப்போராகவே பாவித்தோம். எனவே, அவர்கள் இலாபகரமான வேலையைப் பெறும் பொழுது அவர்கள் வேலைப் பருமத்தைப் பெருக்குவதாகவே நாம் கருதினோம். இதன் பொருள் என்னவெனில், நாம் அவர்களை உற்பத்தி ஏதும் செய்யாது வேலையில் இருப்பவர்களாகக் கருதாமல், மாறாக வேலையில் இருப்பவர்களுடைய மாறுவேடத்தில் ஒளிந்திருக்கும் துய்ப்பாளர்களாகவே கருதுகிறோம். எனவே, அவர்கள் வேலையில் இருப்பவர்கள்போல் தோன்றினாலும் உண்மையில் வேலை கிடைக்கப்பெறாதவர்களேயாவர். உருமறைந்த வேலையின்மை குறைகின்றபொழுது அல்லது, மறைகின்றபொழுது, வேலை வாய்ப்புகள் பெருகுகின்றன அல்லது, தேவையான அளவுக்குப் பெருகியுள்ளன என்றே பொருளாகும்.

கீனிசியக் கோட்பாட்டினை அல்லது குறுங்கால நிலையினைப் பொறுத்தவரையில் வேலை, உறுதித் தேவை ஆகியவற்றின் தொடர்புபற்றியும், அவ்வாறே வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தினை அல்லது நெடுங்கால நிலையினைப் பொறுத்தவரையில் வேலை, உறுதித் தேவை ஆகியவற்றின் தொடர்புபற்றியும் வரிப்படம்மூலம் விளக்க முற்படுவோம்.

பின்வரும் வரிப்படத்தில் S_1, S_2, S_3 என்ற வளைகோடுகள் போடப்பட்டுள்ளன. ஒவ்வொரு வளைகோடும் பொருளாதார வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் வேலைக்கும் உறுதித் தேவைக்கும் உள்ள தொடர்பினை விளக்குகிறது. உதாரணமாக, உறுதித் தேவை அதிகரிப்பதன் காரணமாக வேலை F_1 எனும் புள்ளிவரையில் உயர்ந்து செல்வதையும், F_1 புள்ளியை அடைந்தவுடன் வேலை நிறைவு ஏற்பட்டுவிட்டது என்பதனையும், F_1 புள்ளிக்கு அப்பால் வளைகோடு OX-க்கு இணைதொலைவுக் கோடாகச் (parallel line) செல்கிறது என்பதனையும், வளர்ச்சியின் இக் கட்டத்தில் உறுதித் தேவை D_1-ல் ஏற்படும் எந்த அதிகரிப்பும் பணவீக்க விளைவினையே சாதாரணமாக உண்டாக்கும் என்பதனையும் S_1 வளைகோடு எடுத்துக்காட்டுகிறது.

வளர்ச்சியின் மேல்கட்டத்தைக் குறிக்கும் வளைகோடு S_2 S_1-க்கு மேல் செல்கிறது. அது, உறுதித் தேவை அதிகரிப்பதன்விளைவாக D_1-க்கு அப்பாலும் வேலை அதிகரித்து உயருகிறது என்பதைக் காட்டுகிறது. ஆகவே, F_2 எனும் வேலை நிறைவுப்புள்ளி மேல்மட்டத்தினை அடைந்ததோடு அமையாது, F_1 எனும் புள்ளிக்கு வலப்புறம் நகர்ந்துள்ளது. மேலும், வேலை நிறைவுப் புள்ளியினை அடைவதற்கு முன்னர் F_1 F_2 எனும்



வளைகோடு அதற்குக் கீழுள்ள வளைகோட்டினைவிட நெகிழ்ச்சி மிக்கதாக உள்ளது. இதில் வளர்ச்சியானது தொடர்ச்சியற்ற முறையில் நிகழ்வதாகக் காட்டப்பட்டுள்ளது; இடைப்பட்ட கட்டத்தில், உறுதித் தேவையின் பெருக்கத்தின் விளைவாக வேலை எவ்வாறு உயருகிறது என்பதும் இங்கு வரைந்து காட்டப்பட்டுள்ளது. வளர்ச்சியினை ஒரு தொடர்ச்சியான படிமுறையாக எடுகோள் எடுத்துக்கொண்டால், இத்தகைய இடைப்பட்ட கட்டங்களையும் விரைந்து சென்று கடந்தால், அதாவது, வளர்ச்சிப் படிமுறையின் ஒவ்வொரு கட்டத்திலும் வேலை நிறைவினை உடனடியாக அடைவதாக எடுகோள் எடுத்துக்கொண்டால், F_1, F_2, F_3 போன்ற புள்ளிகளைப் புது வளைகோட்டின்மீது அடுத்தடுத்து உண்டாகும் புள்ளிகளாகக் கருதலாம். அப் புது வளைகோடே வளர்ச்சி வேலை வளைகோடு (development employment curve) ஆகும். மேலெழுந்து வலப் புறம் சரியும் இப் புதுக் கோடு, பொருளாதார வளர்ச்சியின் அடுத்தடுத்து உயர்ந்துவரும் கட்டங்களில் மொத்த உறுதித் தேவைக்கும் வேலை நிறைவு மட்டத்திற்கும் உள்ள தொடர்பினைக் காட்டும்.

இனிசிய வேலை நிறைவு மட்டங்களில் உண்டாகும் அதிகரிப்புகளைப்பொறுத்து, நாம் பொருளாதார வளர்ச்சியை விளக்குவதில் வேலையின் தரத்தைப்பற்றியோ உற்பத்தியின் பெருக்கத்தைப்பற்றியோ ஏதும் குறிப்பிடவில்லை. உண்மையில், பொருளாதார வளர்ச்சியில் வேலைப் பரும அதிகரிப்பு மாத்திரமன்றி வேறு சில அம்சங்களும் உண்டு. பொருளாதார வளர்ச்சிபற்றிய ஐ. நா. சபையின் துணைக் குழு கூறியிருப்பதை இங்கு எடுத்துக்காட்டுவது பயன்தரும்.

"குறிப்பிட்ட நாடுகளில், உயர்ந்த வாழ்க்கைத்தரங்களைப் பேணுதல், வேலை நிறைவு, பொருளாதார, சமூக வளர்ச்சி முதலானவற்றை அடைதலே குறிக்கோளாகும். இக் குறிக்கோளினை நிறைவேற்ற மனித சக்தி, இயற்கை வளங்கள், மின்னாற்றல், மூலதனம் முதலானவற்றைச் சிறந்த முறையில், திறமையுடன் முழுதும் பயன்படுத்தவேண்டும். 'சிறந்த முறை'யில் பயன்படுத்துதலை வலியுறுத்துவதானது இயற்கை வளங்களை நல்லவண்ணம் சேர்த்துப் பாதுகாக்கவேண்டிய அவசியத்தைக் குறிப்பதாகும். பொருளாதார வளர்ச்சியில் பொருளாதார முயற்சியின் அலகொன்றிற்கு ஏற்படும் உற்பத்தி அதிகரிப்பின் முக்கியத்துவத்தைக் குறிக்கவே 'திறமை' வலியுறுத்தப்படுகிறது. அநேக வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதாரங்களில் தற்பொழுது நிலவும் மிகக் குறைவான வாழ்க்கைத்தரத்திற்குக் காரணம், விரிவாகவும் ஆழமாகவும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தாது, அவற்றைக் குறைவாகப் பயன்படுத்தியமையேயாகும்; எனவே தான், 'முழுதும் பயன்படுத்துதல்' என்பது வலியுறுத்தப்படுகிறது." [25]

எனவே, பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரையில் வேலை என்பது அதன் பரும அதிகரிப்பை மாத்திரமன்றி அதன் உற்பத்தியாற்றலையும் குறிப்பதாகும். எனவே, அனைத்துலக வர்த்தக அமைப்பானது (I.T.O.), தனது சாசனத்தில் விதி 3, பிரிவு 1-ல் உள்நாட்டு வேலையைப் பேணுதல்பற்றி விவாதித்துப் பின்வருமாறு கூறுகிறது: 'ஒவ்வோர் உறுப்பு நாடும் தன்னுடைய அரசியல், பொருளாதார, சமூக அமைப்புகளுக்குத் தக்கவாறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, தனது சொந்தப் பிரதேசத்திலேயே சீராக வளர்ந்து பெருகும் தேவையினையும், வேலை நிறைவினையும்,

[25] ஐ. நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய துணைக் குழுவின் முதல் அறிக்கை. 1947 முதல் 1950 முடிய நடைபெற்ற அக் குழுவின் நான்கு கூட்டங்களிலும் நூலாசிரியர் தலைவராகப் பணியாற்றினர்.

உற்பத்தியைப் பெருக்கும் வேலையினையும் பேணிப் பாதுகாத்து அடைவதற்கு முயலவேண்டும்.' வேலையின் இந்த அம்சத்தைப்பற்றி கீனிசிய வேலை நிறைவுக் கோட்பாடு எண்ணிப் பார்க்கவில்லை. ஆனால், பெவிரிட்ஜ் அவர்களுடைய கோட்பாடு, நியாயக் கூலிகளில் கிடைக்கும் வேலைகளைப்பற்றி குறிப்பிட்டுள்ளதன்மூலம் மறைமுகமாக வேலையின் உற்பத்தி அம்சத்தையும் குறித்துள்ளது. எனவே, வளர்ச்சியுற்ற பொருளாதாரங்களிலும் வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களிலும் நிலவும் எல்லாவகைத்தாய கட்டாய வேலையின்மையை ஒழித்துக்கட்ட கீனிசிய வேலை நிறைவுக் கோட்பாடு பயன்படாது என்பதோடு மாத்திரமன்றி, வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் உற்பத்தியாற்றலின் பெருக்கத்தைப் பொறுத்த வரையிலும் கீனிசியக் கோட்பாடு குறைவுடையதே என்பது தெளிவாகும். இத்தகைய சூழ்நிலைகளில் கீன்ஸ் வகையைச் சார்ந்த வேலை நிறைவின் பல்வேறு மட்டங்களைப்பொறுத்து நாம் உருவாக்கியுள்ள பொருளாதார வளர்ச்சியானது, அதன் வேலை அம்சங்களைக்கூட முழுதும் விளக்கவில்லை எனலாம். பொருளாதார வளர்ச்சிபற்றிய எந்த முழு விளக்கத்திலும் கூடுதலான வேலை உருவாகுதலோ அல்லது கிடைக்கும் வேலைகளின் எண்ணிக்கையில் பெருக்கம் ஏற்படுதலோ மாத்திரமன்றி, தொழிலாளரின் உற்பத்திப் பெருக்கமும் அல்லது கீன்ஸ் குறிப்பிடும் திறமைக் குணகத்தின் (coefficient of efficiency) அதிகரிப்பும் இடம் பெறவேண்டும். வேலையைப் பொறுத்துப் பொருளாதார வளர்ச்சிபற்றி நடைமுறை இலக்கணம் பின்வருமாறு: பொருளாதார வளர்ச்சி என்பது, உயர்ந்தபட்சம் வழங்கப்பெற்று ஏற்றுக்கொள்ளப்படும் வேலைகளின் எண்ணிக்கையில் ஏற்படும் அதிகரிப்பைக் குறிப்பதாகும்; அவ்வாறு எண்ணிக்கையில் ஏற்படும் அதிகரிப்பானது நிலவும் வேலை வாய்ப்புகளுடன் உடன்பாடுடையதாகும். மேலும், வேலை வாய்ப்புகளில் ஏற்படும் தக்க அதிகரிப்புகளுக்கிணங்க இத்தகைய வேலைகளின் எண்ணிக்கையிலும் தொடர்ச்சியான அதிகரிப்பு ஏற்படுவதும் பொருளாதார வளர்ச்சியைக் குறிப்பதாகும். இன்னும், தொழிலாளர் அலகொன்றின் உற்பத்தித் தரமும் பருமமும் பெருகுவதன்மூலம் உற்பத்தியில் தொடர்ச்சியான பெருக்கம் ஏற்படுவதும் பொருளாதார வளர்ச்சியைக் குறிப்பதாகும்.

4. தொழில்மயமான நாடுகளின் தேசிய உண்மை வருமானத்தையும், வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய உண்மை வருமானத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தல்

அறிமுகம்

உண்மை வருமானத்திற்கு இலக்கணம் வகுப்பது கடினம்; அதனை அளந்து அறிவது இன்னும் கடினமானது. ஒரே நாட்டில் வாழ்ந்து, வாழ்க்கைத்தரத்தைப்பற்றிக் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான எண்ணம் உடையவர்களாக இருந்த போதிலும், தனிப்பட்டோரின் உண்மை வருமானத்திற்கு இலக்கணம் வகுப்பதும் அதனை அளந்து அறிவதும் கடினம் என்பது உண்மையே. தன்னுடைய பணவருமானத்திலிருந்து ஒரு மனிதன் பல்வேறு காலங்களில் அடையும் திருப்தியின் அளவினைப் புள்ளிவிவர இயலின்மூலம் நுணுகிக் காண்பது முடியாது என்பது மாத்திரமன்றி, அதற்குத் தர்க்க வாதத்தில் போதுமான அடிப்படையும் இல்லை. வெவ்வேறு தனிப்பட்ட மனிதர்களின் உண்மை வருமானத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் பிரச்சினை எழும்பொழுது, கோட்பாட்டினையும் புள்ளிவிவர இயலினையும் சார்ந்த அநேக தொல்லைகள் ஏற்படுகின்றன. தனிப்பட்டோரின் உண்மை வருமானங்களை எல்லாம் மொத்தமாகக் கூட்டி, நாட்டு உண்மை வருமானங்களாக மாற்றி, அவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது பிரச்சினை தீர்வுகாணமுடியாத ஒன்றாகிவிடுகிறது. லோரிடோ டாமின்கூவஸ் (Loreto Dominguez) குறிப்பிடுவதுபோல, 'நாடுகளுக்கிடையே இருவேறு காலங்களில் நாட்டு உண்மை வருமானத்தை ஒப்பிட்டுப் பார்த்தலானது, ஒரு பொருளாதார நிபுணனுக்கோ அல்லது புள்ளியியல் நிபுணனுக்கோ உள்ளமிகக் கடினமான வேலைகளில் ஒன்றாகும். ஏனெனில், பகுத்தாய்தலில் நலக்கோட்பாடுகள் வெளிப்படையாகவோ அல்லது மறைமுக

மாகவோ இடம் பெறுதலைத் தவிர்க்கமுடியாது.'[1] பேராசிரியர் குஸ்னட்ஸ் (Kuznets) அவர்களும் இதனையே வலியுறுத்துகிறார். 'நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் நாட்டின் பிரஜைகளாகத் திகழும் தனிப்பட்ட துய்ப்பாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே பொருளாதார நடவடிக்கையின் இலட்சியமாகும். பல்வேறுவகைத்தாய பொருளாதாரங்களின் செயல் நிறைவேற்றத்தின் (performance) அடிப்படையில் அமைந்துள்ள ஒரே இலட்சியம் இதுவே; சமூக நலனின் பொருளாதாரக் கூற்றுடன் இணைத்துப் பார்க்கக்கூடிய ஒரே இலட்சியமும் இதுவே.'[2]

நாட்டு வருமானத்தைப்பற்றிய சர்ச்சை நிகர உற்பத்தியை அளந்துபார்ப்பதாக அமைய வேண்டும்; அது சமூக நலனுடனும் ஒன்றியிருக்கவேண்டும். வெவ்வேறு பொருளாதாரங்களின் நன்னிலையின் அல்லது தீய நிலையின் அளவைகளாகக்கொண்டு முக்கியமாகத் தேசிய வருமானங்களை ஒப்பிட்டுப்பார்க்க ஒருவர் முயலும்பொழுது, இத்தகைய சர்ச்சைகளானது கோட்பாட்டுரீதியாகவும் புள்ளிவிவர ரீதியாகவும் மிகவும் மோசமான தொல்லைகளை உண்டாக்குகின்றன. எனினும், இத்தகைய ஒப்புமைகள் நாள்தோறும் நிகழ்கின்றன. முப்பத்திரண்டு நாடுகளுடைய தேசீய வருமானங்களின் ஒப்பிடப்பெற்ற கணக்குகளை ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிவர அலுவலகம் தனது இரு ஆண்டு அறிக்கைகளில் தந்துள்ளது. அண்மையில், அதே அமைப்பு, வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய வருமானத்தின் பருமத்தைப் பற்றியும் பகிர்வினைப்பற்றியும் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. வளர்ச்சியுற்ற நாடுகளிலும் வளர்ச்சி குறைந்த நாடுகளிலும் நிலவும் உற்பத்தி அமைப்பு முறை, சமூகக் கட்டமைப்புகள் முதலானவற்றிற்கு இடையிலுள்ள வேற்றுமைகளின் காரணமாக, அந் நாடுகளின் தேசிய வருமானங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதில் உள்ள இடர்ப்பாடுகளைப்பற்றி வாசகர்களை அந்த அறிக்கை எச்சரிக்கை செய்த

[1] லோரிடோ எம். டாமின்கூவஸ், 'லத்தீன் அமெரிக்க நாடுகளின் நாட்டு வருமான மதிப்பீடுகள்', 'வருமானம் செல்வம்பற்றிய ஆராய்ச்சிகள்', வால்யூம் 10. பொருளாதார ஆராய்ச்சியின் நாட்டுக் கழகம், 1947, பக்கம், 234.

[2] சைமன் குஸ்னட்ஸ் (Simon Kuznets), 'அரசாங்கப் பண்டமும் தேசிய வருமானமும்', 'வருமானமும் செல்வமும்', தொடர்கள் 1, 'வருமானத்திலும் செல்வத்திலும் ஆராய்ச்சி செய்யும் பன்னாட்டு மன்றம், பவ்ஸ் அண்டு பவ்ஸ் (Bowes & Bowes), கேம்பிரிட்ஜ், 1951, பக்கம், 180.

போதிலும், தேசிய வருமானங்களை ஒப்பிட்டுப்பார்க்கத் தயங்கவில்லை. அந்த அறிக்கையிலுள்ள வாசகம் பின் வருமாறு :

'இவ்வாறாக, உலக ஜனத்தொகையில் பாதிக்கு மேல் உள்ள ஆசியாவில் உலகத்தினுடைய தேசிய வருமானத்தில் பத்தில் ஒரு பகுதியே உள்ளது. உலக ஜனத்தொகையின் பத்து சதவீதத்திற்கும் குறைவாக உள்ள வடஅமெரிக்காவில் உலகத்தினுடைய தேசிய வருமானத்தில் கிட்டத்தட்ட 45 சதவீதம் உள்ளது. உலக ஜனத்தொகையின் 65 சதவீதத்திற்கு மேல் மக்களைக் கொண்ட ஆசியா, ஆஃப்ரிக்கா, தென் அமெரிக்கா முதலிய கண்டங்களில் உலகத்தின் தேசிய வருமானத்தில் 15 சதவீதத்திற்குச் சற்று அதிகமாக உள்ளது. ஆனால், உலக ஜனத்தொகையில் 35 சதவீத மக்கள்மட்டுமே உள்ள மற்றப் பிரதேசங்களில் உலக வருமானத்தில் கிட்டத்தட்ட 85 சதவீதம் உள்ளது.'[3] இத்தகைய கருத்துகள் உலகப் பத்திரிக்கைகளில் இடம்பெற்றன. வளர்ச்சி குறைந்த நாடுகளில் இக் கருத்துகளுக்குப் பெருமளவு விளம்பரம் கிடைத்தது.

எனவே, நாட்டு வருமானங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் பிரச்சினையை மீண்டும் புதிதாகச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டியது நல்லதே. உண்மையில் நாட்டு வருமானங்களைப் பணரீதியில் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர் ; ஆனால், பேராசிரியர் குஸ்னட்ஸ் குறிப்பிடும் ' நன்னிலை' அல்லது ' தீய நிலை 'யைப் பொறுத்து, நாட்டு உண்மை வருமானங்களை ஒப்பிட்டுப்பார்ப்பதே இதில் உள்ள இலட்சியமாகும். வளர்ச்சியுற்ற ஐக்கிய அமெரிக்கா, வளர்ச்சி குறைந்த இந்தியாபோன்ற வேறுபட்ட பல்வகைப் பொருளாதாரங்களின் நாட்டு வருமானங்களை ஒப்பிட்டுப் பார்க்க முயலுவதில் தனித்த தொல்லைகள் உள்ளன. நாட்டு வருமானங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, கோட்பாட்டு ரீதியான, புள்ளிவிவர ரீதியான சில காரணிகளைக் கீழே விவாதிக்க முற்படுகிறேன்.

பணச் சார்பற்ற வருமானம்

துவக்கத்தில், திருப்தியை உண்டாக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் பொருளாதார நடவடிக்கைகளையே குறிக்கும். ஓர் எல்லைக்கப்பால், உற்பத்தி நடவடிக்கைக்கும் துய்ப்பு

[3] 'வளர்ச்சி குறைந்த நாடுகளில் தேசிய வருமானத்தின் பருமமும் பகிர்வும்', ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார, சமூக கவுன்சில், பாரா 16, பக்கம் 7. (படியாக்கத் தகடு செய்வதற்கான அமைவினால் படிகள் எடுக்கப்பட்டது.)

நடவடிக்கைக்கும் இடையிலுள்ள வேற்றுமை மறைந்து விடுகிறது. தர்க்கவாதத்தைவிட சம்பிரதாய முறையும் சமூகக் கட்டமைப்புமே இந் நடவடிக்கைகளை எந்தப் பிரிவுகளுக்குள் பகுக்கவேண்டும் என்பதனை நிர்ணயிக்கின்றன. பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் அந் நடவடிக்கைகளில் விளைந்த பண்டங்களையோ அல்லது பணிகளையோ உள்ளடக்கிய உற்பத்தியை விற்பனைக்கென அங்காடிக்கு அனுப்பிவைக்கவில்லை; அங்காடியில் விற்பனைக்குச் சென்ற உற்பத்தியும்கூட நிகர நாட்டு வருமானக் கோட்பாடுகளைக் குறிப்பதாகத் தெரியவில்லை; அவ்வுற்பத்தி, நலக் கோட்பாட்டினைச் சார்ந்த திருப்திகளின் ஒத்திசைவான வேற்றுமைகளையும் குறிக்கவில்லை. இறுதியாக, மதிப்பீடுகளில் வேற்றுமைகள் நிலவும் பிரச்சினையும் உள்ளது. மேலும், பல்வேறு பண அலகுகளை உண்மை அலகுகளுக்கு மாற்றவேண்டிய சிக்கல் நிறைந்த பிரச்சினையும் உள்ளது.

நாட்டு உண்மை வருமானங்களின் ஒப்புமைபற்றிய பிரச்சினையின் சிக்கலைச் சுருக்கமான இத்தொகுப்புப் போதுமான அளவுக்கு விளக்கியுள்ளது என்று நான் நம்புகிறேன். இக் கட்டுரையின் குறிக்கோள்களைப் பொறுத்தவரையில், கோட்பாட்டின் ஒருசில பரந்த விஷயங்களைமாத்திரம் எடுத்துக் கொள்கிறேன். கோட்பாட்டின் வகை நுணுக்கங்கள்பற்றிய பிரச்சினையைப் பின்னர் எடுத்துக்கொள்கிறேன்.

ஒப்புமையை ஆராயும்பொழுது முதல் பிரச்சினை என்னவெனில், நாட்டு வருமானங்களை ஒப்பிட்டுப் பார்த்துக் கணிப்பதிலிருந்து விலக்கப்பட்ட ஒன்றினை அலசிப்பார்ப்பதேயாகும். 'நாட்டு வருமானத்தைப் பொருளாதார, உற்பத்தி முயற்சிகளின் விளைவோடுமட்டும் கட்டுப்படுத்தியமையால், திருப்தியை வழங்கும் அநேக நடவடிக்கைகளை நாம் ஒதுக்கிவைக்க நேர்ந்தது; பொருளாதார நடவடிக்கையாக அல்லாமல், பொதுவாகவாழ்க்கையின் ஓர் பகுதியாகக் கருதத்தக்க திருப்தியூட்டும் நடவடிக்கைகளைச் சிறப்பாகக் குடும்பத்திலேயே திருப்தி அளிக்கும் வகையில் நிகழும் நடவடிக்கைகளை நாம் தள்ளிவைக்கும் கட்டாயம் ஏற்பட்டது.'[4] பேராசிரியர் குஸ்னட்ஸ் இவ்வாறு குறிப்பிட்டிருப்பது முற்றிலும் உண்மையே. 'குடும்பப் பொருளாதாரத்தின் பண்டங்களை

[4] சைமன் குஸ்னட்ஸ், 'நாட்டு வருமானமும் அதன் கூட்டமைவும்,' 1919-1938, வால்யூம் 1, பொருளாதார ஆராய்ச்சியின் நாட்டுக் கழகம், நியூயார்க், 1941, பக்கம், 55.

ஒதுக்கிவிடுதல், நாட்டு வருமான மதிப்பீடுகள் அனைத்திற்கும் உரிய அம்சமாகும்; நாட்டில் உற்பத்தியாகி, பற்றுக்குறை உடையதும் செலவழிக்கத்தக்கதுமாகிய பண்டங்கள் அனைத்தின் அளவைகளாக நாட்டின் வருமான மதிப்பீடுகள் அமையும் தகுதியினை, குடும்பப் பொருளாதாரப் பண்டங்களை ஒதுக்கிவிடுதலானது கட்டுப்படுத்திவிடுகிறது'.[5] 'குடும்பப் பொருளாதாரத்தின் உற்பத்தியைப் பெரிதும் ஒதுக்கிவிட்டதால், உற்பத்தியின் பல்வேறு பகுப்புகளின் மொத்த அடக்கத்தின் முற்றொருமைசார் சமன்பாடும், ஒவ்வொரு பகுப்பினையும் ஒரேமாதிரியாக விளக்குதலும் பல்வேறு நாடுகளின் தேசிய வருமானக் கணக்குகளிடையே முழு ஒப்புமையை உண்டாக்கமாட்டா' என சாலமன் ஃபேபிரிகன்ட் (Solomon Fabricant) சரியாகக் குறிப்பிட்டுள்ளார்.[6] 'ஒதுக்கப்பெற்ற பகுப்புகளின் ஒன்றுக்கொன்று தொடர்பான முக்கியத்துவம் நாட்டுக்கு நாடு வேறுபடும். அதற்குத் தக்கவாறு, நாட்டு வருமானக் கணக்குகளினால் நிர்ணயிக்கப்படும் மொத்த உற்பத்தியின் முழு அடக்கத்தின் தெளிவான சதவீதமும் நாட்டுக்கு நாடு வேறுபடும்.' ஆக, நாட்டு உண்மை வருமானங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, குடும்பப் பொருளாதாரத்தின் பண்டங்கள் எந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கவனிக்கவேண்டும்; உற்பத்தி நடவடிக்கையின் உண்மையான அடையாளமாக இருப்பதிலிருந்து நாட்டு வருமானக் கணக்குகள் எந்த அளவிற்குத் தவறியிருக்கிறதோ அந்த அளவின்மீது குடும்பப் பொருளாதாரப் பண்டங்கள் ஒதுக்கப்பட்டிருத்தலின் ஒப்புமைசார் முக்கியத்துவம் என்ன என்பதையும் கவனிக்கவேண்டும்.

வளர்ச்சிமிக்க பொருளாதாரங்களைவிட, வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களில் நாட்டு வருமானங்கள், பொருளாதார நலனுக்குகந்த நடவடிக்கைகளை அதிகமாக ஒதுக்கிவைத்துவிட்டன என்ற நம்பிக்கையை விடாப்பிடியாகக் கொண்டிருப்பதைக் காண நான் வியப்படைகின்றேன். இவ்வாறாக,

[5] மேல்வரும் புத்தகம், பக்கம் 10.

[6] 'நிதிசார்ந்த இடையீட்டாளர்களிடமிருந்து வரும் நாட்டு வருமானம்' (National Income Originating in Financial Intermediaries); டுவைட் பி. என்டீமா (Dwight B. Yntema) எழுதியது. இதைப்பற்றி சாலமன் ஃபேபிரிகன்ட் கருத்து. 'வருமானம், செல்வம்பற்றிய ஆராய்ச்சிகள்', வால்யூம் 10, op. cit, பக்கம், 60.

'தேசிய வருமானப் புள்ளிவிவரம்'[7] பற்றிய தனது முதல் அறிக்கையில், ஐ.நா. சபை ஐந்து வகையான பணச்சார்பற்ற இனங்களைக் குறித்துள்ளது. அவை பின்வருமாறு:

(1) வீட்டுத் தலைவிகளின் பணம்பெறாத பணிகள்.

(2) வீட்டுச் சொந்தக்காரரே வீட்டில் குடியிருக்கும் பொழுது அவ் வீட்டிற்குரிய நிகர வாடகை மதிப்பு.

(3) நீடித்து உழைக்கக்கூடிய, துய்ப்பாளர் பண்டங்களின் பணிகள்.

(4) சொந்தமாக உற்பத்தி செய்த தானியங்களையும் அவை போன்ற ஏனைய பண்டங்களையும் விவசாயிகளே துய்த்தல்.

(5) பண்டங்களில் தரும் செலுத்துகைகள்.

நாடுகளிடையே ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, பணச் சார்பற்ற இனங்கள் அனைத்தினையும் சேர்த்துக்கொள்ளவில்லை என்ற உண்மையானது, ஓரளவிற்கு உண்மை நிலையை மங்கச் செய்துவிடும் என்று அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. அவ் வறிக்கை மேலும் பின்வருமாறு எழுதுகிறது: 'தொழில் மயமான நாடுகளுக்கும் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு மிடையில் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, அதுவே உண்மை நிலையாகும்; ஏனெனில், வளர்ச்சி குறைந்த நாடுகளில், மொத்த உற்பத்தியில் பிழைப்பு வருமானம் (subsistence income) கணிசமான அளவுக்கு உள்ளது.'[8] 'வளர்ச்சி குறைந்த நாடுகளில் நாட்டு வருமானத்தின் பருமமும் பகிர்வும்' பற்றிய ஐ.நா. அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகிறது:

'வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கும் தொழில்மயமான நாடுகளுக்கு மிடையில் ஒப்பிட்டுப் பார்ப்பதில் உள்ள கோட்பாட்டு ரீதியான வேற்றுமைகள் அழுத்தமாக உள்ளன. ஏனெனில், வளர்ச்சி குறைந்த பல்வேறு நாடுகளில் தேசிய உற்பத்தியின் ஒரு பகுதி வர்த்தகத்திற்கு என அங்காடிக்குச் செல்லாமல் நேரடியாகத் துய்க்கப்படுகிறது. உற்பத்தி யனைத்தும் பண ரீதியாக மதிப்பிடப்பெற்று, நாட்டு வருமான மதிப்பீட்டில் சேர்க்கப்படும் பிரச்சினையை இந்த நிலை கிளப்பிவிடுகிறது.'[9]

[7] 'தேசிய வருமானப் புள்ளிவிவரம்', 1938—48, ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிவர அலுவலகம், 1950, பக்கம், 8.

[8] மேல்வரும் புத்தகம், பக்கம், 9.

[9] 'வளர்ச்சி குறைந்த நாடுகளில் தேசிய வருமானத்தின் பருமமும் பகிர்வும்,' ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார, சமூக கவுன்சில், பாரா 6, பக்கம் 4.

வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய வருமானங்களைக் கணக்கிடுதலிலிருந்து குடும்பப் பொருளாதாரப் பண்டங்கள் ஒதுக்கி வைக்கப்பெற்றன என்ற ஒருவகையான உள்ளடங்கிய எடுகோள் இருப்பதாகத் தெரிகிறது. வேறு முறையில் நோக்கின், உள்ளடங்கிய எடுகோளாகத் தெரியவருவது எதுவெனில், வளர்ச்சி குறைந்த நாடுகளின் அங்காடியில் விற்கப்படாத பணிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, தொழில்மயமான நாடுகளின் தேசிய வருமானங்களிலிருந்து அங்காடியில் விற்கப்படாத சில பணிகளை ஒதுக்கிவிட்டமையானது அவ்வளவாக முக்கியத்துவம் உடையதன்று. ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, வளர்ச்சி குறைந்த நாடுகளில் அப் பணிகளை ஒதுக்கிவிட்டமையானது முக்கியத்துவம் உடையதாகும்.

முதல் எடுகோள் சரியன்று. 1948-49ஆம்[10] ஆண்டின் இந்திய நாட்டு வருமானத்தைப்பற்றிய இந்திய நாட்டு வருமானக் குழுவினால் அண்மையில் வெளியிடப்பெற்ற மதிப்பீட்டினை எடுத்துக்கொண்டால், அதில் கீழ்வரும் இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன :

(1) சொந்தக்காரர்களே குடியிருக்கும் வீடுகளின் நிகர வாடகை மதிப்பு.

(2) சொந்தமாகப் பயிரிட்டு உற்பத்தி செய்த தானியத்தை விவசாயிகளே துய்த்தமை.

(3) உணவு வகையில் பதனம் செய்தல், அங்காடியில் விற்க முற்படுதல், போக்குவரத்துப் பணிகள் முதலானவற்றை உள்ளடக்கிய — விவசாயத்திற்குத் துணையான நடவடிக்கைகள்.

(4) நகரத் தொழிலாளர்கள், கிராமத் தொழிலாளர்கள், பட்டாளத்தினர், அரசாங்க ஊழியர்கள் முதலானோருக்குப் பண்டங்களாகத் தரும் செலுத்துகைகள்.

ஐக்கிய அமெரிக்கா போன்ற உயர்ந்த தொழில்மயமான நாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இந்தியாவில் குடும்பப் பொருளாதாரம் அல்லது இல்லத் தொழில் நாட்டு உற்பத்தியின் பெரும் பகுதியை வழங்குகிறது என்பது நிச்சயமாக உண்மையாகும். அங்காடிக்கு விற்பனைக்குச்

[10] நாட்டு வருமானக் குழுவின் முதல் அறிக்கை, ஏப்ரல் 1951, நிதித் துறை அமைச்சரவை, இந்திய அரசாங்கம்.

செல்லாத பணிகளைப் பொறுத்தவரையிலும், ஏற்றிச் சொல்லுதல் (imputation) எனும் பிரச்சினையைப் பொறுத்த வரையிலும், மேலே குறித்த உண்மை, தொல்லைகளை உண்டாக்கும் என்பதும் உண்மையே. பின்பற்றப்படுகின்ற புள்ளிவிவர வழிமுறைகளைப் பொறுத்தவரையில் நேர்மையான கருத்து வேறுபாடு எழக் காரணம் உண்டு. ஆனால், அங்காடியில் விற்கப்படாத இத்தகைய பண்டங்களும் பணிகளும் இந்தியாவின் நாட்டு வருமானத்தில் சேர்க்கப்படவில்லை என்று கருதக்கூடாது. எனவே, வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய வருமானங்களில் பிழைப்பு வருமானம் சேர்க்கப்பட்டுள்ளது. தொழில்மயமான நாடுகளின் தேசிய வருமானங்களில் இடம் பெற்றுள்ள பணிகள் அனைத்தும் மேற்குறித்த பிழைப்பு வருமானத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இரண்டாவது விஷயத்திற்கு இப்பொழுது செல்கிறேன்; அதாவது, நாட்டு வருமானங்கள் இரண்டிலிருந்தும் விலக்கப் பெற்ற அங்காடியில் விற்கப்படாத சில பணிகள், வளர்ச்சி குறைந்த நாடுகளின் உண்மை வருமானத்தைக் குறைத்து மதிப்பீடு செய்யும் விளைவினை ஏற்படுத்தியுள்ளன. இதற்கு மிகவும் பொருத்தமான எடுத்துக்காட்டாக அமைவது வீட்டுத் தலைவிகளின் பணிகளேயாம்.

வீட்டுத் தலைவிகளின் பணிகள், பொருளாதார நலனை நல்குகின்றன; எனவே, அவை நாட்டு உண்மை வருமானத்தையும் உயர்த்துகின்றன. ஆனால், அத் தலைவியரின் பணிகள் தொழில்மயமான நாட்டில் புறக்கணிக்கத் தக்கவைகளா? வளர்ச்சி குறைந்த நாட்டில் முக்கியத்துவம் நிறைந்தவைகளா?

உதாரணத்திற்காக ஐக்கிய அமெரிக்காவை எடுத்துக் கொண்டு ஆராய்கின்றேன். வீட்டுத் தலைவியரின் பணிகளின் டாலர் மதிப்பு சற்றேறக்குறைய 23 பில்லியன் டாலர்கள் அல்லது 1929ஆம் ஆண்டின் மொத்த நாட்டு வருமானத்தில் சுமார் நான்கில் ஒரு பங்கிற்கு மேலாகும் என்று பேராசிரியர் குஸ்னட்ஸ் தன்னுடைய நிலைபேறான படைப்பாகிய '1919 முதல் 1938 முடிய உள்ள ஆண்டுகளின் நாட்டு வருமானமும் அதன் கூட்டமைவும்' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[11] ஒப்பிடும் ஆண்டுகளாகிய 1948–49-ல் ஐக்கிய அமெரிக்காவிலும் இந்தியாவிலும் இலாபகரமான தொழிலில் ஈடுபட்டிருந்த மக்கள் எண்ணிக்கைகள் நடைமுறையில் ஒன்றாகவே

[11] சைமன் குஸ்னட்ஸ், 'நாட்டு வருமானமும் அதன் கூட்டமைவும், 1919-1938' வால்யூம் 2, op. cit., பக்கம், 434.

இருந்தன என்பதை எண்ணிப்பார்க்கும்பொழுது, மேலே பணிகளை டாலர் மதிப்பில் தந்த வீதாசாரங்கள் இந்தியாவில் வேருக இருக்கப்போவதில்லை. மேலே குறித்துள்ள ஒப்பிட்ட ஆண்டுகளில் (1948-49) இந்தியாவில் இலாபகரமான தொழிலில் ஈடுபட்டோர் 39 சதவீதத்தினராகவும், ஐக்கிய அமெரிக்காவில் 40 சதவீதத்தினராகவும் உள்ளனர். அதே வேளையில், இலாபகரமான தொழிலில் ஈடுபடாத மக்கள் தொகை ஐக்கிய அமெரிக்காவில் நுகர்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும், இந்தியாவில் அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லாத பணிகள் நிறைந்த துறையில் சிறப்பாக உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் கருதுவது சரியன்று. இந்தியாவில், வீட்டுத் தலைவியரோ அல்லது வீடுடையோரோ உற்பத்தி செய்யும் பொருளாதார வகையைச் சார்ந்த, அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லாத பணிகளும் ஐக்கிய அமெரிக்காவில் அவர்கள் உற்பத்தி செய்யும் பணிகளும் ஒரே மாதிரியானவையல்ல என்பது உண்மைதான்.

ஆனல், ஐக்கிய அமெரிக்காவில் இல்லத்து நடவடிக்கையின் கணிசமான பகுதியாக அப் பணிகள் உள்ளன என்பதனை மறுக்கமுடியாது. உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவில் துவைத்தல், துப்புரவு செய்தல், கூட்டிப் பெருக்குதல், சமைத்தல், சலவை செய்து பெட்டிபோடுதல் போன்ற நடவடிக்கைகளை வீட்டுத் தலைவியர்கள் செய்கின்றனர். உண்மையில், பாதி நிலப்பிரபுத்துவ சமூகக் கட்டமைப்புகள் உள்ள வளர்ச்சி குறைந்த நாடுகளைவிட, உயர் வருமான மட்டங்களிலுள்ளவர்கள் பணம் கொடுத்துப் பணியாட்களை வேலைக்கமர்த்தும் நிலையுடைய வளர்ச்சி குறைந்த நாடுகளைவிட, ஐக்கிய அமெரிக்காவில் சில வருமானப் பிரிவினரிடையே மேற் குறித்த பணிகள் மேலும் அதிகமாக நிலவுகின்றன. மேலும், தொழில் வளர்ச்சியின் இயல்பும் அளவும், அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லாத பணிகளை இல்லத் தொழில்கள் உற்பத்தி செய்வதனைச் சாத்தியமாக்குகிறது; சிலவற்றில் அவசியமாக்குகிறது. இத்தகைய பணிகள் வர்த்தக நடவடிக் கைகளில் இடம் பெற்றிருந்த போதிலும், இல்லத்தொழில்கள் இவற்றை உற்பத்தி செய்வதனைத் தொழில் வளர்ச்சி சாத்திய மாக்குகிறது; அவசியமாக்குகிறது. இவ்வகையைச் சார்ந்த பணிகளைக் குறிக்கும் உதாரணங்கள் சிலவற்றைத் தரலாம். காரோட்டுதல், வீட்டினைத் திருத்தமாகத் திரும்பக் கட்டுதல், பின்னல்வேலை செய்தல், வீட்டில் தையல்வேலை செய்தல், துணி மணிகளைத் தைத்துச் சரிசெய்தல், வீட்டிற்கு வர்ணம் பூசுதல்,

தட்டுமுட்டுச் சாமான்களைச் சரிசெய்தல் இன்னோரன்ன பணிகளை எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். இல்லத் தொழில்கள்மூலம் உற்பத்தியாகும், அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லாத பணிகளை நாட்டு வருமானக் கணிப்புகளில் சேர்க்காமையானது தொழில்வள மிகுந்த நாடுகளுக்கும் சரி, வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கும் சரி முக்கியத்துவம் உடையதே என்பதனை நான் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றேன். எனவே, தொழில்மயமான நாடுகளின் உண்மை வருமானத்துடன் ஒப்பிடுகையில், அப் பணிகளை விலக்கியமையானது வளர்ச்சி குறைந்த நாடுகளின் உண்மை வருமானத்தில் ஏதேனும் தனித்த மதிப்புக் குறைப்பீட்டினை உண்டாக்கிவிடவில்லை. எனவே, நாட்டு வருமானங்கள்பற்றிய ஐ.நா. சபையின் இரண்டாவது அறிக்கை இந்த உண்மையை ஏற்றுக்கொண்டிருப்பதைக் காண நான் மெத்த மகிழ்ச்சியடைகின்றேன்.[12]

'ஒரு நாட்டுப் பொருளாதாரத்தின் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்த உற்பத்தி குறித்துத் தெளிவான முழுப் படம் பிடித்துக் காட்டுவதற்கு என, குடும்பத்தின் இல்லத் தரசிகள் செய்யும் பணம் பெறாத பணிகளையும் ஏனைய உறுப்பினர்கள் ஆற்றும் பணம் பெறாத பணிகளையும் நாட்டு வருமானக் கணக்கீட்டில் சேர்க்கவேண்டும் என்று விவாதிக்கப் படுகிறது. இப் பணிகளைச் சேர்த்தலானது, நாடுகளுக்கிடையே ஒப்பிடுதலை எவ்வாறு பாதிக்கும் என்பதனை முன்கூட்டியே தெரிந்துகொள்ளுதல் எளிதன்று. [பணம் பெறும் வேலைக்காரர்கள் கிடைக்காத மிகவும் வளர்ச்சியுற்ற நாடுகளில் இல்லத்தரசிகளின் பணம் பெறாத பணிகள் கணிசமான அளவுக்கு இருப்பன. இப் பணிகளுடன், நாட்டு வருமானத்தின் வழக்கமான இலக்கணத்தில் சேர்க்கப்படாத இனங்களாகிய சொந்தக் காரினை ஓட்டுதல் அல்லது சொந்த வீட்டினைச் செப்பனிடுதல்போன்ற பணிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.'] (பகர வளைவிற்குள் இருப்பவை என்னுடையவை).

நாடுகளுக்கிடையே தேசிய உண்மை வருமானங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் விவாதங்களில், வளர்ச்சி குறைந்த நாடுகளில் வீட்டுத் தலைவியரின் பணம் பெறாத பணிகளை ஒதுக்கிவிட்டமைபற்றிய மாயையினை இனி யாரும் கிளப்ப மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

[12] 'நாட்டு வருமானப் புள்ளிவிவரங்கள், 1938-1948', op. cit., பக்கம் 16.

எனினும், அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லாத முக்கியப் பணி ஒன்று நாட்டு வருமானங்களிரண்டிலிருந்தும் விலக்கப் பட்டுள்ளன. இவ்வாறு விலக்கப்பட்டமையானது, ஒரு நாட்டு வருமானத்தைவிட இன்னொரு நாட்டு வருமானத்தைப் பொறுத்த விஷயத்தில், உண்மை வருமானத்தினைக் குறைத்து மதிப்பீடு செய்திடும் நிலையை உறுதியாக உண்டாக்கியுள்ளது. ஐ.நா. சபையின் பணம்சாரா இனங்களின் அட்டவணையில் மூன்றாவது இனமாக வரும், நீடித்து உழைக்கும் நுகர்ச்சிப் பண்டங்களின் பணிகளையே நான் குறிப்பிடுகின்றேன்.

நீடித்து உழைக்கும் நுகர்ச்சிப் பண்டங்கள் தொடர்ச்சி யான திருப்தியினை அளிக்கின்றன. எனவே, அவை பொருளா தார நலனுக்கும் நாட்டு உண்மை வருமானங்களுக்கும் ஏற்புடையனவாக உள்ளன. இந்த உண்மையைப் பொறுத்த வரையில் கிஞ்சித்தேனும் சந்தேகமில்லை. தொழில்மயமான நாடுகளில், நீடித்து உழைக்கும் நுகர்ச்சிப் பண்டங்களின் உற்பத்தி, நாட்டு உற்பத்தியில் கணிசமான பகுதியாக இருக்கும். நுகர்வோரிடத்து இத்தகைய பண்டங்களின் கையிருப்புத் தொடர்ந்து பெருகிக்கொண்டே போகிறது. டாக்டர் மார்கரட் ரீடு (Dr. Margaret Reid) குறிப்பிட்டது போல, நீடித்துழைக்கும் துய்ப்புப் பண்டங்களின் அட்ட வணையில் முக்கியமாகத் தட்டுமுட்டுச் சாமான்கள், உபகரணம், கார்கள் முதலானவைகள்மட்டுமே இடம் பெற்றிருந்த போதிலும், 'நீடித்துழைக்கும் நுகர்ச்சிப் பண்டங்களின் வளர்ச்சி வீதம் 1879-ல் முடிந்த பண்டங்களின் மதிப்பில் 9.6 சதவீதத்திலிருந்து 1937-ல் 18.1 சதவீதத்திற்கு உயர்ந்து விட்டது.'[18] தொழில்மயமான நாட்டின் தேசிய உண்மை வருமானத்திற்கும், வளர்ச்சி குறைந்த நாட்டின் தேசிய உண்மை வருமானத்திற்குமிடையில் உள்ள வேற்றுமைக்கு முக்கியமான காரணங்களில் ஒன்று எதுவெனில், தொழில் மயமான நாடு, நீடித்துழைக்கும் நுகர்ச்சிப் பண்டங்களின் இருப்பின் பணிகளிலிருந்து கணிசமான அளவுக்கு வருமா னத்தை ஈட்டுகிறது என்பதேயாம். இதில் ஐயமில்லை. அப் பண்டங்களை மூலதன உபகரணமாகக் கருதுவதனால் ஏற்படும் சரிசெய்யும் செலவுகளைப்பற்றியும் தேய்மானச் செலவுகளைப் பற்றியும் கணக்கெடுத்தாலுங்கூட, அவற்றின்மீது ஏற்றிச் சொல்லப்படும் மதிப்பானது நிச்சயமானதாகவும் முக்கியத்

[18] மார்கரட் ஜி. ரீடு, 'பணம் சாரா வருமானத்தின் பகிர்வு' (Distribution of Nonmoney Income), வருமானத்திலும் செல்வத்திலும் ஆராய்ச்சி கள், வால்யூம் 13, 1951, பக்கம் 128.

துவம் உடையதாகவும் இருக்கும் என்று நான் எண்ணுகிறேன். நாடுகளுக்கிடையில் ஒப்பிடுதல் துறையிலுள்ள நாட்டு வருமான மதிப்பீட்டாளர்கள், நாட்டு உண்மை வருமானங்களை ஒப்பிடுகையில், வீட்டுத் தலைவியரின் பணிகளைச் சேர்க்காமையால் ஏற்படுவதாகக் குறை கூறப்படும் விளைவினை உடனே நோக்குகிறார்கள்; ஆனால், நாடுகளிடையே உண்மை வருமான ஒப்புமையில் நீடித்துழைக்கும் நுகர்ச்சிப் பண்டங்களின் பணிகளைச் சேர்க்காமையின் முக்கியத்துவத்தை அம் மதிப்பீட்டாளர்கள் கவனிப்பதில்லை. உண்மையில் இந்த நிலை அதிசயிக்கத்தக்கதே. மிகவும் அதிகமாகத் தொழில்மயமான நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, தொழில்மயமான நாடுகளிலும்கூட நீடித்துழைக்கும் நுகர்ச்சிப் பண்டங்களைச் சேர்க்காமை நாட்டு வருமான மதிப்பீட்டினைக் குறைத்து விட்டது. தொழில்மயமான நாடுகளின் தேசிய உண்மை வருமானங்களையும் வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய உண்மை வருமானங்களையும் ஒப்பிடும்பொழுது, இந்த உண்மை நன்கு தெரிகிறது. எனவே, நாட்டு வருமானங்கள் பற்றி ஐ.நா. சபை அறிக்கையின் அடுத்த பதிப்பில் இக் கருத்தினை ஏற்றுக்கொள்ளும்படி டாக்டர் டார்க்சென் (Dr. Darksen) அவர்களைப் பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

பொதுக் கட்டடங்களின் நிகர வாடகை மதிப்பினைச் சேர்க்காமையின் ஒப்புமையிலும் கிட்டத்தட்ட அதே மாதிரியான விளைவே ஏற்படுகிறது. இங்கு மறுபடியும் சிறப்பான ஒரு காரணி பல்வேறு நாடுகளின் தேசிய உண்மை வருமானங்களில் வேற்றுமையினை உண்டாக்கியிருக்கிறது. பொதுக் கட்டடங்கள் சந்தேகமின்றிப் பொருளாதார நிறைவுகளைத் தொடர்ச்சியாக அளிக்கின்றன. எனவே, அக் கட்டடங்கள் பொருளாதார நலனையும் நாட்டு உண்மை வருமானத்தையும் வழங்குகின்றன. அப் பொதுக்கட்டடங்களைப் பாதுகாக்கும் செலவு, அக் கட்டடங்களினால் கிடைக்கும் பணிகள்மீது ஏற்றிச் சொல்லப்படும் மதிப்பிற்கு ஈடு செய்வதாக இல்லை. அக் கட்டடங்களின்மூலம் கிடைக்கும் வருமானத்திலிருந்து ஏற்படும் மீதத்தினை நடப்பு நாட்டு வருமானக் கணக்கீடுகளில் சேர்க்கவில்லை என்பது நிச்சயமே. தொழில்மயமான நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகள் முதலியவற்றின் நாட்டு வருமானங்களிலிருந்து கட்டட வருமான வீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையே. உண்மை வருமானத்தின்மீது ஏற்படும் விளைவினைப் பொறுத்தவரையில், தொழில்மயமான நாடுகளை

விட வளர்ச்சி குறைந்த நாடுகளில் மேற்குறித்த நீக்கமானது குறைந்த முக்கியத்துவம் உடையதாகும். எனவே, முக்கியமாகத் தொழில்மயமான நாடுகளுக்கும் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குமிடையில் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, நாடுகளுக்கு இடையில் தேசிய உண்மை வருமானங்களை ஒப்பிடுதலைக் கட்டுப்படுத்தும் காரணியாக வருமான வீதம் உள்ளது என்பதனை அவசியமாகக் குறித்துக்கொள்ள வேண்டும்.

தொழில்மயமான நாடுகளின் தேசிய வருமானங்களில் சேர்க்கப்பட்ட பணிகள் வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய வருமானங்களில் சேர்க்கப்படவில்லை என்றும், அதற்குக் காரணம், வளர்ச்சி குறைந்த நாடுகளில் அப் பணிகள் பண வட்டத்திற்கு அப்பால் நிகழ்வதே என்றும் சில வேளைகளில் கருதப்பட்டது. இவ்வாறுகப் பின்வருமாறு குறிப்பிடப் பட்டுள்ளது: ‘தொழில்மயமான நாடுகளில் வியாபார நோக்குடன் நடத்தப்பெறும் கலாசாரப் பொழுதுபோக்கு நடவடிக்கைகளையும் ஏனைய நடவடிக்கைகளையும் வளர்ச்சி குறைந்த நாடுகளில், குறிப்பாகக் கிராமப் பிரதேசங்களில் பண வட்டத்திற்கப்பால் மக்கள் நிகழ்த்திக் காட்டுகின்றனர்; ஆனல், அந்த நடவடிக்கைகளிலிருந்து பணவருமானங்கள் கிடைப்பதில்லை.’[14] உண்மையில் தொழில்மயமான நாடுகளில், படித்த, ஒழுங்காக அமைக்கப்பெற்ற, நகர்மயமான சமூகங்களில் பண வட்டத்திற்கப்பால் பெருமளவிற்கு இத்தகைய நடவடிக்கைகளை மக்கள் மேற்கொண்டுள்ளனர். ஆனல், வளர்ச்சி குறைந்த நாடுகளில் இத்தகைய நடவடிக்கைகளை வியாபார நோக்குடன் மக்கள் மேற்கொண்டுள்ளனர். தொழில்மயமான நாடுகளில் கலாசாரப் பணிகளும், பொழுதுபோக்குப் பணிகளும், இவைபோன்ற மற்றப் பணிகளும் பெரும் அளவிற்கு நிகழ்கின்றன. இப் பணிகள், வர்த்தக நடவடிக்கைகளிலும் சிறப்புத் தேர்ச்சி உள்ள நடவடிக்கைகளிலும் ஓரளவிற்கு இடம் பெற்றுள்ளன. இன்னும் இப் பணிகள் பண வட்டத்திற்கு வெளியே உறுதியுடனும் திறமையுடனும் நிகழும் நடவடிக்கையிலும் ஓரளவிற்கு இடம் பெற்றுள்ளன. தொழில்மயமான நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகள் ஆகியவற்றின் தேசிய உண்மை வருமானங்களுக்கிடையில் உள்ள வித்தியாசத்திற்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்று, தொழில்மயமான நாடுகளில் நிகழும் பணிகளின்

[14] ‘வளர்ச்சி குறைந்த நாடுகளில் தேசிய வருமானத்தின் பருமமும் பகிர்வும்’, ஐ. நா. சபையின் பொருளாதார, சமூக கவுன்சில், பாரா 19, பக்கம் 8.

பெரும் அளவுதான். எனவே, இவ்வகையைச் சேர்ந்த, அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லாத நடவடிக்கைகளை நீக்கியமை, வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய உண்மை வருமானங்களைக் குறைத்து மதிப்பிடுவதாகும் என்பதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். அதுபோலவே, இவ்வகையைச் சார்ந்த, அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லும் நடவடிக்கைகளை அல்லது வர்த்தக நடவடிக்கைகளைச் சேர்த்தமையானது, தொழில்மயமான நாடுகளின் தேசிய உண்மை வருமானத்தை உயர்த்தி மதிப்பிடுவதாகும் என்பதையும் நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

இவ் விவாதத்தின் இப் பகுதியைத் தொகுத்துச் சொல்ல வேண்டுமெனில், அதாவது, தொழில்மயமான நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகள் ஆகியவற்றின் தேசிய வருமானங் களின் கணக்கீடுகளில் அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லாத பண்டங்களும் பணிகளுமாகிய உற்பத்தியின் முக்கியத்துவத் தைப்பற்றித் தொகுத்துச் சொல்லவேண்டுமெனில், தொழில் மயமானதாக இருப்பினும் சரி, அல்லது வளர்ச்சி குறைந்த தாக இருப்பினும் சரி, ஒவ்வொரு பொருளாதாரத்திலும் பணம்சாரா இனங்கள் உள்ளன எனலாம்; அவற்றில் சில, நாட்டு வருமானக் கணக்கெடுப்புகளில் ஏற்றிச் சொல்லப்படும் மதிப்பீடு உடையனவாக உள்ளன எனலாம்; வேறு சிலவற்றினை இவ்வாறு சேர்க்கவில்லை எனலாம். தொழில் மயமான நாடுகளில் சேர்க்கப்பட்ட இனங்கள் வளர்ச்சி குறைந்த நாடுகளிலும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால், வளர்ச்சி குறைந்த நாடுகளில் அவை, புள்ளிவிவர ரீதியான, இன்னும் கோட்பாட்டு ரீதியான தொல்லைகளுக்கு—ஏற்றிச் சொல்லி மதிப்பிடுதலிலேயே எப்பொழுதும் உடனிருக்கும் தொல்லை களுக்கு—ஆளாகியுள்ளன. இவ்வாறு சேர்க்கப்படாத இனங்கள் இவ்விரு நாடுகளிலும் ஒரேமாதிரியானவைகளே. அவை பின்வருமாறு: (1) நேரடியான துய்ப்பிற்கோ அல்லது கடைசி வேலைகளுக்கோ தேவைப்படும் இல்லத் தொழில் சார்ந்த பணிகளின் உற்பத்தி; (2) நீடித்துழைக்கும் நுகர்ச்சிப் பண்டங்களின் பணிகள்; (3) பொதுக்கட்டடங்களின் பணிகள் அல்லது, சமூகத்திற்குச் சொந்தமான நீடித்துழைக்கும் நுகர்ச்சிப் பண்டங்களின் பணிகள். தொழில்மயமான நாடு களின் தேசிய உண்மை வருமானங்களுடன் ஒப்பிடும்பொழுது, மேலே குறிப்பிட்ட முதல் இனத்தை நீக்கியமையானது, வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய உண்மை வருமானங் களைக் கணிசமான அளவிற்குக் குறைத்து மதிப்பீடு செய்து

விடாது. ஆனால், மாறாக, ஐக்கிய அமெரிக்காபோன்ற மிகவும் தொழில்மயமான நாட்டுடன் வளர்ச்சி குறைந்த நாடான இந்தியாவினைக் குறிப்பாக ஒப்பிட்டுப் பார்த்தால், மேற்குறித்த முதல் இனநீக்கம் நேர்மாறான விளைவினைக்கூட உண்டாக்கக் கூடும். வளர்ச்சி குறைந்த நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது, இரண்டாவது இனத்தையும் மூன்றாவது இனத்தையும் நீக்கி யமையானது, தொழில்மயமான நாடுகளின் உண்மை வருமானங்களை நிச்சயமாகக் குறைத்து மதிப்பீடு செய்துள்ளது எனலாம். எனினும், இவ் வித்தியாசத்திற்குப் புள்ளிவிவர ரீதி யான பருமஅளவினைக் கொடுப்பது கடினமே. வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, தொழில்மயமான நாடு எந்த அளவுக்குத் தொழில் மயமாகி யிருக்கிறதோ அந்த அளவுக்கு மேற்குறிப்பிட்ட வித்தியாசமும் அதிகமாக இருக்கும்.

நிகர வருமானத்திற்கு எதிரான மொத்த வருமானம்

நாட்டு உண்மை வருமானங்களின் ஒப்புமைமீது, தேசிய வருமானக் கணக்கீட்டில் பணம்சாரா இனங்களின் முக்கியத் துவம்பற்றி விவாதித்தாகிவிட்டது. அடுத்த கேள்வி எந்த எந்த இனங்களைச் சேர்க்கவேண்டும் என்பதேயாகும். தொழில் மயமான நாடுகளிலும் வளர்ச்சி குறைந்த நாடுகளிலும் சேர்க்கப்பட்ட பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் தொகுப்பு எந்த அளவிற்கு மொத்தக் கணியத்திற்குப் பதிலாக நிகரக் கணியத்தினைக் (quantity) குறிப்பதாகும்? இவ்விருவகைத்தாய பொருளாதாரங்களிலும் கணக்கிடச் சேர்த்திடும் பிரச்சினை (problem of netting) ஒரே மாதிரியானதுதானா? அல்லது, நாட்டு உண்மை வருமானங்களை ஒப்பிடவேண்டி ஏதேனும் தனித்த கழிப்புகள் இதிலாவது அல்லது அதிலாவது செய்ய வேண்டியது அவசியம்தானா?

சரியான அல்லது ஐயந்திரிபற்ற பதில் கிடைக்கப்பெறாத, சிக்கல் நிறைந்த இத்தகைய கேள்விகளை விட்டுவிட்டு இவற்றைப்பற்றி ஆராயுமுன்னர், வேறு சில இனங்களைக் கணக்கிட்டுச் சேர்த்தல்பற்றி (netting) ஆராய்ந்து முடிவு எடுப்பது பயனுடையதாகவிருக்கும். இவ்வாறாக, தேய்மானத் தினால் செய்த கழிப்பானது, எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியாக இல்லை. தேய்மானச் சரியீட்டுத் தொகை கொடுக்கப் பெற்ற இனங்களாக இருப்பினும் சரி, அல்லது சரியீட்டுத் தொகைகளைக் கணக்கிடும் வீதங்களாயினும் சரி, தேய்மானத்

திற்காகச் செய்த கழிப்பானது ஒரேமாதிரியாக இல்லை. தொழில்மயமான நாடுகளிலும்கூட இதுவே உண்மையாகும். முக்கியமாக, நிலத்தில் தேய்மானத்தை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது ஏற்றுக்கொள்ளாதிருத்தலைப் பொறுத்தவரையில், வளர்ச்சி குறைந்த நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது, தொழில் மயமான நாடுகளில் மேலே குறிப்பிட்டுள்ளதில் இன்னும் அதிக உண்மை இருக்கிறது எனலாம். இப் பொருள் குறித்து ஒப்பிட்டுக் காட்டும் ஆராய்ச்சி செய்தால் பயனளிக்கும் என்ற போதிலும், நாட்டு உண்மை வருமானங்களை ஒப்பிடுவதில் இக் காரணத்தினால் தனித்த வேற்றுமைகள் ஏற்படுமா என்பதுபற்றி நான் ஐயுறுகின்றேன்.

இயற்கை வளங்களில், குறிப்பாகச் சுரங்கங்களில், இருப்புக் குறைதலுக்குச் சரியீடு செய்யும் பிரச்சினை உள்ளது. இதனைப் பொறுத்தவரையில் கழிப்பு செய்யவேண்டியது அவசியமில்லை என்று புள்ளியியல் நிபுணர்கள் முடிவெடுத்துள்ளனர். எனவே, தொழில்மயமான அல்லது வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேச வருமானங்களிலிருந்து மேற்குறித்த இருப்புக் குறைதலுக்குக் கழிப்புகள் ஏதும் செய்யவில்லை. எனினும், தேசவருமானத்தின் நிகரத்தன்மைமீது (netness) அதன் விளைவு எல்லா நாடுகளிலும் ஒரேமாதிரியாக இருக்கும் என்று பொருள் கொள்ளக்கூடாது; பண்டங்களும் பணிகளுமான நாட்டு உற்பத்தியில் சுரங்க நடவடிக்கையின் முக்கியத்துவத்தைப் பொறுத்ததாகும் அது. தொழிலிலிருந்த மொத்த ஜனத்தொகையில் சுரங்கத் தொழிலில்மட்டும் ஈடுபட்டோரின் எண்ணிக்கை 1948-ல் ஐக்கிய அமெரிக்காவில் 1.7 சதவீதமாகவும், இந்தியாவில் 0.4 சதவீதமாகவும் இருந்தது. அதே ஆண்டில் நாட்டு வருமானத்தில் சுரங்கத் தொழிலின் பங்கு, ஐக்கிய அமெரிக்காவில் 2.2 சதவீதமாகவும், இந்தியாவில் 0.7 சதவீதமாகவும் இருந்தது. உண்மையில் இதனைப் பொறுத்தவரையில், சுரங்க இருப்புக் குறைவிற்குச் சரியீடு செய்தலை ஏற்காமையால், இந்தியாவுடன் ஒப்பிடும்பொழுது ஐக்கிய அமெரிக்காவின் வருமானம் கூடுதலாகவே மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனலாம். எனினும், வேறு சில தொழில் மயமான நாடுகளும் வளர்ச்சி குறைந்த நாடுகளும் இருக்கின்றன; அவற்றில் வளர்ச்சி குறைந்த நாடுகளில் சுரங்கத் தொழில் முக்கியத்துவம் உடையதாக இருக்கிறது; எனவே, அத்தகைய நாடுகளில் உண்மை வருமானம் கூடுதலாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனலாம். எனவே, நாட்டு உண்மை வருமானங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதில், நாட்டு

வருமானங்களில் எந்த அளவுக்கு சுரங்கத்தொழிலின் பங்கு உள்ளது என்பதனையும், அதன் காரணமாக எந்த அளவுக்கு சுரங்கத் தொழில், மதிப்பீடுகளில் மொத்தத் தன்மையின் (grossness) கூறினைச் சேர்த்திருக்கிறது என்பதனையும் கணக்கில் வைத்துக்கொள்ளவேண்டியது முக்கியமாகும்.

சில நாடுகளின் தேசிய வருமானக் கணக்கீட்டில் இன்னும் ஓர் இனம் சேர்ந்துள்ளது. ஆனால், மற்ற நாடுகளின் தேசிய வருமானக் கணக்கீட்டில் அது சேரவில்லை. சோர்வினை ஊட்டும் அந்த இனம் எதுவெனில், கண்டுபிடிப்புகளின் (inventories) பருமத்திலும் மதிப்பிலும் ஏற்படும் மாற்றங்களைக் குறிக்கும் ஒன்றாகும். வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய வருமானக் கணக்கீடுகளில் அந்த இனத்தைச் சேர்க்காததற்குக் காரணம், கோட்பாட்டில் உள்ள எந்த வேறுபாட்டினாலு மன்று; குறிப்பாகப் புள்ளிவிவரம் கிடைக்காமையால்தான். உதாரணமாக, இந்தியாவில் அண்மையில் எடுக்கப்பட்ட நாட்டு வருமான மதிப்பீட்டில் அந்த இனம் + ஆகவோ அல்லது — ஆகவோ இடம் பெறவில்லை. ஆனால், ஐக்கிய அமெரிக்காவின் நாட்டு வருமான மதிப்பீட்டில் அது இடம் பெற்றுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் உண்மை வருமானத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இந்தியாவின் உண்மை வருமானத்தைக் குறைத்தோ அல்லது மிகைப்படுத்தியோ மதிப்பீடு செய்யும் விளைவினை அது உண்டாக்குகிறதா என்பதனைக் காரணகாரிய அடிப்படையில் நிர்ணயிப்பது மிகவும் கடினமே. ஆனால், அது இந்த ஒப்பமைவைத் தகுதி பெறச் செய்கிறது என்பது தெளிவே. இந்த இடர்ப்பாடு, வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களில் நெடுங்காலத்திற்கு இருந்தே தீரும். வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களின் இயல்பின்படி, கண்டுபிடிப்புகளின் அளவு அல்லது மதிப்புபற்றிய புள்ளிவிவரத்தினைச் சேகரிப்பதில் உள்ள தொல்லை தொடர்ந்து இருக்கும்.

தொழில்மயமான நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகள் ஆகியவற்றின் தேசிய வருமானங்கள் இரண்டும் நிகரக் கணியங்களைக் (net quantities) குறிக்கின்றனவா என்பதைக் காண, அவ் வருமானங்களில் இடம் பெறும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் தொகுப்பிலிருந்து தனித்த கழிப்புகள் ஏதேனும் செய்யவேண்டியது அவசியம்தானா என்ற கேள்வியை நான் இப்பொழுது எடுத்துக்கொள்கிறேன். வளர்ச்சி குறைந்த நாடுகளைவிடத் தொழில்மயமான நாடுகளில், தேசிய உற்பத்தியின் மிகப்பெரும் பங்கு பணிகளையே சாரும் என்பது

நன்கு தெரிந்த உண்மையாகும். முக்கியமாக, பகிர்வினையும் அரசாங்கத்தினையும் பொறுத்த நடவடிக்கைகளின் மிகப்பெரும் பங்கே சாதரணமாக இதற்குக் காரணமாகும். அடுத்து வரும் அட்டவணை 1948-ல் இந்தியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் நிலையினை வெளிப்படுத்துகிறது.

இவ்வாறாக, 4 முதல் 7 முடிய உள்ள இனங்கள் சார்ந்த பணிகள் துறை, ஐக்கிய அமெரிக்காவில் தொழிலில் ஈடுபட்டு இருந்த ஜனத்தொகையில் 50 சதவீதத்தினரையும், நாட்டு வருமானத்தில் 50.4 சதவீதத்தினையும் கொண்டிருந்தது; ஆனால், இந்தியாவில் முறையே 17.8 சதவீதத்தினரையும் 31.8 சதவீதத்தையும் பணிகள்துறை கொண்டிருந்தது. முக்கியமாக நாடுகளுக்கிடையில் தேசிய உண்மை வருமானங்களை ஒப்பிட்டுப் பார்த்தலைப் பொறுத்தவரையில், குறிப்பாக வர்த்தகம், கடத்துதல் (transport), போக்குவரத்து, அரசாங்கம் முதலான 4 முதல் 6 முடிய உள்ள இனங்களைக் கொண்ட பணிகள் துறைகளிலிருந்து முகிழ்க்கும் இந்த வருமானம் அனைத்தும் நாட்டு வருமானத்தை உண்மையில் பெருக்குகின்றனவா என்ற கேள்வி எழுகிறது. ஒரு கோணத்திலிருந்து பார்க்கும் பொழுது, வளர்ந்த பொருளாதாரத்தில் பணிகள் மிகப்பெரும் பங்கு வகிக்கிறது என்பது தெளிந்த உண்மையாகும். நாட்டு உண்மை வருமானங்களில் நிலவும் வேற்றுமைகளை நிர்ணயிப்பதற்கு நாட்டு வருமானங்கள் இரண்டிலும் பணித்துறைகளைச் சேர்த்தமை தேவைதான் என்பதும் தெளிவான உண்மையாகும். ஆனால், ஐக்கிய அமெரிக்காவில் 4 முதல் 6 முடிய உள்ள இனங்கள் சார்ந்த பணிக்கூறின் மிகப்பெரும் பருமத்தில் வருமானக்கூறு அன்றி, செலவுக்கூறினைக் குறிக்கும் ஒரு குறைந்தபட்சப் பகுதியாவது இல்லை என்று சொல்ல முடியுமா? எனவே, நாட்டு உண்மை வருமான ஒப்பீடுகளில் அதனைக் கழித்து அதன் பயனைச் செல்லத்தக்கதாக்க வேண்டும். இக் கேள்விக்கு உடன்பாடான பதிலினைப் பேராசிரியர் குஸ்னட்ஸ் வழங்கியுள்ளார். நாடுகளுக்கிடையே செய்யும் ஒப்பீடுகளைச் செல்லத்தக்கதாக்குவதற்காக, அப் பேராசிரியர் அநேக யோசனைகளை வழங்கியுள்ளார். அவரது வாசகம் பின்வருமாறு:

'வரிசையாக மூன்று யோசனைகள் உள்ளனவாகத் தோன்றுகிறது. முதலில், தொழில்சார் வசதிகளாகிய பணிகளுக்குத் துய்ப்போர் தரும் செலுத்துகைகளை (payments) நிச்சயமாகக் குறிக்கும் நடவடிக்கைகளை இருவகையான நாடுகளின் மதிப்பீடுகளிலிருந்தும் நீக்கவேண்டும். பண ஈடு

செய்து வேலைக்கு மாற்றுதலும், வேலையிலிருந்து மாற்றுதலும், சங்கங்களுக்குக் கொடுக்கப்படும் செலுத்துகைகளும், வேலை ஏஜென்ஸிகளுக்குக் கொடுக்கப்படும் செலுத்துகைகளும் தெளிவான உதாரணங்களாகும். வர்த்தகத்துறையினர் பகுத்துள்ள வியாபாரப் பணிகள் அனைத்தையும் பாங்குக் கட்டணங்கள், தரகுக் கட்டணங்கள் முதலான துய்ப்பாளர்கள் செலவீட்டின் மதிப்பீட்டில் ஒருவர் சேர்க்கக்கூடும். இரண்டாவதாக, தொழில்மயமான சமூகங்களில் நகர வாழ்க்கையின் தொல்லைகளினால் துய்ப்பாளர் பணிகளின் செலவுகள் மிகுதியாக இருக்கும்பொழுது, கிராமிய சமூகங்களில் இத்தகைய பணிகளை அவற்றின் செலவுகளுடன் ஒப்பிட்டு மறுமதிப்பீடு செய்வது வழக்கில் உள்ளது. முக்கியமாக ரொக்கத்தின் அளவும் குடியிருப்பில் ஏற்றிச் சொல்லப்படும் வாடகையின் அளவும் ஓங்கி உள்ளன. இறுதியாக, துய்ப்பாளர்களுக்கு நேரடியான பணிகள் என்று பகுக்கப்படும் அரசாங்க நடவடிக்கைகளைமட்டும் நாட்டு வருமானத்தில் சேர்த்துக்கொள்வதானது தவிர்க்க முடியாத ஒன்று எனத் தெரிகிறது. புள்ளிவிவரத் தொல்லைகள் கடுமையாக உள்ளன என்பதைத் தெரிந்தே மிக முக்கியமானதும் தவிர்க்க முடியாததுமான நடவடிக்கை இவ்விடத்தில் வலியுறுத்தப்படுகிறது. ஆனால், துய்ப்போரிடத்துச்சென்று அடையும் பண்டங்களின் உண்மை ஓட்டத்தின் அளவைகளாகவோ அல்லது மூலதன இருப்புடன் கலந்திடும் பண்டங்களின் உண்மை ஓட்டத்தின் அளவைகளாகவோ நாட்டு வருமானப் புள்ளிவிவரங்கள் அமைய வேண்டுமெனில், அரசாங்க நடவடிக்கைகள் அனைத்தையும் இறுதி உற்பத்தியாகக் கருதி, பெருமளவிற்கு இரட்டிப்பு வேலை உண்டாக்கியிருப்பதை நீக்க வேண்டும். பல்வேறு காலங்களில் நாடுகளுக்கு இடையே ஒப்புமை செய்து காட்ட, இந்த நடவடிக்கையை எடுக்கவேண்டியது முக்கியமும் அவசியமும் ஆகும். தொழில்துறை சமூகங்களுக்கும் தொழில் துறைக்கு முந்திய நிலையிலுள்ள சமூகங்களுக்கும் இடையில் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் அந்த நடவடிக்கையினை எடுக்க வேண்டியது முக்கியமே.'[15]

பேராசிரியர் குஸ்னெட்ஸ் அவர்களின் கூற்றின்மீது கணிசமான அளவிற்கு அனுதாபமும் மதிப்பும் கொண்டுள்ளேன். எனினும், அவர் குறிப்பிடும் பணிகள், அவற்றின்

[15] சைமன் குஸ்னட்ஸ், 'நாட்டு வருமானமும் தொழில் துறைக் கட்டமைப்பும்', 'அனைத்துலகப் புள்ளிவிவர இயலின் மாநாடுகளின் நடவடிக்கைகள்', 1947, வால்யூம் V, பக்கம் 219.

அட்டவணை I

(மில்லியனில்)

உருப்படிகள்	தொழிலில் உள்ள ஜனத்தொகையின் பகிர்வு			
	இந்தியா	சதவீதம்	அமெரிக்கா	சதவீதம்
(1)	(2)	(3)	(4)	(5)
1. விவசாயம் ...	90.5	68.2	7.4	12.5
2. சுரங்கம் ...	0.6	0.4	1.0	1.7
3. பொறித்தொழில் ...	18.1	13.6	21.1	35.8
4. வர்த்தகம், கடத்துதல், போக்குவரத்து ...	10.7	8.1	17.6	29.9
5. உத்தியோகங்களும் பரந்த கலைகளும்	5.0	3.8	2.7	4.5
6. அரசாங்கப் பணிகள்	3.6	2.7	6.2	10.5
7. வீட்டுப் பணிகள் ...	4.2	3.2	3.0	5.1
மொத்தம்	**132.7**	**100.0**	**58.9**	**100.0**

—	மூலத்திலிருந்து நாட்டு வருமானம்			
	இந்தியா	சதவீதம்	அமெரிக்கா	சதவீதம்
	(6)	(7)	(8)	(9)
1. விவசாயம் ...	41,500.0	50.1	22,468.0	10.0
2. சுரங்கம் ...	600.0	0.7	4,903.0	2.2
3. பொறித்தொழில் ...	14,400.0	17.4	84,510.0	37.4
4. வர்த்தகம், கடத்துதல், போக்குவரத்து ...	17,000.0	20.5	79,941.0	35.4
5. உத்தியோகங்களும் பரந்த கலைகளும்	3,200.0	3.9	9,928.0	4.4
6. அரசாங்கப் பணிகள்	4,600.0	5.6	17,823.0	7.9
7. வீட்டுப் பணிகள் ...	1,500.0	1.8	6,167.0	2.7
மொத்தம்	**82,800.0**	**100.0**	**225,740.0**	**100.0**

குறிப்பு:—இந்தியாவைச் சார்ந்த 2, 6 பிரிவுகளில் பல்வேறு உருப்படிகளின் புள்ளிவிவரங்கள், 'ஏப்ரல் 1951ஐச் சார்ந்த நாட்டு வருமானக் குழுவின் முதல் அறிக்கை'யின் அட்டவணை 4, பக்கம் 31-லிருந்து எடுக்கப்பட்டன. மேலுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள நாட்டு மொத்த வருமானத்தில் வீட்டுச் சொத்தினின்று கிடைக்கும் வருமானம் சேர்க்கப்படவில்லை. அமெரிக்காவைச் சார்ந்த 4, 8 பிரிவுகளில் வரும் புள்ளி விவரங்கள், ஜூலை 1949-ல் வெளிவந்த 'நடப்பு வியாபாரத்தின் கணக்கெடுப்'பின் 28ஆவது அட்டவணையிலிருந்தும், 13ஆவது அட்டவணையிலிருந்தும் தொகுக்கப்பட்டன.

புள்ளிவிவரங்களைக் கிடைக்கச் செய்வதற்காகவும், இந்தியாவின் புள்ளிவிவரங்களுடன் ஒத்திட்டு பார்ப்பதற்காகவும் பின்வரும் பகுப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

உட்பொருளைப் பொறுத்தவரையில், ஒன்றோடொன்று கலந்து விட்டமையால், அவற்றிலிருந்து தெரியவரும் நிகர வருமானத்திலிருந்து மொத்த வருமானக் கூறுகளைப் பிரிப்பது கடினமாக இருக்கும். உதாரணமாக, நகர வாழ்க்கையின் செலவுகளைக் குறிக்கும் பணிகள்பற்றிய பிரச்சினையை எடுத்துக்கொள்வோம். தொழிலாளியை வேலை செய்யும் இடத்திற்கு ஏற்றிச்சென்று, வேலை முடிந்த பின்னர் அவன் வீட்டிற்குக் கொண்டுவந்து விடுவதற்கு நகரப் போக்குவரத்து அமைப்புப் பயன்படுகிறது. மேலும், இன்பமூட்டும் காரியங்களை நிறைவேற்ற வெளியிடங்களுக்குச் செல்லவும், தன்னுடைய குடும்பத்தினரை வெளியிடங்களுக்குக் குறைந்த செலவில் விரைந்து அழைத்துச் செல்லவும் ஒரு தொழிலாளிக்கு நகரப் போக்குவரத்து அமைப்புப் பயன்படுகிறது. இவ்வாறு, ஒரு துய்ப்பாளன்தான் பெறும் வியாபாரப் பணிகளுக்குப் பாங்குக் கட்டணங்கள், தரகுக் கட்டணங்கள் போன்ற செலுத்துகைகள் செலுத்துவதானது, நகரத் தொழிற்

விவசாயத்தைப்பற்றியும், சுரங்கத் தொழில்பற்றியும் : 'நடப்பு வியாபாரத்தின் கணக்கெடுப்பு' எனும் வெளியீட்டின் அட்டவணைகள் 13, 20-ல் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

பொறிவழித் தொழில்: தொழில் ஒப்பந்தம் செய்துகொண்டு கட்டுதல், பொறிவழித் தொழில் உற்பத்தி, உணவு விடுதிகள், ஏனைய தங்கும் விடுதிகள், வர்த்தக வியாபாரப் பள்ளிகள், பல்வேறு வேலை ஏஜென்சிகள், பல்வேறு சரிசெய்து திருத்தும் பணிகள், கைத் தொழில்கள், திரைப்படங்கள், மத்திய அரசினரின் தொழில்கள், இராஜ்ஜிய அரசாங்கத் தொழில்கள், கீழ்மட்ட வட்டார ஆட்சித் தொழில்கள் ஆகியவற்றின் மொத்தம்.

வர்த்தகம், கடத்துதல், போக்குவரத்து: மொத்த வியாபாரம், சில்லறை வியாபாரம், நிதி, இன்சூரன்சும் உண்மை எஸ்டேட்டும், கடத்துதலும் போக்குவரத்தும், பொதுப் பயன்பாட்டுத் தொழில்கள் முதலியவற்றின் மொத்தம்.

உத்தியோகங்களும் பரந்த கலைகளும்: வியாபாரப் பணிகள், வைத்திய சேவைகளும் இதர சுகாதார சேவைகளும், சட்டத்துறைப் பணிகள், பொறியியல்துறைப் பணிகளும் இதர தொழில் நுட்பத் துறைப் பணிகளும், சமய அமைப்புகள், இலாப நோக்கற்ற உறுப்பினர் அமைப்புகள் ஆகியவற்றின் மொத்தம்.

அரசாங்கப் பணிகள் : மத்திய-பொது அரசாங்கம், சிவிலியன் பணிகள் (வேலை நிவாரணம் தவிர்த்து), இராணுவ வேலை நிவாரணம், இராஜ்ஜிய, கீழ்மட்ட வட்டார, பொது அரசாங்கங்கள், பொது மக்கள் கல்வி, பள்ளி சாரா (வேலை நிவாரணத்தைத் தவிர்த்து) பணிகள், வேலை நிவாரணம் முதலியவற்றின் மொத்தம்.

வீட்டுப் பணிகள் : தனிப்பட்டோர் பணிகள், தனிப்பட்ட வீட்டுத் தொழில்களின் பணிகள் ஆகியவற்றின் மொத்தம்.

'உலகத்தின் பிற பகுதிகளைச்' சார்ந்த அளவினை ஐக்கிய அமெரிக்க நாட்டு வருமானம் ஒதுக்கி வைத்துவிட்டது.

றுறை நாகரிகத்தின் ஒரு நிகழ்ச்சியாகும். தான் மதிக்கும் பணிகளை ஒரு துய்ப்பாளன் அடைவதற்கு நகரத் தொழிற் றுறை நாகரிகத்தில் முடியும்; வேறு சூழ்நிலைகளில் முடியாது. மார்ஷல் குறிப்பிடுவதுபோல, 'தன்னுடைய வாய்ப்புகளி லிருந்தும் சூழ்நிலை இணைவிலிருந்தும் (conjuncture),'[16] நகரத் தொழிற்றுறை நாகரிகத்தைச்சார்ந்த ஒரு நுகர்வோன் பெறும் மிக அதிகமான துய்ப்போன் எச்சப்பாடுபற்றிப் பேராசிரியர் குஸ்னட்ஸ் போதுமான அளவிற்கு விளக்க வில்லை என்று எனக்குப் படுகிறது. வளர்ச்சி குறைந்த நாடுகளின் பிரஜைகள் அந்த அளவிற்குத் துய்ப்போன் எச்சப்பாட்டினை அடையவில்லை என்பதில் சந்தேகமில்லை; எனவே, அந்த எச்சப்பாட்டினை அனுபவிக்கும் தொழில் மயமான நாடுகளின் பிரஜைகளின் உண்மை வருமானத் துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, வளர்ச்சி குறைந்த நாட்டுப் பிரஜைகளின் பணவருமானத்தில் உண்மை வருமான மிகை மதிப்பீடு அடங்கியுள்ளது. உண்மை வருமானங்களில் நிலவும் வேறுபாடு குறித்துப் புள்ளிவிவர ரீதியாக விளக்கம் தருவது அநேகமாக முடியவே முடியாது என்பது உண்மையே. ஆனால், அந்த வேறுபாடு நிலவுகிறது என்பதை மறுக்க முடியாது. இவ்வளவும் குறித்த பிறகும்கூட நான் ஒரு கருத் தினை ஏற்றுக்கொள்ள விரும்புவேன். வளர்ச்சி குறைந்த நாடுகளின் பணிகள், துறைகளுடன் ஒப்பிடும்பொழுது, அதிக மாகத் தொழில்மயமான நாடுகளின் பணிகள், துறைகள் சிலவற்றைப்பற்றிய மதிப்பீட்டில் மொத்தத்தின் கூறு அடங்கியுள்ளது; மதிப்பீட்டில் மொத்த வருமானக் கூறு அடங்கியிருக்கும் அளவிற்குத் தொழில்மயமான நாடுகளின் தேசிய உண்மை வருமானம் மிகைப்படுத்தப் பெறலாம்.

வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய உண்மை வருமானங் களுடன் ஒப்பிட்டுப் பார்க்க, தொழில்மயமான நாடுகளின் தேசிய வருமானங்களிலிருந்து மேற்குறிப்பிட்டதைப் பொறுத்தவரையில் ஏதேனும் தனித்த கழிப்புகள் செய்ய வேண்டும் எனக் கூறுவதற்கு முன்னர், கணிசமான அளவிற்குத் தனித்த பயிற்சியும் ஆராய்ச்சியும் செய்தல் வேண்டும். இத் தகைய ஆராய்ச்சியானது, பேராசிரியர் குஸ்னட்ஸ் குறிப்பிடு கின்ற துய்ப்பாளர்களின் வேலைசார்ந்த செலவுகள், நகர வாழ்க்கையின் பெருகிய செலவுகள், அரசாங்க நடவடிக்கை களில் விளைந்த இடைத்தரப் பண்டங்களின் ஓங்கிய செலவுகள்

[16] ஆல்ஃபிரட் மார்ஷல், 'பொருளாதாரத்தின் கோட்பாடுகள்', எட்டாம் பதிப்பு, புத்தகம் III, அத்தியாயம் VI, பக்கம், 125.

முதலானவற்றில் ஓரளவிற்கு மொத்த வருமானத் தன்மை உள்ளது என்பதை வெளிப்படுத்தும் அதே வேளையில், இத் தகைய செலவுகளால் குறிக்கப்படும் பணிகளில் உண்மை வருமானக்கூறு இருத்தலையும் வெளிப்படுத்துகிறது என்பது நிச்சயம் என்றே நான் உணருகிறேன். இத்தகைய செலவு களைக் குறிக்கும் இனங்கள் இல்லையெனில், உண்மை வருமானக் கூறினைக் காணமுடியாது என்பதையும் நான் நிச்சயமாக உணருகிறேன். எனவே, நாட்டு உண்மை வருமானங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காகவேண்டி, தொழில்துறை நாடுகள், தொழில்துறை நிலையை அடைவதற்கு முந்திய நிலையில் உள்ள நாடுகள் ஆகியவற்றின் தேசிய வருமான மதிப்பீடுகளிலிருந்து மேற்குறிப்பிட்ட உண்மை வருமானக் கூறுகளை அகற்றிவிட வேண்டும் என்ற கருத்தினை நான் ஏற்கத் தயாராக இல்லை. மொத்த வருமானங்களை ஒப்பிட்டுப்பார்க்கும் மட்டத்தினை அடைவதற்குவேண்டி, தொழில்துறை நிலையினை அடைவதற்கு முந்திய நிலையினை அடைந்துள்ள நாடுகளின் தேசிய வருமானங் களின் மேற்குறித்த கூறுகளை அதிகரிக்கவேண்டும் என்று குஸ்னட்ஸ் குறிப்பிட்டுள்ள முறையினை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. உண்மையில், இந்த இரண்டாவது முறை, வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய வருமான மதிப்பீடுகளை முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாக்கிவிடும். அதே நேரத்தில் இவ் விரண்டாவது முறையின் தர்க்கவாத அடிப்படை, நான் முன்பே மறுத்தொதுக்கிய முறையின் தர்க்கவாத அடிப்படையைவிடக் குறைவாக இருக்கும்; அதாவது, இருவகையான நாடுகளின் தேசிய வருமான மதிப்பீடுகளிலிருந்து இத்தகைய கூறுகளை அகற்றிவிட்ட முறையின் தர்க்கவாத அடிப்படையைவிட குஸ்னட்ஸ் குறிப்பிட்ட அவ்விரண்டாவது முறையின் தர்க்க வாத அடிப்படை குறைவாகவே இருக்கும்.

எனினும், தொழில்மயமான நாடுகளின் தேசிய வரு மானங்களில் இதனைப் பொறுத்தவரையில் மொத்தத்தின் கூறு உள்ளது; ஆனால், வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய வரு மானங்களில் மொத்தத்தின் கூறு அதே அளவுக்கு இல்லை. எனவே, இவ்விரு வகையான நாடுகளின் தேசிய உண்மை வருமானங்களில் உள்ள வேறுபாடு, இயல்பாக இருப்பதாகக் கருதப்படும் வேறுபாட்டினைவிடக் குறைவாகவே இருக்கும். வளர்ச்சி குறைந்த நாடுகள் அவற்றின் தேசிய வருமானங்கள் சுட்டிக்காட்டுவதைவிட நன்னிலையில் உள்ளன என்று முடிவு கட்டுவதைவிடத் தொழில்மயமான நாடுகள் அவற்றின் தேசிய வருமானங்கள் சுட்டிக் காட்டுவதுபோல நன்னிலையில் இல்லை

என்று முடிவுகட்டுவதையே நான் ஏற்றுக்கொள்ள முற்படுவேன். வேறுபாடில்லாத வேற்றுமையாக இம்முடிவு இருக்கலாம். உண்மை வருமானத்தை ஒப்பிடும் மட்டங்களைப் பொறுத்தவரையில் B போன்று A மோசமாக இல்லை என்று உரைப்பதற்கும், A போன்று B நன்னிலையில் இல்லை என்று உரைப்பதற்கும் இடையில், பொருளாதார நலனைப் பொறுத்தவரையிலும் அதன் காரணமாக உண்மை வருமானத்தைப் பொறுத்தவரையிலும் உண்மையான வேறுபாடு நிலவுகிறது என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஒப்புமை மட்டங்களுக்குப்பின்னால், மொத்த முழுப்பருமங்கள் மறைந்து உள்ளன; பிந்தியது முந்தியதைவிட மொத்த முழு மட்டத்திற்கும் ஒப்புமை மட்டத்திற்கும் உறுதுணையாக இருக்கும். உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவையும் இந்தியாவையும் எடுத்துக்கொண்டு பார்க்கும்பொழுது, அவற்றின் தேசிய வருமானங்களின் ஒப்புமை மட்டங்கள் எடுத்துக் காட்டுகின்ற அளவிற்கு, ஐக்கிய அமெரிக்காவின் நாட்டு உண்மை வருமானம் இந்தியாவின் உண்மை வருமானத்தைவிட அதிகமாக இல்லை. இந்தியாவின் வறுமையையும், ஐக்கிய அமெரிக்காவின் நாட்டு வருமானத்திலுள்ள மதிப்பீட்டு மிகைக் கூறினையும் மனத்தில் கொண்டே மேற்குறித்த உண்மையினைத் தெளிவாக்கியுள்ளோம். ஐக்கிய அமெரிக்காவின் நாட்டு வருமானத்தில் மதிப்பீட்டு மிகைக்கூறு இருப்பதற்குக் காரணம், நாம் மேலே விவாதித்த மொத்தத் தன்மைக் கூறுகள் அவ் வருமானத்தில் நிறைந்திருப்பதுதான்.

வருமான மட்டமும் பொருளாதார நலனும்

தேசியப் பண வருமானங்களைக் குறித்திடும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்தத்தின் கோணத்திலிருந்து தேசிய உண்மை வருமானங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் பிரச்சினையை நாம் இதுவரையில் ஆராய்ந்து பார்த்தோம். எந்த எந்தப் பண்டங்களும் பணிகளும் தொழில்மயமான நாடுகளின் தொகுப்புகளிலிருந்து அல்லது வளர்ச்சி குறைந்த நாடுகளின் தொகுப்புகளிலிருந்து நீக்கம் பெற்றன, அல்லது எப் பண்டங்களும் பணிகளும் அவ்விருவகைத்தாய நாடுகளின் தொகுப்புகளிலிருந்து நீக்கம் பெற்றன என்ற கேள்விபற்றியும் நாம் ஆராய்ந்துவிட்டோம்; அந் நாடுகளின் தேசிய உண்மை வருமானத்தின்மீது அதன் விளைவினையும் அளக்க நாம் முயன்றோம். சில பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் நிகரத்

தன்மை பற்றியும் பின்னர் நாம் ஆராய்ந்தோம்; இருவகைத் தாய நாடுகளின் மதிப்பீடுகளிலும் அவை இடம்பெற்றபோதிலும், தொழில்மயமான நாடுகளின் தேசிய வருமான மதிப்பீடுகளிலே அவை மிகப் பெரும் அளவிற்கு இடம்பெற்று இருத்தலும் தெரிகிறது; அவை எந்த அளவிற்கு மொத்தத் தன்மைக் கூறுகளை மறைத்து வைத்துள்ளன என்பதையும் கணக்கிட முயன்றோம்; உண்மை வருமான மட்டங்களை ஒப்பிடுவதில் நாட்டு வருமான மதிப்பீடுகளின் உபயோகத்தின்மீது மொத்தத் தன்மைக் கூறுகளின் விளைவினையும் கணக்கிட முயன்றோம். இத்தகைய தேசியத் தொகுப்புகளினுள் அடங்கிய பண்டங்கள், பணிகள் ஆகியவற்றிற்கும் பொருளாதார நலனுக்குமிடையிலுள்ள தொடர்பினை ஆராய நாம் இப்பொழுது முனைவோம். ஏனெனில், நாடுகளின் தேசிய உண்மை வருமானங்களை ஒப்பிடும்பொழுது, அவற்றின் பொருளாதார நலன்களைக் குறிக்கும் மட்டங்களின் ஒப்புமையையே நாம் கண்டுபிடிக்க முயல்கிறோம். தொழில்மயமான நாடுகளின் தொகுப்புகளிலோ அல்லது வளர்ச்சி குறைந்த நாடுகளின் தொகுப்புகளிலோ சேர்க்கப்பட்டுள்ள பண்டங்களும் பணிகளும் நிகர இனங்களாக இருக்கலாம்; தனிப்பட்ட நாட்டைப் பொறுத்தவரையில் பொருளாதாரப் பண்டங்களாகவும் இருக்கலாம்.

ஆனால், வேறொரு நாட்டின் கோணத்திலிருந்து பார்க்கும்பொழுது, அவை அதே அளவிற்கு உண்மை வருமானத்தில் வேற்றுமைகளை எடுத்துக்காட்டமாட்டா, எனவே, ஒரு நாட்டின் தேசிய வருமானத்தில் இடம்பெறும் பண்டத்தை அல்லது பணியை அது திருப்திப்படுத்த முயலும் விருப்பத்துடன் இணைக்கவேண்டியது அவசியமாகும்; அவ்வாறு இணைத்து, இதுபோன்ற விருப்பங்கள் மற்ற நாட்டிலும் நிலவுகிறதா என்றும், அப்படி நிலவினால் அவற்றைத் திருப்திப்படுத்த முதல் நாட்டில் தேவைப்பட்ட அளவும் தரமும் உடைய பண்டங்களும் பணிகளும் வேண்டுமா என்றும் ஆராய வேண்டியது அவசியமாகும். உறுதியாக ஏற்றுக்கொள்ளப்படும் பொருளாதாரப் பண்டங்களும் பணிகளும் திருப்திப்படுத்தும் விருப்பங்கள், உண்மையில் குறிப்பிட்ட நாடுகளில், மனித உடல் நலத்தையும் மகிழ்ச்சியையும் பெருக்கி வளர்க்கின்றனவா என்ற கேள்வி எழுகிறது. அவ்வாறு அவ் விருப்பங்கள் உடல் நலத்தையும் மகிழ்ச்சியையும் பெருக்கி வளர்க்கவில்லை எனில், தேசிய உண்மை வருமானங்கள் ஒப்பிடப்படுகின்ற இரு வேறு நாடுகளில் அவை சமமாக இல்லாதிருத்தலானது,

பொருளாதார நலன்களின் மட்டங்களை நாடுகளுக்கிடையில் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, மதிப்பீட்டு மிகையினையோ அல்லது மதிப்பீட்டுக் குறைவினையோ குறித்திடும் காரணியாக இருக்கக்கூடாதா என்ற கேள்வியும் எழுகிறது.

முதலில், நிலவியல் சூழ்நிலையைச் சார்ந்த பூகோளக் கூறுகளும், தட்பவெப்பநிலைக் கூறுகளும், ஏனைய கூறுகளும் மனித விருப்பங்களை ஓரளவிற்கு உருவாக்குகின்றன. அவ்வாறே சமூகச் சூழ்நிலையைச் சார்ந்த வரலாறு, கலாசாரம், மரபு, ஏனைய கூறுகள் ஆகியவைகள் அனைத்தும் மனித விருப்பங்களை ஓரளவிற்கு உருவாக்குகின்றன. இத்துடன் வியாபாரத் தூண்டுதல் பெற்ற விருப்பங்களையும் (commercially induced wants) சேர்த்துக்கொள்ள வேண்டும். இவ் விருப்பங்கள் தரத்தில் இல்லையேனும் குறைந்தபட்சம் அளவிலேனும், நகரமும் தொழிலும் ஒன்றிய நாகரிகத்திற்கே உரிய, தனித்த நிகழ்ச்சியைச் சார்ந்தவைகளாக உள்ளன; எனவே, தொழில் மயமான நாடுகளின் பொருளாதாரங்களுக்கு உரிய நிகழ்ச்சியைச் சார்ந்தவைகளாக உள்ளன. இவ் விருப்பங்கள் சார்ந்திருக்கும் முழு நிகழ்ச்சியைப்பற்றிய மனித நோக்குகளில் ஏதேனும் வேறுபாடுகள் இருப்பின், அவற்றையும் இத்துடன் சேர்த்து விவாதத்தை முடிக்கலாம். மதிப்பு, பயன்பாடு பற்றிய தர்க்கத்தில் மார்ஷல் இது குறித்துப் பின்வருமாறு எழுதுகிறார்:

'ஒவ்வொரு நாகரிக நாட்டிலும், கலங்காத சாந்தமே வாழ்க்கையின் மிக உயர்ந்த இலட்சியம் என்றுரைக்கும் புத்தரின் கோட்பாட்டினைப் பின்பற்றுவோர் சிலர் இருக்கிறார்கள்; தன்னுடைய இயல்புடன் ஒன்றியிருக்கும் விருப்பங்களையும் தேவைகளையும் தன்னால் முடிந்த அளவுக்கு வேரறுத்து ஒழித்துக்கட்டுபவனே அறிவாளி என்ற கருத்தினை ஏற்று நடப்பவர்கள் இருக்கிறார்கள்; உண்மையான செல்வக் கொழிப்பு, பண்டங்கள் நிரம்பியிருத்தலில் இல்லை; ஆனால், விருப்பங்கள் இல்லாதிருத்தலில்தான் உள்ளது என்ற புத்தக் கோட்பாட்டினைப் பின்பற்றி வாழ்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால், இதற்கு முற்றிலும் மாறாகப் புதிய தேவைகளும் விருப்பங்களும் பெருகி வளர்தல் எப்பொழுதும் நன்மையே தரும் என்றும், அவ்வாறு பெருகி வளர்வதால் மக்கள் கூடுதலான முயற்சிகள் எடுக்கும்படி தூண்டப்படுகிறார்கள் என்றும் வேறு சிலர் கருதுகிறார்கள். ஹெர்பர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer) குறிப்பிடுவதுபோல, வாழ்க்கைக்காக வேலை செய்வது

என்பதற்குப் பதிலாக, வேலை செய்வதற்காக வாழ்க்கை என்று கருதி அவர்கள் தவறு செய்வதுபோல் தோன்றுகிறது.'[17]

மார்ஷல் இதிலுள்ள கருத்து வேறுபாடு குறித்துத் தொடர்ந்து விவாதிக்கவில்லை என்பது உண்மைதான். எவ்வளவு வினைத்திறன்களை வளர்க்கவும் செயல்படுத்தவும் முடியுமோ அவ்வளவு வினைத்திறன்களை வளர்த்தும் செயல் படுத்தியும், எவ்வளவு உயர்ந்த வினைத்திறன்களை வளர்க்கவும் செயல்படுத்தவும் முடியுமோ அவ்வளவு உயர்ந்த வினைத் திறன்களை வளர்த்தும் செயல்படுத்தியும் வாழ்வதில்தான் வாழ்க்கையின் முழுமை உள்ளது என்று சொல்வதுடன் மார்ஷல் திருப்தியடைகிறார். ஆனால், பொருள்சார் இலட்சியங் களினால் தூண்டப்பெற்ற நடவடிக்கைக்கும் வேறுவகையான இலட்சியங்களைக்கொண்ட நடவடிக்கைக்கும் இடையில் வேற்றுமை இருக்கிறது. பணிகளையும் உள்ளடக்கிய பொருள் சார் விருப்பங்கள் குறித்தெழும் மனப்பான்மையில் ஒரே நாட்டில் வாழும் தனிப்பட்ட மனிதர்களிடையே வேற்றுமை நிலவுவதோடமையாது நாடுகளுக்கிடையேயும் வேற்றுமை நிலவும். ஒரு குறிப்பிட்ட நாட்டில், தேசிய மனப்பான்மைகளை ஒரு தனிப்பட்ட மனிதன்மீதோ அல்லது தனிப்பட்டோரின் கூட்டத்தின்மீதோ ஏற்றிச் சொல்வதில் வரையறை உண்டு; எப்பொழுதும் அந்த வரையறைக்கு உட்பட்டே தேசிய மனப் பான்மைகள் இருத்தல்வேண்டும். பொதுவாக, விருப்பங் களின் தேவைபற்றியும், அவற்றை நிறைவேற்ற முயல்வதி லுள்ள பயன்பாடுபற்றியும் தேசிய மனப்பான்மைகள் மேற் கொள்ளும் கருத்தில் வேறுபாடு இருக்கலாம். இவ்வாறு நிகழும்பொழுது, பொருளாதார நலன் என்று சொல்லப் படுவதன் உள்ளடக்கத்தில் அடிப்படையான வேற்றுமை இருக்கிறது. தேசிய வருமானங்களில் சேர்க்கப்பட்டுள்ள பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் தொகுதிகளின் அளவு, வகை, பருமன் முதலானவற்றின் வேற்றுமைகளிலிருந்து தேசிய உண்மை வருமானங்களிலுள்ள வேற்றுமைபற்றி உபயோகமான முடிவுகள் எடுப்பது கடினமாகவிருக்கும்.

நிலவியல் சூழ்நிலையுடன் இணைக்கப்பட்டுள்ள விருப்பங் களைப்பற்றி முதலில் எடுத்துக்கொள்வோம். உணவு, உடை, உறையுள்போன்ற அடிப்படை விருப்பங்கள் ஆகிய புலனுகாத விருப்பங்கள், நிலவியல் சூழ்நிலையிலுள்ள வித்தியாசங்களைச்

[17] மார்ஷல், op. cit., புத்தகம் III, அத்தியாயம் VI, பக்கம் 136.

சாராது இருக்கும் அதே வேளையில், அவ் விருப்பங்களை நிறைவேற்றத் தேவைப்படும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் அளவும் தரமும் அவ் வித்தியாசங்களை நிச்சயமாக சாராது இருக்கமுடியாது. இவ்வாருக, வெப்பம் மிகுந்த சீதோஷ்ண நிலையைவிடக் குளிர்ந்த சீதோஷ்ண நிலையில் உணவுத் தேவையை நிறைவேற்றிக்கொள்ள சாப்பாட்டில் கொழுப்புச் சத்து கூடுதலான அளவில் இருக்கவேண்டும். வெப்ப நாடுகளை விடக் குளிர்ந்த நாடுகளில், தட்பவெப்ப நிலையிலுள்ள வேற்றுமைகளின் காரணமாக, கார்போ ஹைட்ரேட்டுகளின் (carbo-hydrates) முழுமையான அளவுகொண்ட உணவினைப் பெருமளவில் உட்கொள்ளவேண்டியது அவசியம் என்றும் கூறப்படுகிறது. எனவே, ஒரு நாட்டில் உட்கொள்ளப்படும் உணவுகளின் உண்மையான அளவும் வகையும் மற்ருெரு நாட்டில் உட்கொள்ளப்படும் உணவுகளின் அளவையும் வகையையும்விட முழுமையாகவும் முக்கியமாகவும் கூடுதலாக இருந்தாலும்கூட, அவ்விரு நாடுகளின் தட்பவெப்ப நிலையில் தக்க அளவிற்கு வேற்றுமைகள் நிலவும்பொழுது, அவற்றின் உணவுத் துய்ப்பினுல் அளக்கப்பெறும் பொருளாதார நலனின் மட்டங்கள் ஒரேமாதிரியாக இருக்கக்கூடும். உடை, உறையுள் சார்ந்த விருப்பத்தைப் பொறுத்தவரையிலும் இதுவே உண்மையாகும். எனவே, ஒப்புமைக் கோணத்திலிருந்து பார்க்கும்பொழுது, வேருெரு நாட்டில் ஒரே விருப்பத்தை நிறைவேற்றும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, ஒரு குறிப்பிட்ட நாட்டில், முழுமையான அர்த்தத்தில், கொடுக்கப்பெற்ற ஓர் விருப்பத்தினை நிறைவேற்றும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றில் மொத்தத் தன்மைக்கூறு இருப்பதுபோலத் தோன்றுகிறது.

ஒரே நாட்டில் பல்வேறு இடங்களில் நிலவியல் சார்ந்த தட்பவெப்பநிலைக் கூறுகளும் ஏனைய கூறுகளும் வெவ்வேருக மாறியிருப்பின், அவ்விடங்களனைத்திலும்கூட மேலே குறிப்பிட்டுள்ளதே உண்மையாகும். ஐக்கிய அமெரிக்காவில் தொழிலாளர் இலாக்கா 1948-ல் 34 நகரங்களில் தொழிலாளர்களின் வரவுசெலவுத் திட்டம்பற்றிய ஆராய்ச்சி ஒன்றினைச் செய்தது. 'அநேக வட்டாரச் சூழ்நிலைகளின்மீது சார்ந்திருக்கும் குடியிருப்புச் செலவு, முக்கியமாகத் தட்பவெப்பநிலை, போக்குவரத்து, வரிகள் ஆகியவற்றின் வேறுபாடுகளைச் சார்ந்திருக்கும் அடுப்புக்கரி, விறகு, துணிமணிகள் ஆகியவற்றின் விலைகளில் உள்ள ஏற்றஇறக்கங்கள் முதலானவைகளே நகரங்களுக்கிடையேயுள்ள வேற்றுமைகளுக்கு மிக முக்கியமான காரண

மாகும்.'[18] என்று தொழிலாளர் இலாக்காவின் ஆராய்ச்சி எடுத்துக் காட்டியுள்ளது. அவ்வறிக்கை துணிமணிகளின் செலவுகள்பற்றித் தனியாக விளக்கியுள்ளது. 'குடியிருப்புடன் கூடத் துணிமணிகள் அணிதல் ஒரு பெரும் பிரிவாகும். தட்ப வெப்பநிலையின் காரணமாகச் செலவினங்களில் ஏற்படும் வேறுபாடுகளைக் குறிப்பதே ஆடை அணிதலில் ஏற்படும் செலவுகளாகும். எனவே, ஆடை அணிதல் சார்ந்த செலவுகள் வெப்பமான நகரங்களில் மிகமிகக் குறைவாகவும் குளிர்ந்த நகரங்களில் மிகமிக அதிகமாகவும் இருப்பன. ஜாக்சன் வில்லில் (Jacksonville) ஜூன் 1947-ல் துணிமணிச் செலவு ஆண்டொன்றிற்கு 415 டாலர்களாகவும், மின்னபோலிசில் (Minneopolis) 477 டாலர்களாகவும் இருந்தது என்பது அவ் வேறுபாட்டினைத் தெற்றென விளக்கும்.'[19] துரதிர்ஷ்ட வசமாக, நிலவியல் சூழ்நிலையைச் சார்ந்த தட்பவெப்பநிலைக் கூறுகளாலும் ஏனைய கூறுகளாலும் நாடுகளுக்கிடையே துய்ப்புச்செலவுகளில் ஏற்பட்ட வேறுபாடுகள்பற்றி இத் தகைய ஆய்வுகள் செய்யப்படவில்லை. ஆனால், இத்தகைய வேறுபாடுகள் நிலவுகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. நிலவியல் சூழ்நிலையைச் சார்ந்த பல்வேறு கூறுகளின் காரணமாக, இந்திய நாட்டு வருமானத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, ஐக்கிய அமெரிக்காவின் நாட்டு வருமா னத்தில் உண்மை அளவுகளில் மிகை மதிப்பீட்டுக் கூறு உள்ளது என்று நான் கருதுகிறேன்.

பிரச்சினைக்குரிய இரு நாடுகளில் கலாசாரம், பழக்கவழக் கங்கள், மரபு முதலானவற்றில் மிகுந்த வேறுபாடு இருக்கும் பொழுது, அவற்றில் உண்மை வருமான ஒப்புமைகளில் இடர்ப்பாடுகள் எழும். எனவே, அவ்விரு நாடுகளிலும் சமூகச் சூழ்நிலையிலிருந்து பிறக்கும் விருப்பங்கள் மாறுபட்டே இருப்பன. தொழில்மயமான நாடுகளிலும் வளர்ச்சி குறைந்த நாடுகளிலும் குறிப்பாக இத்தகைய வேறுபாடுகள் முக்கிய மானவைகளே. ஐக்கிய அமெரிக்காவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையிலே நிலவும் கலாசார வேறுபாடுகளைவிட மிகுதியான அளவில் கலாசார வேறுபாடுகளைக்கொண்ட நாடுகளுக் கிடையே வருமான ஒப்பீடுகள் செய்வது இன்னும் கடினம்

[18] 'ஐக்கிய அமெரிக்காவில் தொழிலாளர்களின் வரவுசெலவுத் திட்டம் (Budget)—நகரக் குடும்பங்களும் தனிப்பட்ட மனிதர்களும், 1946, 1947 ஆம் ஆண்டுகள்.' அறிக்கை எண், 927, ஐக்கிய அமெரிக்காவின் தொழிலாளர் இலாக்கா, பக்கம் 23.

[19] மேலே வரும் புத்தகம், பக்கம் 25-26.

நிறைந்ததே,' என்று பேராசிரியர் மாரிஸ் கோப்லண்ட் (Morris Copland)[20] குறிப்பிட்டுள்ளார். இந்தியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் தேசிய உண்மை வருமானங்களை ஒப்பிட்டுப் பார்க்க முயலும் எந்த முயற்சிக்கும் கோப்லண்ட் அவர்களின் கருத்து முழு வலிவுடன் பொருந்தும். கொடிய உதாரணம் தருவதெனில், இந்தியாவிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் பிணங்களை அகற்றுவதற்கு ஏராளமான மரங்கள் பயன் படுத்தப்படுகின்றன. இந்தியாவில் பிணங்களை எரிப்பதற்கு விறகாகவும் அமெரிக்காவில் சவப்பெட்டிகள் செய்வதற்காகவும் ஏராளமான மரம் பயன்படுகிறது. இந்தியாவிலுள்ள இடுகாடு களில் வேலைசெய்யும் தோட்டிகளையும் காவலாளிகளையும்விட ஐக்கிய அமெரிக்காவிலுள்ள சவப்பெட்டி தூக்குவோர் நிறைய சம்பாதிக்கிறார்கள். இதுபோலவே, காலணிகளையும் தலையணி களையும் கொண்ட உடை நாகரிகம், மீன், புலால் போன்ற வற்றின் நுகர்ச்சியைக்கொண்ட உணவுப் பழக்கம், சமய வழிபாட்டு முறை, வீடுகளில் உபயோகப்படுத்தப்படும் பாத்திரங்களின் வகை, உடல் மெருகேற்ற உதவும் வாசனைப் பொருள்களின் வகை ஆகிய இன்னபிற நாகரிகங்களிலும் பழக்கவழக்கங்களிலும் வகைகளிலும் பெருமளவு வேற் றுமைகள் நிலவுகின்றன.

மேலும், பொருளாதாரப் பண்டங்கள் என்று பகுக்கப் பெற்ற பண்டங்களையும் பணிகளையும் இந்தியாவின் தேசிய வருமானத்திலோ அல்லது ஐக்கிய அமெரிக்காவின் தேசிய வருமானத்திலோ சேர்த்துள்ளனர்; ஆனால், அவற்றை இந்திய தேசிய வருமானத்தில் சேர்த்தால், ஐக்கிய அமெரிக்காவின் வருமானத்தில் சேர்ப்பதில்லை; ஐக்கிய அமெரிக்காவின் வருமானத்தில் சேர்த்தால், இந்திய வருமா னத்தில் சேர்ப்பதில்லை. இலத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசிய வருமானங்களைப்பற்றிய தன்னுடைய ஆராய்ச்சியில் எல். டோமின்கூவஸ் (L. Dominguez) குறிப்பிடுவதுபோல, 'ஐக்கிய அமெரிக்காவின் நாட்டு வருமானத்தில் சேர்க்கப் பட்டுள்ள அநேக இனங்களைச் சில தென் அமெரிக்க நாடுகளின் தேசிய வருமானங்களில் பயன்படுத்தவில்லை. நிலைமைகள் வேறாக உள்ளன; ஆனால், மோசமாக இல்லை என்பதே இதற்குப்

[20] மாரிஸ் ஏ. கோப்லண்ட். 'வருமானம், செல்வம்பற்றிய அனைத்துலக ஒப்புமைகள்பற்றிய பிரச்சினை', 'வருமானம், செல்வம்பற்றிய ஆய்வுகள்', வால்யூம் X, op. cit., பக்கம், 159.

பொருளாகும்'[21] (பெரிய எழுத்துகள் என்னுடையவை). இந்தியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் தேசிய உண்மை வருமானங்கள்பற்றிய எந்த ஒப்புமைக்கும் இக் கருத்துகள் பொருந்துவன.

மொத்தத்தில், பொதுவாகக் கூறப்படும் மரபு வழி விருப் பங்கள் இந்தியாவைவிட ஐக்கிய அமெரிக்காவில் எண்ணிக் கையில் அதிகமாகவும் விலையில் அதிகமாகவும் உள்ளன. இத்தகைய விருப்பங்களை நிறைவேற்றும் பண்டங்களும் பணி களும் ஆகிய தொகுப்புகள் இந்தியாவின் நாட்டு வருமானத்தில் மிகப் பெருமளவு விகிதாசாரத்தில் இடம் பெற்றுள்ளன. இந்த வேறுபாடானது, அவ்விரு நாடுகளின் தேசிய உண்மை வருமானங்களில் நிலவும் வேற்றுமையினை ஓரளவிற்குக் குறைந்தபட்சம் பிரதிபலிக்கிறது என்பது உண்மைதான். ஆனால், இந்த வேறுபாட்டின் ஒரு பகுதியானது, அந்த நாடு களின் நிலைமைகளிலுள்ள வேற்றுமையைக் குறிக்கிறதேயன்றி, நிறைவுகளிலோ அல்லது உண்மை வருமானங்களிலோ உள்ள வேற்றுமைகளைக் குறிக்கவில்லை என்பதும் உண்மைதான். மொத்தத்தில், சமூகச் சூழ்நிலையில் எழுந்த மரபு வழி விருப்பங்களும் ஏனைய விருப்பங்களும் இருத்தலானது, இந்தியாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, ஐக்கிய அமெரிக்காவின் நாட்டு உண்மை வருமானத்தை மிகைப்படுத்தி மதிப்பீடு செய்யும் விளைவினை உண்டாக்கியுள்ளது என்று நான் கருதுகிறேன். விரிவாகச் சொல்ல வேண்டுமெனில், வளர்ச்சி குறைந்த நாடுகளின் உண்மை வருமானங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, தொழில்மயமான நாடுகளின் உண்மை வருமானங்களைப் பொறுத்தவரையில் இது உண்மையாகும்.

இப்பொழுது விருப்பங்களைப்பற்றிய கேள்வி எழுகிறது. அவற்றை நிறைவேற்றச் சந்தேகமின்றிப் பொருளாதாரப் பண்டங்கள் தேவைப்படுகின்றன. ஆனால், அப் பண்டங் களினால் கிடைக்கும் திருப்தி, மக்களுடைய நலத்தையோ அல்லது நன்னிலையையோ வளர்க்காமல் உண்மையில் கேடு செய்யக்கூடியனவாக இருக்கலாம். இத்தகைய விருப்பங்கள் தொழில்மயமான நாடுகளுக்கே உரித்தானவை என்றோ அல்லது வளர்ச்சி குறைந்த நாடுகளில் அவை கிடையாது என்றோ நான் சொல்லவில்லை. உதாரணமாக, இந்தியாவில்

21. லோர்டியோ எம். டோமின்கூவஸ் (Lorteo M. Dominguez, 'இலத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசிய வருமான மதிப்பீடுகள்', 'வருமானம் செல்வம்பற்றிய ஆய்வுகள்', வால்யூம் X, op. cit., பக்கம் 241.

கிடைக்கும் மயக்கூட்டும் பாங்க் (bhang) அல்லது நாட்டுச் சரக்காகிய பட்டைச் சாராயம் முதலியன ஐக்கிய அமெரிக்காவின் குடிவகைகள், மதுசாரங்கள் போன்றே கேடு புரிகின்றன; நன்னிலையையும் க்ஷேமத்தையும் பெருக்குவதில்லை. ஆனால், அப் பண்டங்கள் இந்தியாவைவிட ஐக்கிய அமெரிக்காவின் தேசிய வருமானத்தில் பெருமளவு இடம் வகிக்கின்றன. அந்த அளவிற்கு ஐக்கிய அமெரிக்காவின் உண்மை வருமானம் மிகைப்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனலாம். விரிவாகச் சொல்லவேண்டுமெனில், மற்றத் தொழில்மயமான நாடுகளின் வருமானத்தைப் பொறுத்தவரையிலும் அதே நிலைதான் இருக்கும்.

இறுதியில், விருப்பங்கள் குறித்த மனப்பான்மைபற்றிய பிரச்சினையும், பொருளாதார நலனுக்கும், பண்டங்கள் பணிகள் ஆகியவற்றின் தேசியத் தொகுப்புகளுக்கும் இடையிலுள்ள தொடர்பினை நிர்ணயிக்கும் மனப்பான்மையின் விளைவுப் பிரச்சினையும் எழுகின்றன. உதாரணமாக, அதிகரித்துக் கொண்டே செல்லும் விருப்பங்களும் அவ் விருப்பங்களை நிறைவேற்ற அதிகரித்துக்கொண்டே செல்லும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் தேசியத் தொகுப்புகளும் பொருளாதார நலனைப் பெருக்கிக்கொண்டே செல்லும் விளைவினை ஏற்படுத்துவன என்று சொல்லப்படும் தத்துவத்தினை இந்தியா போன்ற நாடுகளில் உள்ள பெரும்பாலான மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லப்படுகிறது. இந்திய மக்கள், தேவைகளைக் கட்டுப்படுத்திக்கொள்வதில் நம்பிக்கையுள்ளவர்கள் என்றும், உயர்ந்தபட்ச நலனைச் சாதாரண வாழ்க்கை வாழ்ந்து, உயர்ந்த எண்ணங்களில் மிதந்து அடைய முடியும் எனக் கருதுகிறவர்கள் என்றும் சொல்கிறார்கள். எனவே, சிறு அளவு எண்ணிக்கையுள்ள விருப்பங்களை நிறைவேற்ற உபயோகமாகும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் சிறு அளவுத் தொகுப்புகளைக் கொண்ட இந்திய நாட்டு வருமானம் அதே வீதாசாரத்தில் உண்மை வருமானத்தைக் குறித்துக் காட்டுவதுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது, பெருமளவு எண்ணிக்கையுள்ள விருப்பங்களை நிறைவேற்ற உபயோகமாகும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் பெருமளவுத் தொகுப்புகளைக் கொண்ட ஐக்கிய அமெரிக்க நாட்டு வருமானம் அதே வீதாசாரத்தில் பெருமளவு உண்மை வருமானத்தைக் குறிப்பதில்லை என்று விவாதிக்கப்படுகிறது. எனவே, இந்தியாவின் வருமானத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கும்

பொழுது, ஐக்கிய அமெரிக்காவின் தேசிய வருமானத்தில் உண்மை வருமானம் பெருமளவிற்கு மிகைப்படுத்தப்பட்ட மதிப்பீட்டினை உடையதாக இருக்கிறது.

இந்த ஆய்வினை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. முதலில், ஐக்கிய அமெரிக்கா, ஏனைய தொழில்மயமான நாடுகள் ஆகியவற்றின் தேசிய வருமானங்களைக் குறிக்கும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மிகப்பெரும் தொகுப்புகளுக்குப் பின்னால், உற்பத்தித் திறனின் மட்டங்களிலுள்ள பெருமளவு வேறுபாடுகளை மேற்குறித்த ஆய்வு கருதவில்லை. உற்பத்தித் திறன் மட்டங்கள் நலன் குறிக்கும் மட்டங்களுடன் சமமாக இருக்கவேண்டியது அவசியமில்லை என்றபோதிலும் உற்பத்தித் திறன் மட்டங்கள்தாம் பொருளாதார நலனின் மிக முக்கியமான, மிகப் பொருத்தமான பகுதிகளில் ஒன்றாகும். இரண்டாவதாக, விருப்பங்களைப்பற்றிய மனப்பான்மைகளில் வேறுபாடு என்று சொல்லப்படுகின்ற ஒன்று, உதாரணமாக, இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையில் கற்பனை செய்யப்பட்டுள்ள அளவுக்கு உண்மையில் நிலவுகிறது என்ற கூற்றினை நான் நம்பவில்லை. எந்த அளவிற்கு விருப்பங்களைப்பற்றிய மனப்பான்மைகளில் வேற்றுமை நிலவுகிறதோ அந்த அளவிற்கு அவ் வேற்றுமை, இந்திய மக்களிடம் வேரூன்றியிருக்கும் சில போக்குகளில் விளையும் நிலைத்த அல்லது நிரந்தரமான பண்பாட்டில் விளைந்ததன்று; மாறாக, ஓரளவிற்கு அறியாமையினாலும் படிப்பின்மையினாலும் விளைந்தது; இன்னும், அவ் வேற்றுமை வாய்ப்பின்மையினால் மேலும் அதிகரித்துள்ளது. இந்தியாவில் சில மக்கள் உள்ளனர்; பண்டங்கள், பணிகள், ஆகியவைபற்றிய அவர்களுடைய தேவையின் அளவில் அல்லது வகையில் விளக்கப்படும் அவர்களுடைய விருப்பங்கள் அமெரிக்காவில் உள்ள எந்த மக்கள் குழுவின் விருப்பங்களுக்கும் இணையாக இருப்பன என்ற உண்மையிலிருந்து மேற்குறித்த செய்தி தெளிவாகிறது. இந்திய மக்கள்தொகையின் பெரும் பகுதி இத்தகைய விருப்பங்களைப் பெற்றுப் பகிர்ந்துகொள்ளவில்லை எனில், அதற்குக் காரணம் அவர்கள் ஏழ்மை நிலையில் வதிகின்றனர் என்பதும், அவற்றைப் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பினை அவர்கள் பெறவில்லை என்பதும் ஆகும்

உண்மையில், இந்திய மக்களிடத்து நிலவும் தேவையின்மையானது, நாட்டின் உண்மை வருமானத்தின் குறைந்த மட்டத்தையே குறிக்குமேயன்றித் தேவைகளைக் கட்டுப்படுத்தி எளிய வாழ்வு வாழ்தலைச் சார்ந்த ஏதேனும் அடிப்படையான

தேசிய மனப்பான்மை, பொருளாதார நடவடிக்கைமீது கொண்டுள்ள பிணைப்பிலிருந்து அத் தேவையின்மை விளைந்தது எனக் குறிக்காது. எனவே, தொழில்மயமான நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகள் ஆகியவற்றின் தேசிய உண்மை வருமானங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, பொதுவாக விருப்பங்களைப்பற்றிய தேசிய மனப்பான்மையின் வேற்றுமைகளுக்கு எந்த மதிப்பும் தர நான் விரும்பவில்லை. அதே நேரத்தில், வியாபாரத்திற்கென்று செய்யப்படும் விளம்பரத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தில் மொத்தத் தன்மையின் கூறு உள்ளது என்று நான் நம்புகிறேன். விளம்பரத்திலிருந்து கிடைக்கும் வருமானமானது, துய்ப்போருக்கு வேண்டிய இறுதிப் பணிகளின் உருவில் பொருளாதார நலனைப் பெருக்குவதனைப் பிரதிபலிப்பதால், அதனை இரு வகைத்தாய நாடுகளின் தேசிய வருமானங்களிலிருந்து அகற்ற யோசனை கூறுவது முடியாது. இச் சூழ்நிலைகளில், வளர்ச்சி குறைந்த நாடுகளை விடத் தொழில்மயமான நாடுகளின் தேசிய வருமானங்களில் விளம்பரம் மூலம் கிடைக்கும் வருமானம் அதிகமான அளவில் இடம் பெற்றிருக்கும் காரணத்தினுல், தொழில்மயமான நாடுகளின் உண்மை வருமானம் மிகைப்படுத்தி மதிப்பிடப் பெற்றிருக்கிறது.

தொகுத்துரைப்பின், ஒவ்வோர் இனமாக எடுத்துக் கொண்டு ஒரே மாதிரியாக ஆராய்ந்து பார்க்க வசதி செய்த போதிலுங்கூட, அல்லது இனங்களை நீக்கவும் அல்லது சேர்க்கவும் தேவைப்படும் சீரமைவுகளைச் செய்ய வசதி செய்தபோதிலுங்கூட, பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் தொகுப்பினைப் பொருளாதார நலனுடன் இணைக்கும்பொழுது தேசியத் தொகுப்புகளிலுள்ள வேற்றுமைகள் பொருளாதார நலனில் அதே அளவிற்குச் சமமாக உள்ள வேற்றுமைகளைப் பிரதிபலிக்கவில்லை என்பதை நாம் அறிவோம். உண்மையில், தொழில்மயமான நாடுகளுக்கும் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குமிடையிலுள்ள இத்தகைய வேற்றுமைகளில் ஒரு பகுதி, நிலவியல் சார்ந்த அல்லது சமூகம் சார்ந்த சூழ்நிலைமைகளில் உள்ள வேற்றுமைகளின் விளைவைக் குறிக்குமேயன்றி, நலனிலுள்ள வேற்றுமைகளைக் குறிக்காது. இவ் வேறுபாடுகளின் ஒரு பகுதிக்குக் காரணம், தொழில்மயமான நாடுகளில் கேடு பயக்கும் அல்லது உடல் நலத்தைக் கெடுக்கும் துய்ப்பிற்குரிய பண்டங்களும் பணிகளும் பெருமளவில் நிலவுவதேயாம். எனவே, அந் நாடுகளின் தேசிய உண்மை வருமானங்களில் மிகை மதிப்பீடு நிலவுகிறது. மேலும், இவ்

வேறுபாடுகளின் ஒரு பகுதிக்கு மற்றொரு காரணம், தொழில்மயமான நாடுகளில் விளம்பரத்திலிருந்து கிடைக்கும் வருமானம் பெருமளவிற்கு அமைந்திருப்பதேயாகும். இவ் வருமானத்திலுள்ள மொத்தத் தன்மைக் கூறுகளைத் தேசிய வருமானக் கணக்கீடுகளிலிருந்து கழிக்காது விட்டமையால் இத்தகைய நாடுகளின் உண்மை வருமானங்கள் ஒரு குறிப் பிட்ட அளவிற்கு மிகைப்படுத்தப்பெற்று மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. இறுதியாக விருப்பங்களின் பெருக்கத்தைக் குறிக்கும் தேசிய மனப்பான்மைகளில் எழும் வேறுபாடுகள், தொழில்மயமான நாடுகளின் உண்மை வருமான மிகை மதிப் பீட்டிற்குக் காரணமாக உள்ளன என்ற கருத்தினை ஏற்றுக் கொள்ள முடியாது. இப் பகுதியில் நிகழ்ந்த விவாதத்திலிருந்து எழும் பொது முடிவு எதுவெனில், தொழில்மயமான நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகள் ஆகியவற்றின் தேசிய உண்மை வருமானங்களுக்கிடையே எழும் வேறுபாடுகள், அந் நாடுகளின் தேசிய வருமானங்கள் குறித்திடும் பண்டங்கள் பணிகள் ஆகிய வற்றின் தொகுப்புகளினிடையேயுள்ள வேறுபாடுகளைவிட ஓரளவிற்குக் குறைவாகவே இருப்பன என்பதேயாகும். எடுத்துக்காட்டாக, இந்தியா ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடு களின் தேசிய வருமானங்கள் குறித்துக் காட்டும் பண்டங்கள் பணிகள் ஆகியவற்றின் தேசியத் தொகுப்புகளின் அளவிலும் தரத்திலும் தெரியும் வேறுபாடுகளைக் கொண்டு முடிவு எடுத்தால், அமெரிக்க மக்களுடன் ஒப்பிடும்பொழுது, இந்திய மக்கள் பொருளாதார நலனில் மிகவும் மோசமாக இருக் கிறார்கள் என்றே கருதத் தோன்றும்; ஆனால், இந்திய மக்கள் பொருளாதார நலனில் அவ்வளவு மோசமாக இல்லை. இந்த நாடுகளின் உற்பத்தித்திறன் மட்டங்களை ஒப்பிடுவதில் இந்த முடிவினை இதே அளவிற்குப் பிரயோகிக்கமுடியாது என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது.

மதிப்பீட்டுப் பிரச்சினைகள்

தொழில்மயமான நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகள் ஆகியவற்றின் தேசிய வருமானங்களைக் குறித்திடும் பண் டங்கள் பணிகள் முதலானவற்றின் தேசியத் தொகுப்புகளைப் பொருளாதார நலனிலோ அல்லது உண்மை அளவிலோ, ஒப்பிட்டுப் பார்க்கும் பிரச்சினை குறித்து இதுவரையில் ஆராய்ந்தோம். பண்டங்களையும் பணிகளையும் கொண்ட தொகுப்புகளை அவற்றின் பணமதிப்பிலன்றி வேறுவகையில் உருவாக்க முடியாது என்ற உண்மையிலெழுந்த ஒப்புமைச்

சிக்கலினை நாம் ஒதுக்கிவிட்டோம். தேசிய வருமானங்களின் கணிப்பில் (computation) உள்ள மதிப்பீட்டுப் (valuation) பிரச்சினை முழுதும் மேற்குறித்த ஒப்புமைச் சிக்கலிலிருந்தே எழுந்தது. குறிப்பிட்ட ஒரு நாட்டின் தேசிய வருமானத்தைப் பொருளாதார நலனில் அளந்து மாற்றும் கோணத்திலிருந்து மாத்திரமன்றி, இருவேறு நாடுகளின் தேசிய உண்மை வருமானங்களை ஒப்பிட்டுப்பார்க்கும் கோணத்திலிருந்தும் அச் சிக்கல் முக்கியத்துவமுடையதாகும். தொழில்மயமான நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகள் ஆகியவற்றின் நிகர தேசிய உற்பத்திகளில் வேறுபாடுகளை உண்டாக்குமளவிற்கு, அந் நாடுகளில் பின்பற்றப்படும் மதிப்பீட்டு வழிமுறைகள் மாறுகின்றனவா என்பதுபற்றிய சிக்கலினை இப் பகுதியில் கருதுவோம். அந் நாடுகளின் நிகர தேசிய உற்பத்திகள் முந்திய மூன்று பகுதிகளிலும் விவாதிக்கப்பெற்ற, சுருக்கச் செறிவில்லாமல் விவரிக்கப்பெற்ற, அந் நாடுகளின் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் தேசியத் தொகுப்புகளைக் குறிக்கவில்லை. ஒரு நாட்டின் பண வருமானத்தை மற்றொரு நாட்டின் பண வருமானத்திற்கு மாற்ற உதவும் மாற்று விகிதம் (ratio of exchange) பற்றியும், தேசிய உண்மை வருமானங்களை ஒப்பிட்டுப்பார்க்கும் காரியத்திற்கு மாற்று விகிதத்தின் பொருத்தம்பற்றியும் அடுத்த பகுதியில் விளக்குவோம்.

நிகர தேசிய உற்பத்தியின் மதிப்பீட்டின்கீழ் எழும் பிரச்சினைகளிலேயே மிக முக்கியமானவை பின்வருமாறு :

(1) அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லும் உற்பத்தியைச் சாராத பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் ஏற்றிச் சொல்லப்பட்ட மதிப்பீடு.

(2) அரசாங்கப் பணிகளின் மதிப்பீடு.

(3) உத்தியோகங்கள், பரந்த கலைகள், வீட்டுப்பணிகள் முதலான மற்றச் சேவைகளைப்பற்றிய மதிப்பீடு.

வேறொரு நாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, ஒரு நாட்டில் மதிப்பு, உற்பத்தி, உண்மை வருமானம்பற்றிய வட்டார வேற்றுமைகள்பற்றிய பிரச்சினை எழுகிறது. இந்தப் பிரச்சினை வேறானதே; ஆனால், முன்னர்க் குறிப்பிட்டவைகளுக்கு இணையானதே.

மதிப்பீட்டில் ஏற்றிச் சொல்லும் பிரச்சினையை முதலில் எடுத்துக்கொள்வோம். சாதாரணமாக, ஏற்றிச் சொல்லப் படும் மதிப்புகள் மூன்று அகன்ற பகுப்புகளைச் சார்ந்துள்ளன.

(1) விவசாயியே உட்கொள்ளும் வீட்டுத் தானியம்;

(2) பண்டங்களிலேயே வழங்கப்பெறுகின்ற கூலிகள் அல்லது ஏனைய செலுத்துகைகள்;

(3) சொந்தக்காரர்களே குடியிருக்கும் வீடுகளின் நிகர வாடகை ஆகியவையே அம் மூன்று பகுப்பு களாகும்.

தொழில்மயமான நாடுகளிலும்கூட, தேசிய வருமானத்தில் ஏற்றிச் சொல்லப்பெறும் மதிப்பானது முக்கியமான பகுதியாக உள்ளது என்பதைக் குறித்துக்கொள்ளவேண்டியது அவசிய மாகும். 'போர்க்காலமாகிய 1941-ல் இருந்து[22] டாக்டர் மார்கா‌ரெட் ரீடு அவர்கள் எடுத்துக்காட்டும் அட்டவணை இவ்விடத்திற்குப் பொருந்திவருகிறது. அது பின்வருமாறு:

அட்டவணை II

எண்	ஆளொன்றுக்கு	நகரத்தில்	கிராமத்தில் பண்ணையைச் சாராத	கிராமப் பண்ணை
1.	பண வருமானம் ($) ...	792	390	281
2.	பணம் சாரா வருமானம் ($) ...	56	68	129
3.	பண வருமானத்தில் பணம் சாரா வருமானத்தின் வீதாசாரம் (%) ...	7	17	46
4.	பண்டங்களில் வருமானத்தைக் குறிக்கும் அலகுகளின் வீதாசாரம் (%) ...	91	98	100

அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லும் உற்பத்தியைச் சாராத இல்லத்தொழில் உற்பத்தியின் மதிப்பானது, பண்டங் களில் தரப்பட்ட செலுத்துகைகளையும் உள்ளடக்கிய அம் மதிப்பானது, தொழில்மயமான நாடுகளிலும் வளர்ச்சி குறைந்த நாடுகளிலும் உற்பத்தி மையங்களில் நிலவும் பண்ணை

[22] மார்காரெட் ஜி. ரீடு, op. cit., பக்கம் 136.

விலைகளிலோ அல்லது விற்பனை விலைகளிலோ கணக்கிடப் படுகிறது. உண்மை வருமானத்தைக் குறைத்து மதிப்பீடு செய்யும் விளைவினை இது ஏற்படுத்துமா? அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லாத தானியங்களின் ஏற்றிச் சொல்லப் பட்ட மதிப்பீடானது வளர்ச்சி குறைந்த நாடுகளில் பெரும் இடத்தினை வகிப்பதால் இப் பிரச்சினையின் முக்கியத்துவம் மேலும் கூடிவிடுகிறது. இந்தியாவில், விவசாயி, விவசாயத்தில் ஈடுபடாதவன் ஆகியோருடைய கோணத்திலிருந்து பார்க்கும் பொழுது, குறிப்பிட்ட தானியத்தின் கிடைக்கும் அளவுகளைப் பொறுத்து, பிந்தியவனுடைய வருமானத்துடன் ஒப்பிடும் பொழுது, விவசாயியின் வருமானத்தின் பண மதிப்பில் குறைத்து மதிப்பீடு செய்யும் கூறு உள்ளது. ஆனால், பொருளாதார நலனில் அளக்கப்பெறுதலைப் பொறுத்தும் குறைத்து மதிப்பீடு செய்யும் கூறு அதில் உள்ளதா? அதில் அத்தகைய கூறு உள்ளதா என்பதுபற்றி நான் நிச்சயமாகக் கூறமுடியாது. விவசாயியின் விற்பனை விலையைவிடக் (sale price) கூடுதலான விலையைக் கொடுத்தே உணவுத் தானியங்களையோ அல்லது வேறு எந்தத் தானியத்தையோ ஒருவன் வாங்குகிறான். ஆனால், அவனுக்குத் தானியங்களைத் தேர்ந்தெடுப்பதில் பெருமளவு வாய்ப்பு இருக்கிறது. பெரும்பாலும் அவனுக்குக் கூடுதலான வசதிகளும் கிட்டுகின்றன. மிக அதிகமாகத் தானியங்களை அவன் துய்க்கவில்லை எனினும், விவசாயிக்குக் கிடைப்பதை விட அவனுக்கு இன்னும் கூடுதலான துய்ப்போன் வருமானம் கிடைக்கிறது என்றும் சொல்லலாம். ஒரே பண்டம் என வருணிக்கப்படுகின்ற ஒன்றின் பல்வேறு அலகுகளில் தர வேறுபாடு இருப்பதற்கிணங்க, அவ்வலகுகளின் விலைகளிலும் வேறுபாடு நிலவுவதைப்போலவே, அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லாத உற்பத்திக்கு விவசாயி விதிக்கும் விற்பனை விலைக்கும் விற்பனைக்குச் செல்லும் உற்பத்தியின் சில்லறை விலைக்கும் இடையில் வேறுபாடு நிலவுகிறது என்று நான் கருதுகிறேன்.

உற்பத்தியாளன் தனது உற்பத்தியினை விற்கும் விலைக்கும் அதனை வாங்கும் விலைக்கும் இடையிலுள்ள வேறுபாட்டில் உண்மையான பொருளாதார நியாயம் அடங்கியுள்ளது. ஏனெனில், வாங்கும் விலையில் தெளிவான ஒரு பொருளாதாரப் பணி அடங்கியுள்ளது. ஆனால், விற்கும் விலையில் அப் பணி இல்லை. எனவே, குறிப்பிட்ட பண்டத்தினை உற்பத்தியாளன் விற்கும் விலையைத்தான், அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லாத உற்பத்தியின் ஏற்றிச்சொல்லப்படும் மதிப்பினை நிர்ணயிக்கப் பயன்படுத்த வேண்டுமேயன்றி, நுகர்வோர் அவ்வுற்பத்தி

யினைச் சந்தையில் வாங்கும் விலையைப் பயன்படுத்தக்கூடாது என நான் கருதுகிறேன். பண்டத்தில் தரப்படும் செலுத்துகை களின் மதிப்பீட்டிலும் அதே தர்க்கவாதம் பொருந்தும் எனக் கருதுகிறேன். ஏனெனில், இதிலும், பண்டத்திலேயே கூலி பெறும் தொழிலாளிக்குத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பும் ஏனைய வசதிகளும் இல்லாமையால் அவன் குறைந்த நுகர்வோர் வருமானத்தையே அடைகின்றான். எனவே, உற்பத்தியாளர் விலைகளின் அடிப்படையில், அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லாத பண்டங்களைக்கொண்ட உற்பத்தியின் ஏற்றிச் சொல்லப்பட்ட மதிப்புகளைக்கொண்ட தேசிய வருமானங்களில் உண்மை வருமானம் குறைத்து மதிப்பீடு செய்யப்படவில்லை என நான் கருதுகிறேன்.

மதிப்பீட்டில் சொந்தக்காரர்களே குடியிருக்கும் வீடுகளின் நிகர வாடகை என்பது ஒரு கடின பிரச்சினையாகும். குறிப்பாக, வளர்ச்சி குறைந்த நாடுகளில் நாட்டுப்புறத்து வீடுகளை விற்பதோ அல்லது வீட்டு அறைகளை வாடகைக்கு விடுவதோ ஒரு விதிவிலக்காக இருக்கும்பொழுது, சொந்தக்காரர்களே குடியிருக்கும் வீடுகளின் நிகர வாடகையை நாட்டுப்புறத்து வீடுகளுக்குப் பொருத்திப் பார்த்தால் அது மதிப்பீட்டில் ஒரு கடினமான பிரச்சினையே என்பது தெளிவாகிறது. எனவே, நாட்டுப்புறத்து வீடுகளின் உத்தேச மதிப்பிலிருந்து 6 சதவீத மொத்த வருமானத்தைக் கணக்கிட்டு, அதிலிருந்து அவ் வீடுகளை நல்ல முறையில் வைத்துக்கொள்ளவும் ரிப்பேர்களைச் செய்யவும் உத்தேசமாக ஆகும் ஓராண்டுச் செலவினைக் கழித்து, இந்தியா போன்ற நாடுகளிலுள்ள கிராமத்து வீடுகளின் வாடகை மதிப்பைக் கணக்கிடவேண்டும். தொழில்மயமான நாடுகளில் பின்பற்றப்படும் முறைகளே வேறாகும். உண்மையில் வாடகைக்கு விடப்பெற்ற வீடுகளின் நிகர வாடகைகளைக் கொண்டே, சொந்தக்காரரே குடியிருக்கும் வீடுகளின் நிகர வாடகைகளைக் கணிப்பது தொழில்மயமான நாடுகளில் வழக்கி லிருக்கிறது; இதற்குக் காரணம், குடியிருப்பதற்குரிய வீடு களுக்கு என ஓர் அங்காடிப் பொருளாதாரம் அந்த நாடுகளில் உருவாகியுள்ளது. இத்தகைய பல்வேறு மதிப்பீட்டு முறைகளி லிருந்து தேர்ந்தெடுப்பதானது, நாடுகளின் உண்மை வருமா னத்தில் எத்தகைய வேறுபாட்டினை உண்டாக்குகிறது என்ற கேள்விக்குக் காரணகாரிய அடிப்படையில் பதிலளிப்பது கடினமே. இவ்விடத்தில் சொல்லக்கூடியது என்னவெனில், வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய வருமானங்களில் இடம் பெற்றுள்ள, சொந்தக்காரரே குடியிருக்கும் வீடுகளின் நிகர

வாடகைகளின் மதிப்பு அடிப்படையானது ஏனைய இனங்களின் மதிப்பு அடிப்படைக்கு மாறானதாகும்; அது எந்த அளவிற்கு மாறானதாக இருக்கிறதோ அந்த அளவிற்கு, அந் நாடுகளின் பொருளாதார நலனின் கூட்டிய மொத்தங்களுக்குச் சமமாக அவற்றின் தேசிய வருமான மொத்தங்களைக் கணக்கிடுவதில் அந் நிகர வாடகைகள் இடர்ப்பாடுகளை உண்டாக்குகின்றன. என்னுடைய கருத்தின்படி, சாதாரணமாக இத் தலைப்பின்கீழ் எழுதும் நிபுணர்கள் வலியுறுத்துகின்ற, அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லாத பண்டங்களைக்கொண்ட உற்பத்திக் காரணியைவிட வளர்ச்சி குறைந்த நாடுகளில் சொந்தக்காரரே குடியிருக்கும் வீடுகளின் நிகர வாடகைகளைக் குறிக்கும் இனமானது, வளர்ச்சி குறைந்த நாடுகள், தொழில்மயமான நாடுகள் ஆகியவற்றின் தேசிய உண்மை வருமானங்களை ஒப்பிடுவதில் அதிகத் தொல்லையைக் குறிப்பதாகும்.

அரசாங்கப் பணிகள் சாதாரணமாகவே சர்வாதீனத்தைக் குறிப்பதால், பொருளாதார நலன்பற்றிய முடிவுகள் எடுப்பதில் அரசாங்கப் பணிகளின் மதிப்பீடு பெரும் தொல்லைகளை உண்டாக்குகின்றன. எனவே, இத்தகைய அரசாங்கப் பணிகளுக்கு உரிய சுயேச்சை அங்காடி மதிப்பீடு என்பதாக ஒன்று இல்லை. எனினும், எல்லா நாடுகளைப் பொறுத்தவரையிலும் இது உண்மைதான். பல்வேறு நாடுகளின் இத்தகைய பணிகள் (அவற்றுள் சில ஒரே மாதிரியானவை) எந்த வீதங்களில் மதிப்பீடு செய்யப்பட்டனவோ அந்த வீதங்களினால் ஒப்புமையில் தொல்லைகள் ஏற்பட்டபோதிலும், எல்லா நாடுகளைப் பொறுத்தவரையிலும் அது உண்மைதான். வளர்ச்சி குறைந்த நாடுகளைப் போலன்றித் தொழில்மயமான நாடுகளில் அரசாங்கப் பணிகளின் பங்கு மிகுதியாக உள்ளதால் ஒப்புமையில் இடர்ப்பாடுகள் எழுகின்றன. ஆனால், ஒவ்வொரு நாட்டின் கோணத்திலிருந்தும் பார்க்கும்பொழுது, அரசாங்கப் பணிகளை ஒரே மாதிரியான அடிப்படையிலேயே மதிப்பீடு செய்கின்றனர். அதாவது, அங்காடி அடிப்படையில் அல்லாமல் சமுதாயக் கைக்கோள் அடிப்படையிலேயே அரசாங்கப் பணிகளை மதிப்பீடு செய்கின்றனர். எனவே, இது ஒரு தனித்த தொல்லையினைக் கொண்டதாக இல்லை. மற்ற நாடுகளைப் போலல்லாமல் சில நாடுகளில் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அரசாங்கப் பணிகளின் மதிப்பு மிக உயர்ந்த விலைகளின் அடிப்படையில் உள்ளது என்ற தொல்லையைத்தவிர வேறு தனித்த தொல்லை ஏதும் கிடையாது. உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவுடன்

ஒப்பிடும்பொழுது, இந்தியாவில் இது உண்மையாகவிருக்கும். அண்மைக் காலங்களில் அந்நிய ஆட்சியில் கிடந்த அல்லது அந்நிய ஆட்சியில் இன்னும் வதிகின்ற வளர்ச்சி குறைந்த நாடுகளில் பொதுவாக இது உண்மையாகவிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

உத்தியோகப் பணிகளின் மதிப்பீடும் வீட்டுப் பணிகளின் மதிப்பீடும் தொல்லை நிறைந்த சிக்கல்களை எழுப்புகின்றன. ஏனெனில், பண்டங்களைப்போன்றே ஒரே மாதிரியான அங்காடிப் பொருளாதாரத்திற்கு அப் பணிகள் கட்டுப் பட்டவைகளல்ல. அநேக காரியங்களில் இத்தகைய பணிகளை விற்போர், விலை பேதம் காணும் சர்வாதீனமுறையைப் (discriminating monopoly) பின்பற்றுகின்றனர். பெரும்பாலான காரியங்களில், பண்டங்களைவிட இத்தகைய பணிகளின் விலைகள் ஒவ்வொரு நாட்டின் தேசிய வருமானத்தின் பொது மட்டத்தைப் பிரதிபலிக்கின்றன. ஒவ்வொரு நாட்டிலும் இவை உண்மையே. எனினும், தொழில்மயமான நாடுகளிலும் வளர்ச்சி குறைந்த நாடுகளிலும் நிலவும் ஒரே மாதிரியான பணிகளுக்கு வெவ்வேறு மதிப்பீடுகள் கணக்கிடப்பட்டமையால் ஒப்புமையில் தொல்லைகள் எழுந்தன. அடுத்துவரும் பகுதியில் இக் கேள்வியை ஆராய்வோம்.

ஒரு நாட்டிற்குள்ளேயே, பண மதிப்புகளில் விளைந்த உண்மை வருமான வட்டார வேற்றுமைகளைப் பொறுத்தவரையில், இத்தகைய வருமானங்களின் பண மொத்தங்களிலிருந்து பொருளாதார நலனை முடிவுகட்டுவதில் இது இடர்ப்பாடுகளை உண்டாக்குகிறது என்பதில் சந்தேகமில்லை. எனினும், இத் தொல்லை தொழில்மயமான நாடுகளுக்கும் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கும் பொதுவே. ஒரு குறிப்பிட்ட பண வருமானத்தைச் சார்ந்த உண்மை வருமானம் தொழில்மயமான நாடுகளைவிட வளர்ச்சி குறைந்த நாடுகளில் இன்னும் மிகுதியாக வேறுபடுகிறது என்ற வழக்கமான எடுகோள் உண்மையில் சரியில்லை. போதுமான அளவுக்கு வளர்ச்சியுறாத பெருமளவு உற்பத்தி, தரப்படுத்துதல், கடத்து வசதிகள் முதலியன வளர்ச்சி குறைந்த நாடுகளில் குறிப்பிடத்தக்க விலை வரிசைகளை (ranges of prices) உண்டாக்கியுள்ளன. ஆனால், விளம்பரம், சமூகத் தரங்கள், தொழில்மயமான நாடுகளில் வருமான மட்டங்களில் இன்னும் பெருமளவில் நிலவும் வேறுபாடுகள் முதலானவைகள்கூடத் தொழில்மயமான நாடுகளிலேயே குறிப்பிடத்தக்க விலைவரிசைகளை உண்டாக்கியுள்ளன. எனினும், சிலவேளைகளில் இவை தர வேறுபாடுகளின் பின்னே மறைந்து

கிடக்கின்றன. இவ்வாருக, தட்பவெப்ப நிலையிலுள்ள வேறுபாடுகளின் காரணமாக எழும் செலவின வேறுபாடுகள், தொழில்மயமான நாடுகளிலிருத்தல்போலவே வளர்ச்சி குறைந்த நாடுகளிலும் இருப்பன. அவ் வேறுபாடுகள் நாட்டின் பருமனையும், அதன் பொது நிலவியல் சூழ்நிலையையும் பொறுத்தவைகளாகும். இச் சூழ்நிலைகளில், ஒரே நாட்டில் நிலவும் வட்டார வேறுபாடுகள், தொழில்மயமான நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது, வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கே உரிய பிரச்சினையை உண்டாக்குவதாகத் தெரியவில்லை.

இதுவரையில் விவாதிக்கப்பெற்ற விஷயங்களின் பொழிப்பு எதுவெனில், தொழில்மயமான நாடுகள் வளர்ச்சி குறைந்த நாடுகள் ஆகியவற்றின் தேசிய வருமானங்களில் அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லாத உற்பத்தியின் ஏற்றிச் சொல்லப்பெற்ற மதிப்புகளும், அரசாங்கப் பணிகளின் மதிப்பும், உத்தியோகங்களின் மதிப்பும், வீட்டுப் பணிகளின் மதிப்பும் அடங்கியுள்ளன என்பதேயாம். இத்தகைய இனங்களின் மதிப்பீட்டினை அங்காடிப் பொருளாதாரக் கோட்பாடுகள் கணக்கிட்டு நிர்ணயிக்கவில்லை. எனவே, தேசிய உற்பத்தியின் மற்றப் பகுதிகள் பொருளாதார நலனில் கொண்டுள்ள பங்குடன் ஒப்பிடுகையில், மேலே குறிப்பிட்ட இனங்கள் தேசியப் பொருளாதார நலனில் கொண்டுள்ள பங்கினைக் குறித்துக் கணக்கிடுதலில் தொல்லைகள் உண்டாகின்றன. பல்வேறு நாடுகளுக்கிடையே உண்மை வருமான ஒப்புமைகளிலும் தொல்லைகள் உண்டாகின்றன. இந்தக் கூறுக்கு ஏதேனும் புள்ளிவிவர ரீதியான சலுகையோ அல்லது கணிய ரீதியான சலுகையோ காட்டும் வழி தோன்றவில்லை. ஆனால், அக் கூறு குறிப்பிடத்தக்க அளவிற்கு பெருகிநின்றால் அதைப்பற்றிக் குறிப்பிட்டுக் காட்டலாம்.

மாற்று வீதங்கள்

தேசிய வருமானத்தின் சில இனங்களின் மதிப்பீட்டினைக் கணக்கிடும் வழிமுறைகளிலுள்ள வேறுபாடுகளின் காரணமாக, ஒவ்வொரு தனி நாட்டின் பொருளாதார நலனைக் குறித்துக் காட்டும் அடையாளமாகத் தேசிய வருமானத்தைப் பயன்படுத்துவதில் சிக்கல்கள் எழுந்தன என்பதை முந்திய பகுதியில் கண்டோம். குறிப்பிட்ட தேசிய வருமானங்களை அதே நாணயத்தில் துவக்கத்திலேயே கணக்கிட்டபோதிலுங் கூட, நாடுகளுக்கிடையே ஒப்பிடுதலில் இது தொல்லைகளை உண்டாக்குகின்றது என்பதையும் கண்டோம். எனினும்

உண்மையில், வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு நாணயங்கள் உள்ளன. எனவே, அந் நாடுகளின் தேசிய வருமானங்களின் பண மொத்தங்களை ஏதோ ஒரு நாட்டின் நாணயத்திற்கு மாற்றிக்கொண்டால்தான், ஒப்பிட்டுப் பார்க்கமுடியும். இக் காரியத்திற்காக, வெவ்வேறு நாணயங்களுக்கிடையில் நிலவும் சட்டபூர்வமான மாற்று விகிதம் பயன்படுத்தப் படுகிறது. நாடுகளுக்கிடையே நிலவும் தேசிய உண்மை வருமானங்களை ஒப்பிடுவதில், குறிப்பாகத் தொழில்மயமான நாடுகளுக்கும் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குமிடையில் அவற்றை ஒப்பிடுவதில் உள்ள மிகப் பெரும் இடர்ப்பாட்டிற்குக் காரணம், நாணயங்களின் சட்டபூர்வமான மாற்று விகிதத்தை இதில் பயன்படுத்துவதேயாகும். தொழில்மயமான நாடுகளுக் கிடையிலேயேகூட இச் சிக்கல் நிலவுகிறது. ஆனால், தொழில் மயமான நாடுகளுக்கும் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கும் இடையில் இச் சிக்கல் இன்னும் அதிகமான அளவிற்கு நிலவுகிறது. உண்மையில், இந்திய ரூபாய் நாணயத்திற்கும் அமெரிக்க டாலருக்குமுள்ள சமநிலை மாற்று மதிப்பு (exehange value at par), அவ்விரு நாணயங்களுக்கிடையிலுள்ள மதிப்பு விகிதத்தை (ratio of value) முழுமையான பொருளிலோ அல்லது பொருளாதார நலன்சார்ந்த அளவிலோ குறிக்கவில்லை. எனினும், நாடுகளுக்கிடையே நிலவும் தேசிய வருமானங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காகவேண்டி, சமநிலை மாற்று மதிப்பின் மூலம் ஒரு நாட்டின் தேசிய வருமானத்தை இன்னொரு நாட்டின் நாணயத்தில் கணக்கிட்டு மாற்றுகிறார்கள். இம் முறையினால் ஏற்படும் தொல்லையினை ஒவ்வொருவரும் உணர்ந்துள்ளனர். எனினும், நாடுகளுக்கிடையே ஒப்பிடுதலில், வேறொரு மாற்று விகிதத்ினைக் கண்டுபிடிக்கவேண்டி யாரும் திருப்தியளிக்கும் வண்ணம் முயற்சி ஒன்றிலும் ஈடுபடவில்லை.

பல்வேறு நாணயங்களில் குறிக்கப்பெற்றுள்ள தேசிய வருமானங்களை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டி பொருத்தமான மாற்று விகிதத்தை எப்படி உருவாக்குவது என்ற கேள்விக்கு விடையாக வாங்கும் சக்தி சமநிலைக் கோட்பாட்டினை (purchasing power parity theory) நினைத்துப் பார்ப்பது வழக்க மாகும். எனினும், இந்த முறையில் அநேகத் தடைகள் உள்ளன.

முதலில், தேசிய வருமானத்தில் இடம்பெறும் பண்டங் களும் பணிகளும் பல்வேறு நாடுகளில் ஒரே மாதிரியாக இல்லை. குறிப்பாக, தொழில்மயமான நாடுகளிலும் வளர்ச்சி குறைந்த நாடுகளிலும் இது உண்மையே. தொழில்மயமான நாடுகளின்

தேசிய வருமானங்களில் இடம்பெறும் இனங்கள் வளர்ச்சி குறைந்த நாடுகளின் வருமானங்களில் இடம்பெறும் இனங்களின் எண்ணிக்கையைவிட அதிகமாகவும், அவற்றிலுள்ள வகைகளைவிட அதிகமான வகைகளைக் கொண்டதாகவும் இருக்கின்றன. எனவே, பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் அகன்ற பகுப்புகளுக்குரிய விலை-குறியீட்டெண்பற்றிய குறிப்பின் (price-index data) அடிப்படைமீது நாடுகளுக்கிடையே நிலவும் பணவாட்டத்தைப் பயன்படுத்தி மாற்று விகிதத்தை உருவாக்கும் எந்த முயற்சியும் திருப்தி அளிக்கக் கூடியதன்று. ஏனெனில், அப் பகுப்புகளிலேயே உள்ள, துய்ப்பிற்குரிய முக்கிய இனங்கள் அந்த முயற்சியில் விடுபட்டுள்ளன.

மேலும், ஒரே மாதிரியாக இருப்பனபோல் தோன்றும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றினிடையே முக்கியமான தர வேறுபாடுகள் உள்ளன. எனவே, அவற்றின் விலைவிகிதங்களை நேரடியாக ஒப்பிட்டுப் பார்த்தல் முடியாது. வளர்ச்சி குறைந்த நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்கும்பொழுது, தொழில்மயமான நாடுகளில் இது உண்மையாகும். நலன் குறித்த ஒப்புமை மட்டங்களில் நிலவும் வேறுபாடு, தொழில்மயமான நாடுகளில் மிகுதியான எண்ணிக்கையைவிட உயர்ந்த தரத்தைப் பொறுத்தே ஏற்படுவதாகும். இவ்விரு வகைத்தாய நாடுகளின் உணவுத் துய்ப்பை ஒப்பிடுதல்மூலம் இதனை விளக்கலாம். உதாரணமாக, கலோரிகளில் (calories) அல்லது புரோட்டீன்களில் (proteins) ஐக்கிய அமெரிக்காவின் தலா துய்ப்பு (per capita consumption) இந்தியாவின் தலா துய்ப்பைவிட இரண்டு மடங்கிற்குமேல் இருக்காது எனத் தோன்றும். உண்மையில், ஐக்கிய அமெரிக்காவில் மிக உயர்ந்த தரமான உணவை உண்ணுகின்றனர். ஆதலால், தலா துய்ப்பின் வேறுபாடு கணிசமான அளவிற்குக் கூடுதலாகவே இருக்கமுடியும். ஐக்கிய அமெரிக்காவின் உணவுத் துய்ப்பில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பயன்படுத்தப்பெறும் தானியங்களின் அளவில் சம மதிப்புள்ள அல்லது ‘மூல முதலான கலோரியில்’ சம மதிப்புள்ள பொருள்களை எடுத்துக்கொண்டு இந்தியாவின் உணவுத் துய்ப்பில் பயன்படும் அதே சம மதிப்புள்ள பொருள்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தியாவைவிட ஐக்கிய அமெரிக்காவில் நான்கு மடங்கிற்கும் மேலான துய்ப்பு இருக்கிறது என்பது தெளிவாகும். இரு நாடுகளிலும் துய்க்கப்படும் ஒரே மாதிரியான இடுபெயர்த் தொகுதியைச் சார்ந்த பண்டங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதிலிருந்தும் தர வேறுபாடுகளைக் காணமுடியும்; இதற்கு எண்ணற்ற உதாரணங்

களைத் தரமுடியும். எனவே, நாடுகளுக்கிடையே உண்மை வருமானங்களை ஒப்பிட்டு நோக்குவதற்குச் சரியான மாற்று விகிதமாக வாங்கும் சக்தி சமநிலைக் கோட்பாட்டினைப் பயன் படுத்துவதில் மற்றுமோர் குறைபாடு ஏற்பட்டுள்ளது என்பதனையே இது குறிக்கும்.

இன்னும், பல்வேறு நாடுகளுக்கிடையே, குறிப்பாகத் தொழில்மயமான நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகள் ஆகிய வற்றிற்கிடையே, 'இறுதி'ப் பணிகளின் விலைகள் மிகவும் வேறுபடுகின்றன. எடுத்துக்கொண்ட பணிகளின் தரம் பெரிதும் வேறுபடுவதாலும், ஒரே நாட்டிற்குரிய பெரும் பாலான பணிகள் வேறு எந்த நாட்டிலும் இல்லாமையாலும் நேரடியான விலை ஒப்புமைத்தொல்லை நிறைந்ததாக இருக்கிறது. பொதுவாகச் சொன்னால், அத்தியாவசியமான பண்டங்களை விட இல்லத்தொழில் பணிகளிலும் உத்தியோகத்துறைப் பணிகளிலும், ரூபாய் நாணயத்தில் டாலரின் வாங்கும் சக்திச் சமநிலை சட்டபூர்வ மாற்று விகிதத்தைவிடக் குறைவாக இருக்கும். இந்தியாவில் பணிகளை விலைக்கு வாங்குகின்ற மத்தியதர, பணக்கார வகுப்புகளைச் சார்ந்தோரின் வருமா னங்களை டாலரில் கணக்கிட்டு நிர்ணயிக்கப்பெறும் வாழ்க்கைத் தரத்தைவிட உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையே அவர்கள் அனுபவிக்கின்றனர். ஆனால், இந்தியாவில் பணிகளை விலைக்கு விற்போர்—முக்கியமாக, தரகர்கள், உத்தியோகத் தொழில் துறையினர், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் முதலானோர்— ஐக்கிய அமெரிக்காவில் உள்ளவர்களைப்போன்ற சரிநேர் அலுவலர்களைவிட நன்னிலையிலேயே உள்ளனர். இது, வாங்கும் சக்திச் சமநிலைக் கோட்பாட்டிலுள்ள இன்னுமொரு குறை பாடாகும்.

நாட்டுப்புறத்து வர்க்கத்தினரிடத்தும், நகரத்து வர்க்கத் தினரிடத்தும், பல்வேறு வருமானப் பிரிவினரிடத்தும் புழக் கத்திலுள்ள உள்நாட்டு நாணயத்தின் வாங்கும் சக்தியில், அவர்களைப் பொறுத்தவரையிலும், குறிப்பிடத்தக்க வேறுபாடு உள்ளது. நாடுகளுக்கிடையே ஒப்பிட்டு நோக்குவதில் இது சிக்கலை உண்டாக்குகிறது. உதாரணமாக, அவ்விரு நாடுகளில், ரூபாய் நாணயத்தில் டாலரின் வாங்கும் சக்திச் சமநிலையானது, நகர வர்க்கத்தினரைவிடக் கிராம வர்க்கத்தினரிடையேதான் வேறுபாடு கொண்டிருக்கிறது; அவ்வாறே, மத்தியதர, பணக்கார வர்க்கத்தினரைவிடத் தொழிலாளர் வர்க்கத்தின ரிடையேதான் வேறுபாடு கொண்டிருக்கிறது. கடைசியில், விலைகள், இனங்கள், ஒவ்வோர் இனத்துடன் இணைக்க

வேண்டிய நிறைகள் (weight) ஆகியவைபற்றிய குறிப்புக்கிடைக்காமையினால் ஏற்படும் உண்மையான புள்ளிவிவரத் தொல்லையும் உள்ளது.

நாடுகளுக்கிடையே தேசிய உண்மை வருமானங்களை ஒப்பிட்டு நோக்க, வாங்கும் சக்திச் சமநிலைக் கோட்பாடு பயனுடையதாக இருப்பது சுலபமன்று என்பதனையே இவையனைத்தும் குறிப்பன. எனினும், இத் துறையில் இன்னும் ஆராய்ச்சி வேலைகள் நடைபெறவேண்டியது அவசியமே. தொழில்மயமான நாடுகளிலும் வளர்ச்சி குறைந்த நாடுகளிலும் உள்ள பல்வேறு இடங்களில் உள்ளவர்கள், பல்வேறு வர்க்கத்தினர், வருமானப்பிரிவினர் முதலானோர் துய்க்கும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் விலைகள், அளவு, எண்ணிக்கைபற்றிய ஒப்பீடு சார்ந்த குறிப்புகளைச் சேகரிக்கவேண்டியது அவசியமே. இதற்குப் பல்வேறு நாடுகளிலுள்ள ஆராய்ச்சியாளர்களின் கூட்டுழைப்புத் தேவை. வருமானம், செல்வம்பற்றிய ஆராய்ச்சிக்குரிய பன்னாட்டுக் கழகத்தின் நல்லெண்ணம் படைத்த முயற்சியில் இத்தகைய ஆராய்ச்சிகள் செய்யமுடியும் என்று நான் நம்புகிறேன். பன்னாட்டு ஆராய்ச்சியின் பயனுள்ள இத் துறைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிவர அலுவலகம் தன் கவனத்தைத் திருப்பும் என்றும் நான் நம்புகிறேன்.

இப் பகுதியை முடிப்பதற்கு முன்னர், தொழில்மயமான நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகள் ஆகியவற்றின் சமநிலை மாற்று மதிப்பிற்கும் அந் நாடுகளின் வாங்கும் சக்திச் சமநிலை விகிதங்களுக்கும் (அவ் விகிதங்கள் எப்படிக் கணக்கிடப்பட்டிருந்தபோதிலும் சரியே) இடையில் நிலவும் வேறுபாடுபற்றி ஒரு சுருக்கமான விளக்கம் தர விரும்புகிறேன். என்னுடைய முடிவினை ஆதரிக்கும் விரிவான குறிப்பு ஏதும் இல்லை என்றபோதிலும், தர வேறுபாடுகளை ஏற்றுக்கொண்ட பிறகும், வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய வருமானங்களில் இடம்பெறும் கணிசமான எண்ணிக்கையுள்ள பண்டங்களின் விலைகளைத் தொழில்மயமான நாடுகளின் நாணயங்களுக்கு மாற்றினால், தொழில்மயமான நாடுகளின் பண்டங்களின் விலைகளைவிடக் குறைவாகவே இருக்கும். பணிகளின் விலைகளில் இன்னும் மிகுதியான அளவிற்கும்கூட இது உண்மையாகும். சட்டபூர்வ மாற்றுவிகிதத்தினைக்கொண்டு பொது நாணய அலகுகளுக்கு உண்மை வருமானங்களை மாற்றினால், தொழில்மயமான நாடுகளைவிட வளர்ச்சி குறைந்த நாடுகளில் உண்மை வருமானங்கள் கணிசமான அளவிற்குக் குறைத்து மதிப்பீடு

செய்யப்படுகிறது என்ற முடிவு இதிலிருந்து கிடைக்கிறது. தலா உண்மை வருமானங்களின் குறைந்த மதிப்பீட்டின் அளவானது, அவ் இருவகைத்தாய நாடுகளில் வெவ்வேறு மையங்களில் வெவ்வேருகவும், அதுபோலவே வெவ்வேறு வருமானப் பிரிவுகளுக்கு வெவ்வேருகவும் உள்ளது.

முடிவுகள்

தொழில்மயமான நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகள் ஆகியவற்றின் தேசிய உண்மை வருமானங்களின் ஒப்புமை பற்றிய பிரச்சினைபற்றி இக் கட்டுரையில் வரும் முக்கியக் கருத்துகளைத் தொகுத்துத் தருகிறேன்.

பருமம், மதிப்பு ஆகிய இரு தலைப்புகளின்கீழ்த் தேசிய வருமானம்பற்றி நான் விளக்கியுள்ளேன். பருமங்களைப்பற்றி முதலில் விளக்கினேன். அவற்றிலிருந்து ஒதுக்கப்பெற்ற இனங்களின் பிரச்சினை குறித்து விவாதித்தேன். இருவகைத் தாய நாடுகளின் தேசிய வருமானக் கணிப்புகளிலிருந்தோ அல்லது ஏதேனும் ஒருவகையான நாடுகளின் தேசிய வருமானக் கணிப்புகளிலிருந்தோ எத்தகைய பண்டங்களும் பணிகளும் விலக்கப்பட்டன என்பதுபற்றியும், இவ்வாறு விலக்கியமை உண்மை வருமான ஒப்புமையை எவ்வாறு பாதிக்கிறது என்பதுபற்றியும் விவாதித்தேன். இல்லத்தொழில் பணிகள் பற்றிய சோர்வூட்டும் கேள்வி ஆராயப்பட்டது. தொழில் மயமான நாடுகளிலும் வளர்ச்சி குறைந்த நாடுகளிலும் தன் துய்ப்பிற்காக இல்லத்தொழில்கள்மூலம் உற்பத்தியான பணி களின் இயல்பு ஒரே மாதிரியாக இல்லையெனினும், பருமத் தையும் ஏற்றிச் சொல்லப்பட்ட மதிப்பையும் பொறுத்த வரையில், இத்தகைய பணிகள் அவ் இருவகைத்தாய பொரு ளாதாரங்களில் முக்கிய அங்கம் வகிக்கின்றன. எனவே, வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய வருமானங்களிலிருந்து தன் துய்ப்பிற்காக உற்பத்தி செய்யப்படும் வீட்டுப்பணியையும் ஏனைய இல்லத்தொழில் பணிகளையும் நீக்கியமையானது, தொழில்மயமான நாடுகளின் தேசிய உண்மை வருமானங் களுடன் ஒப்பிடும்பொழுது, வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய உண்மை வருமானங்களின் மதிப்பீட்டினைக் குறைத்துக் காட்டவில்லை.

இருவகைத்தாய நாடுகளின் தேசிய வருமானங்களிலிருந்து நீடித்துழைக்கும் துய்ப்புப் பண்டங்களின் ஏற்றிச் சொல்லப் பட்ட வருமானத்தை நீக்கியமையானது, தொழில்மயமான

நாடுகளின் உண்மை வருமானத்தைக் குறைத்து மதிப்பீடு செய்திடும் விளைவினை ஏற்படுத்தியுள்ளது ; ஏனெனில், தொழில் மயமான நாடுகளின் பொருளாதாரங்களில் நீடித்துழைக்கும் துய்ப்புப் பண்டங்கள் அதிக முக்கியத்துவம் நிறைந்த பங்கினை வகிக்கின்றன. தொழில்மயமான இத்தகைய நாடுகளின் தேசிய வருமானத்திலிருந்து பொதுக் கட்டடங்களின் ஏற்றிச் சொல்லப்பட்ட மதிப்பினை நீக்கியமையும் இதே உண்மையைக் காட்டும்.

அடுத்து, இந்நாடுகளில் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் தேசியத் தொகுப்புகளில் சேர்க்கப்பட்ட இனங்களைப் பற்றிக் குறிப்பாக, பணிகள் சார்ந்த இனங்கள்பற்றி நான் ஆராய்ந்தேன். இவ்வினங்களில் மொத்தத் தன்மையின் கூறு சேர்ந்துள்ளதா என்பதையும் ஆராய்ந்து பார்த்தேன். தொழில் வளர்ச்சியுற்ற சமூகத்தில் செலவு இனங்களைக் குறிக்கும் பணிகளைப்பற்றியும் எடுத்துக்காட்டியுள்ளேன். அப் பணிகளையும் உண்மை வருமானத்தில் சேர்ப்பதானது, தொழில்மயமான நாடுகளின் உண்மை வருமானத்தை மிகைப் படுத்தி மதிப்பீடு செய்யும் விளைவினை உண்டாக்கும் என்று நான் குறிப்பிட்டுள்ளேன்.

அடுத்து, இத்தகைய தேசியத் தொகுப்புகளில் சேர்க்கப் பட்டுள்ள பண்டங்களும் பணிகளும் எந்த அளவிற்குப் பொருளாதார நலனின் மட்டங்களைக் குறிப்பன என்பதுபற்றியும் ஆராய்ந்துள்ளோம். விருப்பங்களின் இயல்பு. இவ் இரு வகைத்தாய நாடுகளிலும் ஓரியல்பான விருப்பங்களை நிறைவேற்றத் தேவைப்படும் பண்டங்கள் அல்லது பணிகளின் பருமம், இவ் விருப்பங்களில் முறையே நலன் குறைந்து செல்லும் கூறின் அளவு, பொதுவில் விருப்பங்களைப் பொறுத்தும், அவற்றின் அதிகரிப்பைப் பொறுத்தும் எழுகின்ற தேசிய மனப்பான்மைகள்பற்றிய பிரச்சினை முதலானவைகள் குறித்து ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியமாயிற்று. இறுதியில், இவ் ஆராய்ச்சிகளிலிருந்து மொத்தத்தில் தெரியவருவது என்னவெனில், வளர்ச்சி குறைந்த நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது, தொழில்மயமான நாடுகளின் உண்மை வருமானத்தில் மிகைமதிப்பீட்டுக்கூறு இருக்கின்றது என்பதே.

ஒவ்வொரு தனி நாட்டின் கோணத்திலிருந்தும், எல்லா நாடுகளின் உண்மை வருமான ஒப்புமைக் கோணத்திலிருந்தும் மதிப்பீட்டுப் பிரச்சினை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்படு

கிறது. இருவகைத்தாய நாடுகளின் தேசிய வருமானங்களிலும் அங்காடிக்கு விற்பனைக்குச் செல்லாத உற்பத்தியின் ஏற்றிச் சொல்லப்பட்ட மதிப்புகளும், அதுபோலவே உற்பத்தியின் ஏற்றிச் சொல்லப்படாத மதிப்புகளும் இடம் பெற்றுள்ளன. உற்பத்தியின் ஏற்றிச் சொல்லப்படாத மதிப்புகளும் அரசாங்கப் பணிகள், உத்தியோகத்துறைப் பணிகள், வீட்டு வேலைக்காரரின் பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியின் மதிப்புகளைக் குறிப்பனவாகும். இவை அங்காடிப் பொருளாதாரத்தில் நன்கு இயங்குவதில்லை. ஒவ்வொரு தேசிய வருமானத்தையும் நலனின் முழுமையான மட்டத்தினைக் குறிக்கும் அடையாளமாகக் கொள்வதில் இவ்வினங்கள் தொல்லைகளை உண்டாக்கிய போதிலும், உண்மை வருமானங்களை ஒப்பிடுவதை அவை வெகுவாகப் பாதிக்கவில்லை. இவ் இருவகைத்தாய நாடுகளில் நிலவும் வட்டார விலையைப் பொறுத்தவரையிலும் துய்ப்பு—செலவு வேறுபாடுகளைப் பொறுத்தவரையிலும் மேலே குறித்துள்ளதே உண்மையாகும்.

இறுதியாக, ஒரு பொது அலகில், தேசிய வருமானங்களை முறையே கணக்கிடுவதற்காக சமநிலை மாற்று மதிப்பினைப் பயன்படுத்தி உண்மை வருமானங்களை ஒப்பிடுவதில் ஏற்படும் விளைவுகளைப்பற்றி ஆராய்ந்தோம். தொழில்மயமான நாடுகளின் தேசிய வருமானங்களில், பண்டங்களை உள்ளடக்கிய உற்பத்தியின் மதிப்பைச் சார்ந்த மிகைமதிப்பீட்டுக்கூறு உள்ளது என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. வளர்ச்சி குறைந்த நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது, பணிகளை உள்ளடக்கிய உற்பத்தியின் மதிப்பைச் சார்ந்த மிகைமதிப்பீட்டுக் கூறு இன்னும் பெருமளவில் உள்ளது என்ற முடிவும் எடுக்கப்பட்டுள்ளது.

தொழில்மயமான நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகள் ஆகியவற்றின் தேசியப் பணவருமானங்களை ஒரு நாட்டின் நாணய அலகுகளில் ஒப்பிடுதலானது, வளர்ச்சி குறைந்த நாடுகளைவிடத் தொழில்மயமான நாடுகளின் உண்மை வருமானத்தில் குறிப்பிடத்தக்க மிகைமதிப்பீட்டுக்கூறினை நிச்சயமாக மறைத்துள்ளது என்ற பொது முடிவினை இக் கட்டுரையிலிருந்து நாம் பெறலாம். இதற்குப் பொருள், வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய வருமானங்களைக் கூட்டியே, தொழில்மயமான நாடுகளின் தேசிய வருமானங்களுடன் ஒப்பிட வேண்டும் என்பதல்ல; ஆனால், தொழில்மயமான நாடுகளின் தேசிய வருமானங்களைக் கழிக்கவேண்டும் என்பதே இதன் பொருளாகும். வேறு முறையில் சொல்ல

வேண்டுமெனில், தேசிய வருமானங்களின் ஒப்புமைப் பருமங்களிலிருந்து தோன்றுவதுபோல, தொழில்மயமான நாடுகள் வளர்ச்சி குறைந்த நாடுகளைப்போல 'நன்னிலை'யிலோ அல்லது அவற்றைவிட 'உயரிய நிலை'யிலோ இல்லை எனலாம். தொழில்மயமான நாடுகளின் உண்மை வருமானங்களில் நிலவும் மிகைமதிப்பீட்டினைக் குறித்துப் புள்ளிவிவர ரீதியான விளக்கம் தருவது மிகவும் கடினமாகும். என்றபோதிலும், இதுவரையில் மேற்கொள்ளாத, விரிவான ஆராய்ச்சிகளைச் செய்து, இப் பிரச்சினைபற்றி ஒரு தெளிவினை ஏற்படுத்த முடியும். அதே வேளையில், உண்மை வருமானத்திலும் மிகை மதிப்பீடு நிலவுகிறது. எனவே, நடப்பு ஐ. நா. சபையின் வெளியீடுகளில் வருவதுபோல், குறிப்பாகத் தொழில்மயமான நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகள் ஆகியவற்றின் தேசிய வருமான ஒப்பீடுகள்பற்றிய கணக்கினால் ஏதேனும் பயனுள்ள காரியம் நடக்கிறதா என்பது சந்தேகமே. தேசிய வருமான மொத்தங்களை விட்டுவிட்டு, துய்ப்பு, உற்பத்தித் திறன் போன்றவற்றின் ஒப்புமைக் கணக்குகள்மூலம் உண்மை வருமானங்களை நேரடியாக ஒப்பிட்டுப் பார்த்து இன்னும் பயனுள்ள முறையில் குறிக்கோளினை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. வருமானம், செல்வம் பற்றிய ஆராய்ச்சி செய்யும் பன்னாட்டுக் கழக உறுப்பினர்கள், ஐ. நா. சபையின் புள்ளிவிவர அலுவலகத்தின் நாட்டு வருமான ஒன்றிப்பின் உறுப்பினர்களும் பயனுள்ள இந்தத் துறையில் கவனத்தைத் திருப்பி ஆராய்ச்சி செய்யவேண்டும்.

5. வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில் முதலாக்கத்திற்கு வேண்டிய பற்றுக்குறை நிதியாக்கமும், அப் பொருளாதாரத்தில் விலை இயங்குகிற முறையும்.

அரசாங்கப் பொது வருவாய்க்கும் பொதுச் செலவிற்கும் இடையில் வலிந்து உண்டாக்கப்படுகின்ற இடைவெளியினை அல்லது பட்ஜெட்டின் பற்றுக்குறையினை (budgetary deficit) *அடைப்பதற்கென நிதியினை உருவாக்குதலை மேலைநாடுகளில் 'பற்றுக்குறை நிதியாக்கம்'* (deficit financing) *என்ற சொற்றொடரினால் விவரிக்கின்றனர். தேசியச் செலவீட்டில்* (national outlay) *அல்லது மொத்தச் செலவில்* (aggregate expenditure) *நிகரச் சேர்ப்பினை* (net addition) *ஏற்படுத்துகின்ற வகையைச் சார்ந்த கடன் வாங்குதல்மூலம் வேண்டிய நிதியினை உருவாக்கலாம். இதன் பொருள் என்னவெனில், கடன் வாங்குதலின் விளைவாக, தனிப்பட்டோரின்பேரில் பாங்குகளில் வீணே பயனிலாது கிடக்கும் வைப்புகளை* (deposits) *உயிர்ப்பித்துச் செயலாற்றத் தூண்டுதலோ அல்லது பாங்குகளே அரசாங்கப் பத்திரங்களை நேரடியாக வாங்கி வைப்புகளைச் சிருட்டித்தலோ நிகழ்கிறது என்பதேயாம். சிலவேளைகளில், பொதுமக்கள் வீணே குவித்து வைத்திருக்கும் ரொக்கத்தினை அரசாங்கப் பத்திரங்கள் வாங்குவதன்மூலம் உயிர்ப்பித்துச் செயலாற்றத் தூண்டுதலையும் அது குறிக்கும். பற்றுக்குறை நிதியாக்கம் இல்லாத பொழுது உள்ள நிலையுடன் ஒப்பிடும்பொழுது, மேற்குறிப்பிட்ட எல்லா முறைகளிலும் மொத்தத் தேசியச் செலவில் ஒரு நிகர அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. பற்றுக்குறை நிதியாக்கத்தின் மற்றொரு முறை என்னவெனில், 'சிருட்டிக்கப்பெற்ற பணம்'* (created money) *அல்லது ரொக்க அளிப்புப் பெருக்கு முறை ஆகும். ஆனால், இதனைச் சாதாரணமாகப் போர்க்காலத்து நிதியத்துடன்* (war finance) *இணைத்துச் சொல்வர். போரிடைக் காலத்தில் பற்றுக்குறை நிதியாக்கம்பற்றி நிகழ்ந்த விவாதங்களில் இது இடம்பெறவில்லை. செலாவணி அதிகரித்ததோ,*

அல்லது பாங்கு வைப்புகள் பெருகினவோ, அல்லது வீணே பயனிலாது கிடந்த ரொக்கக்குவிப்புகள் செயலாற்றத் தூண்டப் பட்டனவோ, எதுவாக இருந்தபோதிலும் சரி, பற்றுக்குறை நிதியாக்கத்தின் விளைவாகத் தேசியச் செலவில் நிகர அதிகரிப்பு ஏற்படுகிறது. பற்றுக்குறை நிதியாக்கத்தினைப் பயன் படுத்துவோர், சாதாரணமாக விலைவாசிகளின் உயர்வுமூலம் உண்மை வளங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தினைப் பெறு கின்றனர். விலை உயர்வின் காரணமாக, மிகக் குறைந்த அளவில் பண்டங்களையும் பணிகளையும் வாங்கும் நிலையில் உள்ளவர்களிடமிருந்து உண்மை வளங்கள் பெயர்ந்து சென்று விடுகின்றன; அல்லது, வாங்கும் சக்தியின் மிக உயர்ந்த அளிப்பினால் தூண்டப்பெற்ற உற்பத்திப் பெருக்கத்தின் மூலம் உண்மை வளங்களின் இடப்பெயர்ச்சியை விலை உயர்வுகள் உண்டாக்குகின்றன. முந்தியதில் விலைகளின் உயர்வு அதிகம்; பிந்தியதில் குறைவு. இவ்விரு நிலைகளிலுமே, விலைகளின் துவக்க உயர்வுமூலமே, பற்றுக்குறை நிதியாக்கம் உண்மை வளங்களின் இடப்பெயர்ச்சியை (transfer of real resources) விளைவித்தது.

போரிடைக் காலத்தில் பற்றுக்குறை நிதியாக்கம்பற்றிப் பெருஞ் சர்ச்சை இருந்தது. தேவைக் குறைவினை நீக்கும் சாதனமாக, குறிப்பாகத் தனியார்துறை முதலீட்டின் போதா மையை ஈடுசெய்யும் சாதனமாக, பற்றுக்குறை நிதி யாக்கத்தைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப் பெற்றது. இன்னும், பாதுகாப்புச் செலவில் ஏற்படும் இயல்பு மீறு சேர்ப்புகளுக்கு ஈடுசெய்யும் காரியத்தில் பற்றுக்குறை நிதியாக்கத்தின் பங்குபற்றி விவாதம் நடைபெற்றது. இவை அனைத்திலும் மேற்கொள்ளப்பட்ட செலவின் உற்பத்தித் திறனை ஒரு முக்கிய விஷயமாக யாரும் கருதவில்லை. பற்றுக் குறை நிதியாக்கத்தைத் தேவைக் குறைவினை நீக்கும் சாதன மாகப் பயன்படுத்தும் காரியத்தைப் பொறுத்தவரையில், பயன்படுத்தப்படாத வல்லமையும் வேலையற்றிருக்கும் தொழி லாளரும் உள்ள நிலையில், மொத்தத் தேவைக் குறைவினை நீக்குதல்பற்றியே வலியுறுத்தப்படுகிறது. பற்றுக்குறை நிதியாக்கத்தைப் பாதுகாப்புச் செலவின் இயல்புமீறு சேர்ப்பு களுக்கு ஈடுசெய்யும் சாதனமாகப் பயன்படுத்தும் காரியத்தைப் பொறுத்தவரையில், துய்ப்புப் பண்டங்களின் உற்பத்தியிலிருந்து போர்ப் பண்டங்களின் உற்பத்திக்கு வளச் சாதனங்களைக் கட்டாயமாகத் திருப்பிவிடுதல் வலியுறுத்தப் படுகிறது; ஓரளவு பணவீக்கம் அல்லது கட்டாயச் சேமிப்பு

இதில் தொக்குநிற்கிறது எனினும், இவ்விரு காரியங்களிலுமே பற்றுக்குறை நிதியாக்கத்தின் விளைவாகத் தேசியச் செலவீட்டில் அல்லது மொத்தச் செலவில் நிகரச்சேர்ப்பு ஏற்படுகிறது.

முதலாக்கத்தையும் தேசிய உற்பத்தித் திறனின் அதிகரிப்பையும் குறிக்கும் பொருளாதார வளர்ச்சியைப்பற்றி, மேலே விளக்கியுள்ள எந்த முறைகளும் விவாதிக்கப்படவில்லை. உண்மையில் பற்றுக்குறை நிதியாக்கத்தைப்பற்றிய விவாதங்களில், பொருளாதார வளர்ச்சியில் அதன் பங்குபற்றி யாரும் சிந்திக்கவில்லை. எனினும், பொருளாதார வளர்ச்சிக்குப் பற்றுக்குறை நிதியாக்கத்தைப் பயன்படுத்தினால் ஏற்படக்கூடிய வேறுபாடுபற்றிச் சிறு குறிப்புகள் தரப்பட்டுள்ளன. பொருளாதார வளர்ச்சியில் பற்றுக்குறை நிதியாக்கத்தின் பங்கு பற்றியும், அதில் தொக்கியுள்ள முதலீட்டுச் செலவீட்டினைத் (investment outlay) தொடர்ந்து விலைகள் இயங்குகிற முறை பற்றியும் விளக்குவதே இக் கட்டுரையின் குறிக்கோளாகும்.

முதலில், ஒவ்வொரு தொழிலாளியின் உற்பத்தியை அல்லது உற்பத்தித்திறனைப் பெருக்கி, தேசிய வருமானம், வாழ்க்கைத்தரம், பொருளாதார நலன் முதலானவற்றை உயர்த்துவதே சிறப்பாகப் பொருளாதார வளர்ச்சியின் படிமுறையாகும். உற்பத்தித்திறனைப் பெருக்குவதற்குக் கீழ்க்கண்ட நடவடிக்கைகளைத் தனித்தனியாகவோ அல்லது ஒன்று சேர்த்தோ பின்பற்றவேண்டும்.

(1) பயன்படுத்துதற்குரிய வளச்சாதனங்களின் பருமனை அதிகரித்தல். இதில் தரிசு நிலங்களைத் திரும்ப விவசாயத்திற்குக் கொண்டுவருதல், சாலைகள் அமைத்தல், நீர்ப்பாசன வசதி செய்தல் போன்றவைகள் அடங்கியுள்ளன.

(2) மின்னுற்றலையும் சேர்த்த மூலதன உபகரணப் பருமத்தைப் பெருக்குதல். இதில் மின்சார உற்பத்தி, இயந்திரம், இரும்பு, எஃகு உற்பத்தி, சிமெண்ட் உற்பத்தி, இரசாயனப் பொருள்கள் உற்பத்தி, இன்னும் ஏனைய அடிப்படைப் பொருள்களின் உற்பத்தி முதலானவை அடங்கியுள்ளன.

(3) தொழிலாளர் திறமையை அல்லது வேலை செய்யும் வல்லமையைப் பெருக்குதல். இதில் கல்வி வளர்ச்சி, உடல்நலப் பாதுகாப்பு, வைத்திய வசதிகள், நுட்பத் தொழில் திறன்கள் முதலானவை அடங்கியுள்ளன.

(4) சமுதாயத்தில் அறிவு நிலையையும் அமைப்பு நிலையையும் மேலோங்கச் செய்தல்.

(5) உயர்ந்தபட்ச உற்பத்திக்குத் தேவையான தூண்டு கோல்களைப் படைத்தல்.

இக் கட்டுரையில், முதலாக்கத்தைப்பற்றிய பொது விளக்கம் கொண்டுள்ள முதலாவது, இரண்டாவது இனங்களையே நாம் முக்கியமாக ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டுள்ளோம். முதலாக்கம், பொருளாதார வளர்ச்சிப் படிமுறையின் முக்கியப் பகுதியாகும். முதலாக்கத்தில் பொதுத் துறை சார்ந்த அல்லது தனியார் துறை சார்ந்த முதலீடு தொக்கு நிற்கிறது. முதலீட்டில், உற்பத்திக் காரணிகளை வாங்குதலும், துய்ப்பிற்கு வேண்டாத உற்பத்தியினை உண்டாக்குதலில் அக் காரணிகளின் உபயோகமும் தொக்கு நிற்கின்றன. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் முதலீடு, குறிப்பாகத் தனியார்துறையையே சார்ந்திருக்கும். சமதர்மப் பொருளாதாரத்தில் முதலீடு, குறிப்பாகப் பொதுத் துறையையே சார்ந்திருக்கும். கலப்புப் பொருளாதாரத்தில் (mixed economy) முதலீடு இவ்விரு முறைகளையுமே சார்ந்து இருக்கும்; இவ்விரு துறைகளினிடையே முதலீட்டினைப் பகிர்வது, தனித்த சூழ்நிலைகளையும் எடுத்துக்கொண்ட நாட்டின் திட்ட நோக்குகளையும் பொறுத்ததாகும். எல்லா நிலைகளிலும், முதலீட்டில், செலவீடு தொக்கு நிற்கிறது; இச் செலவீட்டினுல் தேசியச் செலவழிப்பில் கூடுதலோ அல்லது திரும்பப் பங்கீடு செய்து ஒதுக்குதலோ நிகழ்கிறது. தேசியச் செலவழிப்பில் கூடுதல் ஏற்பட்டால், முதலீட்டுச் செலவீட்டில் (investment outlay) பற்றுக்குறை நிதியாக்கம் தொக்குநிற்கிறது என்று பொருளாகும்.

தேசியச் செலவீட்டில் அல்லது மொத்தச் செலவில் நிகரச் சேர்ப்பினை உண்டாக்குகிற கருத்துத் தொக்குள்ள பற்றுக் குறை நிதியாக்கம், முதலீட்டுச் செலவீடு காரணமாக ஏற்படவேண்டியது அவசியந்தானு என்பதை முதலில் சிந்திக்கவேண்டும். 'சேமிப்போனும் முதலீடு செய்வோனும் ஒரே ஆளே' என்று சொல்லத்தக்க ராபின்சன் குரூசோ பொருளாதாரத்தில், சேமிப்புகள் முதலிலும் முதலீடு பின் தொடர்ந்தும் நிகழ்கின்றன; எனவே, அவை இரண்டும் சமமே; எனவே, பொருளாதார வளர்ச்சிக்குப் பற்றுக்குறை நிதியாக்கம் தேவையில்லை. இப் பூர்விக சமூகச் சூழலைவிட்டு முன்னேறிச் சென்று, வேலை தரும் முதலாளிகள் ஒருபுறமும்

வேலை செய்யும் தொழிலாளர்கள் மறுபுறமுமுள்ள சமூகத்தை அடைந்தால், அங்கே மார்க்ஸ் (Marx) குறிப்பிடும் 'எச்ச மதிப்பு' (surplus value) மூலம் சேமிப்புகள் உருவாகமுடியும்; பலரிடமிருந்த வளச்சாதனங்கள் முதலாக்கத்திற்கெனச் சிலரிடம் கைமாறின; எனவே, மார்க்ஸ் குறிப்பிடும் 'பூர்விகக் குவிப்பும்' (primitive accumulation) நிகழ்ந்தது. ஆனாலும், முதலீடு சேமிப்பிற்குச் சமமாகவே உள்ளது. எனவே, தேசியச் செலவீட்டிற்கு அல்லது செலவிற்குச் சேர்ப்புமூல மன்றி, திருப்பிவிடுதல் மூலம்மட்டுமே (diversion) முதலீட்டிற்கு வேண்டிய நிதி உருவாக்கப்பட்டது.

பாங்கு அமைப்பின் வளர்ச்சி, புதிய உற்பத்தி நுட்ப வினைத் திறன்களின் தோற்றம், அங்காடிகளின் வளர்ச்சி, பணக் கூலிகளில் கிடைக்கும் தொழிலாளர் அளிப்பின் பெருக்கம் ஆகியவற்றுடன் முதலாக்கமும் விரைந்து பெருகியது; அத்துடன் பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டது. இப்பொழுது, பாங்குச் செலாவணியைச் சிருட்டிப்பதற்கும் (credit creation) பாங்குச் செலாவணியைப் பயன் படுத்துவதற்கும் உரிய வாய்ப்பு வந்துள்ளது. சேமிப்புக்கு முன்னதாகவே முதலீட்டு நடவடிக்கையைத் தொழில் துணிவோர் (entrepreneurs) மேற்கொண்டனர். வளச்சாதனங்கள் பலர் கைகளிலிருந்து சிலர் கைகளுக்கு மாறின. ஆனால், இந்தத் தடவை, விலையேற்றங்கள்மூலமே வளங்கள் கைமாறின; தாங்களே விரும்பியமையாலோ அல்லது கட்டாயத்தினாலோ அல்லது சொத்துத் தொடர்புகளின் சுரண்டலினாலோ கைமாறவில்லை. முதலீட்டில் விளைந்த முதலாக்கம், உண்மை வருமானத்தைப் பெருக்கியது; தன்னிச்சை சேமிப்புகளிலும் சேர்ப்புகளுக்கு வழி ஏற்பட்டது, முதலீட்டினால் முதலாக்கம் ஏற்படாத இடங்களில், கைமாற்றப்பெற்ற வளங்கள் வீணாயின; சமூகமும் தனிப்பட்ட தொழில்துணிவோனும் அதற்குரிய அபராதத்தினைச் செலுத்தினர். சமூகம், உற்பத்தி சாரா விலையேற்றத்தில் சிக்கித் தவித்தது; தொழில்துணிவோன் நொடித்துப்போனான். முதலீட்டினால் முதலாக்கம் ஏற்பட்டபொழுது, சமூகமும் தொழில்துணிவோனும் பயனடைந்தனர். உற்பத்தித் திறன் பெருகியமையால் சமூகம் பயனடைந்தது; விலையேற்றங்களில் கொஞ்சம் தேக்கம் ஏற்பட்டமையாலும் சமூகம் பயனடைந்தது. தொழில்துணிவோனின் வருமானமும் சொத்தும் பெருகியதால், அவனும் பயனடைந்தான். இந்த நிலை, தன்னிச்சை சேமிப்புகள் எழும்பி முதலீடாக மாறுவதை இன்னும் எளிதாக்குகிறது. இவ்வாறாக,

முதலீடு தானே தனக்கு வேண்டிய நிதியினை உருவாக்கிக் கொண்டது; பாங்குச் செலாவணியில் தன்கரைவு (self-liquidating) ஏற்பட்டது; பற்றுக்குறை நிதியாக்கத்தினுல் முதலாக்கமும் பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டன.

பற்றுக்குறை நிதியாக்கத்திற்கு ஒரு பழமையான பொருளுண்டு. அதாவது, வரிகள், பாங்குசாராக் கடன்கள் முதலியவற்றிலிருந்து கிடைக்கும் அரசாங்க வருவாயைவிட அதிகமாக அரசாங்கச் செலவீடு செய்தலைக் குறிக்கும். பற்றுக்குறை நிதியாக்கமானது, வரலாற்றடிப்படையில் போர் நிதியத்தில் (war finance) தோன்றியதேயன்றிப் பொருளாதார வளர்ச்சியின் தேவைகளில் தோன்றவில்லை. அநேகமாக ஒவ்வோர் அரசாங்கமும் மக்கள் தம்மிச்சையுடனே அல்லது உண்மை தெரிந்தோ கொடுத்த வளங்களையும் மீறிப் போர்க்காலத்தில் செலவு செய்தது. பணத்தையும் பாங்குச் செலாவணியையும் பயன்படுத்தியமையால், விலையேற்ற இயக்கத்தின்மூலம், வளங்கள் கட்டாயமாக மக்களிடமிருந்து அரசாங்கத்திற்குக் கைமாறிச் செல்லும் நிலை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து பண அளிப்பு அதிகரித்தது; வருமானத்திலும் சொத்திலும் உள்ள ஏற்றத்தாழ்வு இன்னும் பெருகியது. பற்றுக்குறை நிதியாக்கத்தின் பணவீக்க சாத்தியங்களைப்பற்றி இயற்கையாகவே சிந்தனை எழுந்தது. தனியார் முயற்சித் துறையின் முதலாக்கத்தைவிட அரசாங்கத்தின் போர்ச் செலவில்தான் பற்றுக்குறை நிதியாக்கத்தின் பணவீக்க சாத்தியங்கள் அதிகமாக உள்ளன. இதற்குக் காரணம் என்னவெனில், அரசாங்கம் மேற்கொள்ளும் போர்ச்செலவில் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழியில்லை; அதில் உற்பத்திக்குப் புறம்பான இயல்பு உள்ளது; எனவே, செலவீட்டிலிருந்து அதிகரித்த பணவருமானங்களைப் போதுமான அளவுக்கு ஈர்க்க முடியவில்லை. செலவீடு பெருகியதற்கிணங்க, ஆக்கமுள்ளதும் துய்ப்பிற்கேற்றதுமான உற்பத்தி பெருகாததாலும், சேமிப்புகளும் அவ்வாறே பெருகாததாலும், பற்றுக்குறை நிதியாக்கத்திலிருந்து பணவீக்க விளைவுகள் ஏற்பட்டன. ஆனால், பொதுமக்கள் பணவீக்கத்தின் காரணங்களை அலசிக்கொண்டிருக்கும் நிலையில் இல்லை; அவர்கள் விளைவுகள்பற்றியே வெதும்பினர். அரசாங்கம் மேற்கொள்ளும் பற்றுக்குறை நிதியாக்கத்தைப்பற்றிப் பொதுமக்கள் மனத்தில் யாவரும் புரிந்துகொள்ளக்கூடிய நம்பிக்கையின்மை ஏற்பட்டது. தனியார் முயற்சித் துறையினர் மேற்கொண்ட செலவீட்டதிகரிப்பும், பாங்குச் செலாவணி சிருட்டிமூலம் அதற்கு வேண்டிய நிதி

யாக்கமும்பற்றி அதே அளவிற்குப் பொதுமக்களிடம் அவநம்பிக்கை ஏற்படவில்லை. அதற்குக் காரணம், தனியார் முயற்சித் துறையினர் மேற்கொண்ட முறை அதே அளவிற்குப் பணவீக்க விளைவுகளை உண்டாக்கவில்லை என்பதேயாகும். பணவீக்க விளைவுகளிலுள்ள வேறுபாட்டிற்குக் காரணம் தனியார் முயற்சித்துறையைச் சார்ந்த முறையில் செலவீட்டின் அதிகரிப்பிற்கிணங்க உற்பத்தியும் சேமிப்புகளும் பெருகுகின்றன என்பதேயன்றிப் பற்றாக்குறை நிதியாக்கம் இல்லை என்பதாலன்று. இந்த உண்மையைப் பலர் மறந்துவிட்டனர். இவ்வாறாக, தனியார் முயற்சித் துறையினர் முதலாக்கத்திற்காகவேண்டி பாங்குச் செலாவணியைச் சிருட்டித்து நிதியை உருவாக்கிச் செலவீட்டினை அதிகரித்தமைக்கும், அரசாங்கம் முதலாக்கத்திற்கு வேண்டிப் பற்றாக்குறை முறைமூலம் நிதியை உருவாக்கிச் செலவீட்டினை அதிகரித்தமைக்கும் உள்ள முக்கியமான ஒற்றுமையினை மறந்துவிட்டனர். பற்றாக்குறை நிதியாக்கம் முக்கியமாகப் பணவீக்கத்தைச் சார்ந்ததென்று முடிவுகட்டிவிட்டனர். பற்றாக்குறை நிதியாக்கத்தினைப் பணவீக்கத்துடன் தவறாக இணைத்துவிட்டமையால், பொருளாதார வளர்ச்சிக்கு அதனைப் பயன்படுத்துவது குறித்துத் தற்காலத்தில் அநேக மறுப்புகள் எழுந்துள்ளன.

பற்றாக்குறை நிதியாக்கத்தினால் பணவீக்கம் ஏற்படாது என்பதே என் கருத்தாகும். உருவாக்கிய நிதியில் மேற்கொள்ளப்பட்ட செலவீட்டின் ஆக்கமிலாத் தன்மையும், செலவீட்டின் அதிகரிப்பிற்கிணங்க சமூகத்தின் வேலையும் சேமிப்பும் திருப்தியான அளவிற்குப் பெருகாமையுமே பணவீக்கத்திற்குக் காரணங்களாகும். பணவீக்கம் பற்றாக்குறை நிதியாக்கத்துடன் இணைந்திருப்பதே வரலாற்று அனுபவம் காட்டும் உண்மையாகும். போர்க்காரியங்களுக்கே பற்றாக்குறை நிதியாக்கம் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டதேயன்றிப் பொருளாதார வளர்ச்சிக்கன்று என்பதனையும் வரலாற்று அனுபவம் எடுத்துக்காட்டுகிறது. அண்மையில், மந்தங்களைத் (depressions) தடுக்கவோ அல்லது தனியார்துறை முதலீட்டின் போதாமைக்கு ஈடுசெய்யவோ பற்றாக்குறை நிதியாக்கம் பயன்படுத்தப்பட்டது என்பதைக் கண்டோம். ஆனால், இவற்றில் எதிலும் பணவீக்கம் ஏற்படவில்லை. எது எவ்வாறாயினும், பற்றாக்குறை நிதியாக்கத்தை இதுவரையில் பொருளாதார வளர்ச்சிக்கென எந்தக் கணிசமான அளவிலும் பயன்படுத்தவில்லை. இதற்குக் காரணம், அண்மைக் காலம்வரையில் யு.எஸ்.எஸ்.ஆர். போன்ற சமதர்ம சமுதாயங்களில் தவிர,

மற்ற நாட்டுச் சமூகங்களில் முதலாக்கத்தினைத் தனியார் முயற்சித் துறையினர் மேற்கொண்டனரேயன்றி அரசாங்க மன்று; எனவே, முதலாக்கத்திற்கு வேண்டிய நிதி உருவாக்குதலில் பாங்குச் செலாவணி சிருட்டித்தலும் பாங்குகளும் முக்கியமான பங்கு வகிக்கின்றனவேயன்றிப் பற்றுக்குறை நிதியாக்கமும் அரசாங்கமுமல்ல. இப்பொழுதுதான், அதிலும் குறிப்பாக இந்தியாவில்தான், அரசாங்கமே நிதியாக்கத்தினைப் பெருமளவில் எடுத்துக்கொண்டுள்ளது. எனவே, பொருளாதார வளர்ச்சியின் சூழமைவில் பற்றுக்குறை நிதியாக்கத்தைப்பற்றி மீண்டும் துவக்கத்திலிருந்து புதிதாகப் பகுத்தாய்தல் அவசியம்.

பாங்கு அமைப்பு முறையின் உதவிகொண்டு இயங்கும் தனியார் முயற்சித்துறையின் பொருளாதாரத்தில் கூடுதலான சேமிப்புகளின் பருமன்பற்றித் தெரிந்துகொள்ளாமலேயே, துய்ப்பிற்குரிய செலவீட்டில் தேவையான குறைப்பு சாதாரணமாக நிகழ்வதற்கு முன்னரே, முதலீட்டுச் செலவீட்டில் சேர்ப்புகள் (additions) மேற்கொள்ளப்படுகின்றன. முன்னேறிய பொருளாதாரங்களில் இதுவன்று நிலை என்பது உண்மையே; குறைந்தபட்சம், முற்றிலும் இதுவன்று நிலை என்பதும் உண்மையே. முன்னேறிய பொருளாதாரங்களில், முதலீட்டுச் செலவீட்டினைத் திட்டமிட்டுச் செய்யும் முதலீடு செய்வோர், துய்ப்புச் செலவீட்டிற்குப் பயன்படும் நிதிகளின்மீது ஆதிக்கம் செலுத்துவதால், அவர்களே முதலீட்டினையும் சேமிப்பையும் ஒரேநேரத்தில் மேற்கொள்ளும் நிலையில் உள்ளனர்; அதற்குத் தக்கவாறு பொருளாதார நடவடிக்கை முன்னேறிய பொருளாதாரங்களில் ஒழுங்குற அமைக்கப்பட்டுள்ளது இவ்வாறாக, உதாரணமாக, நவீன தொழில்துறைச் சமூகங்களில் கார்ப்பரேட் சேமிப்பே (corporate saving) தனியார்துறை முதலீட்டின் முக்கிய ஊற்றாகும்; இச் சமூகங்களில், முதலாக்கத்தில் ஒப்பிட்டுப் பார்த்தால், பாங்குகளின் பங்கு மிகவும் குறைவே. ஆனால், நாம் வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களைப்பற்றியே இங்குப் பொறுப்பெடுத்துக்கொண்டுள்ளோம். இப் பொருளாதாரங்களில் உண்மை வருமானம் குறைந்தும் நுகர்ச்சி நாட்டம் மிகுந்தும் உள்ளன. நிகர முதலீட்டினை அதிகரிக்கச் செய்யும் அளவிற்கோ அல்லது தலா நிகர முதலீட்டினைப் பெருக்கும் அளவிற்கோ தன்னிச்சை சேமிப்புகள் உயரிய மட்டத்தில் இல்லை எனவே, உண்மை வருமானம் தொடர்ந்து குறைவாகவே இருக்கிறது; பொருளாதாரமும் தேங்கிக் கிடக்கிறது. இத்தகைய சமூகத்தில், துடிப்புள்ள தொழில்

துணிவோன் பாங்குச் செலாவணியைப் பயன்படுத்திச் சேமிப்பிலிருந்து கிடைக்கும் வருவாயைவிட அதிகமாக உள்ள முதலீட்டுச் செலவீட்டினை மேற்கொள்கிறான். பண வருமானங்கள் அதிகரிக்கின்றன ; ஆனால், அதே நேரத்தில் உண்மை வருமானங்கள் அதிகரிக்கவில்லை ; அதற்குக் காரணம், முதலீடு பயனளிக்கக் கொஞ்ச நாட்கள் ஆகும் என்பதே. எனவே, தன்னிச்சை சேமிப்புகள் முதலீட்டு அதிகரிப்பிற்கு இணையாகப் பெருகவில்லை. எனவே, முதலீட்டிற்கும் தன்னிச்சை சேமிப்புகளுக்குமிடையில் இடைவெளி ஏற்படுகிறது. அந்த இடைவெளியினை விலையேற்றத்தினால் உண்டான கட்டாயச் சேமிப்புகள் அடைக்கும். பொருளாதார வளர்ச்சி விரைந்து முன்னேற முன்னேற, முதலாக்கம் முகிழ்த்துப் பலனளிக்க அளிக்க, துய்ப்புப் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றில் கணக்கிடப்பெறும் உண்மை வருமானம் கணிசமான அளவிற்குப் பெருகப் பெருக, இடைவெளி அடைக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பின்கட்டத்தில் ஏற்பட்டுள்ள தன்னிச்சை சேமிப்புகளின் அதிகரிப்பானது துய்ப்பின் உண்மையான குறைப்பில் ஏற்பட்டதன்று ; ஆனால், இனி ஏற்படக் கூடிய துய்ப்பின் (potential consumption) குறைப்பில் ஏற்பட்டதாகும். துவக்க முதலீட்டின் காலத்துடன் ஒப்பிடும்பொழுது மாத்திரமன்றி, முதலீட்டிற்கு முந்திய காலத்துடன் ஒப்பிடும் பொழுதும்கூட, உண்மையில் துய்ப்புப் பெருகியுள்ளது. துய்ப்பின்மீது செலவழித்த தேசிய வருமானத்தின் வீதாசாரம் குறைகிறது என்பது உண்மையே; ஆனால், உண்மையில் துய்க்கப்பெற்ற உற்பத்திப் பருமம் உயருகிறது; ஆகவே, பொருளாதார வளர்ச்சி மிகவும் எளிதானபடி முறையாகிறது ; அதனைத் தொடர்ந்து வேதனை, கண்ணீர், இன்ன பிற ஏற்படுவதில்லை ; நிலவும் வாழ்க்கைத்தரத்தையும் வெகுவாக அழுத்தி அது பாதிக்கவில்லை. இக்கட்டத்தை அடைந்தவுடன், பொருளாதாரத்தின் பின்தங்கிய நிலை மறைந்து, அது வளர்ச்சியை நோக்கி முன்னேறுகிறது. தனியார் முயற்சித்துறையினர் மேற்கொண்டிருந்தாலும் சரி, அல்லது அரசினரே மேற்கொண்டிருந்தாலும் சரி, பொருளாதார வளர்ச்சியின் வெளிப்பாடுகள் அனைத்திற்கும் இந்த வருணனை பொருந்தும்.

சேமிப்பு வீதத்திற்குமேல் முதலீட்டு வீதத்தை உயர்த்தும் முயற்சி எடுக்கும்பொழுது, பொருளாதார வளர்ச்சியின் துவக்க காலக் கட்டங்களில், அரசாங்கத்தினாலோ அல்லது தனியார் முயற்சித்துறையினராலோ மேற்கொள்ளப்படும் முதலாக்கத்தில் சாதாரணமாக விலையேற்றம் தொக்குநிற்கிறது

என்பதனைக் கண்டோம். அரசாங்கச் செலவீட்டின்மூலம் முதலாக்கத்திற்காகப் பற்றுக்குறை நிதியாக்கத்தைப் பயன் படுத்துவது விரும்பத்தக்கதா என்ற கேள்வியை ஆராய்வதற்கு, தனியார் முயற்சித்துறையினர் முதலாக்கத்திற்கு வேண்டி பாங்குச் செலாவணியை சிருட்டித்து நிதியினை உருவாக்கு வதற்கும், அரசாங்கம் முதலாக்கத்திற்காக வேண்டிப் பற்றுக் குறை நிதியாக்கத்தின்மூலம் நிதியினை உருவாக்குவதற்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் புரிந்துகொள்வது பயனளிக்கும். முன்பே குறிப்பிட்டதுபோல, மேற்கத்திய பொருளாதார இலக்கியத்தில், போர், வாணிகச் சூழல்கள், ஈடுசெய் நிதியம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றின் சூழமைவில் பற்றுக்குறை நிதியாக்கம்பற்றி விளக்கப்படுகிறது; இதில் சட்டச் செலாவணிப் பெருக்கத்தைவிட (currency expansion) பாங்குச் செலாவணிப் பெருக்கமே (credit expansion) வலியுறுத் தப்படுகிறது. இந்தியாவில், பற்றுக்குறை நிதியாக்கத்தினை முக்கியமாகச் சட்டச் செலாவணிப் பெருக்கத்தின் அளவைக் கொண்டே விளக்குகின்றனர். இவ்வாறாக, வரிகள், கடன்கள் போன்ற மூலங்களிலிருந்து கிடைக்கும் வருவாயைக்கொண்டு அடைக்க முடியாதபோது, பம்பாய்த் திட்டம் (Bombay Plan) அத் துண்டினை அடைக்க 'சிருட்டிக்கப்பட்ட பணத்தைப்' பற்றிக் குறிப்பாக எடுத்துக்காட்டியது; நமது அதிகார பூர்வமான ஐந்தாண்டுத் திட்டமும் கிட்டத்தட்ட அதனையே எடுத்துக்காட்டுகிறது. போதுமான சேமிப்புகள் வரவில்லை யெனில், 'ஏறக்குறைய 3,400 கோடி ரூபாய்களை ரிசர்வ் பாங்கின் தனித்த பத்திரங்களுக்கு எதிராகக் கடன் வாங்கி சிருட்டிக்கவேண்டும்' என்று பம்பாய்த் திட்டக் குழுவினர் குறிப்பிட்டனர். ஆனால், முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வேண்டிய நிதி வளங்களைப்பற்றிய பட்ஜெட்டில் இந்திய அரசாங்க திட்டக் குழு 290 கோடி ரூபாய்களைச் சேர்த் திருக்கிறது.

உண்மையில், பட்ஜெட் பற்றுக்குறைகள்மூலம் மொத்தத் தேசியச் செலவில் நேரடியாக ஏற்படும் சேர்ப்புகளைக் குறிக்கும் சொற்றொடரே 'பற்றுக்குறை நிதியாக்கம்' என்று திட்டக் குழு இலக்கணம் வகுத்துள்ளது. பட்ஜெட்டின் பற்றுக்குறை, வருவாய்க் கணக்கையோ (revenue account) அல்லது மூலதனக் கணக்கையோ (capital account) சேர்ந்திருக் கலாம். 'எனவே, அரசாங்கம் வரிகளாகவும், இராஜ்ஜியத் தொழில்களிலிருந்து பெறும் வருமானங்களாகவும், பொது மக்களிடமிருந்து பெறும் கடன்களாகவும், வைப்புகளாகவும்,

நிதிகளாகவும், இதர மூலங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்களாகவும் மொத்தமாகப் பெறுகின்ற வருவாயைவிடச் செலவு அதிகமாக இருப்பதே இத் திட்டத்தின் சாறு' என்று திட்டக் குழு குறிப்பிட்டுள்ளது. 'தான் இதுவரையில் குவித்து வைத்திருந்த இருப்புகளைக் கரைப்பதன்மூலமாகவோ அல்லது பாங்கு அமைப்பிலிருந்து, முக்கியமாக நாட்டின் மைய பாங்கிடமிருந்து கடன் வாங்கிப் பணத்தை சிருட்டிப்பதன் மூலமாகவோ பற்றுக்குறையை அரசாங்கம் அடைக்கலாம்' என்றும் திட்டக் குழு குறிப்பிட்டுள்ளது.

இவ்விரு முறைகளிலும், பற்றுக்குறையை அடைக்க நிதி உருவாக்குவதில், செலாவணிப் பெருக்கமே (expansion of currency) வழி என்று கருதுவதாகத் தோன்றுகிறது. தனியார் துறை முதலாக்கத்திற்கு நிதி உருவாக்குவதில் பயன்படும் பாங்குச் செலாவணிப் பெருக்கத்திற்கும் (credit expansion), மேலே குறிப்பிட்டுள்ள சட்டச் செலாவணிப் பெருக்கத்திற்கும் வேறுபாடு உண்டு என்பது தெரிந்ததே. சட்டச் செலாவணிப் பெருக்கமும் பாங்குச் செலாவணிப் பெருக்கமும் உடனடிப் பண அளிப்புப் பருமத்தில் கூடுதலை உண்டாக்குகின்ற ஒரே விளைவினை ஏற்படுத்தியபோதிலும், பாங்குச் செலாவணிப் பெருக்கம் உண்டாக்குகின்ற பணவீக்க உள்ளார்ந்த ஆற்றலுக்கும் (inflationary potential), சட்டச் செலாவணிப் பெருக்கம் உண்டாக்குகின்ற பணவீக்க உள்ளார்ந்த ஆற்றலுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு நிலவுகிறது. இந்த வேறுபாட்டிற்குக் காரணம் உண்டு. பாங்குச் செலாவணிப் பெருக்கத்தை பாங்கு முறையின் ரொக்க வளங்கள் கட்டுப்படுத்துகின்றன; ஆனால், சட்டச் செலாவணிப் பெருக்கம் பாங்கு முறையின் ரொக்க வளங்களைப் பெருக்க, அதனைத் தொடர்ந்து, பெருகிய ரொக்க வளங்கள் பாங்குச் செலாவணியில் மிகப் பெரும் பெருக்கத்தை ஏற்படுத்துகின்றன. பாங்குச் செலாவணியில் கட்டாயமாகவே பெரும் பெருக்கம் ஏற்படவேண்டும் என்பதன்று; ஆனால், அவ்வாறு ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது என்பதை மறுக்கமுடியாது. இந்த நிலை தொடர்ந்தால், துவக்கத்தில் செலாவணியில் ஏற்பட்ட பெருக்கத்தைவிடப் பண அளிப்பின் பெருக்கம் அதிகமாக இருக்கும்; எனவே, விலைகள் வேகமாக ஏறுகின்றன; செலவுகள் பெருகுகின்றன; பணவீக்க அபாயம் இன்னும் நிச்சயமாகிறது.

இரண்டாவதாக, கடன் வாங்குவோன் அதிக மதிப்புள்ள சொத்துகளை அடைமானம் வைத்திருப்பதற்கு எதிராகவே பாங்கு தன் செலாவணியை (கடனை) சிருட்டித்திருக்கிறது.

கடன் வாங்குவோன் திரும்பச் செலுத்தும் பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டுள்ளான். அவன் அப் பொறுப்பினைத் தட்டிக் கழித்தால், அவன் சொத்துகள் விற்பனைக்குச் சென்றுவிடும். அதன் விளைவாக, அவன் சொத்துகளை இழக்க நேரிடும். கடனை (பாங்குச் செலாவணியை) சிருட்டிக்கும் பாங்கு, அதனை அடைப்பதற்கும் (கரைப்பதற்கும்) உரிய வழியினை வகுத்திருக்கிறது என்பதே இதன் பொருளாகும். ஆனால், அரசாங்கம் தன்னுடைய பத்திரங்களுக்கு எதிராகப் பணத்தை சிருட்டிக்கும்பொழுது நிலைமை வேறாகும்; ஏனெனில், பணத்தைத் திருப்பித்தரும் (repayment) பொறுப்புகள் அரசாங்கத்திற்குக் கிடையா. பொதுமக்களிடமுள்ள செலாவணியைத் தடுக்காமல், வட்டிவீதத்தை உயர்த்தாமல், இத்தகைய பத்திரங்களை மக்களிடம் விற்பது மிகவும் கடினமாகும். புழக்கத்திலுள்ள செலாவணிகளைத் தடுத்தும் வட்டி வீதத்தை உயர்த்தியும் பத்திரங்களை விற்றால், அரசாங்கத்தின் சொந்த முன்னேற்றத் திட்டத்தின்மீதும் தனியார் துறையினரின் முன்னேற்றத் திட்டங்கள்மீதும் தீங்கான விளைவுகள் ஏற்படும். புதிய செலாவணியை நீக்குவதற்காக வேண்டி அரசாங்கம் தன் பத்திரங்களைப் பின்னர் விற்கத் தயாராக இருந்தபோதிலுங் கூட, இச் சொத்துகளைத் தீர்ப்பதற்குத் (கரைப்பதற்குத்) தனியார்துறை பாங்குகள் எடுத்துக்கொள்ளும் காலத்தைவிட அதிகமான காலம் அரசாங்கத்திற்குத் தேவைப்படும். வேறு முறையில் சொல்லவேண்டுமெனில், பாங்குச் செலாவணியில் (கடன் முதலில்) தானே கரையும் தன்மை உள்ளது; ஆனால், அரசாங்கம் சிருட்டிக்கும் பணத்தில் அது இல்லை.

மூன்றாவதாக, பாங்குச் செலாவணியைப் (கடனைப்) பொறுத்தவரையில், குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றவே கடன் வாங்குகிறார்கள்; அத் திட்டங்களின்மூலம் கிடைத்த பண்டங்கள் அல்லது பணிகளை விற்று நேரடியாக இலாபம் அடைவதையே அவர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்; இத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறியவுடன், பாங்குகளிடம் அடைமானம் வைத்துள்ள தங்கள் சொத்துகளை விற்காமலேயே பாங்குகளிடமிருந்து பெற்ற கடன்களைத் திரும்ப அவர்கள் அடைக்கிறார்கள். இவ்வாறாக, கூடுதலான செலவீட்டினால் சிருட்டிக்கப்பெற்ற கூடுதலான வருமானம் (கடனடைப்பில்) துடைக்கப்பெறும் படிமுறை, தானே இயங்கும் தன்மையது. ஆனால், முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்ற அரசாங்கம் மேற்கொள்ளும் நிதியாக்கத்தில் இது உண்மையன்று. உதாரணமாக, நேரடியான இலாப

வரவற்ற சாலைகள், சமூக சேவைகள், நீர்ப்பாசனம், நீர்வழிப் போக்குவரத்து, வெள்ளப் பெருக்குத் தடுப்பு போன்ற பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையான பொதுச் செலவினங்கள் (basic overheads) திட்டங்களாக இருக்கும் பொழுது, தேவையான வருவாயைப் பெறுவதற்காகச் சமூகம் முழுதும் உண்டாகியுள்ள கூடுதலான வருமானங்களைத் திரும்பப்பெற முயற்சிகள் எடுக்கவேண்டும்; அதாவது, வரிகள் வசூலிப்பதன்மூலமும் கடன்களைப் பெறுவதன்மூலமும் கூடுதலான வருமானங்களைத் திரும்பப் பெற முயலுதல் வேண்டும். இவற்றைத் தொடர்ந்து தொல்லைகள் ஏற்படலாம். எனினும், குறிப்பிட்ட அரசாங்கத் திட்டங்களின்மூலம் மக்களிடத்தில் நேரடியாக விற்கப் படுகின்ற பண்டங்களையோ அல்லது பணிகளையோ உற்பத்தி செய்யும்பொழுது, கூடுதலான வருமானங்களைத் துடைத்துத் திரும்பப்பெறும் படிமுறை (mopping up process) மிகவும் எளிமையானதே. இதனை, பாங்கு உருவாக்கும் நிதிமூலம் நிறைவேற்றப்படும் வளர்ச்சித் திட்டத்துடன் இன்னும் நெருங்கிய முறையில் ஒப்பிடலாம்; ஆனால், முதலில் குறிப் பிட்ட, அடிப்படையான பொதுச் செலவினங்கள் சார்ந்த திட்டங்களை அவ்வாறு நெருங்கிய முறையில் ஒப்பிடமுடியாது. தனியார் துறையைச் சார்ந்த திட்டம் தோல்வியுற்றால், அத் துறையைச் சார்ந்தவர் திவாலாகிவிடுவார்; அவரது சொத் துகள் விற்பனைக்கு வரும்; முதல் மதிப்புகள் (capital values) வீழும்; வருமானங்களைத் துடைத்துத் திரும்பப்பெறும் படி முறை, சொத்துக் கைமாறுதல்மூலம் நிகழுமேயன்றிப் பண்டங்கள் கைமாறுதல்மூலம் நிகழாது. அரசாங்கத் திட்டம் தோல்வி யடைந்தால், அந்தப் படிமுறை நிகழ்வதற்குரிய இணையான வழிமுறை கிடையாது; சிருட்டிக்கப்பெற்ற கூடுத லான வருமானமும், ஈடுசெய்யும் சமநிலையில் மூலதனத்திலோ அல்லது பண்டங்களிலோ (உற்பத்தியிலோ) சென்று அடைய வில்லை. எனவே, கூடுதலான வருமானத்தில் பணவீக்க உள்ளார்ந்த ஆற்றல் நிலைத்துவிட்டது.

நான்காவதாக, மிகவும் கருத்துடன் திட்டமிடப்பட்டு, மிகவும் நேர்மையுடன்கூடிய திறமையான நிருவாகம் அதனை ஏற்று நடத்தினலொழிய, அரசாங்கத் திட்டங்கள் மிகவும் பாழ்பட்டுவிடும்; அவற்றில் சிக்கனக் குறைவும் நிலவும். அதன் விளைவாகக் கூடுதலான முதலீட்டினல் உற்பத்தியான சொத்துகளும் பண்டங்களும், பாங்கு நிதியாக்கத்தின்மூலம் நிறைவேறிய தனியார்துறைத் திட்டங்கள்மூலம் கிடைத்த

சொத்துகளையும் பண்டங்களையும்விடக் குறைந்த ஈடுசெய்யும் தன்மை உடையன. இதனால், பற்றுக்குறை நிதியாக்கத்தின் மூலம் அரசாங்கம் மேற்கொண்ட முதலீட்டுச் செலவீடு, பண வீக்கத்தினை உண்டுபண்ணும் வாய்ப்பினைச் சற்று அதிகமாகப் பெற்றுள்ளது.

தொகுத்துரைப்பின், பாங்குச் செலாவணி உருவாக்கிய நிதிமூலம் தனியார்துறையினர் மேற்கொண்ட முதலாக்கமாயினும் சரியே, அல்லது பற்றுக்குறை நிதியாக்கத்தின்மூலம் அரசாங்கம் மேற்கொண்ட முதலாக்கமாயினும் சரியே, அது கூடுதலான செலவீட்டினை விளைவிக்கிறது. ஆனால், கூடுதலான வருவாய்மூலம் அக் கூடுதலான செலவீடு உடனேயே சரிக்கட்டப்படுவதில்லை. எனவே, கொஞ்சம் விலையேற்றம் ஏற்படத்தான் செய்கிறது; கொஞ்சம் பண அளிப்பிலும் அதிகரிப்பு ஏற்படத்தான் செய்கிறது; விலை இயக்கத்தின் மூலம் வளச்சாதனங்கள் இடம்பெயர்ந்து சென்று முதலாக்கத்தில் கலந்துவிடுகின்றன. இவ்விரு முறைகளுமே பற்றுக்குறை நிதியாக்கத்தின் வெவ்வேறு உருவங்களே என நான் நம்புகிறேன். ஆனால், அரசு மேற்கொள்ளும் பற்றுக்குறை நிதியாக்கத்தில், துவக்க விலையேற்றம் பணவீக்கமாக மாறி விடும் அபாயம் கூடுதலாக் உள்ளது என்பதனைக் கீழ்வரும் காரணங்கள் விளக்குவன :

(1) சட்டபூர்வ செலவாணிப் பெருக்கம் (expansion of currency), பாங்குச் செலவாணிப் பெருக்கத்தின் (expansion of bank credit) மூலம் பண அளிப்பின் மிகப்பெரும் பெருக்கத்தை உண்டாக்கும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறது.

(2) நேரடியான பலன் (இலாப வரவு) இல்லாமை, அதாவது, செலவீட்டிலிருந்து பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் அளிப்புகள் ஏற்படவில்லை. எனவே, அவற்றை அரசாங்கம் மக்களுக்கு விற்கும் நிலை இல்லை. இதன் காரணமாகக் கூடுதலான செலவீட்டில் உண்டாகிய கூடுதலான வருமானங்களைத் துடைத்துத் திரும்பப்பெறும் சாத்தியம் குறைந்துவிட்டது.

(3) அரசாங்கச் செலவீட்டினை மேற்கொள்வதற்குத் தக்க விற்பனைக்குரிய பத்திரங்கள் இல்லாமையால், கூடுதலான செலவீடு உண்டாக்கிய கூடுதலான வருமானத்தைத் துடைத்துத் திரும்பப்பெறும் வாய்ப்புகள் குறைந்துவிட்டன.

(4) மிகச் சிறந்த திறமையும் நேர்மையும் உள்ள அரசாங்க நிருவாகம் அமையாததால், அரசாங்க முதலீடு உற்பத்தித் திறனைப் பெருக்கவில்லை என்பதோடு, விரயத்தையும் பெருமளவு சாத்திய மாகக் கொண்டுள்ளது. எனவே, கூடுதலான செலவீட்டில் உண்டான கூடுதலான வாங்கும் சக்தியை ஈடுசெய்யும் அளவிற்கும்கூட உற்பத்தி பெருகவில்லை.

இத்தகைய காரணங்களினால், அரசாங்கம் பொருளாதார வளர்ச்சிக்கென்று பற்றுக்குறை நிதியாக்கத்தை மேற் கொண்டாலும்கூட, அந் நிதியாக்கத்தில் பணவீக்க் சாத்தி யங்கள் அடங்கியுள்ளன என்றே கருதுகின்றனர். எனவே, பொது நிதியத்தில், ஆக்கமிலாப் பொதுப்பணி வேலைகளுக்கு வரிகள்மூலம் நிதி உருவாக்குதலும், ஆக்கமுள்ள பொதுப்பணி வேலைகளுக்கு வரிகள்மூலமோ அல்லது பாங்கு சாராத கடன்கள்மூலமோ நிதி உருவாக்குதலும் நாடப்பட்டன. பாது காப்பிற்கோ அல்லது போருக்கோ பற்றுக்குறை நிதியாக்கம் தேவைப்பட்டபொழுது, அதுபற்றிய எதிர்ப்பினைத் தேவையின் அவசியம் காரணமாகக் குறைத்துக்கொண்டனர். போர்ச் செலவில் எழுந்த கூடுதலான வருமானத்தை எந்த அளவுக்குத் துடைத்துத் திரும்பப்பெற முடியும் என்பது பற்றிய முறைகளைப்பற்றிப் பொருளாதார சிந்தனை கூர்ந்து நோக்கியது; விலைகளைக் கட்டுப்படுத்துதல், அத்தியாவசியப் பண்டங்களைப் பகிர்ந்தளித்தல், பற்றுக்குறை நிதியாக்கத்தின் பணவீக்க விளைவுகளை முடிந்தவரையில் தடுத்தல்போன்ற முறைகளையும் பொருளாதார சிந்தனை கூர்ந்து நோக்கியது. பற்றுக்குறை நிதியாக்கத்தைப் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதுபற்றி விவாதிக்கும்பொழுது, பொருளாதார நிபுணர்கள் மேற்குறிப்பிட்டவைபோன்ற அத்தியாவசியத்தின் நிலைமைகள் இதற்கும் பொருந்துவன என்ற பாணியில் எண்ணிப்பார்க்கவில்லை என்பது வியப்பிற்குரியதே; பொரு ளாதார வளர்ச்சியில் உற்பத்தித் திறன் என்ற இன்னுமோர் நிலை இருந்தும்கூட, நிபுணர்கள் கருதாது விட்டது ஆச்சரியமே. இவ்வாறாக, வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேவைகளை அனுதாபத்துடன் நோக்கும் பிரபல பொருளாதார நிபுணர் ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்:

'நான் ஒரு படி மேலே சென்று உரைப்பேன். கிடைக்கக் கூடிய வளப்பொருள்களையும் மீறி வளர்ச்சித் திட்டங்களை மேற் கொள்வதன் விளைவாக ஏற்படும் பணவீக்கம் சிறிய அளவுகூட

நன்மை செய்யாது என்பதுமாத்திரமன்றிப் பெருமளவு தீங்கும் செய்துவிடும். எனக்குத் தெரிந்தவரையில், பணவீக்கத்துடன் கூடிய பொருளாதார வளர்ச்சிக்கு வெற்றிகரமான எடுத்துக் காட்டு இதுவரையில் கிடைத்ததில்லை. கிடைத்துள்ள வெற்றி கரமான பொருளாதார வளர்ச்சியின் எடுத்துக்காட்டுகள் அனைத்தும் பணவீக்கமற்ற பொருளாதார வளர்ச்சியைக் குறிக்கும் எடுத்துக்காட்டுகளேயாம். 1789 முதல் 1914 முடிய உள்ள ஆண்டுகளில் இங்கிலாந்தில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியில் பணவீக்கம் கிடையாது. ஐக்கிய அமெரிக்காவிலும் பணவீக்கமற்ற பொருளாதார வளர்ச்சியே ஏற்பட்டது. ஜப்பான் நாட்டுப் பொருளாதார வளர்ச்சியிலும் பணவீக்க மில்லை. யு.எஸ்.எஸ்.ஆர். பொருளாதார வளர்ச்சியிலும் பண வீக்கம் கிடையாது."[1]

வீக்கச் சுழலேறித் தன்மையைக்கொண்ட விலையேற்றக் கருத்தில் பணவீக்கத்தைப்பற்றி டாக்டர் சிங்கர் பேசுவா ராயின், அவரது கருத்து சரியே. 'கிடைக்கக்கூடிய வளங்கள் என்பதானது தன்னிச்சை அடிப்படையில் வளர்ச்சிக்கெனக்

[1] டாக்டர் ஹெச். சிங்கர் (Dr. H. Singer), 'வளர்ச்சித் திட்டங்களின் அடிப்படையும் பொருளாதார மதிப்பீடும்' (Foundation and Economic Appraisal of Development Project), புத்தகம் I, ஐ.நா. சபை, 1951, பக்கம் 44-45.

உற்பத்திப் பெருக்கியை நன்கு செயல்படுத்தாமையினால் வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில் பற்றுக்குறை நிதியாக்கத்தினால் ஏற்படும் பணவீக்க விளைவுகளைப்பற்றி முந்திய கட்டுரையில் நான் மேற்கொண்ட கருத்திற்கும் டாக்டர் சிங்கர் கருத்திற்கும் வேறுபாடு உள்ளது. மொத்தத் தேவையைமட்டுமே தனியே தூண்டுவதற்கெனக் கீன்ஸ் குறிப்பிட்ட பற்றுக்குறை நிதியாக்கம்பற்றிய சூழமைவில் எனது கருத்துகள் வெளி வந்தன. தொழில்மயமான பொருளாதாரங்களைப்போலன்றி, வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில் மொத்தத்தேவையின் சாதாரண அதிகரிப்பு, உற்பத்தியில் அதிகரிப்பினை உண்டாக்காது என்ற ஆராய்ச்சி முடிவின் அடிப்படையில் எனது கருத்து உருவாகியது. தொழில்மயமான நாடு களில், துய்ப்புத் தொழில்துறைகளிலுள்ள பயன்படுத்தப்படாத வல்லமை யும் வேலையற்றிருக்கும் தொழிலாளரும் உற்பத்தியின் அளிப்பு வளை கோட்டிற்குக் கணிசமான அளவு நெகிழ்ச்சியைத் தந்திருக்கின்றமையால், மொத்தத் தேவையின் அதிகரிப்பு உற்பத்தியில் அதிகரிப்பினை உண்டாக்கும். முதலாக்கத்திற்காகப் பற்றுக்குறை நிதியாக்கத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதுபற்றி அக்கட்டுரையில் நான் வாதிட வில்லை. முதலாக்கத்திற்காகப் பற்றுக்குறை நிதியாக்கத்தைப் பயன் படுத்துவதில், பற்றுக்குறை தேவையைத் தூண்டாது; ஆனால், வல்ல மையைப் பெருக்கி உற்பத்தியின் அளிப்பு வளைகோட்டிற்கு நெகிழ்ச்சியை அளிக்கும். இதில் ஓரளவிற்கு விலையேற்றம் ஏற்படும்; ஆனால், அது தன்னையே கரைத்துக்கொள்ளும் தன்மையது. மொத்தத் தேவையைப் பெருக்க வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில் மேற்கொள்ளப்படும் பற்றுக்குறை நிதியாக்கத்தில் ஏற்படும் விலையேற்றம், தனக்குத் தானே வேகவளர்ச்சியினை உண்டாக்கிக்கொள்ளும்.

கிடைக்கக்கூடிய வளங்களைமட்டுமன்றிக் கட்டாய அடிப் படையில் பெறக்கூடிய வளங்களையும் குறிக்குமெனில், டாக்டர் சிங்கரின் கருத்து சரியே. ஆனால், வளர்ச்சிக்கென மேற் கொள்ளப்படும் பற்றாக்குறை நிதியாக்கம், தானே இயங்கும் விலையேற்றத்தையோ, கிடைக்கும் வளங்களுக்கு மேலும் அப்பால் செல்வத்தையோ குறிக்காது. தன்னிச்சை அடிப் படையில்மட்டுமன்றிக் கட்டாய அடிப்படையிலும் வளங்களைப் பெறமுடியும். பொருளாதார வளர்ச்சிக்குரிய நிதியாக்கத்தில் கட்டாயச்சேமிப்பு என ஒன்று உள்ளது. உண்மையில், ஏழ்மை நிறைந்த, வளர்ச்சி குறைந்த நாடுகளிலும்கூடக் கட்டாயச் சேமிப்பில் கணிசமானஅளவிற்குச் சாத்தியங்கள் உண்டெனப் போர்க் காலத்து நிதிய வரலாறு எடுத்துக்காட்டுகிறது. வியாபார நிறுவனங்களின் முந்திய சேமிப்புகளினாலோ அல்லது பாங்குசாராத் துறைகளிலிருந்து அடைகின்ற பங்குகள், வைப்புகள், கடன் பத்திர முதல் ஆகியவை களினாலோ அல்லாமல், பாங்குகள் சிருட்டிக்கின்ற பாங்குச் செலாவணிமூலம்மட்டுமே நிதி உருவாகும்பொழுது தனியார் முயற்சித் துறையினர் மேற்கொள்ளும் முதலாக்கம்பற்றிய வரலாறும் மேற்குறிப்பிட்டதுபோன்ற கட்டாயச் சேமிப்புச் சாத்தியங்களை எடுத்துக்காட்டுகிறது. விலையேற்றத்தினால் ஏற்படும் கட்டாயச் சேமிப்புகளும், துய்ப்போர்களே வெளிப் படையான தேர்வின்மூலம் நிலவும் துய்ப்பையும், இனி ஏற்படக்கூடிய துய்ப்பையும் (potential consumption) குறைத்துக்கொள்வதால் ஏற்படும் தம்மிச்சைச் சேமிப்பு களும் வரலாறு சார்ந்தவைகளே. விலையேற்றத்தினால் ஏற்பட்ட கட்டாயச் சேமிப்புகளை முதலாக்கத்திற்குப் பயன்படுத்துவது தான் பொருளாதார வளர்ச்சிக்கென மேற்கொள்ளப்பட்ட பற்றாக்குறை நிதியாக்கமாகும்.

எனவே, பொருளாதார வளர்ச்சியில் பற்றாக்குறை நிதி யாக்கத்தின் பங்கினை மறுப்பதில் பயனில்லை. எந்த அளவிற்குப் பற்றாக்குறை நிதியாக்கத்தைப் பின்பற்றுவது அறிவுடைமை யாகும் என்பதே கேள்வி. பணவீக்கம் உண்டாகிற கட்டத் தையும் மீறிப் பற்றாக்குறை நிதியாக்கத்தை மேற்கொள்ளக் கூடாது என்பதே யாவரும் எதிர்பார்க்கக்கூடிய பதிலாகும். பற்றாக்குறை நிதியாக்கத்தினால் ஓரளவு விலையேற்றம் ஏற் படத்தான் செய்யும். இதனால் பற்றாக்குறை நிதியாக்கமே பண வீக்கத்தை உள்ளடக்கியது ஆகாது. விலையேற்றம் சுழலேறி உருவினை அடையும்பொழுதுதான் பணவீக்கம் ஏற்படுகிறது. அதாவது, விலையேற்றத்தினைத் தொடர்ந்து விலையேற்றமும்

அதனைத் தொடர்ந்து மேலும் விலையேற்றமும், மேலும்மேலும் முடிவில்லாத அளவிற்கு விலையேற்றமும் ஏற்பட்டுப் பணவமைப்பின் கட்டுத் தளர்ந்து குழப்பமடையும் நிலையே பணவீக்க நிலையாகும். இத்தகைய பணவீக்க உயர்ச்சியின் ஒன்றிய அம்சம் எதுவெனில், செலாவணிப் பருமம் பெருகிக் கொண்டே செல்லுதலாகும். இந்த நிலை நேர்ந்தவுடன், பெரு மளவு மூலதனத் துய்ப்பு ஏற்படுகிறது. ஆனால், மூலதனக் குவிப்புதான் பொருளாதார வளர்ச்சியின் சாறு என்பதால், மூலதனத் துய்ப்பின் காரணமாக அங்குப் பொருளாதார வளர்ச்சி ஏற்படாது. பணவீக்கத்துடன் கூடிய பொருளாதார வளர்ச்சி இருக்க முடியாது என்று சொல்வது மேற்குறிப்பிட்ட பொருளில் மிகவும் சரியே. பற்றாக்குறை நிதியாக்கம் பண வீக்க நிதியாக்கமாக (inflationary finance) மாறிக் கெடும் பொழுது, அதனால் முதலாக்கமோ பொருளாதார வளர்ச்சியோ ஏற்படுவதில்லை. ஆனால், இவ்வாறு ஏன் நிகழவேண்டும் என்பதற்குத் தக்க, வலுவான காரணம் இல்லை. முதலாக்கத் திற்காக மேற்கொள்ளப்படும் பற்றாக்குறை நிதியாக்கம், பணவீக்கத்தை உண்டாக்கவேண்டிய அவசியமில்லை. பற்றாக் குறை நிதியாக்கம் பணவீக்கத்தை உண்டாக்குவதும் உண்டாக்காததும், அதற்கும் விலை இயங்குகின்ற முறைக்கும் உள்ள தொடர்பினைப் பொறுத்ததாகும். இத் தொடர்பினைப் பற்றியே பின்னால் வருவனவற்றில் திறனாய்வு செய்யப் படுகிறது.

பொதுமக்கள் பொதுவாக நினைப்பதுபோல, விலைகளின் மீது பற்றாக்குறை நிதியாக்கத்தின் விளைவு, எளிய அல்லது சாதாரண முறையைச் சார்ந்ததன்று. உண்மையில், பணம் சார்ந்த, யதார்த்த, உளவியல் சார்ந்த, தொழில்நுட்பமான, அமைப்பு ரீதியான காரணிகளைக் கொண்ட பல்வேறு காரணிகள் இந்தத் தொடர்பினை நிர்ணயிக்கின்றன. இவை யனைத்தும் ஒரு தொகுப்பாகும். இத் தொகுப்பிலுள்ள உறுப் புகள், ஒன்றையொன்று சார்ந்திருத்தலிலும், தம்மிச்சை யுடன் இயங்குதலிலும் மாறுபடுகின்ற அளவுகளைக் கொண் டுள்ளன. இத் தொகுப்பிலுள்ள மிக முக்கியமான உறுப்பு களின் வரிசையைக் கீழே தருகிறோம்:

(1) பற்றாக்குறை தூண்டிய முதலீட்டுச் செலவீட்டினை மேற்கொண்ட அளவு, அல்லது பற்றாக்குறை நிதி யாக்கத்தின் பருமமும் மொத்தத் தேசியச் செலவீட் டுடன் அதன் தொடர்பும்;

(2) பற்றுக்குறை நிதியாக்கத்தினைத் தொடர்ந்து ஏற்படும் துவக்க விலையேற்றத்தின் அளவும் வீச்சும் ;

(3) இல்லத் தொழில் துறையின் செலவுப் போக்கின் (expenditure behaviour) மீது விலையேற்றத்தின் விளைவு ;

(4) இலாபங்கள்மீதும், எனவே, தொழில்துணிவோன் மேற்கொள்ளும் துய்ப்புச் செலவீட்டின்மீதும், முதலீட்டுச் செலவீட்டின்மீதும் விலையேற்றத்தின் விளைவு ;

(5) வேலைமீதும், எனவே, கூலி வருமானக்காரர்கள் மேற்கொள்ளும் துய்ப்புச் செலவீட்டின்மீதும், அவர்களுடைய சேமிப்பு மனப்பான்மையின்மீதும் பற்றுக்குறை நிதியாக்கத்தின் விளைவு ;

(6) பாங்கு அமைப்பின் ரொக்க இருப்புகளின்மீது செலவீட்டின் விளைவும், அதனைத் தொடர்ந்து பாங்குச் செலாவணி (கடன்) சிருட்டித்தலின்மீது ஏற்பட்ட விளைவும் ;

(7) துவக்கச் செலவீட்டினாலும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட, தூண்டப்பெற்ற செலவீடுகளினாலும் உண்டாகிய கூடுதலான பணவருமானங்கள் எந்த அளவுக்குத் துடைக்கப்பெற்று, நிதிஇலாக்காவிற்கு வரிகள்மூலமும் கடன்கள்மூலமும் திரும்பச் செல்கின்றனவோ அந்த அளவு ;

(8) துவக்கச் செலவீட்டினாலும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட, தூண்டப்பெற்ற செலவீடுகளினாலும் உண்டாகிய அதிகரித்த பண வருமானங்களின் விளைவாக, சமூகத்திலுள்ள ரொக்க இருப்புகளும், வீணே பயனற்றுக் கிடக்கும் குவியல்களும் அதிகரிக்கின்ற அளவு ;

(9) உற்பத்தியின் அளிப்பு வளைகோட்டின் இயல்பு, பயன்படுத்தப்படாத உபகரணத்தின் வல்லமை, பயன்படுத்தப்படாத தொழிலாளர் வல்லமை, அவற்றின் போக்கினை நிர்ணயிக்கும் அமைப்பு பூர்வமான காரணிகள், விலையேற்றத்தைத் தொடர்ந்து உற்பத்தி அதிகரிப்பதில் தொக்கு நிற்கும் காலப்பின்னீடு (time lag) முதலியன ;

(10) பொதுத்துறையில் மேற்கொண்ட துவக்கச் செலவீட்டின் குறிக்கோளும் தனியார் முயற்சித் துறையில் தொடர்ந்து மேற்கொண்ட, தூண்டப் பெற்ற செலவீடுகளும் ;

(11) பொதுத்துறையிலும் தனியார் முயற்சித்துறையிலும் துய்த்தற்குரிய உற்பத்தியின் பெருகிய ஓட்டத்தையும், அந்த ஓட்டம் ஏற்பட எடுத்துக் கொண்ட காலத்தையும் பொறுத்து முதலீட்டுச் செலவீட்டின் உறுதி வாய்ந்த பயன் ;

(12) முதலீட்டுக் காலத்தில் அடிப்படைத் தேவைகளின் விலைகளோ அல்லது தொழிலாளர் கூலியினால் வாங்கும் பண்டங்கள் (wage goods) விலைகளோ குறிப்பிடத்தக்க அளவிற்கு ஏறுவதைத் தடுக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் வெற்றி ;

(13) முதலீட்டுக் காலத்தில் கூலிகளின் பணவீதங்களில் மாறுமையை நிலைநிறுத்தும் அளவு ;

(14) இறக்குமதிகள்மீதும் ஏற்றுமதிகள்மீதும் பற்றுக் குறை நிதியாக்கம் உண்டாக்கிய துவக்கச் செலவீட்டின் விளைவும், அதனைத் தொடர்ந்து அதிகரித்த பண வருமானங்களும் தூண்டப்பெற்ற செலவீடுகளும் ;

மந்தகாலத்தில் பயன்படுத்தப்பெறாத வல்லமையைக் கொண்ட தொழில்மயமான நாடுகளில் விலைகள்மீது பற்றுக் குறை நிதியாக்கத்தின் விளைவுகளுக்கும், அமைப்புபூர்வமான வளையாமைகளினாலும் (institutional regidities) அடிப்படையான முதலீட்டின் கீழ்நிலை மட்டங்களினாலும் ஏற்பட்ட உற்பத்தியின் அளிப்பு வளைகோட்டின் குறைந்த நெகிழ்ச்சியைக் கொண்ட வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில் விலைகள் மீது பற்றுக்குறை நிதியாக்கத்தின் விளைவுகளுக்குமிடையில் நிலவும் குறிப்பிடத்தக்க வேற்றுமையினை விவரிக்க, மேற்குறித்த காரணிகளைப் புரிந்துகொள்வது உதவியாக இருக்கும். முந்தியதில் விலைகள் ஏறும் ; ஆனால், ஏறிக்கொண்டே யிருக்க மாட்டா; ஆனால், பிந்தியதில் அவை ஏறுவதோடு அமையாது, தொடர்ந்து ஏறிக்கொண்டே செல்லும். தன்மை வாய்ந்தவை. பற்றுக்குறை நிதியாக்கத்தின்மூலம் தேவைக்குறைவை நீக்குவதுதான், தொழில்மயமான பொருளாதாரங்களில் நிலவும் மந்தத்தினைப் போக்குவதற்கு கீன்ஸ் தரும் மருந்தாகும். ஆனால், இதனை வளர்ச்சி குறைந்த நாடுகளில் உபயோகிக்க முடியாது.

என்றாலும், வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களில், பற்றாக்குறை நிதியாக்கம்மூலம் முதலாக்கம் ஏற்படச் செய்வதுபற்றியே நாம் விவாதித்துக்கொண்டு வருகிறோம். இக் காரியத்திற்காக அரசாங்கம் பற்றாக்குறை நிதியாக்கத்தைப் பயன்படுத்துதலும், அதன் விளைவாக பாங்கு அமைப்பு பாங்குச் செலாவணியை எந்த அளவுக்கு சிருட்டிக்க இயலுமோ அந்த அளவுக்கு சிருட்டித்தலும் இச் சர்ச்சையில் இடம் பெறுகின்றன. பற்றாக்குறை நிதியாக்கத்தின் விலை விளைவினை நிர்ணயிப்பதே பிரச்சினையாகும்; துவக்கச் செலவீட்டினைத் தொடர்ந்து நிகழும் துவக்க விலையேற்ற விளைவினையும், துவக்கச் செலவீட்டினைத் தொடர்ந்து தூண்டப் பெற்ற செலவீட்டினால் துவக்க விலையேற்றத்தை அடுத்து நிகழும் விலையேற்ற விளைவினையும் நிர்ணயிப்பதே பிரச்சினையாகும். பிரச்சினை சிக்கல் நிறைந்தது என்பதனாலும், இதில் தொக்குள்ள காரணிகளும் சிக்கல் நிறைந்தவை என்பதனாலும், எளிதாக்கப்பெற்ற மாதிரியம் (model) ஒன்றில் துவங்கி, ஆரம்பத்தில் மேற்கொண்ட எடுகோள்களை ஒன்றன் பின் ஒன்றாக விலக்கிவிட்டு, இறுதியில் ஒரு குறிப்பிட்ட முடிவிற்கு வருதல் சாலச் சிறந்ததே.

(1) முதற் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடனேயே, அரசாங்கம் பற்றாக்குறை நிதியாக்க முதலீட்டினை மேற்கொண்டது. முதலீட்டுக் காலம் முடிந்தவுடன், துய்ப்புப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முதற் பொருள்களைப் பயன்படுத்த முடியும். முதலீட்டுக் காலத்தில் முதலீட்டுச் செலவீட்டு உற்பத்தி, துய்ப்பிற்காகாத உற்பத்தியாகவே இருக்கும்;

(2) இக் காலத்தில் ஆண்டு முதலீட்டுச் செலவீடு நிலையாக இருக்கும்; முதலாண்டில் எந்த மட்டத்திலிருந்ததோ அதே மட்டத்தில் இருக்கும்;

(3) முதலீட்டுச் செலவீடு முழுதும் தொழிலாளர்மீதே செலவழிக்கப்படும்; அதாவது, கூலிகளாக வழங்கப்படும்;

(4) தொழிலாளர்கள், தாங்கள் பெறும் கூடுதலான பண வருமானம் முழுவதையுமே துய்ப்புப் பண்டங்களிலேயே செலவிடுவர்; எனவே, அவர்கள் சேமிப்பிலோ அல்லது குவிப்பிலோ அதிகரிப்பு ஏற்படாது;

(5) துய்ப்புப் பொருள்களில் செலவழிந்த கூடுதலான பணச்செலவு முழுதும் இலாபங்களாகத் தொழில் துணிவோரிடத்துச் செல்லும். ஏனெனில், துய்ப்புப் பொருள்களின் உற்பத்தியில் அதிகரிப்பு இல்லை ;

(6) இலாபங்கள் பெருகியமையால் தொழில் துணிவோரின் துய்ப்பில் கூடுதல் ஏற்படவில்லை. இதற்குப் பதிலாக, அவர்களுடைய கூடுதலான இலாபம் முழுதும் முதலீட்டில் சேர்க்கப்படும் ; அல்லது அவர்களுடைய ரொக்க இருப்புகளில் சேர்க்கப்படும். ஒரே ஒரு வரையறை விலக்கு என்னவெனில், பற்றுக்குறை நிதியாக்கத்தினால் விலை உயர்ந்தபோதிலும், தங்களுடைய ஆரம்ப வாழ்க்கைத்தரத்தைக் காத்துக்கொள்ளத் தேவையான அளவிற்குத் துய்ப்பில் தங்களுடைய பணச் செலவினை ஓரளவிற்கு அவர்கள் அதிகப்படுத்திக் கொள்கின்றனர் ;

(7) முதலீட்டுக் காலம் முடியும்வரையில், உற்பத்தியின் அளிப்பு வளைகோட்டின் நெகிழ்ச்சியில் எந்த விளைவும் ஏற்படாது ;

(8) முதலீட்டுச் செலவீட்டினைத் துவக்கியபொழுது, கூலிகளின் பணவீதம் எந்தமட்டில் இருந்ததோ, அதே மட்டத்தில் முதலீட்டுக் காலம் முழுதும் இருக்கும் ;

(9) அடிப்படைத் தேவைகளின் விலைகளையோ அல்லது மற்றப் பண்டங்களின் விலைகளையோ கட்டுப்படுத்த எந்த முயற்சியும் எடுக்கப்படமாட்டாது.

(10) பொருளாதாரத்தினை அடைக்கப்பெற்ற பொருளாதாரமாகக் (closed economy) கருதுவர்.

இப்பொழுது நாம் நமது மாதிரியத்தை விளக்க முற்படுவோம்.

(1) E_1 தேசியச் செலவீட்டினையும், Y_1 தேசிய வருமானத்தையும், p_1 துவக்க காலத்தில் அல்லது முதலாண்டுத் துவக்கத்தில் நிலவும் விலைமட்டத்தையும் குறிப்பன. $E_1=Y_1$, $p_1=100$ என்ற சமனிலையிலிருந்து (equilibrium) நாம் ஆரம்பிப்போம்.

(2) W_1 துவக்க காலக் கூலி வருமானத்தையும், I_1 இலாப வருமானத்தையும் குறிப்பன. W_1 எனும் கூலி வருமானம் Y_1 எனும் தேசிய வருமானத்திடம் கொண்டுள்ள வீதா

சாரத்தை a குறிக்கும். I_1 எனும் இலாபவருமானம் Y_1 எனும் தேசிய வருமானத்திடம் கொண்டுள்ள வீதாசாரத்தை b குறிக்கும். ஆக, $W_1+I_1=Y_1$.

$$a+b=1.$$

(3) துவக்க ஆண்டில், பற்றுக்குறை நிதியாக்கத்தைப் பின்பற்றும் அரசாங்கத்தின் செலவீட்டினை G_1 குறிக்கட்டும். G_1, Y_1-இடம் கொண்டுள்ள வீதாசாரத்தை c குறிக்கட்டும்.

முதலாண்டில் பற்றுக்குறை நிதியாக்கத்தின் விளைவாக, W_1, G_1 அளவிற்குப் பெருகும்; p_1, $\frac{G_1}{Y_1}$ அளவிற்குப் பெருகும்; அல்லது p_1, c அளவிற்குப் பெருகும்; இவற்றின் விளைவாக, I_1, G_1 அளவிற்குப் பெருகும். நாம் Y_1-க்கு 1000 என்றும், G_1-க்கு 100 என்றும், W_1-க்கு 700 என்றும், I_1-க்கு 300 என்றும் மதிப்பினைக் கொடுத்தால், அதாவது, $\left(c=\frac{1}{10},\ a=\frac{7}{10},\ b=\frac{3}{10}\right)$ என்று வீதாசாரங்கள் அமைந்தால், முதலாண்டின் இறுதியில், அதாவது, இரண்டாம் ஆண்டின் துவக்கத்தில், தேசியச் செலவீடு அல்லது தேசிய வருமானம் 1100-க்குச் சமமாகவும், கூலிகள் 700-க்குச் சமமாகவும், இலாபங்கள் 400-க்குச் சமமாகவும், P_1 110-க்குச்* சமமாகவும் ஆகும். முதலாண்டில் அல்லது இரண்டாமாண்டின் துவக்கத்தில் பற்றுக்குறை நிதியாக்கத்தின் விளைவினைப் பின்வருமாறு பொதுமுறையில் சூத்திரமாக எழுதலாம்:**

* கூலிகள் அந்த ஆண்டின் இறுதிக்குள் 100 கூடுதலானபோதிலும், கூலிகள் 700-ல் தேங்கி நிற்கிறது. அதற்குக் காரணம், அந்த ஆண்டில் முதலீட்டின் அதிகரிப்பினால் விலையேற்றம் ஏற்பட்டு, அதன் விளைவாகத் தொழில் துணைவோருக்குக் கூடுதலான 100 இலாபமாகச் சென்றுவிட்டது என்பதுதான். ஆக, ஆண்டு முடிவில் கூலிகள் 700-ல் தங்கிவிட்டன; இலாபத்தில் 100 கூடுதலாகி 400ஐ அடைந்துவிட்டது. கூலிகள்மீது ஏற்பட்ட செலவீட்டதிகரிப்பு, ஆரம்ப காலத்திய மொத்தக் கூலி வருமானத்திடம் கொண்டிருந்த வீதாசாரத்திற்குச் சமமான பின்னத்திற்கு இணையாக, வேலை அந்த ஆண்டில் அதிகரித்தபோதிலும், ஆண்டின் துவக்கத்தில் இருந்ததுபோலவே ஆண்டிறுதியிலும் வேலை ஒரே மட்டத்தில் இருந்தது.

** சூத்திரத்தை இன்னும் எளிதாக்க, P_2, P_3 முதலானவற்றைப் பெருக்கு எண்களாகவும் (multiples), ஒன்றின் பின்னங்களாகவும் எடுத்துக்கொள்வோம். P, 100-க்குச் சமமாக இருப்பதற்குப் பதிலாக, ஒன்றுக்குச் சமமாகக் கொள்வோம். விலைக் குறியீட்டெண்ணைப் பெறச், சமன் தொடரிலிருந்து (equation) கிடைக்கும் விடையினை 100ஆல் பெருக்கினால் போதும்.

விலை மட்டம் : $P_2 = \frac{Y_1 + I_1\ (c + \frac{1}{b})}{Y_1}$

முந்திய ஆண்டைவிட

இவ்வாண்டு விலையேற்றம் $= p_2 - p_1$

$$= \frac{Y_1 + I_1 \left(c + \frac{1}{b}\right)}{Y_1} - \frac{Y_1}{Y_1}$$

$$= \frac{I_1 \left(c + \frac{1}{b}\right)}{Y_1}$$

அதாவது, $= \frac{G_1}{Y_1} = 10\%$

இரண்டாவதாண்டின் துவக்கத்தில் நாம் காணும் விலையேற்றம், ஆரம்பச் செலவீட்டின் விளைவினால் முழுதும் ஏற்பட்டதாகும். என்றாலும், இரண்டாவதாண்டில், அதே துவக்கச் செலவீட்டினை மீண்டும் மேற்கொண்டதுடன் (இந்த மாதிரியத்தின் அடிப்படை எடுகோள்களில் இதுவும் ஒன்றாகும்) அமையாது, முதலாவதாண்டின் பற்றாக்குறை நிதியாக்கத்தின் விளைவாகிய தூண்டப்பெற்ற செலவீடும் மேற்கொள்ளப் பெற்றது. துவக்கச் செலவீட்டின் வருமான விளைவு (income effect), பாங்குச் செலாவணி விளைவு (credit effect), விலை விளைவு (price effect) என்ற மூன்று காரணிகளின் விளைவே தூண்டப் பெற்ற செலவீடாகும். கூடுதலான இலாபத்திலிருந்து (I) செய்யப்பட்ட தொழில்துணிவோனின் செலவாம் கூடுதலான செலவீட்டில், வருமான விளைவு தெரிகிறது. தொழில் துணிவோனின் இலாபங்களின் அதிகரிப்பில் விளைந்த ரொக்க இருப்புகளின் பெருக்கத்தின் அடிப்படையில், பாங்கு அமைப்பு, பாங்குச் செலாவணியை சிருட்டிக்கிறது ; பாங்குச் செலாவணி சிருட்டிக்கப்பட்டதிலிருந்து எழுந்த கூடுதலான செலவீட்டில், பாங்குச் செலாவணி விளைவு தெரிகிறது. கடைசியாக, விலையேற்றத்தினால் ஏற்படும் துய்ப்புக் குறைந்திடுதலைக் கூலி வருமானக்காரர்கள் தடுத்து, சேமிக்காமை மூலம் (dissaving) துய்ப்பினைப் பெருக்கிக்கொள்வர் ; இவர்களுடைய கூடுதலான செலவீட்டில், விலை விளைவு தெரிகிறது.

இலாபத்தின் அதிகரிப்பினை $I_2 - I_1$ அல்லது I_1' குறிக்கும் ; G_1 அல்லது cY_1 கூட அதனையே குறிக்கும். இவ் இலாப அதிகரிப்பு நான்கு வழிகளில் செலவழிந்துவிடும். இந்த நான்கு பகுதிகளில் ஒன்று, நிதி இலாக்காவினருக்கு வரிகள்மூலமும்

கடன்கள்மூலமும் திரும்பச் செல்லும் பின்னத்திற்குச் சமமான பகுதியாகும்; இதனை d_1 எனக் குறிப்பிடுவோம்.[2] இரண்டாவது பகுதி குழாய்வரிசை ரொக்க இருப்புகளைச் (pipeline cash balances) சென்றடைந்து, செலவு அல்லது விலைகள்மீது அதன் விளைவைப் பொறுத்தவரையில், வீணே பயனற்றுக் கிடக்கும் தன்மையது; இப் பகுதி d_2-க்குச் சமமாகும். தொழில்துணிவோர் செலவழிக்கவே, செலவீட்டில் சேரும் பின்னப் பகுதிக்குச் சமமானதே d_3 ஆகும். நான்காவது பகுதி, பாங்கு அமைப்பின் ரொக்க இருப்புகளைப் பெருக்கி, பாங்குச் செலாவணி சிருட்டிக்கு அடிப்படையாகிறது; இதனை d_4 எனலாம். ரொக்க இருப்புகளின் பெருக்கத்தை பாங்குச் செலாவணிப் பெருக்கத்துடன் இணைக்கும் பெருக்கு எண்ணை (multiple) X எனக் குறிப்பிடலாம்; இதன் மதிப்புகள் O-விலிருந்து தெளிவான உச்சமாகிய 1, 2, 3 அல்லது 4 வரையில் செல்லலாம்.

துவக்கச் செலவீட்டின் விலை விளைவினால் ஏற்பட்ட கூலிச் செலவீட்டின் அதிகரிப்பு ஒரு நிலையான தொகையாகும்; நிலையான தொகையாக இருப்பதற்குக் காரணம், கூலி வருமானக்காரர்களுக்குக் குறைந்த அளவு சேமிக்காமைத் திறன் மட்டும் (limited dissaving capacity) இருக்கிறது என்பதேயாம். இந்த நிலையான தொகையினை, முதலாண்டுத் துவக்கத்தில் நிலவும் W_1 எனும் கூலி வருமானத்தின் வீதாசாரமாக இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. இவ் வீதாசாரம் β ஆக இருக்கட்டும். W_1 எனும் கூலி வருமானமே Y_1 எனும் தேசிய வருமானத்தின் வீதாச்சாரமாக இருப்பதால், கூலி வருமானக்காரர்களின் (புதிதாக வேலையில் சேர்ந்தவர்களைத் தவிர்த்து) கூடுதலான செலவீட்டினை Y_1 எனும் தேசிய வருமானத்தினுடைய வீதாசாரமாக வருணிக்கலாம். எனவே, கூடுதலான கூலிச் செலவீட்டினை, Y_1 அளவில் βaY_1 ஆக விளக்கலாம். β-ன் மதிப்பு $\frac{1}{20}$ என்றும், a-ன் மதிப்பு $\frac{7}{10}$ என்றும் கொள்வோமேயானால்,

இது $\frac{1}{20}\times\frac{7}{10}\times 1000=53$ ஆகும்; பின்னம் $a\beta$ அல்லது $\frac{7}{200}$ ஆகும்.

[2] இக் கட்டுரையின் முந்திய விளக்கத்தில், 1953-ல் நான் வெளியிட்ட மாதிரியத்தில் உள்ள r-க்கு இணையானதே இந்த d_1 ஆகும்.

மூன்ருமாண்டின் துவக்கத்தில் இருந்த நிலையினை (அதாவது, இரண்டாமாண்டின் இறுதியில் இருந்த நிலையினை) கீழ்க்கண்டவாறு பொதுமையில் வாய்பாடாக்கலாம் :

விலை மட்டம் : $p_3 = \frac{Y_1 + G_1 + d_3\ I_1' + \beta W_1 + d_4\ I_1'\ (X)}{Y_1}$

Y_1 அளவில் மீண்டும் இதனைத் திருத்தியமைத்தால்,

$$p_3 = \frac{Y_1 + cY_1 + d_3\ (cY_1) + \beta a\ Y_1 + d_4\ cY_1\ (X)}{Y_1}$$

$$= \frac{Y_1 + cY_1\ (1+d_3) + \beta a\ .\ Y_1 + d_4\ cY_1\ (X)}{Y_1}$$

$$= 1 + \frac{cY_1\ (1+d_3)}{Y_1} + \frac{\beta a\ .\ Y_1}{Y_1} + \frac{d_4\ cY_1\ (X)}{Y_1}$$

துவக்க ஆண்டிற்குமேல் விலையேற்றம் $= p_3 - p_1$

$$= \frac{cY_1\ (1+d_3)}{Y_1} + \frac{\beta a\ (Y_1)}{Y_1} + \frac{d_4\ cY_1\ (X)}{Y_1}$$

இச் சமன் தொடரில், முதலில் பயன்படுத்திய மதிப்புகளையே குறிகளின்மீது ஏற்றிஞல், அதாவது, $a = \frac{7}{10}$, $b = \frac{3}{10}$, $\beta = \frac{1}{20}$ என்று ஏற்றிஞல், $\frac{3}{10}$, $\frac{1}{10}$, $\frac{1}{2}$, $\frac{1}{10}$ எனும் மதிப்புகளை முறையே d_1, d_2, d_3, d_4 எனும் பின்னங்கள்மீது ஏற்றிஞல் கிடைக்கும் விடை, $\frac{3}{20} + \frac{7}{200} + \frac{1}{100}X$ ஆகும்.

X-க்கு 2 எனும் மதிப்பினைத் தந்தால், துவக்க ஆண்டின் விலை மட்டத்தின் பின்னமாக, அதாவது, $\frac{41}{200}$ ஆக விலை அதிகரிப்பினைப் பெறுகிறோம். ஆக, இரண்டாவது ஆண்டின் முடிவில், அதாவது, மூன்ருமாண்டின் துவக்கத்தில், விலையேற்றத்தின் குறியீட்டெண் 20·5 சதவீதமாகும். X-க்கு ஒன்று எனும் மதிப்பினைத் தந்தால், விலையேற்றத்தின் குறியீட்டெண் 19·5 சதவீதமாகும். X-க்கு 3 எனும் மதிப்பினைத் தந்தால், விலையேற்றத்தின் குறியீட்டெண் 21·5 சதவீதமாகும்.

எனவே, மூன்ருமாண்டின் துவக்கத்தில், விலைக் குறியீட்டு எண் 120·5 ஆகும். அங்காடி உற்பத்தியின் பருமம் அதிகரிக்கவில்லை என்பதஞல், இலக்கணப்படி தேசிய வருமானம் அதே அளவிற்கு அதிகரித்துள்ளது ; இலாபங்களில் 205 அதிகரித்து, மொத்தத்தில் 505ஐ அடைந்துவிட்டது ; கூலிகள் 700-ல் நிலைத்துவிட்டது. துவக்க ஆண்டிற்குமேல் மூன்ருமாண்டின் துவக்கத்திலேற்பட்ட இலாபங்களின் அதிகரிப்பு I_2' எனப்

படும்; நான்காமாண்டில் I'_3 எனப்படும்; இவ்வாறே தொடர்ந்த ஆண்டுகளுக்கும் என்க. தொழில்முனைவோர், கூலிச் சம்பளக்காரர்கள், பாங்கு அமைப்பு முதலானோரின் நடைமுறைப் போக்குத் தோரணி (behaviour pattern) முந்திய ஆண்டில் இருந்ததுபோலவே இப்பொழுதும் இருக்கிறது; தூண்டப்பெற்ற செலவீட்டின்மீது முந்திய ஆண்டைப் போலவே அதே விளைவினை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறாக, ஒவ்வோர் ஆண்டும் கூடுதலான செலவீடு அதிகரித்துக் கொண்டே செல்கிறது; அரசாங்கச் செலவீடு குறைந்து கொண்டே செல்கிறது; தூண்டப்பெற்ற செலவீடானது, கூடுதலான மொத்தச் செலவீட்டின் வீதாசாரத்தில் பெருகிக் கொண்டே செல்கிறது. எனினும், அரசாங்கச் செலவீட்டின் ஆண்டுத்தொகை நிலையானதாக இருப்பதாலும், இலாப அதிகரிப்பின் குறிப்பிட்ட ஒரு பகுதி, தூண்டப்பெறும் செலவீட்டில் சேராமல், துடைக்கப்பெற்றுவிடுவதாலும் (mopped up) கூடுதலான செலவீட்டின் வளர்ச்சி வீதம் குறைந்துகொண்டே செல்கிறது.

இக்காரணத்தினால்தான் விலையேற்றம் தானே வேகமாக உயரும் நிலையை அடையவில்லை; பயமுறுத்தும் பணவீக்கச் சுழலேறித் தோன்றவில்லை; பற்றாக்குறை நிதியாக்கத்திற்கும், விலை இயங்குகின்ற முறைக்கும் உள்ள தொடர்பு அடுக்குத் தேற்றச் சார்பு (exponential function) உருவினைப் பெறுகிறது. இவையனைத்தும் இந்த மாதிரியத்தின் எடுகோள்களைப் பொறுத்தனவே. இத் தொடர்பின் பொதுமையான வகையினைக் கீழ்வரும் சமன் தொடர் விளக்குகிறது. பற்றாக்குறை நிதியாக்கத்தின் விளைவாக, கால ஓட்டத்தில் தேசியச் செலவீட்டின் பருமத்தின் போக்குபற்றியும், அதன் காரணமாக விலைகளின் போக்குபற்றியும் சமன்தொடர் விளக்குகிறது. ஏனெனில், இலக்கணப்படி, பண்டங்களின் உற்பத்திப் பெருக்கம் இல்லாதபொழுது, விலைமட்ட மாற்றங்கள் தேசியச் செலவீட்டு மாற்றங்களுடன் ஒத்திருப்பன.[8]

[8] நான் குறிப்பிட்டுள்ள காரண, காரிய விளக்கத்தின் பொதுமையான வகையினைச் சார்ந்த கணித முறை விளக்கத்தினை உருவாக்கி அமைப்பதில் எனக்கு உதவியாக இருந்த மிஸ் உமா டட்டா (Miss Uma Datta) அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். பின்னால் வரும் இரண்டாவது சமன்தொடர், மூன்றாவது சமன்தொடர் ஆகியவற்றிலும் இதே காரண, காரிய விளக்கம் அடிப்படையாக அமைந்துள்ளது; உண்மையில் முதலாவது சமன்தொடரிலிருந்தே அவை உருவாக்கப்பெற்றது. அவ் இரு சமன் தொடர்களுக்காகவும் மிஸ் உமா டட்டாவுக்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

$$Yt = Y_1 \left[1 + (c + a\beta) \sum_{t=1}^{t-1} (d_3 + d_4 X)^{t-1} + c (d_3 + d_4 X)^{t-1} \right]$$

சமன்தொடர் ஒன்று.

இந்தச் சூத்திரத்தின் அடிப்படையில், பல ஆண்டுகளில், தேசியச் செலவீட்டிலும் விலைகளிலும் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிக்கும் எண்களை அடுத்து வரும் அட்டவணை விளக்குகிறது. முந்திய பாராவில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்புகளே குறிகளுக்குத் தரப்படுகின்றன.

		தூண்டப்பெற்ற செலவீடு				
ஆண்டு	அரசாங்கச் செலவீடு	விலை விளைவு	வருமான விளைவு	பாங்குச் செலாவணி விளைவு	மொத்தச் செலவீடு	விலை மட்டம்
			X=1			
1	—	—	—	—	1000.0	100.0
2	100	—	—	—	1100.0	110.0
3	100	35	50.0	10.0	1195.0	119.5
4	100	35	97.5	19.5	1252.0	125.2
5	100	35	125.9	25.3	1286.2	128.6
6	100	35	143.0	28.7	1306.7	130.7
7	100	35	153.3	30.7	1319.0	131.9
8	100	35	159.4	32.0	1326.4	132.6
9	100	35	163.1	32.7	1330.8	133.1
10	100	35	165.3	33.2	1333.5	133.3
11	100	35	166.7	33.4	1335.1	133.5
			X=2			
1	—	—	—	—	1000.0	100.0
2	100	—	—	—	1100.0	110.0
3	100	35	50.0	20.0	1205.0	120.5
4	100	35	102.5	41.0	1278.5	127.8
5	100	35	139.3	55.6	1329.9	133.0
6	100	35	165.0	66.0	1366.0	136.6
7	100	35	183.0	73.2	1391.2	139.1
8	100	35	195.6	78.2	1408.8	140.9
9	100	35	204.4	81.8	1421.2	142.1
10	100	35	210.6	84.2	1429.8	143.0
11	100	35	214.9	86.0	1435.9	143.6

ஆண்டு	அரசாங்கச் செலவீடு	தூண்டப்பெற்ற செலவீடு			மொத்தச் செலவீடு	விலை மட்டம்
		விலை விளைவு	வருமான விளைவு	பாங்குச் செலாவணி விளைவு		
X=3						
1	—	—	—	—	1000.0	100.0
2	100	—	—	—	1100.0	110.0
3	100	35	50.0	30.0	1215.0	121.5
4	100	35	107.5	64.5	1307.0	130.7
5	100	35	153.5	92.1	1380.6	138.1
6	100	35	190.1	114.3	1439.4	143.9
7	100	35	219.9	131.7	1486.6	148.7
8	100	35	243.2	146.1	1524.3	152.4
9	100	35	262.2	157.2	1554.4	155.4
10	100	35	277.3	166.2	1578.5	157.8
11	100	35	289.4	173.4	1597.8	159.8

காலப்போக்கில் விலை அதிகரிப்பு வீதம் குறைந்துவிடுகிறது என்பதனையும். சில ஆண்டுகளுக்குப் பின்னர் அந்த விலை வீழ்ச்சியானது ஒரு சதவீதத்தைவிடக் குறைவாகும் என்பதனையும் அட்டவணையிலிருந்து தெரிந்துகொள்ளலாம். மொத்தத் தேசியச் செலவீட்டில், துவக்கத்தில் பற்றுக்குறை நிதியாக்கத்தில் எழுந்த அரசாங்கச் செலவீட்டு விகிதாசாரத்தைச் சார்ந்தும், துவக்கச் செலவீட்டில் எழுந்த தூண்டப்பெற்ற செலவீட்டின் விகிதாசாரத்தைச் சார்ந்தும், தூண்டப்பெற்ற செலவீட்டின் அளவைச் சார்ந்தும் இப் போக்குகள் முக்கியமாக அமைந்துள்ளன. அடுத்து, தூண்டப்பெற்ற செலவீட்டின் வளர்ச்சியானது, X-க்குக் கொடுக்கப்பட்ட மதிப்பினைப் பெரிதும் சார்ந்தோ அல்லது பாங்குச் செலாவணி—ரொக்கம் பற்றிய விகிதத்தின் அளவைச் சார்ந்தோ உள்ளது. இவ்வாறாக, X-ன் மதிப்பு ஒன்றாக இருக்கும்பொழுது, விலையேற்றம் ஏழாண்டுகளுக்குப் பிறகு ஒரு சதவீதத்திற்குக் குறைவாக இருக்கும்; X-ன் மதிப்பு இரண்டாக இருக்கும்பொழுது, விலையேற்றம் ஒன்பதாண்டுகளுக்குப் பிறகே ஒரு சதவீதத்திற்குக் குறைவாக இருக்கும்; X-ன் மதிப்பு மூன்றாக இருக்கும்பொழுது, பதினொன்றாண்டுகளுக்குப் பின்னரே, விலையேற்றம் ஒரு சதவீதத்திற்குக் குறைவாக இருக்கும். பத்தாண்டுகளின் முடிவில் X-ன் மதிப்பு ஒன்று, இரண்டு, மூன்றாக இருக்கும்பொழுது, மொத்த விலையேற்றம் முறையே 33.3%, 43%, 57.8% ஆக உயரும்.

நமது முதல் சமன்தொடரிலிருந்து இருவேறு பொதுமையான சமன்தொடர்களை நாம் ஆக்கமுடியும். பற்றுக்குறை நிதியாக்கத்தைத் தொடர்ந்து ஏற்படும் விலையேற்றத்தின் அளவுபற்றியும், தொடர்ந்து ஏற்படும் விலையேற்றங்கள் ஒரு சதவீதத்திற்குக் குறைவாக இருக்கும் கட்டத்தினைத் துவக்க விலையேற்றம் அடைவதற்கு எத்தனை ஆண்டுகள் பிடிக்கும் என்பதுபற்றியும் இவ் இரு சமன்தொடர்களும் விளக்கும்.

t ஆண்டுகளின் முடிவில் விலையேற்றத்தை p′ குறித்தால், $p'_t = p_t - p_1$. அதாவது, $p'_t = p_t - p_1$

$$= p_1 (c+a\beta) \sum_{t=1}^{t-1} (d_3+d_4X)^{t-1} + p_1 c(d_3+d_4X)^{t-1}$$

$$= p_1(c+a\beta)\Big[1+(d_3+d_4X)+(d_3+d_4X)^2+\ldots\ldots\ldots + (d_3+d_4X)^{t-2}\Big] + p_1 c\,(d_3+d_4X)^{t-1}$$

$$= p_1 \cdot c \cdot \Big[1+(d_3+d_4X)+(d_3+d_4X)^2+\ldots\ldots\ldots (d_3+d_4X)^{t-1}\Big] + p_1 . a\beta \Big[1+(d_3+d_4X)+\ldots\ldots\ldots (d_3+d_4X)^{t-2}\Big]$$

$$= c . \frac{1-(d_3+d_4X)^t}{1-(d_3+d_4X)} p_1 + a\beta . \frac{1-(d_3+d_4X)^{t-1}}{1-(d_3 \times d_4X)} p_1$$

சமன்தொடர் இரண்டு.

தொடர்ந்து ஏற்படும் விலையேற்றங்கள் ஒரு சதவீதத்திற்குக் குறைவாக இருக்கும் கட்டத்தினைத் துவக்க விலையேற்றம் அடைய எத்தனை ஆண்டுகள் பிடிக்கும் என்பதை நிர்ணயிக்க,

$$p_t - p^{t-1} < 1$$

அதாவது,

$$p_1(c+a\beta) \sum_{t=1}^{t-1} (d_3+d_4X)^{t-1} + p_1 . c\,(d_3+d_4X)^{t-1}$$

$$- p_1 .(c+a\beta) \sum_{t=1}^{t-2} (d_3+d_4X)^{t-1} - p_1 c(d_3+d_4X)^{t-2} < 1$$

அதாவது,

$$p_1(c+a\beta)(d_3+d_4X)^{t-2}+p_1.c(d_3+d_4X)^{t-2}(d_3+d_4X-1)<1$$

அதாவது, $(d_3+d_4X)^{t-2}\left[a\beta+c(d_3+d_4X)\right]<\frac{1}{p_1}$

அதாவது, $(d_3+d_4X)^{t-2}<\frac{1}{p_1[a\beta+c(d_3+d_4X)]}$

அதாவது,

$$(t-2)\log(d_3+d_4X)<-\left[\log p_1+\log\left\{a\beta+c(d_3+d_4X)\right\}\right]$$

அதாவது, $t<2-\frac{\log p_1+\log[a\beta+c(d_3+d_4X)]}{\log(d_3+d_4X)}$

சமன்தொடர் மூன்று

முன்னரே குறிப்பிடப்பட்டுள்ள பத்து எடுகோள்களும் இம் மாதிரியத்தை உருவாக்கியதில் உள்ள கட்டுப்பாட்டு விதிகளாகும். எனவே, பற்றுக்குறை நிதியாக்கத்தைத் தொடர்ந்து ஏற்படும் விலையேற்றத்தைப் பின்வரும் முக்கிய காரணிகள் நிர்ணயிக்கும் என்பது தெளிவே. அவையாவன: (1) தேசியச் செலவீட்டில் பற்றுக்குறை நிதியாக்கச் செலவீட்டின் அளவு; (2) அரசாங்கம் வரிகள், கடன்கள்மூலம் துடைத்துவிடுவதாலோ (mopped up) அல்லது குழாய்வரிசை ரொக்க இருப்புகளில் சேர்ந்துவிடுவதாலோ இலாப அதிகரிப்பின் இயக்கம் தடையாகும் (immobilized) அளவு; (3) அதிகரித்த பாங்குச் செலாவணியை பாங்கு அமைப்பின் ரொக்க இருப்புகளின் அதிகரிப்புடன் இணைக்கும் பெருக்கு எண் (multiple); (4) சேமிக்காமை மூலமாகவோ அல்லது பயன்படாதிருக்கும் இருப்புகளைப் பயன்படுத்துதல் மூலமாகவோ தங்களுடைய துய்ப்புச் செலவீட்டினைப் பெருக்கி, கூலி வருமானக்காரர்கள் விலையேற்றத்தினைச் சமாளிக்கும் அளவு.

மேலேவரும் பத்து எடுகோள்களில், முதலாவது எடுகோளும் மூன்றுவது எடுகோளும் குறிப்பிடுவன குறைவாகவும், இரண்டாவது எடுகோளும் நான்காவது எடுகோளும் குறிப்பிடுவன அதிகமாகவும் இருப்பின், தேசியச் செலவீட்டில் பற்றுக்குறை நிதியாக்கத்தின் சேர்ப்பில் ஏற்படும் விலைவாசி உயர்வு குறைவாக இருக்கும். இரண்டாவது எடுகோள் கணிசமான அளவிற்குப் பின்னமாக இருக்கும்வரையில், மூன்றுவது

எடுகோள் பெரும் இலக்கமாக இல்லாதவரையில், பற்றுக் குறை நிதியாக்கம் விலையேற்றச் சுழலேறியை உண்டாக்கித் தூய பணவீக்க நிதியமாக மாறிக் கெடும் வாய்ப்பு இருக்காது.

தங்களுடைய துய்ப்பு, கட்டுப்படுத்தப்படுதலை எதிர்க்கும் வகையில் ஏற்படும் கூலி வருமானக்காரர்களுடைய தடுப்பாற்றல், ஓரளவிற்கு அப்பால், அவர்களுடைய செலவீட்டில் பெருக்கத்தினை உண்டாக்காது என்பதும் தெளிவே. விலையேற்றம் தொடர்ந்தால், கூடியவிரைவில் அல்லது கொஞ்ச நாட்களில், கூலிவீதங்கள் உயர்த்தப்படவேண்டும் என்பதற்கான பலத்த கோரிக்கைகள் எழும் என்பதும் தெளிவே. அவ்வாறு நேரும்பொழுது, வருமான வீக்கம் ஏற்படும்; சுழலேறி மீண்டும் தோன்றும்; இத்துடன், பற்றுக்குறை நிதியாக்கம் பணவீக்க நிதியமாக மாறிக் கெடும். இதற்கு எதிராக, தேசியச் செலவீட்டின் கூடுதலின் விளைவாக, கொஞ்சம் உற்பத்தி பெருகும் என்பது தெளிவே; என்றாலும், துய்ப்புப் பொருள்களின் உற்பத்தி உயராது. இவ்வாறு நேரும்பொழுது, பற்றுக்குறை நிதியாக்கத்தில் விளைந்த விலையேற்றம், மாதிரியம் சுட்டிக்காட்டுவதுபோல, மிக உயர்ந்திருக்காது. வேறுமொழியில் சொல்லவேண்டுமெனில், முதலாக்கம் பற்றுக்குறை நிதியாக்கத்தைத் தொடரும்பொழுது, முதற்பொருள்களையும் துய்ப்புப் பொருள்களையும் சேர்த்த விலைகளின் பொதுமட்டம், செலவீட்டு அதிகரிப்புகளைத் தொடர்ந்து உற்பத்தியே பெருகாதபோது விரைந்து ஏறுவது போல் ஏறாது. அரசாங்கத்தின் பற்றுக்குறை நிதியாக்கத்தில் விளைந்த செலவீட்டினால் கட்டுப்படுத்தப்பெறும் உண்மை வளங்களின் அளவு ஆண்டுதோறும் குறைந்துசெல்லும் என்பதும் இந்த மாதிரியத்திலிருந்து தெளிவாகிறது. பண மொத்தத்தை அதிகரித்துச் செலவீட்டின் உண்மை மதிப்பை நிலைக்கச்செய்யும் முயற்சியினால் சுழலேறி ஏற்பட்டு, பற்றுக் குறை நிதியாக்கம் பணவீக்க நிதியாக்கமாக மாறிக் கெடும் என்பதும் தெளிவாகிறது.

இந்த மாதிரியத்தின் அடிப்படையாக அமைந்துள்ள பத்து எடுகோள்களையும் இப்பொழுது எடுத்துக்கொண்டு, அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக நீக்கிவிட்டு மாதிரியத்தின் முடிவுகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதனை ஆராய்வோம்.

முதலீட்டுக் காலத்தில், அரசாங்கத்தின் பற்றுக்குறை நிதியாக்கத்தில் விளைந்த செலவீடானது, துய்ப்புப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்காது என்பதே முதல் எடுகோ

ளாகும். இம் மாதிரியம் செயல்படும் காலத்தில், துவக்கச் செலவீட்டைத் தொடர்ந்துவரும் தூண்டப்பெற்ற செலவீடானது, துய்ப்புப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்காது என்ற எடுகோளும் இதில் அடங்கியுள்ளது. இது அவசியமுமன்று; முழுதும் மெய்க்காட்சிமுறையானதுமன்று. முதலீட்டுத் திட்டமானது ஒரு கலவையே என்பதை நினைவில் கொள்ளவேண்டும். பல்வேறு காலங்களில் பயனுக்கு வரக்கூடிய திட்டங்களைக்கொண்ட கலவையாகும் அது. முதலீட்டுச் செலவீட்டினை இன்னும் மேற்கொள்ளவேண்டிய திட்டங்கள் சில இருக்கும்பொழுதே, சில திட்டங்கள் வாங்குதற்குரிய பொருள்களை உற்பத்திசெய்யத் தொடங்குகின்றன என்பதனையும் நினைவில் கொள்ளவேண்டும். தனியார் துறையையும் அரசாங்கத்தையும் சார்ந்த கூடுதலான செலவீட்டினைக் குறிக்கும் முதலீட்டிற்கு எதிராக, வாங்குதற்குரிய கூடுதலான உற்பத்தி கொஞ்சம் இருக்கும் என்பதே இதன் பொருளாகும். உண்மையில் அது விலையேற்றத்தைக் குறைக்கும் விளைவினை உண்டாக்கும்; இல்லையேல், விலையேற்றம் பெருகிவிடும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டுமன்றி, கால முழுதும் அது உண்மையாகும்; ஏனெனில், இலாப அதிகரிப்புவீதம், இலாப அதிகரிப்பு விலைகளின்மீது ஏற்படுத்தும் விளைவு, துய்ப்பு உற்பத்திமீது கூலி வருமானக்காரர்கள் செலவழிக்கும் செலவீட்டின் அதிகரிப்புகள் முதலானவைகளின் முக்கியப் பருவங்களை இது பாதிக்கும். எனவே, முதலீட்டுச் செலவீட்டினைத் தொடர்ந்து எழும் விலைகளின் போக்கைப் பொறுத்தவரையில், முதல் எடுகோளினை விட்டுவிடுதலானது விலை குறைக்கும் காரணியாகும் (minus factor).

முதலீட்டுக் காலத்தில் ஒவ்வோர் ஆண்டும் அரசாங்கச் செலவீடு நிலையாக இருக்கும் என்பது இரண்டாவது எடுகோளாகும். இந்த எடுகோளினை விட்டுவிட்டு, விலையேற்றத்திற்குத் தக்கவாறு முதலீடு உயருவதை அனுமதித்தால், நாம் முதலில் சுட்டிக்காட்டியதுபோல, விலையேற்றத்தின் மேலேறிச் செல்லும் போக்கினை அது இன்னும் துரிதப்படுத்திக் கெடுத்துவிடும். முதலீட்டுச் செலவீட்டினைத் தொடர்ந்து எழும் விலையின் போக்கைப் பொறுத்தவரையில், இந்த இரண்டாவது எடுகோளினைக் கைவிடுதலானது, விலை ஏற்றும் காரணியாகும் (plus factor).

அரசாங்கம் மேற்கொள்ளும் முதலீட்டுச் செலவீடு முழுதும் தொழிலாளரிடமே கூலிகளாகச் செல்லும் என்பதே மூன்றாவது எடுகோளாகும். உண்மையில் இது ஓர் தத்ரூபமான

எடுகோளாகாது. செலவீட்டின் ஒரு பகுதியைக் கச்சாப் பொருள்களிலோ அல்லது பாதி முடிந்த பொருள்களிலோ செலவழிப்பர்; அல்லது ஒவ்வொன்றிலும் கொஞ்சம் செலவழிப்பர். இதற்குப் பொருள் என்னவெனில், இச் செலவீட்டில் எழும் கூடுதலான வருமானத்தில் ஒரு பகுதி, அப் பொருள்களை உற்பத்திசெய்தோரைச் சென்றடையுமேயன்றித், தொழிலாளர்களையே முழுதும் சென்றடையாது. எனினும், மொத்தச் செலவீட்டின் அதிகரிப்பில் இது எந்த வேறுபாட்டினையும் உண்டாக்கவில்லை. நமது முதல் சமன்தொடரில் முற்கோளாகக் கொண்டதற்கிணங்க, மொத்தச் செலவீட்டின் அதிகரிப்பு, குறிப்பிட்ட மட்டத்திலேயே நிலைத்து நிற்கும். ஆனால், முக்கியமான வேறுபாடு என்னவெனில், நாட்டின் பொருளாதாரத்தில் கச்சாப் பொருள்கள், முதற்பொருள்கள் ஆகியவற்றின் விலைகள் உயர்ந்து, அதன் காரணமாக அரசாங்கச்செலவீட்டின் உண்மை மதிப்பைக் காப்பதற்காகவேண்டி, அதன் பணமதிப்பைப் பெருக்குதலை அவ் விலையேற்றம் அவசியமாக்கும். இரண்டாவதாக, துய்ப்புப் பண்டங்களின் விலைகள் ஏறும்; எனவே, துவக்கத்தில் செலவீட்டினை மேற்கொள்ளும் பொழுது எந்த மட்டத்தில் பணக்கூலிகளின்வீதம் நிலையானதாக இருந்ததோ அந்த மட்டத்தில் அதனை நிலைநிறுத்துவதில் இடர்ப்பாடு அதிகமாகும். இவ் இரு விளைவுகளும் விலையேற்றத்தை மேலும் ஏறச்செய்யும். எனவே, முதலீட்டுச் செலவீட்டினைத் தொடர்ந்து ஏற்படும் விலைப்போக்கைப் பொறுத்தவரையில், இம் மூன்றுவது எடுகோளினைக் கைவிடுதலானது ஒரு விலை ஏற்றும் காரணியாகும்.

தங்களுக்குக் கிடைக்கும் கூடுதலான பணவருமானம் முழுவதையும் தொழிலாளர்கள் துய்ப்புப் பொருள்களிலேயே செலவிடுவர் என்பது நான்காவது எடுகோளாகும். ஒரு தொழிலாளி முன்னரே எந்த வேலையிலும் சேராமல், எந்த விதமான வருமானமுமின்றி, தற்பொழுது புதிதாக வேலையில் சேர்ந்திருந்தாலொழிய, இந்த எடுகோள் முழுதும் உண்மையாகாது. உண்மையில், இப்பொழுது வேலையில் சேர்ந்த தொழிலாளர்கள் முழுமையான வேலையின்மையினுல் பாதிக்கப்பட்டவர்களல்லர்; மாருக, உருமறைந்த வேலையின்மையினுலேயே பாதிக்கப்பட்டவர்களாவார்; அவர்கள் அந்த நிலையில் ஏதோ ஒருவகையில் பணம் சம்பாதித்துக்கொண்டிருந்தனர். எனவே, தங்களுடைய உருமறைந்த வேலையின்மையை நீக்கிய தொழிலாளிகளுக்கும் தங்களுடன் வேலை பார்த்துவந்த ஆக்கமிலாத் தொழிலாளிகளை நீக்கியவர்

களுக்கும் இடையில் பகிர்ந்தளிக்கப்பட்ட கூடுதலான பண வருமானத்தின் ஒரு பகுதி சேமிக்கப்படுவதற்குரிய நல்வாய்ப்பு உள்ளது. குறிப்பாக நன்கு நிருவகிக்கப்பெற்ற சிறு சேமிப்புத் திட்டம் நடைமுறையில் இருந்தால், முதலீட்டுச் செலவீட்டின் முக்கியத்துவத்தைப்பற்றி மக்களிடம் பொதுவான வரவேற்பு இருந்தால், சேமிப்பும் நல்லவண்ணம் அமையும். அதிகரித்த பணவருமானத்தின் ஒரு பகுதியைத் தொழிலாளர் எந்த அளவுக்குச் சேமிக்கின்றனரோ அந்த அளவுக்குத் தொழில் துணிவோர் துய்ப்புப் பொருள்களை விற்பதன்மூலம் அடையும் இலாபத்தை தொழிலாளர் வருமானத்தின் சிறு பகுதியே கைமாறிச் சென்றடையும். தொழிலாளரின் சேமிப்புப் பருமத்தினளவிற்குக் குறைந்திருக்கும் மொத்தச் செலவீட்டில் இது ஒரு வேறுபாட்டினைக் கற்பிக்கிறது. அதே வேளையில் துய்ப்புப் பொருள்களின் விலையில் சிறு ஏற்றம் ஏற்படுகிறது; ஆக, அந்த அளவிற்குப், பணக்கூலிவீதத்தில் ஏற்படும் உயர்வின்மீது உண்டாகும் அழுத்தம் குறைகிறது. எனவே, முதலீட்டுச் செலவீட்டினைத் தொடர்ந்து ஏற்படும் விலைகளின் போக்கைப் பொறுத்தவரையில், நான்காவது எடுகோளினைக் கைவிடுதலானது விலை குறைக்கும் காரணியாகும்.

துய்ப்புப் பொருள்களின்மீது செலவாகும் கூடுதலான பணச் செலவு தொழில்துணிவோரிடத்து இலாபங்களாகச் சென்று அடைகிறது என்பதே ஐந்தாவது எடுகோளாகும். இது குறுங்கால எடுகோளாகும்; இந்த எடுகோள் நெடுங்காலத்திற்கு நிலைத்துநின்று, அதன் பருமமும் முக்கியத்துவமும் நிறைந்ததாக இருக்கும்பொழுதுமட்டுமே, இந்த இலாபங்கள் சமூகத்திலுள்ள ஏனைய பிரிவினராகிய கூலி வருமானக் காரர்கள், கச்சாப்பொருள் உற்பத்தியாளர்கள் முதலானவரிடத்துக் கைமாறுவன. இருந்தபோதிலுங்கூட, மொத்தச் செலவீட்டில் மாற்றமேதும் ஏற்படாது; எனவே, கூடுதலான செலவீட்டில் விளையும் விலைமாற்றத்திலும் மாற்றமேதும் இருக்காது. எனவே, முதலீட்டுச் செலவீட்டினைத் தொடர்ந்து ஏற்படும் விலைப்போக்கினைப் பொறுத்தவரையில், ஐந்தாவது எடுகோளினைக் கைவிடுதலானது, விலையேற்றமும் இறக்கமும் இல்லாத நடுநிலைக் காரணியாகும் (neutral factor).

இலாபங்களில் ஏற்படும் அதிகரிப்பினைத் தொடர்ந்து தொழில்துணிவோரின் துய்ப்பில் அதிகரிப்பு ஏற்படாது என்பதும், அவர்களுடைய கூடுதலான இலாப முழுதும் முதலீட்டில் செலவழிக்கப்படும் அல்லது அவர்களுடைய ரொக்க இருப்புகளிலே சேர்ந்துவிடும் என்பதும் ஆறுவது

எடுகோளாகும். இது முழுதும் தத்ரூபமான எடுகோளாகாது. அவர்களுடைய பண வருமானம் பெருகியதனுல்மாத்திரமன்றி, துய்ப்பு உற்பத்தியின் விலைகள் உயர்ந்தமையாலும், தொழில் துணிவோரின் துய்ப்புச் செலவு கொஞ்சம் பெருகும் வாய்ப்பு உள்ளது. இதனுல் விலையேற்றம் இன்னும் பெருகும். எனவே, முதலீட்டுச் செலவீட்டினைத் தொடர்ந்து ஏற்படும் விலைப் போக்கைப் பொறுத்தவரையில், ஆருவது எடுகோளினைக் கைவிடுதலானது, விலை ஏற்றும் காரணியாகும்.

முதலீட்டுக்காலம் முடியும்வரையில், உற்பத்தியின் அளிப்புக்கோட்டின்மீது எந்தவிதமான விளைவும் ஏற்படாது என்பது ஏழாவது எடுகோளாகும். தனியான முதலீட்டு இனத்தைப் பொறுத்தவரையில் இது சரியே. ஆனுல், நாம் முதலில் கண்டதுபோல, பல்வேறு காலங்களில் பலனளிக்கும் முதலீடுகளின் மொத்தத் தொகுப்பினை எடுத்துக்கொண்டால், கொடுக்கப்பட்ட காலச் சூழமைவில், எடுத்துக்கொள்ளப் பட்ட முதலீட்டுச் செலவீட்டினுல் உற்பத்தியின் அளிப்புக் கோடு பாதிக்கப்படும் என்பது சாத்தியமே. மேலும், முதலீடுகள் உற்பத்தியின் அளிப்புக்கோட்டின்மீது ஏற்படுத்தும் விளைவைப் பொறுத்தவரையிலுங்கூட வேறுபாடு உள்ளது. மிகவும் சீரான முதலீடு, நாட்டுப் பொருளாதாரத்தின் உற்பத்திமீது, இன்னும் பெரிய விளைவினையும், இன்னும் துரிதமான விளைவினையும் ஏற்படுத்தக்கூடும். எனவே, முதலீட்டுச் செலவீட்டினைத் தொடர்ந்து ஏற்படும் விலைப்போக்கினைப் பொறுத்தவரையில், இந்த எடுகோளினை எந்த அளவுக்கு நீக்கிவிடுகிருேமோ அந்த அளவிற்கு அது விலை குறைக்கும் காரணியாகிறது; அல்லது குறைந்த காலத்திலேயே பலனளிக்கும் மிகச் சீரான முதலீடுகளை முற்கோளாகக் கொண்டு எந்த அளவிற்கு இந்த எடுகோளின் விளைவினைக் குறைக்கிருேமோ அந்த அளவிற்கு அது விலை குறைக்கும் காரணியாகிறது.

முதலீட்டுச் செலவீட்டினைத் துவக்கத்தில் மேற்கொண்டபொழுது, அதாவது, அதனைத் துவக்கிய முதலாண்டில், பணக் கூலி வீதம் எந்த மட்டத்தில் இருந்ததோ அதே மட்டத்தில் முதலீட்டுக் கால முழுதும் இருக்கும் என்பதே எட்டாவது எடுகோளாகும். பத்து எடுகோள்களிலும் இதுவே மிகவும் முக்கியமான எடுகோளாகும். இதன் அடிப்படைமீதுதான், முதலீட்டுச் செலவீட்டினுல் ஏற்படும் விலைப் போக்குபற்றிய நமது மூன்று சமன்தொடர்களையும் உருவாக்கியுள்ளோம்.

இந்த எடுகோள் உண்மையானது என்ற கருத்தில் ஏற்றுக் கொள்வதோ அல்லது உண்மைக்குப் புறம்பானது எனக் கருதி விலக்கிவிடுவதோ இரண்டு காரணிகளைப் பொறுத்த தாகும்; அதாவது, அடிப்படைத் தேவைகளின் விலையேற்ற அளவு, முதலீட்டுத் திட்டத்தில் தொழிலாளர்கள் காட்டும் அனுதாபம், ஆதரவு, ஒத்துழைப்பு முதலானவற்றின் அளவு, இத் திட்டத்தை வெற்றியுடன் நடத்துவதில் அவர்கள் காட்டும் ஆர்வத்தின் அளவு ஆகிய காரணிகளைப் பொறுத்ததாகும். பற்றுக்குறை நிதியாக்கச் செலவீட்டின் அளவையும், அதில் விளைந்த தூண்டப்பெற்ற செலவீட்டின் அளவையும், எடு கோள்கள் 2, 3, 6 ஆகியவற்றைக் கைவிடுதலினால் ஏற்படு கின்ற மொத்த விலையேற்ற அளவையும், எடுகோள்கள் 1, 4, 7 ஆகியவற்றைக் கைவிடுதலினால் ஏற்படுகின்ற மொத்த விலை யிறக்க அளவையும் பொறுத்தே விலைகள் உயருகின்றன.

விலைக் கட்டுப்பாடு இருக்காது என்ற ஒன்பதாவது எடு கோளினைக் கைவிட்டால், பணக்கூலி வீதம் உயருவதை அது தடுக்கும்; ஆனால், விலையேற்றத்தைப் பொறுத்தவரையில் விலைக் குறைப்பு விளைவினை உண்டாக்காது. அரசாங்கத்தின் இயல்பினையும், தேர்ந்தெடுக்கப்பெற்ற திட்டங்களின் இயல் பினையும், குறிப்பாக வாழ்க்கைத்தரத்தின்மீது அவற்றின் விளைவினையும், அத் திட்டங்களுக்காகும் நிதியினை உருவாக்கும் முறையினையும், குறிப்பாகச் செலவீட்டினால் ஏற்படும் உண்மைச் சுமையின் பகிர்வினையும், திட்டங்களை உருவாக்கு வதிலும் செயல்படுத்துவதிலும் தொழிலாளர்கள் கலந்து கொள்ளவிருக்கும் வாய்ப்புகளின் இயல்பினையும் அளவி னையும் பொறுத்தே. முதலீட்டுத் திட்டத்தினை வெற்றியுடன் நிறைவேற்றுவதில் தொழிலாளர்களின் ஆர்வத்தின் அளவும் தன்மையும் அமைவன; இன்னும், முதலீட்டுத் திட்டத்தினை விளக்கி, மக்களிடத்தில் அதற்கு வேண்டிய ஆதரவினைத் திரட்டுவதைப் பொறுத்தே, தொழிலாளர்களின் ஆர்வத்தின் அளவும் தன்மையும் அமைவன. மொத்தத்தில் சிறு விலை யேற்றமும், அடிப்படைத் தேவைகளில் மிகச் சிறிய விலை யேற்றமும், ஜனநாயக ஆட்சியும், துய்ப்புப் பண்டங்களையும் பணிகளையும் உற்பத்தி செய்து அவற்றைப் பெருக்குவதை இலட்சியமாகக்கொண்ட திட்டங்களும், முதலீட்டுச் செல வீட்டுச் சுமையினைப் பரவலாகவும் சமமாகவும் பகிர்தலும் திட்டத்தை உருவாக்குவதிலும் நிறைவேற்றுதலிலும் தொழி லாளர் கலந்துகொள்வதற்குரிய போதுமான வாய்ப்புகளும், திட்டத்தைப்பற்றி மக்களிடத்துப் பரந்த செல்வாக்கும்,

ஆதரவும், அறிவும் இருக்கும்பொழுது, பணக்கூலி வீதத்தினை அதிகரிக்கச் செய்யும் கட்டாயம் ஏதும் ஏற்படாது. அடிப் படைத் தேவைகளின் விலைகளைத் திறம்படக் கட்டுப்படுத்தி, அவற்றின் ஆரம்ப மட்டத்திற்குமேல் உயராமல் தடுத்து நிறுத்திவிட்டால், பணக்கூலி வீதத்தினை அதிகரிக்கச் செய்யும் கட்டாயம் ஏதும் ஏற்படாத நிலை மேலும் வலுப்படுத்தப்படும்; அல்லது பணக்கூலி வீதம் உயராமலேயே இருக்கும் நிலை ஏற் படும். இச் சூழ்நிலையில் பணக்கூலி வீதம் நிலையானது என்ற எடுகோளினை அப்படியே ஏற்றுக்கொள்வது பொருத்தமே. எனவே, இதனால் விலைகளை உயர்த்தும் விளைவு ஏற்படாது, எனினும், பற்றாக்குறை நிதியாக்கச் செலவீடு உயர்ந்து இருந் தாலோ அல்லது தூண்டப்பெற்ற செலவீடு உயர்ந்து இருந் தாலோ அல்லது அதிகரித்த வருமானத்தைத் துடைத்துத் திரும்பப் பெறுதல் குறைவாக இருந்தாலோ அல்லது கூலி வருமானக்காரர்கள் முதலீட்டுத் திட்டங்களில் போதுமான அளவிற்கும், ஆதரவு காட்டும் அளவிற்கும் ஈடுபாடு கொண் டிருக்கும்படி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சி, தேவையான அளவிற்கோ அல்லது பயனுள்ள அளவிற்கோ இல்லாதிருந்தாலோ, பணக்கூலி வீதங்கள் நிலைத்திருக்க வேண்டும் என்ற எடுகோளின் அப்படியே ஏற்றுக் கொள்ளுதல் உண்மைக்குப் புறம்பானதாகும். இதில், அர சாங்க முதலீட்டுச் செலவீட்டின் அளவு ஆண்டுதோறும் நிலையானதாக இருக்க முடியாது. மாறாக, அது உயர்ந்து கொண்டே செல்லும்; அத்துடன் விலைகள் ஏறும். ஆனால், அதிகரித்த இலாபங்களைத் துடைத்துத் திரும்பப் பெறுத லானது உயர்ந்துகொண்டு செல்லும் அளவிற்கு விலைகளும் உயருவன. எனவே, முதலீட்டுச் செலவீட்டினைத் தொடர்ந்து ஏற்படும் விலைப்போக்கைப் பொறுத்தவரையில், எட்டாவது எடுகோளினைக் கைவிடுதலானது, ஒரு முக்கியமான விலை உயர்த்தும் காரணியாகும்.

அடிப்படைத் தேவைகளின் விலைகளையோ அல்லது ஏனைய பண்டங்களின் விலைகளையோ கட்டுப்படுத்தும் எந்த முயற் சியும் எடுக்கப்படமாட்டாது என்பதே ஒன்பதாவது எடுகோ ளாகும். இது ஓர் உண்மைக்குப் புறம்பான எடுகோளாகும் வரலாற்றில் பொறிக்கப்பட்ட உண்மைகளைச் சார்ந்த எடுகோளுமன்று. ஓர் அரசாங்கம் தன் செலவீட்டினைப் பெரு மளவில் மேற்கொண்டு, பற்றாக்குறை நிதியாக்கத்தினைப் பயன்படுத்தும்பொழுது, மற்றப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவில்லையெனினும், அடிப்படைத் தேவைகளின்

விலைகளைக் கட்டுப்படுத்தும் முயற்சியினை அது சர்வ சாதாரணமாக மேற்கொள்கிறது. இந்தியாவையும் சேர்த்த பல்வேறு நாடுகளில் விலைக் கட்டுப்பாடு ஓரளவிற்கு வெற்றியடைந்துள்ளது. அடிப்படைத் தேவைகளின் விலைகளைக் கட்டுப்படுத்தும்பொழுது, விலைக் கட்டுப்பாட்டினைத் தொடர்ந்து பங்கீட்டிலும் கட்டுப்பாடு சாதாரணமாக அமலுக்கு வரும்பொழுது, மொத்தத்தில் விலையேற்றத்தின் அளவைத் தடுக்கும் நேரடி விளைவினை ஏற்படுத்துவதோடு அமையாது, தங்களுடைய பணக்கூலி வீதங்களை உயர்த்தவேண்டும் எனத் தொழிலாளர்கள் வலியுறுத்தாது இருக்கும் மறைமுக விளைவினையும் விலைக் கட்டுப்பாடும் பங்கீட்டுக் கட்டுப்பாடும் உண்டாக்குகின்றன. எனவே, முதலீட்டுச் செலவீட்டினைத் தொடர்ந்து ஏற்படும் விலைப்போக்கினைப் பொறுத்தவரையில், ஒன்பதாவது எடுகோளினைக் கைவிடுதலானது விலை குறைப்புக் காரணியாகும்.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தைத் தேங்கிய பொருளாதாரமாகக் கருதுவது பத்தாவது எடுகோளாகும். இதுவும் உண்மைக்குப் புறம்பானதோர் எடுகோளாகும். இருந்தபோதிலும், உதாரணமாக, போருக்கு முந்திய காலத்திற்கும் முந்திய ஆண்டுகளில் தேங்கிய பொருளாதார நிலையினை அடைவதைவிடத் தற்காலத்து வர்த்தக நுட்பவினை முறைகளும், மாற்றுக் கட்டுப்பாட்டின் வினைமுறைகளும் வளர்ந்துள்ள காலத்தில் தேக்கமடைந்த பொருளாதார நிலையினை அடைவது மிக எளிதே. எனினும், இந்த எடுகோளினை ஏற்றுக்கொள்வது, உண்மைக்கு மாறான ஒன்றினை ஏற்றுக்கொள்வதற்கு ஒப்பாகும். நாம் அனுபவரீதியாகப் பார்த்ததற்கிணங்க, முதலீட்டுச் செலவீட்டினைத் தொடர்ந்து விலைகள் ஏறினால், இறக்குமதிகளின் தேவை அதிகரிக்கலாம். அதே நேரத்தில் விலையேற்றம், ஏற்றுமதிகளின் பருமத்தினைக் குறைத்துவிடலாம். அயல்நாட்டு மூலதன ஓட்டத்தின்மூலமாகவோ அல்லது அயல்நாட்டுக் காப்பு நிதிகளைக் கரைப்பதன்மூலமாகவோ தடுக்கப்படாவிட்டால், பாதகமான அயல்நாட்டுக் கொடுப்பல் நிலை ஏற்படும். அதன் விளைவாக, உள்நாட்டுச் செலாவணியின் மதிப்புக் குறைக்கப்படும்; அல்லது முதலீட்டுத் திட்டம் கவிழ்ந்துவிடும். முதலீட்டுச் செலவீட்டில் விளைந்த வருமான அதிகரிப்பினைத் தொடர்ந்து, இறக்குமதிகளின் தேவை பெருகினால், அதனை இறக்குமதிக் கட்டுப்பாடுகள்மூலம் உறிஞ்சி எடுத்துவிடும் முயற்சியும் மேற்கொள்ள நேரிடலாம். பாதகமான அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையைத் தவிர்க்கச் சரியான

ஈடுசெய் நிதியாக்கத்தைப் பயன்படுத்தும் அடிப்படையில் கச்சாப் பொருள்கள், முதற்பொருள்கள், அல்லது துய்ப்புப் பொருள்கள் ஆகியவற்றின் இறக்குமதிகளை ஓரளவிற்கு அதிகரித்தால், நாட்டின் பொருளாதாரத்தில் வாங்கக்கூடிய உற்பத்தியின் பருமம் பெருகுவதுடன், உள்நாட்டு உற்பத்தியை வாங்குவதற்கு வேண்டிய பணத்தேவை இறக்குமதிப் பொருள்களை வாங்குவதற்குப் பயனுகும் வகையில் திருப்பி விடப்படும். இதன் காரணமாக உள்நாட்டு விலைகளில் ஏற்படக்கூடிய ஏற்றம் குறையும். இறக்குமதி எச்சம் (import surplus) இல்லாதபொழுது ஏற்படும் உள்நாட்டு விலையேற்றத்தைவிடக் குறைந்த விலையேற்றமே இப்பொழுது ஏற்படும். இதனைப் பொறுத்தவரையில் முக்கியமான காரணி தேக்கமிலா பொருளாதாரத்தைக் காத்தலன்று, இறக்குமதி எச்சத்தை அடைதலே ஆகும். முதலீட்டுச் செலவீட்டினைத் தொடர்ந்து ஏற்படும் விலைப்போக்கினைப் பொறுத்தவரையில், பத்தாவது எடுகோளினைக் கைவிடுதலானது விலை குறைக்கும் காரணியாகும்.

நமது மாதிரியத்தின் முடிவுகளின் தகுதிமீது இப் பத்து எடுகோள்களையும் கைவிடுதலானது எத்தகைய விளைவினை உண்டாக்குகிறது என்பதை நாம் இப்பொழுது சுருக்கமாக விளக்குவோம். மேலும், விலைகள் உயரும் விளைவினைக் குறிப்பதே +விளைவாகும் (plus effect); மேலும், விலைகள் குறையும் விளைவினைக் குறிப்பதே —விளைவாகும் (minus effect). எடுகோள்கள் 2, 3, 6, 8 முதலியன விலை ஏற்றும் விளைவினைக் குறிப்பன. எடுகோள்கள் 1, 4, 7, 9, 10 முதலியன விலை குறைக்கும் விளைவினைக் குறிப்பன. எடுகோள் 5, விலை ஒரே மட்டத்தில் இருக்கும் விளைவினைக் குறிக்கும்.

எனவே, நாம் எடுத்துக்கொண்ட மாதிரியத்தினுல் குறிப்பிடப்படும் விலையேற்றத்தைவிடச் சில எடுகோள்களைக் கைவிடுதலினுல் ஏற்படும் விலையேற்றம் கூடுதலாக இருக்கும் என்பதனைக் காணலாம்; அதேபோல, மாதிரியம் குறிப்பிடும் விலையேற்றத்தைவிட வேறு சில எடுகோள்களைக் கைவிடுதலினுல் ஏற்படும் விலையேற்றம் குறைவாக இருக்கும் என்பதனையும் காணலாம். இம் மாதிரியத்தில் வரும் குறிகளுக்கு நாம் தரும் மதிப்புகளைப் பொறுத்தே விலையேற்றத்தின் அளவு அமையும் என்பது தெளிவே. அதாவது, பற்ருக்குறை நிதியாக்கத்தின் பருமம், துவக்க ஆண்டுச் செலவீட்டில் பற்ருக்குறை நிதியாக்கத்தின் வீதாசாரம், தொடர்ந்துவரும் ஆண்டுகளில் முழுமையான அளவில் அதன் நிலையான தன்மை, பற்ருக்குறை நிதி

யாக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட இலாப அதிகரிப்பிலிருந்து துடைத்து அரசு திரும்பப் பெறும் வீதாசாரம், விலையேற்றத்தின் காரணமாகக் கூலி வருமானக்காரர்கள் மேற்கொள்ளும் கூடுதலான செலவீட்டின் அளவு, துவக்க ஆண்டில் தேசியச் செலவீட்டில் அதன் வீதாசாரம், தொடர்ந்த ஆண்டுகளில் முழுமையான அளவில் அதன் நிலையான தன்மை; பாங்கு அமைப்பில் ரொக்க இருப்புகளில் ஏற்படும் சேர்ப்புகளுடன் பாங்குச் செலாவணியை இணைக்கும் பெருக்கு எண் (multiple) ஆகியவையனைத்தும் இம் மாதிரியத்தின் பராமீட்டர்களாகும் (parameters). இப் பராமீட்டர்களின் பருமனைப் பொறுத்தே விலையேற்றத்தின் அளவு அமையும் என்பது தெளிவே. பற்றுக்குறை நிதியாக்கத்தில் குறிப்பிட்ட பருமம் இருக்கும் பொழுது (என்னுடைய முந்திய மாதிரியத்தில் அது p எனப் படும்; இம் மாதிரியத்தில் அது G ஆகும்.) தொடர்ந்துவரும் ஆண்டுகளில் விலையேற்றப் போக்கினைக் குறிக்கும் முக்கியமான காரணிகளாகக் கூடுதலான வருமானத்தை அரசாங்கம் துடைத்துத் திரும்பப்பெறும் அளவும் (முந்திய மாதிரியத்தில் r என்றும் இம் மாதிரியத்தில் d_1 I_1 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.) பாங்குச் செலாவணி—ரொக்க விகிதமும் (இந்த மாதிரியத்தில் X எனப்படும்) திகழ்வன.

பற்றுக்குறை நிதியாக்கம் பணவீக்க நிதியாக்கமாக மாறிக் கெட்டு, விலையேற்றச் சுழலேறியை உண்டாக்கும் சூழ்நிலைகளைப்பற்றி இப்பொழுது தெரிந்துகொள்ள முடியும். அச் சூழ்நிலைகள் பின்வருமாறு:

(1) விலையேற்றத்தினைத் தொடர்ந்து பற்றுக்குறை நிதியாக்கத்தின் உண்மை மதிப்புக் குறைந்துவிடுதலைச் சரிக்கட்ட அரசாங்கம் தொடர்ந்துவரும் ஆண்டுகளில் அதனுடைய பற்றுக்குறை நிதியாக்கத்தின் பருமத்தை மேலும் கூட்டுதல்.

(2) பற்றுக்குறை நிதியாக்கத்தினால் ஏற்படும் இலாபப் பெருக்கத்தினை, அரசு தனது நிதி இலாக்காவிற்கெனத் துடைத்துத் திரும்பப் பெறுதல் வெற்றியடையாது போதல்.

(3) ரொக்க இருப்புகள் அதிகரித்ததற்கிணங்க, பாங்கு அமைப்பு, தனது பாங்குச் செலாவணியைத் தாராளமாகப் பெருக்குதலை அரசாங்கம் தடுக்க முயன்றும் தோல்வியுற்றமை.

(4) தொழிலாளர் வாங்கும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தும் வலுவான திட்டத்தையும்

தேவையான அளவிற்குப் பங்கீட்டு முறையைக் கட்டுப்படுத்தும் வலுவான திட்டத்தையும் அரசாங்கம் மேற்கொள்ளத் தவறியமை.

(5) பற்றுக்குறை நிதியாக்கத்தினால் உண்மைக் கூலிகள் குறைந்துவிட்டமையைச் சரிக்கட்டப் பணக்கூலி வீதங்களை உயர்த்தியமை.

(6) துய்ப்புப் பொருள்களின் உற்பத்தியையோ அல்லது முதலாக்கத்தையோ உண்டாக்காத ஆக்கமிலாச் செலவினை மேற்கொள்ளப் பற்றுக்குறை நிதியாக்கத்தினைப் பயன்படுத்தியமை.

மேலே குறிப்பிட்ட சூழ்நிலைகள் இல்லாதபொழுது, பற்றுக்குறை நிதியாக்கம் பணவீக்க நிதியாக்கமாக மாறிக் கெடாது. ஆனால், முதலாக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் பற்றுக்குறை நிதியாக்கமும்கூட விலையேற்றத்தை உண்டாக்கும் என்பதை மறுக்கமுடியாது. எனினும், தக்க திட்டத்தின்மூலம் இவ் விலையேற்றத்தின் அளவைக் கீழ்நோக்கிச் செல்லும்படி செய்ய முடியும். நாம் உருவாக்கியுள்ள மாதிரியத்திலும், இம் மாதிரியத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள எடுகோள்கள்பற்றிய நம் விளக்கத்திலும் இத் திட்டத்தின் கரு அமைந்துள்ளது. என்றபோதிலும், முதலாக்கத்தை உண்டாக்க மேற்கொள்ளப்படும் பற்றுக்குறை நிதியாக்கத்தின் விலை விளைவினைக் குறைக்கும் இத் திட்டத்தின் முக்கியப் பகுதிகளைச் சுருக்கமாகத் தருவது பயனுடையதே. எனவே, முதலாக்கத்திற்கு வேண்டிய பற்றுக்குறை நிதியாக்கத்தைப் பின்பற்றிவரும் திட்டத்தை விவரித்து இக் கட்டுரையை முடிப்போம்.

முதலில், பற்றுக்குறை நிதியாக்கம் என்பது, அதே அளவிற்கு ரொக்க அளிப்பினைப் பெருக்கவேண்டும் என்ற கருத்தினை உள்ளடக்கியதன்று என்பதனை மீண்டும் வலியுறுத்தவேண்டும். பற்றுக்குறை நிதியாக்கத்தினை சிருட்டிக்கப்பெற்ற பணத்துடன் ஒன்றுபடுத்தினால் விலைவிளைவு அதிகமாகும்; ஏனெனில், பற்றுக்குறை நிதியாக்கத்தின் ஒரு பகுதி பாங்குகளின் ரொக்க இருப்புகளைப் பெருக்கி, பாங்குச் செலாவணி சிருட்டித்தலையும் தூண்டி, மிகப் பெரும் பண அளிப்பினை உண்டாக்கும். எனவே, முடிந்த அளவிற்குப் பற்றுக்குறைச் செலவீட்டின் நிதியாக்கத்திற்காக, சிருட்டிக்கப்பெற்ற பணத்தைவிட பாங்குச் செலாவணியைப் பயன்படுத்துதலே சிறந்ததாகும். அதே வேளையில், பற்றுக்குறை நிதியாக்கத்தின் மூலம் அரசாங்கம் மேற்கொண்ட முதலீட்டுச் செலவீடானது,

ரொக்கத்தின் அளவினை அதிகரிக்கச்செய்யும் என்பதனைச் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமே. இத்தகைய செல வீட்டின் காரணமாக விலைகள் ஓரளவிற்கு உயரும் என்பத னையும், தேசியப் பண வருமானமும் செலவீடும் ஓரளவிற்கு உயரும் என்பதனையும் நாம் முன்னரே எடுத்துக்காட்டி யுள்ளோம். இது ரொக்கத் தேவையினை அதிகரிக்கச்செய்யும்; கட்டாயச் சேமிப்பினையும் முதலாக்கத்தினையும் தூண்டிப் பெருக்குவதில் முதலீட்டுச் செலவீடு வெற்றியடைய வேண்டு மெனில், அதிகரித்துள்ள ரொக்கத் தேவையினைப் பூர்த்தி செய்யத்தான் வேண்டும். முதலீட்டுச் செலவீட்டினை மேற் கொள்ளும் காலத்தில், ஒரு நாட்டின் பொருளாதாரம் எந்த ரொக்க அளிப்பினைக்கொண்டு முதலில் இயங்கத் தொடங்கு கிறதோ, அந்த ரொக்க அளிப்பானது, அதேகாலத்தில் நிலவும் விலைகள், தேசிய வருமானம், தேசியச் செலவீடு ஆகியவற்றிற்கு உகந்த ரொக்கத் தேவைகளைவிட அதிகமாக இருந்தால் மட்டும், மேலே குறிப்பிட்டது உண்மையாகாது. எனவே, முதலீட்டுச் செலவீட்டினை மேற்கொள்ளத் துவங்கியபொழுது இருக்கும் ரொக்க அளிப்பானது, பொருளாதாரத்தின் தேவை களைப் பூர்த்திசெய்யப் போதுமான அளவிற்கு இருப்பதாக எடுகோளிட்டுக்கொண்டால், அரசாங்கத்தின் முதலீட்டுச் செலவீடானது ரொக்க அளிப்பினை அதிகரிக்கச் செய்யும்.

அரசாங்கமே ரொக்கத்தினை உற்பத்தி செய்யும் சர்வா தீனத்தைப் பெற்றிருப்பதாலும், உற்பத்தி செய்யப்பட்ட ரொக்கத்தின் மதிப்பைவிட அதன் உற்பத்திச் செலவு மிக மிகக் குறைவாக இருப்பதாலும், ரொக்க அளிப்புப் பெருக் கத்தில் கிடைக்கும் இலாபங்கள் அரசாங்கத்திற்கே சொந்த மாகி, அதன் வளங்களின் ஒரு பகுதியாகிவிடுவன. இந்த அளவிற்கு, அரசாங்கத்தின் முதலீட்டுச் செலவீட்டிலுள்ள பற்றுக்குறை நிதியாக்கக் கூறுனது குறைந்துவிடுகிறது. எனவே, கூடுதலான ரொக்கத் தேவை இல்லாதபொழுது உள்ள விலையேற்றத்தைவிடக் குறைந்த விலையேற்றமே இதில் இருக்கும்.

வேறு முறையில் கூறவேண்டுமெனில், அரசாங்கம் அதிக ரித்துள்ள செலவீட்டின் ஒரு பகுதியினை ரொக்கத் தேவையின் அதிகரிப்பு உறிஞ்சிவிடுகிறது. எனவே, அரசாங்கத்தின் அதிகரித்த செலவீடானது, ஏறிக்கொண்டிருக்கும் விலைகளில் எந்த விளைவினையும் ஏற்படுத்தவில்லை. ரொக்கத் தேவையின் அதிகரிப்பின் அளவைத் திட்டவட்டமாக முன்கூட்டியே

கணித்துவிடமுடியாது; ஆனால், அது நிச்சயமாகத் தேசிய வருமானம், செலவீடு முதலானவற்றில் ஏற்படும் அதிகரிப்பின் பக்கம் திரும்பும்; தேசிய வருமானத்திலும் செலவீட்டிலும் ஏற்படும் அதிகரிப்பு, உற்பத்திப் பெருக்கத்தையும் விலையேற்றத்தையும் பொறுத்ததாகும். முதலீட்டுக் காலமுடிவில் உற்பத்தி பெருகும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அரசாங்கச் செலவீடு முடிந்தபிறகும்கூட இந்தக் கூடுதலான ரொக்கத் தேவை தொடர்ந்திருந்துகொண்டுதானிருக்கும். இவ்வாறாக, ரொக்கத் தேவையில் நிரந்தரமான அதிகரிப்பு இருக்கும். இந்த ரொக்கத் தேவையினைப் பூர்த்திசெய்ய அரசாங்கம் சிருட்டிக்கும் ரொக்க அளிப்பின் அதிகரிப்பானது, செலவீட்டின் நிதியாக்கத்திற்கு உரிய மூலங்களில் ஒன்றாகிறது. முதலீடு முடிந்தபிறகும், இவ்வாறு உண்டாகிய கூடுதலான உற்பத்தியின் ஓட்டம் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பிறகும்தான் ரொக்க அளிப்பின் அதிகரிப்பின் அளவு தெரிய வரும். இந்த அளவிற்கு 'சிருட்டிக்கப்பெற்ற பணத்'திற்கு அல்லது ரொக்கப் பெருக்கத்திற்குப் பற்றாக்குறை நிதியாக்கத்தில் இடமுள்ளது.

இதைத் தவிர, முதலாக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பற்றாக்குறை, நிதியாக்கத்தின் விலை விளைவினைக் குறைக்கும் குறிக்கோளினைக்கொண்ட திட்டத்தின் சாறு எதுவெனில், ஒரு பக்கத்தில் துவக்கச் செலவீட்டினைத் தொடர்ந்து ஏற்படும் தூண்டப்பெற்ற செலவீட்டின் அளவினைக் கூடுமானவரையில் குறைப்பதும், மறுபக்கத்தில் குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தி ஓட்டத்தை முடிந்தவரையில் அதிகரிப்பதும் ஆகும். தூண்டப்பெற்ற செலவீட்டின் அளவானது முக்கியமாக மூன்று காரணிகளைப் பொறுத்ததாகும்; அதாவது, பற்றாக்குறை நிதியாக்கம் தூண்டிய இலாபங்களில் ஒரு வீதாசாரம் செலவாதல் ($d_3 I_1$), விலையேற்றத்தின் காரணமாகக் கூலி வருமானக்காரர்கள் மேற்கொண்ட கூடுதலான செலவு (βW_1), பற்றாக்குறை நிதியாக்கத்தினால் தூண்டப்பெற்று, பாங்குகளின் ரொக்க இருப்புகளில் ஏற்பட்ட சேர்ப்பும் (addition), இந்த அடிப்படையில் சிருட்டிக்கப்பெற்ற பாங்குச் செலாவணியின் அளவும் (X) ஆகிய காரணிகளைப் பொறுத்தே தூண்டப்பெற்ற செலவீட்டின் அளவு அமையும். இதனை நாம் முன்னரே குறித்துள்ளோம். தூண்டப்பெற்ற செலவீட்டினைக் குறைப்பதற்காக வேண்டி, பொருளாதாரத் திட்டமானது இம் மூன்று காரணிகளையும்

பொறுத்து இயங்கவேண்டும்; இதன் பொருள் என்னவெனில், அரசிறைக் கைக்கோள் (fiscal policy), கூலிபற்றிய கைக்கோள், பாங்குச் செலாவணிபற்றிய கைக்கோள் ஆகிய மூன்று காரணிகளைப் பொறுத்தே பொருளாதாரக் கைக்கோள் இயங்க வேண்டும்.

பற்றுக்குறை நிதியாக்கத்தினால் தூண்டப்பெற்ற வருமான அதிகரிப்பினை வரிகள், கடன்கள்மூலமாக அரசாங்கம் உயர்ந்த பட்சம் துடைத்து எடுத்துத் திரும்பப் பெறுதலையே (mopping up) அரசிறைக் கைக்கோள் குறிக்கோளாகக் கொள்ளல் வேண்டும். வருமானம் பெருகப் பெருக, வரிகளும் கடன்களும் அரசிறைக் கைக்கோளில் தக்க இடம்பெற்றுப் பெருகினால், வருமானப் பெருக்கத்தின் ஓட்டம், நிதி இலாக்காவை நோக்கி இயல்பாகவும் உறுதியாகவும் திரும்பிவிடும். பணக்கூலி வீதத்தின் உயர்வினை உயர்ந்தபட்ச அளவிற்குத் தடுக்க முயற்சி எடுப்பதே கூலிபற்றிய கைக்கோளாக இருக்க வேண்டும். இதனைச் செய்வதற்காக வேண்டி, தொழிலாளர் தங்கள் கூலியினால் வாங்கும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவேண்டியது அவசியமாகும்; இதனுடன் எங்கெங்கே இயலுமோ அங்கெல்லாம் அத்தியாவசியப் பொருள்களை நல்லவண்ணம் கட்டுப்படுத்திப் பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்யவேண்டும். தகுந்த திட்டங்களைத் (projects) தேர்ந்தெடுப்பதன்மூலமாகவும், அவ்வாறு தேர்ந்தெடுப்பதில் மாத்திரமன்றி அவற்றைச் செவ்வனே நிறைவேற்றுவதிலும் தொழிலாளரின் ஒத்துழைப்பையும் பங்கு பெறுதலையும் நாடுவதன்மூலமாகவும் அவர்களுடைய நேரடியான ஆதரவினை அடையவேண்டியதும்கூட முக்கியமானதாகும்.

பாங்குச் செலாவணிபற்றிய கைக்கோளினைப் பொறுத்த வரையில், பற்றுக்குறை நிதியாக்கத்துடன் பாங்கு அமைப்பினைக் கட்டுப்படுத்தும் மாக்ரோ தடைகளையும் (macro curbs) மைக்ரோ தடைகளையும் (micro curbs) இணைப்பதானது விரும்பத்தக்கதே. முன்னது, பாங்குகளின் காப்புநிதி விகிதத்தினை (reserve ratio) அதிகரிக்கச் செய்யும்; ரொக்க இருப்புகளுக்குத் தக்கவாறு அவற்றைச் சார்ந்து, கூடுதலான பாங்குச் செலாவணியின் ஓட்டத்தினை ஒழுங்குபடுத்துதல்மூலமாகப் பின்னது நிறைவேற்றப்படும். பாங்குச் செலாவணியைத் தடை செய்தல், அதனை ஒழுங்குறச் செய்தல்பற்றிய கைக்கோளினைக் குறிப்பாக வலியுறுத்த நான் விரும்புகிறேன். ஏனெனில், விலையேற்ற அளவும், அது, ஆண்டொன்றுக்கு ஒரு சதவீதத்திற்கும்

குறைவாகிவிடுதலுக்காக எடுத்துக்கொள்ளப்படும் கால நீட்சியும் X என்னும் குறியின் மதிப்பையே பெரும்பாலும் சார்ந்திருக்கிறது. [X எனும் இக் குறியானது பாங்குச் செலாவணியையும் ரொக்க இருப்பினையும் இணைக்கும் பெருக்கு எண்ணைக் (multiple) குறிக்கும்.] இவையனைத்தும் மேற்கொள்ளப்பட்டால், தூண்டப்பெற்ற செலவீட்டின் அளவினைக் குறைத்து, பற்றுக்குறை நிதியாக்கத்தினைத் தொடர்ந்துவரும் விலையேற்றத்தின் மூலாதாரக் காரணத்தை அறவே அகற்றுவதற்கு வழிகோலியதாகும்.

உற்பத்தி குறித்தும் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும். முதலாக்கத்திற்கு அதிக காலம் பிடிக்கும் என்பதும், அது வெகுகாலத்திற்குப் பின்னரே பயனளிக்கும் என்பதும் உண்மையே ; இடையில், துய்ப்புப் பொருள்களின் உற்பத்தியில் எந்தவிதமான கூடுதலும் ஏற்படாது ; ஆனால், முதலீட்டின் ஒவ்வோர் இனத்தைப் பொறுத்தவரையில்தான் இது உண்மையாகும். முதலீட்டுத் திட்டங்களின் தொகுப்பினை ஒரு குறிப்பிட்ட முறையில் உருவாக்கினால், ஓரளவிற்கு உற்பத்தியின் ஓட்டம் மிக விரைந்து ஏற்படும் ; மற்றொரு முறையில் உருவாகும் திட்டங்களின் தொகுப்பில் ஏற்படும் உற்பத்தி ஓட்டத்தைவிட ஒரு குறிப்பிட்ட முறையில் உருவாக்கிய முதலீட்டுத் திட்டங்களின் தொகுப்பில் இன்னும் விரைவாக அவ் ஓட்டம் அமையும். பற்றுக்குறை நிதியாக்க முதலீட்டினை மேற்கொள்ளும்பொழுது, குறைந்த காலத்தில் பலனளிக்கக்கூடிய திட்டங்களையும், உணவுத் தானியங்கள் போன்ற தொழிலாளர் தம் கூலிக்கு வாங்கும் அத்தியாவசியப் பண்டங்களைக் கூடியவிரைவில் பெருக்குகின்ற குறிக்கோள்களைக்கொண்ட திட்டங்களையும் முதலீட்டுக் கைக்கோளில் சேர்க்க வேண்டியது அவசியமாகும். பற்றுக்குறை நிதியாக்கத்தினைத் தொடர்ந்து, முடிந்த அளவிற்குத் திட்டமிட்ட இறக்குமதி எச்சத்தை மேற்கொள்வது பயனளிப்பதாகும். இவ் இறக்குமதி எச்சத்தால் பண்டங்கள் அதிகமாகக் கிடைத்தவினால், அதிகரித்த செலவீட்டின் விலை விளைவு ஓரளவிற்குக் குறையும். இவ்வாறாக, PL 480 திட்டங்களின்கீழ் வழங்கப்பெறும் நிபந்தனையற்ற அயல்நாட்டுதவி அல்லது பண்ட உதவி, விலைகளின்மீது பற்றுக்குறை நிதியாக்கம் உண்டாக்குகின்ற விளைவுகளைக் குறைத்துவிடும்.

இறுதியாக, பற்றுக்குறை நிதியாக்கத்தின் விலை விளைவினைக் குறைப்பதில் பொதுமக்களின் தெளிவு, ஒத்துழைப்பு ஆகியவற்றின் பங்குபற்றி வலியுறுத்த விரும்புகிறேன். பொது

மக்களின் கருத்துப்படி, பற்ருக்குறை நிதியாக்கம் பணவீக்கத் துடன் இணைந்துள்ளது. போர்க்காலத்தின் நிதியத்தின் வரலாற்று அனுபவமும் இதுதான் என்பதனை யாரே மறுக்க வல்லார்? பற்ருக்குறை நிதியாக்கத்தின்மூலம் முதலாக் கத்தின் ஒரு பகுதியை மட்டிலுமே மேற்கொண்டபோதிலும், அதைப்பற்றிய அச்சம் அப்படியேதானிருக்கிறது. இந்த அச்சம், பணத்தின் மதிப்பிறக்கத்திற்குக் காரணமாகி, பணத்தின்மீதுள்ள மதிப்பினை மக்களிடத்துக் குறையச் செய் கிறது; இதனுல் விலையேறும் நிலை ஏற்படுகிறது. எனவே, போர்க்காலத்தில் மேற்கொள்ளப்படும் பற்ருக்குறை நிதியாக் கத்திற்கும், முதலாக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் பற்ருக் குறை நிதியாக்கத்திற்கும் உள்ள வேறுபாட்டினைமட்டும் புரிந்துகொண்டால் போதாது. முதலாக்கத்திற்காக மேற் கொள்ளப்பட்ட பற்ருக்குறை நிதியாக்கத்தின் விலை விளை வினைக் குறைந்தபட்ச அளவிற்குக் குறைப்பதற்காகவேண்டி, துவக்கத்தில் விவரிக்கப்பெற்ற திட்டங்களை நிறைவேற்று வதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பும் வேண்டும். வரி விதிப்பு, சேமிப்புகள், பாங்குச் செலாவணிக் கட்டுப்பாடுகள், கூலிக் கட்டுப்பாடுகள், விலைக் கட்டுப்பாடுகள், கட்டுப்பாடு செய்யப்பட்ட பகிர்வு ஆகியவைகள் அனைத்தும் சாதாரணமாக வெறுப்பினை உண்டாக்குவனதாம். இவற்றின் நியாயத்தையும் பொருளையும் முழுதும் உணர்ந்து, இவற்றைப் பயன்படுத்து வதன் குறிக்கோளையும் முழுதுமேற்று ஆதரவு தரும்பொழுது தான், இவை செவ்வனே இயங்கும் மிக உயர்ந்த வாய்ப்புக் கிடைக்கும். எனவே, முதலாக்கத்திற்காகவேண்டி, பற்ருக் குறை நிதியாக்கத்தினை மேற்கொள்ளும்பொழுது, பொது மக்களிடத்தில் இதுபற்றிய தெளிவினை உண்டாக்கி, அவர் களுடைய ஒத்துழைப்பினைப் பெற முயல்வது மிகவும் அவசிய மாகும்.

முடிவாக, முதலாக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் பற்ருக்குறை நிதியாக்கம் பணவீக்கத்தை உண்டாக்குகிறதா, இல்லையா என்பது அரசாங்கத்தின் முதலீட்டுச் செலவீட் டினைத் தொடர்ந்து ஏற்படும் விலைப்போக்கினைப் பொறுத்த தாகும். விலைப்போக்கினை நிர்ணயிக்கும் காரணிகளை இக் கட்டுரையில் விவரித்துள்ளோம்; ஒரு மாதிரியையும் வழங்கி யுள்ளோம்; பற்ருக்குறை நிதியாக்கத்தினுல் ஏற்படும் விலையேற்றத்தின் வகை, அளவு, காலநீட்சி ஆகியவற்றை நிர்ணயிக்க, மூன்று சமன்தொடர்களை வழங்கியுள்ளோம். சில விறைப்பான எடுகோள்களின் அடிப்படையில் இச் சமன்

தொடர்கள் உருவாக்கபட்டிருப்பதால், எடுகோள்களை ஒன்றன் பின் ஒன்ருகக் கைவிடுதலினுல் விலைப்போக்கின்மீது ஏற்படக் கூடிய விளைவுகளையும் பகுத்தாய முற்பட்டோம். நமது விவாதத்தின் தர்க்கரீதியான விளைவு என்னவெனில், பற்ருக்குறை நிதியாக்கம் பணவீக்க நிதியமாக மாறிக் கெடுவதைத் தடுப்பதற்காகவும், முதலாக்கத்தை வெற்றியுடன் நிறைவேற்றக் குறிப்பிட்ட அளவிற்குக் கட்டாயச் சேமிப்பினை உருவாக்குவதற்காகவும் கைக்கோள் சார்ந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதேயாம்.

6. விலைபற்றிய கைக்கோளும் பொருளாதார வளர்ச்சியும்

பொருளாதார வளர்ச்சிபற்றி எழுதும் அறிஞர்கள் முதலீடு, தொழில் நுண்ணியல் (technology), அமைப்பு ரீதியான மாறுதல்கள் (institutional changes) முதலானவற்றையே ஆய்விற்குரிய முக்கிய விஷயங்களாகச் சாதாரணமாக எடுத்துக் கொள்கின்றனர். அவர்களுடைய ஆராய்ச்சியில் சாதாரணமாக விலைக் கைக்கோள் (price policy) இடம் பெறுவதில்லை. விலைக் கைக்கோளினைக் குறிப்பிடும்பொழுதும்கூட, விரைந்து செல்லும் பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தப் பெற்றுள்ள பணவீக்க நியதிகளின் அல்லது அரைகுறைப் பண வீக்க நியதிகளின் சூழமைவில்தான் சாதாரணமாக விலை பற்றிய கைக்கோளினைக் குறிப்பிடுகின்றனர். பின்னர், பண வீக்கத் தடுப்புப்பற்றிய கைக்கோளினைப்பற்றியோ அல்லது விலையேற்றக் கோட்டினைத் தடுக்கும் (hold the price line) முயற்சிபற்றியோதான் கவனம் செலுத்துகின்றனர்.

உண்மையில், இந்தியாவிலும் இன்று விலையேற்றக் கோட்டினைத் தடுத்து நிறுத்துவதுபற்றியேதான் பேச்சு உள்ளது; மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விலையேற்றக் கோட்டினைத் தடுத்து நிறுத்தவேண்டிய அவசியம்பற்றியும், அதற்காக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள்பற்றியும் பேசப்படும் பேச்சுதான், நடைமுறையில் விலைக் கைக்கோள் பற்றிய பேச்சாக உள்ளது. விலைக்கைக்கோளின் முக்கியப் பகுதி இதுவன்று என்று நான் சொல்லவில்லை. ஆனால், பொது விலைகளின் மட்டத்தின் (general level of prices) இயக்கத்தை மாத்திரமே விலைக்கைக்கோள் குறிப்பதாகாது. இதைவிட உயர்ந்த அளவிற்கு இல்லையெனினும், இதே அளவிற்கேனும் தராதர விலைகளின் மட்டங்களின் இயக்கங்களையும் (movements in relative levels of prices), முக்கியமான பண்டங்களின் தராதர விலைகளின் இயக்கங்களையும் விலைக்கைக்கோள் குறிக்கும்.

மேலும், பண்டங்களையும் பணிகளையும்மட்டுமன்றி, உற்பத்திக் காரணிகளையும் விலைகள் குறிக்க வேண்டும். ஆக, எந்தச் சூழமைவிலும், விலையினை மாருது நிலைத்திருக்கச் செய்தலோ அல்லது குறிப்பிட்ட ஒரு மட்டத்தில் விலையேற்றக் கோட்டினைத் தடுத்து நிலையாக நிறுத்திவிடுதலோ மட்டிலுமே விலைக் கைக்கோளாகாது.

இவையனைத்தும் முன்னரே சொல்லப்பட்டவைகள்தாம். எனினும், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சூழமைவிலும் போதுமானது என்று கருதத்தக்கதும் நன்கு சிந்திக்கப் பெற்றதுமாகிய விலைக்கைக்கோளின் அவசியம்பற்றி, பொது மக்களிடத்தில் ஏறத்தாழப் பரவலாகவிருக்கும் எண்ணத்தின் சூழமைவிலும் விலைக் கைக்கோளினைப்பற்றி மீண்டும் சிந்தித்தல் அவசியமாகிறது. பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய விலைக்கைக்கோளினை உருவாக்குவதில் உள்ள அடிப்படையான பிரச்சினைகள் குறித்துத் தெளிவான அறிவு நமக்கு இருந்தாலொழிய, நோயைவிட நோய் தீர்க்கும் வழிகள் எனக் குறிப்பிடப்படுபவை மிகவும் மோசமானவையாக மாறிவிடும் ஆபத்து ஏற்படும். எனவே, எவருடைய மன்னிப்பையும் கோராது, திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் சூழமைவில், விலைக்கைக்கோள்பற்றிய கோட்பாட்டின் சுருக்கமான பகுத்தாய்வினை நான் விளக்க முற்படுகின்றேன்.

விலைகளின் பணி

சில பணிகளை நிறைவேற்றும் முக்கியமான பொருளாதார மெக்கானிசம்தான் (mechanism) விலையாகும் என்பதனை முதலில் வலியுறுத்த வேண்டும். விலைகளின் பணிகள் சார்ந்த சூழமைவில்தான் எந்தக் கைக்கோளினையும் உருவாக்கவேண்டும்; அதாவது, இத்தகைய பணிகளை மேலும் திறமையுடனும் இன்னும் போதுமான அளவிற்கும் நிறைவேற்றக் கைக்கோள் உறுதுணையாக இருக்கவேண்டும். முக்கியமாக, பொருள்கள், உற்பத்திக் காரணிகள் ஆகியவற்றின் தேவைக்கும் அளிப்பிற்குமிடையில் வேண்டிய சமநிலையை (equilibrium) உண்டாக்குவதே விலைகளின் பணியாகும். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட விலையில் பண்டத்தின் தேவை அதன் அளிப்பைவிட அதிகமாக இருந்தால், அதனுல் விளையும் விலையேற்றமானது ஒருபுறத்தில் தேவையினைக் குறைக்கும் என்றும், மறுபுறத்தில் அளிப்பினைப் பெருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது; இதன் விளைவாக

ஒரு புதிய சமநிலை ஏற்படுகிறது; துவக்கத்தில் இருந்ததைவிட இப் புதிய சமநிலையில் விலை உயர்ந்திருக்கும்; ஆனால், புதிய சமநிலை உருவாகியதற்குமுன் இருந்ததைவிடப் புதிய சமநிலையில் விலை குறைவாகவே இருக்கும். வேறு மொழியில் உரைப்பின், இத்தகைய விலையேற்றமானது, மேலும், விலையேற்றம் ஏற்படுவதைத் தடுத்துவிடுகிறது; இவ்வாறு நிகழும் பொழுது மாத்திரமே, விலையானது தனது பொருளாதாரப் பணியைச் செம்மையாக நிறைவேற்றுகிறது எனலாம். மறுதலையாகச் சொல்லின், விலையிறக்கமானது மேலும் விலை குறைதலைத் தடுத்தால் மாத்திரமே, விலையானது தனது பொருளாதாரப் பணியை நல்ல முறையில் நிறைவேற்றுகிறது எனலாம். இவ்வாருக, பண்டங்களின் விலைகளும் தனிப்பட்ட அளிப்புகளின் மாற்றங்களுக்குத் தக்கவாறு மாறி, மீண்டும் விலையேற்றமோ இறக்கமோ ஏற்படாத புதிய சமநிலையை அடைய உதவவேண்டும். வேறு முறையில் சொன்னால், தேவைமீதும் அளிப்புமீதும் தக்க முறையில் இயங்கி, விலைகள் தங்களுடைய பொருளாதாரப் பணியை நிறைவேற்றும் பொழுது, விலையில் ஏற்படும் மாறுதல்கள், மீண்டும் மீண்டும் மாறுதல்கள் ஏற்படாதவாறு தம்மையே அழித்துக்கொள்ளும் தன்மை (self-liquidating character) உடையனவாகப் பெரும்பாலும் இருக்கவேண்டும்.

தேவை, அளிப்பு ஆகியவற்றின் புதிய சமநிலையை அடைவதற்காகத் தனித்த விலையேற்றம் மேற்கொள்ளும் பணியானது, சாதாரணமாகச் சொல்லப்படுகின்ற பொது விலைகளில் ஏற்றத்தை உண்டாக்கியோ அல்லது உண்டாக்காமலோ இயங்க முடியும். இதற்கான மூன்று காரணங்கள் பின்வருமாறு: (1) பண்டம் A-யின் அதிகரித்த தேவையினைத் தொடர்ந்து, ஏனைய பண்டங்களின் தேவை அதே அளவிற்குக் குறைந்திருக்கிறதா இல்லையா என்பது ஒரு காரணம்; (2) தனது புதிய சமநிலை விலையினை அடைவதற்குத் தேவையான அளவிற்கு உள்ள பண்டம் A-யின் அதிகரித்த அளிப்புகள், ஏனைய பண்டங்களின் உற்பத்தியிலிருந்து மூலவளங்களை விடுவிக்கும் வினைவினை ஏற்படுத்தியுள்ளனவா என்பது பிறிதொரு காரணம்: (3) பண்டம் A-யின் அதிகரித்த தேவைக்கிணங்க ஏற்படும் வருமானப் பெருக்கம் சார்ந்த பணம்சார் கைக்கோளும் அரசிறைக் கைக்கோளும்; பண்டம் A-யின் அதிகரித்த தேவைக்கிணங்க ஏனைய பண்டங்களின் தேவையில் ஏற்படும் மாறுதல்.

மூலவளங்களை மீண்டும் பங்கீடு செய்தல்

பணவழிக் கைக்கோள் நடுநிலைமையுடன் இருக்கும் பொழுதும், கூடுதலான ஆக்கமுள்ள வளங்களில் கிடைப்பருமை (scarcity) நிலவும்பொழுதும் பொது விலைகளின் மட்டத்திலோ அல்லது மொத்த உற்பத்தியின் பருமத்திலோ மாற்றம் இருக்க முடியாது. நேரக்கூடியது என்னவெனில், தனிப்பட்ட பண்டங்களின் ஒப்பிடத்தக்க விலைமட்டங்களில் மாறுதலும், உற்பத்தி சக்திகளில் மறுபகிர்வும், அதன் விளைவாக உற்பத்தியின் கூட்டமைவில் மாறுதலுமே எனலாம். என்றாலும், தனிப்பட்ட பண்டங்களின் தேவையில் பலமான அழுத்தங்கள் (strong pressures in demand) இருக்கும்பொழுது, பணவழிக் கைக்கோளோ அல்லது அரசிறைக் கைக்கோளோ நடுநிலையுடன் வாளாவிருத்தல் அநேகமாக முடியவே முடியாது. தனிப்பட்ட பண்டங்களின் ஒப்பிடத்தக்க விலை மட்டங்களில் மாறுதல் ஏற்படும்பொழுதுமாத்திரமன்றி, பொது விலை மட்டத்தில் உயர்வு ஏற்படும்பொழுதும் புதிய சமநிலையினை அடைதல் அநேகமாகத் தவிர்க்க முடியாத ஒன்றாகிறது. கூடுதலான, ஆக்க பூர்வமான மூலவளங்களை (இதுவரையில் பயன்படுத்தப்படாத அல்லது தேக்கமாகியுள்ள வளங்களை) உபயோகத்திற்குக் கொண்டுவரும் விளைவினையோ அல்லது நிலவும் மூலவளங்களின் ஆக்கத்திறனை அதிகரிக்கும் விளைவினையோ உண்டாக்கும் விலையேற்றங்கள் உள்ளபொழுதுமட்டிலுமே, தனித்த விலையேற்றங்கள் பொதுவிலைமட்டத்தை உயர்த்தாது; மேலும், விலையேற்றமது தம்மைத் தாமே அழித்துக் கட்டுப் படுத்திக்கொள்ளும்.

வேறு முறையில் சொல்லின், பொது விலைகளின் மட்டத்தில் நாம் ஏற்றத்தை விரும்பவில்லை என்றால், தனித்த பண்டங்களின் தேவை அதிகரிப்பிற்கு மொத்த உற்பத்தி அதிகரிப்பு மட்டுமே சரியான விடையாகும். பலவீனமான அல்லது பயன்படுத்தப்பெறாத வல்லமையினையே எப்பொழுதும் பெற்றிருக்கும் ஆக்கமுள்ள மெக்கானிசத்தினையுடைய வளர்ச்சியுற்ற பொருளாதாரத்திலும்கூட மொத்த உற்பத்தி பெருகுவதற்குக் காலம் அதிகம் பிடிக்கும். வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில், பொருளாதார வளர்ச்சிப் படிமுறையில் அது இயங்கிக்கொண்டிருக்கும்பொழுதுகூட, மொத்த அதிகரிப்புப் பெருகுவதற்கு ஆகும் காலம் இன்னும் கூடுதலாக இருக்கும். எனவே, இடைக்காலத்தில், வளர்ச்சியுற்ற பொருளாதாரத்தைவிட, வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில்,

தனிப்பட்ட பண்டங்களின் விலையேற்றத்தைத் தொடர்ந்து பொது விலைகளின் ஏற்றத்திற்குரிய வாய்ப்பு அதிகமாகவே உள்ளது.

திட்டமிடுதலில் விலை மெக்கானிசம்

பெரும்பாலான துய்ப்போரின் விருப்பங்களோ அல்லது பெரும்பாலான உற்பத்தியாளர்களின் விருப்பங்களோ கடுமையாகப் பாதிக்கப்படுகின்றமையினுல், இடைக்காலத்தில் அடைந்த பொருளாதார வளர்ச்சிப் படிமுறையில் விளைந்த சமநிலையின் புதிய கட்டங்களுக்கு சமூக ஒப்புதல் கிடையாது; எனவே, தேவையிலும் அளிப்பிலும் உள்ள மாறுதல்களினுல் ஏற்படும் இயல்பான விளைவுகளில் விலைக்கைக்கோள் குறுக்கிட வேண்டியுள்ளது. விலை மாற்றங்களை அரசாங்கம் ஒழுங்கு படுத்துதல், தேவையிலோ அல்லது அளிப்பிலோ அல்லது இரண்டிலுமோ தக்க மாறுதல்களை உண்டாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் முதலான முறைகளில் குறுக்கீடு ஏற்படுகிறது. விலைக்கட்டுப்பாடுகள், கட்டுப்படுத்தப்பெற்ற பங்கீடு, உதவித்தொகைமூலம் உற்பத்தியைப் பெருக்குதல் ஆகிய முறைகளை விலைக்கைக்கோள் மேற்கொள்ளும். ஆனுல், இவையனைத்தும் ஒருபுறமிருக்க, தேவையையும் அளிப்பினையும் தூண்டக்கூடிய அல்லது தடுக்கக்கூடிய நிச்சயமான விளைவினை உடைய விலையானது உயிர்ப்புள்ள தன்மை கொண்டதே. விலையின் உயிர்ப்புள்ள இத்தன்மையை அலட்சியப்படுத்த முடியாது.

குறைந்தபட்சம் ஓரளவிற்கேனும் தேவையிலும் அளிப்பிலும் விரும்பத்தக்க மாறுதல்களை உண்டாக்குவதற்காக வேண்டி, அரசாங்கம் நிருவாக அதிகாரத்தினையும் வல்லந்தப்படுத்தும் அதிகாரத்தினையும் பிரயோகிப்பதைவிட, விலை மெக்கானிசத்தைப் பிரயோகிப்பதன் முக்கியத்துவத்திற்குச் சான்ருகக் கம்யூனிச நாடுகளிலும்கூட அண்மைக் கால சிந்தனையோட்டம் அமைந்திருக்கிறது. இவ்வாருக, திட்டமிட்ட பொருளாதாரத்திலுங்கூட, விலைகளுக்கு நிச்சயமான பங்கிருக்கிறது; வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்திலிருந்து வளர்ச்சியுற்ற பொருளாதாரத்திற்கு மாறுவதனை எளிதாக்கத் தேவையான தனிப்பட்ட பண்டங்களின் தேவையிலும் அளிப்பிலும் இத்தகைய மாறுதல்களை உண்டாக்க விலை மெக்கானிசத்தை அறிவார்ந்த கைக்கோள் பயன்படுத்தவேண்டும்.

வேறு மொழியில் கூற வேண்டுமெனில், வளரும் பொருளாதாரச் சூழமைவில், விலைக்கைக்கோளினை வெறும் மேக்ரோ அளவுகளில் (macro terms) மட்டும் எண்ணிப்பார்க்கக்கூடாது. பொருளாதார டைனமிக்சின் கோட்பாட்டில் (theory of economic dynamics) கைக்கோளினை உருவாக்குவதில், தனித்த பண்டங்களின் விலை நெகிழ்ச்சி (price flexibility) முக்கிய இடம் வகிக்கிறது.

ஆக, விலையேற்றத்தையே சந்தேகக் கண்கொண்டு நோக்க வேண்டியதில்லை. எனினும், தனியான விலையேற்றத்தின் காரணமாக உற்பத்தி பெருகாமலிருந்தாலோ அல்லது தேவை குறையாமலிருந்தாலோ, அவ் விலையேற்றமானது பொருளாதாரப் பணியை நிறைவேற்றவில்லை என்றே பொருள்படும். இன்னும், பொது விலையேற்றத்தைத் தொடர்ந்து கணிசமான அளவிற்கு உற்பத்தி பெருகவில்லை எனில், அவ் விலையேற்றம் விரும்பத்தக்க தகுதி உடையதன்று எனலாம். எந்தச் சூழமைவிலும் விலைக்கைக்கோளினைப்பற்றி முடிவு எடுப்பதற்கு முன்னர், விலைகளையும் உற்பத்தியையும் ஒன்றாகவே இணைத்து ஒருவர் நோக்கவேண்டும் என்பதனை மிகவும் முக்கியமாக உணர்தல் வேண்டும். விரைந்து மேலேறும் விலைமட்டத்தைப் போலவே மாறாது நிலைத்து நிற்கும் பொது விலைகளின் மட்டமும் பொருளாதார வளர்ச்சியினை அழுத்தும் வெறும் சுமையாகும். விலைவாசி நிலைபேற்றினைப் (price stability) பற்றி இன்று இந்த நாட்டில் நடைபெறும் நடப்பு விவாதங்களில் இந்த உண்மையினை மறந்துவிடக்கூடாது.

துய்ப்போர் குறியீட்டெண்ணின் நிலைபேறு

இவற்றைப்பற்றியெல்லாம் சொல்லிய பிறகு, மற்றொன்றினையும் ஒருவர் உடனே எடுத்துக்காட்டி விடவேண்டும். பணத்தின் வாங்கும் சக்தியை விலைகள் நிர்ணயிப்பதாலும், இலாபங்கள் தவிர வருமானங்களனைத்தும் குறுங்காலத்தில் பண அளவிலேயே மதிப்பிடப்பட்டுள்ளதாலும், விலைகளின் நிலைபேற்றிற்குரிய சரியான வாய்ப்பு இருக்கிறது; அதிலும் குறிப்பாக, பெரும்பகுதித் துய்ப்பைச்சார்ந்த பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் விலைகளின் நிலைபேற்றிற்குரிய சரியான வாய்ப்பு இருக்கிறது. வேறு மொழியில் சொல்ல வேண்டுமெனில், நிலையான வருமானக் குழுவினர் அனைவருக்கும், குறிப்பாகத் தொழிலாளருக்கும் துய்ப்போர் விலைக் குறியீட்டெண் பற்றிய நிலைபேறு (stability of the consumer price index) மிகவும்

முக்கியத்துவம் உடையதாகும். எனவே, துய்ப்புப் பண்டங்களின் விலைமட்டம் உயருவதை அனுமதித்தால், இவ் விலையேற்றத்தை ஈடுசெய்ய, சரிசமமான அளவிற்குக் கூலிகளிலும் சம்பளங்களிலும் உயர்வினைத் தொழிலாளர்கள் கோருகின்ற விளைவு ஏற்படுகிறது; தொழிலாளரின் இக் கோரிக்கை புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றே. இதனால் உற்பத்திச் செலவும் உயருகிறது; எனவே, விலைகள் மேலும் ஏறுகின்றன. இவ்வாறாக, வளர்ச்சியை நோக்கி வகுக்கப்பெற்ற எல்லாப் பணம் சார்ந்த விஸ்தரிப்புக் கைக்கோள்களுக்குப் பின்னே எப்பொழுதும் பயமூட்டும் பணவீக்கச் சுழலேறி நிழலாடுகிறது.

வாங்கும் சக்தியின் வீழ்ச்சி, உண்மை வட்டி வீதத்தையும் குறைத்துவிடுகிறது; எனவே, அது சேமிப்பு வீதத்தையும் கடுமையாகப் பாதித்துவிடுகிறது; இவ்வாறாக, நாட்டின் பொருளாதாரத்தின் பணவீக்க உள்ளார்ந்த ஆற்றல் (inflationary potential) மேலும் கூடிவிடுகிறது. விலையேற்றத்திற்கு ஈடாக வட்டி வீதத்தை உயர்த்துவதால், வட்டி வாங்குவோன் எந்தப் பயனையும் அடைய முடியாது; ஏனெனில், அது உற்பத்திச் செலவை உயர்த்திவிடுகிறது; இதனால் மேலும் தானே முன்னேக்கிச் செலுத்துகிற விலையேற்றம் ஏற்படுகிறது.

விலையேற்ற விளைவினை ஈடுசெய்ய மாத்திரமே பணவருமானங்களை உயர்த்தும்பொழுது, பொருளாதாரத்தின் பணவீக்க இழுப்பாற்றல் மேலும் பெருகிவிடுகிறது என்பதே உண்மையாகும். எனினும், உற்பத்தி அதிகரிப்பினால் பண வருமானங்கள் உயரும்பொழுது (தொழிலாளர்களை அதிகமாக வேலைக்கு அமர்த்தியதால் உற்பத்தி பெருகியதோ அல்லது வேலைக்கமர்ந்த தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் பெருகியதால் உற்பத்தி பெருகியதோ), செலவும் உயர்ந்து, செலவு உயர்ந்த அளவிற்கு விற்பனைக்குரிய பொருள்களின் அளிப்பும் உயரும். எனவே, அங்குப் பொது விலையேற்றம் இருக்காது. ஆனால், இவ்விடத்தில் பொதுவாக உற்பத்தியைக்கொண்டே மட்டும் நாம் பேசக்கூடாது. கூடுதலான வேலையுடன் அல்லது அதிகமாக ஆக்கமுள்ள வேலையுடன் தொடர்புபெற்ற வருமானப் பெருக்கமானது, துய்ப்புச் செலவில் ஒரு குறிப்பிட்ட அதிகரிப்பினை உண்டாக்கும். (துய்ப்புப் பொருள்களின் தேவையின் வருமான நெகிழ்ச்சியைப் பொறுத்தோ அல்லது இறுதிநிலை நுகர்ச்சி நாட்டத்தைப் பொறுத்தோதான் துய்ப்புச் செலவில் அதிகரிப்பு ஏற்படுகிறது). துய்ப்புச் செலவின்

அதிகரிப்பிற்குச் சமமாகத் துய்ப்புப் பொருள்களின் உற்பத்தி அமைந்திருந்தாலொழிய, விலைகளில் ஏற்றம் இருக்கத்தான் செய்யும்; மொத்த உற்பத்தியும் மொத்த வருமானமும் சமமாக இருந்தபோதிலும்கூட, விலைகளில் ஏற்றம் இருக்கத்தான் செய்யும். இத்தகைய விலையேற்றத்தைத் தடுக்காவிடில், பணவீக்கச் சுழலேறியை அது துவக்கிவிடும்; ஏனென்றால், துய்ப்புப் பொருள்களின் விலையேற்றம் தொழிலாளர்களின் விலையேற்றத்தையே (கூலி உயர்வையே) குறிப்பதாகும்; எனவே, அது உற்பத்திச் செலவின் ஏற்றத்தையே குறிக்கும்.

உற்பத்தியின் இணக்கம் (Response of output)

ஆக, வருமானப் பெருக்கங்கள் அனைத்தையும் தொடர்ந்து, அவற்றிற்குச் சமமான உற்பத்திப் பெருக்கங்கள் ஏற்படுவதோடுமாத்திரமன்றி, துய்ப்புப் பொருள்கள்மீதாகும் செலவின் பெருக்கத்தைத் தொடர்ந்து, விற்பனைக்கு வரும் துய்ப்புப் பொருள்களின் பருமமும் சம அளவுக்குப் பெருகுவதனையும் சேர்த்தே விலை நிலைபேறு குறிப்பிடும்.[1] எந்த அளவிற்கு உற்பத்தியின் பெருக்கமானது துய்ப்புச்சாராப் பொருள்களின் உருவினைப் பெறுகிறதோ, அந்த அளவிற்குச் சேமிப்புப் பருமத்திலும் சமமான அதிகரிப்பு ஏற்படவேண்டும் என்பதே அதன் பொருளாகும். எனினும், ஒரு பொருளாதாரத்தில் பயன்படுத்தப்பெறாத வல்லமை இருந்து, அது விலைத்தூண்டுதலுக்கு இணக்கமாக இருக்கும்பொழுது, விலையேற்றமானது தனக்குத் தானே முன்னோக்கி மேலேற வேண்டியதில்லை; ஏனெனில், விலையேற்றத்தினைத் தொடர்ந்து மொத்த உற்பத்தியும் அதிகரிக்கும்; அதிலுள்ள துய்ப்புப் பகுதி சார்ந்த பொருள்களின் உற்பத்தியும் அதிகரிக்கும்.

இவ்வாறாக, பொது விலை மட்டத்தின் பிரச்சினையானது, மொத்தத்தில் உற்பத்தியின் இணக்கத்தையும் அதன் துய்ப்புப் பகுதியையும் சுற்றியே அமைந்திருக்கிறது. தனித்த பண்டங்களின் விலைகளைப் பற்றிய பிரச்சினைகூட விலையேற்றத்தினால் விளையும் உற்பத்தியின் இணக்கத்தைச் சுற்றியே அமைந்திருக்கிறது. தனியான பண்டத்தின் விலை உயர்வாக இருந்தாலும் சரி, மொத்தத்தில் பண்டங்கள் அனைத்தின் விலை உயர்வாக இருந்தாலும் சரி, விலையேற்றத்தின் முழுப் பிரச்சினையும் உற்பத்தியின் இணக்கத்தைச் சுற்றியே அமைந்திருக்கிறது.

[1] மொத்த வருமானம் பெருகாமல், சமூகத்தில் வருமானம் கைமாறுதலினால் சராசரி நுகர்ச்சி நாட்டம் மாறுகின்ற நிலைகளிலும்கூட இது உண்மையே. எனினும், இந்த நிலையில், மொத்த உற்பத்தியின் பருமத்தில் எந்த நிகர அதிகரிப்பும் தேவைப்படாது.

விலையேற்றத்தைத் தொடர்ந்து உற்பத்தி பெருகும்பொழுது, விலையேற்றமானது, மேலும் விலை உயர்வு ஏற்படாதவாறு தன்னைத் தானே அழித்துக்கொள்ள முனைகிறது. எனவே, வெறும் விலை உயர்வு பிரச்சினையாகாது; ஆனால், விலை உயர்வு தொடர்ந்து மேலேறிக்கொண்டு, தனக்குத் தானே வேக வளர்ச்சியில் மேலேறிச் செல்வதுதான் பிரச்சினையாகிறது. விலையேற்றத்திற்குத் தக்கவாறு உற்பத்தி பெருகத் தவறியமை யாலோ, அல்லது உற்பத்தி பெருகினும் துய்ப்புச்சாராப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கத்திற்கு இணையாகச் சேமிப்புகள் போதுமான அளவுக்கு மேலோங்கத் தவறியமையாலோ, மேலே குறிப்பிட்ட நிலைமை ஏற்படுகிறது. குறிப்பிடப்பட்ட பண்டங்களின் தேவையை வெளிப்படையாகத் திட்டமிட்டுக் குறைத்திடும் விளைவினை விலையேற்றம் உண்டாக்கினால், அதனை நியாயம் என ஏற்றுக்கொள்ளலாம். விரும்பத்தக்க திக்கில் ஆக்கமுள்ள சக்திகளைத் திரும்பச் செலுத்துகின்ற விளைவினை தேவைக்குறைப்பு உண்டாக்குகிறது.

விலையேற்றத்தின் உள்ளீடான போக்கு

இறுதியாக, பொருளாதார வளர்ச்சியின் படிமுறை யானது, விலையேற்றத்தின் சில உள்ளீடான போக்குகளைப் (built-in tendencies) பெற்றிருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. நிச்சயமான நடவடிக்கைகள் எடுத்துத் தடுத்தாலன்றி, இப் போக்கு இயங்கியபடியே இருக்கும். பொருளாதார வளர்ச்சியில், துய்ப்புச்சாராப் பண்டங்களின் முதலீட்டில் ஓரளவிற்கு அதிகரிப்புத் தேவைப்படுகிறது. இந்த முதலீட்டு அதிகரிப்புப் பணவீக்க விளைவினை ஏற்படுத்தாது இருக்க வேண்டுமெனில், அதனைத் தொடர்ந்து சமமான அளவிற்குச் சேமிப்புகளிலும் அதிகரிப்பு இருக்கவேண்டும். இவ்விடத்தில் குறிப்பாகப் பொருந்திவருவது எதுவெனில், அடிப்படையான துய்ப்புப் பொருள்களின் விலை உயர்வின் பணவீக்க விளைவும், அதனுடன் தொழிலாளர் கூலி உயர்வும், அதனைத் தொடர்ந்து செலவுவழிப் பணவீக்கமும் (cost inflation) ஆகும்.

உற்பத்தியில் ஏற்படும் எந்தப் பெருக்கமும் வருமானப் பெருக்கத்தையே குறிக்கும் என்பதை நாம் நினைவிற்குக் கொணரவேண்டும். வருமானப் பெருக்கத்திலிருந்து செலவுப் பெருக்கம் ஏற்படுகிறது என்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். உற்பத்திப் பெருக்கமானது அடிப்படை யான துய்ப்புப் பொருள்களின் பெருக்கத்தைக் குறிக்கும் பொழுது, இலக்கணத்தின்படி, வருமானப் பெருக்கமும்

அதனைத் தொடர்ந்து ஏற்படும் செலவுப் பெருக்கமும் பணவீக்கத்தை உண்டாக்கமாட்டா; ஏனென்றால், அடிப்படையான துய்ப்புப் பொருள்களின் விலைகள் உயரமாட்டா. ஆனால், உற்பத்திப் பெருக்கமானது முதலீட்டுப் பொருள்களின் பெருக்கத்தைக் குறிக்கும்பொழுது, வருமானப் பெருக்கமும் அதனைத் தொடர்ந்து அடிப்படையான துய்ப்புப் பொருள்களில் செலவழிக்கப்படும் செலவுப் பெருக்கமும் பணவீக்கத்தை உண்டாக்கக்கூடும்; ஏனெனில், அடிப்படைத் துய்ப்புப் பொருள்களின் விலைகளை அது உயர்த்தும். அடிப்படைத் துய்ப்புப் பொருள்களின் விலையேற்றப் போக்கு முதலீட்டுச் செலவீட்டின் அதிகரிப்பினால் மாத்திரம் விளைந்ததன்று; போகப்பொருள்கள் மீதாகும் செலவின் அதிகரிப்பினாலும் விளைந்ததாகும்; போகப்பொருள்களில் (luxury goods) ஆகும் செலவுப்பெருக்கத்தினைத் தொடர்ந்து வேலையிலும் வருமானங்களிலும் பெருக்கமேற்படுகிறது; அதன் விளைவாக அடிப்படையான துய்ப்புப் பொருள்களில் தொழிலாளர் செலவு பெருகுகிறது. ஆகவேதான், பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து ஏற்படும் பணவீக்க சாத்தியங்களைப்பற்றி எண்ணும்பொழுது, அரசாங்கச் செலவை மாத்திரமன்றிச் செலவுகளனைத்தையும், முதலீட்டுப் பொருள்களின் உற்பத்தியை மாத்திரமன்றி உற்பத்தி முழுவதையும் கருத்திலிருத்துவது பொருத்தமே.

தேவையின் திசைதிருப்பம்

பொருளாதார வளர்ச்சி சார்ந்த விலைக்கைக்கோளில் முரண்பாட்டுக் கூறு ஒன்றிருத்தலை நமது விவாதம் இதுவரையில் வெளிப்படுத்தியுள்ளது. ஒருபுறத்தில், உற்பத்தியைப் பெருக்கவும், அதன் கூட்டமைவினை விரும்பத்தக்க திசையில் செலுத்தி நிர்ணயிக்கவும் விலை மெக்கானிசத்தைப் பயன்படுத்தவேண்டியது அவசியமாகையால், விலைக்கைக் கோளில் நெகிழ்ச்சி இருத்தல்வேண்டும் என்று விவாதிக்கப்பட்டுள்ளது. மறுபுறத்தில், பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்துள்ள முதலீட்டு நடவடிக்கையிலிருந்து எழும் பணவீக்கச் சுழலேறியைத் தடுப்பதற்காக வேண்டி, குறிப்பாக, அடிப்படைத் துய்ப்புப் பொருள்களில் விலை நிலைபேற்றினை ஏற்படுத்துதல் விரும்பத்தக்கதே எனக் கூறப்படுகிறது. எனினும், இவ்விரு வாதங்களிலிருந்து தெரியவரும் அடிப்படையான நாட்டம் எதுவெனில், அடிப்படைத் துய்ப்புப் பண்டங்களின் பெருக்கமும் அடிப்படை முதலீட்டுப் பொருள்களின் பெருக்கமும் ஆகும்.

இக் குறிக்கோளினை அடைகின்ற கைக்கோளே பொருளாதார வளர்ச்சியின் சரியான விலைக் கைக்கோளாகும். விலையேற்றம் எந்த அளவிற்கு உற்பத்தியைப் பெருக்கவில்லையோ அந்த அளவிற்கு விலையேற்றத்தில் உண்மையாகவே நியாயம் கிடையாது. இவ் விலையேற்றத்தைத் தடுக்க எல்லாவித சாத்தியமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும். விலையேற்றம் எந்த அளவிற்குத் துய்ப்புக் குறைப்பினை உண்டாக்குகிறதோ அல்லது அவசியமற்ற திசைகளில் மூலவளங்களைப் பயன்படுத்துதலைக் குறைக்கின்றதோ, அந்த அளவிற்கு அது விரும்பத்தக்கதே; அந்த அளவிற்கு அதனை ஆதரிக்கவும் வேண்டும். மொத்த உற்பத்திப் பெருக்கத்தினை உண்டாக்கவில்லையெனினும்கூட, விலையேற்றம், தேவையில் திசை திருப்பத்தையும், ஆக்கமுள்ள சக்திகளைத் திரும்பவும் பகிர்ந்தளிப்பதையும், விரும்பத்தக்க திக்கில் உற்பத்தியைப் புதிய முறையில் ஆக்குவதையும் உண்டாக்கினால், அதனை ஏற்றுக் கொள்ளலாம். சடப்பொருள் சார்ந்த அளிப்பில் பெருமளவு நெகிழ்ச்சியின்மைகளையும், பெருமளவு வருமான ஏற்றத் தாழ்வுகளையும், அதனைத் தொடர்ந்து போகப்பொருள்களின் தேவையிலும் படாடோபமான துய்ப்பின் தேவையிலும் பெருமளவு நெகிழ்ச்சியின்மைகளையும் கொண்ட வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில் விலைக்கைக்கோளுக்கு ஏற்படக் கூடிய குறைபாடுகளையும் ஒருவர் உய்த்துணர வேண்டும். என்றாலும், இத்தகைய குறைபாடுகள் இருந்தபோதிலும், பொருளாதார வளர்ச்சிக்கெனச் சரியாக உருவாக்கப்பெற்ற விலைக் கைக்கோளினை மேற்கொள்ள வாய்ப்பிருக்கிறது. இத்தகைய விலைக் கைக்கோளில் மேக்ரோ பொருளாதாரக் கூறும் மைக்ரோ பொருளாதாரக் கூறும் அடங்கியுள்ளன.

மேக்ரோ கூறு (Macro Element)

தனது மேக்ரோ கூறினைப் பொறுத்தவரையில், விலைக் கைக்கோளானது முக்கியமாகப் பணம்சார் கைக்கோளின் உருவினையும், அரசிறைக் கைக்கோளின் உருவினையும் மேற்கொள்கிறது. பொருளாதார வளர்ச்சியானது முதலீட்டுச் செலவீட்டினைப் பெருக்குதலையே குறிக்கும். இதன் விளைவாக, வேலைப் பெருக்கத்தின் காரணமாக ஓரளவிற்கு வருமானப் பெருக்கமும், சமூகத்தில் நிலவும் பற்றாக்குறையான மூலவளங்களின் தேவை அழுத்த மிகுதியினால் ஓரளவிற்கு விலைகள் ஏறுதலும் நிகழ்வன. இதனையடுத்து, வருமானப் பெருக்கத்தினைத் தொடர்ந்து செலவுப்பெருக்கமும், அதனைத் தொடர்ந்து மேலும் விலையேற்றமும், விலையேற்றத்தைத் தொடர்ந்து

மீண்டும் வருமானப் பெருக்கமும் ஏற்படுகின்றன. இப்போக்கிற்கு எதிராக இயங்கும் காரணிகள், துய்ப்புப் பொருள்களின் உற்பத்தியின் அதிகரிப்பும் அடிப்படையான முதலீட்டுப் பொருள்களின் உற்பத்தியின் அதிகரிப்பும் ஆகும்; இவற்றில் பின்னது நெடுங்காலத்தில் மிக்க பயனளிப்பதாகவும், முன்னது உடனடியான குறுங்காலத்தில் மிக்க பயனளிப்பதாகவும் உள்ளன.

அத்தியாவசியமற்ற துய்ப்புப் பொருள்களின் உற்பத்தி அதிகரிப்போ, அல்லது அத்தியாவசியமான துய்ப்புப் பொருள்களின் தொழிலும் அத்தியாவசியமான முதலீட்டுப் பொருள்களின் தொழிலுமல்லாத வேறு தொழில்களின் முதலீட்டுப் பொருள்களைப் பயன்படுத்துதலின் அதிகரிப்போ, பொருளாதாரத்தில் பணவீக்கச் சுழலேற்றியை மேலும் அதிகப்படுத்தும் போக்கினை உடையதாகும்; எனினும், மொத்தத்தில் அது உற்பத்திக்கும் செலவிற்கும் இடையில் சமநிலையை உண்டாக்கக்கூடும்; ஆதலால், அது வெளித்தோற்றத்தில், பணவீக்கச் சுழலேற்றியை உண்டாக்காததுபோலத் தோன்றும். கலப்புப் பொருளாதாரத்தில் நிலவும் பெரும் முதலீட்டுச் செலவீடுகளும் வருமான ஏற்றத்தாழ்வுகளும் உருவாக்கியுள்ள பொருளாதாரச் சூழ்நிலையில் இத்தகைய போக்குகள் தவிர்க்க முடியாதவைகளே. எனவே, வருமானத்தைச் சிருட்டிப்பதையும் பயன்படுத்துவதையும் ஆட்சி செலுத்துகின்ற வகையில் பணம்சார் கைக்கோளினையும் அரசிறைக் கைக்கோளினையும் வகுக்க வேண்டியது தேவையாகிறது. எனவே, தவறான வழியில் சென்ற செலவீட்டினையும் அதில் விளைந்த வருமானம் உருவாதலையும் தடுத்து நிறுத்தும் குறிக்கோளினை உடையதாகப் பணம்சார் கைக்கோள் அமையவேண்டும். வட்டி, கடன் வகைகளைக் கட்டுப்படுத்துதல் (selective credit control) பற்றிய பொருத்தமான கைக்கோள்மூலம் மேலே வரும் குறிக்கோளினைப் பணம்சார் கைக்கோள் நிறைவேற்ற முடியும். அதேவேளையில், அரசிறைக் கைக்கோளானது, தக்க வரிக்கொள்கைமூலம் தவறான வழியில் செலவீட்டினை இழுத்துச் செல்லும் வருமானங்களைக் குறைக்க முயல வேண்டும்; வருமானங்கள் முழுதினையும் பொறுத்தவரையிலும், குறிப்பிட்ட பண்டங்களிலும் பணிகளிலும் வருமானங்களைச் செலவழிப்பதைப் பொறுத்தவரையிலும் தவறான வழியில் செலவீட்டினை அவை இழுத்துச் செல்லின், அவற்றை அரசிறைக் கைக்கோள் குறைக்கவேண்டும். மேலும், பணம்சார் கைக்கோளும் அரசிறைக் கைக்கோளும் சமூகத்தில்

சேமிப்புகளை உயர்ந்தபட்ச அளவிற்குப் பெருக்குவதைக் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். வேறு வகையில் கூற வேண்டுமெனில், விலைகளைச் சார்ந்த மேக்ரோ கைக்கோள், தனித்த விலைகளின்மீது நேரடியான விளைவினை ஏற்படுத்து வதன்மூலம் இயங்காமல், வருமானத்தைச் சிருட்டித்தல்மீதும் அதனைப் பயன்படுத்துதல்மீதும் மறைமுகமாக விளைவினை ஏற்படுத்துவதன்மூலம் இயங்குகிறது. எனவே, எல்லா விலை மாற்றங்களுக்குமுரிய பணம்சார் அமைப்பினை நிர்ணயிக்கும் இரண்டு மாறிகள் (variables) மீது மறைமுக விளைவினை ஏற்படுத்துவதன்மூலம் மைக்ரோ கைக்கோள் இயங்குகிறது.

மைக்ரோ கைக்கோள் (Micro Policy)

பொருளாதார வளர்ச்சிச் சூழமைவில், விலைத்துறையில், மைக்ரோ கைக்கோளானது மிகவும் நேரடியானதும் அதே அளவிற்குத் தேவையானதுமாகும். அதனுடைய மைக்ரோ கூறினைப் பொறுத்தவரையில், விலைக் கைக்கோளானது அடிப் படையான முதலீட்டுப் பொருள்களின் உற்பத்தியை உயர்ந்த பட்ச அளவிற்குப் பெருக்குவதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்; இத்துடன், முதலீட்டுச் செலவீட்டின் அதிகரிப்பில் விளைந்த துய்ப்புச்செலவின் அதிகரிப்பிற்குச் சமமான துய்ப்புப் பொருள்களின் கூடுதலான பருமத்தை அடைவதையும் விலைக் கைக்கோள் குறிக்கோளாகக் கொள்ளல் வேண்டும். இதற்குப் பொருள் என்னவெனில், தேவையான முதலீட்டுப் பொருள் களையும் அத்தியாவசியமான துய்ப்புப் பொருள்களையும் தவிர வேறு பொருள்களை உற்பத்தி செய்வதில் மூலவளங்களை உபயோகப்படுத்துவது தடுக்கப்படும் என்பதே. பொருளாதார வளர்ச்சிக்கெனத் தேவைப்படும் முதலீட்டுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் பணவீக்கம் சார்ந்த விலையேற்றத் தினைத் தடுக்கத் தேவைப்படும் அடிப்படைத் துய்ப்புப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் மூலவளங்களைப் பயன் படுத்துவது தூண்டப்படும் என்பதனையும் இது குறிக்கும். முந்தியது, விலை மெக்கானிசத்தைத் தடுப்புக் கருவியாகப் பயன்படுத்துவதைக் குறிக்கும்; பிந்தியது, அதனைத் தூண்டும் கருவியாகப் பயன்படுத்துவதைக் குறிக்கும். அதே நேரத்தில், அத்தியாவசியமற்ற பொருள்களினைத் துய்ப்பதை உயர் விலைகள்மூலம் தடுப்பதற்கு விலை மெக்கானிசத்தைப் பயன் படுத்தும்பொழுது, அப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் மூலவளங்கள் திருப்பப்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். மறுதலையாகக் கூறின், அத்தியாவசியப் பொருள்களின் உற்பத்தியை உயர் விலைகள்மூலம் தூண்டு

வதற்கு விலை மெக்கானிசத்தைப் பயன்படுத்துவதானது, விரும்பத்தக்க முதலீட்டுப் பொருள்களின் தேவையை விரும்பத்தகாத முறையில் குறைக்கும் விளைவினையும், அடிப்படைத் துய்ப்புப் பொருள்களில் பணவீக்கச் செலவு விளைவினையும் ஏற்படுத்தக்கூடாது.

பொருளாதார வளர்ச்சிக்காக, மைக்ரோ ரீதியாக, விலைக் கைக்கோளினைப் பயன்படுத்துவதில் உள்ளார்ந்திருக்கும் சிக்கலினை மேலே வரும் முரண்பாடான விஷயங்கள் எடுத்துக் காட்டுகின்றன. எனினும், விரும்பத்தகாதவைகள் நீக்கப் பெற்று, விரும்பத்தக்க விளைவுகளை உண்டாக்கும் இயக்க நிலையிலுள்ள கைக்கோள் ஒன்றினை உருவாக்க வேண்டும். அவசியமற்ற பொருள்களின் விலைகள் உயருவதை அனுமதிக்கும்பொழுது, அதனைத் தொடர்ந்து உயர் வரிவிதிப்பும் மூல வளங்களின் கட்டுப்படுத்தப்பெற்ற பகிர்வும் ஏற்படவேண்டும் என்ற முடிவினை அகற்றுவது கடினமே. அவசியமான பொருள்களைப் பொறுத்தவரையில், அவசியமான முதலீட்டுப் பொருள்களிலும் அடிப்படைத் துய்ப்புப் பொருள்களிலும் பின்பற்ற வேண்டிய கைக்கோள் வேறுபட்டே இருக்கும். அவசியமான முதலீட்டுப் பொருள்களைப் பொறுத்தவரையில், பொதுத் துறையினை விஸ்தரித்து, உற்பத்தியைப் பெருக்க உபயோகிக்கும் விலைத்தூண்டுதலின் வீச்சினைக் குறைப்பது ஓர் வழியாகும். இவ்வாறு செய்ய முடியாதபோது, இக் குறிக்கோளினை அடைவதற்கு விலையை உயர்த்துவதைவிட வரிச்சலுகைகள் காட்டுவது சாலச் சிறந்ததாகும். வேறு சில காரணங்களினால் இவ்வாறு செய்ய முடியாதபோது, உற்பத்தியைத் தூண்ட விலையுயர்வினை அனுமதிக்க வேண்டிய அவசியம் ஏற்படும் பொழுது, இத்தகைய பயனை நிச்சயப்படுத்திக்கொள்ள ஒருவர் விரும்பும் சில குறிப்பிட்ட துறைகளில் விற்பனைகளை உதவித் தொகைமூலம் வளர்ப்பது அவசியமாகிவிடும்.

அடிப்படைத் துய்ப்புப் பொருள்களைப் பொறுத்தவரையில், விலையேற்றத்தைத் தடுத்து, உற்பத்திக் காரணிகளின் விலைகளைக் குறைப்பதன்மூலம் உற்பத்தியைப் பெருக்குவது சாலச் சிறந்ததாகும். ஆனால், விலையேற்றத்தைத் தடுக்க முடியாது எனில், மக்களுக்கு வேண்டிய அடிப்படைத் துய்ப்புப் பொருள்களின் குறைந்தபட்ச அளிப்புகளை நிலையான விலைகளில் கொடுப்பது அவசியமாகும்; இப் பொருள்களின் குறைந்தபட்ச அளவிற்கு மேலுள்ள அளிப்புகள்மீது விலையேற்றத்தின் விளைவு எவ்வாறு அமைந்தபோதிலும், அதைப்பற்றிக் கவலைப் பட வேண்டியதில்லை.

எல்லா நிலைகளிலும், வேறுபாடுடைய விலைக் கைக்கோளினைப் பின்பற்றவேண்டும். தனிப் பண்டங்களின் விலைகள், விரும்பத்தக்க திக்கில் அவற்றின் உற்பத்திப் பெருக்கத்தைத் தூண்டக்கூடிய முக்கியக் குறிக்கோளினைக் கொண்டனவாக இருக்கவேண்டும்; முக்கியத்துவம் நிரம்பிய முதலீட்டிற்கோ அல்லது அடிப்படைத் துய்ப்பிற்கோ தேவைப்படாத தனிப் பண்டங்களின் உற்பத்தியைக் குறைக்கத் தூண்டுவதாக இல்லையெனினும், அவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதைத் தடுக்கக்கூடிய முக்கியக் குறிக்கோளினைக்கொண்டனவாகவும் இருக்கவேண்டும்.

என்றாலும், அநேக நிலைகளில், பண்டங்கள் நடுநிலைமை வகிக்கின்றன; அதாவது, அவற்றை அவசியமான முதலீட்டிலோ அல்லது அவசியமற்ற முதலீட்டிலோ பயன்படுத்த முடியும்; அவ்வாறே, அப் பண்டங்களை அத்தியாவசியத் துய்ப்பிலோ அல்லது அவசியமற்ற துய்ப்பிலோ பயன்படுத்த முடியும். இத்தகைய நிலைகளில், அவற்றின் உற்பத்திப் பெருக்கத்தைத் தடுக்கும் வகையில் விலைக் கைக்கோளினை உண்மையில் பயன்படுத்த முடியாது. எனினும், பொருளாதார வளர்ச்சியின் தேவைக்கு இசைந்துவராத திசைகளில் அப் பண்டங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் முறையில் விலைக் கைக்கோளினைப் பிரயோகிக்கவேண்டும்.

எனவே, குறிக்கோள் சார்ந்த விலைக் கைக்கோள்கள், குறிப்பிட்ட பண்டங்களின் உற்பத்தியையும் அவற்றினைப் பயன்படுத்துதலையும் சுட்டிக்காட்டுகின்றன. இதனைத்தான் விலைகளைக் குறிக்கும் மைக்ரோ சார்ந்த கைக்கோள் என்கிறோம். திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிச் சூழமைவில், பொருளாதாரத்திலுள்ள மூலவளங்கள், தேவைகள் முதலானவற்றை மனத்திலிருத்தி, விரிவாகவும் பொறுப்புணர்ச்சியுடனும் விலைகள் சார்ந்த மைக்ரோ கைக்கோளினை உருவாக்குவது அவசியமாகும்.

விலைக் கைக்கோளின் கோட்பாடுகள்

கோட்பாட்டு ரீதியான இந்த விவாதத்திலிருந்து, பொருளாதார வளர்ச்சியின் சூழமைவிற்குத் தக்கவாறு, விலைக் கைக்கோளின் சில கோட்பாடுகளை நாம் இப்பொழுது உருவாக்கலாம்.

(1) செலவீட்டின் அதிகரிப்பு உண்மையில் வருமான அதிகரிப்பினை உண்டாக்குகிறது. ஆனால், வருமானத்திலேற்படும் இத்தகைய அதிகரிப்புகளுக்கெல்லாம் இணையாக

உற்பத்தியிலும் அதிகரிப்பு ஏற்பட வேண்டும். மொத்தப் பண வருமானங்களில் ஏற்படும் எந்த அதிகரிப்பிற்கும் இணையாக மொத்த உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்படவில்லையெனில், விலையேற்றமே ஏற்படும். (வருமானப் பெருக்கம், பதுக்கல் அதிகரித்தலின் காரணமாகப் பயனற்றதாகும் அளவிற்கு விலை ஏறாது என்பதைத் தவிர, மேலே குறிப்பிட்ட வகையில் விலை ஏறும்.) உற்பத்திப் பெருக்கமானது, உற்பத்திப் படிமுறையில் இருக்கும் பொருள்களாகவோ அல்லது கைக்குக் கிட்டாத உற்பத்தியாகவோ இருக்கும்பொழுது, அதற்கு இணையாக ரொக்க இருப்புகளின் அதிகரிப்பு இருக்கவேண்டும்; கைக்குக் கிட்டாத உற்பத்தியின் அதிகரிப்பினைத் தொடர்ந்து ஏற்படும் வருமானப் பெருக்கத்தின் அளவிற்கு இணையாக ரொக்க இருப்புகளின் அதிகரிப்பு இருக்கவேண்டும். இதிலிருந்து தெரியவருவது என்னவெனில், உற்பத்திப் பெருக்கத்தினை உண்டாக்காத செலவினை அனுமதிக்கக்கூடாது அல்லது ரொக்க இருப்புகளில் அதிகரிப்பினை உண்டாக்காத செலவினை அனுமதிக்கக்கூடாது என்பதேயாகும்.

(2) பொருளாதார அமைப்பில் ஏதேனும் ஒரு துறையில் அல்லது குழுவில் ஏற்படும் வருமானப் பெருக்கத்தைத் தொடர்ந்து உற்பத்தியில் பெருக்கமோ அல்லது மற்றத் துறைகளிலிருந்து அல்லது குழுக்களிலிருந்து வருமானப் பெருக்கமானது கைமாறுதலோ நிகழ வேண்டும்; இல்லையெனில், பணவீக்கத்தினைத் தூண்டிவிடும். இதிலிருந்து விளங்குவது என்னவெனில், உற்பத்திப் பெருக்கமோ அல்லது வருமானம் கைமாறுதலோ ஏற்படாதபொழுது, ஏதேனும் ஒரு துறையின் அல்லது குழுவின் வருமானப் பெருக்கத்தை அனுமதிக்கக் கூடாது என்பதேயாம்.

(3) முதலீட்டுப் பெருக்கத்தினைத் தொடர்ந்து அதே அளவிற்குச் சேமிப்புகளும் பெருகவேண்டும்; இல்லையெனில், பணவீக்க விளைவே ஏற்படும். முதலீட்டுப் பெருக்கத்திற்கு இணையாக சேமிப்புகளையும் உயர்த்த வேண்டும் என்பதே இதிலிருந்து விளங்குகிறது. அது முடியவில்லை எனில், இவ்வளவுதான் சாத்தியமானது என்று சொல்லத்தக்க சேமிப்புகளின் அதிகரிப்பிற்குச் சமமாக முதலீட்டு அதிகரிப்பினைக் கட்டுப்படுத்திக்கொள்ளவேண்டும்.

(4) விலை மட்டத்தின் ஒவ்வோர் உயர்வும் பணவீக்கத்தைக் குறிக்காது. அடிப்படைத் துய்ப்புப் பொருள்களின் விலையேற்றம்தான் செலவு சார்ந்த பணவீக்கத்தை உண்டாக்கக்கூடும். செலவு சார்ந்த பணவீக்கத்தை உண்

டாக்கி, பணவீக்கச் சுழலேறியையும் அது முடுக்கிவிடும். இதி லிருந்து தெரிய வருவது யாதெனில், விலையேற்றக் கோட்டினைத் தடுத்து நிறுத்தும் வழியினை அடிப்படைத் துய்ப்புப் பண்டங் களின்மீது பிரயோகிக்கவேண்டுமேயன்றி, மொத்த விற்பனைக் குறியீட்டெண்மீதோ அல்லது பொது விலை மட்டத்தின் மீதோ பிரயோகிக்கக் கூடாது.

(5) பொருளாதார வளர்ச்சியில் தேவை உயர்ந்து கொண்டே செல்வது தவிர்க்க முடியாததாக இருக்கும் பொழுது, அடிப்படைத் துய்ப்புப் பண்டங்களின் விலையேற்றக் கோட்டினைத் தடுத்து நிறுத்துவது வெற்றியடைய வேண்டு மெனில், இத்தகைய பண்டங்களின் உற்பத்தி பெருக வேண்டும். இக் குழுவினைச் சார்ந்த தனித்த பண்டங்களைப் பொறுத்தவரையில், அவற்றின் உற்பத்தியில் விரும்பத்தக்க அதிகரிப்பினை உண்டாக்குவதில் விலைத்தூண்டுகைகள் வெற்றி யடையும் எனில், குறுங்காலத்தில் அவ் விலைத்தூண்டுகைகளை மேற்கொள்ள வேண்டும்; விலையேற்றக் கோட்டினைத் தடுத்து நிறுத்தும் கைக்கோளிலிருந்து மாறுபட்டபோதிலுங்கூட, குறுங்காலத்தில் விலைத்தூண்டுகைகளை மேற்கொள்ளவேண் டியதுதான். இத்தகைய நிலைகளில், விலையேற்றக் கோட்டினைத் தடுத்து நிறுத்தும் கைக்கோளில் அமைந்துள்ள பொருளா தாரக் குறிக்கோள்களைக் குறுங்காலத்தில் நிறைவேற்ற வேறு மார்க்கங்களையே கடைப்பிடிக்க வேண்டும். வேறு முறையில் கூறின், கட்டுப்படுத்தப்பெற்ற பங்கீட்டினையும் உள்ளடக்கிய விலைக் கட்டுப்பாடுகளும் விலைத்தூண்டுகைகளும் விலையேற்றக் கோட்டினைத் தடுத்து உறுதியாக நிறுத்த மிகவும் அவசிய மானவைகளாகும். விலைக் கட்டுப்பாடுகளும் கட்டுப்படுத்தப் பெற்ற பங்கீடும், துய்ப்புப் பொருள்களைப் பொறுத்தவரை யில், முக்கியமாகத் தேவைப்படுவன. துய்ப்புப் பொருள்களின் அளிப்பானது விலைக்குத் தக்கவாறு மாறுவதில்லை; அல்லது குறிப்பிட்ட சரியான காலத்திற்குள் ஏற்படும் எந்தவிதமான தூண்டுதலுக்கும் தக்கவாறு மாறுவதில்லை.

(6) வளரும் பொருளாதாரத்தில் விலை ஏறிக்கொண் டிருக்கும் நெடுங்காலப் போக்கு ஒன்று நிலவுகிறது. பொருளா தாரம், விடுபடு கட்டத்திலிருந்து (take off) முன்னேறி, தன்னைத் தானே காத்துக்கொண்டு, தன்னூர்ந்த வேகவளர்ச்சி யினை மேற்கொள்ளும்பொழுது மாத்திரமே விலையேற்றம் தடுக்கப்படுகிறது. ஆனால், குறுங்காலத்தில், பருவகால விலை யேற்றமோ அல்லது பிராந்திய விலையேற்றமோ ஏற்பட்டால், இந்த விலையேற்றப் போக்கு அவ்வசியமாக வலுப்பெறும்;

இடைப்பருமை ஓட்டைகள் அடைக்கப்படாவிட்டாலோ, அல்லது இயற்கையின் தடுமாற்றங்கள் போன்ற தற்காலிக மான அல்லது பொருளாதாரம் சாராக் காரணிகள் விலைகளின் மீது ஏதேனும் விளைவினை ஏற்படுத்துவதை அனுமதித்துவிட்டாலோ, விலையேற்றப் போக்கு அனுவசியமாக வலுப்பெறும். இவைகளையெல்லாம் சரிசெய்ய, இடைப்படு இருப்புகளின் (buffer stocks) அடிப்படையில் விலைக் கைக்கோளினை உரு வாக்குவது மிகவும் பொருத்தமே. மைய பாங்குகள் பொன் னிருப்புகளைப் பயன்படுத்துவதுபோல இடைப்படு இருப்பு களைப் பயன்படுத்தக்கூடாது; அவற்றைச் சந்தையில் தன் னிச்சையாகப் பயன்படுத்தவேண்டும்; விலைகளை ஏற்றவோ இறக்கவோ செய்கின்ற குறுங்காலச் சக்திகளனைத்தையும் வழிக்குக் கொண்டுவர அவற்றைப் பயன்படுத்த வேண்டும். என்றாலும், தேவையில் அல்லது அளிப்பில் (அநித்திய மானதோ அல்லது நித்தியமானதோ) ஏற்படும் தற்காலிக ஏற்ற இறக்கங்களை வழிக்குக் கொண்டுவர இடைப்படு இருப்பு களைப் பயன்படுத்தவேண்டும் என்பதனை நினைவில் கொள்ள வேண்டும்; மேலும், பன்னெடுங்காலப் பற்றாக்குறையினையோ அல்லது உற்பத்தி அளிப்பின் சடப்பொருள் சார்ந்த அல்லது அமைப்பு ரீதியான நெகிழ்ச்சியின்மையினையோ அவ் இருப்பு கள் தீர்த்துவைக்க முடியாது.

7. பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சம்

பொருளாதார வளர்ச்சியின் பருமத்தையும் வேகத்தையும் நிர்ணயிக்கின்ற காரணிகள் பலவற்றில் முதல் குவிப்பும் ஒன்று என்பதனை வளர்ச்சிப் பொருளியலின் அண்மைக் காலத்து ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. புதுமை, தொழில் நுண்ணியல், அறிவு நிலை ஆகிய இவையனைத்தும் இயந்திரம், உபகரணம்போலவே முக்கியமானவைகள்தாம். என்றபோதிலும், இவையனைத்தும் விரைவிலேயோ அல்லது காலம் தாழ்த்தியோ முதல் குவிப்பில் கலந்து அதன் அளவில் விளக்கப்படுவன. ஆனால், இவையனைத்தும் மனித அம்சத்துடன் மிகவும் நெருக்கமாகப் பின்னிக் கிடக்கின்றன; இவற்றின் வளர்ச்சியைப்பற்றி விளக்கவும் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கின்ற இவற்றில் தூண்டப்பெற்ற மாறுதல்களை உண்டாக்குவதற்கு மனித அம்சத்தைப் பொறுத்தவரையில் என்ன நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றி எடுத்துக்காட்டவும் ஓர் புதிய ஆய்வுத் துறையே வளர்ந்திருக்கிறது.

பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சம்பற்றிய தலைப்பில், விஞ்ஞானத்தின் வளர்ச்சியும், தொழில் நுண்ணியல் வளர்ச்சியும், குறைந்த வளர்ச்சியுள்ள பிரதேசங்களின் நன்மைக்காக அவற்றைப் பயன்படுத்துதலும் ஒரே ஒரு கூறுதான்; ஆனால், முக்கியமான கூறுதான். இயற்கை மூல வளங்கள் ஆண்டுதோறும் பண்டங்களாகவும் பணிகளாகவும் மாறிடும் அளவினையும் வேகத்தினையும் நிர்ணயிக்கின்ற பல்வேறு காரணிகளைப்பற்றிப் பொருளாதார வளர்ச்சியின் பன்னாட்டு ஆய்வுகளும்கூட எடுத்துக்காட்டுகின்றன; இயற்கை வளங்கள் பண்டங்களாகவும் பணிகளாகவும் மாறியுள்ளமையே தேசிய வருமானமாகும்; இயற்கை வளங்கள் பண்டங்களாகவும் பணிகளாகவும் மாறிய அளவினையும் வேகத்தினையும் நிர்ணயிக்கின்ற அக் காரணிகள், மனித முயற்சியின் தரத்தின்மீதும் தீவிரத்தின்மீதும் விளைவு

ஒன்றினை உண்டாக்குவதன்மூலம் ஒன்றுகின்றன; இதனையும் பொருளாதார வளர்ச்சியின் பன்னூட்டு ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறாக, அமைப்புகள், சட்டமியற்றுதல், பாரம்பரியங்கள், கல்வி, நிருவாகம், செயல்நோக்கம், போக்கு வரத்து ஆகியவைகளைப் பொருளாதார நிபுணர்கள் கவனித்துப் பகுத்தாய்கிறார்கள். பொருளாதார வளர்ச்சியின் புதிர்களுக்கு விடை காண்பதிலும் வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்குத் திட்டங்கள் வகுப்பதிலும் பொருளாதார நிபுணர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். ஆக, பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சத்தின் பங்குபற்றிய முக்கியமான ஆய்வு, வளர்ச்சிப் பொருளியலில் இடம்பெற்றுள்ளது.

உண்மையாகவே, மற்றப் பொருள்கள் மாறுதிருப்ப, உற்பத்தியை மிகவும் முக்கியமாக நிர்ணயிப்பது எதுவெனில், தொழிலாளர் எண்ணிக்கையேயாம்; அல்லது தொழிலாளர் சக்தியின் அளவேயாம். தொழிலாளர் எண்ணிக்கைக்கும் உற்பத்திக்கும் உள்ள தொடர்பினை உழைப்பு மதிப்புக் கோட்பாடு (labour theory of value) எடுத்துக்காட்டியுள்ளது. தேசிய வருமானத்தின் பருமனை நிர்ணயிக்கும் தொழிலாளர் சக்தியின் பருமனுக்கு ஓர் முக்கியத்துவம் உள்ளது. ஜனத்தொகைக் கட்டுப்பாட்டினையும் குடும்பக் கட்டுப்பாட்டினையும் கண்டு நடுங்குகின்ற மார்க்சிசம், மேற்குறித்துள்ள முக்கியத்துவத்தினை எடுத்துப் பறைசாற்றுகிறது. போருக்குப் பிந்திய காலத்தில், பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட, கூடுதலான தொழிலாளர் சக்தியின் அளிப்புகளைப் பெற்றுதான் அண்மைக் காலத்து ஜெர்மனியிலும் ஜப்பானிலும் பொருளாதார அற்புதங்களை நிகழ்த்தியுள்ளனர் என்பது ஓரளவுக்கு உண்மையே என்பது யாவரும் அறிந்ததே. படைக்குறைப்பு மூலமாகவும், இழந்துவிட்ட பிரதேசங்களிலிருந்து சொந்த நாட்டிற்குத் திரும்பிவந்தவர்களைக் கொண்டும், கிழக்கு ஜெர்மனியிலிருந்து வந்த அகதிகளைக் கொண்டும் மேற்கு ஜெர்மானியர்கள் கூடுதலான தொழிலாளர் சக்தியைப் பெற்று, பொருளாதார அற்புத சாதனைகளைச் செய்து காட்டினர். அதுபோலவே, படைக்குறைப்புமூலமும் இழந்த காலனிகளிலிருந்து வந்த சொந்த நாட்டுக்காரர்களைக்கொண்டும் ஜப்பானியர்கள் பொருளாதார அற்புத சாதனைகளைப் புரிந்தனர். பொருளாதாரத்தை வளர்க்க, தொழிலாளர் சக்தியையும் ஜன சக்தியையும் பெருக்கவேண்டியதன் முக்கியத்துவத்தைப் போர் முடிந்தவுடனேயே, ஐக்கிய அமெரிக்காவின் தேக்கநிலைக்

கோட்பாடுகள் (stagnation theses) விளக்குகின்றன. பொருளாதார வளர்ச்சி வீதத்தை நிர்ணயிப்பதில் மனித அம்சத்தின் எண்ணிக்கை சார்ந்த கூறின் முக்கியத்துவத்தை வளர்ந்த பொருளாதாரத்தின் அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. இதனைப் பொறுத்தவரையில், பொருளாதார வளர்ச்சிப் பந்தயத்தில், பெரும் ஜனத்தொகைகளையும் பெருந் தொழிலாளர் வளங்களையும் கொண்ட இந்தியா போன்ற வளர்ச்சி குறைந்த நாடுகள் நல்வாய்ப்புடன் அமைந்துள்ளன எனலாம். எனினும், பொருளாதார வளர்ச்சி வீதத்தைத் துரிதப்படுத்தும் முயற்சியில் ஈடுபடும் இந்தியா போன்ற நாட்டில் ஜனத்தொகையும் எண்ணிக்கையும் உதவியாக இருப்பதற்குப் பதிலாகக் கேடாகவே உள்ளன.

வளர்ச்சியுற்ற பொருளாதாரங்களின் வளர்ச்சிப் பொருளியலில் தொழிலாளர் சக்தியின் பருமன் கட்டுப்படுத்தும் காரணியாக இருக்கும்பொழுது, வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களில் அது குறைபாடுடையதாக இருப்பதைக் கண்டு வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார நிபுணன் மலைக்கின்றான். அதிலுள்ள முரண்பாடானது, மனித அம்சத்தில் அடங்கியுள்ள பொருளாதார தத்துவத்தைப்பற்றிய கேள்விகளை நிபுணனிடத்தில் எழுப்பியுள்ளது. திட்டமிட்ட வளர்ச்சியின் பத்து ஆண்டுகளில் தேசிய வருமானம் 42 சதவீதம் உயர்ந்த சமயத்தில் ஜனத்தொகைப் பெருக்கத்தின் காரணமாகத் தலா வருமானம் 16 சதவீதமே உயர்ந்தது என்ற உண்மையை இந்தியத் திட்ட நிபுணர் பரிதாபத்துடன் குறிப்பிடும்பொழுது, தொழிலாளர் சக்தி பெருகியதைத் தொடர்ந்து, தேசிய உற்பத்தியில் போதுமான அளவிற்குப் பெருக்கத்தைத் தொழிலாளர்கள் உண்டாக்கவில்லை என்று நிபுணர் உண்மையாகவே கருதுகிறார். தலா வருமான உயர்வுகளை ஜனத்தொகை வளர்ச்சியின் குறைந்துசெல் வீதத்துடன் இணைக்கும்பொழுது, தொழிலாளர் சக்தி அதிகரிப்பின் குறைந்த வீதத்தினைத் தொடர்ந்து, தொழிலாளர் அலகொன்றுக்கு உயர்ந்த அளவு ஆக்கத்திறன் இருக்கும் என்று நிபுணர் எடுகோளிட்டுக்கொள்கிறார். எண்ணிக்கையில் பெருக்கமானது, உற்பத்தியை அதிகரிக்கும் மூலவளங்களைப் பெருக்குவதற்குப் பதிலாக வேலையின்மையின் அளவையே பெருக்குவதைக் குறிப்பதாக இந்தியத் திட்ட நிபுணர் கருதுகிறார். நிச்சயமாக, உற்பத்திப் பெருக்கத்தில் ஜனத்தொகை தன்னுடைய பங்கினைச் செலுத்தவேண்டுமெனில், 'வேறொன்று' தேவைப்படுகிறது. இந்தியா போன்ற வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில்,

இந்த அதிகப்படியான 'வேறொன்று' கிடைக்கவில்லை; அல்லது போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. ஆனால், ஐக்கிய அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி அல்லது ஜப்பான் போன்ற நாடுகளின் வளர்ச்சியுற்ற பொருளாதாரத்தில் இந்த 'வேறொன்று' கிடைப்பதாகத் தோன்றுகிறது; அல்லது குறைந்தபட்சம் போதுமான அளவுக்குக் கிடைக்கிறது. இந்த நாடுகளின் நடப்புப் பொருளாதார வளர்ச்சியின் உயர்ந்த வீதத்தினை அந்த 'வேறொன்று' உண்டாக்குகிறது. இந்த வேறொன்று வெறும் மூலதனத்தை மாத்திரம் குறிக்கவில்லை என்பதும் தெளிவே. மொத்தத்தில் மனிதத் திறமையை வளர்த்து, தொழிலாளர் ஆக்கத்திறனைப் பெருக்கிடும் தன்மை கொண்டவைகள்தாம் அந்த 'வேறொன்றினைக்' குறிப்பன வாகும். பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சம்பற்றிய ஆய்வில், மேலே குறித்தனவற்றைப்பற்றிப் பயிலவேண்டும். வளர்ச்சி குறைந்த நாடுகளில் மூலதனம் இல்லாமை, வெளி நாட்டு உதவிமீதுள்ள கட்டுப்பாடுகள், வளர்ச்சி வீதத்தைத் துரிதப்படுத்த வேண்டிய கட்டாயம் முதலானவற்றை எண்ணிப்பார்க்கும்பொழுது, வளர்ச்சி குறைந்த நாடுகளின் நலனில் அக்கறையுள்ள அனைவருக்கும், பொருளாதார வளர்ச்சிச் சூழமைவில், மனித அம்சத்தைப்பற்றிய ஆய்வு மிகவும் முக்கியமானதாகிறது. இது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

உற்பத்திப் படிமுறையில் மனித அம்சத்தின் திறன் கீழ்க் கண்ட கூறுகளைப் பொறுத்ததாகும்:

(1) உடல்நலம் சார்ந்த கூறு.
(2) மூளையைச் சார்ந்த கூறு.
(3) உளவியல் சார்ந்த கூறு.
(4) அமைப்புத்திறன் சார்ந்த கூறு.

மனிதத் திறமையை உயர்த்தி, பொருளாதார வளர்ச்சியைப் பேணும் காரியத்தில், திட்ட நிபுணர் இக் கூறுகளையெல்லாம் கூர்ந்து அலசினால்மட்டும் போதாது; பல்வேறு வகைத்தாய தொழிலாளர் திறன்களின் தேவையையும் அளிப்பையும் சமன்செய்யும் பிரச்சினையையும் பொருளாதார வளர்ச்சியின் போது எழும் வேலையின்மையையும் நெருக்கடிகளையும் தடுக்கும் பிரச்சினையையும் நிபுணர் கூர்ந்து அலசவேண்டும். ஏதேனும் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சத்தின் பங்கினை ஆராயும் முயற்சியன்று இது; ஆனால், இந்த ஆராய்ச்சியின் தன்மையை விளக்குகின்ற முகவுரைதான் இது.

முதலில், மனித அம்சத்தின் திறமையானது மனிதனுடைய உடல் தகுதியைப் பொறுத்ததாகும். நல்ல போஷாக்கு இல்லாத ஒரு தொழிலாளியோ, கணக்கரோ அல்லது அறிவாளியோ மிகவும் தரம் உயர்ந்த வேலையினைச் செய்ய முயல முடியாது; எனவே, அவனுடைய ஆக்கத் திறன் குறைவாகவே இருக்கும். இதனால் அவனுடைய வருமான உயர்வு குறைகிறது; உணவுத் துய்ப்பும் குறைகிறது; அடுத்து, அவனது ஆக்கத்திறன் குறைகிறது; இவ்வாறாகப் புதிர் வட்டம் (vicious circle) தொடருகிறது. நோயிலிருந்து காத்துக்கொள்ளுதல், குடியிருப்பு, சுகாதார நிலை, நீர்த்தாரை ஏற்பாடு, தான் வேலை செய்து வாழும் ஏனைய இடவியல் சூழ்நிலைகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையிலும் கூட அவன் கீழான நிலைக்குச் சென்றுவிடுகிறான் என்பது உண்மையே. இவையனைத்தும் வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தின் நிகழ்ச்சியின் ஓர் பகுதியே என்பது உண்மைதான். வளர்ச்சியினால்தான் இவையனைத்தும் மாறும் என்பதும் உண்மைதான். வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் வழிமுறைதான், பொருளாதார வளர்ச்சியின் வழிமுறைகளையும் இலட்சியங்களையும் ஒரே நேரத்தில் சாதிக்கும் வழிமுறையாகும். உடல் தகுதி பெற்று, மனிதன் மிகவும் உயர்ந்த முயற்சியை மேற்கொள்வதைத் தடுக்கும் சூழ்நிலைகளை அகற்றவில்லை எனினும், குறைக்கச் செய்வதுதான் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் வழிமுறையாகும். இது உடலியல் துறையில் நிகழவேண்டும். இச் சூழமைவில்தான், உபரி உணவினைப் பயன்படுத்தி, வட்டாரத் திட்டங்களை நிறைவேற்றுவது பொருளாதார முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது.

வளர்ச்சியுற்ற நாடுகளில் உணவுப் பிரச்சினை நடைமுறையில் தீர்க்கப்பட்டுள்ளது; அந் நாடுகளில் பசியென்பது கண்ணுக்குத் தெரியும் நிகழ்ச்சியாக இல்லை. வளர்ச்சி குறைந்த நாடுகளில் உடலியல் சார்ந்த வாழ்க்கையில் பசியோ அல்லது வேறு ஏதேனும் சாதாரணக் குறைபாடுகளோ மனிதத் திறமையைக் குறைத்திடும் முக்கிய வேலையினைச் செய்கின்றன என்பதனை வளர்ச்சியுற்ற நாடுகள் முழுதும் உணரவில்லை. பல்வேறு வர்க்கங்களைச் சார்ந்த தொழிலாளர்களிடத்திலும் பல்வேறு தொழில்களிலும் துறைகளிலும் ஈடுபட்டுள்ளோரிடத்திலும் நிலவும் திறமையைச் சார்ந்த உடல் வலிமை குறித்த நிலைமைகளைப்பற்றி, வளர்ச்சி குறைந்த நாடுகளிலும்கூட சாதாரண அறிவே நிலவுகிறது. இத்தகைய அறிவு இல்லாதபொழுது, அந் நாடுகளில் பின்பற்றப்படும்

திட்டங்களும் பொதுவாகவே இருப்பன; அத் திட்டங்களில் முந்துரிமைகளோ (priorities) தர்க்க ரீதியான பொருளாதார நியாயமோ இருக்க முடியாது. விளைவுகளைப் பொறுத்தவரையில், அத் திட்டங்கள், ஆக்கத்திறனை வலியுறுத்தாது துய்ப்பின் சார்பாகவே இயங்குவன.

மனிதத் திறமையை வளர்ப்பதில் அடிப்படைத் தேவைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று அறிவுரை தரப்படுகிறது. இவை, சாப்பாட்டின் அளவையும் தரத்தையும் மட்டும் குறிப்பதோடு அன்றி, வேலை செய்வோரின் உடல்நலத்தையும் வேலை செய்யும் இடத்தின் நிலைகளையும் குறிப்பனவாகும். தொழிற்சாலைகளில் உணவு விற்பனை நிலையங்களை அமைத்துத் தொழிலாளர்களுக்குச் சல்லீசான விலைகளில் தரமுள்ள கலப்புணவை வழங்குவதன்மூலம் சாப்பாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். மலேரியா ஒழிப்புத் திட்டங்கள் சாவினைக் குறைப்பதோடுமட்டும் அமையாது, வியாதிமூலம் இழந்த தொழிலாளர்களின் உழைப்பு - ஆண்டுகளையும் (man - years) குறைத்துவிடுகிறது; வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் தரத்தை உயர்த்துகிறது. குடிநீர் அளிப்பு, பொது சுகாதார நடவடிக்கைகள் போன்ற செயல்களின் விளைவுகளும் முன்னதைப் போன்றவைகளே. பொறிகளைச் சுற்றி வேலியமைத்தல், நல்ல காற்றோட்ட வசதியும் வெளிச்ச வசதியும் செய்து தருதல், இரைச்சலையும் புகையினையும் குறைத்தல், குளிக்க வசதி செய்து தருதல் ஆகிய இவையனைத்தும் தொழிலாளரின் திறமையைப் பெருக்கி, உற்பத்தியை உயர்த்துகிறது. இதனை மனித அம்சத்தின் விளைவாகக் கொள்ளலாம். வசதியான குடியிருப்பும் குழந்தை வளர்ப்புப் பண்ணைகளும் இருப்பின், தொழிலாளர் திறமை உயரும். அளவில் அதிகமான, தரமுள்ள உணவு, குடியிருப்பு வசதி, நோய் ஒழிப்பு, பொது சுகாதார வசதிகள் அளித்தல், வேலையின் திருப்திகரமான இடவியல் சார்ந்த சூழ்நிலைகள் ஆகிய இவையனைத்தும் திறமையின் இறுதிச் சாதனைகள்மட்டுமல்ல; திறமையினை நிர்ணயிப்பவைகளும் ஆவன. எனவே, இவ் வசதிகளைப் பெறுவதற்கு ஆகும் செலவு ஆக்கமுள்ளதாகும். இச் செலவினை முதலீடாகக் கொள்ளவேண்டுமேயன்றி, வெறும் துய்ப்பாகக் கொள்ளக்கூடாது. இந்தியாவில் இதுபற்றி விரிவான அல்லது சிறப்பான ஆராய்ச்சி நடத்தவில்லை என்றாலும், மனித அம்சத்தின் திறமையை அதிகரிக்கச் செய்ய உடல்நலம், சாப்பாடு, வேலையின் இடச் சூழ்நிலைகள் முதலானவை நிச்சயமான தேவைகளே என்பது கிடைத்துள்ள பொது ஆதாரத்திலிருந்து தெளிவாகிறது.

திறமையைத் தூண்டும் இரண்டாவது வகைக் கூறுகள் யாதாமெனில், நுட்பத்திறன் (skill) எனலாம். உடல் தகுதி மட்டும் போதாது. நுட்பத் திறனுள்ள தொழிலாளி, மிகுந்த திறமையுள்ளவன் என்பதோடு, அநேகமாகப் பொருளாதார நடவடிக்கைகள் அனைத்திலும் பயனாகும் விஞ்ஞானம், தொழில் நுண்ணியல் ஆகியவற்றின் வளர்ச்சியுடன் இணைந்துள்ள பொருளாதார வளர்ச்சியின் இன்றியமையாத தேவையாகவும் இருக்கின்றான். நுட்பத்திறனைக் கல்வியும் பயிற்சியும் நிர்ணயிக்கும். கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தால் மட்டும் போதாது. கல்வியின் பல்வேறு கூறுகளை நிர்ணயிப்பதை அத் துறையிலுள்ள நிபுணனின் பொறுப்பில் விட்டு விட்டு, கல்வியின் முக்கியத்துவத்தைமட்டும்பற்றிப் பேசுவது பிரயோசனமில்லை. பொருளாதார வளர்ச்சியில் கல்வியின் பங்கு மிகவும் பெரிது. மனித அம்சத்தின் திறமையை வளர்க்கத் திட்டமிட்ட நடவடிக்கையை நாம் மேற்கொள்ள வேண்டுமெனில், உடல் சார்ந்த, நுட்பவினை சார்ந்த, விஞ்ஞானம் சார்ந்த, வேலை சார்ந்த நுட்பத்திறன்களின் வளர்ச்சிக்கும் கல்விக்கும் உள்ள தொடர்பினைப்பற்றிய தெளிந்த, விரிவான கருத்தினைப் பெறவேண்டியது அவசியமாகும்.

பொருளாதாரக் கோணத்திலிருந்து பார்க்கும்பொழுது, கல்வியின் சரியான குறிக்கோள் நுட்பத்திறன்களை வளர்ப்பது தான் என்ற எடுகோளின் காரணமாக, கல்வியானது விஞ்ஞானத்தைச் சார்ந்ததாகவோ, தொழில்நுட்பவினையைச் சார்ந்ததாகவோ, தொழிலைச் சார்ந்ததாகவோ, தேர்ந்தெடுக்கும் உத்தியோகத்தைச் சார்ந்ததாகவோ இருக்க வேண்டும் போலும் என்று முடிவு எடுக்கக்கூடாது. கல்வி, நுட்பத்திறனைச் சார்ந்ததாக மட்டும் இருந்தாலும்கூட, எழுத்தறிவு, மொழி ஆகியவற்றை உள்ளடக்கிய பொதுக்கல்வி என ஒன்று இருப்பதையும், அது நுட்பத்திறனை அடைய உதவும் முதல் நிபந்தனை என்பதனையும் உணரவேண்டும். மேலும், பொருளாதார வளர்ச்சியில் தேவைப்படுவன தனித்த நுட்பத்திறன்கள் மட்டுமல்ல, பொதுத்திறன்களும் ஆகும். உடலும் உள்ளமும் சேர்ந்து தக்க அளவில் வளர்தல், தொழில் துறையில் கட்டுப்பாட்டுடன் இருத்தல், எடுத்து விளக்கப்படுவனவற்றைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் முதலானவைகளே பொதுத் திறன்களாகும். பல்வேறு நுட்பத்திறன்களுக்கிடையில் ஓரளவிற்கு மாறிக்கொள்ளுதலும், இருப்பதற்குத் தக்கவாறு திறன்களை மாற்றிப் பயன்படுத்திக்கொள்ளுதலும், ஒரு நுட்பத்திறனை விட்டு வேறொரு நுட்பத்திறனை மேற்

கொள்ளுதலை ஓரளவிற்குக் கட்டுப்படுத்திக்கொள்ளுதலும் தேவையே. தேவைகளையும் அளிப்புகளையும் முழுதும் சரிக்கட்டுதலைத் திட்டத்தின்மூலமே நிறைவேற்றிக்கொள்ள முடியாது. பொருளாதார வளர்ச்சி, மாறும் வேகத்தையும் உட்கிடையையும் (content) உடையதாகும். மனித அம்சம், இம் மாற்றத்திற்குத் தக்கவாறு நெகிழ்ச்சியுடையதாகவும் விட்டுக்கொடுக்கும் தன்மையுடையதாகவும் இருக்கவேண்டும். வளர்ச்சியின் இயல்பே இதில்தான் அடங்கியுள்ளது. இச் சூழ்நிலைகளில், பொதுக் கல்விக்கும் சிறப்புக் கல்விக்கும் இடையிலுள்ள தொடர்பினைப்பற்றி மிகவும் கவனத்துடன் எண்ணிப் பார்க்க வேண்டும். சிறப்புத் தேர்ச்சி பெறுவதற்கு முந்திய கல்வி அல்லது பயிற்சியின் உட்கிடையையும் காலநீட்சியையும் பற்றி நன்கு கவனமாக எண்ணிப்பார்க்கவேண்டும். சிறப்புத் தேர்ச்சி சார்ந்த கல்வி அல்லது பயிற்சியின் பல்வேறு வகைகளினிடையே உள்ள தொடர்பினையும் நன்கு கவனிக்கவேண்டும். பொருளாதார இயக்கத்தின் மாறிச் செல்லும் தேவைகளுக்கு இணங்க, தொழிலாளர் சக்தி மாறிக்கொள்ளும் நிலையை உண்டாக்கும் உள்ளீடு உடையதும் தனித்ததுமான திட்டங்களின் வகையையும் உள்ளீடு உடையதோ அல்லது தனித்ததோ ஆன திட்டங்களின் வகையையும் நன்கு கவனிக்க வேண்டும். ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, ஆராய்ச்சிக் கல்வி, தொழில் சார்ந்த கல்வி, நுட்பத் தொழிற் கல்வி, உத்தியோகக் கல்வி எனப் பல்வேறு கட்டங்களை உடைய கல்வியின் ஆரம்பக் கூறுகள், இறுதிக் கூறுகள்பற்றி வேறு வகையான பகுத்தாய்வு செய்தல் வேண்டும் என்பதனையே இது உணர்த்துகிறது. நுட்பத் திறன்களை உண்டாக்கும் கல்வி தொகுக்கப்பெற்ற ஓர் கூட்டுப் பொருளாகும் என்பதை வலியுறுத்தவேண்டும். இத்தகைய கல்வியில் கிடைநிலைக் கூறுகளும் செங்குத்துக் கூறுகளும் அடங்கியுள்ளன. கல்வித் துறையைச் சார்ந்த, துய்ப்பினையே வலியுறுத்தும் கல்வி நிபுணர்கள் கல்வியைப் பகுத்தாய்ந்ததை விட இன்னும் விரிவாகவும் தெளிவாகவும் பகுத்தாய வேண்டும்.

மனித அம்சத்தை அதன் உத்தம அளவில் பயன்படுத்தத் தேவைப்படும் வினைமுறைகளின் மற்றொரு முக்கியக் கூறு, மனித ஆற்றலினைத் திட்டமிடுதலாகும். நுட்பத்திறன்கள், சிறப்புத் தேர்ச்சியைச் சார்ந்தனவாகவும், தனித்த உற்பத்திச் செலவுகளைக் கொண்டனவாகவும் இருக்கும் அளவிற்கு இத்தகைய நுட்பத்திறன்களை உண்டாக்கத் தேவைப்படும்.

முதலீட்டினை மேற்கொள்வதில் பொருளாதார ஆய்வுமுறைகளைக் கருத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகிறது. நுட்பத்திறன்களின் தேவைப் பகுதியை நோக்கி, அவற்றின் அளிப்புகளைத் திட்டமிடுதற்குரிய தக்க அடிப்படையினை வழங்கும் திட்ட ஏற்பாடுகளை உருவாக்குவதும் அதே அளவிற்கு முக்கியமாகும். நுட்பத்திறன்களின் தேவைக்கும் அளிப்புக்கும் இடையில் தொடர்ந்தாற்போல் சாத்தியமாகவிருக்கும் சமனின்மைகளையும், உற்பத்தியின் வெவ்வேறு காலங்களில் நிலவும் நுட்பத்திறன்களின் அளிப்பின்மீது அவற்றின் விளைவுகளையும், இன்னும் தேய்மான விளைவுகளையும், வழக்கற்றுப் போகும் விளைவுகளையும் கருத்தில் கொள்ளவேண்டியதும் அவசியமாகும். இத்தகைய விளைவுகளைச் சமாளிப்பதற்காக வேண்டி, கல்வியமைப்பில், நெகிழ்ச்சியினையும் மாறிக் கொள்ளும் திறனையும் உண்டாக்கத் திட்டமிட வேண்டும். தேவைப்படும் நுட்பத்திறன்களை உண்டாக்குவதில் நெருக்கடிகள் ஏற்படாதிருக்க வேண்டுமெனில், உற்பத்தியை மாத்திரம் திட்டமிடாமல் உள்ளிடுகைகளையும் (inputs) திட்டமிடுதலே மனிதவாற்றலைத் திட்டமிடுதலாகும் (manpower planning). எனவே, பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கினை மனித அம்சம் ஏற்று, பயனுடையதாக மாற்றிக் கொள்வதில், மனிதவாற்றலைத் திட்டமிடுதல் ஒரு முக்கியக் கூறுகும் என்பது தெரியவருகிறது. இதற்குக் கல்வி நிபுணர்கள், நிர்வாக அதிகாரிகள் மாத்திரமன்றி, பொருளாதார நிபுணர்கள், புள்ளிவிவரத்துறையினர், மூலவளங்களின் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரும் சேர்ந்து கூட்டு முயற்சி எடுக்கவேண்டும்.

மூளை சார்ந்தவை எனப் பொதுவாகப் பகுக்கப்பெற்ற கூறுகளில் ஆராய்ச்சி, புதுமை ஆகியவற்றின் இடம் எது என்பதையும் கவனிக்கவேண்டும். பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சத்தின் உத்தமப் பயன்பாட்டுடன் மூளை சார்ந்த கூறுகள் பொருந்திவருவனவே. வளர்ச்சியுற்ற நாடுகளில் ஏற்கெனவே உருவாகியுள்ள ஆராய்ச்சி, தொழில், நுண்ணியல், புதுமைகள் முதலானவற்றின் அளிப்புகளை வளர்ச்சி குறைந்த நாடுகள் தாராளமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியுமாகையால், வளர்ச்சி குறைந்த நாடுகள் தங்களுக்கெனத் தனியாக ஆராய்ச்சி, புதுமை காணல் ஆகியவற்றிற்கு வேண்டிய அமைப்புகளை வைத்துக்கொள்ளவேண்டியதில்லை என்ற ஒரு கருத்து நிலவுகிறது. உண்மையில் அவ்வாறு தனித்த ஆராய்ச்சி, புதுமைக்குரிய அமைப்புகள் வைத்துக்கொள்

வதால், பற்றாக்குறையான மூலவளங்கள் விரயமாகும் வகையில் பங்கிடப்படும் என்ற கருத்தும் நிலவுகிறது. நிலைமையைத் தெளிவாகப் புரிந்துகொள்ளாமையின், அடிப்படையில் பிறந்த கருத்தாகும் இது; நிச்சயமாக முழுதும் புரிந்துகொள்ளாத தால் விளைந்த கருத்து இது. முதலாவதாக, வளர்ச்சியுற்ற நாடுகளில் குவிந்துள்ள ஆராய்ச்சியும் தொழில் நுண்ணியலும் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குத் தாராளமாகக் கிடைக்க வில்லை. இரண்டாவதாக, இந் நாடுகளில் வளர்ந்துள்ள தொழில் நுண்ணியல்வகை அல்லது இவை மேற்கொண்டுள்ள ஆராய்ச்சி வகை, இந் நாடுகளில் நிலவும் பொருளாதார வளர்ச்சி நிலையின் தொகுதியுடன், இந் நாடுகளில் நிலவும் தொழில் நுண்ணியல் நிலையுடன், விஞ்ஞான அறிவு நிலையுடன், கிடைக்கும் உபகரணம், மற்ற சாதனங்கள், நிருவாகம் சார்ந்த வளங்கள் ஆகியவற்றின் நிலையுடன், இந் நாடுகளின் சொந்த தொழிலாளர் சக்தியின் பயிற்சி, நுட்பத்திறன்கள் ஆகிய வற்றின் நிலையுடன் முக்கியமாக இணைந்து ஒன்றிக்கிடக்கிறது. வளர்ச்சி குறைந்த நாடுகளில் சாதாரணமாக இத்தகைய நிலைமைகள் கிடையா.

புதுமையையோ அல்லது தொழில் நுண்ணியலையோ பெயர்த்து வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குக் கொண்டுவரும் பொழுதும்கூட, அதனை வளர்ச்சி குறைந்த நாடுகளின் நிலைகளுக்குத் தக்கவாறு மாற்றிப் புதிதாகப் பயன்படுத்த வேண்டியதும், எனவே, அதற்கெனப் புதிய ஆராய்ச்சியும் தேவைப்படுகின்றன. இறுதியாக, வேலை சார்ந்த திறன் களையோ, விஞ்ஞானரீதியான திறன்களையோ, அல்லது தொழில்நுண்ணியல் சார்ந்த நுட்பத்திறன்களையோ வளர்ப் பதற்குப் பயிற்சியாளர்களுக்கே ஆராய்ச்சி வாய்ப்புகள் தேவைப்படுகின்றன; இவ் வாய்ப்புகள் கிட்டினால்தான், குறிப்பிட்ட துறைகளில் போதுமான அறிவினையும் தேவை யான அறிவு சார்ந்த நுட்பத்திறன்களையும் அவர்கள் அடைய முடியும். எனவே, தங்களுடைய மனித அம்சத்தை உத்தம அளவிற்குப் பயன்படுத்த விரும்பும் வளர்ச்சி குறைந்த நாடுகளின் கல்வியமைப்பில், ஆராய்ச்சிக்கும் உயர்தரப் படிப்பிற்கும் போதுமான வசதிகள் செய்துதரவேண்டும். பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளின் தேவைகளுடன் ஆராய்ச்சியாளர்களையும் அவர்களுடைய அமைப்புகளையும் இயக்குமுறையில் (operational way) இல்லையெனினும், சார்பு முறையில் (functional way) இணைக்கவேண்டியது மிகவும் முக்கியமாகும்.

மனித அம்சத்தின் திறமையை நிர்ணயிக்கும் மூன்றாவது வகையைச் சார்ந்த கூறுகள் உளவியல் சார்ந்தவையாகும். பொருளாதாரத் துறையில் மனித அம்சத்தைத் திறனுடன் பயன்படுத்துவதற்கு உடல் தகுதியும் தேவையான நுட்பத் திறன்களும் மட்டிலுமே போதா. தன்னுடைய உழைப்புச் சக்தியையும் நுட்பத் திறனையும் உயர்ந்தபட்சத்திற்குப் பயன் படுத்த வேண்டும் என்ற செயல் நோக்கம் மனித அம்சத்திடம் போதுமான அளவிற்கு இருக்கவேண்டும். இதுவும் தேவைதான். இன்னும், பொருளாதார நடவடிக்கையின் பல்வேறு துறைகளில் இச்செயல் நோக்கத்தினைக் காலம், நுட்பத் திறன் ஆகியவற்றின் உண்மையான உள்ளிடுகை களாக (inputs) மாற்றுவதற்குத் தூண்டுதல்கள் தேவை.

பொருளாதாரத் துறையில் மனித முயற்சியை உயர்ந்த பட்ச அளவிற்குப் பயன்படுத்தத் தூண்டும் செயல் நோக்கத் தினைப் போதுமான அளவுக்குப் பெறுவதற்காக வேண்டி, உயர்ந்து செல்லும் வாழ்க்கைத் தரத்தின்மீது தொடர்ந்து விருப்பம் உள்ளவர்களாக மனிதர்கள் இருக்கவேண்டும் என்பது அவசியமாகும். இறுதியில், வருமானத் தேவையே வேலை அளிப்பினை நிர்ணயிக்கிறது. மக்கள் கீழான வாழ்க்கைத் தரத்துடனேயே திருப்தியடைந்துவிட்டால், அவர்கள் தங்கள் விருப்பங்களைப் பெருக்கிக்கொள்வதில் நம்பிக்கை கொள்ளா விட்டால், அவர்களுக்குச் சடப்பொருள்சார் பேராவல் இல்லா விட்டால், தங்களிடம் இருப்பதைக்கொண்டே திருப்தியுடன் அடங்கிவிட்டால், அவர்கள் மேற்கொள்ளும் பொருளாதார நடவடிக்கையில் வேலையின் அளவையோ, தரத்தையோ, அல்லது தீவிரத்தையோ பெருக்கும் செயல் நோக்கத்தை உடையவர்களாக இருக்கமாட்டார்கள். வளர்ச்சி குறைந்த நாடுகளிலுள்ள மக்கள் நிறையப் பண்டங்களையும் பணிகளையும் விரும்பவில்லை; அவர்கள் தங்களுடைய கீழான வாழ்க்கை நிலையிலேயே திருப்தியுடன் இருக்கிறார்கள்; இம் மனப் பான்மை, பொருளாதார வளர்ச்சியில் பரிதாபமான விளை வுகளை உண்டாக்குகிறது; வளர்ச்சி குறைந்த பொருளா தாரங்களில் இந்த நிலை இயல்பான ஓர் அம்சமாகும். மக்கள் திருப்தியுடன் வாழும் இந்தப் பரிதாபமான நிலைக்குப் பல காரணங்கள் உண்டு. மக்கள் கூட்டத்தின் சமூக, சமயக் கட்டுமானமும், சமூகத்தில் நிலவும் பாரம்பரிய மதிப்புகளும், பண்பாட்டு வகைகளும், உற்பத்தியின் பருமத்தையும் கூட்டமைவினையும் மனிதக் கட்டுப்பாட்டையும் மீறி நிர்ண யிக்கின்ற இயற்கையின் ஆட்சியும், வேறு பல காரணிகளுமே

இருப்பதைக்கொண்டு திருப்தியுடன் வாழும் மக்களின் பரிதாப நிலைமைக்குக் காரணங்களாகும். பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சம் அதற்குரிய பங்கினை வகிக்க வேண்டுமெனில், இந்தப் 'பரிதாபகரமான திருப்தி நிலை' ஒழியவேண்டும்; அதற்குப் பதிலாக, அமைதியிலாத் துடிப்பு நிலை, நடப்புப் பொருளாதார அந்தஸ்து, நிலைமை குறித்து அதிருப்தி, இன்னும் உயர்ந்த பொருளாதார வாழ்வின்மீது நாட்டம், உயர்தரத் துய்ப்பு மட்டத்தில் நாட்டம், அதற்காக வாழ்க்கை முறையையே மாற்றிக்கொள்ளத் தயாராகவிருத்தல் முதலான வகைகளில் மனப்பான்மையை உருவாக்கவேண்டும். இவையனைத்தும் இயற்கையாகவும் இயல்பாகவும் உருவாகி விடமாட்டா. ஒரு தடவை பொருளாதார வளர்ச்சியின் படிமுறைப் போக்கு ஆரம்பித்து இயங்கத் தொடங்கிவிட்டால், மேலே குறிப்பிட்ட வகைகளில் மனப்பான்மை கடிதில் மாறத் தொடங்கிவிடும். பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சத்திற்குரிய பங்கினைப் பெறுவதற்கு வேண்டிய செயல் நோக்கத்தின் போக்கு இயங்கத் தொடங்குவதற்கு, கல்வி, செயல் விளக்கம், அமைப்பு ரீதியான மாற்றம், இயற்கையையும் சூழ்நிலையையும் கட்டுப்படுத்தும் நிலையை உருவாக்குதல் முதலானவைகள் அவசியமாகும்.

இந்தியா போன்ற நாட்டில் சாதிப் படிமுறை அமைப்பும் கர்மா கோட்பாட்டின் ஆதிக்கமும் ஒன்றுசேர்ந்து, பொருளாதார வளர்ச்சிக்கு மனித சக்திகளை விடுவிக்கத் தூண்டுகோலாக அமையாத நடப்புப் பொருளாதார நிலையினை அப்படியே ஏற்றுக்கொள்ளுகின்ற ஓர் உணர்ச்சியை மக்களிடத்தில் உண்டாக்கிவிட்டன. சில பேர் வசதியுடன் உயர்ந்த நிலையில் இருப்பதைக் கண்டு கொதிப்பும் கோபமும் அடையாது, அவர்களைப்போல் தாங்களும் வாழவேண்டும் என்ற விருப்பத்தினையும் கொள்ளாது, தங்களுடைய கீழான நிலையை அப்படியே மறுக்காது ஏற்றுக்கொண்டு, முற்பிறவிகளில் செய்த பாவங்களினுல்தான் தாங்கள் கீழான நிலையில் இருப்பதாகக் கருதிக்கொண்டு, பெரும்பாலான மக்கள் இருப்பதைக்கொண்டு திருப்தியுடன் வாழ்கிறுர்கள். மத நம்பிக்கைகள் துறவறத்தை உயர்வாகக் காட்டின; திருப்தியுடன் வாழ்வதையும் மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்ய முயலாமல் இருப்பதையும் போற்றித் துதிபாடின; விருப்பங்களைப் பெருக்காதிருத்தலை நிச்சயமாகப் பாராட்டின. சாமானிய மக்களிடத்திலும் உயர்வர்க்கத்தினரிடத்திலும் பொருளாதார நடவடிக்கைபற்றி இருக்கவேண்டிய மனப்பான்மையை இவை

கெடுத்துவிட்டன. மேலும், சூழ்நிலையை ஆளுவதைவிடத் தன்னையே ஆட்சி செய்து கட்டுப்படுத்திக்கொள்வது உயர்வாகக் கருதப்பட்டது. இந்திய சமூகத்திலுள்ள அறிவாளிகளுக்கு விஞ்ஞான நாட்டத்தையும் பரிசோதனைமூலம் நிரூபிப்பதில் உள்ள நாட்டத்தையும்விடத் தத்துவத்துறையில் யூக ஆராய்ச்சி செய்வதிலேயே நாட்டம் உள்ளது. பொருளாதாரத் தேக்கத்திற்கும் இருப்பதைக் கொண்டு திருப்தி அடையும் பரிதாப நிலைக்கும் காலனி ஆட்சியும் அன்னிய ஆட்சிக்கு அடங்கியிருத்தலும் காரணமாக அமைந்தன. இந்திய பாரம்பரியத்தில் முக்கிய இடம் வகிக்கின்ற மதம், ஆத்மீகம் ஆகியவற்றின் மதிப்புகளின் முன்னே, இருப்பதைக்கொண்டு திருப்தியுடன் இருக்கும் நிலையிலுள்ள இயலாமை, பலவீனம் முதலான குறைபாடுகள் மங்கிக் கிடந்தன; மதமும் ஆத்மீகமும் அவற்றைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டன.

மேற்கத்திய நாடுகளின் சிந்தனையுடன் தொடர்பு போதுமான அளவுக்கு இல்லையெனினும், விஞ்ஞானத்தின்மீதும் தொழில் நுண்ணியல்மீதும் பல்கலைக் கழகங்களின் அழுத்தமான நாட்டம்; வெளி நாடுகளில் உள்ள தொழில் மயமான நிலை, பொருளாதார வளர்ச்சி ஆகியவை பற்றிய செயல் விளக்க விளைவு (demonstration effect); தேசிய உணர்வுகள் பொங்கியமை, இவற்றுடன் தங்களுடைய சூழ்நிலைகள் மீது சாமானிய மக்களிடத்தில் அதிருப்தியைத் தூண்டி, அவர்களைப் போரிடச் செய்யவேண்டிய அவசியத்தையும், இந்த அவல நிலையை மாற்ற அரசியல் விடுதலை தேவை என்ற உணர்ச்சியை அவர்களுக்கு ஊட்டவேண்டிய அவசியத்தினையும் படித்த அறிவாளிகள் உணர்ந்தமை; ஆகிய இவை அனைத்தும், வருமானத்தைப்பற்றியும், விருப்பங்களைப் பற்றியும், பொருளாதார சுபிட்சத்தைப்பற்றியும் இந்தியாவில் பாரம்பரிய ரீதியாக நிலவும் மனப்பான்மையை ஒழிக்க உதவின. இருப்புப்பாதைகள் அமைத்தல், போக்குவரத்தில் வேறு பல வசதிகளைச் செய்தல், பொதுச் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், தொத்துநோய்களைத் தடுத்தல், பெரு நீர்ப்பாசனத் திட்டங்கள், அணைகள், கால்வாய்கள், நீர் மின்சார சக்தி ஆகிய இவையனைத்தும் இயற்கை முழுச் சக்தி வாய்ந்தது அன்று என்ற உணர்வினையும், புத்திசாலித்தனமான கூட்டு மனித முயற்சியின்மூலம் இயற்கைச் சூழ்நிலையை வெல்ல முடியும் என்ற உணர்வினையும் உண்டாக்கின. நவீன கல்வி முறை, பயணம், நகர் மயமாக்குதல், தொழில் மயமாக்குதல்

ஆகிய இவையனைத்தும் பிரிட்டிஷ் ஆட்சியில் குறைந்த அளவிற்கே கிடைத்தன. இவையனைத்துடன் வெறும் சமூக அந்தஸ்திற்கல்லாமல் திறமைக்குக் கிடைத்த வாய்ப்புகளும் ஒன்று சேர்ந்து, பாரம்பரிய மதிப்புகளிடம் மக்களுக்கு இருந்த அறிவார்ந்த பிடிப்பினையும் தளர்த்தி உடைத்துவிட்டன; இந்திய வாழ்க்கையில் விரவிக் கிடந்த மத ஆசாரங்களையும் சமூக முறைகளையும் ஒழித்துவிட்டன; பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் மனித அம்சம் மாறிப் பங்குகொள்ளச் செய்யும் சக்திகளைக் கிளர்ந்து எழச் செய்தன. எனினும், இன்றும்கூட, அரசியல் விடுதலை பெற்றுப் பதினைந்து ஆண்டுகளாகியும்கூட, இத்தகைய படிமுறைப் போக்கு முற்றுப் பெறவில்லை என்பதைக் குறிப்பிடத்தான் வேண்டும். இன்னும் இந்தியப் பொருளாதார அமைப்பின் பெரும் பகுதிகளில், இருப்பதைக்கொண்டே திருப்தியுடன் வாழும் பரிதாப நிலையிலும், உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை நாடுவதற்கு மறுத்துக் கொண்டிருக்கும் நிலையிலும் மனித அம்சம் உழன்றுகொண்டிருக்கிறது.

மேலும், பெருகிய வருமானத்தின்மீதும் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தின்மீதுமுள்ள விருப்பத்தினால் மட்டும் பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சம் ஈடுபட வருவதில்லை. கூடுதலான முயற்சியின் விளைவாகக் கூடுதலான வருமானம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் அவசியமாகிறது. இதனை அடையப்பெறுவது வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில் அவ்வளவு எளிதன்று. ஏனெனில், வளர்ச்சி குறைந்த பொருளாதாரத்தில், நிலங்களனைத்தும் ஒருசிலரிடமே குவிந்திருக்கும் நிலச்சுவான்தார் முறையைச் சார்ந்த கட்டமைவு சாதாரணமாக நிலவுகிறது; இத்தகைய பொருளாதாரத்தில், சாதனையை விடப் பெரும்பாலும் மரபுவழித் தொடர்பின் அடிப்படையிலேயே படிநிலை அமைப்பு ரீதியான மனித அந்தஸ்து நிர்ணயிக்கப்படுகிறது. என்றாலும், மனிதனைப் பொருளாதார நடவடிக்கையில் நல்ல முறையில் ஈடுபடுத்த வேண்டுமெனில், இதனை உறுதியுடனும் துணிவுடனும் நிறைவேற்றியே ஆக வேண்டும். நிலச்சீர்திருத்தங்கள், நிலவாரங்கள்மீதும் சொத்துவழி வருமானங்கள்மீதும் உச்சவரம்பு கட்டுதல், வருமானத்திற்கும் வேலைக்கும் நெருங்கிய தொடர்பினை உண்டாக்குவதற்கு ஏற்ற அமைப்புரீதியான மாற்றங்கள் ஆகிய இவையனைத்தும் மனிதனிடத்தில் பொருளாதார முயற்சியினை விரும்பி மேற்கொள்ளும் ஆசையினைத் தூண்டுவதற்குத் தேவைப்படும் நடவடிக்கைகளாகும். எனினும், தொழில் வளர்ச்சிக்கு முந்திய

காலத்தில் நிலவிய நிலப்பிரபுத்துவ, விவசாய சமூகங்களின் உயர்தர வர்க்கத்தினர், வேலையற்றிருந்தாலும் பெரு வருமானம் கிடைக்கும் என்று கருதியிருந்த உணர்ச்சியினை ஒழிப்பது மட்டும் போதாது என்பதை இந்திய அனுபவம் நிரூபித்துக் காட்டிவிட்டது. இவ்வுணர்ச்சியினை ஒழித்த தானது, சாமானிய மக்கள்மீது செயல்விளக்க விளைவினையும் உயர்வர்க்கத்தாரிடையே பயனளிக்கும் விளைவினையும் ஏற்படுத்தியுள்ளது என்றபோதிலும், சாமானிய மக்கள் அதிக வருமானத்தின்மீது புதிய காதல் கொண்டுவிட்ட காரணத்தி னாலும் இந்தியாவில் நடைமுறையில் இருக்கும் ஜனநாயகம் வழங்கியுள்ள புதிய அதிகாரத்தினையே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், தங்களுடைய சொந்த உழைப்பிலிருந்தும் முயற்சியிலிருந்தும் கிடைப்பதை விட ஏதேனும் வெளியிலிருந்தோ, அரசாங்கத்திடமிருந்தோ ஏனைய வர்க்கத்தினரிடமிருந்தோ, அல்லது வேறு ஏதேனும் மூலாந்தரத்திலிருந்தோ தங்களுடைய வருமானம் பெருகி வழியவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இது ஆபத்தான போக்காகும். முழுமையான அரசியல் ஜனநாயகத்தைத் தோற்றுவித்து, மக்களுடைய நெஞ்சங்களிலே மேன்மேலும் உயர்ந்து செல்லும் நம்பிக்கைகளின் புரட்சியினையும் தோற்று வித்துள்ள வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களில், தொழி லாளர்கள் உயர்ந்த வருமானங்களை அடைய நன்கு உழைக்க வேண்டும் என்று வேலையில் ஈடுபடாமல் கிளர்ச்சிகளிலேயே நாட்டம் கொள்வர். வளர்ச்சி குறைந்த பொருளாதாரம் சமாளிக்கவேண்டிய ஆபத்தாகும் இது. எனவே, உறுதியான பொருளாதார வளர்ச்சியின் துவக்கத்திலிருந்தே, வேலைக்கும் வருமானத்திற்கும் உள்ள தொடர்பினைச் சாமானிய மக்களிடத் திலும் உயர்வர்க்கத்தினரிடத்திலும் நன்கு விளக்கி, அவர் களுடைய உள்ளங்களிலே பதியச் செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும். இதனை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது பல பிரச்சினைகளில் ஒன்றாகும். பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சத்தினைப் பயன்படுத்தும் திட்டரீதியான முறையில் இப் பிரச்சினை இடம்பெறுகிறது.

வருமானத்திற்கும் வேலைக்கும் இடையில் நெருங்கிய சார்புத் தொடர்பினை (functional relationship) உண்டாக்குகின்ற பிரச்சினையானது, அதன் பொதுவான அம்சங்களைச் சார்ந்த அநேக இடர்ப்பாடுகளைக் கொண்டிருந்தபோதிலும், குறிப் பிட்ட துறைகளில் அதனைச் சமாளிப்பது எளிதே. தொழில் துறை சார்ந்த சமூகங்களில், அண்மைக் காலத்தில், வேலை

யைத் தூண்டும் தூண்டுதல்கள் கொண்ட ஒரு புதிய அமைப்பினை உருவாக்கியுள்ளனர். தனது மனித அம்சத்தினை முழுதும் பயன்படுத்த விரும்பும் வளர்ச்சி குறைந்த நாடு, முதலாளித்துவ சமூகங்களிலும் கம்யூனிச சமூகங்களிலும், குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவிலும் சோவியத் யூனியனிலும், வளர்ந்து குவிந்து கிடக்கும் உயர்ந்த அனுபவங்களிலிருந்து படிப்பினை பெறவேண்டும். இவ்வாறாக, வேலையளவுக் கூலிகள் (piece wages), உற்பத்திக்குரிய போனஸ், இலாபத்தில் போனஸ், உற்பத்தியில் அல்லது இலாபத்தில் போனஸ், வேலைநேரத்திற்குமேல் செய்த வேலைக்குப் பணம், அதிகப்படியான நிறைவேற்றத்திற்கு வெகுமதி, ஏற்றுக்கொண்ட உற்பத்திக்கும் குறைவான நிறைவேற்றத்திற்குத் தண்டனைகள், வேலைச் சட்டத்திற்கும் குறைந்த உற்பத்தி நிறைவேற்றத்திற்கும் தண்டனைகள், தனித்த திறமைக்கு மதிப்பு ஆகியவற்றின்மூலம் திறன் வாய்ந்த பொருளாதார அமைப்புகள் வேலையை வருமானத்துடன் இணைத்துள்ளன. இவ்வாறு இணைத்து, பொருளாதாரத் துறையில் மனித அம்சத்தை உத்தம அளவிற்குப் பயன்படுத்தியுள்ளன. தூண்டுதல்களை தனிப்பட்டோருக்கு எவ்வாறு வழங்குவது என்பதுபற்றியும், எந்த அளவுக்கு அதனை ஏனைய குழுவினருக்கும் வழங்குவது என்பதுபற்றியும், பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சத்தைப் பயன்படுத்துவது குறித்த முறையில் நன்கு அலசிப் பார்க்கவேண்டும். சேமிப்பினையும், முதலீட்டினையும், ஏற்றுமதிகளையும், விரும்பத்தக்க தொழில் இடச் செறிவுகளையும், பொருளாதார நடவடிக்கையின் விரும்பத்தக்க முந்துரிமைகளையும், வகைகளையும், திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியின் ஏனைய அம்சங்களையும் தூண்டக்கூடிய தூண்டுதல்கள் சார்ந்த பெருந் துறை ஒன்று இருக்கிறது. பொருளாதார வளர்ச்சியின் சூழமைவிலும் மனிதப் போக்கின் சூழமைவிலும் தூண்டுதல்கள் குறித்த பாடங்கள், செய்திகள் ஏராளமாக உள்ளன என்பதையே இது காட்டுகிறது.

பொருளாதாரத் துறையில் மனிதத் திறமையை உயர்ந்தபட்ச அளவிற்குப் பயன்படுத்த உதவும் நான்காவது வகைக் கூறுகள் அமைப்பு (organization) என்ற தலைப்பில் வருவன. மேனேஜ்மென்ட் (management) அல்லது நிருவாகம் (administration) என்ற சொற்களைவிட அமைப்பு என்ற சொல்லையே நான் தேர்ந்தெடுக்கிறேன். உற்பத்திக் காரணிகள் நான்கில் அமைப்பும் ஒன்று என நவீன கிளாசிகல் பொருளாதாரத் துறையினர் (neo-classical economists) குறிப்பிட்டுள்

ளனர். உற்பத்தி சார்பில் தொழில்துணிவோன் திறன் (entrepreneurship) என்றும், பங்கீடு சார்பில் இலாபங்கள் என்றும் 'அமைப்பு' குறிக்கப்படுகிறது. இக் கட்டுரையில் விவாதிக்கப்படும் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், வேலையில் பயன்படுத்தப்பெறும் தொழில்நுட்ப வினைமுறைகள் யாவற்றினையும் யார்யாரை எந்த எந்த வேலையில் ஈடுபடுத்த வேண்டுமோ அந்த அந்த வேலையில் ஈடுபடுத்தப் பயன்படும் கோட்பாடுகளையும் குறிப்பதுதான் 'அமைப்பு' என்ற சொல்லாகும். பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சத்தின் உத்தம அமைப்பிற்கு உதவியாக இருக்கும் வினைமுறைகளில் அல்லது நிர்வாகத்தில் உத்தியோகம் குறித்து வழிகாட்டுதல், வேலை வாய்ப்பினைத் தேடித்தரும் அமைப்பு, திரும்பவும் வேலையில் அமர்த்தல், பயிற்சி, வேலைக்குத் தேர்ந்தெடுத்தல், உத்தியோக உயர்வு, நேரடியான தொடர்புகள், நிர்வாகம் முதலானவை அடங்குவன.

தனித் திறமைக்கும் விருப்பத்திற்கும் தக்கவாறு தொழிலாளிக்கு வேலையில் வழிகாட்டுதல்; வேலை வாய்ப்புத் தேடித் தரும் அலுவலகங்களின்மூலம் அளிப்புடன் தேவையை இணைத்துச் சமமாக்குதல்; மேக்ரோ அடிப்படையில் இல்லாமல் மைக்ரோ அடிப்படையில் பயிற்சி, திரும்ப வேலையில் ஈடுபடுத்துதல் குறித்த தக்க திட்டங்களின்மூலம் தேவையுடன் அளிப்பினை இணைத்துச் சமமாக்குதல்; வேலை செய்த காலம், அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமன்றி, திறமை, வேலைப் பொருத்தம் ஆகியவற்றின் அடிப்படையிலும் உத்தியோக உயர்வு அளித்தல்; மனித கௌரவத்திற்குத் தக்கவாறு வேலை நியதிகளைச் செப்பனிடுதல்; ஆதிக்கம் செலுத்துவதில் பெருமை பாராட்டாது, சாதனையில் பெருமிதம் கொள்ளத் தூண்டுதல்; மனித ஆளுமையை நிறைவேற்றுதல்; இறுதியாகக் குறிப்பிட்ட வியாபார அமைப்பில் அல்லது பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பல்வேறு மக்களிடையே அல்லது குழுக்களிடையே ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் வாய்ப்பினையும் ஒன்றுகப் பழகும் வாய்ப்பினையும் உண்டாக்குதல்; இத்தகைய முறையில் புரிந்துகொண்டு பழகுவதனுல் வேலையை நல்லமுறையில் நிறைவேற்றுதல்—ஆகிய இவையனைத்தும் மேலே குறிப்பிட்டுள்ள அமைப்பு நல்ல வண்ணம் இயங்கத் தேவையான கோட்பாடுகள் அடங்கிய அட்டவணையாகும். அமைப்பினையும் கோட்பாட்டினையும் சார்ந்த இவை ஒவ்வொன்றைப்பற்றியும் ஒரு கட்டுரையே எழுத முடியும். பொருளாதார வளர்ச்சியில்

மனித அம்சத்தின் அமைப்புப்பற்றிய முக்கியமான கூறுகளையே இக் கட்டுரை எடுத்துக்காட்டுகிறது. இக் கூறுகளைக் காரண காரிய ரீதியாகவும் கோட்பாட்டு ரீதியாகவும் பயில்வதோடு அமையாது, வளர்ச்சியுற்ற, முதலாளித்துவ, கம்யூனிசப் பொருளாதாரங்களின் உயர்ந்த அனுபவத்தையும் மனதிலிருத்திப் பயிலவேண்டும். அந் நாடுகளின் அனுபவங்களில் நல்விளைவுகளும் தீய விளைவுகளும் அடங்கியுள்ளன; வெற்றி அம்சங்களும் தோல்வி அம்சங்களும் நிறைந்துள்ளன; அது போலவே சேர்க்கப்பட்டவைகளும் விடுபட்டவைகளும் உள்ளன. இவைகளையும் மனத்திலிருத்திப் பயிலவேண்டும்.

இக் கட்டுரையை முடிப்பதற்கு முன்னர், வளர்ச்சியுற்ற பொருளாதாரங்களில் தொழிலாளர் சக்தியின் அளவு சாதகமாக இருக்கும்பொழுது, வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் அது பாதகமாக இருக்கும் முரண்பாட்டினை நான் துவக்கத்தில் வலியுறுத்தியிருப்பதனால் எழுகின்ற சந்தேகத்தை நிவர்த்திக்க வேண்டியது அவசியமாகும். எனவே, பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சத்தின் பங்குபற்றிய ஆராய்ச்சியினை மேற்கொள்ள வேண்டும் என்றும் வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களில் தொழிலாளர் சக்தியின் அளவினை ஆக்கமுள்ளதாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால், வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களின் ஜனத்தொகை அளவுமீறிப் பெருகலாம் என்று கருதக்கூடாது. பொருளாதார வளர்ச்சியின் பந்தயத்தில் வளர்ச்சி குறைந்த நாடுகள் காலம் தாழ்த்தி ஈடுபட்டிருப்பதாலும், வளர்ச்சியுற்ற பொருளாதாரங்களின் வாழ்க்கைத்தரத்திற்கும் வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களின் வாழ்க்கைத்தரத்திற்கும் இடையில் பெரும் ஏற்றத்தாழ்வுகள் நிலவுவதாலும், அவ்வேற்றத்தாழ்வுகள் மேலும் மேலும் பெருகிக்கொண்டே செல்வதாலும், வளர்ச்சி குறைந்த நாடுகள் தங்களுடைய நடப்பு வளர்ச்சி வீதங்களை வளர்ச்சியுற்ற நாடுகளைவிட வேகமாகப் பெருக்கவேண்டியது அவசியமாகிறது. வாழ்க்கைத்தரம் தேசிய வருமானத்தின் அளவை மட்டும் சார்ந்ததன்று; அதனைப் பகிர்ந்துகொள்ளும் மக்கள் எண்ணிக்கையையும் சார்ந்திருக்கிறது. ஆக, வளர்ச்சி குறைந்த நாடுகளில் மக்கள் எண்ணிக்கை இப்பொழுது பெருகிச் செல்லும் வீதத்தில் பெருகிக்கொண்டே சென்றால், இந்த நாடுகளின் நடப்பு வளர்ச்சி வீதம் வளர்ச்சியுற்ற நாடுகளின் வளர்ச்சி வீதத்தை நெருங்கவே முடியாது எனலாம். வளர்ச்சியுற்ற பொருளாதாரங்களின் அந்தஸ்தை அடைய நிதானமாகக் காலமெடுத்துக்கொண்ட நாடுகளில் மரண வீதம்

மெதுவாகக் குறைந்து சென்றமையால், மெதுவாகவே குறைந்துசென்ற பிறப்பு வீதம் அந் நாடுகளின் ஜனத்தொகையில் பொருளாதார வளர்ச்சிக்குக் குந்தகம் விளைக்கும் அதிகரிப்பினை ஏற்படுத்தவில்லை. எனவே, அந் நாடுகளில், பொருளாதார வளர்ச்சியிலும் சராசரி வாழ்க்கைத்தரம் உயருவதிலும் தொழிலாளர் சக்தியின் அளவு குறைபாடாகத் தோன்றவில்லை.

இன்றைய வளர்ச்சி குறைந்த நாடுகளின் நிலையே வேறு. கடந்த இருபது ஆண்டுகளில், நவீன மருத்துவ முறைகளையும் சுகாதார முறைகளையும் நல்ல வண்ணம் பயன்படுத்தியதன் விளைவாக, வளர்ச்சி குறைந்த உலகின் எப் பகுதியிலும் மரண வீதம் விரைந்து வீழ்ந்துவிட்டது. ஆனால், பிறப்பு வீதமும் அதே நேரத்தில் குறையவில்லை. எனவே, ஜனத்தொகை வளர்ச்சி வீதம், ஆண்டொன்றுக்கு இரண்டு சதவீதத்திற்கும் மூன்று சதவீதத்திற்கும் இடையில் உள்ளது. இத்தகைய ஜனத்தொகை வளர்ச்சி வீதம் இனியும் தொடரக்கூடாது என்பது தெளிவாகும். உண்மையிலேயே, மரண வீதத்தின் போக்கினைத் தலைகீழாக மாற்றுவதனாலோ அல்லது அதனைக் கீழே விழாது தடுப்பதனாலோ இதனை நிறைவேற்ற முடியாது. பிறப்பு வீதத்தினை விரைவாகக் குறைப்பதுதான் தேவைப்படுகிறது. வளரும் பொருளாதாரங்கள் இந்தத் தேவையினை உணர்ந்திருக்கின்றன. இந்தியா போன்ற நாடுகள் பிறப்பு வீதத்தினைக் குறைப்பதற்கு அதிகாரபூர்வமாக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினை விரிவாக மேற்கொண்டு உள்ளன. ஆனால், குறுகிய காலத்திலேயே பிறப்பு வீதத்தில் பெரும் குறைப்பினை உண்டாக்கிவிடுவது எளிதன்று. உயர்ந்த வாழ்க்கைத்தரத்தின் தேவை இல்லாமலேயே, விஞ்ஞானமும் தொழில் நுண்ணியலும் மரண வீதத்தினைக் குறைக்க நடவடிக்கைகள் எடுத்து வெற்றி பெற்றுள்ளன. இதுவும் நல்லதுதான். ஆனால், வளர்ச்சி குறைந்த பொருளாதாரச் சூழமைவில், பிறப்பு வீதத்தினையும் இதுபோலவே கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அவை வெற்றி பெறவில்லை.

எனவே, பிறப்பு வீதத்தினை விரைவாகக் குறைப்பதற்கு வேண்டிய வழிமுறைகளை வகுத்து, அவற்றை வளர்ச்சி குறைந்த பொருளாதார உலகில் பயன்படுத்தும் வகையில் அவற்றை உருவாக்கும் துணிகர முயற்சியில் விஞ்ஞானமும் தொழில் நுண்ணியலும் ஈடுபடவேண்டியது அவசியமாகும். எனவே, பொருளாதார வளர்ச்சியில் பங்கு பெற்றுள்ள மனித

அம்சத்தில், பிறப்பு விதத்தினைத் துணிகரமாகக் குறைக்க வேண்டிய காரியத்தினையும், ஜனத்தொகைப் பெருக்கத்தைத் துணிவுடன் கட்டுப்படுத்த வேண்டிய காரியத்தினையும் சேர்க்கின்றேன். இக் காரியத்திற்கு வேண்டிய உளவியல் சார்ந்த கூறுகளையும் சமூகவியல் சார்ந்த கூறுகளையும் பயின்று செயற்படவேண்டியது வளர்ச்சி குறைந்த நாடுகளின் அரசாங்கங்கள், மக்கள் ஆகியோரின் கடமையாகும். பொருளாதார வளர்ச்சிக்கு விஞ்ஞானத்தையும் தொழில் நுண்ணியலையும் பயன்படுத்துவதுபற்றி ஆராயும் மாநாட்டில், வளர்ச்சி குறைந்த நாடுகளின் பிறப்புவீதத்தைப் பத்து அல்லது இருபது ஆண்டுகளில் பாதியளவுக்குக் குறைப்பதில் அல்லது நடப்பில் இருக்கும் பிறப்பு வீதத்தைவிடக் குறைந்த அளவில் குறைப்பதில், விஞ்ஞானத்தையும் தொழில் நுண்ணியலையும் பயன்படுத்துவதுபற்றியும் போதுமான அளவிற்குக் கவனிக்க வேண்டும். நவீன விஞ்ஞானத்திற்கும் தொழில் நுண்ணியலுக்கும் ஏற்பட்டிருக்கும் இந்த சவாலினை, வளர்ச்சியுற்ற நாடுகளின் விஞ்ஞானிகளும் தொழில் நுண்ணியல் நிபுணர்களும் ஏற்று, சமாளிக்க வேண்டும் என்று நான் விழைகின்றேன்.

வளர்ச்சி குறைந்த நாடுகளில் மனித அம்சத்தின் பங்கு பற்றிய மற்றுமொரு கூறு வலியுறுத்தப்படவேண்டும். வளர்ச்சி குறைந்த நாடுகள் அனைத்திலும், நவீனமயமாக்குதலுக்கும் (modernisation), ஆக்கப் பெருக்கத்திற்கும் கிடைக்கக்கூடிய அளவான வசதிகளையும்கூட பயன்படுத்தாது பெரும்பாலான மக்கள் வீணே காலம் கழிக்கின்றனர். இந்தியாவில் இவ் வகுப்பினரைச் சமூகத்தில் பின்தங்கிய, பலவீனமான வகுப்பினர் எனக் குறிப்பிடுகின்றனர். இத்தகைய மக்கள் மனித நிலைக்கும் தாழ்ந்த பொருளாதார அந்தஸ்தினை ஏற்று, உழன்று கொண்டிருக்கிறார்கள். திட்டமும் பொருளாதார வளர்ச்சியும் அவர்களுக்கு வழங்கும் வசதிகளைப் பயன்படுத்தவிடாமல், அவர்களுடைய சமூக அமைப்பும், பாரம்பரிய மதிப்புகளும், வாழ்க்கை முறைகளும், ஏனைய சமூகவியல் சார்ந்த அம்சங்களும், கலாசார அம்சங்களும், உளவியல் சார்ந்த அம்சங்களும் தடுத்து நிற்கின்றன. எனவே, அவர்கள் வளர்ச்சியில் பின்தங்கி, பலவீனர்களாக வதைகின்றனர். உதாரணமாக, இந்தியாவில் கிராமப்புறங்களில் சமூக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாகவும் தேசிய விஸ்தரிப்பு சேவைத் திட்டங்களின் மூலமாகவும் மனித அம்சத்திற்காக, அதன் ஆக்கத்திறனைப் பெருக்குவதற்காக உண்டாக்கித் தந்த வசதிகள் கிராம மக்களிடையே முழு வளர்ச்சியினையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை; இன்னும், தங்களுடைய பொருளாதார

சுபிட்சத்திற்குத் தூண்டுதலாகக் கிடைக்கும் வசதிகளைக்கூட பெரும்பாலான மக்கள் பயன்படுத்திக்கொள்ளவில்லை; இது ஓர் அனுபவபூர்வமான உண்மையே. வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதில் மனித அம்சம் தகுந்த பங்கினை மேற்கொள்ளவேண்டுமானால், சம வாய்ப்புகளை அளித்து, சமூக மாற்றத்தினை ஏற்படுத்தவேண்டும். இதனைக் கவனமாகப் பயிலவேண்டும்.

முடிவில், பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சத்தின் முக்கிய பங்கினை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். பொருளாதார வளர்ச்சியில் மூலதனத்திற்கும் முதலீட்டிற்கும் வளர்ச்சி குறைந்த நாடுகள் அதிக முக்கியத்துவத்தினைக் கொடுத்துள்ளன. உண்மையில் மூலதனத்திலும் முதலீட்டிலும் இந்நாடுகள் எல்லையற்ற பற்றுக்கொண்டு, ஒருபுறத்தில் குறைந்த இலக்குகளைத் (targets) திட்டமிட்டுவிட்டு, மறுபுறத்தில் அந்நிய மூலதன உதவியினை நம்பிக் கிடக்கின்றன. இதன் காரணமாக, முன்னேற்றம் விரைவாக இல்லை; வளர்ச்சியுற்ற பொருளாதாரங்களுக்கும் வளர்ச்சியற்ற பொருளாதாரங்களுக்குமிடையில் ஏற்றத் தாழ்வு மேலும் பெருகிவிடுகிறது. குறிப்பாக, இந்தியா போன்ற நாடுகளில் மனித வளங்கள் நிறைய உள்ள காரணத்தினால், இந் நாடுகள் மனித அம்சத்தை இதுவரையில் பயன்படுத்தியதைவிட இன்னும் ஆக்கமுள்ள முறையில் பயன்படுத்த முயலவேண்டும். இதற்குப் பொருளாதார ரீதியாக மாத்திரமன்றி, மனிதனைச் சார்ந்த எல்லா நிலைகளிலும் நடவடிக்கை எடுக்கவேண்டும்; சமூகவியல் அமைப்பு, அரசியல், உளவியல் ஆகியவற்றைச் சார்ந்த எல்லா மனித நிலைகளிலும் நடவடிக்கை எடுக்கவேண்டும். பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டுதலாக, மனித சக்திகளைப் போஷித்து, பயிற்சி கொடுத்து, தூண்டிவிட்டு, கட்டுப்பாட்டிற்குள் ஒழுங்குறச் செய்யவேண்டும். இதனைத் தன்னறிவின் மூலமும் தன்னுதவியின்மூலமும் செய்யமுடியும். எனவே, உற்பத்தியையும் ஆக்கத் திறனையும் பெருக்குகின்ற நேரிய கருவியாக மனித அம்சம் வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களில் முகிழ்க்கும் என நான் நம்புகிறேன்.

பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சம் கொண்டுள்ள பங்குபற்றிய பிரச்சினையில் மிகவும் தேவைப்படும் திருத்தம் ஒன்றினைத் தராமல் இதனை முடிக்க முடியாது. மனித அம்சம் வெறும் உற்பத்தியை நிர்ணயிக்கும் கருவி மாத்திரமன்று; மனிதன், உற்பத்தியின் இலட்சியமும்கூட. பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சத்தைப் பயன்படுத்துவதிலும், மனித

மூலதனத்தைப்பற்றிப் பேசுவதிலும், கல்வியில் முதலீடுசெய்து, அதில் கிடைக்கும் பொருளாதாரப் பயன்களைக் கணக்கிடுவது பற்றிப் பேசுவதிலும், சமூகக் கட்டமைவினையும், பாரம்பரிய மதிப்புகளையும், கலாசார வகையினையும், உளவியல் சார்ந்த கூறுகளையும்பற்றித் தெரிந்துகொண்டு பேசுவதிலும், நமக்குப் புதிதாக ஏற்படும் பேரார்வத்தில், உற்பத்தியை உயர்ந்தபட்ச அளவிற்குப் பெருக்குகின்ற கோணத்திலிருந்து இவற்றைப் பற்றி எல்லாம் பேசும்பொழுது புதிகாக ஏற்படும் பேரார் வத்தில், ,மனிதன் வெறும் உற்பத்தியாளன் மட்டுமல்லன், அதற்கும் மேலானவன் என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது. ரொட்டித்துண்டு இல்லாமல் மனிதன் வாழமுடியாது என்பது உண்மைதான்; ரொட்டித் துண்டினால் மட்டும் மனிதன் வாழ முடியாது என்பதும் உண்மைதான். பொருளாதார மனிதன் என்பவன் முழு மனிதனைவிட மிகவும் குறைத்து மதிப்பிடத் தக்கவன். இறுதிப் பகுத்தாய்வில், பொருளாதார நிபுணனையும் நிர்வாகத் திட்ட நிபுணனையும் சேர்த்து நாம் அனைவரும் முழு மனிதனைப்பற்றியே எண்ணிப் பார்க்கவேண்டும். எனவே, வளர்ச்சி குறைந்த பொருளாதாரங்களைச் சார்ந்த நாம், பொருளாதார வளர்ச்சியில் மனித அம்சத்தைத் துணிவுடன் போதுமான அளவிற்குப் பயன்படுத்தும்பொழுது, பொரு ளாதார வளர்ச்சி என்பது இலட்சியத்தை அடைய உதவும் வழிமுறையே என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது.

எல்லா நாடுகளிலும் பன்னெடுங்காலமாக வளர்ந்து நமக்குக் கிடைத்திருக்கும் மனித, ஆன்மீக உணர்வுகளின் முழுமையான நிறைவிற்குத் தக்கவாறு பொருளாதார வளர்ச் சியின் படிமுறை அமையவில்லை எனில், இந்த இலட்சியத்தினை நாம் அடையமுடியாது என்பதை நாம் எப்பொழுதும் நெஞ் சத்தில் நிறுத்திக்கொள்ளவேண்டும். என்ன இருந்தாலும், இத்தகைய மனித ஆன்மீக உணர்வுகளின் நிறைவுதான் வாழ்க்கை இன்பத்திற்கு வாசமூட்டுவன. இத்தகைய ஆன்மீக நிறைவினை அடையும் முயற்சிதான், தொடர்ந்த மனித வாழ்க்கைக்கு இதமான பொருளினையும் இலட்சியத்தையும் வழங்குகிறது. எனவே, பொருளாதார வளர்ச்சிமீதுள்ள நமது விருப்பத்தின் காரணமாக, மனிதனை இயந்திரமாக்கிவிடக் கூடாது. என்றாலும், மனித, ஆன்மீக மதிப்புகளின் கட்டுப் பாட்டிற்குள்ளேயே இருந்து, பொருளாதாரத் தேக்கத்தி லிருந்து விடுதலை பெறும் வகையில் மனித அம்சத்தை மாற்றிப் பயன்படுத்தி, பொருளாதார வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்து முன்னேறி, துய்ப்பு நிலைகளை உயர்த்த வேண்டும்.

8. சுதந்திரமும் வளர்ச்சியும் - ஒரு சவால்

சுதந்திர சமூகத்தில் பொருளாதார வளர்ச்சி குறித்த பிரச்சினையையும் இன்று இந்தியாவிற்கு அது விடுத்திருக்கும் சவாலினையும் இக் கட்டுரையில் ஆராய்வோம்.

முதலீடு, வருமானம், துய்ப்பு ஆகியவற்றில் அதிகரிப்பு இருப்பதோடுமட்டும் அமையாது, அதனைத் தொடர்ந்து முன்னேற்றம் தானே இயங்கி, இயல்பாக இருத்தல்வேண்டும் என்பதுதான் பொருளாதார வளர்ச்சிகுறித்த பிரச்சினையைப் பற்றியுள்ள முக்கியமான செய்தியாகும். வேறு முறையில் சொல்லின், தேக்க நிலையிலிருந்து வளர்ச்சி நிலைக்குப் பொருளாதாரம் வெற்றிகரமாக விடுபடுதல்தான் (take-off) பொருளாதார வளர்ச்சியின் முக்கியக் கூறுகும்.

'சுதந்திர சமூகத்தை'ப்பற்றி நாம் பேசும்பொழுது, சாமான்ய மனிதன் தனது அன்றாட வாழ்க்கையின் மிகவும் முக்கியமானதும் படர்ந்து பரவியுள்ளதுமான அம்சங்களில் சுதந்திரமாகக் காரியமாற்றும் வாய்ப்பினைக்கொண்ட சமூகத்தையே சுதந்திர சமூகம் எனக் குறிப்பிடுகிறோம். இரண்டு அடிப்படை உரிமைகளை அவன் பெற்றிருப்பதனை இது குறிக்கும். தன்னுடைய வேலை நியதிகளை நிர்ணயிக்கவும், ஏதேனும் கட்டாயக் குறைப்பிற்கு எதிராகத் தனக்குரிய வாழ்க்கைத்தரத்தைக் காப்பாற்றிக்கொள்ளவும், இன்னும், பெருகிய பொருளாதார வளர்ச்சியில் விளையும் உற்பத்தி அதிகரிப்பில் தனக்குரிய பங்கினை அடையவும் அவனுக்கு உரிமை உண்டு. இது ஓர் உரிமையாகும். மற்றொன்று, தான் உண்மையில் கட்டுப்படுத்தக்கூடிய அரசாங்கத்தை அமைக்காவிட்டாலும், தன்னுடைய செல்வாக்கினைச் செலுத்தக்கூடிய அரசாங்கத்தை அவன் அமைக்கும் உரிமையாகும். இவ் விரு அடிப்படை உரிமைகளையும் இணைத்து, 'ஜனநாயக உரிமை' எனக் குறிப்பிடலாம். தேர்ந்தெடுக்கப்பெற்ற அரசாங்கம், சுதந்திரமான நீதிமன்றம், சட்ட ஆட்சி, வயதுவந்தோருக்கு

ஓட்டுரிமை, ஒன்றுசேரும் உரிமை, பேச்சுச் சுதந்திரம், சங்கங்கள் ஏற்படுத்தும் உரிமை, வேலைநிறுத்த உரிமை, பத்திரிக்கை சுதந்திரம், இயக்க உரிமை, உத்தியோக உரிமை ஆகிய உரிமைக் கருவிகளைக்கொண்டு, மேலே குறிப்பிட்ட இரு அடிப்படை உரிமைகளை உறுதியாகப் பயன்படுத்த முடியும்.

எனினும், உரிமை என்பது வெறும் தன்னிச்சையைக் குறிக்காது. அரசாங்கத்தினிடமும் வேலைதருவோனிடமும் சாமான்ய மனிதன் கொண்டுள்ள தொடர்புகள், சட்டத்தின் மூலமும், சாமான்ய மனிதன் எதனை நியாயம் என்றும், சரி என்றும் கருதுகிருனே அதன்மூலமும் ஒழுங்குபடுத்தப்பெறு வதையே உரிமை எனலாம்; இதனைப் பொறுத்தவரையில், தன்னுடைய சொந்த, ஒழுங்கான நடவடிக்கைமூலம் ஒரு தொழிலாளி அரசாங்கத்தின்மீதும் வேலை தரும் முதலாளி மீதும் தனது செல்வாக்கினைப் பிரயோகிக்கும் வாய்ப்பிருத்தலையும் உரிமை எனலாம். இத்தகைய சுதந்திர சமூகத்தில், பேச்சுச் சுதந்திரத்தையும், பத்திரிக்கை சுதந்திரத்தையும் ஒன்றுகூடும் சுதந்திரத்தையும் சாமான்ய மனிதனொருவன் பயன்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது. இத்தகைய சமூகத்தின் சூழமையில், சட்ட ஆட்சி நிலவுகிறது; பெரும்பான்மை யினரின் விருப்பத்தினுல் அரசாங்கம் அதிகாரத்திற்கு வருகிறது; பெரும்பான்மையினரின் நம்பிக்கையை இழந்த வுடன், வெளியேறுகிறது; அரசாங்கம் தொடர்ந்து அதிகா ரத்தில் இருக்கவேண்டுமெனில், ஒவ்வொரு தடவையும் வாக்கா ளர்களைப் பொதுத் தேர்தலில் சந்திக்கவேண்டி இருக்கிறது. இத்தகைய சமூகத்தில், சாமான்ய மனிதன், வேலை தரும் முதலாளியை வழிக்குக் கொண்டுவர, சங்க நடவடிக்கையினை மேற்கொண்டு, தன்னுடைய வேலை நியதிகளைச் செப்பனிட்டுக் கொள்ளும் வாய்ப்பினையும் கூலியை உயர்த்திக்கொள்ளும் வாய்ப்பினையும் பெறுகிருன். இந்தக் கருத்தில்தான் ‘சுதந்திர சமூகம்’ என்ற சொல் இக் கட்டுரையில் இடம்பெறுகிறது.

வேலை தரும் முதலாளியின் அதிகாரத்தின்மீதும் அரசாங் கத்தின் அதிகாரத்தின்மீதுமுள்ள கட்டுப்பாடுகள், உண்மை யான ஜனநாயக சமூகத்தில் உள்ளடக்கமாக உள்ளன. இத்தகைய கட்டுப்பாடுகளின் அடிப்படைமீதுதான் வளர்ச் சிக்கு உரிமை விடுத்துள்ள சவால் அடங்கியுள்ளது. இவ்வாறுக, பெருகும் முதலீட்டுத் தேவைகளை விருப்ப சேமிப்புகளின் பெருக்கத்தின்மூலம் நிரப்பவேண்டும். தொழில் நுண்ணியல் சார்ந்த, அமைப்புரீதியான, விரைந்த மாற்றத்தைச் சரி யென்று ஏற்றுக்கொள்வதில் திறமைக்கு இருக்கும் பாத்தி

யதைகளை, இத்தகைய மாற்றத்திற்கு எதிர்ப்பாகவிருக்கும் சமூகரீதியான, உளவியல்ரீதியான தடைகளை வெற்றிகரமாக அகற்றுவதற்குப் பயன்படுத்தவேண்டும்; இத்தகைய மாற்றத்தின் உடனடி விளைவுகளையும் வெற்றியுடன் சமாளிக்கவும் பயன்படுத்தவேண்டும். இந்த சவாலினை ஏற்கமுடியுமா? உரிமையை வளர்ச்சிக்காக விட்டுக்கொடுக்கமுடியுமா? இப்பொழுது இருக்கும் வளர்ச்சியுற்ற நாடுகளின் பழைய அரசியல் சரித்திரத்திலும் தொழில்வளர்ச்சி குறிக்கும் சரித்திரத்திலும் உரிமையை வளர்ச்சிக்குத் தக்கவாறு வளைத்துக் கொண்ட நிகழ்ச்சிகள் காணக்கிடக்கின்றனவா? இப்பொழுது வளர்ந்துவரும் நாடுகளில் நடப்பு வரலாற்றில் இது நடைமுறையில் உள்ளதா? இந்தியாவிலும் நாம் இந்த முறையினை மேற்கொள்ளலாமா? தான் 1959ஆம் ஆண்டில் நிகழ்த்திய டயாசன் நினைவுச் சொற்பொழிவுகளில் (Dyason Memorial Lectures) ஆசிரியர் இக் கேள்விகளுக்குப் பதில்காண முயன்றார்; இக் கட்டுரையிலும் சுருக்கமாக விடைகாண முயல்கிறார்.

தானாகவே இயங்கி முன்னேறும் படிமுறைகொண்டு இருத்தலையே பொருளாதார வளர்ச்சியின் தோற்றுவாயும் வரலாறும் எடுத்துக்காட்டுவதாக உறுதியுடன் விடாப்பிடியாகக் கருதிக் கொள்ளக்கூடாது. காலத்தின் வேறுபாடுகளும் இட வேறுபாடுகளும் வளர்ச்சிமுறையை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதையும் ஒருவர் அலட்சியப்படுத்த முடியாது. அதே வேளையில் எல்லாப் பொருளாதார வளர்ச்சிகளிலும் சில பொதுக்கூறுகள் சிறிய அளவிலோ அல்லது பெரிய அளவிலோ நிலவுகின்றன. எனவே, இப் பொதுக்கூறுகள், இம்மைக்குரிய முக்கியத்துவத்தையும், இட முக்கியத்துவத்தையும் சார்ந்தவைகளல்ல என்றே தோன்றுகின்றன. ஆக, பொருளாதார வளர்ச்சியில் இயந்திரத்தையும் மின்சார சக்தியையும் புதிய உற்பத்திசார்ந்த தொழில்நுட்ப வினைமுறைகளையும் பிரயோகிப்பது தொக்கிநிற்கிறது என்று உரைப்பதும், சாதாரணமாக வேலையின் பரும அதிகரிப்பும் இதில் தொக்கிநிற்கிறது என்று உரைப்பதும் தவறன்று. கூடுதலான தொழிலாளர், அதிகப்படியான முதல், அதிகமான மின்சார சக்தி, அதிக அறிவு ஆகிய இவையனைத்தும் தேவையாகவே தோன்றுகின்றன. இதற்காக முக்கியமாகத் தேவைப்படுவது எதுவெனில், முதலீட்டுப் பெருக்கமும், இதற்குச் சமமாகத் தேவைப்படும் சேமிப்புப் பெருக்கமும் ஆகும். உற்பத்திப் பருமத்தை நிர்ணயிக்க வழிகாட்டி, முடிவுகள் எடுக்கின்றவர்களிடத்தில் புதுமை காணும் ஆர்வமும், உற்பத்திப்பெருக்க ஆசையும், குறைந்த

செலவுகளில் விருப்பமும் இருக்கவேண்டியது தேவையாகும். அதேநேரத்தில் சமூகத்தில், குறிப்பாகத் தொழிலாளர்களிடத்தில் தொழிற்றுறையில் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளும் விருப்பம் நிலவவேண்டும். அப்பொழுதுதான் உற்பத்தி பெருமளவில் பெருகும்.

இத் தொகுதியில் சில வேளைகளில் மிகவும் தீவிரமாக இருக்கும் கூறு எதுவெனில், முதல் குவிப்பு வீதமே (rate of capital accumulation). சேமிப்புகளின் துவக்க அதிகரிப்பினுல் நடப்புத் துய்ப்பில் சில குறைப்புகள் ஏற்படுகின்றன. உற்பத்திபற்றிய முடிவுகள் எடுப்போர், இலாப நஷ்டப் பொறுப்பேற்பதையும், தொழில் துணிவினை மேற்கொள்வதையும் முதலீட்டின் துவக்க அதிகரிப்பு எடுத்துக் காட்டுகிறது. வருமானப் பெருக்கத்தின் காரணமாகவும், இன்னும் முக்கியமாக அதிகரித்த உற்பத்தியிலிருந்து எழும் 'உள்ளார்ந்த ஆற்றலுள்ள வளர்ச்சி எச்சத்'தின் ('potential developmental surplus') காரணமாகவும், சேமிப்பின் அளவிலும் வீதங்களிலும் தொடர்ந்த அதிகரிப்பும், முதலீட்டில் தொடர்ந்த அதிகரிப்பும் ஏற்படுகின்றன. புதிய உற்பத்தி முறைகளிலிருந்து கிடைக்கும் உற்பத்தியின் மதிப்பிலிருந்து பழைய உற்பத்தி முறைகளின் அடிப்படையில் உற்பத்திக் காரணிகளுக்குக் கிடைக்கக்கூடிய வருமானத்தைக் கழித்து, பின்னர் முதல் குவிப்பிற்காகத் தங்கள் வருமானத்திலிருந்து இக் காரணிகள் துவக்கத்தில் வழங்கியவற்றைக் கூட்டினுல் கிடைக்கப்பெறுவது 'உள்ளார்ந்த ஆற்றலுள்ள வளர்ச்சி எச்சமா'கும். இந்த எச்சத்தைப் பகிர்ந்தளித்துத் தீர்த்துக் கட்டுவதுதான் பொருளாதார வளர்ச்சி வீதத்தை நிர்ணயிக்கிறது. உள்ளார்ந்த ஆற்றலுள்ள வளர்ச்சி எச்சத்தின் பெரும் பகுதியை முதலீடு செய்தால், அதனைத் தொடர்ந்து கிடைக்கும் உற்பத்திப் பருமமும் பெரிதாகவிருக்கும். இந்த முதலீட்டில் சமூகப் பொருளாதாரப் பொதுச் செலவுக்குரியவைகளின் பங்கும், அடிப்படை முதற் பொருள்களின் பங்கும், பொறி செய்யும் தொழிற்றுறைகளின் பங்கும் பெரியனவாக இருப்பின், எதிர்கால உற்பத்தியைப் பெருக்கும் வல்லமையும் உயர்ந்திருக்கும்; எனவே, வளர்ச்சி வீதமும் உயர்ந்திருக்கும். உண்மையில், திரும்பவும் மேற்கொள்ளும் முதலீட்டுக் காரியங்களுக்கு வளர்ச்சி எச்சத்தின் முழு பருமமும் கிடைக்காது என்பது தெளிவே. தாங்களாகவே முன்வந்து சேமிப்புகளை அளித்தவர்கள் வருவாய் ஏதேனும் எதிர்பார்ப்பார்கள். உற்பத்திபற்றிய முடிவுகளை எடுத்து, இத்தகைய புதிய

முறைகளை மேற்கொண்ட தொழில் துணிவோனும் வருவாயில் பங்கு ஏதேனும் எதிர்பார்ப்பான். இத்தகைய புதிய உற்பத்தி முறைகளில் தொழிலாளர்கள் கலந்துகொண்டு, உற்பத்தியின் அளவைப் பெருக்கியுள்ளமையால், அவர்களும் தங்களுடைய வருவாயில் போதுமான அளவிற்குப் பெருக்கத்தினை எதிர் பார்ப்பார்கள். செயல் சார்புடைய கூட்டாளிகள் (functional partners) என்றழைக்கப்படும் இம் மூவரையும் தவிர, நான்காவது கூட்டாளியாக அரசாங்கம் இருக்கிறது. வளர்ச்சி எச்சத்தில் அரசாங்கத்திற்கும் பங்கு இருக்கிறது. ஆக, 'உள்ளார்ந்த ஆற்றலுள்ள வளர்ச்சி எச்சத்'தினைப் பகிர்ந்து கொள்ள நான்கு கூட்டாளிகள் உள்ளனர். சேமிப்பாளர், வேலை தரும் முதலாளி, தொழிலாளி, அரசாங்கம் ஆகிய நால் வரும் கூட்டாளிகளே. விவசாயத்தையே பெரிதும் சார்ந் திருக்கும், தனக்குத்தானே வேலை தேடிக்கொள்ளும் தொழிலா ளியைப்பற்றிக் குறிப்பிட்டு இதனை முடிக்கலாம்.

பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப கட்டங்களில், சேமிப்பு செய்வோனும் வேலை தரும் முதலாளியும் (சில வேளைகளில் தனக்குத்தானே வேலை தேடிக்கொண்ட தொழிலாளியும்) ஒரே ஆளே. எனவே, சேமிப்புகளுக்குக் கிடைக்கும் வருவாயையும், தொழில்துணிவிற்குக் கிடைக்கும் வருவாயையும் பிரித்து நோக்கவேண்டியதில்லை. வளர்ச்சியின் துவக்க நாட்களில் அரசாங்கத்தின் பங்கு, இன்றைய அதன் பங்கைவிடக் குறை வாக இருந்தது. ஏனென்றால், வரிகளின்மூலம் நிதிபெற்று, முதலீட்டுச் செலவினை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை; மேலும், தற்காலத்திய நலன் பேணும் அரசாங்கக் கோட் பாட்டுடன் (concept of welfare state) தொடர்புள்ள துய்ப்புச் செலவினை அக்காலத்தில் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. உண்மையில், நலன் பேணும் அரசு என்பது நவீன காலத்திய கோட்பாடாகும். அதுபோலவே, பட்ஜெட் எச்சங்களிலிருந்து கிடைக்கும் நிதியினைக்கொண்டு வளர்ச்சியைப் பேணுதலும் நவீன காலத்திய கோட்பாடாகும். எனவே, உள்ளார்ந்த ஆற்றலுடைய வளர்ச்சி எச்சத்திலிருந்து அரசாங்கம் பங்கு பெறுவதைப் பொறுத்தவரையில், பொருளாதார வளர்ச்சியின் துவக்கக் கட்டங்களில் அரசாங்கம் அவ்வளவாக முக்கியத் துவம் நிரம்பியதாக இல்லை. அரசாங்கங்கள் ஒன்றோடொன்று போரிட்டுக்கொள்வதும், பின்னர் நாட்டிலுள்ள உபரியினை மிகப் பெருமளவிற்குக் கைப்பற்றிக்கொள்வதும் உண்மையே. ஆனால், சாதாரணமாக அரசாங்கங்களின் போர்ச் செலவு, தொழில்மயமாகும் படிமுறையினைத் தூண்டியது. அதே

நேரத்தில் போர்ச் செலவினைத் தொடர்ந்து ஏற்பட்ட பண வீக்கம், தொழிலாளரின் வருமானங்களை முதலாளிகளின் கைகளுக்கு மாற்றிவிட்டது. தனக்குத்தானே வேலை தேடிக் கொண்ட தொழிலாளி, அதிலும் குறிப்பாக விவசாயி, சோவியத் யூனியன் அல்லது ஜப்பான் போன்ற சில நாடுகளில் முக்கியத்துவம் உடையவனுவான்; ஆனால், இங்கிலாந்திலோ அல்லது ஐக்கிய அமெரிக்காவிலோ அவனுக்குச் சிறப்புக் கிடையாது. உள்ளார்ந்த ஆற்றலுடைய வளர்ச்சி எச்சத்தின் பகிர்வையும் பயன்பாட்டையும் பொறுத்தவரையில், பொருளாதார வளர்ச்சியின் துவக்க கட்டங்களில், உண்மையில் முக்கியத்துவமுடைய இரண்டு கூட்டாளிகள் எவரெனில், தொழிலாளியும் முதலாளியுமே எனலாம். சிறப்பு வாய்ந்த இவ்விரு கூட்டாளிகளின் போக்கு, பரஸ்பரத் தொடர்புகள் முதலானவைகளும், வளர்ச்சி எச்சத்தைப் பொறுத்தவரையில் அவர்களுடைய நடத்தை, நடவடிக்கை, மனப்பான்மை முதலானவைகளும் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை நிர்ணயிக்கின்றன.

தன்னுடைய துய்ப்பினைப் பெருக்கவேண்டும் என்று முதலாளி விரும்பியதில்லை. பொருளாதார வளர்ச்சியின் துவக்க நாட்களின் முதலாளியைப் பற்றியே நான் பேசுகிறேன். காலப்போக்கில் பெருகிய வருமானத்திற்குத் தக்கவாறு தனது துய்ப்பினையும் அவன் பெருக்கிக்கொண்டான் என்பது உண்மைதான்.[1] ஆனால், அதே வேளையில் தன்னிடம் பெருகிய வருமான முழுவதையும் செலவழித்துத் தன்னுடைய துய்ப்பினை அவன் பெருக்கிக்கொள்ளவில்லை என்ற உண்மையை மறுக்கமுடியாது. உண்மையில், உற்பத்தியைப் பெருக்குவதற்காகவே தன்னுடைய அதிக வருமானத்தைப் பயன்படுத்த அவன் விரும்பினான். வரலாற்றில் தன்னுடைய பங்கினைப் பற்றி அவனுக்கு ஏதோ ஒரு வகையான ஆன்மீக நம்பிக்கை இருந்தது. பொருளாதார வளர்ச்சியின் துவக்கக் கட்டங்களில் வாழ்ந்த முதலாளி வீண் ஆரவாரத்தின்மீதோ படாடோபமான துய்ப்பிலோ நாட்டம் கொள்ளவில்லை. தற்காலத்திய முதலாளி வர்க்கத்தில் சில பேர்கள் மேற்கொண்டுள்ள செலவு சார்ந்த

1 இங்கிலாந்தில் பத்தொன்பதாம் நூற்றுண்டின் முதல் பகுதியில் திராட்சைப் பழச் சாறு, போகப் பொருள்கள் முதலானவைகள் இறக்குமதி செய்யப்பட்டதைப்பற்றிய புள்ளி விவரங்களிலிருந்து தெரியவருவது என்னவெனில், துவக்க காலத்திய முதலாளி தனது பழக்க வழக்கங்களில் முழுதும் துறவு மனப்பான்மையுடன் இருந்தான் என்றும், துய்ப்பில் சிக்கனமாகவிருந்தான் என்றும் உரைப்பது ஓரளவிற்கு மிகைப்படுத்தப்பெற்ற, உயர்வு நவிற்சியான கூற்றேயாகும் என்பதுதான்.

பழக்க வழக்கங்களை அன்றைய முதலாளி கற்றுக்கொள்ள வில்லை. அவன் தனக்குக் கிடைத்த இலாபத்தை மீண்டும் முதலீடு செய்தான். தான் பெற்றனவற்றையெல்லாம் மீண்டும் முதலீடாக்கினான்; ஏனெனில், அவனுடைய ஆளுமை, அவன் மேற்கொண்டுள்ள வியாபாரத்தின் பருமன் பெருகுவதைப் பொறுத்தும், உற்பத்தி பெருகுவதைப் பொறுத்துமே வளர்ந்தது. இந்தப் படிமுறையில் அவன் மேலும் பணக்காரன் ஆனான்; மேலும் அதிகாரத்தைப் பெற்றான். ஆனால், அதே நேரத்தில் அவன் தன்னுடைய இலாபத்தைத் துய்ப்பில் விரயமாக்காமல் மீண்டும் முதலீட்டிலேயே முடக்கினான் என்பதை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். எனவே, பொருளாதாரக் கோணத்திலிருந்து பார்க்கும்பொழுது தெரிய வருவது என்னவெனில், அவனிடம் சென்ற எந்த வருமான மும், எந்த உபரியும் பொருளாதார வளர்ச்சியின் காரியங் களுக்கே பயன்பட்டன என்பதுதான். ஆனால், தொழிலாளி ஏழையாகவே உழன்றான். அவன் நிறையப் பண்டங்களைத் துய்க்க விரும்பினான். அந்த வேளையில் அவனுடைய நிலை யானது இந்தியத் தொழிலாளியின் நிலையைவிட மோசமானது. துய்ப்புக் குறைவாக இருந்தது; வாழ்க்கைத்தரம் மோசமாக விருந்தது; அவனுடைய வருமானம் பெருகியிருந்தால், தன் னுடைய துய்ப்பு மட்டங்களை உயர்த்திக்கொள்ள விரும்பி இருப்பான்.

இப்பொழுது பிரச்சினையின் சுருக்கத்தைக் கவனிப்போம். வளர்ச்சி எச்சத்தில் பங்குபெறும் இரு முக்கியக் கூட்டாளிகள் முதலாளியும் தொழிலாளியும் ஆவர்; அவர்களுடைய பங்கு இலாபங்களும் கூலிகளும் ஆகும். தொழிலாளி செலவாளி யாக இருந்தான். முதலாளி சிக்கனப் பேர்வழியாக இருந் தான்; சிக்கனத்தைப் பின்பற்றியதோடல்லாமல், முதலீட் டினையும் மேற்கொண்டான். எனவே, இனிமேல் தர்க்கவாதம் எளிதே. இலாபம் உயர உயர, பொருளாதார வளர்ச்சியின் காரியங்களுக்கு வளர்ச்சி எச்சம் பயன்படுத்தப்படும் என்பது நிச்சயமே. ஆனால், கூலிகள் உயர்ந்தால், வளர்ச்சி எச்சத் தினைப் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது அவ் வளவாக நிச்சயமில்லை. எனவே, பொருளாதார வளர்ச்சியின் துவக்க நாட்களில் வளர்ச்சியின் திட்ட முறை எதுவெனில், கூலிகள் தாழ்ந்தும் இலாபங்கள் உயர்ந்தும் இருக்கவேண்டும் என்பதே; முதலாளி சுதந்திரமாகவும் தொழிலாளி அடிமை யாகவும் இருக்கவேண்டும் என்பதே. ஒருபுறத்தில் கூலிகள் மட்டத்தினைக் கீழே இறக்கி, புதிய உற்பத்தி முறைகளில்

விளைந்த உற்பத்திப் பெருக்கத்தில் தொழிலாளி எந்தப் பங்கினையும் அடையாமல் தடுத்து, இலாபங்களைப் பெருக்கவேண்டும். மறுபுறத்தில், தன்னிச்சையாக அவன் உழைத்து வேலை செய்வதைவிட மேலும் கடினமாக உழைத்து வேலை செய்யும்படி தொழிலாளியைக் கட்டாயப்படுத்தி இலாபங்களைப் பெருக்க வேண்டும். பொருளாதாரத்தில் விவசாயியும் முக்கியப் பங்கு வகித்து, தேசிய வருமானத்தின் கணிசமான பகுதிக்குக் காரணமாக இருந்தால், அவனையும் பிழிந்து எடுத்துவிட வேண்டும். ஜனநாயக மேற்கத்திய நாடுகளின் சுதந்திர சமூகங்களில் பொருளாதார விடுபடு நிலையை (economic take-off) அடைவதற்கும், மூலதனத்தைக் குவிப்பதற்கும் அடிப்படையாக அமைந்தது, தொழிலாளியையும் விவசாயியையும் பிழிந்தெடுத்த சுரண்டலேயாகும் (நான் 'சுரண்டல்' என்ற சொல்லை எந்தவிதமான கொள்கையின் அடிப்படையிலும் பயன்படுத்தவில்லை; அதற்குரிய தூய, பொருளாதார ரீதியான அர்த்தத்திலேயே பயன்படுத்துகிறேன்).

துவக்க கால பொருளாதார வளர்ச்சியின் இந்தத் தர்க்கவாதமானது அல்லது பொருளாதார விடுபடு நிலை குறித்த திட்ட முறையானது முதலாளித்துவ நாடுகளில் எந்த அளவுக்கு உண்மையாக இருக்கின்றதோ, அதே அளவிற்கு கம்யூனிச நாடுகளிலும் உண்மையாகும். எனினும், இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் என்ன நிகழ்ந்தது என்பது ஒருவருடைய நினைவாற்றலில் தெளிவாகப் புலனாகாதுதான். தன்னுடைய வாழ்நாளிலேயே என்னென்ன நிகழ்கின்றன என்பதுதான் ஒருவனுக்குத் தெளிவாக இருக்க முடியும்; ஏனெனில், தன்னுடைய காலத்திலேயே நடைபெறும் நிகழ்ச்சிகளையெல்லாம் அவன் படிக்கின்றான்; அவற்றைப்பற்றியெல்லாம் அவன் கேள்விப்படுகிறான். ஆனால், படிமுறை ஒரே மாதிரியாகத்தான் இருந்தது. புதிய உற்பத்தி முறைகளைப் பயன்படுத்து; அதிகரித்த உற்பத்தியிலிருந்து தொழிலாளி தனக்கு வேண்டிய பங்கினை எடுக்க விடாமல் கொஞ்ச காலத்திற்கு எச்சரிக்கையாக இரு; வளர்ச்சி எச்சங்களை முதலீடு செய். முதலாளித்துவ வளர்ச்சியின் ஆரம்ப கட்டங்களில், தீரமிக்க தொழில்துணிவோன் இவற்றையெல்லாம் செய்தான். சமதர்ம பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப கட்டங்களில், கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகார மிக்க உறுப்பினனும் இவற்றையே செய்தான். பொதுவாக மொழிந்தால், பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரையில், துவக்க காலத்திய முதலாளித்துவப் பொருளாதார

வளர்ச்சியினைச் சார்ந்த தொழில்துணிவோரின் வர்க்கமும் இன்றைய கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்றே எனலாம். ஏனென்றால், அரசாங்கத்தின் துணைகொண்டு, கம்யூனிஸ்ட் கட்சி வளர்ச்சி எச்சத்தைக் கவர்ந்து, தொழிலாளர்கள் தங்களுடைய துய்ப்பினைப் பெருகவிடாது தடுத்து, பொருளாதார வளர்ச்சிக்காக அந்த எச்சத்தினை மீண்டும் முதலீடு செய்தது. எனவே, வளர்ச்சிக்குரிய படி முறை ஒன்றேதான். மேலே விளக்கப்பெற்ற இரண்டு முறைகளிலும் 'சுரண்டல்' இருந்தது; அல்லது 'கட்டாயமாகக் கலந்துகொள்ளுதல்' இருந்தது (இச் சொல் முரண்பாடான பொருளைத் தராதிருப்பின் பயன்படுத்தலாம்). முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப கட்டங்களில், மூலதன குவிப்புப் படி முறையில் தொழிலாளர்கள் கட்டாயமாகக் கலந்து கொண்டு தியாகம் செய்யும்படியே நேர்ந்தது; அதுபோலவே கம்யூனிச நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப கட்டங்களிலும், மூலதனக் குவிப்புப் படி முறையில் தொழிலாளர்கள் கட்டாயமாகக் கலந்துகொண்டு, தியாகம் செய்யும் படியே நேர்ந்தது. இவ்விரு நிலைகளிலும், ஒரே மாதிரியான முதல் குவிப்பும், ஒரே மாதிரியான சுரண்டலும், ஒரே மாதிரியான துய்ப்புக் கட்டுப்பாடுகளும் நிலவின; இன்னும், தேசிய வருமானத்திலும் ஒரே மாதிரியான அதிகரிப்பே நிலவியது; தேசிய வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினை முதலாளித்துவ நாடுகளில் இலாபம் என்று வருணிப்பர்; ஆனால், கம்யூனிச நாடுகளில், வரி எச்சங்களின் மூலமாகவோ அல்லது பொதுத் தொழில் துறையின் நிகர வரவுகள் (net receipt) மூலமாகவோ உருவாகும் பொது வருவாயினை (Public Revenue) தேசிய வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இணைத்து வருணிப்பர்.[2]

இந்த இலாபக் கூறுதான், முதல் குவிப்பிற்குத் தேவைப்படும் மூலாந்தர நிதியாகும். திருத்தம் பெற்ற உற்பத்தி முறைகளைப் பயன்படுத்துவதைத் தொடர்ந்து தேசிய வருமானத்தில் ஏற்பட்ட பெருக்கத்தின் விளைவுதான் இந்த இலாபக்

[2] cf. ஆர்தர் லீவிஸ் (Arthur Lewis), 'பொருளாதார வளர்ச்சியின் கோட்பாடு' (Theory of Economic Growth). 'தனியார் முதலாளித்துவத்தில் தொழில்துணிவோர் தனி இலாபங்களை ஈட்டி, தனிக்கணக்கின் கீழேயே மீண்டும் முதலீடு செய்துள்ளனர். ஆனால், யு.எஸ்.எஸ்.ஆரில், இலாபங்களில் ஏற்பட்ட பெரும் அதிகரிப்பினை, 'மொத்த விற்பனை வரி' யாக (turnover tax) மறைத்துக் காட்டி, திட்ட நிபுணர்கள் அதனைப் பொதுத் துறைக் கணக்கின் கீழே மீண்டும் முதலீடு செய்துள்ளனர். ஆனால், இவ்விரு முறைகளிலுமே, 5 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு சேமிப்புகளை மாற்றியதன் முக்கிய அம்சம், தேசிய வருமானத்தில் உள்ள இலாபங்களின் பகுதி பெருமளவிற்கு அதிகரித்ததாகும்.' —பக்கம் 226

கூறுகும். மேலும், தேசிய வருமானத்தின் பெருக்கத்திலிருந்து தொழிலாளர்கள் அடைய வேண்டிய பங்கினைத் தடுத்துவிட்ட தன் விளைவுதான் இந்த இலாபக் கூறுகும். கீழ்வரும் முறைகளின்மூலம் தொழிலாளர்களைச் சுரண்டினர்:

(1) மலிவான கூலிகளுக்கு வேலை செய்ய வரும் பெண் தொழிலாளர்களையும் குழந்தைகளையும் மிகவும் பெரிய அளவிற்குப் பயன்படுத்தியமை.

(2) இணையாகக் கூலி உயர்வு ஏதுமின்றி, நெடுநேரம் (அதிக மணி நேரம்) வேலை செய்தல்.

(3) கூடுதலான ஆக்கத் திறனுள்ள புதிய உற்பத்தி முறைகளின் அடிப்படையில் அல்லாமல், குறைந்த ஆக்கத் திறனுள்ள பழைய உற்பத்தி முறைகளின் அடிப்படையில் கூலி வீதங்களை நிர்ணயித்தல்.

இனங்கள் இரண்டும் மூன்றுமே மார்க்ஸ் அவர்களைத் தனது பிரபல்யமான எச்ச மதிப்புக் கோட்பாட்டினை உருவாக்கும்படி செய்தது. தொழிலாளியின் பிழைப்பிற்குக் கிட்டத்தட்ட, குறைந்தபட்சம் தேவைப்படும் கூலியினையே அவன் உண்மையில் பெறுன்; அக் கூலியினை அடைவதற்காக அவன் வேலை செய்யும் நேரத்தைவிட கணிசமான அளவிற்குக் கூடுதலான நேரம் வேலை செய்ததில் விளைந்ததே அந்த எச்சமாகும். முதல் குவிப்பிற்கு முக்கிய அடிப்படைச் சுரண்டலே என்ற கருத்திற்கு ஆதரவாகப் பொருளாதார வரலாற்றிலிருந்து நிறைய ஆதாரங்கள் கிடைத்துள்ளன.[3]

உதாரணமாக, தொழில்மயமாதலின் ஆரம்ப கட்டங்களில் பெண்களையும் குழந்தைகளையும் வேலைக்கமர்த்தியதை எடுத்துக்கொள்வோம். கிரேட் பிரிட்டனில் தொழில்மயமாதலின் மூலத் தோற்றுவாயாகத் திகழ்ந்த, நெசவாலைகளின்

[3] cf. லீவிஸ் (Lewis), 'பிரிட்டிஷ், ஜப்பானிய, ரஷ்யத் தொழிற் புரட்சிகள் அனைத்தும் இக் கட்டமைவினைச் சார்ந்துள்ளன. ஒவ்வொரு முறையிலும், உயர்ந்த ஆக்கத் திறனின் நன்மைகள் அனைத்தும் விவசாயிகள், கூலி வருவாய்க்காரர்கள் போன்ற வர்க்கத்தினரின் துய்ப்புப் பெருக்கத்திற்கு உதவியாகச் சென்று அடைய மாட்டா. இதுவே உடனடி விளைவாகும். ஆனால், உயர்ந்த ஆக்கத் திறனின் நன்மைகளனைத்தும் தனியார் இலாபங்களையோ அல்லது பொது வரிவிதிப்பையோ சென்று அடைவன. அவை, மேலும் வேண்டிய முதலாக்கத்திற்குப் பயன்படுவன. மேலும் மேலும் தொழிலாளர்கள்.... ......கூலி வேலைக்கு எடுக்கப்பட்டுள்ளனர்; ஆனால், ஆக்கத் திறன் உயர்ந்ததுபோல உண்மைக் கூலிகள் உயருவதற்கு அனுமதிக்கப்படவில்லை.' Op. cit., பக்கம் 235.

பொருளாதார வளர்ச்சி குறித்து 1959ஆம் ஆண்டில், தான் நிகழ்த்திய கேம்பிரிட்ஜ் சொற்பொழிவுகளில் புறவயமான பொருளாதார வரலாற்று மேதையாகிய ரஸ்டோவ் (Rostow) அவர்கள் இக் கூறினை விட்டுவிட்டது விந்தையே.

முதலாளிகள் பெரிதும் பெண் தொழிலாளர்களையும் குழந்தைத் தொழிலாளர்களையுமே வேலைக்கமர்த்தினர். இத் தொழிலாளர்கள் எளிதில் பயிற்றுவிக்கத் தக்கவர்களாகவும் பணிவிணக்கமுள்ளவர்களாகவும் எளிதில் மறுமொழியின்றி ஆமை போல் அடங்கிக் கிடக்கக்கூடியவர்களாகவும் இருப்பதுடன், அவர்கள் மலிவான கூலிக்கே வேலைக்கு வரக்கூடியவர்களாகவும் இருந்தனர். மான்டு (mantoux) பின்வருமாறு கூறுகிறார்:

'மோசமான இக் குழந்தைகளில் பெரும்பாலோர் வக்கற்றவர்களாவர். இவர்கள் பிறந்து, வளர்ந்த இடங்களாகிய பாரிஷ்களே (parishes) இவர்களைத் தொழிற்சாலைகளுக்கு வழங்கின; தொழிற்சாலைகளிடம் விலைக்கு விற்றன என்றும் கூடக் குறிப்பிடலாம் .... நூலாலைகளின் முதலாளிகளுக்கும் ஏழ்மைச் சட்ட அதிகாரிகளுக்குமிடையில் குழந்தைகளை வெறும் வியாபாரப் பொருள்களாகக் கருதி விற்கும் பேரங்கள் இரு சாராருக்கும் நன்மையளிக்கும் வகையில் மேற்கொள்ளப் பட்டன. ஐம்பது ஐம்பது குழந்தைகளாக, எண்பது எண்பது குழந்தைகளாக, நூறு நூறு குழந்தைகளாகத் தொழிற்சாலைக்கு ஆடு மாடுகள்போல அனுப்பப்பட்டனர். அநேக ஆண்டுகளுக்கு அக் குழந்தைகள் அங்கே சிறையிட்டது போல் அடைத்து வைக்கப்பட்டனர். ஒவ்வோர் இருபது குழந்தைகள்கொண்ட கூட்டத்திற்கும் ஒரு வடிகட்டிய முட்டாளையும் ஆலை முதலாளி விலைக்கு வாங்கவேண்டுமென சில பாரிஷ்கள் புத்திசாலித்தனமான பேரங்கள் செய்தன...... தங்களுடைய முதலாளிகளின் தயவிலே இக் குழந்தைகள் முழுதும் அடங்கிக் கிடந்தனர்; தனித்த கட்டிடங்களிலே அடைக்கப்பெற்று, வாடிக் கிடந்தனர்; அவர்கள் படும் சொல்லொணுத் துன்பங்களைக் கண்டு பரிதாபப்படக்கூடியவர்கள் யாருமே அருகில் இல்லாதவகையில் இவர்கள் வெகு தொலைவில் அடைக்கப்பெற்று, சோர்ந்து கிடந்தனர்; அவர்கள் ஒரு கொடிய அடிமைத் தளையைப் பொறுத்துக்கொண்டு வதங்கிக் கிடந்தனர். அவர்கள் முழுதும் சோர்வடைந்து மயங்கி விழும் வரையில் வேலை செய்தனர். அதுவே அவர்களுடைய ஒரு நாளின் வேலை நேரத்தை நிர்ணயித்தது. அவர்கள் ஒரு நாளைக்குப் பதினன்கு, பதினறு, பதினெட்டு மணி நேரம் கூட வேலை செய்தனர்.'[4]

இவ்வாறாக, இங்கிலாந்து நாட்டுக் குழந்தைகள் முதல் குவிப்பிற்குத் தங்களுடைய சொந்தப் பங்கினையும் செலுத்தியுள்ளனர். கிரேட் பிரிட்டனின் பிரதம மந்திரி பாராளுமன்

[4] பதினெட்டாம் நூற்றாண்டில் தொழிற் புரட்சி, பக்கம், 420-5.

றத்தில் 1796ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள், 12ஆம் நாள் நிகழ்த்திய சொற்பொழிவில் இக் குழந்தைகளுக்கு நேர்த்தி மிக்க பாராட்டுதலை வழங்கியதில் வியப்பொன்றுமில்லை. அவர் பேச்சுப் பின்வருமாறு :

'தொழிற்சாலைப் பள்ளிகளில் ஏற்கெனவே பயிற்சிபெற்ற குழந்தைகளின் வருவாய்களனைத்தையும் கணக்கிடும் தொல்லையினை ஒருவன் மேற்கொண்டால், இக் குழந்தைகளின் உழைப்பினாலும் தாங்கள் உருவாக்கிக்கொண்டுள்ள பழக்க வழக்கங்களினாலும் நாட்டை மேல் எழச் செய்து, செழிப்பினை இன்னும் அதிகமாகப் பெருக்கியிருப்பதைக் காண அவன் வியப்பு அடைவான்.'[5]

பிரிட்டிஷ் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய தொழிலாளர் அளிப்பு எப்படிக் கிடைத்தது என்பதுபற்றி விவாதிக்கும் பொழுது, ஃப்ரைடுலாண்டர், ஓஸர் ஆகிய இருவரும் (Friedlander and Osser) பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்: '1830ஆம் ஆண்டைத் தொடர்ந்த ஆண்டுகளில், பஞ்சாலைகளில் 18 வயதுக்குமேல் வேலை பார்த்த ஆண் தொழிலாளிகள் மொத்தத்தில் 25 சதவீதம் முதல் 30 சதவீதத்தினரே ; மற்றவர்களனைவரும் பெண்களும் குழந்தைகளுமே.'[6] இன்னுமுயர்ந்த ஜனநாயகக் கட்டமைவினை உடையதாகவிருந்தபோதிலும், ஐக்கிய அமெரிக்காவில் நிலைமை மாறுனதாக இல்லை. 1820-ஆம் ஆண்டில் மெஸ்ஸாசுசெட்ஸ் பஞ்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் மொத்தத்தில் 45 சதவீதமும், ரோடு ஐலண்ட்சில் (Rhode Islands) 55 சதவீதமும் இருந்தனர் என்று ஹெச். யு. ஃபாக்னர் என்னும் பேராசிரியர் (H. U. Faulkner) குறிப்பிட்டுள்ளார்.[7] நியூ இங்கிலாந்திலிருந்து வர்ஜீனியா வரையில் உள்ள பஞ்சாலைகளில் வேலை செய்த மொத்தத் தொழிலாளர்களில் பெண்கள் ஏறக்குறைய 60 சதவீதமும், பன்னிரண்டு வயதிற்கும் குறைந்த வயதுடைய குழந்தைகள் 7 சதவீதமும் இருந்தனர் என்று எப். ஏ. ஷானன் (F. A. Shannon) எடுத்துக் காட்டியுள்ளார்.[8] 1832ஆம் ஆண்டில் போஸ்டனில் நிகழ்ந்த, நியூ இங்கிலாந்து தொழில் நுட்ப வினைஞர்கள், தொழிலாளர்கள் ஆகியவர்களுடைய கூட்டமொன்றின் அறிக்கையில், பொறிவழித் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் மொத்தத் தொழிலாளர்

[5] வில்லியம் பிட் அவர்களின் சொற்பொழிவுகள், வால்யூம் II, பக்கம் 371.

[6] ஐரோப்பாவின் பொருளாதார வரலாறு, பக்கம் 156.

[7] அமெரிக்கப் பொருளாதார வரலாறு, பக்கம் 298.

[8] அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சி, பக்கம் 251.

களில் ஏறத்தாழ ஐந்தில் இரு மடங்கினர் குழந்தைகளே என்று கணக்கிடப்பட்டுள்ளது.[9] போஸ்டன், நியூயார்க், ஃபிலடெல்பியா, பால்டிமோர் முதலிய இடங்களில் 1830 ஆம் ஆண்டில், 20,000 பெண்டிர் நாளொன்றுக்கு 16 மணி நேரம் வேலை செய்தனர் என்றும், அவர்கள் வாரமொன்றுக்கு 1·25 டாலருக்கு மேல் கூலியாகப் பெறவில்லை என்றும் மேத்தியு கரே (Matthew Carey) கணக்கிட்டுள்ளார்.[10] ஆக, உலகத்தின் மிகப் பெரும் தொழிற்றுறை சார்ந்த நாட்டில், முதல் குவிப்பின் ஆரம்ப கட்டங்களில் பெண்டிரையும் குழந்தைகளையும் சுரண்டியே முதல் குவிப்பு செய்தனர்.

பத்துப்பத்து ஆண்டுகளாகப் பலவாண்டுகள் கழிந்த பிறகு, மேற்கத்திய நாடுகளில் பெண்களையும் குழந்தைகளையும் தொழிலாளர்களாகப் பயன்படுத்துவது நின்ற பிறகு, ஜப்பான் தன்னைத் தொழில்மயமாக்கிக்கொள்ளத் துவங்கியபோதிலும், ஜப்பானும் மேலே குறித்த முறையையே பின்பற்றியது. இவ்வாறாக, 1896ஆம் ஆண்டில், பத்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் தனியார் துறை சார்ந்த தொழிற்சாலைகளில் மொத்தமாக வேலை பார்த்து வந்த 435,000 பேர்களில் 261,000 பேர்கள் பெண்களாவர்; ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பெரும் பாலும் விவசாயப் பெண்களே; அவர்களில் அநேகர் 16 வயதிற்கும் குறைந்த வயதினை உடையவர்களே. 1936ஆம் ஆண்டிலும்கூட, ஜப்பானில் ஐந்து அல்லது ஐந்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் தொழிற்சாலைகளில் மொத்தத்தில் வேலை பார்த்த 2·6 மில்லியன் தொழிலாளர்களில் 1·1 மில்லியன் பேர்கள் பெண்களே; அவர்களில் பதினாறு வயதுக்குக் குறைந்த பெண்கள் ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கினர் ஆவர்; நெசவாலைகளில் வேலை பார்த்தவர்கள் 73 சதவீதமாவர்.'[11] மேலும் ஜப்பானிய முதலாளிகள் பல படுக்கைகள் கொண்ட பெரிய துயிற்கூட முறையினைப் பெருவாரியாகப் பயன்படுத்தினர்; அவற்றில் தொழிலாளர்களை, அதிலும் குறிப்பாகப் பெண் தொழிலாளர்களை வசிக்கச் செய்தனர்; அத் துயிற்கூடத்திலேயே அவர்கள் உண்டு உறங்கினர்; அத்துயிற்கூடம் தொழிற்சாலையின் எல்லைக்குள்ளேயே அமைக்கப்பட்டிருந்தது. ஜப்பானிலும் முதற் குவிப்பிற்குப் பெண்கள் உதவியாக உழைத்தனர்.

[9] ஃபாக்னர் தன் நூலில் இதனை எடுத்தாள்கிறார், op. cit. பக்கம் 298.

[10] ஷானன் தன் நூலில் இதனை எடுத்தாள்கிறார், op. cit. பக்கம் 251.

[11] லாக்வுட் (Lockwood), 'ஜப்பானின் பொருளாதார வளர்ச்சி.', பக்கம், 301–4.

இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், ஜப்பானிலும் பொருளாதாரம் விடுபடுநிலையை அடைந்துகொண்டிருந்தபொழுது, தொழில்மயமாகிக்கொண்டிருந்த துவக்க ஆண்டுகளில், தொழிலாளர்களை நீண்ட நேரம் உழைக்கச் செய்து, அவர்களைச் சுரண்டி, இலாபங்களை உயர்ந்தபட்சத்திற்குப் பெருக்கினர். ஃப்ரைடு லாண்டரும் ஓஸரும் பின்வருமாறு எழுதுகின்றனர் :

'துவக்ககால தொழிற்சாலை அமைப்பின் இரண்டாவது பெருங்கேடு எதுவெனில், வேலை நாளில் உழைக்கும் நேரம் மிகவும் நீண்டிருத்தலேயாகும்.........18ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாயுமூலம் பெற்ற வெளிச்சமானது நீண்ட வேலை நேரத்திற்கு வழிவகுத்தது.........1840ஆம் ஆண்டில் முகாலின் (Muhall) கருத்துப்படி, இங்கிலாந்தில் சராசரி வேலை வாரம் 69 மணிகளைக் கொண்டிருந்தது ; ஐக்கிய அமெரிக்காவிலும் ஃபிரான்சிலும் 78 மணி நேரங்களைக் கொண்டிருந்தது ; ஜெர்மனியில் 83 மணி நேரங்களைக் கொண்டிருந்தது.'[12] பேராசியர் எலி (Ely) பின்வருமாறு உரைக்கிறார் :

'உண்மையான உழைப்புக் காலநீட்சி (1832) பன்னிரண்டிலிருந்து பதினைந்து மணிகள் வரையிலும் மாறியது. பொதுவாக நியூ இங்கிலாந்தின் ஆலைகள் 13 மணி நேரம் வேலை செய்தது. ஆனால், கனெக்டிகட்டில் ஓர் ஆலை 14 மணி நேரம் வேலை செய்தது. அதே வேளையில், அந்த மாநிலத்திலுள்ள மற்றோர் ஆலையானது, 'கிரிஸ்வோல்டு நகரிலுள்ள ஈகிள் ஆலையானது' (Eagle Mill at Griswold) 15 மணிகள் 10 நிமிடங்கள் வேலை செய்தது. பாட்டர்சன் (Patterson), நியூ ஜெர்ஸி (New Jersey) முதலிய இடங்களின் சட்டங்களின்படி, பெண்களும் குழந்தைகளும் காலை 4½ மணிக்கே வேலைக்கு வரவேண்டும்.'[13]

1833ஆம் ஆண்டிலிருந்து 1837ஆம் ஆண்டு முடிய உள்ள காலத்தில் 168-க்குக் குறையாத வேலை நிறுத்தங்கள் அக்காலத்திய பத்திரிக்கைகளில் குறிக்கப்பட்டுள்ளன. கிழக்குக் கடற்கரைப் பிரதேச முழுதுமுள்ள தொழிலாளர்களின் கோரிக்கையான பத்து மணிநேர நாள் அமலுக்கு வந்தது. இக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அவர்கள் காட்டிய காரணம் பொருளாதார ரீதியைச் சார்ந்ததன்று ; கலாசார

[12] ஐரோப்பாவின் பொருளாதார வரலாறு, பக்கம் 156.
[13] அமெரிக்காவின் தொழிற் சங்கம், பக்கம் 49.

ரீதியைச் சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஃபிலடெல்ஃபியாவில் தச்சுவேலையில் பயிற்சி பெறும் தொழிலாளர்கள் நிறைவேற்றிய தீர்மானம் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

'தங்களுடைய உள்ளங்களை உயர்த்திப் பண்படுத்திக் கொள்ளவும், சுய வளர்ச்சியைப் பேணவும் ஒவ்வொரு நாளிலும் போதுமான அளவிற்கு நேரத்தினை ஒதுக்கிக்கொள்ளும் நியாயமான உரிமை மனிதர்களனைவருக்கும் உண்டு. தங்களைப் படைத்த ஆண்டவனிடமிருந்து அந்த உரிமையை அவர்கள் அடைந்துள்ளனர். எனவே, ஒரு நாளைக்குப் பத்து மணிநேரம் வேலைசெய்வது போதுமானது என்று நாங்கள் கருதுகிறோம். இதுவே எங்கள் தீர்மானமாகும்.'[14]

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி இருபது ஆண்டுகளில் தொழில்மயமாகத் தொடங்கிய ஜப்பானில், மேற்கத்திய நாடுகளின் தொழில் புரட்சியின் கேடு நிறைந்த வரலாறு மீண்டும் நிகழ்ந்தது. 'தொழிலாளிகள் மிகவும் கேவலமான, குறைந்த கூலிக்கு, இரவிலும் பகலிலும் 11 மணிகள் முதல் 14 மணிகள் வரையில் சாதாரணமாக வேலை செய்தனர்,' என்று லாக்வுட் எழுதுகிறார்.[15]

மிக முக்கியமான அக்காலத்தில், குறைந்த கூலிகள்மூலமே இலாபங்களை உயர்ந்தபட்சத்திற்குப் பெருக்கினர். சேமிப்பு வீதத்தினையும் 5 சதவீதத்திலிருந்து ஏறத்தாழ 15 சதவீதத்திற்கு உயர்த்தினர். இந்நிலைகள், அந்தக் காலத்தில் தொழிலாளர்கள் அனுபவித்த மிகவும் தாழ்ந்த வாழ்க்கைத்தரத்தைப் பிரதிபலிக்கின்றன. இக்காலத்திய பொருளாதார வரலாறு பற்றி எழுதப்பட்டிருப்பவைகளில் எல்லாம் தொழிலாளர்களின் பரிதாபமான வாழ்க்கையைப்பற்றி நெஞ்சை உருக்கும் வருணனைகள் நிறைந்துள்ளன. அடிக்கடி வேலை நிறுத்தங்கள் நிறையச் செய்தனர்; எனினும், அவை வன்முறைகளினால் அடக்கப்பட்டன. சேமிப்பு வீதங்களும் முதலீட்டு வீதங்களும் கணிசமான அளவிற்கு உயர்ந்த பிறகே, வருமானமும் உயர்ந்த பிறகே, தொழிலாளர்கள் சங்கம் அமைத்துக் கட்டுக் கோப்புடன் ஒன்று சேர்ந்த பிறகே, தொழிலாளர்கள் நிலைமைகள் உயரத் தொடங்கின.

விவசாயிகளே பெரும்பாலானவர்களாக இருக்கும் சமூகத்தில், விவசாயமே தேசிய வருமானத்தின் பெரும் பகுதியை

[14] டல்லஸ் (Dulles), 'அமெரிக்காவில் தொழிலாளர்கள்,' பக்கம் 60.
[15] லாக்வுட், op. cit., பக்கம் 556.

வழங்கும் சமூகத்தில், முதல் குவிப்புப் படிமுறையில் விவசாய வர்க்கங்களும் சுரண்டப் பெற்றன. ஜப்பானில் இச் சுரண்டல் நன்கு தெரிகிறது. லாக்வுட் பின்வருமாறு குறிப்பிடுகிருர் :

'பத்தொன்பதாம் நூற்ருண்டின் ஆரம்ப ஆண்டுகளில், மேஜி அரசாங்கங்கள் (Meiji governments) கடுமையான விவசாய வரிகள் மூலம் பெற்ற வருவாயைக்கொண்டு பெரும் இராணுவச் செலவீடுகளையும் வளர்ச்சித் திட்டங்களையும் மேற்கொண்டன.......அக்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட தானிய உற்பத்தியின் 8.5 மடங்காக நிலத்தின் மதிப்புகள் கணக்கிடப் பெற்று, அதில் 3 சதவீதத்தை 1873ஆம் ஆண்டில் புது நில வரியாக வசூலித்தனர். ஆரம்பத்தில் இந்த வரியானது மொத்தப் பயிர் உற்பத்தியில் 33 சதவீதத்தை விழுங்கியது; டோகுகாவாஸ் (Tokugawas) ஆட்சிக்குக்கீழே ஒரு நிலக்கிழார் கவர்ந்துகொள்ளும் பங்கிற்குக் கிட்டத்தட்ட இணையானது இது எனலாம். அக்காலத்தில் அரசாங்கத்தின் மொத்த வரி வருவாயில் நிலவரி மட்டும் 94 சதவீதமாகும். அந்த நூற்ருண்டு முடியும் வரையில் மொத்த வரி வருவாயில் நிலவரி பாதிக்கு மேலேயே இருந்தது.'[16] மேலும், அவர் பின்வருமாறு குறிப்பிடுகிருர் :

'1873ஆம் ஆண்டில் துவங்கிய நிலவரி சீர்திருத்தத்தையும் சேர்த்தே, மேஜி அரசாங்கங்கள் மேற்கொண்ட அரசிறைக் கைக்கோளானது, விவசாயத்திலிருந்து உயர்ந்த பட்ச வருவாயைக் கறந்து, அதனைக்கொண்டு அரசாங்கத்தின் செலவுகளையும் மேற்கொண்டு, அதிகாரவர்க்கங்களின் தொழிற்றுறை சார்ந்த, இராணுவ பேராவல்களையும் பூர்த்தி செய்துகொண்டன.'[17]

முதல் குவிப்பிற்குத் தேவையான இலாபங்கள் தேசிய வருமானத்தில் போதுமான அளவுக்கு இல்லையென்ருல், 'தொழிற் புரட்சிக்கு வேண்டிய நிதி திரட்ட' விவசாயிகளைக் கட்டாயப்படுத்தினர் என ஆர்தர் லீவிஸ் எடுத்துக்காட்டுகிருர். ஜப்பானை உதாரணமாக எடுத்துக் கொண்டு, அவர் பின்வருமாறு கூறுகிருர் :

'அந் நாட்டில், 1885ஆம் ஆண்டிலிருந்து 1915ஆம் ஆண்டு முடிய உள்ள ஆண்டுகளில் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தவனின் ஆக்கத்திறன் இரண்டு மடங்காக உயர்ந்தது. ஆனல்,

[16] மேல்வரும் புத்தகம், பக்கம் 98.
[17] மேல்வரும் புத்தகம், பக்கம் 293.

அந்த அதிகரிப்பின் பெரும் பகுதி விவசாயிகளிடமிருந்து அதிக வாரமாகவோ அல்லது அதிக வரிகளாகவோ பிடுங்கப் பெற்று, பொருளாதாரத்தின் ஏனைய துறைகளில் பயன்படுத்தப் பெற்றன.'[18]

இன்னும் கடுமையான மொழியில் பால் பாரன் (Paul Baran) இதனைக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்:

'ஜப்பானில் ஆரம்ப முதல் குவிப்பிற்கு முக்கியமாகப் பயன்பட்டது கிராமமே. அதன் நவீன கால வரலாறு முழுதும் ஜப்பானிய முதலாளித்துவத்திற்குக் கிராமம் ஓர் உள்நாட்டுக் காலனியாகப் பயன்பட்டது. இது ஒன்றும் மிகையான கூற்று அன்று."[19]

பொருளாதார வளர்ச்சியின் முக்கிய காலத்தில் தொழிலாளர் நிலையைப்பற்றித் தெளிவாகவும் புறவயமாகவும் புச்சனேன் (Buchanan), எல்லிஸ் (Ellis) ஆகிய இருவரும் கீழ்க் காணும் வாசகங்களில் விளக்கியுள்ளனர்:

'பத்தொன்பதாம் நூற்றுண்டில் தொழில் உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்களும், அவற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட நகர்மயமாதலும் கேடு பயப்பனவாக இருந்தன. அவை மனித சமுதாயத்தில் துன்பத்தையும் வேதனையையும் உண்டாக்கின. தொழில்மயமாதல் கொஞ்ச காலத்திற்கு நிகழ்ந்த பிறகே, அதன் ஆபத்துகளையும் தீமைகளையும் அக் காலத்திய சமூக உணர்வானது காலந்தாழ்த்தி உணரத் தொடங்கியது. அதன் விளைவாக, வேலை நியதிகளைத் திருத்தவும், வேலைநேரத்தைக் குறைக்கவும், காப்பு எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கவும், நகர வாழ்க்கையை வசதிப்படுத்தவும், இன்னோரன்ன காரியங்களை நிறைவேற்றவும் சட்டங்கள் இயற்றப்பெற்றன. வேலையின்மை, வயோதிகம், நோய், பொருளாதாரப் பாதுகாப்பின்மையின் ஏனைய பிரச்சினைகள் ஆகியவை அனைத்தும் கொஞ்ச காலத்திற்குப் பின்னர்தான் சமூகப் பொறுப்பாக உணரப்பட்டன. எனவே, தொழில் மயமாதலுக்கான சமூகச் செலவுகள் கணக்கில் சேர்க்கப்படவில்லை என்ற உண்மையின்மூலமாகத்தான் பத்தொன்பதாம் நூற்றுண்டின் முதற் பகுதியில் ஏற்பட்ட தொழில்துறை முன்னேற்றத்தின் வேகத்தை ஓரளவிற்கு விளக்க முடியும்.'[20]

[18] ஆர்தர் லீவிஸ், op. cit., பக்கம் 230.

[19] 'வளர்ச்சியின் அரசியற் பொருளாதாரம்,' பக்கம் 155.

[20] 'பொருளாதார வளர்ச்சிக்குரிய பாதைகள்' (Approaches to Economic Development), பக்கம் 142.

தொழில்துறையிலும் விவசாயத்திலும் நிகழ்ந்த தொழிலாளர் சுரண்டலும் புதிய உற்பத்தி முறைகளின் பிரயோகமும் தேவையான அளவிற்கு இலாபங்களைப் பெருக்கின; அதனுடன், வளர்ச்சிக்கு முந்திய நிலையிலிருந்து வளர்ச்சி நிலையை நோக்கி முன்னேறுவதற்குத் தேவைப்படும் முதல் குவிப்பினை உண்டாக்கின.

இப்பொழுது எழும் கேள்வி இதுதான். வளர்ச்சிக்காக முதல் குவிப்பு நிகழ்ந்த முக்கியமான ஆரம்ப கட்டங்களில் இத்தகைய மோசமான வேலை நியதிகளையும், குறைந்த கூலி மட்டங்களையும், வருவாய்களையும் எவ்வாறு தொழிலாளர்கள் பொறுத்துக்கொண்டனர்? சுதந்திரமற்ற சமூகத்தில் தொழில்மயமாதல் நிகழ்ந்தது என்பதே விடையாகும். சேமிப்புகளிலும் முதலீட்டிலும் தொழிலாளியும் விவசாயியும் விருப்பத்துடன் ஒத்துழைக்கவில்லை. வளர்ச்சிக்குரிய போராட்டத்தில் முதலாளியும் அரசாங்கமும் சாமானிய மனிதனைக் கட்டாயமாக ஒத்துழைக்கச் செய்தனர். இவர்கள் இதனைச் செய்ய முடிந்ததற்குக் காரணம், அக் காலத்தில் தொழிலாளிகள் தொழிற் சங்கங்கள் அமைக்க அனுமதிக்கப்படவில்லை என்பதுதான்; சங்கங்கள் அமைக்காததால், தங்களுடைய வேலை நியதிகளையும் கூலிகளையும் உயர்த்திக்கொள்ள சங்கரீதியாக அவர்களால் இயலவில்லை என்பதும் காரணமாகும். அரசாங்க நிர்வாகமும் முதலாளிகளுக்கு ஆதரவாக இருந்து, தொழிலாளியின் உரிமைக்கு எதிராக முதலாளியின் உரிமையையே பாதுகாக்க முனைந்தது. தொழில்துறைகளிலும் விவசாயத்திலும் ஈடுபட்டிருந்த தொழிலாளிகளுக்கு வாக்குரிமை இல்லாததால், அவர்கள் அரசாங்கங்கள்மீது தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, அவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே, அரசாங்கங்கள் அத்தகைய மனப்பான்மையைக் கொண்டிருந்தன. வேறு முறையில் சொல்லவேண்டுமெனில், பொருளாதார வளர்ச்சி குறித்த பிரச்சினையைச் சமாளித்துக் கொண்டிருந்த சமூகத்தில், பொதுவாக வருணிக்கப்பெற்ற 'ஜனநாயக உரிமை' யாகிய அடிப்படை உரிமைகள் நடைமுறையில் இல்லை.

இவ்வாறாக, இங்கிலாந்தில் 1799ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் விரைவாக நிறைவேற்றப்பட்டு, 24 நாள்களுக்குப் பின்னர் அரச ஆணை பெற்று அமலுக்கு வந்த தொழிலாளர் இணைவுச்சட்டமானது (workmen's combination bill), கூலியுயர்வு பற்றியோ, வேலைநேரக் குறைப்புப் பற்றியோ, சிலபேரை நீக்கி விட்டு, முதலாளிகள் வேறு சிலரை வேலைக்கமர்த்துவது

பற்றியோ, அல்லது ஏதேனும் சட்டதிட்டங்கள் கொண்டு வருவதுபற்றியோ சிந்தித்து முடிவு எடுக்கவேண்டித் தொழிலாளர்கள் ஒன்றுசேரக்கூடாது என்று தடுத்தது. இச் சட்டத்தின்கீழ்க் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஜூரிமூலம் நீதி வழங்குவது மறுக்கப்பட்டது; ஆளும் வர்க்கத்தினரிடமிருந்து மரபுப்படி தேர்ந்தெடுக்கப்பெற்ற அமைதி காக்கும் நீதிபதிகளின் (Justice of the Peace) தயவிலே அவர்கள் இருந்தனர். அமெரிக்காவிலும் நிலைமை மோசமாகத்தான் இருந்தது. 'வர்த்தகத்திற்கு எதிராக எழுந்த சதிக்கிடங்குகளாகத் தொழிலாளர் சங்கங்கள் குற்றம் சாட்டப்பட்டன. சங்கங்களுக்கு எதிராக நீதிமன்றங்களும் சதிக் கோட்பாட்டினைப் பயன்படுத்தியமை, 19ஆம் நூற்றாண்டின் பெரும் பகுதி முழுதும் பெருஞ் சர்ச்சையைக் கிளப்பிவிட்டது. சங்கங்களும் கொஞ்சங் 'கொஞ்சமாகவே சட்டத்தின் அனுமதி பெற்றன என்பது உண்மைதான். ஆனால், தங்களுடைய இலட்சியங்களை நிறைவேற்றத் தொழிலாளர்கள் கையாண்ட வேலைநிறுத்தங்கள், பகிஷ்காரங்கள், ஏனைய வழிமுறைகள் ஆகியவையனைத்தும் நீதிமன்றங்களில் பல்லாண்டுகளுக்குச் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டிய காரியங்களாக இருந்தன.

எனவே, அரசாங்கத்தைத் தங்கள் பக்கம் வசப்படுத்திக் கொள்வதற்காக அரசியல் உரிமைகள் பெறவேண்டும் என உணர்ந்து, தொழிலாளர்கள் அதற்காக முனைந்தனர். ஐக்கிய அமெரிக்காவில், தொழிலாளர்கள் வாக்குரிமை பெற்று, அரசியலில் கொஞ்சம் நுழைந்தனர்; ஆனால், வலுவான சங்க அமைப்பு இல்லாததாலும், ஒரு சார்புக் கொள்கை வெறியூட்டும் தலைமையின் காரணமாகவும், அமெரிக்கத் தொழிலாளர்கள் தொழில்துறையின் தவறுகளைக் களைய அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்த முடியவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பிறகுதான், அமெரிக்காவின் தொழிற் சங்கங்கள் உண்மையில் சுதந்திரமாகச் செயலில் ஈடுபட்டன. 'வர்த்தகத்தைத் தடுக்கிறது என்ற காரணத்தைக் காட்டி, சங்கங்களைக் குற்றம் சாட்டி, தண்டிப்பதிலிருந்து விடுவிக்கும்' ஓர் விதி கிளேடன் டிரஸ்ட் மறுப்புச் சட்டத்தில் (Clayton Anti-Trust Act) இடம் பெற்றது. தேசிய யுத்தத் தொழிலாளர் போர்டானது (National War Labour Board), தொழிலாளர்களுக்குச் சங்கம் அமைக்கும் உரிமை உண்டு எனப் பிரகடனப்படுத்தியது; தாங்களே தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள்மூலம் முதலாளிகளுடன் கூட்டு பேரம் செய்யத் தொழிலாளர்களைத் தூண்டியது. கிரேட் பிரிட்டனில் தொழிலாளர்கள் முதலில்

அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதில் நாட்டம் செலுத்தினர். அநேகக் கிளர்ச்சிகளுக்குப் பிறகு, 1867-ல் நகரப் பகுதிகளிலும் 1884-ல் கிராமப் பகுதிகளிலும் அவர்கள் வாக்குரிமை பெற்றனர். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியமைக்கும் தொழில்துறை சார்ந்த உரிமைகளைப் பெற்றமைக்கும் உள்ள முழுமையான தொடர்பினைப்பற்றி டாயின்பீ (Toynbee) பின்வரும் சொற்களில் விளக்குகிருர் :

"வாக்குரிமையை அடைந்தவுடன், தொழிலாளர்கள் முக்கிய அந்தஸ்தை அடைந்துவிட்டனர். நீங்கள் விளைவுகளை மட்டுமே குறிக்கவேண்டும். 1871-ல் தொழிற் சங்கங்கள் சட்டபூர்வமாக்கப்பெற்றன. 1875-ல் சதிபற்றிய சட்டம் உடைக்கப்பெற்றது. 'முதலாளி—வேலையாள்' எனும் பழைய சட்டம் அகற்றப்பட்டு, முதலாளியும் வேலையாளும் சம அந்தஸ்து உடையோரே எனும் சட்டம் அமலுக்கு வந்தது. தொழிலாளி அடிமை நிலையிலிருந்து உயர்ந்து முன்னேறி, உச்ச நிலைக்கு இறுதியாக வந்து, தன்னுடைய முதலாளியின் அருகேயே சுதந்திர நாட்டின் முழுப் பிரஜையாகப் பெருமிதத்துடன் நிற்கிருன்." [22]

இவ்விரு பெருந் தொழில் மயமான நாடுகளிலும், முதலாளித்துவ ரீதியாகத் தொழில் வளர்ச்சியுற்ற ஜெர்மனி, ஃபிரான்சு, ஜப்பான் போன்ற நாடுகளிலும் பொருளாதார விடுபடு நிலையினை அடைந்த பிறகே சாமானிய மனிதனுக்கு ஜனநாயக உரிமை கிடைத்தது ; அதற்கு முன்னரன்று. ஆக, அரசியற் புரட்சிக்கு முன்னர் தொழிற் புரட்சி ஏற்பட்டது. சுதந்திரமற்ற சமூகச் சூழலிலேயே பொருளாதார வளர்ச்சி துவங்கி, தொழில்மயமாகும் முக்கியக் கட்டத்தை அடைந்தது. ஆக, சுதந்திரத்தினுல் வளர்ச்சிக்கு சவால் ஏற்படவில்லை. வளர்ச்சி போதுமான அளவிற்கு வெகுதூரம் முன்னேறிச் சுதந்திரத்தின் குரலைக் கேட்கத் தொடங்கியவரையில், நிச்சயமாக சுதந்திரத்தினுல் வளர்ச்சிக்கு சவால் ஏற்படவில்லை. இன்றைய தொழில்மயமான மேற்கத்திய நாடுகளில் சுதந்திர சமூகம் நிலவுகிறது என்ற உண்மையும், அந் நாடுகளின் மக்கள் நாம் முதலில் குறிப்பிட்டுள்ள 'ஜனநாயக உரிமை'யினை நன்கு அனுபவிக்கிருர்கள் என்ற உண்மையும் அந் நாடுகளில், பொருளாதார விடுபடு நிலையுடன் தொடர்பற்ற பொருளாதார வளர்ச்சியின் முக்கியக் கட்டங்களையெலாம் கடந்தபிறகே அந்த மகிழ்ச்சியான நிலை ஏற்பட்டது என்ற சரித்திர பூர்வமான உண்மையை நம் கண்கள் மறைத்துவிடக்கூடாது.

[22] தொழிற் புரட்சி, பக்கம், 212-3.

தொழில்மயமாதலின் முக்கியக் கட்டங்கள், 'ஜனநாயக உரிமை' இல்லாமையுடன் இணைக்கப்பட்டுள்ளதைப் பொறுத்தவரையில், கம்யூனிஸ்ட் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிபற்றிய வரலாறும் வேறுபட்டதாகத் தோன்றவில்லை. பொருளாதார வளர்ச்சியில் உயர்ந்த நிலையை இன்று அடைந்து, அதில் இன்னும் உறுதியுடன் முன்னேறிச் செல்வதாகத் தோன்றும் சோவியத் யூனியன் ஓர் தொழிலாளர் நாடு எனப் பறைசாற்றப்படுகிறது. சோவியத் யூனியன் ஓர் சமதர்மப் பொருளாதாரத்தை உருவாக்கியுள்ளது என்பதில் ஐயமில்லை. அதே வேளையில், சோவியத் யூனியனின் முதல் குவிப்பு சுரண்டலின் அடிப்படையில் அமைந்திருந்தது; அதனுடைய தொழிலாளர்களும் விவசாயிகளும் இக் காரியத்தில் கட்டாயப்படுத்தப்பட்டனர்; சுதந்திர சமூகத்தின் சின்னங்களாக நாம் மேற்கோள் எடுத்துள்ள இரண்டு அடிப்படை உரிமைகளையும் மக்களுக்கு வழங்காது முதல் குவிப்பு மேற்கொள்ளப்பட்டது; முதல் குவிப்பின் வெற்றி இவையனைத்தையும் பொறுத்திருந்தது என்பதில் ஐயமில்லை. அண்மைக் காலங்களில் சோவியத் சமூகத்தின் இறுகிய நிலை தளரத் தொடங்கியிருக்கிறது என்பதும், மேற்கத்திய நாடுகள் குறிப்பிடும் உரிமை என்பது அங்கு தலையெடுக்க ஆரம்பித்துள்ளது என்பதும் உண்மையே. தொழில்மயமாதலின் முக்கியக் கட்டங்களையெலாம் கடப்பதற்கு முன்னரல்லாது, கடந்த பின்னரே இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்கும்பொழுது, பொருளாதார விடுபடு கட்டத்திற்கு முந்திய முதலீட்டிற்கும் ஜனநாயக உரிமையின்மைக்கும் உள்ள தொடர்பினைப் பொறுத்தவரையில், முதலாளித்துவத்திற்கும் கம்யூனிசத்திற்கும் உள்ள கொள்கை வேறுபாடு எந்த வித்தியாசத்தையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இறுதி விளைவிலும் இந்த ஒற்றுமை இருக்குமா என்பதை இனிமேல்தான் கவனிக்கவேண்டும்.

நாம் முன்னரே விளக்கியுள்ள ஜனநாயக உரிமையினை முன்னேறியுள்ள மேற்கத்திய நாடுகளெல்லாம் உணர்ந்து கடைப்பிடித்தல் போலவே, சோவியத் யூனியனும் இனிமேல் கடைப்பிடிக்குமா என்பதை இனிமேல்தான் நாம் கவனிக்க வேண்டும். சுதந்திரமற்ற சமூகத்தில் தொழில்மயமாதலின் இணைப்பினை சீனாவில் இன்று நிகழும் நிகழ்ச்சிகளில் தெளிவாக நாம் கண்டுணர முடியும். ஆக, முதலாளித்துவ நாடுகளாயினும் சரி, கம்யூனிச நாடுகளாயினும் சரி, கடந்த காலத்திலும் சரி, நிகழ்காலத்திலும் சரி, வளர்ச்சிக்கு முந்திய நிலையிலிருந்து

வளர்ச்சி நிலைக்குப் பொருளாதாரம் முன்னேறும் நிலையுடன் தொடர்புள்ள தொழில்மயமாதலின் முக்கியக் கட்டங்கள், ஜனநாயக உரிமை இல்லாத நிலையுடன் அநேகமாகத் தவிர்க்க முடியாத அளவிற்கு இணைந்திருந்தன.

இந்தியாவில்தான் திடுக்கிடும் மாற்றத்தை நாம் காண்கிறோம். இங்கு அரசியற் புரட்சி முன்னரே நிகழ்ந்து விட்டது. ஜனநாயக உரிமை நடைமுறையில் முழுதும் உள்ளது. ஆனால், தொழிற் புரட்சி இன்னும் கருநிலையிலேயே இருக்கிறது; அது விடுபடு நிலையை இன்னும் அடையவில்லை. இந்தியாவில் அரசியல், பொருளாதார வரலாறு பின்னோக்கிச் செல்வதுபோலத் தோன்றுகிறது. இங்கு உரிமைக்கும் வளர்ச்சிக்கும் இடையில் சமரசம் ஏற்பட முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. சுதந்திர சமூக அமைப்பில் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தி, விடுபடு கட்டத்தினை அடைவதற்கு இந்தியா மேற்கொண்டுள்ள நடப்பு முயற்சிகளுக்கு சவாலிடப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாக, ஓர் குறிப்பிட்ட அரசியலமைப்பின்கீழ்ப் பொருளாதார வளர்ச்சிக்குரிய முயற்சியினை இந்தியா மேற்கொண்டிருப்பது முக்கியத்துவம் உடையது என்பது கருதத் தக்கதாகும். தனக்கெனப் புதிய அரசியலமைப்புச் சட்டத்தினை 1949 நவம்பரில் இந்தியா ஏற்றுக்கொண்டதிலிருந்து, மேற்கு ஐரோப்பிய நாடுகள் கருதும் பொருளில், ஓர் முழுமை நிறைந்த, நடைமுறைக்கேற்ற ஜனநாயகமாக இந்தியா மாறியது. இந்தியாவில் இன்று வயதுவந்தோருக்கெலாம் வாக்குரிமை கிட்டியது; ஏற்கெனவே இரண்டு பொதுத் தேர்தல்களை இந்தியா நடத்திவிட்டது. 1957ஆம் ஆண்டின் துவக்கத்தில் நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில், வாக்குரிமையளித்த மக்கள் எண்ணிக்கை 123 மில்லியன்களுக்கு மேலாகும்.* இவற்றில் பெண் வாக்காளர்கள் மட்டிலுமே 47 மில்லியன்களுக்கு மேலாகும். கிராம வாக்காளர்கள் கிட்டத் தட்ட 117 மில்லியன்களாகும். ஆலைத் தொழிலாளர்கள், ஏழ்மையில் வதங்கும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் முதலானோர் இந்தியாவில் அரசாங்கத் திட்டத்தில் தங்களுடைய செல்வாக்கைப் பிரயோகிக்க முடியும் என்பதனையே இப் புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இவர்கள் வாக்காளரின் மொத்தத் தொகையில் பெரும்பாலானவர்களாக இருப்பதாலும், உண்மையில் வாக்குரிமை அளிப்பவர்களிலும்

* 1962ஆம் ஆண்டின் துவக்கத்தில் நடைபெற்ற மூன்றாவது பொதுத் தேர்தலில் வாக்குரிமையளித்த மக்களின் எண்ணிக்கை 221 மில்லியன்களுக்கு மேலாகும்.

பெரும்பாலானவர்களாக இருப்பதாலும், இவர்களுடைய செல்வாக்கும் ஆதிக்கமும் மிகவும் வலுவானவையாக உள்ளன. மேலும், இந்திய அரசியலில் ஆலைத் தொழிலாளர்கள் முக்கிய இடம் வகிக்கின்றனர். இந்தியாவில் பதிவு செய்யப்பெற்ற தொழிற் சங்கங்களிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 2½ மில்லியன்களாகும். (இந்த எண்ணிக்கையை ஐக்கிய அமெரிக்காவில் 1930ஆம் ஆண்டிலிருந்த தொழிற் சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கையாகிய 3 மில்லியன்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க.) இத் தொழிலாளர்கள் சங்க ரீதியாகக் கட்டுப்பட்டிருப்பதனால் மாத்திரமன்றி, இவர்களில் பலர் காங்கிரஸ் கட்சியிலும் பணியாற்றி நாட்டு விடுதலைக்குச் சிறப்பாகப் பாடுபட்டிருப்பதனாலும், இவர்களுடைய அரசியல் செல்வாக்கு கணிசமான அளவிற்கு இருக்கிறது. எனவே, இவர்களுக்கு இன்று மத்திய அரசாங்கத்திலும் மாநில அரசாங்கங்களிலும் ஆதிக்கம் இருக்கிறது.

மத்திய அரசின் தொழில் மந்திரி தீவிரமான தொழிற் சங்கவாதி. ஒவ்வொரு மாநில அமைச்சரவையிலும் ஓர் தொழிற்சங்கவாதி இடம் பெற்றுள்ளார். எனவே, உலகிலேயே மிகவும் தீவிரமான தொழிற் சட்டங்களில் சில இந்தியாவில் நடைமுறையில் உள்ளன. வயதுவந்தோரின் வேலை நேரம் வாரத்திற்கு 48 மணிகளாகக் கட்டுப்படுத்தப்பெற்றது. பெண்களையும் குழந்தைகளையும் வேலைக்கமர்த்துவதில் கடுமையான விதிகளும் கட்டுப்பாடுகளும் போடப்பட்டன. உண்மையில், அரசியலமைப்புச் சட்டத்தின் 24ஆவது விதிப்படி, 'பதினான்கு வயதிற்குக் குறைந்த குழந்தைகளைத் தொழிற்சாலையிலோ அல்லது சுரங்கத்திலோ அல்லது வேறு ஏதேனும் இடரார்ந்த தொழிலிலோ வேலைக்கமர்த்தக்கூடாது.' பதினெட்டு வயதிற்கும் குறைந்த இளைஞர்களை உடல்நலத் தகுதி குறித்து மருத்துவ இசைவு இருந்தாலொழிய, தொழிற்சாலைகளிலோ, சுரங்கங்களிலோ அல்லது எஸ்டேட் தோட்டங்களிலோ வேலைக்கமர்த்தக்கூடாது; மேலும், வாரத்திற்கு 40 மணிநேரமே அவர்களை வேலையில் ஈடுபடுத்தலாம். ஆலைத் தொழிலாளர்களனைவருக்கும் வாரத்தில் ஒரு நாள் ஓய்வு தரவேண்டும்; ஆண்டொன்றுக்குச் சம்பளத்துடன் இருபது நாள்கள் ஓய்வு தரவேண்டும்; பெண்களுக்கு இவ் வசதிகளுடன் சம்பளத்தையும் சேர்த்துப் பிள்ளைப்பேற்று ஓய்வும் தரவேண்டும். விவசாயத்தையும் சேர்த்துக் குறிப்பிட்ட தொழிற்சாலைகளில் வேலைபார்க்கும் பாட்டாளிகளுக்குக் குறைந்தபட்ச கூலிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தொழிலா

ளர்களைத் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கிவைத்திருக்கும் காலத்திலோ அல்லது வேலைகுறைப்புச் செய்யும்பொழுதோ பாதிக்கப்படும் பாட்டாளிகளுக்கு நஷ்டஈடு தரவேண்டும். சுகாதார இன்ஷூரன்ஸ், பிராவிடென்ட் நிதிகள், பொழுது போக்கு வசதிகள், அரசாங்க உதவித்தொகையினால் தொழிலாளர் குடியிருப்பு வசதிகள் செய்தல் முதலான பல்வேறு சேமநல வசதிகள் செய்துதரப்பட்டன. விவகாரங்களில் சமரசம் செய்துவைக்கவும், அவற்றைப்பற்றி நீதிமன்றங்களில் வழக்காடித் தீர்ப்பு பெறவும் வழிவகைகள் செய்யப்பட்டன. தொழிற்சாலையில் முதலீடு செய்த மூலதனத்திற்குரிய ஊதியப் பங்கினைக் கழித்தபிறகு மிச்சமிருக்கும் இலாபங்களிலிருந்து ஆலைத் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கவேண்டும் என்று உண்மையில் தொழிலாளர்களுக்குரிய நடுவர் நீதி மன்றங்கள் ஆணையிட முடியும்; ஆணையிடுகின்றன. தொழிலாளியின் நிலைபற்றி முதலாளி தரும் மிக உயர்ந்த விமரிசனம் கீழே தரப்படுகிறது:

'நமது பாட்டாளிகளின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும். நாட்டின் தலா வருமான வீதாசாரத்தையும் மீறி, இயற்கைக்குப் புறம்பான உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை மிகவும் சிறிய எண்ணிக்கையுள்ள ஆலைத் தொழிலாளருக்கு மட்டும் வழங்கும் நமது முயற்சியில் சமூக நீதியோ, அறிவார்ந்த பொருளியல் தத்துவமோ இல்லை. எனவே, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக் கட்டத்தின் பின்னணிக்கு இயைந்தவாறு தொழிற் சட்டங்களை இயற்றவேண்டியது அவசியமாகும்.'

இதே முறையினை முதலாளிகளின் வருமானங்களிலும், மேற்பார்வை செய்யும் உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களிலும் கடைப்பிடித்துப் பார்க்கட்டுமே என்று தொழிலாளர்கள் நறுக்கென்று பதிலளிக்கலாம். எது எப்படி இருந்த போதிலும், மற்ற நாடுகளின் தொழிலாளர்கள், பொருளாதார வரலாற்றில், வளர்ச்சியின் துவக்ககால கட்டத்தில் அனுபவித்ததைவிட இந்தியாவில் தொழிலாளர்கள் உரிமையினையும், நல்ல வேலை நியதிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, உயர்ந்த கூலிகளையும் நல்லவண்ணம் அனுபவிக்கின்றனர்.

தேக்க நிலையிலிருந்து வளர்ச்சி நிலைக்கு நவீன ஜனநாயக சமூகங்கள் முன்னேறியபிறகு, அச் சமூகங்களின் சாமானிய மனிதன் அடைந்த ஜனநாயக உரிமைகளை, இந்தியாவிலுள்ள சாமானிய மனிதன் இன்று அனுபவித்துக்கொண்டிருக்கும் பொழுது, இந்தியாவின் பொருளாதார நிலை பொருளாதார விடுபடு நிலையை (economic take-off) இன்னும் அடையவில்லை.

இங்குதான் நவீன இந்தியாவின் பொருளாதாரப் பிரச்சினையைக் கவனிக்கவேண்டும்; தன்னைத் தானே காத்துக்கொண்டு தனக்குத் தானே வேககதியில் செல்லும் வளர்ச்சிக் கட்டத்தினை இந்தியப் பொருளாதாரம் அடைவதற்குப் போதுமான சேமிப்பு வீதத்தையும் முதலீட்டு வீதத்தையும் எவ்வாறு உயர்த்துவது என்பதுபற்றிய பிரச்சினையைக் கவனிக்க வேண்டும். இன்னும் இருபது ஆண்டுகளில் இது விரைந்து நிறைவேற்றப்படவேண்டும்; ஏனெனில், மக்கள்தொகை ஆண்டொன்றுக்கு 1.8 சதவீதத்தில் பெருகிக்கொண்டிருக்கிறது; மேலும், பொருளாதார வளர்ச்சி என்பது காலத்திற்கு எதிராக நிகழும் பந்தயமாக உள்ளது.*

இதனைச் சமாளிக்கப் பொருளாதாரத் திட்டமிடுதலை இந்திய அரசு மேற்கொண்டுள்ளது. தங்களுடைய திட்டக் குழுவின் உதவியுடன், தேசிய வருமானத்தைச் சுமார் 18 ஆண்டுகளில் இரண்டு மடங்கு பெருக்குவதற்கும், தலா வருமானத்தைச் சுமார் 24 ஆண்டுகளில் இரண்டு மடங்கு பெருக்குவதற்கும் அரசு இலக்கிட்டிருக்கிறது. இதற்குப் பெரும் பொது முதலீட்டுத் திட்டம் தேவைப்படுகிறது. முக்கியமாகப் பொருளாதார மொத்தச் செலவுகளைச் சார்ந்த நீர்ப்பாசனம், மின்சாரம், போக்குவரத்து, எரிபொருள் குறித்துப் பொது முதலீட்டுத் திட்டம் தேவைப்படுகிறது. மேலும், இரும்பு, எஃகு, சிமென்ட், இரசாயனப் பொருள்கள், என்ஜினியரிங் முதலானவற்றிலும் பொது முதலீட்டுத் திட்டம் தேவைப்படுகிறது. அதேநேரத்தில், தனியார்துறை முதலீட்டிற்கும் ஆதரவு தரவேண்டும். சுமார் 25 ஆண்டுகளில், பொதுத் துறையிலும் தனியார்துறையிலும் மேற்கொண்டுள்ள முதலீட்டிற்குத் திட்டமிடப்பட்டுள்ள மொத்தச் செலவீடு 550 பில்லியன் (billion) ரூபாய்களாகும். இது போதாது என்பது உறுதியே. தலா வருமானத்தை இரண்டு மடங்கு பெருக்க வேண்டுமெனில், இத் தொகையினை இன்னும் 10 அல்லது 20 சதவீதம் உயர்த்தவேண்டும். 1950ஆம் ஆண்டு சேமிப்பு வீதம் ஐந்து சதவீதமாக இருப்பதிலிருந்து, 1975-ல் சுமார் 17 சதவீதத்திற்கு உயர்த்தவேண்டும் என்ற கருத்தும் இதில் தொக்கி நிற்கிறது. பொதுத்துறையில் முதலீட்டின் பெரும் பகுதியை, அதாவது, சுமார் 60 சதவீதம் முதல் 70 சதவீதம் உள்ள பகுதியை மேற்கொள்ளவேண்டியிருப்பதால், இதற்கு

*1961ஆம் ஆண்டில் எடுக்கப்பெற்ற ஜனத்தொகைக் கணக்கெடுப்பு, நிலைமை மிகவும் மோசமாகியுள்ளதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. ஜனத்தொகைக் கணக்கெடுப்பின் பத்தாண்டுகளாகிய 1951—1961-ல், ஆண்டொன்றுக்கு 2.2 சதவீதத்தில் மக்கள்தொகை பெருகியுள்ளது.

வேண்டிய வளங்களைப் பொதுமக்களிடமிருந்து வரிகளாகவும், கடன்களாகவும், இன்னும் ஓரளவிற்கு விலைவாசிகளின் உயர்வின் மூலமாகவும் பெறுதல் தேவையாகிறது. இவ் வளங் களின் பெரும்பகுதி சாதாரணப் பொதுமக்களிடமிருந்து கிடைக்கவேண்டும்; ஆனால், அவர்கள் ஏழைகளாக உள்ளனர். முழுமை அளவில், அவர்களுக்குப் பணம் செலுத்தும் சக்தி கிடையாது; அவர்களுடைய வருமானத்தில் ஏற்படும் எந்த அதிகரிப்பினையும் துய்க்கவே அவர்கள் இயற்கையாக விரும்பு கின்றனர். அவர்களுக்கு வாக்குரிமையும், தொழிற் சங்க உரிமைகளும் அமைப்பும் உள்ளன. எனவே, அவர்களுடைய நுகர்ச்சி விருப்பத்தை அவர்கள் உணர்ந்துகொள்ள முடிகிறது. அவர்கள் நுகர்ச்சி நாட்டத்தை உணர்ந்துகொண்டால், பொரு ளாதார வளர்ச்சிக்கு வேண்டிய முதலீட்டு நிதியாக்கத்திற்குத் தேவையான மட்டத்திற்குச் சேமிப்பு வீதத்தினை உயர்த்த முடியாது. எனவேதான், இந்தியாவின் வளர்ச்சிப் பிரச்சினை பெரிதாகவும் குழப்பமூட்டுவதாகவும் உள்ளது.

இதுவரையில் ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் நிறை வேற்றியுள்ளோம். இப்பொழுது இரண்டாவது திட்டத்தின் நான்காவது ஆண்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 1961ஆம் ஆண்டு மார்ச்சுடன் முடியும் இரண்டு திட்டங் களிலும் சேர்த்து 9,100 கோடி ரூபாய் முதலீடு செய்யப் பட்டுள்ளது; இவற்றில் பொதுத்துறையில் மட்டும் சுமார் 5,000 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதனுடன், கல்வி, சுகாதாரம் போன்ற சமூகப் பணிகளில் அரசாங்கம் இத் திட்ட காலத்தில் ரூ. 1,400 கோடி செலவு செய்யவேண்டி யிருந்தது. எனவே, மொத்தத்தில், அரசாங்கம் 6,400 கோடி ரூபாய் திரட்டவேண்டியிருந்தது. வரிமூலமும் கடன்கள் மூலமும் 3,300 கோடி ரூபாயும், அயல்நாட்டுதவிமூலம் 1,300 கோடி ரூபாயும், பற்றுக்குறை நிதியாக்கம் அல்லது பண வீக்கம்*மூலம் 1,800 கோடி ரூபாயும் திரட்ட வழி செய்யப்

*இந்தக் கட்டுரையினை எழுதி முடிக்கும் நேரம்வரையில் கிடைத் துள்ள புள்ளிவிவரத்தின்படி, 1961ஆம் ஆண்டு மார்ச்சுடன் முடியும் இரண்டு திட்டங்களிலும் சேர்த்து சுமார் 10,100 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் பொதுத்துறையில் மட்டும் சுமார் 5,210 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதனுடன், கல்வி, சுகா தாரம் போன்ற வளர்ச்சி சார்ந்த சமூகப் பணிகளில் அரசாங்கம் இத் திட்ட காலத்தில் ரூ. 1,350 கோடி செலவு செய்யவேண்டியிருந்தது. எனவே, மொத்தத்தில், அரசாங்கம் இக் காலத்தில் சுமார் 6,560 கோடி ரூபாய் திரட்டவேண்டியுள்ளது. வரிகள், கடன்கள்மூலம் 3,802 கோடி ரூபாயும், அயல்நாட்டுதவிமூலம் 1,278 கோடி ரூபாயும், பற்றுக்குறை நிதியாக்கம் அல்லது பணவீக்கம்மூலம் 1,480 கோடி ரூபாயும் திரட்ட வழி செய்யப்பட்டது.

பட்டது. இதில் மனவுலைவு தரக்கூடிய அம்சம் எதுவெனில், திட்டத்தை நிறைவேற்றத் தேவைப்படும் நிதியில் 20 சதவீதத் திற்குமேல் வெளிநாட்டிலிருந்து வரவேண்டும் என்பதும், ஏறத்தாழ 30 சதவீதம் பணவீக்கத்தின்மூலம் வரவேண்டும் என்பதும், மேலும் முதல் திட்டத்தைவிட இரண்டாவது திட்டத்தில் முழுதும் விரும்பத்தகாத இவ்விரண்டு நிதி திரட்டு வழிகளின் பங்கு கூடுதலாக இருந்தது என்பதுமேயாகும். வேறு மொழியில் கூறவேண்டுமெனில், வருமானப் பெருக்கம் ஏற்பட்டபோதிலுங்கூட, திட்டத்தின் அளவு பெருகியதைத் தொடர்ந்து திட்ட முயற்சியை நிறைவேற்ற உள்நாட்டில் திரட்டிய நிதி மிகவும் குறைந்த வீதாசாரத்தில் இருந்தது. மூன்றாவது திட்டம் இரண்டாவது திட்டத்தைவிடப் பெரிதாக வும், நான்காவது திட்டம் மூன்றாவதைவிடப் பெரிதாகவும், ஐந்தாவது நான்காவதைவிடப் பெரிதாகவும் இருக்கப்போகும் உண்மையினை நெஞ்சில் நிறுத்திப் பார்க்கும்பொழுது, அரசியல் ஜனநாயகச் சூழமைவில் பொருளாதார வளர்ச்சி வெற்றி அடையவேண்டும் என்பதில் நாட்டமுள்ள அனைவரும் இரண் டாவது திட்டத்தின் அனுபவத்தின் போக்கினைக் கண்டு வேதனையடைந்துள்ளனர்.

போதுமான அளவிற்கு உள்நாட்டு மூலவளங்களைப் பெருக்க முடியாமையின் காரணமாக எழும் தொல்லையினின்று விடுபட இரண்டு வழிகளைத் திறனுய்வாளர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். தனி நபர் வருமானங்களிலுள்ள உபரிக் கூறுகளனைத்தையும் கைப்பற்றி, தனி நபர் வாரத்தினையும் இலாபங்களையும் அபகரித்து, பொருளாதாரத்தையே சமதர்ம மயமாக்குதலே ஒரு வழியாகும். இதற்குப் பொருள் என்ன வெனில், இந்தியாவில் கம்யூனிசத்தைப் புகுத்தி, ஜனநாயகத் தைக் கைவிடுதலாகும். மற்றொரு வழி எதுவெனில், தனியார் துறைக்குப் பெரு வருமானங்களை அனுமதித்து, தூண்டு தல்களை வழங்கி, தொழிலாளர் கூலிகளைக் குறைத்து, விவசாயி களைச் சுரண்டி, க்ஷேமநலன் பேணும் அரசாங்கச் செலவினைக் குறைப்பதாகும். இது எதனைக் குறிக்குமெனில், பத்தொன் பதாம் நூற்றாண்டின் துவக்க காலத்து முதலாளித்துவத்தை இந்தியாவில் இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் நுழைக்கும் விளைவினை உண்டாக்குவதைக் குறிக்கும், சாமானிய மனிதனின் வாக்குரிமையளிக்கும் உரிமையினையும். நகரத்துத் தொழிலாளியும் கிராமத்துத் தொழிலாளியும் பெற்றுள்ள சங்கரீதியாக ஒன்று சேரும் உரிமையினையும் கொண்ட நமது ஜனநாயக உரிமைகளை இழக்காமல் இதனை

நிறைவேற்ற முடியாது. வேறு மொழியில் உரைப்பின், ஜன நாயகத்தைக் கைவிடுதலேயே இதுவும் குறிக்கும். எனவே, இவ்விரு தீர்வுகளிலும் ஜனநாயகத்தினையும் ஜனநாயக உரிமையினையும் கைவிடுதலே நோக்கி நிற்கிறது. இருந்தபோதிலும், இவ்விரு தீர்வுகளும் கொள்கையளவிலும் சமூக உட்கிடையளவிலும் இரு வேறு துருவங்களாகப் பிரிந்து நிற்கின்றன. இவையிரண்டில் எந்தத் தீர்வினையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பது தெளிவே.

அப்படியானல் இதற்கு வழியென்ன? பொருளாதாரக் கருத்தில், துய்ப்பை நிறுத்திக்கொண்டு சேமிக்கும்படி சமூகத்தைக் கட்டாயப்படுத்துதலைக் குறிக்கும் 'சுரண்ட'லைத் தவிர்க்க முடியாது. ஆனாலும், அது தன்னிச்சையாக நிகழ வேண்டும். தனி நபர் பொருளாதார சுபிட்சத்திற்கும், அது போலவே தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கும் அடிப்படையாகத் தற்சார்பு (self-reliance) அல்லது (நீங்கள் விரும்பினால்) தற்சுரண்டல் (self-exploitation) அமைந்திருக்கிறது. ஜனநாயக சமூகத்தில் தேசிய அளவில் மேற்கொள்ளப்படும் தற்சுரண்டல் தன்னிச்சையாக நிகழ வேண்டும். பொதுமக்களை இந்தக் காரியத்திற்காகக் கட்டாயப்படுத்தக்கூடாதென்றால், அவர்களைத் தூண்டிவிட வேண்டும். இதற்காகவேண்டிச் செயல் நோக்குடைய தக்க நடவடிக்கையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

பொதுமக்களைப் பொறுத்தவரையில், சடப்பொருள் சார்ந்த அடிப்படையிலேயே தூண்டுதல் நிகழவேண்டும் என்பதனை மறுக்க முடியாது. எதிர்காலத்தைப் பொறுத்தே சடப்பொருள் சார்ந்த செயல்நோக்குப் பெரும்பாலும் அமைகிறது என்பதும் தெளிவே. இருந்தபோதிலும், அதே வேளையில், நிகழ்காலத்தில் சில சடப்பொருள் சார்ந்த வெகுமதியும் அளிக்கப்பட வேண்டும். உணர்வுபூர்வமான தூண்டுதல், தொல்லையினையும் துன்பத்தையும் உடனடியாகப் பொறுத்துக்கொள்ளவேண்டியபோதிலும்கூட மக்களுக்குத் திருப்தியையும் ஆர்வத்தையும் ஊட்டும் கொள்கை முதலான சடப்பொருள் சாராத அளவுகளுடன் செயல்நோக்கம் இணைக்கப்பட வேண்டியது அவசியமேயாகும். பொதுமக்களுக்கு ஆர்வமூட்டவேண்டுமெனில், நிகழ்காலத்தில் அவர்கள் செய்யும் தியாகங்களுக்கு ஈடாக எதிர்கால சமூகத்தைப்பற்றித் தெளிவான, ஐயந்திரிபற்ற ஓர் உருவம் அவர்களுடைய பார்வைக்குப் புலனாக வேண்டும். இத்தகைய சமூகத்தில் பொதுமக்களே மிக உயர்ந்த பயன்களை அடைபவர்களாக

இருக்கவேண்டும். இச் சமூகத்தில் வேலைநிறைவும், தக்க வாழ்க்கைத்தரமும், பொருளாதார சமவாய்ப்பும், சமநீதியும், தங்களுடைய குழந்தைகளின் நல்வாழ்விற்காகச் சமூகப் பொருளாதார ஏணியில் ஏறிச் செல்லும் வாய்ப்பும் இருக்கவேண்டும். பொதுமக்களை ஊக்குவித்து, இந்தியாவின் பாரம்பரிய மதிப்புகளையும் அது புதிதாக ஏற்றுக்கொண்டுள்ள ஜனநாயக உரிமைகளையும் கொண்ட புத்தம் புதிய வாழ்க்கை முறையினை அவர்களாகவே அமைத்துக்கொள்ள அவர்களே முயற்சி செய்யத் தூண்டுவதும், மற்றச் சுதந்திர சமூகங்களிலுள்ள அவர்களுடைய சகோதரர்கள் அனுபவிக்கும் சடப்பொருள்சார் வசதிகளைக் கொண்ட புதுவாழ்க்கை முறையினை அவர்களே அமைத்துக்கொள்ள முயற்சிசெய்யத் தூண்டுவதும் ஜனநாயக சோஷலிசம் எனும் கொள்கையேயாகும். தேக்க நிலையிலிருந்து வளர்ச்சி நிலைக்கு முன்னேறுவதில் பொதுமக்களை :நல்லுணர்வுடனும் கட்டுப்பாட்டுடனும் கலந்துகொள்ளச் செய்வதற்கு இதைத் தவிர வேறு வழியில்லை என்பதில் எனக்கு எள்ளளவு சந்தேகமும் இல்லை. என்றாலும், பொதுமக்கள் கடின உழைப்பையும், மாற்றமிலாக் கட்டுப்பாட்டினையும், சிக்கன வாழ்க்கையினையும் மேற்கொண்டாலொழிய இந்த நவீன சமுதாயத்தை உருவாக்கமுடியாது என்பதை அரசியல் தலைமை தெளிவுறுத்தவேண்டும். வேறு மொழியில் உரைப்பின், எதிர்காலத்தில்தான் பயன்கள் கிட்டும். எனவே, நிகழ்காலத்தில் அவர்கள் மிகவும் கடினமாக உழைக்கவேண்டும்; நிறைய சேமிப்புகளை உண்டாக்க வேண்டும்; இக் காரியங்களில் அவர்கள் ஆர்வமுடன் ஈடுபடவேண்டும். தங்கள் இனத்தைப் பாதுகாத்துக்கொள்ளவே போர்க்காலத்தில் இவர்கள் இவற்றை நிறைவேற்றமுடியுமெனில், சமாதான காலத்தில் தங்களுடைய சொந்த சுபீட்சத்திற்காக இவர்கள் இவற்றை ஏன் செய்யக்கூடாது என்பது எனக்குப் புரியவில்லை.

எனினும், பொதுமக்கள் கலந்துகொள்ளுதல் மாத்திரம் பொருளாதார வளர்ச்சிக்குப் போதுமானதன்று. பொதுமக்கள் கலந்துகொள்வதால் சேமிப்புகள் அதிகரிக்கலாம். ஆனால், முதலீட்டுப் பெருக்கம், நவீனத் தொழில் நுண்ணியலைப் புகுத்துதல், உற்பத்தியைத் திறமையுடன் நிருவகித்தல் முதலானவைகளும் அவசியமாகும். இக் காரியத்தில் உயர்வர்க்கங்களும் (வேறு பொருத்தமான சொல் கிடைக்காததால் 'உயர்வர்க்கங்கள்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது) தீவிரமாகக் கலந்துகொள்ள வேண்டும். தொழில் துணி

வோர்கள், மானேஜர்கள், என்ஜினியர்கள், தொழில் நுட்ப விஞ்ஞர்கள், பாங்கு நிருவாகிகள், டாக்டர்கள், ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஆகிய அனைவரும் பொருளாதார வளர்ச்சிப் படிமுறையில் மிகவும் முக்கியமான பங்கு வகிக்கின்றனர். பெரும்பாலான மக்களுடைய வருமானங்களுக்கும் வாழ்க்கைத் தரத்திற்கும் மிகவும் வேறுபாடான உயர் தனிநபர் வருமானங்களையும் உயர்வாழ்க்கைத் தரத்தையும் கொண்ட தூண்டுதல்களை இவர்கள் விரும்பினால், நிலைமை அரசியல்ரீதியாக மிகவும் மோசமாகிவிடும். ஏனெனில், பொதுமக்களும் துய்ப்புக் குறைப்புகளை எதிர்ப்பார்கள்; துய்ப்பில் செலவழிக்கத் தேவையான வருமானத்தைப் பெருக்குங்கள் எனக் கோருவர். ஜனநாயகம் தங்களுக்கு அளித்திருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தித் தங்களுடைய ஆசையைப் பூர்த்திசெய்துகொள்ளப் பொதுமக்கள் முனைவர். எனவேதான், இந்தியாவில் இன்று நிலவும் கலப்புப் பொருளாதாரம் குறைபாடுடையதாக உள்ளது. இக் கலப்புப் பொருளாதாரத்தில், உயர்வர்க்கத்தினருக்குரிய தூண்டுதல்கள் பொதுமக்களுக்குரிய தூண்டுதல்களைக் குறைப்பதாகவும், பொதுமக்களுக்குரிய தூண்டுதல்கள் உயர்வர்க்கத்தினருக்குரிய தூண்டுதல்களைக் குறைப்பதாகவும் நிலைமை சிக்கல் நிறைந்ததாக உள்ளது.

தேக்க நிலைக்கும் வளர்ச்சி நிலைக்கும் இடைப்பட்ட கட்டத்தில் இருக்கும்வரையில் இக் குழப்பநிலை தொடர்ந்திருக்கும். பொருளாதார விடுபடு நிலையை அடைந்தவுடன் நிலைமையில் முன்னேற்றம் ஏற்படுகிறது. எனவே, இயல்பான தூண்டுதல்கள் கட்டுப்பாடு ஏதுமின்றி இயங்க அனுமதிக்கலாம். இதற்கிடையில், தாங்கள் நியாயம் என்று கருதும் ஊதியத்தினைப் பெறுமலேயே உயர்வர்க்கத்தினர் உழைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்களைப் பொறுத்தவரையிலுங்கூட, கடின உழைப்பும் தியாகமும் தேவை; மேலும், துன்பத்தை ஏற்றுக்கொள்ளுதலும், நிறைய சேமிப்புச் செய்தலும், குறைந்த வருமானத்தைப் பெறுதலும் தேவை; எனினும், முழுமையான அளவில், உயர்வர்க்கத்தினர் பொதுமக்களைவிட நன்னிலையிலேயே வாழ்வர். இக் காரியங்களுக்காக அதிகார வர்க்கத்தின் வன்முறைக்கு அடங்கித் தியாகங்களை ஏற்காது, விருப்பத்துடன் ஏற்கவேண்டுமெனில், உயர்வர்க்கத்தினரிடத்திலும் இலட்சியம் வேண்டும். இந்த இலட்சியமானது தொழிலாளரிடம் இருக்கும் வெறும் சோஷலிச ஜனநாயகம்மட்டுமன்று; உயர்வர்க்கத்தினர் ஜன

நாயகத்தைக் கட்டிக்காக்கவேண்டும்; தங்களுடைய உயர்ந்த திறமைகளையும், இந்தியப் பாரம்பரிய மதிப்புகள் தங்களுக்கு வழங்கியுள்ள அந்தஸ்தினையும் பயன்படுத்தித் தங்களுக்குரிய கடமைகளை நிறைவேற்ற வேண்டும். அவர்களுடைய உளவியலில் தியாகமும், சேவையும், ஈகையுணர்வும் முக்கிய இடம் வகிக்கவேண்டுமேயன்றி, கவர்தலும், தன்னலமும், எதனையும் தானே அடைய விரும்புதலும் இடம்பெறக்கூடாது. ஜனநாயக சமூகம் விடுபடு கட்டத்தினை அடையவேண்டுமெனில், சேவை மனப்பான்மையுள்ள உயர்தர வர்க்கம் ஒன்று அமையவேண்டும். எனவே, முதலாளித்துவ சமூகங்களில் நிலவும் மதிப்புகளுக்கும் தூண்டுதல்களுக்கும் மாறானவைகளே ஜனநாயக சமூகத்தில் நிலவவேண்டும். இந்திய உயர்தர வர்க்கத்தினர் இச் சவாலை ஏற்றுக் காரியமாற்றுவரா என்பதனைக் காலமே தீர்மானிக்க வேண்டும். ஏதேனும் ஒரு நாடு இதனைச் சாதிக்குமெனில், பாரம்பரிய மதிப்புகளையும், செல்வத்திலும், சடப்பொருள்சார் வசதிகளிலும் அறிவாளிகளுக்கு உள்ள வரலாற்று ரீதியான மனப்பான்மையையும் உடைய இந்தியாவே இதனைச் சாதிக்கும்.

எனினும், இந்தியாவின் முயற்சிகள் மட்டும் போதா. சுதந்திர ஜனநாயக உலகின் ஏனைய பகுதிகள் நமது பொருளாதார வளர்ச்சிக்கு இதுவரையில் உதவியதைவிட இன்னும் அதிகமாக உதவும் முக்கியப் பங்கினை ஏற்கவேண்டும். உண்மையில் துணிவுடன் சிந்திக்கவும், உண்மையில் பெருஞ் செயலில் ஈடுபடவும் அந் நாடுகள் முன்வர வேண்டும். அவை தரும் உதவி இன்னும் அதிகமாக இருக்கவேண்டும்; இன்னும் உரிமையுடன் உதவியினை வழங்கவேண்டும்; இன்னும் இயல்பாக, இன்னும் விரைவாக வழங்கவேண்டும்; இந்தியாவில் முதலாளித்துவ அல்லது அரைகுறைவான முதலாளித்துவ சமூக அமைப்பினை உண்டாக்கும் முயற்சியைமேற்கொள்ளாது, நிபந்தனைகள் ஏதும் விதிக்காது உதவியினை வழங்கவேண்டும். சுதந்திர ஜனநாயக உலகு இதனை நிறைவேற்றுமா? உண்மையில் அது மேற்கத்திய உலகமாகும். இனம், நிறம், வெப்பதட்ப நிலை முதலானவைகள் இதன் மக்களை இந்தியாவிலிருந்து வேறுபடுத்துகின்றன. ஆனால், பொதுவில் அனைவருக்கும் சொந்தமாகி இயங்கும் ஜனநாயக உரிமைக் கட்டுகள் அம் மக்களை இந்தியாவுடன் பிணைத்துள்ளன. இந்திய ஜனநாயகப் பரிசோதனையின் வெற்றியில்தான் அவர்களுடைய நலன்களும் நம்முடைய நலன்களும் அடங்கியுள்ளன. ஏனெனில், இந்திய ஜனநாயகம் தோல்வியுற்றால், சர்வாதிகார சமூக அமைப்பு

ஏற்பட்டுவிடும். இந்தியாவில் நம்மில் பலர் இதனை விரும்ப மாட்டார்கள்; மேலும், மேற்கத்திய உலகத்திலும்கூட சுதந்திர சமூகத்தினைக் கட்டிக் காப்பது தொல்லையாக முடியும். தன்னுடைய சுதந்திர சமூகத்தைக் கட்டிப் பாதுகாக்க ஆக்கமிலா இராணுவச் செலவில் அதன் தேசீய வருமானத்தில் 5 முதல் 10 சதவீதம் முடிய உள்ள தொகையைச் செலவழிக்க சுதந்திர மேற்கத்திய உலகு விரும்புகிறது. ஆனால், ஆசியாவி லேயே மிகப் பெருஞ் சுதந்திர சமூகம்,உண்மையில் உலகிலேயே மிகப் பெருஞ் சுதந்திர சமூகம் தோல்வியடைந்தால், அது தோல்வியடைவதன் காரணமாக சர்வாதிகார உலகின் பெருமை மேலும் உயர்ந்துவிடும் என்றால், இராணுவச் செலவின்மூலம் சுதந்திர சமூகத்தைப் பாதுகாப்பது வெறும் மாயையாக மாறிவிடலாம். வளர்ச்சி குறைந்த உலகத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு, அதிலுங் குறிப்பாக, சுதந்திர சமூகத்தில் பொருளாதார விடுபடு நிலையின் சவாலினை இந்தியா வெற்றிகரமாக ஏற்றுத் தீர்வு காண்பதற்கு, சுதந்திர உலகு தன்னுடைய தேசிய வருமானத்தில் 3 முதல் 5 சதவீதம் முடிய உள்ள தொகையினைச் செலவழிக்க முன்வருமா? இதற்குப் பதில் என்னிடமில்லை. ஆனால், அண்மைக் காலத்து அனுபவம் நமக்குக் கொஞ்சம் தெம்பினை அளிக்கிறது.

பன்னாட்டு உதவி முக்கியமாக இருந்தபோதிலும், இந்தியத் தலைமையின் தரமும், கட்டுப்பாடும், சேவை மனப்பான்மையும் இந்தியப் பொருளாதார வளர்ச்சியைப் பெரிதும் நிர்ணயிக் கின்ற காரணியாகும். இறுதிப் பகுத்தாய்வில், பொருளாதார வளர்ச்சியை ஜனநாயக உரிமையுடன் இசைவாக இயங்கச் செய்தலைப்பொறுத்து இந்தியா ஏற்றுக்கொண்டிருக்கும் சவாலினை இந்திய மண்ணிலேயே, இந்திய மூலவளங்களைக் கொண்டே, இந்திய மக்களின் முயற்சிகளினாலேயே சமாளிக்க வேண்டும். நாம் இதனைச் சமாளிக்க முடியுமா? காலமே பதில் சொல்லவேண்டும். இறுதித் தீர்ப்பினைப்பற்றி நம்மில் மிக்க ஆர்வமுள்ளோருக்கு எவ்வித அச்சமும் இல்லை. ஏனெனில், நம்பிக்கை மலைகளையே அசைக்கும் எனக் கூறுவதில்லையா? இயற்கையான தடைகளையும் மனிதனே உண்டாக்கிக் கொண்ட தடைகளையும் அன்பும் வழிபாடும் தகர்த்தெறிவ தில்லையா?

9. பன்னாட்டு வளர்ச்சி அமைப்பின் தேவை

'சமூக முன்னேற்றத்திற்காகவும் பெருஞ் சுதந்திரச் சூழலில் உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்காகவும்' மக்கள் எடுத்துக்கொண்டுள்ள சபதத்தினை ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்திலுள்ள முன்னுரை வலியுறுத்துகிறது. 'மக்களனைவரின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்காகப் **பன்னாட்டமைப்பினைப் பயன்படுத்தவேண்டுமென்பதையும்** அம் முன்னுரை வலியுறுத்துகிறது. (தடித்த எழுத்துகள் என்னுடையவை.) ஆக, பொருளாதார இயல்புடைத்தாய பன்னாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண எல்லா நாடுகளின் ஒத்துழைப்பையும் பெறவேண்டும் என்பது ஐ. நா. சபையின் குறிக்கோள்களில் ஒன்றாகும் என்று முதலாவது விதி குறிப்பிட்டுள்ளது. உயர்ந்த வாழ்க்கைத்தரம், **வேலைநிறைவு, பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்குரிய சூழ்நிலைகள்** முதலானவற்றை ஐ.நா. சபை வளர்க்கும் (தடித்த எழுத்துகள் என்னுடையவை) என்று ஐம்பத்தைந்தாவது விதி குறிப்பிட்டுள்ளது. 'ஐம்பத்தைந்தாவது விதியின் குறிக்கோள்களை நிறைவேற்ற ஐ. நா. சபையின் ஒத்துழைப்புடன் உறுப்பினர் நாடுகள் தனித்தனியாகவோ, ஒன்றுசேர்ந்தோ நடவடிக்கை எடுக்க அவை உறுதிமொழி தந்துள்ளன.' எனவே, ஐ.நா. சபையை உருவாக்குவதற்கான தெளிவான குறிக்கோள்களில் ஒன்றே பொருளாதார வளர்ச்சியாகும் என்பது தெளிவே. இக் குறிக்கோளினை நிறைவேற்றப் பன்னாட்டமைப்பும் கூட்டு நடவடிக்கையுமே முக்கியம் என்பதும் தெளிவே.

எனவே, பொருளாதார வளர்ச்சிக்கெனப் பன்னாட்டு ஏஜென்சிகள் பல நிறுவப்பெற்றன; அவற்றில் சில தொழில் நுண்ணியல் உதவிக்காகவும் வேறு சில நிதி உதவிக்காகவும் நிறுவப்பெற்றன. ஐ. நா. சபையின் 'பொருளாதார—சமூகக் கவுன்சி'லானது இத்தகைய தனித்த ஏஜென்சிகளின் நடவடிக்கைகளை ஒழுங்குறச் செய்து, அவற்றினிடையே இணக்

கத்தை உண்டாக்குகிறது; ஆனால், அதே வேளையில், ஆராய்ச்சி செய்வதற்காகவும் பரிந்துரை வழங்குவதற்காகவும் தனக்குக் கீழே பிரதேச ரீதியாக இயங்குகின்ற அமைப்புகளையும் அக் கவுன்சில் உண்டாக்கியுள்ளது. பொருளாதார வளர்ச்சித் துறையில், 'பொருளாதார வேலை நிறைவு கமிஷனை'ப் (Economic and Employment Commission) 'பொருளாதார—சமூகக் கவுன்சில்' (ECOSOC) நிறுவியது. 'வளர்ச்சி குறைந்த பிரதேசங்களின் பொருளாதார முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும்பற்றிய பொருளாதார விஷயங்களில்' கவுன்சிலுக்கு இக் கமிஷன் விரிவான சிபாரிசு செய்யும். உலகில் போதுமான அளவுக்கு வளர்ச்சியுறாத பகுதிகளின் பொருளாதார வளர்ச்சி குறித்த பிரச்சினைபற்றித் தொழில் நுண்ணியல் சார்ந்த ஆராய்ச்சி செய்து பரிந்துரைகள் வழங்கும்படி 'பொருளாதார வேலை நிறைவுக் கமிஷனை'க் கவுன்சில் கேட்டுக்கொண்டதுடன், அதற்கெனப் பொருளாதார வளர்ச்சிபற்றிய துணைக்கமிஷன் (Sub Commission) ஒன்றினை நியமிக்கும்படியும் கேட்டுக்கொண்டது. இத்தகைய துணைக் கமிஷனில் தேர்ந்தெடுக்கப்பெற்ற எழுவர் உறுப்பினராகப் பணியாற்றினர்; அவர்கள் ஐக்கிய அமெரிக்கா, யு.எஸ். எஸ். ஆர்., சைனு, இந்தியா, பிரேஸில், செக்கோஸ்லோவேக்கியா, மெக்சிகோ ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளாவர். இந்த துணைக் கமிஷனின் இந்தியப் பிரதிநிதியாகப் பணியாற்றும் பேறு இக் கட்டுரையாளருக்குக் கிடைத்தது; 1947 முதல் 1950 முடிய உள்ள ஆண்டுகளில் அதன் நான்கு கூட்டங்களிலும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தத் துணைக்கமிஷன் தன்னுடைய முதல் கூட்டத்தில் பொருளாதார வளர்ச்சியின் பொதுக் கோட்பாடுகளை உருவாக்குவதையே பிரதான வேலையாக எடுத்துக்கொண்டது. தனது இரண்டாவது கூட்டத்தில், தொழில் நுண்ணியல் சார்ந்த உதவியைப்பற்றி அலசி ஆராய்ந்து, இத் துறையில் எடுக்கவேண்டிய பன்னாட்டுக் கூட்டு நடவடிக்கை குறித்து விரிவான பரிந்துரைகள் பலவற்றை வழங்கியது. 1948ஆம் ஆண்டு, டிசம்பர் திங்களில் பாரிஸில் நடைபெற்ற கூட்டத்தில், ஐ. நா. அமைப்பின் பொதுச் சபை (General Assembly) மேலே குறிப்பிட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் புகழ் வாய்ந்த தீர்மானம் ஒன்றினை (200 III) நிறைவேற்றியது; அப் பொதுச் சபை பொருளாதார வளர்ச்சிக்கென ஐ.நா. சார்பில் தொழில் நுட்ப உதவிக்குரிய திட்டம் ஒன்றினை வகுத்தது. இதனைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் (Truman) ஓரளவு

விற்கு ஐ. நா. சபையின் ஏஜென்சிகள் மூலமாகவும், ஓரளவிற்கு ஐக்கிய அமெரிக்காவின் சொந்த நிருவாகத் துறைகள் மூலமாகவும் பொருளாதார வளர்ச்சிக்கெனத் தொழில் நுட்ப உதவியை வழங்கும் வரலாற்றுப் பிரசித்திபெற்ற பாயின்ட் நான்கு (Point IV) திட்டத்தினை அறிவித்தார். பொதுச் செயலாளரைத் (Secretary General) தலைவராகவும், சிறப்புத் தேர்ச்சிக்கென அமைந்த ஏஜென்சிகளின் தலைவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட தொழில் நுட்ப உதவிக் குழுவினை (Technical Assistance Board) ஐ. நா. சபை ஏற்படுத்தியது. ஏறத்தாழ ஆண்டொன்றுக்கு 20 மில்லியன் டாலர்கள் கொண்ட நிதியினை, இக் குறிக்கோளினை நிறைவேற்றப் பகிர்ந்தளிக்கும் வேலையினை இக் குழு மேற்கொண்டது. என்றாலும், இக் குழு, தன் உறுப்பினர்கள் தரும் திட்டங்களைக் கோவையாக அமைப்பதையே முக்கிய வேலையாக மேற்கொண்டதேயன்றி, தொழில் நுட்ப உதவித் திட்டத்தை இணைத்து, ஒழுங்குற உருவாக்கும் வேலையை எடுத்துக்கொள்ளவில்லை. தன்னுடைய மூன்றாவது கூட்டத்தில், துணைக் கமிஷன் வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வேண்டிய உள்நாட்டு நிதி வளங்களையும் அன்னிய நிதி வளங்களையும் சேகரிப்பதுபற்றி விவாதிப்பதில் முழுக் கவனம் செலுத்தி, இந்த இலட்சியத்தை அடைய அநேகக் கருத்துரைகளை வழங்கியது. பொருளாதார வளர்ச்சியை விரிவாகவும் துரிதமாகவும் மேற்கொள்ள ஒரு புதிய பன்னாட்டு ஏஜென்சியை அமைக்க வேண்டும் என்று தலைவர் கருத்துத் தெரிவித்தமையே இக் கூட்டத்தின் சிறப்பாகும். நியூ யார்க்கில் 1949ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 30ஆம் நாள் துணைக் கமிஷனின் அறுபதாம் கூட்டம் நடைபெற்றது; அக் கூட்டத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியினைத் திரட்ட ஒரு புதிய பன்னாட்டு ஏஜென்சியின் தேவையை விளக்கி நான் குறிப்பிட்டுள்ள கருத்துரைகளை இவ்விடத்தில் எடுத்துக்காட்டுவது சாலச் சிறந்தது எனக் கருதுகிறேன். இக் கூட்டத்தின் நடவடிக்கைபற்றி அதிகாரபூர்வமாக வெளியிடப்பெற்ற சுருக்கமான அறிக்கையிலிருந்து எனது கருத்துரை எடுத்துக்காட்டப்படுகிறது.

"தனியார்துறை சார்ந்த அன்னிய முதலீடு, அரசாங்கங்களுக்கிடையே ஏற்படும் அன்னிய முதலீடு, உலக முழுதும் சார்ந்த அன்னிய முதலீடு ஆகிய மூன்றையும்பற்றிப் பரிசீலனை செய்ய விரும்புவதாகத் தலைவரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். பொருளாதார வளர்ச்சியின் பொதுத் திட்டத்தில் இம்மூன்று

அன்னிய முதலீடுகளும் இடம் பெற்றுள்ளன. ஏற்றுமதி செய்வதற்கோ அல்லது இறக்குமதி செய்வதற்கோ அவர்கள் விரும்பும் மூலதனம் எந்த வகையைச் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்பதுபற்றிச் சிந்தித்துத் தேர்ந்தெடுக்கும் முழு உரிமையினையும் எல்லா நாடுகளும் அனுபவிக்க வேண்டும் என அவர் விரும்பினார். மேலும், மூலதனத்தை வழங்குவதிலோ அல்லது பெறுவதிலோ உள்ள நிபந்தனைகளிலிருந்து தேர்ந்தெடுக்கும் முழு உரிமையினையும் எல்லா நாடுகளும் பெற வேண்டும் என்றும் அவர் விரும்பினார். எனினும், பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினை குறித்து ஐ. நா. சபையின் பல்வேறு உறுப்புகள் நிறைவேற்றியுள்ள தீர்மானங்களுக்கு இசைவாகவும், ஐ. நா. சபை சாசனத்தில் கண்டுள்ள கொள்கைகளை வளர்ப்பதற்கு ஏற்ற வகையிலும் எல்லா முதலீடுகளும் அமையவேண்டும் என்ற நிபந்தனைக்குக் கட்டுப்பட்டே எல்லா நாடுகளும் உரிமையினைப் பிரயோகிக்க வேண்டும்.

'இம் மூன்று வகையான அன்னிய முதலீடுகள் பொருளாதார வளர்ச்சிக்குத் துணையாக நின்றனவா என்பது பற்றியும், சாசனத்தின் குறிக்கோள்களுடன் ஒத்து, இசைவாக அமைந்தனவா என்பது பற்றியும் கிடைத்துள்ள அனுபவத்தின் அடிப்படையில் அவர் ஆராய்ந்து விளக்குவார். செக்ரடேரியட் (Secretariat) இத் தலைப்பில் தயாரித்த மிகவும் பயனுள்ளதும் ஆர்வத்தைத் தூண்டக்கூடியதுமான ஆராய்ச்சியினைப்பற்றி, அதிலும் குறிப்பாக அதன் நடைமுறைக்கேற்ற, புறவயமான தன்மையைப்பற்றித் துணைக்கமிஷனின் பாராட்டுதலை வெளியிட்டபின்னர், தனியார்துறை சார்ந்த முதலீடுகள் பற்றிய கடந்தகால அனுபவங்களிலிருந்து தெளிவான சில முடிவுகள் கிடைத்துள்ளன என அவர் உரைத்தார்.'

"1. தனியார் முதலீடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு முக்கியமாகச் செல்லவில்லை என்பது அறிக்கையை நன்கு பகுத்தாய்ந்ததிலிருந்து தெரியவருகிறது. 'பொருளாதார வளர்ச்சியில் கணிசமான அளவுக்கு முன்னேறியுள்ள நாடுகளை விட, மூலதனம் இல்லாமையினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு ஜனத்தொகையின் அளவைப் பொறுத்தவரையில் குறைவான மூலதனமே சென்றது என்பது குறிப்பிடத்தக்கது' என அறிக்கையின் இருபத்தொன்றாவது பக்கத்திலுள்ள வாசகம் விளக்குகிறது. உண்மையில், இத்தகைய வளர்ச்சி ஏற்படவேண்டிய அவசியம் உள்ள நாடுகளை விட, முன்னதாகவே பொருளாதார வளர்ச்சியை ஓரளவிற்கு

அடைந்த நாடுகளுக்கே தனியார் மூலதனம் வழங்கப்பெற்றது என்பது தனியார்துறை மூலதனங்களின் மிக முக்கிய அம்ச மாகும்."

'2. தனியார் மூலதனங்களின் நோக்கமே இலாபங்க ளாகும். இது இயற்கையே. அன்னிய முதலீட்டுக்காரர்கள் கொடையாளிகளைப்போல் நடந்துகொள்வர் என எதிர்பார்க்க முடியாது. உயர்ந்த இலாபத்தினை வழங்கும் வழிகளில் முதலீடு செய்வதற்கு அவர்கள் முனைந்தது இயற்கையே. வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஏதேனும் ஒழுங்கான திட்டம் வகுப்பதைப்பற்றி அவர்கள் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும், அவர்களைக் குறைகூறக்கூடாது ; அவர்கள் சிரத்தை எடுத்துக்கொள்ளா ததைப்போலவே உள்நாட்டு முதலீட்டுக்காரர்களும் பொரு ளாதார முன்னேற்றத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை.'

"3. பொருளாதார வளர்ச்சி பற்றிய திட்டமிட்ட ஆராய்ச்சியின் அடிப்படையில் அன்னிய தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஏற்றுமதியையும் மூலப் பண்டங் களின் உற்பத்தித் தொழில்களையும் வளர்க்கவே அன்னிய தனியார் முதலீடுகள் பெரும்பாலும் பயன்பட்டன. 'எனவே, வளர்ச்சி குறைந்த நாடுகளின் உள்நாட்டுச் சந்தைகளுக்காகத் தேவைப்படும் பொறிவழித் தொழில் உற்பத்தியில் மிகவும் குறைந்த அளவிற்கு அமெரிக்க நேரடி முதலீடுகள் ஈடு பட்டன' என்று அறிக்கையின் 41ஆம் பக்கம் விளக்குகிறது ; மேலும், 'பிரிட்டிஷ் நேரடி முதலீடுகளும் இதே அம்சங்களைக் கொண்டுள்ளன......... நெதர்லாண்ட்ஸ், ஃபிரான்ஸ் போன்ற ஏனைய கடனீவோர் நாடுகள் தங்களுடைய நேரடி முதலீடுகளை எஸ்டேட் தோட்டங்களிலும், தாதுப் பொருள் உற்பத்தி யிலும், பொதுப் பயன்பாட்டுத் துறைகளிலும் (public utilities) பெரும்பாலும் பயன்படுத்துகின்றன' என்றும் அவ் வறிக்கையின் 41ஆம் பக்கம் குறிப்பிட்டுள்ளது. 'தொழில்துறை வளர்ச்சிகளில் பின்தங்கியுள்ள நாடுகளில், அவற்றின் உள்நாட்டுச் சந்தைக்காக அமைந்துள்ள பொறி வழித் தொழில்களில் முதலீடு செய்வதை அன்னிய மூலதனம் ஏற்கவில்லை' என்பதையும் அறிக்கையின் 55ஆம் பக்கம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. 'மொத்தத்தில், பொருளாதார வளர்ச்சிக்குத் தக்கவாறு வெளிநாட்டு வர்த்தகம் மாறும் தன்மையுடையதாகையால், வளர்ச்சி குறைந்த நாடுகளில் பொறிவழித் தொழில் உற்பத்தியில் முதலீடு செய்யும் போக்கு ஏற்கப்படவில்லை ; விளைவுபறித் தொழில்கள், ரெயில்

வேக்கள் அல்லது இவைபோன்ற தொழில்கள் ஆகியவற்றை விடப் பொறிவழித் தொழில்களில் தலத்திலிலா உடைமையாதிக்கத்தின் தொல்லைகள் அதிகமாக உள்ளன எனலாம்; இப் பொறிவழித் தொழில்கள் அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும் தேவையின் இயல்பிற்குத் தக்கவாறு மாறிக்கொள்ளவேண்டும்' என்று அறிக்கையின் 42ஆம் பக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது. என்றாலும், 'அறிக்கையில் கூறப்பட்டிருப்பதானது பொருளாதார வளர்ச்சியில் வெளிநாட்டு மூலதனத்தின் பங்கினைக் குறைத்துவிடக்கூடாது' என்பதைப் பற்றி அறிக்கை தெளிவாக்கியுள்ளது. அறிக்கையின் முடிவு குறித்துத் தலைவரவர்களும் தமது முழு ஒப்புதலைத் தந்துள்ளார்கள். 'தெளிவாகச் சொல்லவேண்டுமெனில், போக்குவரத்து வசதிகளைப் பெருக்கவும், பொதுப் பயன்பாட்டுத் துறைகளை வளர்க்கவும், ஏற்றுமதிக்கான மூலப்பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கவும் அல்லது அவற்றை எளிய முறையில் பக்குவப்படுத்தவும் பயன்படும் இத்தகைய மூலதனமானது, பொறிவழித் தொழில் சார்ந்த தொழில்மயமாதலுக்கு வழி வகுத்தது. பொறிவழித் தொழிலானது உள்நாட்டுச் சந்தைக்கு வேண்டிய பொருள்களைப் பெருமளவில் அளிக்கிறது. ஆனால், கிடைத்துள்ள சான்றிலிருந்து தெரியவருவது என்னவெனில், இத்தகைய தொழில்மயமாதலுக்கு வேண்டிய சூழ்நிலையை மட்டும் வெளிநாட்டு மூலதனம் முக்கியமாக உருவாக்குகிறது என்பதும், அதனை அது உருவாக்கியவுடன், உள்நாட்டுச் சந்தைக்குத் தேவையான பொறிவழித் தொழில் உற்பத்தியினைப் பெரும்பாலும் உள்நாட்டு முதலாக்கமே மேற்கொள்ளவேண்டும் என்பதுமாகும்'.

'4. இலாப நோக்குடன், இன உறவுகள், அரசியல் உறவுகள், ஏகாதிபத்தியத் தொடர்புகள், நிலவியல் சார்ந்த நெருக்கங்கள் முதலான பொருளாதாரம் சாராத காரணங்களும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தன. உண்மையில், இலாப நோக்கினைவிட ஏனைய காரணங்களே வெளிநாட்டு முதலீடுகளின் போக்கினை இன்னும் உறுதியாக நிர்ணயித்துள்ளன. உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவின் மூலதனத்தை இலத்தீன் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் முக்கியமாக முதலீடு செய்துள்ளனர். அதே நேரத்தில், தனது காலனி ஆதிக்கத்திலுள்ள இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் ஆசிய நாடுகளிலும் இங்கிலாந்து தனது மூலதனத்தை முதலீடு செய்துள்ளது. சீனாவில் மிகவும் குறைவாக முதலீடு செய்திருப்பதையும், எண்ணெய்க் கிணறுகள் உள்ள பிரதேசங்களில்

அண்மைக் காலத்தில் முதலீடுகள் செய்திருப்பதையும் தவிர்த்து, ஐக்கிய அமெரிக்காவிற்கு ஆசியாவில் வேறு முதலீடுகள் இல்லை. உலகிலேயே மிகப் பெருமளவில் மூலதனத்தை ஏற்றுமதி செய்யும் ஐக்கிய அமெரிக்காவின் தனியார் துறை முதலீடுகள், ஆசியாவிலும் ஆஃபிரிக்காவிலுமுள்ள வளர்ச்சி குறைந்த பிரதேசங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவவில்லை என்பது தெளிவே. இந்தத் துறையில் மரபு வழி முக்கியமான பங்கினை வகிக்கிறது. எடுத்துக் காட்டாக, முதலீடுகளைப் பறிமுதல் செய்வதும், முந்திய கடன்களின் தவணைகளைக் கட்டத் தவறுவதும் போன்ற அநேகக் குறைபாடுகளைக் கொண்ட இலத்தீன் அமெரிக்காவில் ஐக்கிய அமெரிக்கா முதலீடு செய்யத் தயாராக இருந்தது; ஆனால், தன் மீது பன்னாட்டு ரீதியாக விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளிலிருந்து ஒரு தடவைகூடத் தவறாத இந்தியாவில் ஐக்கிய அமெரிக்கா முதலீடு செய்யத் தயாராக இல்லை; ஏனென்றால், இந்தியா அமெரிக்காவிலிருந்து வெகு தொலைவில் அமைந்திருப்பதுடன், அதற்கு ஐக்கிய அமெரிக்காவுடன் இன உறவோ, கலாசாரத் தொடர்போ இல்லை என்பதுதான்.'

'5. தனியார் துறை சார்ந்த அன்னிய முதலீடுகளின் பருமத்தையோ, காலவரையறையையோ, அவற்றின் பிரதேச வாரியான பகிர்வினையோ அல்லது பல்வேறு முன்னேற்ற வகைகளை ஊக்குவித்து வளர்ப்பது குறித்த முன்னேற்ற வகை சார்ந்த பகிர்வினையோ (functional distribution) திட்டமிட்டுக் காரியமாற்றுவதற்கு முடியாத அளவிற்குத் தனியார் துறை சார்ந்த அன்னிய முதலீடுகளின் இயல்பு அமைந்திருக்கிறது. உண்மையில், தங்களுடைய மூலதனத்தை எங்கே முதலீடு செய்வது, எந்த அளவிற்குச் செய்வது, எந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகச் செய்வது என்பது குறித்துத் தனியார் துறை சார்ந்த முதலீடு செய்வோருக்குக் கூற முடியாது. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிச் சூழமைவில் தனியார் துறை சார்ந்த அன்னிய முதலீடுகளைப்பற்றிச் சிந்திக்கும்பொழுது, இதுவே அடிப்படையான குறைபாடாகும்.'

'இத்தகைய சூழ்நிலைகளின் காரணமாக, ஐ. நா. சபையின் இலட்சியங்களுக்கு ஏற்றவாறு, தனியார் முதலீடுகள்மூலம் உலகின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சி கணிசமான அளவிற்கு உண்மையில் ஏற்படாது என்று அவர் கருதுகிறார். தனியார் முதலீடு தலையிடாமைக் கோட்பாட்டினைச் சார்ந்த முன்னேற்றத்தையே ஊக்குவிக்கும். ஆனால், தனியார்

முதலீடு வளர்ச்சி குறைந்த நாட்டின் தேசிய நலனுக்கு உகந்த முறையில், திட்டமிட்ட—சமூக ரீதியாக விரும்பத்தக்க அடிப் படையில், வாழ்க்கைத்தரங்களை உயர்த்துவதற்காகப் பொரு ளாதார வளர்ச்சியை மேற்கொள்ளாது.'

"தனியார் துறை சார்ந்த அன்னிய முதலீடுகளாகவே வெளிநாட்டு நிதியாக்கம் அமைய வேண்டும் என்று தனது ஆவணத்தில் திரு. கொல்லாடோ (Mr. Gollads) குறிப்பிட் டுள்ளார். இதே கருத்தினை திரு. தோர்பே (Mr. Thorpe)[1] முன்னரே வெளியிட்டுள்ளார். அவர் பின்வருமாறு கூறுகிருர்: 'அமெரிக்கப் பொருளாதார அமைப்பு, சிறப்பாகத் தனியார் முயற்சித் துறை அமைப்பாகும்; எனவே, பொதுத் துறையைச் சார்ந்த திட்டங்கள் பலவற்றிலும்கூடத் தனியார் துறையின் மூலதனச் சந்தை மூலமாகவே முதலீடு மேற்கொள் ளப்படுகிறது; பொதுத் துறைக் கட்டுப்பாடுகளும் உதவி களும் ஓரளவிற்கு உண்டு. எனவே, வெளிநாட்டுத் தேவை களைப் பூர்த்திசெய்யத் தனியார் துறையையே நாடுவது இயற்கையே என்றும், விரும்பத் தக்கதே என்றும் நாங்கள் கருதுகிறோம்.' பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதி யாக்கத்தில் தனியார் முதலீடுகளுக்குப் பங்கு கிடையாது என்று குறிப்பிடத் தலைவருக்கு விருப்பமில்லை. ஏற்கெனவே நன்கு முன்னேறியுள்ள நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் தனியார் முதலீடுகளுக்குரிய இடம் சாதகமாக இருக்கலாம். தனியார் துறையைச் சார்ந்த அன்னிய முதலீடுகளை ஏற்றுக் கொள்ள விரும்பும் நாடுகள், தனியார் துறையில் முதலீடு செய்வோரின் உரிமைகளைப் பாதுகாக்க முன்வர வேண்டும். ஆனால், ஐ. நா. சபையின் சாசனமும், துணைக் கமிஷனின் முதல் அறிக்கையும், ஐ. நா. சபையின் பல்வேறு உறுப்பு களின் தீர்மானங்களும் எடுத்துக்காட்டியுள்ள பொருளாதார வளர்ச்சியினைத் தனியார் முதலீடுகள் திறம்பட நிறைவேற்ற மாட்டா என்று அவர் வலியுறுத்தியுள்ளார்."

'அரசாங்கங்களுக்கிடையே நிகழும் அன்னிய நிதியாக்கத் தைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசும்பொழுது, அரசாங்கங்களுக் கிடையே வழங்கப்பெறும் கடன்களையும் உதவி நிதிகளையும் அரசியல் உள்நோக்கங்களிலிருந்தும் கட்டுப்பாடுகளிலிருந்தும் பிரித்து விடுவது மிகவும் கடினமாகும் என்பதனை அனுபவம் தெளிவாக விளக்கியுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்;

[1] பொருளாதார, சமூக கவுன்சிலில் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் அன்றைய இராச்சிய உதவிச் செயலாளராகிய (Assistant Secretary of State) வில்லார்டு தோர்பே (Willard Thorpe) இக்கருத்தினை விளக்கினர்.

இத்தகைய அரசியல் கட்டுப்பாடுகள் நன்மை பயப்பன வாகவோ, தீமை விளைவிப்பனவாகவோ இருக்கலாம். கடந்த காலத்தில், தனக்காகப் போரிடக்கூடிய நாடுகளுக்கே பெரும் பாலும் இங்கிலாந்து நிதியுதவி செய்தது. வேறு சில நாடுகள் இங்கிலாந்தின் அனுபவத்தை இப்பொழுது மேற்கொண் டிருக்கலாம். வரலாற்றில் அரசாங்கங்களுக்கிடையே கடன்கள் வழங்குவதில் உள்ள பெரு நோக்கம் போராகவோ அல்லது போர்பற்றிய அச்சமாகவோ பெரும்பாலும் இருந்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, முதல் உலகப் போருக்குப் பின்னர், சிறு நாடுகளின் நட்புறவுக் குழுவிலுள்ள உறுப்பினர் நாடுகளுக்கு மட்டும் பிரான்ஸ் அநேக கடன்களைக் கொடுத்துதவியது. இப்பொழுதும்கூடப் போர் அச்சத்தின் காரணமாகவே கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மார்ஷல் உதவிபெறும் நாடு களின் பொருளாதார சுதந்திரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என அண்மைக்கால நிகழ்ச்சிகள் எந்தவிதமான சந்தேகத் திற்கும் இடமின்றி நிரூபித்துள்ளன. மார்ஷல் உதவிபெறும் நாடுகள், அவ்வுதவியினைப் பெறாத நாடுகளுடன் இயல்பான பொருளாதார உறவுகளை வைத்துக்கொள்ளக்கூடாது என் பதனையும் சமீப கால நிகழ்ச்சிகள் எவ்வித ஐயத்திற்கும் இட மின்றி நிரூபித்துள்ளன. யு. எஸ். எஸ். ஆருடன் தமது நாடு பண்டமாற்று ஒப்பந்தம் செய்துகொள்ள முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாகவும், பொருளாதார விஷயங்களில் அரசிய லுக்கு இடம் கிடையாது என்றும் இங்கிலாந்து வர்த்தக போர்டின் (Bord of Trade) தலைவரான ஹெரால்டு வில்சன் (Harold Wilson) தமது பாராளுமன்றத்தில் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை குறித்து, ஐக்கிய அமெரிக்காவின் செனெட்டில் (Senate) ஏற்பட்டுள்ள சலசலப்பு இதனைத் தெளிவாக விளக்குகிறது.'

'தான் வழங்கும் கடன்களில் அரசியல் நிபந்தனைகளை இணைத்து விடுகின்ற நாடு ஐக்கிய அமெரிக்கா மாத்திரமன்று; தனது சகாக்களுக்குக் கடன்களை வழங்கும்பொழுது யு.எஸ்.எஸ்.ஆர். கூட அதே முறையைப் பின்பற்றியது. யுகோஸ்லேவியாவில் மார்ஷல் டிட்டோ (Marshall Tito) செய்த புரட்சியினையடுத்து ஏற்பட்ட விளைவுகள் இதனைத் தெற்றென விளக்கின. ஒவ்வொரு நாடும் தன்னுடன் நட்புறவு கொண் டுள்ள நாடுகளைப் பலப்படுத்தவும், எதிரி நாடுகளைப் பலம் குன்றச் செய்யவும் விரும்பியது என்பது தெளிவாகும். இரு வேறு தொகுதிகளாகப் பிரிந்து நிற்கும் உலகில், அரசியல், பொருளாதார நிபந்தனைகள் இல்லாமல் அரசாங்கங்களுக்

கிடையே கடன்கள் வழங்கப்பட முடியவே முடியாது. உண்மையில், கடன்களை வழங்குகின்ற ஒவ்வொரு நாட்டின் பாராளுமன்றமும் கடன்களை வழங்குவதில் ஒப்புதல்தர வேண்டும். இனி ஏற்படக்கூடிய எதிரிக்குக் கடன் வழங்குவதைச் சாதாரணமாகவே பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பர். எந்த அரசியல் கோஷ்டியுடனும் சேர விரும்பாத நாடுகள், அரசாங்கங்களுக்கிடையே வழங்கப்படும் கடன்களைப் பெறுவது மிகவும் கடினமாகும்.'

'முன்பு நிலவிய அரசியல் நிலைமைகள் மாறுமல் அப்படியே இருக்கும் வரையில், ஐ. நா. சபையின் சாசனமும், அதன் பல்வேறு உறுப்புகள் நிறைவேற்றிய தீர்மானங்களும் விளக்கியுள்ள பொருளாதார வளர்ச்சியை அரசாங்கங்களுக்கிடையே வழங்கப்பெறும் கடன்கள் மேற்கொள்ள முடியாது என்பது தெளிவாகும்.'

'ஐ. நா. சபையின் கொள்கைகளுக்கு ஏற்ற முறையில், வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு மிக உயர்ந்த வழியாகப் பன்னாட்டு நிதியாக்கமே உள்ளது என்பது அவரது கருத்தாகும். உண்மையில், அனைத்துலக ஏஜென்சிகளின்மூலம் நிதி திரட்டி உதவுவதுதான் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரிய ஒரே நல்வழியாகும்.'

'1949ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 20ஆம் நாளில் ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி நிகழ்த்திய துவக்கவிழா உரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள கருத்துகளுக்கு அவர் முழுமனத்துடனும் உண்மையாகவும் தமது ஒப்புதலைத் தந்துள்ளார்.'

சமாதானப் பிரியர்களாகிய வேறு நாட்டு மக்கள் மேற்கொண்டுள்ள நல்வாழ்வு முயற்சிக்கு உதவுவதற்காக, நாம் சேர்த்து வைத்துள்ள தொழில் நுண்ணியல் அறிவுக் கருவூலத்தின் பயன்களை அவர்களுக்கு வழங்கவேண்டும் என நான் நம்புகிறேன். இன்னும், ஏனைய நாடுகளின் ஒத்துழைப் பினைப் பெற்று, அபிவிருத்தித் தேவைப்படும் பிரதேசங்களில் மூல தனத்தை முதலீடு செய்வதை நாம் ஆதரிக்க வேண்டும்.

அதிக உணவினையும் துணியையும், வீடு கட்டுவதற்கு வேண்டிய அதிக தளவாடங்களையும் தங்கள் சுமையினைக் குறைக்கும் அதிக இயந்திர ஆற்றலையும் உலகிலுள்ள சுதந்திர மக்கள் அனைவரும் தங்களுடைய சொந்த முயற்சிகள் மூலமாக உற்பத்தி செய்வதை ஆதரித்து உதவுவதே நமது குறிக்கோளாகும்.

இந்த முயற்சியில் தங்களுடைய தொழில் நுண்ணியல் சார்ந்த வளச்சாதனங்களைக் கொண்டுவந்து குவிப்பதற்கு மற்ற நாடுகளையும் நாம் அழைக்கின்றோம். அந் நாடுகள் அளிப்பன யாவும் பெருமகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளப்படும். **இது ஒரு கூட்டு முயற்சியாகும்; இம் முயற்சியில் ஐ. நா. சபை மூலமும், அதன் பிரத்தியேக ஏஜென்சிகள் மூலமும் எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து ஈடுபட வேண்டும்.** (*தடித்த எழுத்துக்கள் ஆசிரியருடையவை*).

'தலைவரவர்கள் மேலே பயின்றுவரும் கடைசி வாக்கியத்தை வலியுறுத்த விரும்பினார். ஐ. நா. சபை மூலமும் அதன் பிரத்தியேக ஏஜென்சிகள் மூலமும் எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து, ஒரு கூட்டு முயற்சி எடுக்கவேண்டிய அவசியத்தினை அக் கடைசி வாக்கியம் குறித்துள்ளது. எனவே, பொருளாதார – சமூக கவுன்சிலில், பொருளாதார வளர்ச்சியினை மேற்கொள்வதற்காக ட்ரூமன் தனியார்துறை சார்ந்த சாதனங்களை நாடுகிறார் என்று சொல்லிய திரு. தோர்பே (Mr. Thorpe) *ஜனாதிபதி ட்ரூமனின் சொற்பொழிவினைத் திரித்துக் கூறியுள்ளார் என்று தலைவர் அவர்கள் கண்டித்துள்ளார். தனியார் முதலீடுகளை ஐ.நா. சபை மூலம் வழங்குவது சாத்தியம் என்று தலைவர் அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.*

'' புனரமைப்பிற்கும் அபிவிருத்திக்கும் ஏற்பட்டுள்ள உலக பாங்கின் பங்கினைப்பற்றிக் குறிப்பிடுகையில், வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்ய உலக பாங்கின் வளங்கள் போதா என்று தலைவர் உரைத்துள்ளார். உண்மையில், அபிவிருத்தி வேலைகளுக்குச் சுதந்திரமாகப் பயன்படுத்த பாங்கின் கைவசம் இருந்த நிதிகளின் மொத்த அளவு 600,000,000 டாலர்களுக்குக் கொஞ்சம் அதிகமாகும். அடுத்த பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளில் வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு, ஏறத்தாழ 30,000,000,000 டாலர்கள் தேவைப்படும் எனப் பொறிவழித் தொழிலதிபர்களின் தேசியக்குழு கணக்கிட்டுள்ளது; அதாவது, ஆண்டொன்றுக்குச் சராசரியாக இரண்டு முதல் மூன்று பில்லியன் (Billion) *டாலர்கள் செலவழிக்கவேண்டும். இலத்தீன் அமெரிக்காவிற்கு 8,000,000,000 டாலர்களும், ஆஃப்பிரிக்காவிற்கு 6,000,000,000 டாலர்களும், தென்கிழக்கு ஆசியாவிற்கு 10,000,000,000 டாலர்களும் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சிகளுக்கு இந்த அளவிற்கு நிதி திரட்ட பாங்கினால் எப்படி முடியும் என்று ஆராய அவர் தவறிவிட்டார்.*

மேலும், தன் பணிகளினால் பயனடையும் பிரதேசங்களின் வரிசையிலிருந்து ஐரோப்பாவை அகற்றிவிட விரும்பவில்லை என்று பாங்கினுடைய மூன்றாவது ஆண்டு அறிக்கை திட்டவட்டமாக விளக்கியுள்ளது. 'ஐக்கிய அமெரிக்காவின் நிதியுதவியின் அளவை நிர்ணயிக்கும்பொழுது, ERP காலத்தில் மேற்கு ஐரோப்பாவிற்கு பாங்கு கணிசமான அளவிற்குக் கடன் உதவி அளிக்கும் என வெளிப்படையான எடுகோள் எடுக்கப்பட்டது என்பதையும் குறித்துக்கொள்ளவேண்டும். எனவே, ECA வழங்கும் நிதியுதவியுடன் உலக பாங்கு வழங்கும் நிதியுதவியும் உண்மையாகவே தேவைப்படுகிறது என்பது தெளிவாகும். மேலும், உடனடியாகத் தேவைப்படும் இறக்குமதிகளுக்கே ERP வழங்கும் நிதி முதலாவதாகக் கிடைக்கும். ஆகையால், நீண்டகால முதலீட்டுத் துறைக்குத் தேவையான நிதிவசதியை உலக பாங்கே வழங்குவது மிகவும் பொருத்தம் என்பது தெளிவாகிறது. ஆக, மற்றக் காரியங்களுக்கு வேண்டிய நிதி போக, மீதம் உள்ள உலக பாங்கின் வருவாயும் ERP நாடுகளின் வரவு நிலையும் அனுமதிக்கின்ற அளவிற்கு, ERP-உடன் உலக பாங்கும் சேர்ந்து, முக்கியமாக ஆக்கத் திறனில் நிரந்தர சேர்ப்புகளை உண்டாக்கும் திட்டங்களுக்கு வேண்டிய நிதியினைத் திரட்டித் தரவே உலக பாங்கு விரும்புகிறது.' எனவே, வளர்ச்சி குன்றிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு 600,000,000 டாலர்கள் முழுவதையும் பயன்படுத்த முடியாது என்பது தெளிவே."

"மேலும், தன்னுடைய முதல் அறிக்கையில் தெளிவுபடுத்தியது போல, உலக பாங்கானது பாங்குக் கோட்பாடுகளைக் கடுகளவும் பிறழாது பின்பற்ற வேண்டும்; பொருளாதார அபிவிருத்தியின் தேவைகளும் அபிவிருத்திகளின் இயல்பும் பாங்கின் கடு விதிகளின் சோதனையில் வெற்றியடையுமா என்பதே ஐயப்பாட்டிற்குரியது; இவ்வுண்மைகளைக் குறித்துக்கொள்ளவேண்டும். மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களின் சில இனங்கள் கடுமையான பாங்குக் கோட்பாடுகளைச் சார்ந்து ஒத்திசைவாக இருக்க மாட்டா என்பதை பாங்கு உணர்ந்துள்ளது. இது குறித்துத் தனது மூன்றாவது அறிக்கையில், 15, 17ஆம் பக்கங்களில் அநேக உதாரணங்களை பாங்கு எடுத்துக் காட்டியுள்ளது. 'அவசியமான ஆக்கவசதிகளை உருவாக்கவும், உபகரணங்களை விலை கொடுத்து வாங்கவும் தேவைப்படும் மூலதனத்தில் கிடைப்பருமை நிலவுவதே நீண்டகால அபிவிருத்தித் திட்டத்திலுள்ள அடிப்படையான தடையாகும்; இன்னும் பள்ளிகள்

அமைக்கவும், புது ஆக்கத்திறன்களைத் தொழிலாளர்கள் பெறப் பயிற்சியளிக்கும் தொழிற்பயிற்சிக்கூடங்கள் அமைக்கவும், திறமையாகப் பொருளாதாரம் இயங்கத் தேவைப்படும் குடியிருப்பு, பொதுப்பயன்பாட்டுத் துறைகள், போக்குவரத்து வசதிகள் முதலானவற்றை ஏற்படுத்தவும் தேவைப்படும் மூலதனம் போதுமான அளவுக்குக் கிடைக்காமையே நீண்டகால அபிவிருத்தித் திட்டத்திற்கு ஏற்பட்டுள்ள தடையாகும்.' 'அநேகமாக வளர்ச்சி குன்றிய நாடுகளனைத்திலும் பண்டங்கள், செய்திகள் ஆகியவற்றின் போக்குவரத்தினை வளர்க்கவும், துறைமுக வளர்ச்சி, மின்னியக்கத் திட்டங்கள், குடிநீர்த் திட்டம், சாக்கடைத் திட்டம் முதலானவற்றை மேற்கொள்ளவும், பொருளாதாரத்தின் ஏனைய துறைகளின் அபிவிருத்திக்கு அடிப்படையாக அமைந்துள்ள ஏனைய பொதுப்பயன்பாட்டுத் துறைகளை வளர்க்கவும் தேவைப்படும் பெரும்பகுதி முதலீட்டினைச் செய்யவேண்டும்' என்று அவ்வறிக்கையின் 17ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'இவற்றுடன் குடியிருப்பையும், இதுபோன்ற வேறு பல சௌகரியங்களையும் சேர்த்துக் கணக்கிட்டால், இத் துறையின் தேவைகள் மட்டும் மொத்த மூலதனத் தேவையில் மூன்றில் இரு மடங்காகும்; அல்லது அதற்கு மேலும் ஆகும்' என்று அவ்வறிக்கையின் 17ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.''

'ஐ.நா. சபையின் கோட்பாடுகளின்படியும் குறிக்கோள்களின்படியும் பொருளாதார வளர்ச்சி நிகழவேண்டுமெனில், பன்னாட்டு நிதியாக்கம் தேவையாகும். உலக பாங்கின் நிதி குறைவாகவும், அதுபற்றிய விதிகள் கடுமையாகவும் இருப்பதால், அது பொருளாதார வளர்ச்சியின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாது. எனவே, பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியினைத் திரட்டுவதைப் பொறுத்தவரையில், ஐ.நா. சபையின் கட்டமைவில் தெளிவான ஓர் இடைவெளி நிலவியது. வளர்ச்சி குறைந்த பிரதேசங்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய, ஒரு புதிய அனைத்துலக ஏஜென்சியினை நிறுவவேண்டும் என்ற கருத்தினை வெளியிட அவர் துணிந்தார். நுட்பத் தொழில் உதவியினால் மட்டுமே பொருளாதார வளர்ச்சியைப் பேணமுடியாது; அதற்கு மூலதன உபகரணமும் நிதியாக்கமும் தேவையாகும். பரந்த, மொத்த முழுத்திட்டம் தேவையாகும்.'

'தனது துவக்கவிழா உரையில், ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி, துணிவுமிக்க ஒரு புதிய திட்டத்தினை வழங்கியுள்ளார். உலகிலுள்ள வளர்ச்சி குன்றிய நாடுகளின் பொரு

ளாதாரத்தை முன்னேற்ற, ஐ. நா. சபையின் சார்பில் துணிவு நிறைந்த ஒரு புதிய அமைப்பினை ஏற்படுத்துவதற்கு அவர் விருப்பம் தெரிவித்துள்ளார். இப் புது அமைப்பு உலக பாங்குடனும் ஐ.நா. சபையின் ஏனைய உறுப்புகளுடனும் ஒத்துழைக்க வேண்டும். ஆனால், அப் புது அமைப்புப் பொருளாதார வளர்ச்சியினைச் செயற்படுத்தும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும். அது வெறும் திட்டமிடும் அமைப்பாகவோ அல்லது ஆலோசனை கூறும் அமைப்பாகவோ இருக்கக்கூடாது. ஆனால், அது நிதி வழங்கும் அமைப்பாக இயங்கவேண்டும்.'

'உலக ஜனத்தொகையில் பாதிக்குமேல் வறுமையில் வாடுகிறது; அவர்களுக்கு உணவு போதவில்லை; அவர்கள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்; அவர்களது வாழ்க்கை, நாகரிகம் குறைந்த பூர்வீகத் தன்மையுடையது; அது தேக்கமடைந்துள்ள வாழ்க்கையாகும்; அவர்களைப் பொறுத்தவரையிலும், சுபிட்சம் மிக்க பிரதேசங்களைப் பொறுத்தவரையிலும், அவர்களுடைய வறுமை ஒரு குறைபாடாகவும் அபாய அறிவிப்பாகவும் உள்ளது' என்று ஜனாதிபதி ட்ரூமன் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி உலகிற்குக் கொடுத்துள்ள உயர்ந்த வாக்குறுதியினை நிறைவேற்றவேண்டுமெனில், பொருளாதார வளர்ச்சி குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, பரந்த, புது உலக அமைப்புத் தேவையாகும்.'

'இதனை முடிப்பதற்கு முன்னர் இப் புது அமைப்பின் நிதி பற்றி இறுதி ஆலோசனை ஒன்று வழங்க அவர் விரும்பினார். மார்ஷல் திட்டத்தின்கீழ் உதவிபெறும் நாடுகள், உலகின் மற்றப் பகுதிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உபகரணத்தையும் பண்டங்களையும் ஓரளவிற்குக் கொடுத்து உதவ வேண்டும் என ஐக்கிய அமெரிக்கா வேண்டுகோள் விடலாம். இவ்வாறாக ஐக்கிய அமெரிக்காவின் உதவி ஐரோப்பாவிற்கு அப்பாலும் செல்லும். அது உலகெங்கும் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தி, முடிவில் மனித சமுதாயத்தின் நலனைப் பேணும்.'

பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியினைத் திரட்டுவதற்கு இப்பொழுதுள்ள ஏஜென்சிகளுடன் வேறு ஒரு புதிய ஏஜென்சி தேவைப்படுகிறது என்பதாலும், இக் காரியத்திற்காகவே ஒரு தனி உலக ஏஜென்சி தேவைப்படுகிறது என்பதாலும் ஒரு புதிய உலக ஏஜென்சி பற்றிய ஆலோசனையை நான் சமர்ப்பித்தேன். நுட்பத் தொழில் உதவியினை வழங்கவும், வளர்ச்சி குன்றிய பிரதேசங்களின் அபிவிருத்தி அளவையும் அபிவிருத்திக் கட்டத்தையும் அவ்வப்பொழுது நிர்ணயிக்கவும்,

அப்பிரதேசங்களில் நிறைவேற்றப்படும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்பார்வையிடவும் அப் புதிய உலக ஏஜென்சி முன்வரும். உண்மையில், பொருளாதார வளர்ச்சித்துறையில் தனித்த ஏஜென்சிகளின் செயல்களை ஒன்றுக்கொன்று இசைவாகத் தொடர்புபடுத்துவதற்காக ஐ. நா. சபையில் ஒரு நிரந்தர உறுப்பு அமைக்கவேண்டும் என்ற கருத்தினைப் பன்னாட்டு வர்த்தக அமைப்புத் தனது ஹவானா மாநாட்டில் வெளியிட்டது; ஆனால், அக் கருத்தினைச் செயற்படுத்தும் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.[2] இது விஷயமாக எனது கருத்துகளை இன்னும் விரிவாக விளக்கி, பொருளாதார வளர்ச்சியை மேற்கொள்வதற்காக மட்டுமே ஒரு புதிய உலக அமைப்பினை உருவாக்குவதற்கான சரியான திட்டமொன்றினை துணைக் கமிஷனுக்கு நான் வழங்கினேன். அதனை 'ஐ. நா. சபையின் பொருளாதார அபிவிருத்தி நிருவாகம்' (U.N.E.D.A.) எனக் குறிப்பிட்டுள்ளேன். எனது சீரிய திட்டங்களை நிதானத்துடன் ஆராய்வதற்குத் துணைக் கமிஷனுக்கு நேரம் கிடைக்கவில்லை. ஆனாலும் 'இத் திட்டங்கள் ஆராயத்தக்கவை' என்றும், 'பொருளாதார—வேலைக் கமிஷன்' (Ecconomic and Employment Commission) இவற்றைக் கவனிக்கவேண்டும் என்றும் சிபாரிசு செய்து, துணைக் கமிஷன் தனது கருத்தினை வெளிப்படுத்தியது.

[2] பார்க்கவும். வர்த்தகம், வேலை பற்றிய ஐ. நா. சபையின் மாநாடு நிறைவேற்றிய தீர்மானம் பின்வருமாறு:

தொழில்துறை சார்ந்த பிரச்சினைகளையும், பொதுப் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகளையும், பன்னாட்டு வர்த்தக அமைப்பின் உறுப்பினர் நாடுகளின் புனரமைப்புப் பிரச்சினைகளையும் பரிசீலனை செய்த பிறகு,

அரசாங்கங்களுக்கிடையே உள்ள ஏனைய அமைப்புகள், தனித்த ஏஜென்சிகள் ஆகியவற்றின் தொடர்பான நடவடிக்கைகளைக் குறித்துக் கொண்ட பின்னர்,

பன்னாட்டு வர்த்தக அமைப்பின் சாசனத்திலுள்ள முதலாம் விதி குறித்துள்ள குறிக்கோளினை உணர்ந்து, அதில் பயின்றுவரும் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கு முக்கிய நிபந்தனையாக, உறுப்பினர் நாடுகளின் புனரமைப்பையும் பொருளாதார வளர்ச்சியையும் தூண்டுகின்ற உறுதியான நடவடிக்கைகள் உள்ளன; அந்த நடவடிக்கைகளைப்பற்றி அலசியபின்னர்,

சாசனத்தின் 10, 72, 86, 87ஆம் விதிகளின் நிபந்தனை வாசகங்களைப் பொறுத்தவரையில்,

வர்த்தகம், வேலைபற்றிய ஐ. நா. சபையின் மாநாடு பின்வருமாறு தீர்மானிக்கிறது:

I. பன்னாட்டு வர்த்தக அமைப்பின் இடைக்காலக் கமிஷன் பின்வரும் விஷயங்களைப் பரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(i) தொழில் வளர்ச்சி, பொதுப் பொருளாதார வளர்ச்சி, புனரமைப்பு முதலானவைபற்றிய துறையில், ஐ. நா. சபை, தனித்த ஏஜென்சிகள், அரசாங்கங்களுக்கிடையே நிலவும் ஏனைய அமைப்புகள், பிராந்திய அமைப்புகள் ஆகியவை கொண்டுள்ள அதிகாரங்களைப் பற்றியும், பொறுப்புகளைப் பற்றியும், செயல்களைப்பற்றியும் இடைக்காலக் கமிஷன் ஆராயவேண்டும்.

கீழே எனது திட்டங்களைத் தருகிறேன்; துணைக் கமிஷனின் மூன்றும் கூட்டத்தின் அறிக்கையில் இத் திட்டங்கள் பிற் சேர்க்கையாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

(A) சிபாரிசு செய்யப்பட்ட அமைப்பிற்குரிய காரணங்கள்

1. பாங்குக் கருத்தில், நிதிவகையில் ஆக்கமில்லாத, வளர்ச்சி குன்றிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்காக நிதி திரட்டவும்,

2. தங்களுடைய பொருளாதார வளர்ச்சிக்குரிய திட்டங் களைத் தயாரிக்கவோ, நிறைவேற்றவோ அல்லது தயாரித்து நிறைவேற்றவோ வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு உதவவும்,

3. ஐ. நா. சபை மூலமாகவோ அல்லது அதன் தனித்த ஏஜென்சிகள் மூலமாகவோ வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு நுட்பத் தொழில் உதவியினைப் பகிர்ந்தளிப்பதை ஓரினப் படுத்தவும், அவற்றை நிதியுதவியுடன் இணைக்கவும்,

4. எந்த நாடும் தன் சொந்த முயற்சியில் மேற் கொள்ளாத, பொருளாதார வளர்ச்சிக்குரிய திட்டங்களை நிறைவேற்றவும் அல்லது அத் திட்டங்களுக்கு உதவவும்,

தற்பொழுது ஒரு பன்னாட்டு ஏஜென்சி இல்லாததால், 'ஐ. நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக

(ii) வளர்ச்சி குன்றிய நாடுகளின் இயற்கைவளச் சாதனங்களைப் பற்றி ஆராய்ச்சிகள் செய்யவோ அல்லது நுட்பத் தொழில் ரீதியான கணக்கெடுப்புகள் செய்யவோ கிடைத்துள்ள வசதிகள்; அல்லது, அந் நாடுகளிலேயே கிடைக்கும் கச்சாப் பொருள்களைப் பக்குவப்படுத்தும் தொழில் முன்னேற்றத்திற்கோ அல்லது பொதுப்படையான தொழில் முன்னேற்றத்திற்கோ அல்லது வேறு குறிப்பிட்ட தொழில்களின் முன் னேற்றத்திற்கோ உள்ள சாத்தியங்கள்; அல்லது, பண்டம், செய்தி ஆகியவற்றின் போக்குவரத்து அமைப்புகளின் அபிவிருத்திக்குக் கிடைத் துள்ள வசதிகள்; அல்லது, பொருளாதார வளர்ச்சிக்கு அந்நிய முதலீடு எந்த வகையில் பயனுடையதாகவிருக்கும் என்பது பற்றிய கணிப்பு; இவையனைத்தையும் இடைக்காலக் கமிஷன் ஆராய்ந்து, ஐ. நா. சபைக்குக் கீழ்க்கண்ட இரு விஷயங்களைப்பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்:

(a) கட்டமைவும் நிருவாக முறைகளும்.

(b) உறுப்பினர் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியினையும் புனரமைப்பினையும் பன்னாட்டு வர்த்தக அமைப்பு உறுதியுடனும் மிக்க திறமையுடனும் நிறைவேற்றுவதற்கு உகந்த முறையில், ஐ. நா. சபை யுடனும், தனித்த ஏஜென்சிகளுடனும், அரசாங்கங்களுக்கிடையே நிலவும் ஏனைய அமைப்புகளுடனும் பிராந்திய அமைப்புகளுடனும் அது மேற் கொள்ளவேண்டிய செயல் ரீதியான தொடர்புகள்.

II. பன்னாட்டு வர்த்தக அமைப்பின் மாநாடு தனது முதல் கூட்டத் திலேயே தக்க நடவடிக்கை எடுப்பதற்கு உகந்த முறையில், இடைக்காலக் கமிஷன் தனது அறிக்கையையும் சிபாரிசுகளையும் தக்க வேளையில் வாய்ப்பும் வகையும் பார்த்து வெளியிடவேண்டும்.

அமைப்பு' (The United Nations Economic Development Administration அல்லது Uneda) என்ற ஒரு புதிய பன்னாட்டு அமைப்பினை ஏற்படுத்த வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

(B) சிபாரிசு செய்யப்பட்ட அமைப்பின் நடவடிக்கைகள்

ஐ. நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்பின் நடவடிக்கைகள் பின்வருமாறு :

1. பொருளாதார வளர்ச்சிக்குரிய திட்டங்களைத் தயாரிப்பதில் வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு நுட்பத் தொழில் உதவி வழங்குதல்.

2. ஐ. நா. சபையின் சார்பிலும் அதன் தனித்த ஏஜென்சிகளின் சார்பிலும் வளர்ச்சி குன்றிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்குத் தற்பொழுது கிடைக்கும் நுட்பத் தொழில் உதவியினை ஓரினப்படுத்துதல்; இவ்வாறு நுட்பத் தொழில் உதவியினை ஓரினப்படுத்துதல் எதற்காகவெனில், அவ்வுதவியின் பல்வேறு வகைகளை நல்ல வண்ணம் இணைத்து, குறிப்பிட்ட நாட்டின் திட்டமிட்ட வளர்ச்சியைத் தூண்டுவதற்கேயாம்.

3. பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வளர்ச்சி குன்றிய நாடுகளுக்குத் தேவைப்படும் பண்டங்கள், உபகரணம், ஆட்கள் முதலானவற்றை வழங்குதல்.

4. பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒரு நாட்டின் சொந்த வளச் சாதனங்களைப் பயன்படுத்த முடியாதபொழுதும், கடும் வியாபார விதிகளின் அடிப்படையில் கடன்கள் பெற முடியாதபொழுதும் நிதி வழங்குதல் அல்லது நிதி வழங்க உதவுதல்.

5. தன் சொந்த முயற்சியில் எந்த நாடும் மேற்கொள்ளாத பிராந்திய அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுதலும், தேவைப்பட்டால், அத் திட்டங்களுக்கு வேண்டிய நிதியினை ஆக்குதலும் இயக்குதலும்.

(C) சிபாரிசு செய்யப்பட்ட அமைப்பின் நிதி நிலைமை

ஐ. நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்பின் (UNEDA) நிதியினை உறுப்பினர் அரசாங்கங்கள் வழங்கின. தங்களுடைய சொந்த நாணயச் செலாவணிகளிலேயே உறுப்பினர் அரசாங்கங்கள் தங்களுடைய பங்கினை

அளிக்கும். அந்த அரசாங்கங்களின் ஒப்புதலின் பேரில்தான் அவை வழங்கிய நிதி செலவழிக்கப்படும். மேலும், 1952-ல் பொருளாதார மீட்சி ஏற்பட்ட பிறகு, ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து, ஐரோப்பிய மீட்சித் திட்டத்தின்கீழ், உதவிபெறும் நாடுகள் பிரத்தியேகமாக நிதியினை வழங்க வேண்டும்.

(D) சிபாரிசு செய்யப்பட்ட அமைப்பு வழங்கும் நிதிபற்றிய விதிகள்

1. வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு மட்டிலுமே நிதியுதவி அளிக்கப்படும். உலக ரீதியான ஒப்புதலின் பேரிலேயே இப்பகுப்பின்கீழ்வரும் நாடுகளின் அட்டவணை தயாரிக்கப்படும்.

2. சொந்த ஆட்சி இல்லாத பகுதிகளையும் டிரஸ்டு பகுதிகளையும் (trust territories) தவிர்த்து, குறிப்பிட்ட ஏனைய நாடுகளின் வேண்டுகோளின்பேரில் மட்டும் இவ்வுதவி வழங்கப்படும். சொந்த ஆட்சி இல்லாத பகுதிகளையும் டிரஸ்டுப் பகுதிகளையும் பொறுத்தவரையில், குறிப்பிட்ட நிருவாக அதிகார அமைப்புடன் தனி ஏற்பாடு செய்துகொண்டு, ஐ. நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்புத் தானே முயற்சி எடுக்கும்.

3. உலக பாங்கின்மூலம் நிதி வழங்க முடியாத திட்டங்களுக்கோ அல்லது அரசாங்கங்களுக்கிடையே நிதி வழங்க முடியாத திட்டங்களுக்கோ அல்லது தனியார் துறை சார்ந்த முதலீடுகளினால் நிதி வழங்கப் பெறாத திட்டங்களுக்கோ மட்டிலும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள உதவி வழங்கப்பெறும். அதாவது, பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ள திட்டங்களுக்கும், தேசிய ஆக்கத் திறனையும் மக்களுடைய வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்துகின்ற திட்டங்களுக்கும் மட்டிலுமே உதவி வழங்கப்பெறும்.

4. சாதாரணமாக, கடன்கள் உருவில்தான் உதவி வழங்கப்பெறுமேயன்றி, அரசாங்க மான்ய (grant) உருவில் அன்று. என்றாலும், கடன்களைத் திரும்ப அடைப்பதற்கு உரிய விதிகள் எளிய முறையில் அமைந்துள்ளன; இன்னும், வட்டி முறையும் வெறும் பெயரளவிலேயே போடப்பட்டுள்ளன.

5. திட்டங்களுக்காகும் செலவின் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் மீதுதான் உதவி வழங்கப்பெறும். உண்மையில், அநேக வேளைகளில் செலவில் 50 சதவீதத்தை வளர்ச்சி குன்றிய நாடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொதுக் கருத்துகள்

அந்நிய உதவியைத் தேடும் வளர்ச்சி குன்றிய நாடுகளுக்குப் பணத்தை உடனடியாகக் கொடுத்துவிடும் கொடையாளர் அமைப்பாக இயங்கும் என்று ஐ. நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிர்வாக அமைப்பினை எதிர்பார்க்கக் கூடாது. மரபு வழாத பாங்குக் கோட்பாடுகளினால் சாதாரணமாக ஏற்கப்படாத திட்டங்களைப்பற்றியே அவ்வமைப்பு முக்கியமாக சிரத்தை எடுத்துக்கொள்ளும் என்பது உண்மையே. ஆனால், அதற்குப் பொருள், பலனற்ற அல்லது உணர்ச்சி பூர்வமான திட்டங்களுக்கு வேண்டிய நிதியினை ஆக்குவதைக் குறிப்பதாகாது. பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்பின் உதவியைக் கோரும் அபிவிருத்தித் திட்டங்கள் பொருளாதார உரைகல்லில் உரைக்கப்பெற்று ஏற்கப்படும்; அதாவது, வளர்ச்சி குன்றிய நாடுகளில் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படுகின்ற அல்லது மேற்கொள்ள விரும்புகின்ற மரபு வழாத திட்டங்களை[3] (orthodox projects) திறனுடனும் வெற்றியுடனும் நிறைவேற்றுவதற்குரிய அடிப்படை நிலைகளை வழங்குவதன்மூலம், வளர்ச்சி குன்றிய பிரதேசங்களின் ஆக்கத் திறனையும், அப் பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் திறனையும் உயர்த்துகின்ற விளைவினை அத் திட்டங்கள் உண்டாக்க வேண்டும்.

இவ்வாறாக, ஐ. நா. சபையின் பொருளாதார வளர்ச்சி பற்றிய நிருவாக அமைப்பினை அந்நிய நிதியாக்கத்திற்குரிய ஏனைய வழிகளுடன் இசைவான ஒன்றாகக் கொள்ளவேண்டுமேயன்றி, அவ் வழிகளுக்கு மாறானதாகவோ அல்லது பதிலியாகவோ கொள்ளக்கூடாது. மேலும், அது வியாபார நோக்குடனேயே வேலை செய்யும் என எதிர்பார்க்கப்படும். எனவே, அது எண்ணற்ற திட்டங்களை மேற்கொண்டு ஆரவாரத்துடனும் ஆடம்பரமாகவும் வேலை செய்ய முற்படாது. ஆனால், அந்த நிருவாக அமைப்பு, அவசர முக்கியத்துவம் உடைய தனித்த திட்டங்களை மேற்கொண்டு, விளைவுகளைப்பற்றிய அனுபவ அடிப்படையில் தனது காரியங்களை விரிவுபடுத்த முற்படும். பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்பு வழங்கும் நுட்பத் தொழில் உதவியும் நிதியுதவியும் வளர்ச்சி

[3] கடன்மூலம் முதலீடு செய்யப்படுவதால், அதன்மீது எழுகின்ற வட்டியினைச் செலுத்தவும் கரைப்பு நிதி மூலம் (sinking fund) கடன் கரைப்பு (amortization) செய்யவும் தேவைப்படும் வருமானத்தை உண்டாக்கும் திட்டத்தினையே இவ்விடத்தில் 'மரபு வழாத் திட்டம்' எனக் குறிப்பிடுகிறோம்.

குன்றிய நாடுகளின் வாழ்க்கையிலோ அல்லது உள்நாட்டு நிருவாகத்திலோ குறுக்கிடுகின்ற ஒரு புதிய பன்னாட்டு நிருவாக இயந்திரத்தை ஏற்படுத்தாது என்ற எச்சரிக்கையையும் கவனிக்க வேண்டும்; ஆனால், அவ்வுதவிகளைத் தனித்த ஏஜென்சிகள் பெரிதும் மேற்கொள்ளும்; எல்லாச் சமயங்களிலும், குறிப்பிட்ட நாடுகளின் அரசாங்கங்களின் மிகவும் நெருக்கமான ஒத்துழைப்புடன் அந்த ஏஜென்சிகள் அவ்வுதவிகளை நிருவகிப்பன. வளர்ச்சி குன்றிய நாடுகள் தங்களுடைய சொந்தக் காலிலேயே ஊன்றி நின்று, பின்னர் அந்நிய உதவியைத் துறக்கின்ற முறையில் வாய்ப்பினைப் பெறும் வகையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நுட்பத் தொழில் உதவியும் நிதியுதவியும் நிருவகிக்கப்படுவன. எனவே, முக்கிய மாக, அந்த நிருவாக அமைப்புப் பொருளாதார ஆய்வு முறையின் அடிப்படையில் செயற்பட்டு, வளர்ச்சி குன்றிய நாடுகள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ளும் வகையில் துணைபுரியும். உண்மை நிலையைக் கூற வேண்டு மெனில், இன்னும் கொஞ்ச காலத்திற்குப் பொருளாதார வளர்ச்சிபற்றிய அந்த நிருவாக அமைப்பின் நிதியின் பெரும் பகுதி ஐக்கிய அமெரிக்காவே வழங்க வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும்; ஆனால், ஐரோப்பிய மீட்சித் திட்டத்திற்குத் தற்பொழுது அமெரிக்கா செலவழிக்கும் பணத்தின் அளவைவிடக் குறைவானதாகவே இது இருக்கும்; மேலும், ஐ. நா. சபையின் அமைப்பிற்குள்ளாகவே இயங்கி, ஜனாதிபதி ட்ரூமனின் அண்மைக் காலத்திய துவக்க விழா உரையின் இலட்சியங்களை நிறைவேற்றி, உலகு முழுதும் பரவும் தன்மையை உடையதாக இந்த நிதி உதவி அமையும் எனலாம்.

மேலே தரப்பட்டுள்ள கருத்துகள் பொதுப்படையாக விளக்கப்பட்டுள்ளன; அவற்றைச் செயற்படுத்துவதற்கு முன்னர், அவற்றைத் தெளிவான முறையிலும் விரிவான முறையிலும், சிந்தித்துப் பார்க்கவேண்டும். இருந்தபோதிலும், இக் கருத்தினை நான் இங்கு எடுத்தியம்பி இருப்பதற்குக் காரணம், வளர்ச்சி குன்றிய நாடுகளில் விரைந்து பொரு ளாதார அபிவிருத்தியை உண்டாக்குவதற்கு ஐ. நா. சபை அவசரமாகவும் உறுதியுடனும் ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமான தேவை எழுந்துள்ளது என அச்சபை உணரவேண்டும் என்ற நம்பிக்கையே ஆகும். இதனை நிறை வேற்ற ஒரு புதிய ஐ. நா. சபையின் ஏஜென்சியினை நிறுவ வேண்டும் என்பதே என் நம்பிக்கையாகும். முன்னரே

நிலவும் மரபு வழாத, பழைமையான அந்நிய நிதியாக்கத்திற்குத் துணையாக இந்த ஏஜென்சி அமையும்; மேலும், வளர்ச்சி குன்றிய நாடுகளுக்குத் தேவையான நுட்பத் தொழில் உதவி அளிப்பினை இந்த ஏஜென்சி ஒன்றுபடுத்தி, ஓரினப்படுத்தி இணைக்கும் வேலையை மேற்கொள்ளும்.

இக் கருத்துகளைப் பொருளாதார, வேலைக் கமிஷன் (Economic and Employment Commission) ஏற்றுக்கொள்ள வில்லை. ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதியும் ஏனைய வளர்ச்சி மிகுந்த நாடுகளின் பிரதிநிதிகளும் துணைக் கமிஷனின் (Sub-Commission) அறிக்கையைக் கண்டு மிகவும் அதிருப்தியடைந் தனர்; அதிலும், குறிப்பாகத் துணைக் கமிஷன் தனியார் முத லீட்டின்மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதி யினைத் திரட்டுவதில் அவ்வளவாக நம்பிக்கை கொள்ளாத தாலும், அனைத்துலக நடவடிக்கையில் நம்பிக்கை கொண்டு அதனை வலியுறுத்தியமையாலும், பொருளாதார அபிவிருத் திக்கு அனைத்துலக ரீதியில் நிதி திரட்டிப் பெருக்கவேண்டும் என்று வலியுறுத்தியமையாலும் அதன் அறிக்கையைக் கண்டு மிகவும் அதிருப்தியடைந்தனர். இப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் தனது சொந்த நிருவாக ஏஜென்சிமூலம் ஐக்கிய அமெரிக்கா தேசிய நடவடிக்கை எடுக்கிறது. ஆனால், தங்களுடைய சொந்த நிதி நிலைமையை இப் புதிய அனைத்துலக ஏஜென்சி வெகுவாகப் பாதிக்கும் என்றும், தங்களுடைய காலனிப் பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சிக்குத் தாங்கள் சுதந்திரமாகவும் ஒருதலையாகவும் மேற்கொள்ளும் திட் டத்தினையும் இப் புதிய ஏஜென்சி பாதிக்கும் என்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் தலைநகரங்களும் பயந்தன. எனவே, பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்புப் போன்ற ஒரு புதிய அனைத்துலக ஏஜென்சியை அமைக்கும் திட்டத்தை அந் நாடுகள் மறுத்ததோடு விடாது, பொருளாதார வளர்ச்சிக் கென நிறுவப்பட்ட துணைக் கமிஷனைக் கலைத்துவிட வேண்டும் என்று பொருளாதார - வேலைக் கமிஷனின் பெரும்பாலான உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் காட்டிய பரிந்துரையையும் அந் நாடுகள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டன. ஐக்கிய அமெரிக் காவில் உள்ள வேறு சில குழுவினர் எனது திட்டங்களையும் கடுமையாகக் கண்டித்தனர்; ஃபார்ச்சூன் (fortune) என்ற மாதாந்தரச் செய்தித் தாளும் எனது திட்டங்களைத் தாக்கியது; புனரமைப்பிற்கும் அபிவிருத்திக்கும் அமைக்கப் பெற்ற உலக பாங்கு, தனது நான்காவது ஆண்டு அறிக்கையில் எனது திட்டங்களைப்பற்றிக் கூர்மையான திறனாய்வு செய்துள்ளது.

அதே வேளையில், பொருளாதார வளர்ச்சியினைத் துரிதப் படுத்தவேண்டிய அவசியத்தையும், இதனை நிறைவேற்ற அனைத்துலக ஏஜென்சி தேவை என்பதையும் நன்குணர்ந்துள்ள வேறு சில குழுக்கள் ஐக்கிய அமெரிக்காவில் உள்ளன. அக் குழுக்கள் எனது திட்டங்களை அனுதாபத்துடன் பரிசிலனை செய்வதற்கு விரும்பின. பொருளாதார வளர்ச்சிக்கென வெளிநாட்டு நிதியினைத் திரட்டும் நிதியாக்கத் துறையில், தனியார் துறை சார்ந்த முதலீட்டிற்கும் பொதுத் துறை சார்ந்த கடன் அளிப்பிற்கும் இடையில் மோதுதலும், நாட்டு ஏஜென்சி மூலம் அந்நிய நிதியாக்கத்தை இயக்குவதா அல்லது பன்னாட்டு ஏஜென்சிமூலம் அதனை இயக்குவதா என்பது குறித்துச் சர்ச்சையும் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது.

பொருளாதார - வேலைக் கமிஷன், பொருளாதார வளர்ச்சி பற்றிய அதன் துணைக் கமிஷன் ஆகியவற்றின் அறிக்கையைப் பொருளாதார - சமூகக் கவுன்சில் (Economic and Social Council) அலசிப் பார்த்து விவாதிக்கும்பொழுது, பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியினைத் திரட்டும் பிரச்சினை முழுதும் பற்றிக் கணிசமான அளவிற்கு எண்ணிப் பார்த்தது. துணைக் கமிஷன் குறிப்பிட்டதுபோல, பொருளாதார வளர்ச்சிக்குரிய பன்னாட்டு நிதியின் இன்றைய மூலங்களில் ஏதேனும் இடைவெளி உள்ளதா என்ற பிரச்சினையையே பொருளாதார-சமூகக் கவுன்சில் பெரிதும் விவாதித்தது. 1950ஆம் ஆண்டின் துவக்கத்தில் தனது பத்தாவது கூட்டத்தில் இப் பிரச்சினை குறித்த விவாதத்தினை அக் கவுன்சில் நிறுத்தி வைத்தது. ‘ கவுன்சிலின் பதினோராவது கூட்டத்தில், சரியான நேரத்தில், பரிசீலனை செய்வதற்காகவேண்டித் தனது அடுத்த கூட்டத்தில் வளர்ச்சி குன்றிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய நிதியினைத் திரட்ட நடைமுறைக்கு ஒத்த பரிந்துரைகளைத்’ துணைக் கமிஷன் உருவாக்க வேண்டுமெனக் கவுன்சில் தீர்மானித்தது. அவ்வாறே துணைக் கமிஷனும் 1950ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்திலும் மே மாதத்திலும் தனது நான்காவது கூட்டத்தையும் இறுதிக் கூட்டத்தையும் கூட்டி, சில பரிந்துரைகளை வழங்கிற்று ; இக் கட்டுரையின் பிற்பகுதியில் அப் பரிந்துரைகள் விவாதிக்கப்படுகின்றன.

இதற்கிடையில், பொருளாதார – சமூகக் கவுன்சிலின் தூண்டுதலின்பேரில், வேலை நிறைவினை அடையத் தேவைப்படும் தேசிய, அனைத்துலக நடவடிக்கைகளைப்பற்றி அறிக்கையினைத் தயாரிக்கப் பொருளாதார நிபுணர்களின் தனித்த கமிட்டி ஒன்றினை ஐ. நா. சபையின் பொதுச் செயலாளர்

அமைத்தார். அக் கமிட்டி தனது அறிக்கையை 1949ஆம் ஆண்டு, டிசம்பர் திங்களில் சமர்ப்பித்தது. அநேக விஷயங்களுக்கிடையில், வேலை நிறைவினை அடைவதற்கு அனைத்துலக நடவடிக்கையாகப் பொருளாதார அபிவிருத்தியைத் தூண்டும் நிதி திரட்டுதலும் அவ்வறிக்கையில் விவாதிக்கப்பெற்றது. பன்னாட்டு முதலீட்டின்மூலமே வேலை நிறைவினை உண்டாக்க முடியுமென நிபுணர்கள் வலியுறுத்தினர். 'தொழில் துறையில் முன்னேறியுள்ள நாடுகளிலிருந்து வளர்ச்சி குன்றிய பிரதேசங்களுக்கு வழிந்தோடும் முதல் போதுமானதாகவும் நிலையானதாகவும் இருக்க வேண்டு'மென அந்த நிபுணர்கள் அழுத்தமாக உரைத்தனர். 'தக்க பன்னாட்டமைப்பின்மூலமே பன்னாட்டு முதலீடு வழங்கப்பட வேண்டும்' என்று அவர்கள் மேலும் வலியுறுத்தினர். பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் பன்னாட்டு நிதிகளில் ஒரு சிறு பகுதிக்குமேல் தனியார் துறை சார்ந்த முதலீடு வழங்காது என்ற துணைக் கமிஷனின் முடிவினை அந் நிபுணர்கள் ஏற்றுக்கொண்டனர். இருந்தபோதிலும், இக் காரியத்திற்காக ஒரு புதிய பன்னாட்டு ஏஜென்சி அமைக்க வேண்டும் என்று அவர்கள் கருத்துத் தெரிவிக்கவில்லை.

தற்பொழுது நடைமுறையிலுள்ள தனியார் துறை முதலீடும், உலக பாங்கு கடன்களும் அளவில் போதுமானதாகவோ அல்லது காலவரையறையில் நிலையானதாகவோ இல்லை என்று அவர்கள் ஒப்புக்கொண்டனர். எனவே, 'ஐந்து ஆண்டுகளுக்கு, நீண்ட காலப் பன்னாட்டு முதலீட்டிற்கு ஆண்டு இலக்குகளைக் கடனளிக்கும் நாடுகள் நிர்ணயிக்க வேண்டும்' என்றும், 'திட்டமிட்ட அளவில் மொத்தக் கடனளிப்பினை நிலையானதாக்கச் சட்டபூர்வமான, நிருவாக ரீதியான நடவடிக்கைகளைத் தேவையான அளவிற்கு அந் நாடுகள் மேற்கொள்ள வேண்டும்' என்றும், 'மொத்தக் கடனளிப்பானது தனியார் துறை முதலீட்டினையும் பொதுத் துறைக் கடனளிப்பினையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்' என்றும் அவர்கள் பரிந்துரை வழங்கினர். அரசாங்க ரீதியான கடன்களின் பெரும் பகுதியினை உலக பாங்கின்மூலம் வழங்க வேண்டும் என்பதும், கடனளிக்கும் நாடுகளின் அரசாங்கங்கள் நேரடியாகவும் நடப்பு அடிப்படையிலும் தங்களுடைய நிதிகளை உலக பாங்கிடத்திலேயே கொடுத்துவிட வேண்டும் என்பதும் அவர்களுடைய பரிந்துரைகளில் காணக் கிடைக்கும் முக்கிய அம்சமாகும். பொருளாதார வளர்ச்சிக்குவேண்டிய நிதியாக்கத்தில் உலக பாங்கு இத்தகைய நிதிகளை நல்ல

வண்ணம் நிருவகிக்கவும், அந்த பாங்கு பின்பற்றி வரும் கடன் கைக்கோளினையும் மீறி, இன்னும் தாராளமான முறையில் மேலே குறிப்பிட்ட நிதிகளை நிருவகிக்கவும், பாங்கினுடைய உடன்படிக்கை விதிகளைத் தக்க முறையில் திருத்த வேண்டும் என்று நிபுணர்கள் பரிந்துரை வழங்கினர். ஐ. நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்பு எனப்படும் ஒரு புதிய அனைத்துலக ஏஜென்சியினை ஏற்படுத்த வேண்டும் என்றும், அது பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியினைத் திரட்டும் வசதிகளைப் பெருக்கும் பிரச்சினையையும் வளர்ச்சி குறித்த ஏனைய பிரச்சினைகளையும் கவனிக்க வேண்டும் என்றும் நான் கருத்துத்தெரிவித்திருக்கும்பொழுது, நிபுணர்கள் நிதித் துறையில் மட்டும் கருத்துச் செலுத்தி, பொருளாதார வளர்ச்சிக்கு உலக பாங்கில் ஒரு புதிய இலாகாவினை அமைக்க யோசனை கூறினர். நடப்பில் உள்ள அனைத்துலக நிதியாக்க ஏஜென்சியில் ஒரு புதிய இலாகாவினைப்பற்றிய விவரங்கள் கீழே தரப்படுகின்றன.

பொது வளர்ச்சிக்குரிய கடனளிப்பு இலாகாவின் அமைப்பு

(a) அரசாங்கங்களுக்கு வேண்டிய பொது வளர்ச்சிக்குரிய கடனளிப்பினை நிருவகிக்கவும், இத்தகைய கடனளிப்பிற்கு வேண்டி அரசாங்கங்களிடமிருந்து கடன் வாங்கி நிதிகளை உருவாக்கவும் உலக பாங்கின் சார்பில் ஒரு புதிய இலாகாவினை ஏற்படுத்தவேண்டும்.

(b) இப் புதிய இலாகா உலக பாங்கின் நிருவாகத்தில் இருக்க வேண்டும். ஆனால், அவ்விலாகா தற்பொழுது அமைந்துள்ள உலக பாங்கிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்க வேண்டும். குறிப்பாக, உலக பாங்கின் மூலதனத்தையோ அல்லது அதன் நடப்புச் செயல்களிலிருந்து கிடைக்கும் ஏனைய வளங்களையோ இப் புதிய இலாகா நாடக் கூடாது. எனவே, இவ்விலாகா தனக்கெனச் சொந்த மூலதனம் இல்லாமலேயே இயங்க வேண்டும்; ஆனால், கடன் வாங்கிய நிதிகளைக் கொண்டே அது முழுதும் இயங்க வேண்டும்.

(c) கடனளிக்கும் அரசாங்கங்களிடமிருந்து பெறும் நிதிகளை உலக பாங்கு, பொதுக் கடன் நிதியில் சேர்க்க வேண்டும். அப் பொதுக் கடன் நிதியிலிருந்து பாங்கு, கடன் வாங்கும் நாடுகளுக்குக் கடனுதவி செய்யவேண்டும். எனவே, பாங்கினுடைய விசேஷக் கடனளிப்பிற்கும் விசேஷக் கடன் வாங்குதலுக்கும் இடையில் நேரடியான தொடர்பு கூடாது.

கடன் வழங்கும் அரசாங்கங்களுடன் பாங்கின் தொடர்புகள்

(a) தங்களுடைய சொந்தச் சந்தைகளிலிருந்து எந்த விதிகளின்படி அரசாங்கங்கள் கடன் வாங்குகின்றனவோ, அந்த விதிகளின்படியே நீண்டகால அடிப்படையில் அரசாங்கங்களிடமிருந்து பாங்கு கடன் வாங்க வேண்டும்.

(b) பொதுவாகவே, தங்களுடைய நீண்டகால அந்நியக் கடனளிப்புத் திட்டங்களின் இயல்பினைப் பொறுத்தும், மேலே குறிப்பிட்ட முறையில் தங்களுடைய அந்நிய முதலீட்டுப் பருமத்தை நிலைபெறச் செய்வதன் அவசியத்தைப் பொறுத்தும் அரசாங்கங்கள் பாங்கிற்கு அளிக்கும் கடன்களின் அளவு அமையும்.

(c) கடனாளிகள் தங்களுடைய கடன்களைத் திரும்பவும் தந்தவுடன், கடன் வழங்கிய அரசாங்கங்களுக்குத் தரப்பட்ட ஆவணங்களைச் சாதாரணமாக பாங்கு மீண்டும் வாங்கிவிடவேண்டும். எனினும், வளர்ச்சித் தேவைகள் போதுமான அளவிற்குப் பூர்த்தி செய்யப்படவில்லை என பாங்கு கருதினால், கடன் வழங்கும் அரசுகளின் சம்மதத்தின்பேரில், திருப்பித் தரப்பட்ட கடன்களை மீண்டும் கடன் பெறும் நாடுகளுக்கே பாங்கு அளிக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலையில், கடனளிக்கும் நாடுகள் காலக்கெடு முடிந்தவுடன் கடன்களைத் திரும்பவும் வழங்க ஒப்புதல் தரவேண்டும்.

(d) கடனளிக்கும் நாடு தன்னுடைய சொந்தச் செலாவணியிலேயே பாங்கிற்குக் கடன் வழங்கவேண்டும். எந்த நாட்டிலுமுள்ள கடன் பெறுபவர்கள், பாங்கிடமிருந்து தங்களுக்கு ஆகும் செலவிற்கு வேண்டிய நிதியினைப் பெறுவதற்குச் சாதாரணமாக வாய்ப்பிருக்க வேண்டும். எனினும், பொதுச் செலாவணி மாற்று (general currency convertibility) ஏற்படுத்துகின்ற வரையில், இன்னும் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் பாதகம் நிறைந்த தொல்லைகள் உள்ள, கடன் வழங்கும் நாடுகளுக்கு இவ் விதியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும்.

(e) தான் வழங்கிய கடன் ஏதேனும் திரும்ப வராததால் பாங்கிற்கு ஏற்பட்ட இழப்பினை இலாக்காவின் காப்பு நிதிகளின்மூலம் ஈடு செய்ய முடியவில்லை எனில், பாங்கின் நிலுவைகளிலிருந்து அதனை ஒரு குறிப்பிட்ட வீதாசாரத்தில் சரிக்கட்ட வேண்டும்.

கடன் வாங்கும் அரசாங்கங்களுடன் பாங்கின் தொடர்புகள்

(a) கடன் வாங்கும் நாடுகளின் மத்திய அரசாங்கங்களுக்கு அபிவிருத்திக்கு வேண்டிய கடன்களை பாங்கு அளிக்க வேண்டும்.

(b) கடன் வாங்கும் அரசுகள் சமர்ப்பிக்கும் பொது வளர்ச்சித் திட்டங்களின் அடிப்படையில் இத்தகைய கடன்களை பாங்கு அளிக்கவேண்டும். இத்தகைய கடன்களினால் தேசிய வருமானம், வரிகொடுக்கும் வல்லமை (taxable capacity), ஏற்றுமதி வல்லமை முதலானவற்றில் ஏற்படும் விளைவே அக் கடன்களின் பயன்பாடுபற்றிய உரைகல்லாகும். வளர்ச்சித் திட்டத்தின் விளைவுகளைச் சரியாக அளவிடமுடியாது என்றபோதிலும், பொதுவாகவே, கடனளித்ததன் விளைவாகக்கடன் வாங்கிய நாட்டின் நடப்பு, அயல் நாட்டுக் கொடுப்பல்நிலை (current balance of payments) போதுமான அளவிற்குச் சீரடைந்து, வட்டியினையும் கட்டி, கடனையும் திரும்ப முழுதும் அடைக்கும் நிலை உருவாகும் என்று நம்பிக்கை ஏற்பட்டாலொழிய, பாங்கு கடன் வழங்கக்கூடாது.

(c) தங்களுடைய அபிவிருத்தித் திட்டங்களைக் குறிக்கும் மூலதன பட்ஜெட்டுகளை (capital budgets)[4] கடன் வாங்கும் நாடுகள் தயாரிக்க வேண்டும். அந்த அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் ஏற்படும் செலவழிப்புகளை எல்லாம் விவரமாக மூலதன பட்ஜெட்டுகளில் குறிக்கவேண்டும். மூலதன பட்ஜெட்டிற்கு வேண்டிய நிதி அயல் நாட்டுக் கடன் மூலமும், உள்நாட்டுக் கடன்மூலமும் சாதாரணமாகக் கிடைக்கிறது. இருந்தபோதிலும், கடன் வாங்கும் அரசாங்கத்தின் வளர்ச்சித் திட்டம் முழுவதையும் கணக்கெடுக்கவும், தான் வழங்கிய நிதிகளைக் கடன் வாங்கும் அரசு நடப்புச் செலவுகளில் முடக்கிவிடாது பார்த்துக்கொள்ளவும் பாங்கிற்கு அதிகாரம் உண்டு.

(d) பாங்கு தற்பொழுது பின்பற்றுகின்ற முறை போலவே, கடன் வாங்கும் நாடுகளுக்கெலாம் ஒரேமாதிரியான வட்டி வீதத்திலேயே அபிவிருத்திக்குரிய கடன்களை வழங்க வேண்டும். பாங்கு எந்தச் சராசரி வட்டி வீதத்தில் கடன் வாங்குகிறதோ, அந்த வட்டி வீதத்துடன் நிருவாகச் செலவு

[4] அரசாங்கங்கள் விரும்பினால், தற்பொழுது தயாரிக்கப்படும் பட்ஜெட்டுகளுடனேயே மூலதன பட்ஜெட்டுகளையும் தயாரிக்கலாம். எனவே, நிருவாகத் தொடர்புடையதும் சட்டத் தொடர்புடையதுமான பட்ஜெட் முறைகளில் எந்த அடிப்படை மாறுதல்களும் தேவையில்லை.

களுக்கும் கடனைத் திருப்பித் தராததால் ஏற்படும் தொல்லைக்கும் ஆகின்ற செலவினையும் சேர்த்து நிலையாக ஒரு சத வீதத்தையும் கொண்ட வட்டியினையே பாங்கு வாங்க வேண்டும்.

(e) தங்களுடைய சொந்தக் கடன்களைத் திருப்பித் தருவதில் பாங்கிற்கு எந்தச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளனவோ அந்தச் சலுகைகளுக்கு இசைந்தவாறு கடன்வாங்கிய அரசாங்கங்களும் தங்களுடைய கடன்களை நீண்ட காலத் தவணையில் அடைக்க அனுமதி அளிக்கவேண்டும். கடன் வாங்கிய நாட்டின் தேசிய வருமானத்தில் அபிவிருத்தித் திட்டத்தின் விளைவுகள் ஏற்படுவதற்கு முன்னர், துவக்க காலத்தில் கடனைத் திருப்பித் தருதல் முடிந்த அளவிற்குத் தள்ளி வைக்கப்பட வேண்டும்.

இரண்டு அடிப்படையான அம்சங்களில் மேற்குறித்துள்ள சிபாரிசுகள் என்னுடைய சிபாரிசுகளிலிருந்து மாறுபட்டிருப்பது ஒருபுறமிருக்க, வேறு ஒரு முக்கியமான வேறுபாடும் உள்ளது. அதாவது, பொருளாதார வளர்ச்சிக்கு அத்தியாவசியமான திட்டங்களுக்கு வேண்டிய நிதியினை வழங்குவதில், தேவைப்பட்டால் கொடையளிப்பு அம்சம் உள்ள முறையில் வட்டி வீதங்கள் மிகவும் குறைவாக இருக்க வேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்தியிருக்க, தன்னுடைய ஏனைய கடன்கள்மீது பாங்கு விதித்துள்ள வட்டி வீதத்திலிருந்து எந்த விதத்திலும் வேறுபாடு இல்லாத முறையில் இத்தகைய அரசாங்கக் கடன்களுக்கும் பாங்கு வட்டி வீதத்தை நிருணயிக்க வேண்டுமென நிபுணர்கள் வலியுறுத்தினர். பாங்கிடம் உள்ள நிதி போதுமானதாக இல்லை என்பதாலும், பாங்கின் கடன்களைக் கொண்டு நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்களின் தகுதி குறித்த நிபந்தனைகளில் கடுமை நிறைந்திருப்பதாலும் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அளவிற்கு நிதி கிடைக்கவில்லை என நிபுணர்கள் நம்புவதாகத் தோன்றுகிறது. ஆனால், மேலே குறிப்பிட்ட காரணங்களுடன் பொருளாதார முன்னேற்றிற்குத் தேவைப்படும் நிதியினைக் கடனாகக் கோருவதைத் தடுக்கும் காரணியாக வட்டி வீத உயர்வு நிலவுகிறது என்பதே எனது எண்ணமாகும். பொருளாதார வளர்ச்சிக்குப் பன்னாட்டு நிதியுதவி போதுமான அளவிற்கு வேண்டுமெனில், கடனளிப்பதற்குரிய நிதி போதுமான அளவிற்குக் கிடைத்தால் மட்டும் போதாது; தங்களுக்கு வேண்டிய நிதிபற்றிய முன் எச்சரிக்கைக்கு இயைந்தவாறு வளர்ச்சி குறைந்த நாடுகள் விருப்பத்துடன் கடன் வாங்கு

கின்ற நிதியின் அளவும் போதுமானதாக இருக்கவேண்டும். என்னுடைய கருத்தின்படி, மேற்குறித்துள்ள கருத்தினை உணராததுதான் நிபுணர்கள் அளித்துள்ள திட்டத்தின் பெருங் குறைபாடாகும்.

பொருளாதார வளர்ச்சிக்குரிய நிதிபற்றிய பிரச்சினை குறித்து, 1950ஆம் ஆண்டு, ஏப்ரல்-மே மாதங்களில் நடைபெற்ற தனது நான்காவது கூட்டத்தில் துணைக்கமிஷன் ஆராயத் தொடங்கியது. தனது முந்திய திட்டங்களுக்கு, அதிலும் குறிப்பாகத் தலைவரவர்களின் திட்டத்திற்குக் கிடைத்த வரவேற்பிலிருந்து படிப்பினை பெற்ற துணைக்கமிஷன் இன்னும் அதிக கவனத்துடன் புதிய பன்னாட்டு அமைப்பினை ஏற்படுத்தவேண்டும் என்று சிபாரிசு செய்தது. வேலை நிறைவினை உண்டாக்க எடுக்கவேண்டிய தேசிய-பன்னாட்டு நடவடிக்கைகள்பற்றிய நிபுணர்களின் அறிக்கை வெளிவந்த பின்னர், தான் மேற்கொண்ட முயற்சியில் ஓரளவு வெற்றி பெற்றுவிட்டதாகத் துணைக்கமிஷன் உணர்ந்துகொண்டது. இவ்வாறாக, உதாரணமாக, பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியினை வழங்குவதில் தனியார்துறை சார்ந்த முதலீடு போதாது என்பதனை வளர்ச்சியுற்ற நாடுகளில் உள்ள, பாரபட்சமற்றுக் கூர்ந்து நோக்குபவர்கள்கூட உணர்ந்துகொண்டுவிட்டனர் என்பது தெளிவாகும். அபிவிருத்திக்கு வழங்கும் கடன்கள் குறித்து, உலக பாங்கு தாராளமான மனப்பான்மையுடன் காரியம் ஆற்றியது; குறிப்பாக, வழங்கும் கடன்களை குறித்த திட்டங்களுக்கே பயன்படுத்த வேண்டும் என்ற போக்கினைக்கூட உலக பாங்கு கைவிட்டுவிட்டது; மேலும், பிரச்சினைக்குரிய திட்டத்தினால் நேரடியாக ஏற்படும் தனித்த விளைவுகளை மட்டும் கருதுவதற்குப் பதிலாக, ஒரு நாட்டின் பொருளாதாரம் முழுதும் அத் திட்டத்தினால் ஏற்படக்கூடிய நேரடியான விளைவுகளையும் மறைமுக விளைவுகளையும் கருதி, அதன் நிதித் தொடர்புள்ள கூறுகளை நிர்ணயிப்பதற்கு உலக பாங்கு தயாராகவிருந்தது. மேலும், பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியாக்கத்தைப் பொறுத்த வரையில் பாங்கினிடத்தில் இருக்கவேண்டிய நிதியினைப் பெருக்கவேண்டிய அவசியத்தினைப் பாரபட்சமற்ற ஐ. நா. சபையின் நிபுணர்கள் உணர்ந்தனர். பொருளாதார முன்னேற்றமானது எல்லாத் துறைகளிலும் துரிதமாக ஏற்பட வேண்டுமெனில், வட்டியினையும் கடனைத் திரும்பச் செலுத்துவதற்கு வேண்டிய தவணைக்காலத்தையும் பொறுத்தவரையில் அபிவிருத்திக் கடன்களின் நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டிய அவசியத்தினை

இன்னும் நிபுணர்கள் உணரவில்லை. ஆகவே, அபிவிருத்தி நிதியத்தினைப்பற்றித் தெளிவாகப் பகுத்தாயும் வேலையினை, அதிலுங் குறிப்பாகப் பல்வேறு வகைகளைச் சேர்ந்த வளர்ச்சித் திட்டங்களினால் கடனைத் திரும்ப அடைக்கும் திறமையில் ஏற்படும் வேறுபாடுகளைப்பற்றித் தெளிவாகப் பகுத்தாயும் வேலையினைத் துணைக் கமிஷன் மேற்கொண்டது; அதனுடைய வாசகம் பின்வருமாறு:

'பொருளாதார வளர்ச்சி சார்ந்த முன்னேற்றத்தில் அநேக திட்டங்கள் உள்ளன. அவை நேரடியான ஆக்கத்திறனின் வெவ்வேறு அளவுகளைக் கொண்டனவாகும். முதலீட்டுக் கடனைத் தீர்ப்பதற்கு வேண்டிய மொத்த உற்பத்தியையும், அதனைத் தீர்ப்பதற்கு வேண்டிய அந்நியச் செலாவணியையும் பொறுத்தவரையில், அத் திட்டங்களுக்காகும் முதலீட்டுச் செலவுகளை அத் திட்டங்களே கரைத்திடும் அம்சங்களின் பல்வேறு வகைகளை அத் திட்டங்கள் கொண்டுள்ளன. பொருளாதார வளர்ச்சித் திட்டம் எதுவாக இருப்பினும், அதில் நிச்சயமாகக் குறைந்த உற்பத்தியையும் மெதுவாக வளரும் உற்பத்தியையும் கொண்ட திட்டங்கள் உள்ளன; ஆனால், அவை அதிக உற்பத்தியையும் விரைந்த உற்பத்தியையும் அளிக்கும் திட்டங்களுக்குத் தேவையான முதற்படியாவன.'

பொருளாதார வளர்ச்சிக்கும் உள்நாட்டு விவசாய, தொழில் துறை முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அத் திட்டங்கள் முக்கியத்துவம் உள்ளன என்பதுதான் பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய நிதியாக்கப் பிரச்சினையின் சிக்கலாகும். இத்தகைய அடிப்படையான திட்டங்கள் தேவையுள்ள 'சமூக, பொருளாதாரப் பொது மூலதனத்தை' உருவாக்குவதாகக் கொள்ளலாம். மனித குலம் சார்ந்த அல்லது சமூகரீதியான பொது முதல் எனக் கருதப்படும் சுகாதாரம், கல்வி, குடியிருப்பு ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் முதலீடுகளை அத் திட்டங்கள் உள்ளடக்கியுள்ளன; இன்னும், பொருளாதாரப் பொது முதல் எனக் கருதப்படும் கடத்துதல் (transport), செய்திப் போக்குவரத்துகள் (communications), மின்னாற்றல், ஏனைய பொதுப் பயன்பாட்டுத் துறைகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் முதலீடுகளையும் அத் திட்டங்கள் உள்ளடக்கியுள்ளன. இத் திட்டங்களினால் அன்னியச் செலாவணி கொஞ்சம் கிடைக்கலாம்; அல்லது கிடைக்காமலும் இருக்கலாம். சாதாரணமாக இத் திட்டங்களின்மூலம் குறுங்காலத்தில் குறைந்த உற்பத்தியே கிட்டும்.

பொதுவாக இவற்றின்மூலம் கிடைக்கும் உற்பத்தியைப் பணமாக்குவதற்குக் கொஞ்சகாலம் பிடிக்கும். ஏனெனில், இத் திட்டங்களின் பணிகளைப் பயன்படுத்தும் பொருளாதார நடவடிக்கைகளின் சீரான வளர்ச்சியிலிருந்தே நலம் சார்ந்த விளைவுகள் ஏற்படுவன. பண அளவில் உயர்ந்த உற்பத்தியை வழங்கும் பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சியின் அவசியமான அடிப்படையாக அத் திட்டங்கள் திகழ்வன.

விவசாயம், தொழில்துறை, வர்த்தகம் போன்ற நேரடியான உற்பத்தித் துறைகளில் பல்வேறு வகைத்தாய பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையை விசாலப்படுத்துதலைத் துரிதப்படுத்துவதற்கு இத்தகைய அடிப்படையான திட்டங்கள் அவசியமாவன. இருந்தபோதிலும், இத்தகைய திட்டங்களுக்கே உள்நாட்டிலிருந்தோ அல்லது வெளிநாட்டிலிருந்தோ தேவைப்படும் நிதியினை வளர்ச்சி குறைந்த நாடுகள் திரட்டுவது மிகவும் கடினமாகும். துணைக் கமிஷனின் பொருத்தமான வாசகம் பின்வருமாறு :

"இவற்றைப் பொறுத்தவரையில், பொருளாதார வளர்ச்சியின் பிரச்சினையும் அதற்கேற்பட்ட சவாலும் இங்குத்தான் உள்ளன என்று தனது திடநம்பிக்கையினைத் துணைக் கமிஷன் வெளியிட விரும்புகிறது. கடனைத் திரும்பவும் அடைப்பதில் இப்பொழுது நிலவும் பாங்கு விதிகள் மாறாது இருக்கும் வரையில், பொருளாதார வளர்ச்சிக்கென அவசியமாக நிறைவேற்ற வேண்டிய செயல்களுக்குத் தேவைப்படும் நிதியினைப் பன்னாட்டு அமைப்புகளோ அல்லது ஏனைய பொதுத்துறைகளோ வழங்க முடியாது. தனியார் துறை சார்ந்த அன்னிய முதலீடு, உள்நாட்டு மூலதனத்தைச் சேகரித்தல், பன்னாட்டு நிதியாக்கம் முதலானவற்றை நல்லவண்ணம் பயன்படுத்திக்கொண்ட பிறகும்கூட, அனைத்துலக ரீதியாகத் தீர்வு காணவேண்டிய தொல்லையான முதலீட்டுத் துறை ஒன்றிருக்கிறது எனத் துணைக்கமிஷன் முடிவு எடுத்திருக்கிறது. இந்த முடிவினை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். இதனைத் தவிர்க்கமுடியாத முடிவெனத் துணைக் கமிஷன் கருதுகிறது. சமூக அல்லது பொருளாதார சிறப்பு மூலதன வகையைச் சார்ந்த இத்தகைய அடிப்படைத் திட்டங்களில்லாது, வளர்ச்சி குறைந்த பிரதேசங்களில் வாழ்க்கைத் தரங்களை உயர்த்தும் பிரச்சினையில் உண்மையான விளைவினை ஏற்படுத்தும் அளவிற்கு உலகம்முழுதும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட முடியாது."

எனினும், இப் பிரச்சினைக்குத் தெளிவான, கலப்படமற்ற தீர்வினைத் துணைக்கமிஷன் வழங்கவில்லை. நான் குறிப்பிட்ட ஐ. நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்புப் போன்ற ஏதோ ஒரு புதிய பன்னாட்டு அமைப்பினை ஏற்படுத்துவதற்கு அத் துணைக்கமிஷன் தெளிவான பரிந்துரை ஏதும் வழங்கவில்லை. ஏனெனில், கொஞ்ச காலத்திற்கேனும் அந்தப் பன்னாட்டு ஏஜென்சிக்குத் தேவைப்படும் நிதியின் பெரும் பகுதியினை ஐக்கிய அமெரிக்காவே ஏற்றுக்கொள்ள நேரிடும் என்று துணைக்கமிஷன் உணர்ந்திருந்தது. எனவே, அந்த ஏஜென்சிக்கு நிதியளிப்பதைவிட அந்த நிதியினால் பலன் பெறக்கூடிய நாடுகளின் நிபுணர்களைப் பெரும்பான்மையின ராகக்கொண்ட நிபுணர் குழுவைவிட அமெரிக்காவின் அதிகார பூர்வமான பிரதிநிதியிடமிருந்தே ஏஜென்சியைத் துவக்கு வதற்கு வேண்டிய முன்னூர்வம் உருவாகவேண்டும் என்று துணைக்கமிஷன் கருதியது. இக் கருத்திற்கு எனது முழு ஒப்புதல் கிடைத்தது. இது குறித்துத் துணைக்கமிஷனின் வாசகத்தை வெளியிடுவதே பொருத்தமுடையதாகும்.

குறைந்த செலவில் நீண்டகால நிதியினை வழங்கவேண்டிய அவசியத்தின் காரணமாக, ஐ. நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்பு (UNEDA) ஒன்றினை அமைக்கவேண்டும் என்ற திட்டத்தினைத் துணைக்கமிஷனின் மூன்றாவது கூட்டத்தில் அதன் தலைவர் சமர்ப்பித்தார். இவ் வமைப்பு வழங்கும் கடன்களின்மூலம் நிறைவேற்றப் பெறும் திட்டங்களின் பொருளாதார அம்சங்களுக்கு ஏற்றவாறு பொருத்தமாக அமைந்தால், அடிப்படையான பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியினை இவ் வமைப்பானது கடன் களாக வழங்குதலானது சரியானதே என்ற கருத்தினை ஆதரிக்கலாம்; அதே வேளையில், இவ் வமைப்பு வழங்கும் கடன்களில் கணிசமான அளவிற்கு மான்யக் (grant) கூறு உள்ளது எனும் கருத்தினையும் அதே அளவிற்கு ஆதரிக்கலாம். உண்மையில், தனக்கு வேண்டிய நிதிகளைத் திறந்த சந்தை யிலிருந்தோ அல்லது அரசாங்கங்களிடமிருந்து கடன் பெறு மூலமாகவோ திரட்டினால், அவ்வமைப்பானது அதற்குத் வேண்டிய வட்டியைவிட எந்த அளவுக்குக் குறைந்த வட்டி வளர்ச்சி குறைந்த நாட்களுக்குக் கடன் அளிக்கிறதோ அ அளவிற்கு நிச்சயமாக அக் கடனளிப்புகளில் உதவிக்கொடை கூறு (element of subsidy) இருக்கிறது எனலாம்; அதாவ உறுப்பினர் நாடுகளிலுள்ள வரி செலுத்துவோரிடமிரு கிடைக்கும் நிதி, இக் கடனளிப்புகளில் உள்ள மான்யக்கூ

நோக்கி நிற்கிறது எனலாம். தங்களுடைய வரிகளிலிருந்து இத்தகைய நிதிகளை உண்டாக்கும் வாய்ப்புள்ள நிலையில் ஒரு சில தொழில் வளர்ச்சியுற்ற நாடுகள்தாம் தற்பொழுது உள்ளன என்பதாலும், இத்தகைய அமைப்பிற்கு வேண்டிய நிதியின் பிரதான சுமை உண்மையாகவே ஒரு குறிப்பிட்ட உறுப்பினர் நாட்டின் வரி செலுத்தும் மக்கள்மீது எதிர் காலத்தில் உடனடியாகவே விழும் என்பதாலும் இத்தகைய அமைப்பினை—ஏஜென்சியை ஏற்படுத்துவது குறித்துப் பரிந்துரை வழங்குவது பொருத்தமுடையதன்று என்ற முடிவிற்குத் துணைக்கமிஷன் வந்தது. எனினும், தொழில் வளர்ச்சியுற்ற நாடுகள் இப் பிரச்சினை குறித்து உடனடியாக ஆராய வேண்டும் என்று துணைக்கமிஷன் வலியுறுத்துகிறது. குறிப்பாக, இந்த அமைப்பிற்குக் கணிசமான அளவிற்கு நிதி வழங்கக் கூடிய நிலையில் உள்ள நாடுகள் இப் பிரச்சினை குறித்து உடனடியாக ஆராய வேண்டுமெனத் துணைக்கமிஷன் வலியுறுத்துகிறது. மேலும், இந்த முறையில் நிதியினைக்கொண்டு செலவழிக்கப்பட வேண்டிய அடிப்படை வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய அம்சத்தினைக் கருத்தில் கொண்டு, மான்யக்கூறினைக் கொண்டுள்ள அடிப்படை மீது பன்னாட்டு நிதிகளை அடைவதற்குரிய சாத்தியத்தினைத் தனது 11ஆம் கூட்டத்தில் பொருளாதார—சமூகக் கவுன்சில் விவாதிப்பது பொருத்தமுடையதே என்று துணைக்கமிஷன் கூறுகிறது. விவாதத்தின்போது தேவையான அளவிற்கு ஆதரவு கிடைத்தால், இந்தப் பிரச்சினையை விவரமாக ஆராயவும், தக்க பன்னாட்டு அமைப்பினை நிறுவி, செயலில் ஈடுபடத் திட்டம் வகுக்கவும் தனிப்பட்ட கமிட்டி ஒன்றினைக் கவுன்சில் நிறுவவேண்டிய காலம் வந்துவிட்டது எனலாம்.

இவ்வாறாகப் பொருளாதார அபிவிருத்திபற்றிய துணைக் கமிஷனின் வேலை முடிவுற்றது. பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியாக்கத்தில் பெரும் பங்கினைத் தனியார் துறை சார்ந்த நிதிகளைவிடப் பொதுத்துறை சார்ந்த நிதிகளே வகிக்க வேண்டும் என்ற ஆய்வுரையையும், இத்தகைய நிதிகளைப் பன்னாட்டு அமைப்பொன்றே நிருவகிக்க வேண்டும் என்ற ஆய்வுரையையும், இப்பொழுது நிலவும் அமைப்பானது போதுமான அளவிற்கு முழுதும் இல்லை என்பதோடல்லாது இக் குறிக்கோளினை நிறைவேற்ற முழுதும் பொருத்தமுடையதாக இல்லை என்ற ஆய்வுரையையும் துணைக்கமிஷனின் செயல் நிரூபித்துள்ளது ; மேலும், பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான சமூகப் பொருளாதாரப் பொது முதல்களை (social and economic overheads) உண்டாக்கும் திட்டங்களாம் குறைந்த

உற்பத்தியையும், மெதுவாக வளரும் உற்பத்தியையும் கொண்ட திட்டங்களுக்கு நிதி கட்டாயம் வேண்டும் என்ற ஆய்வுரையையும் துணைக்கமிஷனின் வேலை நிரூபித்துள்ளது; இன்னும், இந்த நிலை பொருளாதார வளர்ச்சியைப் பேணவும், மான்யக்கூறினை உடைய பன்னாட்டு நிதிகளைப் பகிர்ந்தளிக்கவும் ஒரு புதிய அனைத்துலக அமைப்பு அவசியம் என்ற உண்மையை வலியுறுத்திற்று என்ற ஆய்வுரையையும் துணைக்கமிஷனின் வேலை நிரூபித்துள்ளது. இத்தகைய அனைத்துலக ஏஜென்சியினை ஏற்படுத்துவதற்கான திட்டத்தினைத் தானாகவே துணைக் கமிஷன் அளிக்கவில்லை. ஆனால், ஐ.நா. சபையின் பொருளாதார வளர்ச்சி பற்றிய நிருவாக அமைப்பு (United Nations Economic Development Administration) என்ற UNEDA-வினை அமைக்க வேண்டும் என்று துணைக்கமிஷனின் தலைவர் குறிப்பிட்ட திட்டத்தினையே ஐ. நா. சபையின் பல்வேறு உறுப்புகளின் கவனத்திற்குத் துணைக்கமிஷன் கொண்டு வந்தது.

ஜெனீவாவில் (Geneva) 1950 ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் நடைபெற்ற கூட்டத்தில் துணைக்கமிஷனின் அறிக்கையைப் பொருளாதார–சமூகக் கவுன்சில் பரிசீலனை செய்தது. கவுன்சில் நிறைவேற்றிய தீர்மானங்களை மேலெழுந்தவாரியாகப் படித்துப் பார்த்தால் கூடத் துணைக்கமிஷனால் எந்த அளவிற்குக் கவுன்சில் தூண்டப் பெற்றிருக்கிறது என்பது புலனாகும். பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய பன்னாட்டு நிதியாக்கம்பற்றிய முக்கியத் தலைப்பைப் பொறுத்தவரையில், ஆகஸ்டு பன்னிரண்டில் கவுன்சில் நிறைவேற்றிய தீர்மானம் 294 (XI), ஷரத்து 9 (*a*) பின்வருமாறு :—‘ தனக்காகும் செலவினைத் தன் உற்பத்திமூலம் கரைத்துக்கொள்ளும் திட்டங்களை (self-liquidating projects) மாத்திரமன்றி, தனக்குத்தானே எப்பொழுதும் முழுதும் கரைத்துக் கொள்ளாத திட்டங்களாயினும், தேசிய உற்பத்தியிலும் தேசிய வருமானத்திலும் மறைமுக விளைவினை ஏற்படுத்தும் திட்டங்களாகிய போக்குவரத்து, மின்னியக்கம், செய்திப் போக்குவரத்து, பொது சுகாதாரம், கல்வி நிலையங்கள், குடியிருப்பு முதலான திட்டங்களையும் நிறைவேற்றுதலே பொருளாதார அபிவிருத்தியாகும்.’ ஆனால், கவுன்சில் ... கருத்தின் உண்மையைப் பின்பற்றவில்லை; நான் கூறிய ஐ. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அ... பினையோ அல்லது குறைந்த வட்டியைத் தாங்குகின்ற அல்... வட்டியே இல்லாத கடன் நிதியினையோ (loan finance) ப... சலிப்பூட்டும் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கேற்ற ... ஏதேனும் திட்டத்தைப்பற்றிக் கவுன்சில் எந்த சிபா...

செய்யவில்லை. 'கடன் வழங்கும் பன்னாட்டமைப்புகள் சுயமாகச் செயலாற்றுவதற்கு இசைந்தவாறு, வளர்ச்சி குன்றிய நாடுகளுக்குக் கிடைக்கும் அன்னியச் செலாவணிமீது குறைந்த அளவில் சாத்தியமான அளவிற்குச் சுமை ஏற்படுகின்ற வகையில் வட்டி விதங்களையும், கடன் கரைப்பு நிதிமூலம் கடனைத் திரும்பவும் அடைக்கும் விதிகளையும்' அமைத்துக் கொண்டு, அவ்வமைப்புகள் கடன் வழங்க வேண்டும் என்று மாத்திரம் கவுன்சில் கேட்டுக்கொண்டது. எனினும், வளர்ச்சி குன்றிய நாடுகளில் நிலவும் வேலையின்மை, வேலைக்குறைவு (under employment) ஆகிய பிரச்சினை முழுவதையும் நன்கு பரிசிலனை செய்து, அந் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குரிய நடவடிக்கைகளை விளக்கி சிபாரிசு செய்ய நிபுணர்களின் தனித்த கமிட்டி ஒன்றினை ஏற்படுத்தப் பொதுச் செயலாளர் (Secretary–General) முன்வர வேண்டும் என்று கவுன்சில் கோரியதை இங்கு எடுத்துக் காட்ட வேண்டும். 'வளர்ச்சி குறைந்த நாடுகளில் நிலவும் வேலையின்மை, வேலைக்குறைவு, உருமறைந்த வேலையின்மை ஆகிய ஒன்றுக்கொன்று தொடர்புள்ள, முக்கியமான பிரச்சினைகளைப்பற்றிப் பரிசிலனை செய்கின்ற நிபுணர்களின் வேலைநிறைவுபற்றிய அறிக்கையினை ஆராய்ந்தறிதல் வேண்டும்' என்ற துணைக்கமிஷனின் சிபாரிசு மீதுதான் மேலே குறிப்பிட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய பன்னாட்டு நிதியாக்கக் கோட்பாட்டில் மான்யக்கூறு இருத்தலை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர், கவுன்சில் எச்சரிக்கையுடன் நடந்துகொண்டது மாத்திரமன்றி, அதுபற்றி மேலும் ஆராய்ச்சி செய்யவும் முனைந்தது என்பது தெளிவே.

எனினும், 1950ஆம் ஆண்டின் மாரி காலத்தில் பாரிசில் கூடிய பொதுச் சபை (General Assembly) இன்னுமோர் படி மேலே சென்றது. 'தேசிய உற்பத்தியிலும் தேசிய வருமானத்திலும் அதிகரிப்பினைச் சில அடிப்படையான அபிவிருத்தித் திட்டங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படுத்தியபோதிலும், அத் திட்டங்களுக்குத் தேவைப்படும் அளவுக்குக் கிடைத்துள்ள அன்னிய நிதி போதுமானதாக இல்லை என்ற உண்மையினை' நவம்பர் இருபதில் தான் நிறைவேற்றிய தீர்மானத்தில் [490 (V)] பொதுச் சபை குறித்துள்ளது. 'பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியாக்கப் பிரச்சினையைப்பற்றி மேலும் ஆராயும்பொழுது, தனியார் துறையினையும் பொதுத் துறையினையும் சார்ந்த அன்னிய மூலதனம் போதுமான அளவிற்குப் பெருகவும், அதன் ஓட்டம்

இன்னும் சீராக அமையவும் தேவைப்படும் அனுபவரீதியான வழிமுறைகளைப்பற்றியும், நிபந்தனைகளைப்பற்றியும், திட்டங்களைப்பற்றியும் பொருளாதார - சமூகக் கவுன்சில் சிந்திக்க வேண்டும்' என்றும், 'பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான, ஆனால், தங்களுக்காகும் செலவினைத் தாங்களே உற்பத்திமூலம் கரைத்துக்கொள்ளாத திட்டங்களுக்கு (non - self - liquidating projects) ஆகும் நிதியினைப்பற்றி அக் கவுன்சில் சிறப்பாக எண்ணிப்பார்க்க வேண்டும்' என்றும் பொதுச் சபை பரிந்துரை வழங்கியது. இதனைப் பொறுத்த வரையில், தெளிவான திட்டங்களை உறுப்பினர் நாடுகளும் (member states) தனித்த ஏஜென்சிகளும் வெளியிட வேண்டுமெனப் பொதுச் சபை வலியுறுத்தியது. பொதுச் சபையின் ஆறாவது கூட்டத்தில் தனது பரிந்துரைகளைப் பொருளாதார - சமூகக் கவுன்சில் வெளியிட வேண்டும் என்று பொதுச் சபை வற்புறுத்திற்று.

திரு. நெல்சன் ராக்ஃபெல்லர் (Mr. Nelson Rockefeller) அவர்களின் தலைமையின்கீழ் அனைத்துலக அபிவிருத்தி ஆலோசனை போர்டானது (International Development Advisory Board) வெளியிட்ட 'முன்னேற்றத்தில் கூட்டாளிகள்' (Partners in Progress) என்ற அறிக்கையானது, பன்னாட்டு வளர்ச்சி அமைப்புபற்றிய கருத்துப் பரிணாமத்தின் அடுத்த படியாகும். பன்னாட்டு வளர்ச்சிபற்றிய ஐக்கிய அமெரிக்காவின் சட்டப்படி இந்த போர்டானது அமைக்கப்பட்டது. இப்பொழுது நிலவும் அரசாங்கம் சார்ந்த செயல்களும், தனியார் துறை சார்ந்த செயல்களும் பன்னாட்டுப் பொருளாதார வளர்ச்சிமீது கொண்டுள்ள தொடர்புகளை மனத்தில் கொண்டு, பாயின்ட் நான்கு திட்டத்தின் (Point Four Programme) பரந்த குறிக்கோள்களையும் கைக்கோள்களையும் விரைவாகவும் திறமையுடனும் நிறைவேற்றுவதற்குகந்த திட்டத்தினைத் தயாரிக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் (Truman) அனைத்துலக அபிவிருத்தி ஆலோசனை போர்டைத் தனித்த முறையில் வேண்டிக்கொண்டார். தமது அறிக்கையைத் தயாரிப்பதில் ராக்ஃபெல்லர் கமிட்டிக்கு உறுதுணையாக இருந்தவர்களின் தொகுதியில் திரு. ஆகஸ்ட் மாஃப்பிரி (Mr. August Maffry) அவர்கள் இடம் பெற்றிருந்தார்கள் என்பதும், அவர் பொருளாதார வளர்ச்சிபற்றிய துணைக்கமிஷனின் நான்காவது கூட்டத்தில் அமெரிக்காவின் பிரதிநிதியாகப் பங்கெடுத்துக்கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கன.

கடிதில் திறமை நிறைந்த விளைவுகளை அடையும் நோக்கத்துடன், பொருளாதார வளர்ச்சியை அனைத்துலக ரீதியில் பேணுவதற்காக, பொதுத் துறையையும் தனியார் துறையையும் சார்ந்த நடவடிக்கைகளையும் ஐக்கிய அமெரிக்காவிலேயே குவித்து, ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்திச் சீராக்கவேண்டியதன் அவசியத்தைப்பற்றியே ராக்ஃபெல்லர் கமிட்டி அறிக்கையின் பெரும் பகுதி அலசியுள்ளது. இக் குறிக்கோளினைக் கருத்தில் கொண்டு, ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் பெரும் அன்னிய பொருளாதார நடவடிக்கைகளைக் குறித்து ஒன்றுபடுத்தி மேலான ஓர் ஏஜென்சியின் தலைமையின்கீழ் இயங்கச் செய்யவேண்டுமென்றும், இத்தகைய ஏஜென்சியை நிருவகிக்க ஜனாதிபதிக்கு நேரடியாகக் கட்டுப்பட்ட ஒரே ஒரு நிருவாக அதிகாரியை நியமிக்க வேண்டுமென்றும், இத்தகைய ஏஜென்சியை ஐக்கிய அமெரிக்காவின் அயல்நாட்டுப் பொருளாதார நிருவாகம் (United States Overseas Economic Administration) என்று பெயரிட்டு அழைக்க வேண்டுமென்றும் ராக்ஃபெல்லர் கமிட்டி உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர். இன்னும் அயல்நாட்டுப் பொருளாதார நிருவாக அதிகாரி அப் புதிய ஏஜென்சியினை வட்டார அடிப்படையில் இயக்கித் திட்டம் தீட்டவேண்டும் என்றும் கமிட்டி சிபாரிசு செய்தது.

சாலைகள் அமைத்தல், இருப்புப்பாதை வசதிகளையும் துறைமுக வசதிகளையும் பெருக்குதல், தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மின்சார சக்தியை அதிகரித்தல், சாகுபடிக்கு வேண்டிய புது நிலங்களை நீர்ப்பாசன வசதிகள்மூலம் கொண்டு வருதல் ஆகிய காரியங்களுடன் உணவு உற்பத்தி, கச்சாப் பொருள்கள் உற்பத்தி, பொறிவழித் தொழில் உற்பத்தி முதலானவைகளின் முன்னேற்றமும் இணைந்தே செல்லவேண்டும் என்று ராக்ஃபெல்லர் கமிட்டி ஒத்துக்கொண்டது. இத்தகைய திட்டங்களை நிறைவேற்றினாலன்றி, உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியோ, வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் முயற்சியோ வெற்றியடையமாட்டா. இப்பொழுது, வளர்ச்சி குறைந்த பிரதேசங்களின் பெரும் பகுதிகளில் இத்தகைய வசதிகளே இல்லை எனலாம்; அல்லது இத்தகைய வசதிகள் போதவில்லை எனலாம். இத்தகைய வளர்ச்சி குறைந்த நாடுகளில் அவற்றின் செலவு அதிகம்; இப்பொழுதுள்ள கடன் வழங்கும் அமைப்புகள் உதவினால்கூட, இச் செலவினைச் சமாளிக்கப் போதுமான அளவுக்கு நிதி வசதி அந்த நாடுகளுக்கில்லை. இத் திட்டங்களில் பல நேரடியான வருமானம் உடையவை அல்ல; அல்லது இத் திட்டங்களிலிருந்து பல

ஆண்டுகள் கழிந்தே குறைந்த வருமானம் கிட்டும். ஏனைய வற்றைப் பொறுத்தவரையில், வளர்ச்சி குறைந்த நாடுகளின் கடன் வாங்கும் சக்தியையும் மீறிச் செலவுகள் பெருகியுள்ளன. இப்பொழுதுள்ள நெருக்கடியின் விளைவாக, அத்தியாவசிய மான பொதுத்துறைத் திட்டங்களை அமைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சுதந்திர நாடுகளில் சில முக்கியப் பொருள்களின் புதிய ஊற்றுகள் தோன்றியமையால், நெடுஞ் சாலைகளும், இருப்புப்பாதைகளும், வசதியுள்ள துறைமுகங் களும், சாகுபடிக்குப் புதிய நிலங்களும், மின்சாரமும் தேவைப் படுகின்றன. நல்லவண்ணம் திட்டமிடப்பட்டால், வளர்ச்சி குன்றிய நாடுகளின் ஆக்கத்திற்கும் நலனுக்கும் இத்தகைய வளர்ச்சிகள் மிக்க பயனை விளைவிப்பன.

வளர்ச்சி குறைந்த நாடுகளின் அபிவிருத்திக்கு அடிப்படை யானதும் பொருளாதார முக்கியத்துவமும் சமுதாய முக்கியத் துவமும் நிறைந்ததுமான அநேக திட்டங்கள் உள்ளன வென்றும், ஒழுங்கான கடனடிப்படையிலேயே அத் திட்டங் களுக்கு வேண்டிய நிதியனைத்தையும் பெறமுடியாது என்றும் கமிட்டி உறுப்பினர்கள் வலியுறுத்தினர். 'நன்கு நிருவகிக்கப் பெற்ற ஏஜென்சிமூலம் இத்தகைய பொதுத்துறைத் திட்டங் களை உருவாக்கி, அவற்றிற்கு வேண்டிய நிதியினை உறுதியுடன் வழங்கி, அவற்றை வளர்க்க முடியும்' என்ற நேரிய தீர்ப்பினைக் கமிட்டி அளித்தது. ஆனால், இப்பொழுதுள்ள எந்தப் பன்னாட்டு ஏஜென்சியும் நன்கு உருவாக்கப்படவில்லை என்றோ அல்லது அக் கமிட்டி குறிப்பிட்டுள்ள ஏஜென்சிக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளைச் செயற்படுத்தும் அதிகாரம் பன்னாட்டு ஏஜென்சிகளில் ஏதேனும் ஒன்றுக்குக்கூட இல்லை என்றோ அக் கமிட்டி கருதியது. எனவே, பன்னாட்டு அபிவிருத்தி நிருவாக அமைப்பு என்று அழைக்கப்படும் ஒரு புதிய பன்னாட்டு ஏஜென்சியை அமைக்கவேண்டும் என்ற கருத்தினைக் கமிட்டி வேண்டாவெறுப்புடன் அளித்தது. ராக்ஃபெல்லர் கமிட்டி சிபார்சு செய்த புதிய பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் நிதி யாக்கம், செயலாக்கம், அமைப்பு முறை, குறிக்கோள்கள் ஆகியவைபற்றிய சுருக்க விளக்கத்தினை நான் கீழே தருகிறேன்.

குறிக்கோள்கள்

வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு அத்தியாவசியமாக உள்ள பொதுத்துறைத் திட்டங்களுக்கு வேண்டிய நிதியினைச் சாதாரண கடன் அடிப்படையில் வழங்க முடியாது; அப் பொதுத்துறைத் திட்டங்களின் செலவின் ஒரு பகுதிக்கு வேண்டிய நிதியினை அளித்தல்.

உறுப்பினர் சேர்த்தலும் நிதியமும்

(அ) 'சுதந்திர' நாடுகள் அனைத்திற்கும் உறுப்பினர் உரிமை உண்டு.

(ஆ) உலக பாங்கிற்குக் கட்டணம் செலுத்துகின்ற அதே வீதாசாரத்தில் இதற்கும் கட்டணம் செலுத்துதல்.

(இ) துவக்கத்தில் செலுத்தப்பெறுகின்ற கட்டணம் மொத்தத்தில் 500 மில்லியன் டாலர்களை மீறக்கூடாது.

(ஈ) ஒவ்வோர் உறுப்பினர் நாடும் தன் சொந்தச் செலாவணியிலேயே (நாணயத்திலேயே) கட்டணம் செலுத்த வேண்டும்.

(உ) திட்டத்திற்காகும் முழுச் செலவினையும் ஏற்கும் வகையில் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மானியங்களை வழங்கக்கூடாது. தேவைப்படும் நிதியில் குறைந்தபட்சம் ஓர் பகுதியையேனும் கடனடிப்படையில் ஏற்கும் வகையில் எல்லாத் திட்டங்களும் அமைதல் வேண்டும். ஒவ்வொரு திட்டத்திலும் கொடுக்கப்படுகின்ற மானியத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் பலனடையும் நாடு ஓரளவுக்கேனும் உள்நாட்டுப் பொருள்களையோ உள்நாட்டுத் தொழிலாளர் உழைப்பையோ அல்லது ஏனைய உள்நாட்டு மூலவளங்களையோ பயன்படுத்த வேண்டும்.

(ஊ) பொருளாதார முக்கியத்துவமும் சமுதாய முக்கியத்துவமும் நிறைந்த இத்தகைய திட்டங்களுக்காகும் செலவின் ஒரு பகுதியைப் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மானியம் வழங்குவதன்மூலம் ஈடு செய்தால், செலவின் எஞ்சி நிற்கும் பகுதியைப் பொருத்தமான கடனளிப்புமூலம் உலக பாங்கு வழங்கும்.

நிருவாகம்

இப் புதிய அபிவிருத்தியமைப்பு, தனக்குரிய இயக்குநர் குழுவை அமைத்துக்கொள்ளும். தன் பார்வைக்கு வந்த திட்டங்களில் எவற்றை ஏற்றுக்கொள்வது அல்லது எவற்றை ஒதுக்கிவிடுவது என்ற இறுதி முடிவினை இக் குழு தீர்மானிக்கும்.

செயலாக்கம்

உலக பாங்குடன் நிருவாக ஒப்பந்தம் செய்துகொண்டு பன்னாட்டபிவிருத்தியமைப்பு இயங்கும். பார்வைக்கு வந்த திட்டங்களைப் பரிசீலனை செய்யவும், வழங்கப்பெற்ற மானியங்களை மேற்பார்வையிடவும் உலக பாங்கின் அதிகாரிகளும் நிருவாகமும் தங்களுடைய பணிகளை வழங்குவர்.

கமிட்டி வெளியிட்ட முடிவு பின்வருமாறு :

'உலக பாங்கின் ஒத்துழைப்புடனும் ஏனைய நாடுகளின் ஆதரவுடனும் நீண்ட காலத்தில் பெருமளவு அன்னியப் பொதுத்துறைத் திட்டங்களுக்காகும் நிதியினை வழங்கும் இயந்திர அமைப்பு (mechanism) போலப் பன்னாட்டு அபிவிருத்தி யமைப்பு இயங்கும்.

இருந்தபோதிலும், என்னுடைய சொந்தக் கருத்தின்படி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பாகிய ராக்ஃபெல்லர் திட்டத்தில் நான்கு முக்கியக் குறைபாடுகள் உள்ளன. அவையாவன :

(1) இந்த அமைப்பானது பொருளாதாரப் பொதுச் செலவுகள் (economic overheads) என்றழைக்கப்படும் பொதுத் துறைத் திட்டங்களுக்கே பயனுடையது; ஆனால், சமூகப் பொதுச் செலவுகள் (social overheads) எனப்படும் கல்வி, சுகாதாரம், மருத்துவ நிவாரணம், நுட்பத்தொழிற் பயிற்சி போன்றவைகளுக்குப் பயனுடையதன்று.

(2) இதன் உறுப்பினரமைப்பு சுதந்திர நாடுகள் என்று அழைக்கப்படும் நாடுகளுக்கே உரியது. இந்த அபிவிருத்தி அமைப்பானது கெடுபிடிப் போரின் (cold war) யுத்த தளவாடங்களின் கூடத்தின் ஒரு பகுதியாக மாறுகிறது என்பதே இதன் பொருளாகும்.

(3) இவ்வமைப்பின் நிருவாகமும் இயக்கமும் உலக பாங்குடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன. இவ்வமைப்பில் சில பெருநாடுகள் இடம் பெறவில்லை. மேலும், இவ்வமைப்பின் ஆதிக்கம் ஐக்கிய அமெரிக்காவின் கையில் உள்ளது.

(4) வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்தலைப் பார்க்கும்பொழுது, துவக்கத்தில் செலுத்தப்பெற்ற கட்டணம் மிகவும் குறைவே.

எனினும், இத் திட்டம் அடிப்படையில் சிறந்ததே. நான் சிபாரிசு செய்துள்ள ஐ.நா. சபையின் பொருளாதார அபிவிருத்தி அமைப்பிற்கும் பொருளாதார வளர்ச்சிபற்றிய துணைக்கமிஷனின் நான்காவது கூட்டம் வெளியிட்ட அறிக்கையின் நியாயத்திற்கும் ஏற்றவாறே இத் திட்டம் அமைந்துள்ளது.

வளர்ச்சி குறைந்த நாடுகளில் தனியார்துறைமூலம் பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய அன்னிய நிதியினைச் சேகரிக்கும் காரியத்திற்காக இன்னுமோர் பன்னாட்டு

அமைப்பினை ஏற்படுத்தவேண்டும் என்ற புதுக்கருத்தினையும் ராக்ஃபெல்லர் கமிட்டி வழங்கியுள்ளது. பொருளாதாரத் துறையில் தனியார்துறையினருக்கு உறுதியான இடத்தினைக் கொடுக்கும் கலப்புப் பொருளாதார அடிப்படையில் திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்தியை மேற்கொண்டுள்ள இந்தியா போன்ற நாடுகளுக்குக் குறிப்பாக இச் செய்தி மகிழ்வூட்டும். பன்னாட்டு நிதிக் கார்ப்பரேஷன் (International Finance Corporation) ஒன்றினை ஏற்படுத்த கமிட்டி சிபாரிசு செய்துள்ளது. உலக பாங்கின் கிளையாக இந்தக் கார்ப்பரேஷனை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசாங்க உத்தரவாதம் ஏதுமின்றித் தனியார் துறைக்கு வேண்டிய கடன்களை உள்நாட்டுச் செலாவணியிலும் அன்னியச் செலாவணியிலும் வழங்கும் அதிகாரம் கார்ப்பரேஷனுக்கு உண்டு. மேலும், தனியார்துறை சார்ந்த முதலீடு செய்வோருடன் ஒன்றுசேர்ந்து, உள்நாட்டுச் செலாவணிகளில் வாக்குரிமையற்ற ஈகியுட்டி முதலீடுகளை (equity investments) வழங்கவும் கார்ப்பரேஷனுக்கு அதிகாரம் உண்டு. கடன் நிதியாக்கத்தின் (loan financing) நிலைத்த கட்டணங்களால் பாதிக்கப்படாமல் புதிய தொழில் அமைப்புகளை ஏற்படுத்த கார்ப்பரேஷனின் இவ்வதிகாரம் வசதியளிக்கிறது. அதே வேளையில், தொழில் துறை அமைப்புகள் வெற்றிகரமாக இயங்கும்பொழுது, வளர்ச்சி குறைந்த நாடுகளில் உள்ள பொதுமக்களுக்கு இத்தகைய முதலீடுகள் விற்கப்படும். எனவே, இந் நாடுகளின் மூலதன சந்தைகள் வளரும்; அதே வேளையில் இந் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குகந்த துறைகளுக்குத் தனியார் துறை சார்ந்த முதலீடு செல்லும்.

வாக்குரிமையுள்ள பங்கிற்கு (voting stock) பெயரளவு கட்டணம் செலுத்தி இத்தகைய கார்ப்பரேஷனை உலக பாங்கு ஏற்படுத்தி, பாங்கினுடைய நிருவாக ஊழியர்களின் பணிகளையும் நுட்பத்தொழில் சார்ந்த பணிகளையும் அதற்கு அளிக்க முடியும். உலக பாங்கின் உறுப்பினர் நாடுகள் எந்த வீதாசாரத்தில் பாங்கிற்குக் கட்டணம் செலுத்தியுள்ளனவோ அதே வீதாசாரத்தில் வாக்குரிமை இல்லாத பங்கிற்கும் கட்டணம் செலுத்திக் கார்ப்பரேஷனின் நிதியினைப் பெருக்க முடியும்; ஆனால், துவக்கத்தில் செலுத்தவேண்டிய கட்டணம் மொத்தத்தில் 400 மில்லியன் டாலர்களாக இருக்கவேண்டும். இக் கருத்தினை நான் மறுக்கவில்லை. உண்மையில், பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியினை வழங்கும் உள்நாட்டு

அமைப்பு விட்டுவைத்துள்ள இடைவெளியைப் பூர்த்தி செய்யும் ஏஜென்சி ஒன்றினை உண்டாக்கும் திட்டத்தை நிறைந்த நெஞ்சத்துடன் நான் வரவேற்பேன்.

வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைப்பற்றித் தீர்மானிக்க ஐ.நா. சபையின் நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியினைத் திரட்ட, நடைமுறையில் உள்ள அமைப்பைத் திருத்துவதுபற்றி, அனைத்துலக ரீதியில் எழுந்த சீரான சிந்தனையின் பரிணாமத்தின் அடுத்த முயற்சியினை ஐ.நா. சபையின் நிபுணர் குழு மேற்கொண்டது. இக் குழுவில் இந்திய உறுப்பினராகிய பேராசிரியர் D. R. காட்கில் (D. R. Gadgil) அவர்களும் இடம் பெற்றிருந்தார். இக் குழு தனது அறிக்கையை 1951ஆம் ஆண்டு மே மாதம் சமர்ப்பித்தது. வளர்ச்சி குறைந்த நாடுகள் கடன் முதலின் (loan capital) பெருந் தொகைகளைப் பெற்று உற்பத்தி சார்ந்த பயன்களில் ஈடுபடுத்தும் திறமையானது, முக்கியமாகப் பொதுச் சுகாதாரம், கல்வி, சாலைகள், செய்திப் போக்குவரத்துகள் போன்ற சமூக மூலதனத்தை அதே வேளையில் பெருக்குவதற்குச் செலவாகும் தொகையைச் சார்ந்ததாகும் என்று அக் குழு வெளிப்படையாகக் குறிப்பிட்டுக் காட்டியது. எனினும், வளர்ச்சி குறைந்த நாடுகளில் பெரும்பாலானவைகளுக்கு இத்தகைய காரியங்களை மேற்கொள்ளப் போதுமான பணவசதி இல்லை; வரிகள்மூலமும் பணவசதியை உண்டுபண்ணிக்கொள்ள முடியாது. எனவே, 'ஆண்டொன்றுக்கு மூன்று மில்லியன் டாலர்கள் கிடைக்குமளவிற்கு உதவி மானியத்தை (grants-in-aid) வளர்ச்சியுற்ற நாடுகளிலிருந்து வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு மாற்றுவதற்கு ஓர் அமைப்பினை உருவாக்கவேண்டுமென மிகவும் உறுதியாக' நிபுணர் குழு வலியுறுத்தியது. அந்த உதவி மானியத்தொகையும் கடிதில் பெருகவேண்டும் என்று நிபுணர் குழு குறிப்பிட்டது. எனவே, கீழே வரிசைப்படுத்திக் காட்டியுள்ள குறிக்கோள்களை நிறைவேற்ற, வளர்ச்சி குறைந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கு மானியங்கள் வழங்கும் அதிகாரம் பெற்ற பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினை ஐ.நா. சபை ஏற்படுத்தவேண்டும் என்றும் நிபுணர் குழுவினர் பரிந்துரை வழங்கினர்.

(அ) ஆராய்ச்சியும் கல்வியும், விவசாய விஸ்தரிப்புப் பணிகளுக்கு வேண்டிய மானியங்கள், தொழில் நுட்பப் பள்ளிகள், விவசாயப் பள்ளிகள், உள்நாட்டுப் பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப விளுஞர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சி

யளித்தல் ஆகியவற்றிற்கு மானியங்கள், அரசாங்க இலாகாக்களுக்கு மானியங்கள், எங்கு அமைக்கப்பட்டாலும் வளர்ச்சி குறைந்த நாடுகளின் பிரச்சினைகளை ஆராயும் ஆராய்ச்சிக் கழகங்கள் அல்லது பல்கலைக்கழகங்களுக்கு மானியங்கள் முதலியன இதில் இடம்பெறுகின்றன.

(ஆ) நோய் தீர்க்கும் மருந்தைவிடத் தடுப்பு மருந்தையும் ஊட்டத்தினையும் வலியுறுத்துகின்ற பொதுச் சுகாதாரத் திட்டங்கள்.

(இ) விவசாயத்திற்கு வேண்டிய இடைக்காலப் பணவுதவியையும் குறுங்காலப் பணவுதவியையும் வழங்குதல்.

(ஈ) நாட்டுப்புறங்களுக்கான பொதுத்துறைத் திட்டங்களை வளர்த்தல், சாலைகளமைத்தல், கிராமங்களுக்கு வேண்டிய தண்ணீர் வசதியளித்தல், நிலத்தை மீண்டும் சாகுபடிக்குக் கொண்டுவருதல், சாக்கடைத் திட்டம், மண்வளம் பாதுகாத்தல், காடுகளைப் பேணுதல் போன்றவைகளை மேற்கொள்ள மானியம் வழங்குதலும் இதில் இடம்பெறுவன. எனினும், மானியம் வழங்குதல் மட்டும் இவ்வமைப்பிற்கு ஏற்பட்ட கடமைகள் அல்ல; நான் முன்னரே குறிப்பிட்டுள்ள ஐ.நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்பு மேற்கொள்ளவேண்டிய கடமைகளுடன் ஒத்துள்ள ஏனைய கடமைகளையும் இவ்வமைப்பு நிறைவேற்றும். ஆக, பன்னாட்டு அபிவிருத்தியமைப்பு மேற்கொள்ளவேண்டிய பணிகளை நிபுணர் குழு பின்வருமாறு வரிசைப்படுத்தியுள்ளது.

(1) கீழே கொடுக்கப்பட்டுள்ள தனித்த குறிக்கோள்களை நிறைவேற்ற உதவி மானியங்களைப் பகிர்ந்தளித்து நிருவகிக்கவும், அதுபற்றி முடிவு எடுக்கவும், மானியங்களை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதைக் கவனிக்கவும் அவ்வமைப்பு முன்வரவேண்டும்.

(2) பொது உதவி வழங்குவதன்மூலமாகவும், அவசியமேற்பட்டால் நுட்பத் தொழில் நிபுணர்களின் பணிகளை வழங்குவதன்மூலமாகவும், பொருளாதார வளர்ச்சிக்குரிய திட்டங்களைத் தயாரிப்பதற்கு வேண்டிய மானிய உதவிகளை வழங்குவதன்மூலமாகவும் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்து ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக ஆக்குவதில் வளர்ச்சி குறைந்த நாடுகளுடன் ஒத்துழைக்க வேண்டும்.

(3) அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, அதிலும் குறிப்பாக மூலதனப் பொருள்கள், தொழில்நுட்ப வினைஞர்கள் முதலான கிடைப்பருமையுள்ள வளச்சாதனங்களைச் சேகரிப்பதற்கு உதவவேண்டும்.

(4) அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் பற்றியும், அவற்றைத் தயாரித்தல்பற்றியும் அவ்வப்பொழுது அறிக்கைகள் சமர்ப்பிக்கவேண்டும். வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திபற்றிய பிரச்சினைகள் குறித்துத் தொடர்ந்து ஆய்தல் வேண்டும். இத்தகைய பிரச்சினைகள் குறித்து ஏதேனும் நடவடிக்கை எடுக்கவேண்டுமா என்பது பற்றிப் பொருளாதார-சமூகக் கவுன்சிலுக்குப் பரிந்துரைகள் வழங்கவேண்டும். தீர்மானிக்கப்பெற்ற புதிய அமைப்பிற்கு வேண்டிய நிதிகளைத் திரட்டும் வழிமுறை, இயக்கம், நிருவாகம், அமைப்புபற்றிய விவரங்கள் நிபுணர் குழுவிற்கு வழங்கப்படவில்லை. குறைந்த வட்டியில் கடன் வழங்கவோ அல்லது வட்டியே இல்லாது கடன் வழங்கவோ ஓர் அமைப்பினை ஏற்படுத்துவதுபற்றிய சிபாரிசினை வழங்குவதற்கும் நிபுணர் குழு தவறிவிட்டது. ஏனெனில், நிபுணர் குழுவின் கருத்துப்படி, 'சமூக ரீதியில் விரும்பத்தக்க தொழில் அமைப்புக் கடன் நிதியத்தின் முழுச் சுமையைத் தாங்க முடியாதபொழுது, பன்னாட்டு அபிவிருத்தியமைப்பு வழங்கும் உதவி மானியத்துடன் உலக பாங்கு வழங்கும் கடனையும் பெற்று அதே குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.'

என்னுடைய கருத்தின்படி, ஐ. நா. சபையின் தனித்த நிபுணர் குழு வழங்கிய திட்டத்தில் மறுக்கத்தக்க குறைபாடுகள் உள்ளன. அவை பின்வருமாறு:

(1) ஒன்றுக்கொன்று சார்பான உதவியின் அடிப்படையில் இத் திட்டம் அமைந்ததாகத் தெரியவில்லை. எப்படியெனில், கடன் வழங்கும் நாடுகள் என்றும், கடன் பெறும் நாடுகள் என்றும் இரு வர்க்கங்களாக நாடுகளனைத்தையும் இத் திட்டம் பிரிக்கிறது. தீர்மானிக்கப்பெற்ற அமைப்பின் நிருவாகத்திற்கும் நிதிக்கும் கடன் பெறும் நாடுகள் எவ்வளவு தொகை தங்களுடைய பங்கெனச் செலுத்தவேண்டும் என்பதுபற்றிய குறிப்பு எதனையும் இத் திட்டம் வழங்கவில்லை. இதனைப் பொறுத்த வரையில், ஐ.நா. சபையின் நுட்பத் தொழிலுதவி நிருவாகவமைப்பு (U. N. Technical Assistance Administration) உயர்ந்ததே. இவ்வமைப்பின் நிதிக்கு ஒவ்வோர் உறுப்பினர் நாடும் தன்னுடைய தகுதிக்குத் தக்கவாறு கூடுதலாகவோ குறைவாகவோ பங்குத் தொகையைச் செலுத்தவேண்டும்.

(2) ஐ.நா. சபை பன்னாட்டு உதவிக்கென்று விதித்துள்ள அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றினை இத் திட்டம் பின்பற்றுவதாகத் தோன்றவில்லை. அதாவது, இத் திட்டம் உள்நாட்டிலேயே கிடைக்கப்பெறும் மனித முயற்சியையும் தொடக்க உரிமையையும் தூண்டிவிடுவதாகத் தோன்றவில்லை. பன்னாட்டு உத்வியின் அளவிற்கோ அல்லது வேறு அளவிற்கோ உள்நாட்டுப் பங்குத்தொகை அளிப்பும் இருக்கவேண்டும் என்ற விதியினைப் பிரயோகித்தே சாதாரணமாக மேற்குறிப்பிட்டுள்ள கோட்பாட்டினை நடைமுறைக்குக் கொண்டுவருவர். இதனை நான் என்னுடைய திட்டமாகிய ஐ.நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்பில் சேர்த்துள்ளேன். ராக்ஃபெல்லர் கமிட்டி சிபாரிசு செய்துள்ள பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பிலும் இது இடம்பெற்றுள்ளது. ஆனால், நன்மை பயக்கும் இந்த விதியானது ஐ.நா. சபையின் நிபுணர் குழுவின் திட்டத்தில் இடம்பெறவில்லை.

(3) சிக்கனம் நிறைந்ததும், நெடுங்காலத்தில் தனக்குத் தானே உற்பத்திமூலம் செலவினைக் கரைத்துக்கொள்ளும் தன்மையதும், உலக பாங்குமூலம் கிடைக்கும் சாதாரண கடன் நிதியினைக் கொண்டுமட்டும் இயங்கவியலாததுமான வளர்ச்சித் திட்டங்களுக்கு வேண்டிய கடன் நிதியத்தினைக் குறைந்த வட்டிக்கோ அல்லது வட்டியில்லாமலோ பெறும் விதியினை இத் திட்டம் ஏற்படுத்தவில்லை. உலக பாங்கு வழங்கும் கடன் நிதியும், தீர்மானிக்கப்பெற்ற பன்னாட்டு அபிவிருத்தியமைப்பு வழங்கும் மானிய நிதியும் தேவையைப் பூர்த்தி செய்யும் என்று நிபுணர்குழு கருதுகிறது; ஆனால், நான் குறிப்பிட்டுள்ள வகையைச் சேர்ந்த தேவைகளையும், பின்னர் பொருளாதார—சமூகக் கவுன்சிலும் பொதுக்குழுவும் நிறைவேற்றிய தீர்மானங்களிலும் நடத்திய விவாதங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளையும், உலக பாங்கின் கடன் நிதியும் அபிவிருத்தி அமைப்பின் மானிய நிதியும் பூர்த்தி செய்ய மாட்டா என்றே எனக்குத் தோன்றுகிறது.

(4) தீர்மானிக்கப்பெற்ற அமைப்பின் நிருவாக அமைப்பினைப்பற்றி இத் திட்டத்தில் எந்தக் குறிப்பும் இல்லை. ஆக, நிருவாகக் குழுவில் எவரெவர் இடம் பெறுவர் என்பதுபற்றி எந்தக் குறிப்பும் இல்லை. திட்டங்களை ஏற்றுக்கொள்வது பற்றிய குறிப்போ அல்லது இத்தகைய அமைப்பினால் வழங்கப்பெறும் நிதியினைப் பயன்படுத்துவது குறித்துச் சரிபார்த்தல் பற்றிய குறிப்போ இவ்வமைப்பில் இல்லை.

ஐ.நா. சபையின் நிபுணர் குழுவின் அறிக்கையையும், இத் தலைப்பில் முன்னரே வெளிவந்துள்ள அறிக்கைகளையும் வைத்துக்கொண்டு, 1951ஆம் ஆண்டில் ஆகஸ்டு மாதத்தில் நிகழ்ந்த கூட்டத்தில், பொருளாதார-சமூகக் கவுன்சில் இப் பிரச்சினையை ஆராய்வதுதான் அடுத்த கட்டமாகும். 'சில நாடுகளில், அதிலும் குறிப்பாக மிகக் குறைந்த அபிவிருத்தியுள்ள நாடுகளில், சில சூழ்நிலைகளில், தங்கள் உற்பத்திமூலம் தங்களுக்காகும் செலவினைக் கரைத்துக்கொள்ள முடியாத திட்டங்களுக்கு வேண்டிய நிதியினைத் திரட்ட அன்னிய மானிய உதவியினை நாடவேண்டுமென்றும், இத்தகைய அடிப்படையான திட்டங்களுக்கு வேண்டிய தூண்டுதலைத் துவக்கத்தில் பெறுவதற்கே அன்னிய மானிய உதவியினை நாடவேண்டுமென்றும்' கவுன்சில் ஆகஸ்டு 22-ல் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால், இத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்ட நியாயத்திற்கிணங்கச் செயலில் ஈடுபடுவதற்குக் கவுன்சில் மீண்டும் விரும்பவில்லை. எனவே, நான் எடுத்துக்காட்டிய ஐ.நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்பு போன்றோ அல்லது இதுபோல வேறு அமைப்பு போன்றோ ஒரு புதிய ஏஜென்சியை உண்டாக்கக் கவுன்சில் சிபாரிசு செய்யவில்லை. 'கடன் பெறும் நாடுகளின் கடனடைக்கும் திறன் பெருகும் விளைவினைப் பொதுவாகவே முன்னேறிச் செல்லும் பொருளாதார வளர்ச்சி உண்டாக்கும் என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு வளர்ச்சி குன்றிய பிரதேசங்களில் கடனளிக்கும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து பெருக்க வேண்டிய வேலையினை' உலக பாங்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவதோடு மட்டிலும் கவுன்சில் தன் பணியை முடித்துக்கொண்டது. என்றாலும், கவுன்சிலுக்குக் குறைந்த வட்டியுள்ள கடன் நிதியத்திலோ, வட்டியில்லா நிதியத்திலோ, அல்லது மானிய நிதியத்திலோ விருப்பம் இல்லை என்று பொருள் கொள்ளக்கூடாது. வழக்கம்போலக் கவுன்சில் எச்சரிக்கையுடன் நடந்துகொள்கிறது. இப் பிரச்சினை குறித்துக் கவுன்சில் மேலும் பரிசீலனை செய்ய விரும்புகிறது. எனவே, கவுன்சில் வேண்டிக்கொண்டது பின்வருமாறு :

(அ) வளர்ச்சி குறைந்த நாடுகளின் தன்-கரைப்பு இல்லாத திட்டங்களுக்கு (non-self liquidating projects) வேண்டிய உள்நாட்டு - வெளிநாட்டு - பன்னாட்டு நிதியாக்கம் பற்றிய பிரச்சினைகளையும் வழிமுறைகளையும் நன்கு பரிசீலனை செய்ய, புனரமைப்பையும் வளர்ச்சியையும் மேற்கொள்ளும் உலக பாங்குடனும் ஏனைய பொருத்தமுள்ள, சிறப்புத்தேர்ச்சி

பெற்ற ஏஜென்சிகளுடனும் பொதுச் செயலாளர் கலந்தாலோசித்து முடிவு எடுக்கவேண்டும்; கவுன்சிலின் 294 (XI) ஆவது தீர்மானத்தின் 9 (a) சார்ந்த பத்தியில் (paragraph) குறிப்பிடப் பெற்றுள்ள அடிப்படையான, முக்கியத் திட்டங்களுக்கு வேண்டிய நிதியினை உள்நாட்டு மூலதனம் கொண்டு போதுமான அளவிற்குத் திரட்டவியலாத பொருளாதாரச் சூழ்நிலையுடைய வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு ஆதரவாக, இப்பொழுது நிலவும் பன்னாட்டு ஒத்துழைப்புடன் சேர்த்து அன்னிய மானிய உதவியினை அளிக்க முடியுமா என்பது பற்றியும் பொதுச் செயலாளர் முடிவு எடுக்கவேண்டும். இப் பரிசீலனைகளையும் பரிந்துரைகளையும் நடைமுறையில் எவ்வளவு விரைவாகக் கவுன்சிலிடம் சமர்ப்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவாகச் சமர்ப்பிக்கவேண்டும்.

(ஆ) வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய நிதியினைத் திரட்ட ஒரு பன்னாட்டு நிதியமைப்பினை ஏற்படுத்தும் திட்டத்தையோ அல்லது பன்னாட்டு அபிவிருத்தியமைப்பினை ஏற்படுத்தும் திட்டத்தையோ ஏற்காமலோ அல்லது அதே வேளையில் மறுக்காமலோ, மானிய உதவிப் பிரச்சினைக்கு நடைமுறையில் தீர்வு காணும் வழிமுறைகளைப்பற்றிய முடிவினைப் பொதுச் செயலாளர் உலக பாங்குடனும் ஏனைய தனித்த ஏஜென்சிகளுடனும் கலந்து ஆலோசித்து எடுக்கவேண்டும். நிபுணர் குழு சமர்ப்பித்த அறிக்கையின் 14 ஆவது பரிந்துரை குறித்துக் கவுன்சிலின் 13 ஆவது கூட்டத்தில் நிகழ்ந்த விவாதத்தினையும், மேற்குறித்த முடிவு எடுக்கும்பொழுது, பொதுச் செயலாளர் குறித்துக் கொள்ள வேண்டும். பொதுக் குழுவின் ஏழாவது கூட்டத்திற்கு முந்திய கவுன்சிலின் கூட்டத்தில் இத்தகைய வழிமுறைகளைப் பொதுச் செயலாளர் சமர்ப்பிக்கவேண்டும்.

1951-52ஆம் ஆண்டின் மாரிக் காலத்தில் பொதுக் குழுவின் ஆறுவது கூட்டம் நடைபெற்றது. புனரமைப்பிற்காகவும் அபிவிருத்திக்காகவும் ஐ.நா. சபையின் நிதி ஒன்றினை ஏற்படுத்துவதற்காக அரசியல் கமிட்டியில் ஒரு திட்டத்தினை இந்தியப் பிரதிநிதியாகிய சர் B.N. ராவ் அவர்கள் (Sir B.N. Rau) மரபு முறையில் சமர்ப்பித்தார். அத் திட்டத்தினை எந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில், எந்த அளவில் தயாரிக்க வேண்டும் என்பது பற்றி உறுப்பினர் நாடுகள் பொதுச் செயலாளருக்கு அறிவிக்கவேண்டும் என்று இந்தியப் பிரதிநிதி கேட்டுக்கொண்டார். பொருளாதார வளர்ச்சியுடன் படைக்கலக் குறைப்பை இணைத்தமைதான் சர் B.N. ராவ் அவர்க

னுடைய திட்டத்தின் தனிச் சிறப்பாகும். படைக்கலக் குறைப்பில் எஞ்சும் தேசிய நிதியின் ஒரு பகுதியைப் பொரு ளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்துதலே அத் திட்டத்தின் தனிச் சிறப்பாகும். எனினும், பொருளாதார வளர்ச்சிக்கு நிதி திரட்டுதல்பற்றிய பிரச்சினை பொருளாதாரக் கமிட்டியின் (economic committee) பார்வைக்கு வந்தது மிகப் பொருத்தமே. பொருளாதார - சமூகக் கவுன்சிலின் பரிந்துரைகளும் அக் கமிட்டியின் பார்வைக்கு வந்தது. எனவே, சர் B. N. ராவ் அவர்களின் திட்டம் வலியுறுத்தப்படவில்லை. ஆனால், பொதுக் குழுவின் பொருளாதாரக் கமிட்டியின் நடவடிக்கைகளைத் தூண்டுகின்ற நல்ல விளைவினை ராவ் அவர்களின் திட்டம் உண் டாக்கியது என்பதில் ஐயமில்லை.

தன்னுடைய முந்திய ஆண்டுக் கூட்டத்தில் பொதுச் சபை தனது பொருளாதார - சமூகக் கவுன்சிலைவிட ஒரு படி முந்திக் கொண்டது போலவே, குறைந்த வட்டி உடைய நிதி, வட்டி யற்ற நிதி, மானிய நிதி ஆகிய நிதிகளைப்பற்றி ஆராய்வதில் பொருளாதார - சமூகக் கவுன்சிலை பொதுச் சபை முந்திக் கொண்டது. ஆக, பொதுச் சபை ஜூன் 12ஆம் நாள் தன் னுடைய முழுமையான கூட்டத்தில் இப் பிரச்சினை குறித்துத் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியது. பொருளாதார வளர்ச்சிபற்றிய பன்னாட்டு நிதியாக்க வரலாற்றில் இத் தீர் மானம் ஒரு சரித்திரபூர்வமான திருப்புமுனையாயிற்று. இத் தீர்மானம் பின்வருமாறு :

தங்களுடைய விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய அதிக முதலீடுகளைப் பெற, உள்நாட்டுச் சேமிப்பு களை வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய வருமானங்கள் போதுமான அளவிற்குக் குவிக்காமைபற்றிய, பொதுச் செய லாளர் 1951ஆம் ஆண்டின் துவக்கத்தில் வெளியிட்ட உலகப் பொருளாதார அறிக்கையில் (1949-50) உள்ள புள்ளிவிவ ரங்களை ஆராய்ந்தமையால்,

தங்களுடைய மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன், வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கு ஏற்ற பன்னாட்டு நிதியாக்கத்தின் புதிய ஊற்றுகளை உண்டாக்கும் பிரச்சினையை ஆராய வேண்டிய அவசர அவசியம் உள்ளது என்பதனை உணர்ந்தமையால்,

வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி யைத் துரிதப்படுத்துவதற்குப் பல்வேறு வகைத்தாய பன்னாட்டு நிதியுதவி அமைப்புகள் இருந்தபோதிலும்கூட,

அந் நாடுகளுக்கு ஒரு பன்னாட்டு மானிய உதவியமைப்பு வேண்டும் என்று ஏற்றுக்கொண்டபோதிலும், அதனை நிரந்தர அடிப்படையில் நிறுவக்கூடாது என்றும், வளர்ச்சி குறைந்த நாடுகளின் முயற்சிகளுடன் அதனை எப்படி இருந்தபோதிலும் இணைக்க வேண்டும் என்றும் கருதியமையால்,

வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு, முன்னரே உள்ள பன்னாட்டு அமைப்புகளின் செயல்களுக்கு இடையே மிகவும் நெருக்கமான தொடர்பினை உண்டாக்கவேண்டும் என்று கருதியமையால்,

வளர்ச்சி குறைந்த நாடுகளின் அபிவிருத்திக்குப் பன்னாட்டு நிதிகளின் ஓட்டத்தைப் பெருக்கும் காரியம்பற்றிய விவரமான திட்டங்களை, குறிப்பாக அந் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குரிய அடிப்படையான தன்கரைப்பற்ற (non-self-liquidating) திட்டங்களுக்கு வேண்டிய நிதியினை வழங்குவதுபற்றிய விவரமான திட்டங்களை நியாய வரம்புக்கு உட்பட்ட காலவரையறைக்குள் தாமதமின்றித் துவக்கவேண்டும் என்று கருதியமையால்,

வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான வேகத்தை ஊட்ட அன்னிய நிதியுதவி வேண்டும் என்றபோதிலும், முந்திய பத்தியில் குறிப்பிடப்பெற்றுள்ள திட்டங்களை விளக்குவதிலும் பரிசீலனை செய்வதிலும் கலந்துகொண்டுள்ள அரசுகள் இத்தகைய திட்டங்களை நிதிரீதியாகவோ அல்லது வேறு வகையிலோ எந்த அளவிற்கேனும் நிறைவேற்றுவதற்கெனச் சேரவேண்டியதில்லை என்ற உண்மையைத் தெரிந்துகொண்டமையாலும்,

(1) வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தவும், அவற்றின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான தன்கரைப்பற்ற திட்டங்களுக்கு வேண்டிய நிதியினை அளிக்கவும், அந் நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்கி உதவும் முறையில், சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு, மானிய உதவி, குறைந்த வட்டியுடைய கடன், நெடுங்காலக் கடன் ஆகியவற்றிற்கான தனித்த நிதியினை உருவாக்கும் விவரமான திட்டமொன்றினைப் பொதுச்சபையின் முறையான ஏழாவது கூட்டத்தில் பொருளாதார–சமூகக் கவுன்சில் சமர்ப்பிக்கவேண்டுமெனப் பொதுச் சபை கேட்டுக்கொள்கிறது.

(2) மேலே வந்த முதல் பத்தியில் உள்ளனவற்றை நிறைவேற்ற, கீழே தரப்படும் விஷயங்கள் குறித்துப் பரிந்துரைகளைத் தயாரித்துப் பொதுச்சபையின் முறையான ஏழாவது

கூட்டத்தில் அதன் பரிசிலனைக்குப் பொருளாதார-சமூகக் கவுன்சில் சமர்ப்பிக்கவேண்டுமெனப் பொதுச்சபை கேட்டுக் கொள்கிறது.

(அ) இப்பொழுதுள்ள அமைப்புகள் தேவைப்படும் வேலைகளைப் பூர்த்திசெய்ய இயலாது என்பது தக்க பரிசீலனைக்குப் பின்னர் நிரூபிக்கப்பட்டால் மட்டுமே ஓர் புதிய பன்னாட்டமைப்பினை நிறுவவேண்டும் என்பதனை, அதன் நிருவாகத்தைப் பொறுத்தவரையில், மனத்தில் கொண்டு, தனித்த நிதியமைப்பின் அளவு, தொகுப்பு, நிருவாகம் முதலானவைபற்றிக் கவுன்சில் பரிந்துரை வழங்கவேண்டும்.

(ஆ) நாடுகளனைத்தும் முழுதும் பங்கெடுத்துக் கொள்ளுதல் விரும்பத்தக்கது என்பதனையும், கட்டணங்கள் செலுத்தும் ஊற்றுகளில் ஒன்று என்ற முறையில் படைக்கலக் குறைப்புத் திட்டத்தில் விளைகின்ற சேமிப்புகள் எதனையும் பயன்படுத்துதல் விரும்பத்தக்கது என்பதனையும் மனத்தில் கொண்டு, தனித்த நிதியமைப்பிற்கு வேண்டிய கட்டணங்களை வசூலிக்கின்ற முறைபற்றிப் பரிந்துரை வழங்கவேண்டும்.

(இ) ஐ.நா. சபையில் இடம்பெற்றுள்ள உறுப்பினர் நாடுகளும், இடம்பெறாத உறுப்பினர் நாடுகளும் அளிக்கின்ற கட்டணங்களின் இயல்பு குறித்துப் பரிந்துரை வழங்குதல் வேண்டும்.

(ஈ) வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குத் தனித்த நிதியிலிருந்து மானியங்களையும் கடன்களையும் வழங்குவதில் பின்பற்ற வேண்டிய கைக்கோள்கள், நிபந்தனைகள், வழிமுறைகள் பற்றியும் பரிந்துரை வழங்குதல் வேண்டும்.

(உ) தனித்த நிதியத்திலிருந்து மானியங்களையும் கடன்களையும் பெறுகின்ற நாடுகள் பின்பற்றவேண்டிய கோட்பாடுகள் குறித்தும் பரிந்துரை வழங்குதல் வேண்டும்.

(3) இத் தீர்மானத்தின்மூலம் கவுன்சிலுக்குத் தரப்பட்டுள்ள பொறுப்புகளை அது செவ்வனே நிறைவேற்றுவதற்குப் பொதுச்செயலாளர் துணைபுரியவேண்டுமெனப் பொதுச்சபை வேண்டிக்கொள்கிறது.

(4) மேலே வந்த இரண்டாவது பத்தியில் கண்டுள்ள பரிந்துரைகளைப் பொறுத்தவரையில் கவுன்சிலுக்கு அரசுகள் தங்கள் கருத்துகளை வழங்கவேண்டும் என்று பொதுச்சபை விழைகின்றது.

நியூயார்க்கில் இப்பொழுது கூடியுள்ள பொருளாதார-சமூகக் கவுன்சிலின் பார்வைக்கு இப் பிரச்சினை வந்துள்ளது.

கவுன்சில், இந்த முக்கியமான பிரச்சினையைத் தள்ளிப் போட்டு இன்னும் காலந்தாழ்த்தவும் முடியாது; மேலும், பரிசீலனை செய்யவேண்டும் என்று கூறவும் முடியாது. பொருளாதார வளர்ச்சிக்கு நிதி திரட்டும் பன்னாட்டு அமைப்பில் நிலவுவதாகக் கருதப்படும் இடைவெளியினை அடைப்பதற்குச் செறிவுள்ள பரிந்துரைகளை கவுன்சில் இப்பொழுது வழங்கியுள்ளது. பன்னாட்டமைப்பில் நிலவும் இடைவெளியைப்பற்றி 1949ஆம் ஆண்டு, மார்ச்சு – ஏப்ரலில் நடைபெற்ற துணைக்கமிஷனின் மூன்றாவது கூட்டத்தில் நான் வலியுறுத்திப் பேசிக் கமிஷனின் கவனத்தை ஈர்த்தேன். 1949ஆம் ஆண்டில் நிகழ்ந்த பொருளாதார–வேலைக் கமிஷன் (Economic and Employment Commission), பொருளாதார – சமூகக் கவுன்சில் ஆகியவற்றின் அடுத்த கூட்டத்தில், பொருளாதார வளர்ச்சிபற்றிய துணைக்கமிஷன் நடத்திய மூன்றாவது கூட்டத்தின் அறிக்கைமீது நிகழ்ந்த விவாதங்களின்போது, பன்னாட்டமைப்பிலுள்ள இடைவெளியை நான் எடுத்துக்காட்டியதற்காகக் கண்டிக்கப் பெற்றேன்.

இப் பிரச்சினையைப் பரிசீலனை செய்வதற்காக ஐ.நா. சபையின் தலைமைக் காரியாலயம் தயாரித்திருக்கவேண்டிய ஆவணத் திரட்டு என்னிடமில்லை. பொதுச்சபையின் தீர்மானத்தில் கண்டுள்ள வேண்டுகோளுக்கிணங்கி இப் பிரச்சினை குறித்து என் அரசினர் தந்திருக்கக்கூடிய திட்டங்கள், நான் அரசினர் அதிகாரம் பெறாத பொருளாதார நிபுணர் என்ற காரணத்தால், என் கைவசமில்லை. ஆனால், இக் கருத்தினை விவாதத்தில் துவக்கிவைத்ததில் ஓரளவிற்கு எனக்கும் பங்கு உண்டு என்பதாலும், அப்பொழுது எவ்வளவு பகைமை ஏற்பட்டபோதிலும் விவாதத்தினை வலியுறுத்தி நிகழ்த்தியமையாலும், இக் கருத்தினைப் பரிசீலனை செய்யும் கடைசிக் கட்டத்தில் என்னுடைய பங்கினையும் செலுத்தவேண்டும் என்ற இயற்கையான, உண்மையான விருப்பம் எனக்குண்டு. எனவே, 'பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினை' (International Development Authority) உண்டாக்க, அல்லது நான் பெயரிட விரும்பும் 'ஐ. நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்பினை' (United Nations Economic Development Administration—UNEDA) உண்டாக்க, என்னுடைய செறிவு மிக்க திட்டங்களைப் பின்வருமாறு அளிக்கத் துணிகின்றேன்.

1. குறிக்கோள்கள்

ஒருவருக்கொருவர் உதவி என்ற அடிப்படையில் உலகின் வளர்ச்சி குறைந்த பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்தியினைப் பேணுதல்.

2. பணிகள்

(i) பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய திட்டங்களைத் தயாரிப்பதில், வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குத் தொழில் நுட்ப உதவி அளித்தல்.

(ii) பல்வேறு வகைகளைச் சார்ந்த தொழில்நுட்ப உதவியினை ஒழுங்காக இணைத்து, குறிப்பிட்ட நாட்டின் வளச் சாதனங்களைத் திட்டமிட்டு அபிவிருத்தி செய்வதற்காகவென, வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்குத் தற்பொழுது கிடைக்கும் தொழில்நுட்ப உதவியினை ஐ.நா. சபையின் கீழும், அதன் தனித்த ஏஜென்சிகளின் கீழும் ஒன்றுக இணைத்தல்.

(iii) பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குத் தேவைப்படும் அத்தியாவசியப் பண்டங்கள், உபகரணம், தொழில்நுட்ப வினைஞர் முதலானவற்றை அளித்தல்.

(iv) நாட்டின் சொந்த மூலவளங்களைக்கொண்டு நிதி திரட்டிப் பொருளாதார வளர்ச்சியை மேற்கொள்ள முடியாத திட்டங்களுக்கும், கடிய வியாபாரக் கோட்பாடுகளின் அடிப்படையில் கடன்களைப் பெற்று நிறைவேற்ற முடியாத திட்டங்களுக்கும் நிதியளித்தல் அல்லது நிதியளிக்க உதவுதல்.

(v) நாட்டு எல்லைகளைக் கடந்த பிரதேச வளர்ச்சித் திட்டங்களை எந்த நாடும் தன் சொந்த முயற்சியில் மேற்கொள்ளாதாகையால், அவற்றைப் பேணுதலும், தேவைப்பட்டால் அத் திட்டங்களின் போக்கினையும் அவற்றிற்கு வேண்டிய நிதியினையும் திரட்டி நிருவகித்தலும்.

3. உறுப்பினர் சேர்த்தல்

ஐ.நா. சபையில் அங்கம் வகித்தாலும் சரி, வகிக்காவிட்டாலும் சரி, சுதந்திர நாடுகளனைத்திற்கும் இவ்வமைப்பில் உறுப்பினராகும் உரிமையுண்டு. ஆனால், இவ்வமைப்பின் குறிக்கோளையும் பணிகளையும் ஏற்று, அவற்றை நிறைவேற்ற ஆக்கபூர்வமான செயலில் ஈடுபட உறுப்பினராகும் நாடுகள் தயாராக இருக்கவேண்டும்.

4. நிதியம்

(i) கடந்த மூன்று ஆண்டுகளின் மொத்தத் தேசிய வருமானத்தின் ஆண்டு சராசரித் தொகையில் இரண்டு சதவீதத்திற்குக் குறைவான தொகையை இவ்வமைப்பிற்கு உறுப்பினர் நாடுகள் ஆண்டுக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். எனினும், சில வேளைகளில் விதிவிலக்காகச் சில நாடுகளுக்கு இத் தொகைக்கும் குறைவான தனிக் கட்டண வீதத்தை இவ் வமைப்பு அனுமதிக்கலாம்.

(ii) உறுப்பினர் நாடுகள் தங்களுடைய சொந்தச் செலாவணிகளிலேயே கட்டணத்தினைச் செலுத்தும். குறிப்பிட்ட அரசுகளின் ஒப்புதலின் பேரிலேயே கட்டணங்கள் பண்டங்கள்மீது செலவிடப்படும்.

(iii) ஐரோப்பிய மீட்சித் திட்டத்தின்கீழ்த் தற்பொழுது ஐக்கிய அமெரிக்காவிடம் உதவிபெறும் நாடுகளில் மீட்சி ஏற்பட்டு முடிந்த பின்னரோ அல்லது 1953ஆம் ஆண்டின் இறுதியிலோ (இவற்றில் முன்னதாக நிகழும் நிகழ்ச்சியின் போது), இந் நாடுகள் தனித்த கட்டணங்கள் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட நாடுகளின் ஒப்புதலுக்குப் பின்னர் அவற்றுடன் உரையாடி, இத்தகைய கட்டணங்களின் அளவையும் இயல்பையும் நிர்ணயிக்கவேண்டும்.

(iv) படைக்கலக் குறைப்பில் பன்னாட்டு உடன்படிக்கை ஏற்படும் காரணத்தினாலோ அல்லது வேறு காரணத்தினாலோ, 1952ஆம் ஆண்டில் நிலவிய தேசப் பாதுகாப்புச் செலவில் ஏதேனும் குறைப்பு ஏற்பட்டால், அக் குறைப்பிலிருந்து 10 சதவீதத்திற்குக் குறையாத தொகையினை ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் இவ்வமைப்பிற்குத் தனிக் கட்டணமாகச் செலுத்தவேண்டும்.

5. நிதியுதவிபற்றிய விதிகள்

(i) (அ) நிதிகளை அரசாங்கங்களுக்கோ அல்லது அரசாங்கங்கள் மூலமாகவோ அளிக்கவேண்டும்; (ஆ) குறிப்பிட்ட நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதாக நிதிகள் அமைய வேண்டும்; (இ) உதவி கோரும் நாட்டின் அரசியல் கட்டமைப்பு, மக்களின் இனம் அல்லது அவர்களுடைய சமயம் ஆகியவற்றிலிருந்து எழும் வேற்றுமைகளைப்பற்றிக் கவலை கொள்ளாது நிதி வழங்கவேண்டும்; (ஈ) இந்த நிதியுதவியின் விளைவாக, குறிப்பிட்ட நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில்

பொருளாதார ரீதியான, அரசியல் சார்ந்த அன்னியத் தலையீடு ஏற்பட்டுவிடக் கூடாது. நிதியுதவியில் அரசியல் இயல்புடைய எக்கருத்தும் ஆதிக்கம் செலுத்தக்கூடாது.

(ii) வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குமட்டிலுமே நிதியுதவி யளிக்கப்படும். இப் பகுதியில் வரக்கூடிய நாடுகளின் அட்ட வணையை அனைத்துலக ஒப்புதலின் மீது தயாரிக்கவேண்டும்.

(iii) சுயாட்சியற்ற, பொறுப்பாட்சிக் குழு சார்ந்த பிரதே சங்களைத் (Non-Self-Governing and Trust Territories) தவிர, ஏனைய நாடுகளின் வேண்டுகோளின்பேரில்மட்டுமே நிதியுதவி யளிக்கப்படும். சுயாட்சியற்ற பொறுப்பாட்சிக் குழு சார்ந்த பிரதேசங்களை நிருவகிக்கும் அதிகாரம் பெற்ற நாடுகளுடன் தனித் தொடர்புகொண்டு இவ்வமைப்பு அப் பிரதேசங்களுக்கு வேண்டிய நிதியினை அளிக்க முயலும்.

(iv) புனரமைப்பிற்காகவும் வளர்ச்சிக்காகவும் உள்ள உலக பாங்கினால் நிதியுதவ முடியாததும், அரசாங்கங்களுக் கிடையே நிலவும் நிதியத்தினால் மேற்கொள்ள முடியாததும் அல்லது தனியார்துறை சார்ந்த அன்னிய முதலீடுகளினால் மேற்கொள்ள முடியாததுமான திட்டங்களுக்குமட்டுமே நிதியுதவி கிடைக்கும்; இத் திட்டங்கள் பொருளாதார வளர்ச் சிக்கு அடிப்படையாகவும் இருக்கவேண்டும்; இத் திட்டங் களினால், இறுதியில், தேசிய உற்பத்தியில் அதிகரிப்பும், குறிப்பிட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தில் உயர்வும் எதிர் பார்க்கப்படுகின்றன.

(v) சாதாரணமாக, கடன்கள், மானியங்கள் என்று சொல்லப்படுகின்ற இரு வகைகளையோ அல்லது இவை யிரண்டில் ஒன்றனையோ நிதியுதவி சார்ந்திருக்கும்.

குறிப்பிட்ட நாட்டின் இயல்பைப் பொறுத்தே கடன்கள் மீது குறைந்த வட்டி விதிக்கப்படும்; அல்லது வட்டி இல்லாது கடனளிக்கப்படும். கடன்களை அடைப்பதற்கு வேண்டிய கால வரையறையில் தாராள உணர்வு காட்டப்படும்.

ஒன்று சேர்த்து இணைக்கப்பெற்றுள்ள அபிவிருத்தித் திட்டத்தில் ஓர் அங்கமாகவிருக்கும் தனித்த திட்டங்களுக்கு மட்டிலுமே சாதாரணமாக மானியங்கள் அளிக்கப்படும். தேவைப்படும் நிதியினை மொத்தமாக அளிக்காமல், திட்டங் களின்மீது செலவு ஆக ஆக நிதி வழங்கப்படும்.

(vi) கடன்களாகவும் மானியங்களாகவும் அளிக்கப்படும் நிதியுதவியில் சேர்க்கப்பட்டுள்ள நிபந்தனை என்னவெனில், குறிப்பிட்ட திட்டங்களுக்காகும் செலவின் ஒரு பகுதியை நிதி

யுதவி பெறும் நாடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே. சாதாரணமாகச் செலவில் குறைந்தபட்சம் 50 சதவீதத்தை யேனும் குறிப்பிட்ட நாடு தன் பொறுப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், இதனைக் குறைக்கும் உரிமை இவ்வமைப் பிற்கு உண்டு. மானிய நிதியுதவி கோரும் நாடுகளைவிடக் கடன் நிதியுதவி கோரும் நாடுகளைப் பொறுத்தவரையில் இவ் விதி தளர்த்தப்படலாம் என்று தெரியவருகிறது.

6. நிருவாகம்

(i) இவ்வமைப்பினை முழுநேர கவர்னர் குழு (Board of Governors) நிருவகிக்கும். இக் குழுவில் 15 உறுப்பினர்கள் இருப்பர். இவர்களைப் பொதுச்சபை தேர்ந்தெடுக்கும். இவர் களில் 5 பேர்களை ஓராண்டிற்கும், 5 பேர்களை இரண்டாண்டு களுக்கும், எஞ்சியுள்ள 5 பேர்களை 3 ஆண்டுகளுக்கும் பொதுச் சபை தேர்ந்தெடுக்கும். தேர்ந்தெடுக்கப்பெற்ற காலம் முடிவுற்று ஓய்வுபெறும் உறுப்பினர்களுக்கு மீண்டும் தேர்த லுக்கு நிற்கும் உரிமையுண்டு. உறுப்பினர்கள் முழுநேரப் பிரதி நிதிகளை நியமித்துக்கொள்ளலாம்.

(ii) கவர்னர் குழு கீழ்க்கண்ட பணிகளை நிறைவேற்ற வேண்டும்:

(அ) நிதியுதவி கோரும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கவேண்டும்.

(ஆ) நிலைமைக்குத் தக்கவாறு, தக்க மானியங்களையோ அல்லது கடன்களையோ அளிக்கவேண்டும்.

(இ) வழங்கப்பெற்ற நிதிகள் பயன்படுத்தப்படுதலைக் கண்காணிக்கும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். குறிப்பிட்ட திட்டங்கள் நிறைவேற்றம் பெறுதல்பற்றிய அறிக்கைகளை அவ்வப்பொழுது பார்வையிடவேண்டும்.

(ஈ) ஐ.நா. சபையின் தொழில்நுட்ப உதவி, நிருவாக அமைப்பின் வேலைகளை எடுத்துக்கொண்டு, வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குத் தனித்த ஏஜென்சிகள் அளித்துள்ள தொழில் நுட்ப உதவித் திட்டங்களனைத்தையும் ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தி, உலக பாங்கு அளித்துள்ள நிதிமூலம் நிறை வேறும் திட்டங்களுடனும் தங்களுடைய சொந்த அமைப்பின் நிதிமூலம் நிறைவேறும் திட்டங்களுடனும் இணைக்கவேண்டும்.

(உ) அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதில் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு உதவவேண்டும்.

(ஊ) தனித்த ஏஜென்சிகள்மூலமாகவோ அல்லது வேறு ஏஜென்சிகள்மூலமாகவோ அவசியமான பொருள் அளிப்புகளையும், உபகரணங்களையும், தொழில்நுட்ப வினைஞர்களையும் பெறுவதற்கு வளர்ச்சிகுறைந்த நாடுகளுக்கு உதவ வேண்டும்.

(எ) இவ்வமைப்பின் செயல்கள்பற்றிய காலாண்டு அறிக்கைகளை வெளியிடவேண்டும். பொருளாதார-சமூக்க கவுன்சில்மூலம் பொதுச் சபைக்குப் பரிந்துரைகளையும் இணைத்து விவரமான ஆண்டு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

7. பிரதேச அமைப்புகள்

பல்வேறு நாடுகளை உள்ளடக்கிய அபிவிருத்தித் திட்டங்களாக இருப்பின், குறிப்பிட்ட நாடுகளின் கூட்டு மாநாட்டை இவ்வமைப்பு கூட்டுவதற்கு வேண்டிய துவக்க முயற்சியினை எடுக்கவேண்டும். திட்டங்களைத் தயாரிக்கவும் நிறைவேற்றவும் பிரதேச அமைப்பினை நிறுவவேண்டும். குறிப்பிட்ட நாடுகளின் அரசுகள் சார்ந்த பிரதிநிதிகள் பிரதேச அமைப்பின் நிருவாகத்தில் இடம்பெறல் வேண்டும். அவர்களுடைய ஒப்புதலின்றி வேலையைத் தொடங்கக்கூடாது.

8. தொழில்நுட்ப வினைஞர் குழு

மேலே ஆறுவது பத்தியில் கண்டுள்ள கடமைகளைத் திறமையுடன் நிறைவேற்ற, நிரந்தர அடிப்படையில் தகுதியும் திறமையும் வாய்ந்த தொழில்நுட்ப வினைஞர் குழு ஒன்றினை இவ்வமைப்பு ஏற்படுத்தவேண்டும். எனினும், தற்காலிகமாக அவ்வப்பொழுது தொழில்நுட்ப வினைஞர்களை இவ்வமைப்பு தேர்ந்தெடுக்கலாம். அதேவேளையில், உறுப்பினர் நாடுகளின் தேசியத் தேவைகளைப் பாதிக்காத முறையில், அந் நாடுகளின் நுட்பத்தொழில் வினைஞர்களை இவ்வமைப்பு வேலைக்கமர்த்திக் கொள்ளலாம்.

9. தலைமைப் பீடம்

இவ்வமைப்பின் தலைமைப் பீடத்தை ஏதேனுமோர் வளர்ச்சிகுறைந்த நாட்டில், குறிப்பாக ஆசிய நாடுகளொன்றில் நிறுவவேண்டும்.

அதிக முக்கியமான இவ் வேலையை ஐ.நா. சபை எடுத்துக் கொள்ளும் என்ற நம்பிக்கையுடன் இக் கட்டுரையை நான் முடிக்கலாமா? இப் புதிய பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினை (அல்லது ஐ.நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்பினை) வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு மட்டுமன்றி, கெடுபிடிப்போர் விளைத்துள்ள வேதனையூட்டும் சேற்றிலிருந்து உலக மக்களை விடுவிக்கவும், உலக சமாதானத்திற்காகப் பன்னாட்டு ஒத்துழைப்பையும், ஒருவர்க்கொருவர் துணையாகவிருத்தலையும், ஆக்க வழிகளில் திருப்பி மக்களுடைய ஆற்றல்களைப் பயன்படுத்தவும் நிறுவுகின்ற வேலையை ஐ.நா. சபை ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையுடன் நான் இக் கட்டுரையை முடிக்கலாமா?

10. பொருளாதார வளர்ச்சிக்குப் பன்னுட்டு உதவி: சாத்தியங்களும் வரையறைகளும்

உலகத்தின் பொருளாதார வளர்ச்சி குறைந்த நாடுகள் என்று சொல்லப்படும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தவேண்டிய அவசியம்குறித்து யாரும் இன்று அதிகமாக சர்ச்சையில் ஈடுபடவும் வேண்டியதில்லை; உணர்ச்சிவயப்படவேண்டியதுமில்லை. அணுவாற்றல் சார்ந்த வளர்ச்சி அல்லது அணுவாயுதப் போர் பற்றிய பீதி, உலக முழுதும் யாவரும் உணர்ந்துள்ள விளைவினை ஏற்படுத்தவில்லை என்றாலும், பொருளாதார வளர்ச்சியின் அவசியத்தையும், உலக சமாதானத்தை, வறுமையும் மிகக் குறைந்த வாழ்க்கைத் தரமும் பெரும் பகுதிகளில் எவ்வாறு பாதிக்கும் என்பதனையும், விஷயம் தெரிந்த வட்டாரங்கள் உணர்ந்துள்ளன என்பது உண்மையே. எனவே, இப் படிமுறையில், நல்வாழ்வு வாழும் பொருளாதார வளர்ச்சியுற்ற நாடுகள், இத்தகைய வாய்ப்பற்ற நாடுகளுக்கு உதவவேண்டும் என்ற பொறுப்புணர்வைப் பெற்றுள்ளன. கடந்த 15 ஆண்டுகளில், இத் துறையில் இந் நாடுகள், நாட்டுக்கு நாடு உத்வி என்ற முறையிலும் பன்னுட்டுதவி என்ற முறையிலும் சீரான செலவினையும் முயற்சியினையும் மேற்கொண்டுள்ளன. எனினும், வளர்ச்சியுற்ற நாடுகளின் பொதுமக்கள் ஒருபுறமிருக்க, இந் நாடுகளின் அதிகார வர்க்கத்தினர் இப் பிரச்சினையைப் போதுமான அளவிற்கு முழுதும் புரிந்துகொண்டிருந்தபோதிலுங்கூட, இன்னும் அதிக வேலை செய்யவேண்டியுள்ளது என்றே நான் கருதுகிறேன். வளர்ச்சி குன்றிய உலகின் பொருளாதார நிலைபற்றிய குறைவான புள்ளிவிவர உண்மைகளுடன் நான் இக் கட்டுரையைத் துவக்குவதற்கு மேலே குறிப்பிட்டுள்ள கருத்தே காரணமாகும்.

ஒத்திட்டுப் பார்க்கக்கூடிய புள்ளிவிவரம் தயாராகக் கிடைக்கக்கூடிய 1955ஆம் ஆண்டினை நாம் எடுத்துக்

கொண்டால், தேசியப் புள்ளிவிவரங்களை ஓர் பொதுச் செலாவணி அலகிற்கு மாற்றுவதில் காணக்கிடக்கின்ற உள்ளார்ந்த தொல்லைகளைத் தற்காலிகமாக ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், உலக முழுதும் 1954ஆம் ஆண்டு விலை அடிப் படையில் தலைவீத மொத்தத் தேசீய உற்பத்தியானது (per capita gross national product—G.N.P.) 390 டாலர்களாக இருக்கும்பொழுது, உலகின் பெரும் பகுதிகளில் இதற்கிணையான தலைவீத மொத்தத் தேசீய உற்பத்தி மிகவும் வேறு பட்டுள்ளது. ஆக, உலகின் மேற்கு உருண்டைப் பகுதியாகிய வட அமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் 1,276 டாலர்களாகவும், மேற்கு ஐரோப்பாவில் 680 டாலர்களாகவும், ஓசியானுவில் (Oceania) 1,069 டாலர்களாகவும், தலைவீத மொத்தத் தேசீய உற்பத்தி இருந்தன; ஆனுல், அதேவேளையில் சீனு நீங்கலாக ஆசியாவின் பெரும் பகுதியில் 106 டாலர்களாகவும், ஆஃப்ரிக்காவில் 110 டாலர்களாகவும் இருந்தன.

சோவியத் தொகுதியில், சோவியத் யூனியனின் தலைவீத மொத்தத் தேசீய உற்பத்தி 682 டாலர்களாகும்; அதன் ஐரோப்பிய நேசநாடுகளின் தலைவீத மொத்த தேசீய உற்பத்தி 538 டாலர்களாகும்; சீன நிலப்பெரும்பகுதியில் 56 டாலர்களாகும்.[1] ஐக்கிய அமெரிக்க செனட்டின் அன்னிய உதவி பற்றிய தனித்த கமிட்டியின் வேண்டுகோளுக்கிணங்கி, சிக்காகோ பல்கலைக் கழகத்தின் பொருளாதார வளர்ச்சி, கலாசார மாற்றம்பற்றிய ஆராய்ச்சி மன்றம் தயாரித்த ஆய்வேட்டில் கண்டுள்ள ஆய்வு முறைகளை நாம் ஏற்றுக் கொண்டால், 250 டாலர்களுக்கும் குறைந்த தலா வருமானத்தைச் சராசரியாகக் கொடுக்கின்ற, குறைந்த பொருளாதார சாதனையுடைய நாடானது, தனது மனித வளச் சாதனங்களையும் வேறு மூலவளங்களையும் உத்தம அளவிற்குக் குறைவாகவே பயன்படுத்துகிறது என்று நாம் குறிப்பிடலாம்; சரியான நடவடிக்கைகளை மேற்கொண்டால், அந் நாட்டின் பொருளாதார சாதனையை இன்னும் பெருக்க இயலும் என்றும் நாம் குறிப்பிடலாம். இத்தகைய ஏழ்மை நிறைந்த நாடுகள் பொருளாதாரத் துறையிலும் பின்தங்கிய நாடுகளே. இவ் வடிப்படையில், சிக்காகோ ஆராய்ச்சியானது, ‘ஆசியா, ஆஃப்ரிக்கா, அண்மைக் கிழக்கு, இலத்தீன் அமெரிக்காவின்

[1] மூலம்: புள்ளிவிவரங்கள், அறிக்கைகள் ஆகியவற்றின் அலுவலகம், பன்னுட்டுக் கூட்டுமைப்பு நிருவாகம்—சிக்காகோ ஆராய்ச்சியில் எடுத்தாளப்பெற்றது.

பெரும்பகுதி முதலான பிரதேசங்களனைத்தும் பொருளாதார ரீதியாக வளர்ச்சி குறைந்த நாடுகள் என்ற பகுப்பில் வீழ்கின்றன' என்று குறிப்பிட்டுள்ளது.[2] இதன் பொருள் என்னவெனில், தங்களுடைய பொருளாதார ரீதியான பின் தங்கிய நிலைக்குத் தீர்வு காணமுடியாத நாடுகளில் சுமார் 1,900 மில்லியன் மக்கள் அல்லது மனித இனத்தில் 70 சதவீதத்திற்கும் சற்று அதிகமான அளவுள்ள மக்கள் வசிக்கின்றனர் என்பதே. சிக்காகோ ஆராய்ச்சி கருதும் குறைந்தபட்சம் 250 டாலர்களுக்கு அந்நாடுகளின் தலைவீத மொத்தத் தேசிய உற்பத்தியை நியாயமான குறுங்காலத்திற்குள், அதாவது, 15 ஆண்டுகளுக்குள் உயர்த்தவேண்டுமெனில், தலா வருமானம் சுமார் 6 சதவீதத்தில் திரண்டு உயரவேண்டும். வளர்ச்சி குறைந்த நாடுகளில் தற்பொழுது சுமார் இரண்டு சதவீதத்தில் மக்கள்தொகை பெருகுவது தொடர்ந்திருந்தால், மொத்தத் தேசிய உற்பத்தி (G.N.P.) 8 சதவீதத்திற்குக் குறையாமல் திரண்டு அதிகரிக்கவேண்டும். இவ்வாறு அதிகரித்தபோதிலுங் கூட, 1974ஆம் ஆண்டில் இந்நாடுகள், மேற்கத்திய உலகின் 1956ஆம் ஆண்டின் மொத்தத் தேசீய உற்பத்தி மட்டத்தின் ஐந்தில் ஒரு பங்கிற்கும் குறைவான மட்டத்தினையே அடையும்; மேற்கு ஐரோப்பா, சோவியத் யூனியன் ஆகியவற்றின் மொத்தத் தேசிய உற்பத்தி மட்டத்தின் மூன்றில் ஒரு பங்கினையே அடையும்.

வளர்ச்சியுற்ற உலகத்தின் சில முன்னேறிய நாடுகளுடன் ஒத்திட்டுப் பார்த்தால், ஆண்டொன்றுக்குச் சராசரி 15 சதவீதத்தில் 15 ஆண்டுகளுக்கு வளர்ச்சி குறைந்த உலகில் அபிவிருத்தி ஏற்பட்டாலும்கூட, ஐக்கிய அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் 1956ஆம் ஆண்டின் மொத்தத் தேசீய மட்டத்தில் சுமார் பத்தில் ஒரு பங்குள்ள மட்டத்தையே அவை அடையும்; இங்கிலாந்து, ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளின் மட்டத்தில் நான்கில் ஒரு பங்கினையே அவை அடையும். ஆண்டொன்றுக்குக் குறைந்தபட்சம் 250 டாலர்களை அடைய வளர்ச்சி குன்றிய நாடுகள் உழன்றுகொண்டிருக்கும்பொழுது, வளரும் நாடுகள் வளர்ச்சியை நோக்கி முன்னேறாமல் வாளாவிருக்கும் என்று கூறமுடியாது. உண்மையில், ஐக்கிய அமெரிக்காவை எடுத்துக்கொண்டால், அதனுடைய மொத்தத் தேசீய உற்பத்தி, 1956ஆம் ஆண்டின் விலைகளில், 1946ஆம் ஆண்டில் நிலவிய 290·6 பில்லியன் டாலர்களிலிருந்து

[2] செனட்டிற்காக சிக்காகோ பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி, பக்கம் 2-3.

1956ஆம் ஆண்டு 412·4 பில்லியன் டாலர்களுக்கு உயர்ந்துள்ளன. ஐக்கிய அமெரிக்காவின் தேசியத் திட்ட சங்கத்தின் கருத்துப்படி, 1956ஆம் ஆண்டின் விலைகளில், 1965ஆம் ஆண்டு 570 பில்லியன் டாலர்களாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆக, 21 ஆண்டுகளில், ஐக்கிய அமெரிக்காவின் மொத்தத் தேசீய உற்பத்தி இரண்டு மடங்காகிவிடும். தற்பொழுது அமெரிக்காவில் விரைந்து பெருகிச்செல்லும் ஜனத்தொகையைப்பற்றிக் கணக்கெடுத்துக்கொண்டாலுங்கூட, ஆண்டொன்றுக்கு இரண்டு சதவீதத்திற்கும் குறையாமல் அதன் தலைவீத மொத்தத் தேசீய உற்பத்தி பெருகுகிறது என்பதனையே இது காட்டுகிறது. இதன் பொருள் என்னவெனில், 1956ஆம் ஆண்டில் அமெரிக்காவின் தலா வருமான மட்டத்தில் பத்தில் ஒரு பங்கிற்கும் குறைவான மட்டத்தை 1970-ல் ஆசியா, ஆஃப்ரிக்கா, இலத்தீன் அமெரிக்காவின் பெரும்பகுதி முதலான பிரதேசங்கள் அடைகின்றபொழுது, அமெரிக்காவின் தலா வருமானமும் உயர்ந்து, வேற்றுமை விகிதம் 1 : 10-லிருந்து 1 : 12 ஆக உயர்ந்துவிடும். ஆனால், வளர்ச்சி குறைந்த நாடுகளில் தலைவீத மொத்தத் தேசீய உற்பத்தியின் இன்றைய வளர்ச்சி வீதம் 6 சதவீதத்தின் அருகில்கூட வரவில்லை. உண்மையில், வளர்ச்சியுற்ற நாடுகளின் தலைவீத மொத்தத் தேசீய உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தைப் போலவே உள்ளது அல்லது சுமார் இரண்டு சதவீதம் எனலாம்.

பொருளாதார அபிவிருத்தி இருந்தபோதிலுங்கூட, வளர்ச்சியுற்ற உலகிற்கும் வளர்ச்சி குறைந்த உலகிற்கும் இடையில் உள்ள வருமான மட்டங்களின் இடைவெளி மேலும் மேலும் விரிந்துகொண்டே செல்லும் என்பதே இதன் பொருளாகும். இதனைத் தடுக்க ஒரே வழி துய்ப்பில் தங்களுடைய சொந்தத் தனி நபர் முன்னேற்ற வீதங்களை வளர்ச்சியுற்ற உலகு தாற்காலிகமாக நிறுத்திவைக்கவேண்டும் என்பதேயாகும்; இன்னும், வளர்ச்சியுற்ற உலகின் நடப்பு மட்டங்களுக்குத் தொலைவில் இருப்பினும், ஓரளவிற்கு அருகில் கொண்டுவரும் வகையில், வளர்ச்சியற்ற உலகின் அபிவிருத்தி மட்டத்தினையும் உற்பத்தி மட்டத்தினையும் உயர்த்துவதற்கே முதலிடம் தரவேண்டும். ஆனால், தேசீய உணர்வுகளின் இன்றைய பின்னணியில், தேசீய எல்லைக் கோடுகளினால் வலுவுடன் பிரிக்கப்பட்டுள்ள உலகச் சூழ்நிலையில், தேசீய ரீதியாகத் தனி நபர் சொத்துடைமைக் கருத்துக்குப் பெருமை ஏற்பட்டிருக்கும் பின்னணியில், இவற்றிற்கு எதிராக மேற்

குறித்த காரியம் நிகழாது. ஆனுல், என்ன செய்யவேண்டு மெனில், வளர்ச்சியுற்ற உலகின் வளர்ச்சி வீதத்தைவிடக் கணிசமான அளவிற்குக் கூடுதலான வளர்ச்சி வீதத்தை வளர்ச்சி குறைந்த நாடுகள் பெறுமாறு ஏற்பாடு செய்யலாம். உலகத் தொடர்புகளையும் உலக சமாதானப் பிரச்சினையையும் பொறுத்த வரையில், பொருளாதார வளர்ச்சிக்கு ஏதேனும் உண்மையான பொருள் இருக்கவேண்டுமெனில், அவசியமாக நிறைவேற்றவேண்டிய குறைந்தபட்ச காரியம் மேலே குறித்த ஒன்றேயாம். வளர்ச்சி குறைந்த உலகில் பொருளாதார அபிவிருத்திவீத இலக்கு எதுவாக இருக்கவேண்டும் என்பது குறித்து வளர்ச்சியுற்ற உலகில் நிகழும் நடப்பு விவாதங்களை நோக்கும்பொழுது, மேலே எடுத்துக்காட்டப்பெற்ற விஷயத்தின் முக்கியத்துவத்தை அவை உணரவில்லை என்றே தோன்றுகிறது. தீவினைப் பயனை அனுபவிக்கும் மக்கள் நிறைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்ற வேலையில், சென்ற பத்தாண்டுகளில் ஈடுபட்ட வளர்ச்சியுற்ற நாடுகளின் உண்மையான சாதனையை நோக்கும்பொழுது, மேலே எடுத்த முடிவானது வேதனையூட்டுமளவிற்குச் சரியாக உள்ளது.

பொருளாதார வளர்ச்சிக்கென அனைத்துலக உதவி, இரு நாடுகளுக்கு இடையே உதவி வழங்குதல்பற்றிய சில மதிப்பீடு களை இப்பொழுது நாம் கவனிப்போம்.

ஜனத்தொகை சராசரி 1·5 சதவீதத்தில் அதிகரிக்கிறது என்றும், உள்நாட்டுச் சேமிப்பு வீதம் சுமார் 9 முதல் 10 சதவீதத்தில் பெருகிச் செல்கிறது என்றும் எடுகோள் எடுத்துக் கொண்டு, ஆண்டொன்றுக்கு 3 முதல் 4 சதவீதத்தில் தலா வருமானம் அதிகரிக்கின்ற அடிப்படையில், நான் முன்னரே குறிப்பிட்டுள்ள சிக்காகோ அறிக்கை ஓர் மதிப்பீட்டினை வெளியிட்டுள்ளது. (கட்டாயச் சேமிப்புகளைப் பெறுவதற்குச் சர்வாதிகார முறைகளைப் பின்பற்றுமல், பெரும்பாலான வளர்ச்சி குறைந்த நாடுகள் உள்நாட்டுச் சேமிப்பினை சுமார் 9 முதல் 10 சதவீதத்தில் பெருக்கவியலும் என்று சிக்காகோ அறிக்கையின் ஆசிரியர்கள் நம்புகிருர்கள்.) இக் குறிக்கோளினை நிறைவேற்றத் தேவைப்படும் முதலீட்டு வீதம் 14 முதல் 16 சதவீதமாகும். வளர்ச்சி குறைந்த நாடுகளின் நடப்புத் தேசிய வருமானத்தில் சுமார் 5 முதல் 6 சதவீதம் கொண்ட தனியார் துறை முதலீட்டையும் உள்ளடக்கிய அன்னிய உதவி வேண்டும் என்பதனையே இது குறிக்கும். 'சுதந்திர உலகு என்று பொதுவாக அழைக்கப்படுகின்ற உலகினை மட்டும் கருத்தில் கொண்டு, சிக்காகோ அறிக்கையானது ஆண்டொன்

றுக்கு மூன்று பில்லியன் டாலர்கள் அன்னிய உதவி தேவைப் படும் எனக் குறிப்பிட்டுள்ளது. (ஒரு பில்லியன் டாலர் கொண்ட தனியார்துறை முதலீடு தனியாக உள்ளது.) சுமார் 10 முதல் 15 ஆண்டுகளில் இத் தொகை ஆண்டொன்றுக்கு ஐந்து பில்லியன் டாலர்களாக உயரும் என எதிர்பார்க்கப்படு கிறது. இக் காலவரையறைக்குப் பின்னர், பொருளாதார வளர்ச்சியில் விளைந்த வருமான உயர்வின் காரணமாக, உள் நாட்டுச் சேமிப்புகள் அதிகரிக்கும் என்ற காரணத்தினுலும், பொருளாதார அபிவிருத்தியின் ஓர் குறிப்பிட்ட மட்டத்தை அடைந்துவிட்டால் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு மேலும் உதவ தனியார்துறை முதலீடு வரும் என்ற காரணத்தினுலும் மேலே குறிப்பிட்டுள்ள தொகை குறையும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. இவ்வாருக, தனியார்துறை முதலீட்டினைத் தவிர, அன்னிய உதவியானது ஆண்டொன்றுக்கு மூன்று பில்லியன் டாலர்களாகவும், 10 முதல் 15 ஆண்டுகளில் ஐந்து பில்லியன் டாலர்களாகவும் உயரும் என்று சிக்காகோ ஆராய்ச்சி குறிப்பிட்டுள்ளது.

மில்லிகன் (Millikan) அவர்களும் ரோஸ்டோவ் (Rostow) அவர்களும் இரண்டாவது கணக்கெடுப்பு ஒன்றினை வழங்கி யுள்ளனர். பெருகும் தேசிய வருமானத்தைச் சார்ந்த நிலை மாறுபாட்டுக் கட்டத்தினை (transition stage) இன்னும் அடை யாத வளர்ச்சி குறைந்த நாடுகளிலும், அதாவது, வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்துள்ளமையால் உள்நாட்டு முதலீடு குறைந்த விகிதத்தில் பெருகுகின்ற வாய்ப்புடைய வளர்ச்சி குறைந்த நாடுகளிலும், வளர்ச்சிப் படிமுறையில் வெகு தொலைவில் உள்ளமையால் உள்நாட்டு முதலீடு மிகவும் குறைந்த விகிதத்தில் பெருகுகின்ற வாய்ப்புடைய வளர்ச்சி குறைந்த நாடுகளிலும் உள்நாட்டு முதலீட்டு வீதத்துடன் 30 முதல் 50 சதவீதம் கொண்ட அன்னிய உதவி தேவைப்படும் என்ற எடுகோளினை அவர்கள் இட்டுக்கொண்டனர். இவ் வாய்ப்பினை அளித்துவிட்டால், பிரச்சினைக்குரிய நாடு தன் னுடைய வருமான அதிகரிப்புகளிலிருந்தே போதுமான வளச் சாதனங்களைத் திரட்ட முடியும் என்றும், மூலதனத்தைப் பயன்படுத்துதற்குரிய வல்லமை பெருகுவதற்கிணங்க திரட்டிய வளச்சாதனங்களைப் பயன்படுத்த முடியும் என்றும், பொரு ளாதார வளர்ச்சி குறிப்பிட்ட ஓர் மட்டத்தினை அடைந்து விட்டால் இன்னும் எளிதாகக் கிடைக்கும் தனியார் முதலீட் டினையும் பயன்படுத்தமுடியும் என்றும் அவர்கள் நம்பினர். இவ் வடிப்படையில்தான், ஆண்டொன்றுக்குத் தேவைப்படும்

உதவி 3·5 பில்லியன் டாலர்களென அவர்கள் கணக்கிட்டுள்ளனர். (இது நடப்பு அன்னிய உதவி அளவுகளுக்கு மேல் சேர்வதாகும்.) மில்லிகன், ரோஸ்டோவ் ஆகியோரின் கருத்துப்படி, தேசிய வருமான வளர்ச்சி வீதம் ஆண்டொன்றுக்கு 2·5 முதல் 4 சதவீதமாகவும், வருமான வளர்ச்சியின் தலா வீதம் ஒன்று முதல் இரண்டு சதவீதமாகவும் இருக்கும். முக்கியமாக, வளர்ச்சியானது தாழ்ந்த மட்டங்களிலிருந்து துவங்கும் பின்னணியிலும், ஏற்கெனவே வளர்ச்சியுற்ற நாடுகளில் நிலவும் உயர்ந்த வளர்ச்சி வீதங்களின் பின்னணியிலும் நோக்கும் பொழுது, வளர்ச்சி குறைந்த நாடுகளின் தலா வருமான அதிகரிப்பிற்குக் குறைந்த இலக்கினை அவர்கள் பொறித்திருப்பது உண்மையில் ஆச்சரியப்படத்தக்கதொன்றே. அதே வேளையில், சிக்காகோ ஆராய்ச்சி அன்னிய உதவி 3·5 பில்லியன் டாலர்கள் தேவைப்படும் என்று குறிப்பிட்டுள்ளதைப்போலவே அவர்களும் குறிப்பிட்டுள்ளனர்; ஆனல், மில்லிகனும் ரோஸ்டோவும் குறிப்பிட்டுள்ள தலைவீதத் தேசிய வருமான வளர்ச்சி வீதத்தைப் போலவே இரு மடங்கு வளர்ச்சி வீதத்தினை சிக்காகோ ஆராய்ச்சியானது குறிப்பிட்டுள்ளது; இந்த உண்மை எதனைக் காட்டுகிறதென்ருல், இத்தகைய மதிப்பீடுகளில் பெருமளவு நிலையிலாத் தன்மையும் உடன்பாடின்மையும் நிலவுகின்றன என்பதனையே ஆகும்.

பேராசிரியர் டின்பெர்கன் (Tinbergen) மூன்ருவது மதிப்பீட்டினை வழங்கியுள்ளார். வளர்ச்சி குறைந்த உலகில் பாதித் தொழில் வளர்ச்சியுற்ற நாடுகளின் உள்நாட்டுச் சேமிப்புகள் 7 சதவீதமாகவும், மற்ற நாடுகளில் 5 சதவீதமாகவும், உள்நாட்டுச் சேமிப்புகளுக்குமேல் தேவைப்படுகின்ற முதலீடு ஆண்டொன்றுக்கு 7·5 பில்லியன் டாலர்களாகவும், அப்பொழுதுதான் எண்ணெய் உற்பத்தியுள்ள நாடுகளைத் தவிர்த்து ஏனைய நாடுகளில் தலைவீத வருமானத்தில் சுமார் இரண்டு சதவீத அதிகரிப்பு ஏற்படும் என்றும் அவர் கணக்கிட்டுள்ளார். தலைவீத வருமானம் 4 சதவீத அளவில் அதிகரிக்க முயற்சி எடுத்தால், ஆண்டொன்றுக்கு 15·2 பில்லியன் டாலர்கள் அன்னிய உதவி தேவைப்படும் என்றும் அவர் கணக்கிட்டுள்ளார். வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு ஏற்கெனவே வழிந்தோடுகின்ற முதலீட்டினையும் மேலே குறித்துள்ள அன்னிய உதவி உள்ளடக்கியுள்ளது. வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குக் குறைவான சேமிப்புகளையே அவர் பிரதானமான எடுகோளாக எடுத்துக்கொண்டிருப்பதால், முன்னரே எடுத்துக்காட்டியுள்ள இரண்டு அமெரிக்க மதிப்

பீடுகளைவிடப் பேராசிரியர் டின்பெர்கனுடைய மதிப்பீடுகள் அதிகமாக உள்ளன. எனினும், கம்யூனிச உலகிலுள்ள வளர்ச்சி குறைந்த நாடுகளையும் தன்னுடைய மதிப்பீடுகளிலே அவர் சேர்த்துள்ளாரா என்பது விளங்கவில்லை. மற்ற இரண்டு கணக்கீடுகளும் கம்யூனிச உலகினைக் கணக்கில் சேர்த்துக்கொள்ளவில்லை.

'வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கென எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்'பற்றி 1951ஆம் ஆண்டில் அறிக்கை வெளியிட்ட ஐ.நா. சபையின் நிபுணர் குழு, பிறிதொரு மதிப்பீட்டினைத் தந்துள்ளதனை எடுத்துக் கொள்ளலாம். அவர்கள் கணக்கிட்டுள்ள அடிப்படை கொஞ்சம் மாறுனது. வேலையில் ஈடுபடக்கூடிய மொத்த ஜனத்தொகையில் ஆண்டொன்றுக்கு ஒரு சதவீதத்தினர் விவசாயத்திலிருந்து வேறு துறைகளிலுள்ள வேலைகளுக்கு மாறி வந்துவிடுகின்ற இலக்கினை அவர்கள் எடுகோளாக எடுத்துக்கொண்டனர்; மேலும், விவசாயம் சாராத வேலைக்குக் கவரப்படுகின்ற ஒவ்வோர் ஆளுக்கும் 2,500 டாலர்கள் தேவைப்படுகின்றன என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆண்டொன்றுக்குத் தேசிய வருமானத்திலிருந்து 4 சதவீத முதலீட்டினை விவசாயத்தில் மேற்கொள்வதாகவும் அவர்கள் எடுகோள் எடுத்துக்கொண்டனர். இவை யிரண்டையும் ஒன்ருக இணைத்து நோக்குகையில், சீனுவையும் சேர்த்த, வளர்ச்சி குறைந்த உலகில், ஆண்டொன்றுக்குத் தலா வருமானம் 2 சதவீத அளவில் உயருகின்ற விளைவினை ஏற்படுத்தும் என்று அவர்கள் கணக்கிட்டனர். இக் காரியத்தை நிறைவேற்ற, ஒவ்வோர் ஆண்டும் (1949ஆம் ஆண்டின் வருமானங்களை மூலமாக எடுத்துக்கொண்டால்) தேவைப்படும் முதல் 19·1 பில்லியன் டாலர்கள் என்றும், அவற்றில் உள்நாட்டுச் சேமிப்புகள் மூலமாகக் கிடைக்கக்கூடிய தொகை 5·2 பில்லியன் டாலர்கள் என்றும், எஞ்சியுள்ள தொகையாகிய 13·9 பில்லியன் டாலர்கள் தனியார்துறையினையும் உள்ளடக்கிய பன்னுட்டுதவி மூலம்- முதலாகக் கிடைக்கும் என்றும் அவர்கள் கணக்கிட்டுள்ளனர். இம் மதிப்பீட்டில் சீனுவையும் சேர்த்துக்கொண்டிருப்பதால், ஆனுல், முக்கியமாக மிக உயர்ந்த 'மூலதனம் — உற்பத்தி' விகிதத்தை இது முற்கோளாக எடுத்துக்கொண்டிருப்பதால், இம் மதிப்பீடு ஏனைய மூன்று மதிப்பீடுகளையும்விட உயர்வாக உள்ளது.

இப்பொழுது உபயோகித்துக்கொண்டிருக்கின்ற சற்றேறக்குறைய 2·5 பில்லியன் டாலர்களுக்குமேல் பொது மூல

தனமாகிய 5 பில்லியன் டாலர்களை வளர்ச்சி குறைந்த நாடுகள் பயன்படுத்தலாம் என்று ஆசியாவின் பொருளாதாரக் கமிஷன் கருத்துத் தெரிவித்துள்ளது.

இத்தனை மதிப்பீடுகளுடன் என்னுடைய மதிப்பீடு ஒன்றினையும் சேர்க்க நான் விரும்புகிறேன். இந்திய அனுபவங்களைக்கொண்டே என் மதிப்பீட்டைத் தருகிறேன். தனது முதற் குறிப்பு சார்ந்த மூன்றாவது திட்டத்தில் (1961–66) 3,200 கோடி ரூபாய்களை அன்னிய உதவியாக இந்தியா எதிர்பார்க்கிறது. இது டாலர் கணக்கில் 6·7 பில்லியன்களாகும்; அல்லது ஆண்டொன்றுக்குச் சராசரியாக 1·3 பில்லியன் டாலர்களாகும். இது தலைவீதக் கணக்கில் 3·2 டாலர்களுக்குக் கொஞ்சம் அதிகமாக இருக்கும். கம்யூனிசம் சாராத, வளர்ச்சி குறைந்த உலகில், திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிபற்றிய அனுபவத்தில் இந்தியா சற்று முன்னேறியுள்ளது. எனவே, இந்தியாவிற்கு ஈர்க்கும் வல்லமை அதிகமாக உள்ளது; ஆக, இந்தியா ஆளொன்றுக்கு அதிகமான மூலதனத்தைப் பயன்படுத்துகிறது. ஆனால், வளர்ச்சி குறைந்த உலகின் ஏனைய பகுதிகள் அடிப்படையான முதலீட்டில் பெருமளவிற்குச் சரிசெய்யவேண்டியுள்ளன. இவ்விரு காரணிகளும் ஒன்றுக்கொன்று சமன்செய்துகொள்ளமாட்டா என எடுகோளிட்டுக் கொண்டபோதிலும், வளர்ச்சி குறைந்த உலக முழுதிற்கும் சராசரியாக ஆளொன்றுக்கு 3·5 டாலர்களுக்குக் கொஞ்சம் அதிகமாக இருக்கும் என எடுகோளிட்டுக்கொண்டபோதிலும், பொருளாதார காரியங்களுக்குமட்டும் தேவைப்படும் அன்னிய உதவி அநேகமாக ஏழு பில்லியன் டாலர்களாகும். கம்யூனிசம் சாராத வளர்ச்சி குறைந்த உலகத்திற்கு 4·5 பில்லியன் டாலர்கள் வேண்டும். தலா வருமானத்தில் சுமார் 3 சதவீத உயர்வினை இந்தியத் திட்டம் இலக்காகப் பொறித்துள்ளது என்பதனையும் நான் குறிப்பிடவேண்டும்.

இதுவரையில் நான் விளக்கியுள்ளதிலிருந்து தெரிய வருவது என்னவெனில், முழுமையான அளவிலானாலும் சரி, ஒப்புமை அளவிலானாலும் சரி, வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய வருமானத்தில் நடுத்தரமான அதிகரிப்பு ஏற்பட வேண்டும் என்றாலுங்கூட, ஆண்டொன்றுக்கு 5 முதல் 6 பில்லியன் டாலர்கள் வழிந்தோடி வரவேண்டியது தேவையாகும். இப் பெருந் தொகை கிடைத்தாலுங்கூட, இன்று மனித இனம் பிளவுண்டு கிடக்கின்ற இரு உலகங்களுக்கிடையே நிலவும் வாழ்க்கைத்தர வேறுபாடு இன்னும் பெருகிக் கொண்டே செல்லும் பிரச்சினைக்குத் தீர்வு காண ஏதேனும்

வழிவகுத்ததாகாது. கிழக்கு நாடுகளுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையில் உள்ள பிளவினைவிட இன்னும் உண்மையான, இன்னும் ஆபத்து நிறைந்த பிளவு, வசதி படைத்த பணக்கார நாடுகளுக்கும் வசதியற்ற ஏழை நாடுகளுக்கும் இடையில் நிலவுகிறது என்பதனை நான் குறிப்பிடலாமல்லவா?

பொருளாதார வளர்ச்சிபற்றிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில், பன்னாட்டுதவி, இரு நாடுகளுக்கிடையே உதவிப் பரிமாற்றம் ஆகியவை குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்பற்றி இப்பொழுது நான் சுருக்கமாக ஆராய முற்படுகின்றேன்.

உலகப்போர் மும்முரமாக நடந்துகொண்டிருந்தபொழுதே, போரின் முடிவு புரியாது இருந்தபொழுதே, நேசநாடுகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட விஷயம் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினையே. போர் முடிந்தபின்னர், உலக சமாதானத்தை நிலவச்செய்ய அமைக்கப்பெற்ற ஐ.நா. சபை, பொருளாதார வளர்ச்சிக்காகவும் உலக மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்காகவும் உறுப்பினர் நாடுகள் தனி நடவடிக்கைகளிலும் கூட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. இத்துறையில் பன்னாட்டு நடவடிக்கையினைப் பரிசீலனைசெய்து, ஒன்றுபடுத்தும் வேலையை மேற்கொள்ள ஐ.நா. அமைப்பின் ஒன்றிய பகுதியாக பொருளாதார—சமூகக் கவுன்சில் அமைக்கப்பெற்றது. பொருளாதார நடவடிக்கையின் பல்வேறு அம்சங்களை ஆராயவேண்டித் தனித்த பன்னாட்டு ஏஜென்சிகள் அமைக்கப்பெற்றன. ஒவ்வோர் ஏஜென்சியும் சுதந்திரமான, தனிஉரிமையுள்ள அமைப்பாக இயங்கும்; ஆனால், அது பொருளாதார—சமூகக் கவுன்சிலுக்கு அறிக்கை சமர்ப்பித்து, அக் கவுன்சிலின் பொது மேற்பார்வையில் இயங்கும். போருக்கு முந்திய நாள்களில் இருந்த உணவு—விவசாய அமைப்பு (Food and Agriculture Organization), உலக சுகாதார அமைப்பு (World Health Organization), ஐ.நா. சபையின் கல்வி விஞ்ஞான, கலாசார அமைப்பு (United Nations Educational Scientific and Cultural Organization), பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (International Labour Organization) முதலானவற்றை நாம் துவக்கினோம். பன்னாட்டுப் பணநிதி அமைப்பினையும் (International Monetary Fund), புனரமைப்பிற்கும் வளர்ச்சிக்கும் ஏற்பட்ட உலக பாங்கு (International Bank for Reconstruction and Development) ஒன்றினையும் நாம் துவக்கினோம்.

முதல் நான்கு அமைப்புகளும் நுட்பத்தொழில் உதவியையும், அனுபவக் குவிப்பினையும், கட்டுப்பாடுள்ள பட்ஜெட்டுகளையும் பிரதானமாக வழங்கின. நான்காவது அமைப்பினிடம் பத்து பில்லியன் டாலர்கள் கொண்ட அதிகாரபூர்வமான மூலதனம் இருந்தது. தற்காலிக இயல்புடைய பாதக அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையினைச் சரிசெய்ய, அயல்நாட்டுச் செலாவணியைத் தற்காலிகமாகக் கொடுத்துதவும் பணியினை நான்காவது அமைப்பு மேற்கொண்டது. ஐந்து அமைப்புகளில் கடைசியில் உள்ள உலக பாங்கு, நாம் எடுத்துக்கொண்டுள்ள குறிக்கோளினை நிறைவேற்ற மிகவும் பொருத்தமான அமைப்பாகும். சிறப்பாகப் போரினால் பாதிக்கப்பெற்ற பிரதேசங்களின் புனரமைப்பிற்கு உதவவும், உறுப்பினர் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவவும் ஏற்பட்ட அமைப்பு உலக பாங்காகும். பாங்கு தனக்கு வேண்டிய நிதிகளைக் கட்டணமாக உறுப்பினர் நாடுகள் செலுத்திய முதலிலிருந்து திரட்டாமல், பல்வேறு பணச்சந்தைகளில் அதிகார பூர்வமாக உலவவிடுகின்ற பத்திரங்களில் கிடைக்கும் தொகையினைக் கொண்டு திரட்டியது. பாங்கினுடைய துவக்க நடவடிக்கைகள் முக்கியமாக ஐரோப்பியப் புனரமைப்புத் துறையிலேயே இடம்பெற்றன.

நிதியுதவிக்குப் பொருத்தமுள்ளதும், ஆனால், தனியார் நிதி கிடைக்கப்பெறாததும் ஆன தனித்த பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்குத் தனித்த கடன்கள் வழங்கும் பணியைப் பின்னர் பாங்கு எடுத்துக்கொண்டது. பத்து பில்லியன் டாலர்களைக்கொண்ட, கட்டணம் செலுத்தப்பெற்ற முதலுடன் பாங்கு தன் பணியைத் துவக்கிற்று; 1959ஆம் ஆண்டில் இதனை இரட்டிப்புத் தொகையாக்கினர்; எனினும், கேட்ட தொகை இரண்டு பில்லியன் டாலர்கள் மட்டுமே; இதிலிருந்து பாங்கு கடன் வழங்குவதற்குக் கிடைத்த தொகை 1·6 பில்லியனாகும்; இந்த 1·6 பில்லியன் டாலர்கள் கொண்ட தொகையில் டாலர்களும், ஏனைய நாட்டுச் செலாவணிகளும் உள்ளன. எஞ்சியுள்ள 17·3 பில்லியன் டாலர்கள் காப்பு நிதியாக இருக்குமேயன்றிக் கடன் நிதியாக இராது. பாங்கு உண்டாக்கியுள்ள கடன் தேவைகளைப் பூர்த்தி செய்யவோ அல்லது உறுதிமொழி தரப்பட்ட கடன்களை வழங்கவோ மட்டும் பாங்கு அத்தொகையைப் பயன்படுத்தும். முக்கியமான முதலீட்டு நிதியாக்க அளிப்புகளை வழங்க, உலகப் பணச் சந்தைகளில் தன்னுடைய சொந்தப் பத்திரங்களை விற்பதன்மூலம் பெற்ற கடன்களை பாங்கு பயன்படுத்தும்.

இதுவரையில், 2·1 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள பத்திரங்களை பாங்கு விற்றுள்ளது ; இதில் 1·7 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள பத்திரங்கள் அமெரிக்க டாலர்களுக்கு விற்கப்பட்டுள்ளன ; மீதமுள்ள பத்திரங்கள், பெல்ஜியன் ஃபிராங்குகள், கனடாவின் டாலர்கள், டியூஷே மார்க்குகள் (Deutshe marks), நெதர்லண்ட்ஸ் கில்டர்கள் (Netherlands guilders), பவுண்ட் ஸ்டெர்லிங்குகள், ஸ்விஸ் ஃபிராங்குகள் முதலான ஏனைய செலாவணிகளுக்கு விற்கப்பட்டுள்ளன. 1962ஆம் ஆண்டு, ஜூன் 30ஆம் நாள் கணக்குப்படி, பாங்கு கடன்களின் திரண்ட மொத்தம் 5,068 மில்லியன் டாலர்களாகும். அவற்றின் 1,149 மில்லியன் டாலர் முன்னரே திருப்பித் தந்தாகிவிட்டது அல்லது ஏனைய மூதலீடு செய்வோருக்கு விற்றாகவிட்டது. எனவே, 1960ஆம் ஆண்டு, ஜூன் 30 ஆம் நாளில், பாங்கு உறுதியாக வைத்திருந்த கடன்கள் 3,664 மில்லியன் டாலர்களாகும்; அவற்றில் 2,807 மில்லியன் டாலர்களை உண்மையாகவே பிரித்துக்கொடுத்தாகிவிட்டது.

பாங்கு தனது பேரங்களை வளர்ச்சி குறைந்த நாடுகளுடன் மட்டும் நடத்தவில்லை என்பது கருதத்தக்கது. துவக்கத்தில் ஐரோப்பாவில் புனரமைப்பு வேலைக்குக் கடன்களைப் பெரும்பாலும் பாங்கு வழங்கியமையால் மேலே குறித்த நிலைமை நிலவியது. ஆனால், பின்னரும்கூடப் பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமே கடன்கள் அளிக்கும் வேலையை பாங்கு மேற்கொண்ட போதிலும், ஓரளவு வளர்ச்சியுற்ற நாடுகள்கூட பாங்கினுடைய கவனத்தை ஈர்த்தன. ஆகவே, 1960ஆம் ஆண்டு, ஜூன் 30ஆம் தேதி பாங்கு வைத்திருக்க உறுதியான கடன்களின் சமீப கால நிலைமையை நாம் நோக்கினால், மொத்தத் தொகையாகிய 3,664 மில்லியன் டாலர்களில் சுமார் 1,709 மில்லியன் டாலர்களை அல்லது ஏறக்குறைய பாதித் தொகையைப் புதிதாக நிறுவப்பெற்ற பன்னாட்டு வளர்ச்சி சங்கம் பகுத்துள்ள ஓரளவு தொழில்மயமான நாடுகளுக்கு பாங்கு அளித்துள்ளது என்பதனை நாம் காண்கிறோம். ஓரளவிற்கு மேலும் வளர்ச்சியுற்ற நாடுகளுக்கு வழங்கப்பெற்ற கடன்களில் சிலவற்றை அந் நாடுகளின் மேற்பார்வையிலிருந்த அன்னியப் பிரதேசங்களில் பயன்படுத்தியமை பற்றிய உண்மையைக் கணக்கெடுத்துக்கொண்டபோதிலும்கூட (அப் பிரதேசங்கள் வளர்ச்சி குறைந்த உலகப் பகுப்பில் இடம் பெறுவனவே), வளர்ச்சியுற்ற நாடுகளுக்கு மட்டுமே பாங்கு அளித்த கடன்கள் 40 சதவீதமாகும். இந்த நிலையை நான் எதிர்ப்பதாகச் சொல்லவில்லை. பொதுவாக நிலவும் அபிப்பிராயத்

திற்கு மாருக, பாங்கு வளர்த்துவைத்துள்ள கடன்களின் கணிசமான பகுதி வளர்ச்சி குறைந்த நாடுகளல்லாத நாடு களுக்குச் செல்கின்றன என்பதனையே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பாங்கினுடைய பேரங்கள்பற்றிய இரண்டாவது குறிப்பு என்னவெனில், கடும் பாங்கு விதிகள்மீதே கடன்கள் வழங்கப்படுகின்றன என்பதே. திட்டங்கள் குறித்து பாங்கு இப்பொழுதெல்லாம் கடிய விதிகளை அனுஷ்டிக்கவில்லை என்பது உண்மை என்றபோதிலும், தனித் திட்டங்களைப் பரிசீலனை செய்யும்பொழுது பாக்கேஜ் திட்டங்களை (Package Programmes) ஆராய்வதற்கு பாங்கு விரும்புகிறது உண்மை என்றபோதிலும், பாங்கு வழங்கும் கடன்களைப் பெறுகின்ற திட்டங்களின் தனித்தனியான இலாபமீட்டும் வாய்ப்பினையும், குறிப்பிட்ட காலவரையறைக்குள் கடனைத் திரும்பவும் அடைக்கின்ற நாட்டின் வல்லமையையும் பாங்கு கடனளிப்பதற்கு வேண்டிய ஆய்வு முறைகளாகக் கொண்டுள்ளது. ‘சமூகப் பொருளாதாரப் பொது முதல்’ என்று முக்கியமாகக் கருதப் படுகின்ற துறையிலே அநேக திட்டங்கள் உள்ளன; இத் திட்டங்கள் நேரடியாக இலாபகரமானவை அல்ல என்ற போதிலும், பொருளாதாரம் முழுதினையும் நோக்கும்பொழுது, இவை இலாபகரமானவையே; உண்மையில், நாட்டின் மனித இன வளச்சாதனங்களையும் மனித இனம் சாரா ஏனைய மூல வளங்களையும் உறுதியாகப் பயன்படுத்துதற்கு வேண்டிய விலக்கமுடியாத முன்தேவையாக இத் திட்டங்கள் உள்ளன; இத் திட்டங்கள் நிறைய உள்ளமையால்தான் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியாக்க வேலையில் பாங்கினுடைய உபயோகம் இயற்கையாகவே கட்டுப்படுத்தப்பெறுகிறது. மேலும், தனித் திட்டங்களின் அன்னியச் செலாவணிப் பகுதியை நிரப்புவதற்கே பாங்கு தன் கடன்களை வழங்குமே யன்றி, உள்நாட்டுச் செலவினை நிரப்ப வழங்காது. இத் திட்டத்தை நிறைவேற்றுதலினால் ஏற்படுகின்ற மறைமுக விளைவாகிய கூடுதலான அன்னியச் செலாவணித் தேவையை பாங்கு கணக்கிற்கு எடுத்துக்கொள்வதில்லை. செலுத்துகை (payment) பன்னாட்டுச் செலாவணியிலேயே இருக்கவேண்டும்.

சாதாரணமாகப் பன்னாட்டுச் செலாவணி டாலரையே குறிக்கும். பெருகிய ஏற்றுமதி வல்லமை காட்டுகின்ற விளை வினைவிட அதிகமாகவே தேசிய உற்பத்திமீதும் பொருளாதார வளர்ச்சிமீதும் விளைவு ஏற்பட்டபோதிலுங்கூட, செலுத்

துகை அன்னியச் செலாவணியில் இருப்பதானது, அன்னியச் செலாவணியிலேயே வட்டியினைச் செலுத்தக்கூடிய அளவிற்கு மட்டுமே கடன் வழங்குதலை இயற்கையாகவே கட்டுப் படுத்தியது. மேலும், வட்டி வீதம் மிகவும் அதிகமாகும். வளர்ச்சித் திட்டங்களின் வருமானமீட்டும் வல்லமையைப் பொறுத்தவரையில், இத் திட்டங்களின் கருவிலிருக்கும் காலம் (gestation period) நீண்டுள்ளமையை நோக்கின், ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, கடனைத் திரும்பவும் செலுத்துதற்குரிய காலவரையறை குறைவாகவே உள்ளது. மொத்தப் பருமத்தைப் பொறுத்தவரையிலும் சரியே, அல்லது வளர்ச்சி குறைந்த நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களின் பல்வேறு துறைகளை வளைத்து எடுத்துக்கொண்டாலும் சரியே, பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய பன்னாட்டு நிதியாக்கப் பிரச்சினைக்கு உலக பாங்கு போதுமான விடையாகத் துலங்கவில்லை என்பதே கருத்தாகும்.

இதற்காக பாங்கினைக் குறைகூறக்கூடாது. கடன் வழங்குதலுக்கு வேண்டிய நிதிகளை பாங்கானது வளர்ச்சியுற்ற நாடுகளின் தனியார்துறை சார்ந்த முதலீடு செய்வோரிடமிருந்து சிறப்பாகப் பெற்றதேயன்றி, அந் நாடுகளின் அரசாங்கங்களிடமிருந்து கடன்களாகவோ அல்லது ஆண்டு மானியங்களாகவோ பெறவில்லை. எனவேதான், கடும் பாங்கு விதிகளுக்கிணங்கவே பாங்கானது செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்பெற்றது; பாங்கும் அவ்வாறே செயல் பட்டது. நான் முன்னரே குறிப்பிட்டுள்ளதுபோல, கட்டணம் செலுத்தப்பெற்ற மூலதனத்தை பாங்கு கடன் நிதியாகப் பயன்படுத்தாது, வளர்ச்சியுற்ற நாடுகளின் தனியார் துறை சார்ந்த முதலீடு செய்வோரும் அமைப்பு ரீதியான முதலீடு செய்வோரும் பாங்கு பத்திரங்களில் முதலீடு செய்திருப்பதற்குப் பாதுகாப்பளிப்பதற்கே பயன்படுத்தவேண்டும். எனவே, நடைமுறையில், வளர்ச்சியுற்ற நாடுகளின் தனியார் துறை சார்ந்த முதலீடு செய்வோரின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் சார்ந்து இயங்கவேண்டிய ஏஜென்சியாக பாங்கு உள்ளது. இந்த நிலை, பாங்கு நடவடிக்கைகளின் அளவினையும் எல்லையையும் கட்டுப்படுத்தி ஆட்கொள்ளும் நிலையாகும். தனியார்துறையினையும், பொருளாதார வளர்ச்சிக்கான நிதியாக்கத்தில் தனியார் துறை சார்ந்த அன்னிய மூலதனத்தின் முக்கியத்துவத்தினையும் பாங்கினுடைய அதிகாரபூர்வமான வட்டாரங்கள் எப்பொழுதும் வலியுறுத்துவதற்கு இந்த நிலையும் ஓரளவு காரணமாக இருக்கலாம்.

பொருளாதார வளர்ச்சிக்கு நிதி அளிப்பதில் உலக பாங்கினைவிட இரு நாடுகளுக்கிடையே பரிமாற்றிக்கொள்ளப் படும் உதவியும், அரசுகளுக்கிடையே பரிமாற்றிக்கொள்ளப் படும் உதவியும் மிக முக்கியமானவை. தீவினைப் பயனாக இவ்வுதவியின் பெரும் பகுதியை இராணுவ முயற்சியுடனும் இராணுவக் கூட்டுடனும் இணைத்துப் பயனடையும் நாடுகளை இவற்றில் ஈடுபடுத்துகின்றனர். இதன் கருத்தும் புரிகிறது. உதாரணமாக, 1955 முதல் 1958 முடிய உள்ள நான்காண்டு களில், ஐக்கிய அமெரிக்கா ஆசியாவிற்கும் ஆஃப்ரிக்காவிற்கும் 3·9 பில்லியன் டாலர்களை அல்லது கிட்டத்தட்ட ஆண்டொன் றுக்கு ஒரு பில்லியன் டாலர்களை மானியங்களாக வழங்கிற்று. இத் தொகையில் பெரும் பகுதி பாதுகாப்பு வேலைக்கு வழங்கப் பெற்றது. இராணுவக் கூட்டுமூலம் ஐக்கிய அமெரிக்கா வுடன் இணைக்கப்பெற்ற வளர்ச்சி குறைந்த நாடுகளின் இராணுவ முயற்சிகளுடன் அத் தொகையின் பெரும் பகுதி இணைக்கப்பெற்றது. இவ்வாறாக, இத் தொகையில் மூன்றில் இரண்டு பகுதிக்குமேல் தென் கொரியா, தேசீய சீனம், பாகிஸ்தான், ஃபிரெஞ்சு இந்தோசைனாவில் அடுத்தடுத்து வந்த மூன்று கட்சிகள் ஆகியவற்றிற்குச் சென்று அடைந்தன. இதே காலத்தில் ஐக்கிய அமெரிக்கா பொருளாதார உதவிக்கும் கடன்கள் அளித்தது. அக் கடன்கள் நன்கு பகிர்ந்து அளிக் கப்பட்டன.

அமெரிக்காவின் இராணுவ நேசநாடுகளின் பாதுகாப்பு முயற்சிகளுக்குப் பொருளாதார ஆதரவு தருவதற்காக வழங்கிய மானியங்களில் ஒன்பதில் ஒரு பங்கு உள்ள தொகையே பொருளாதார உதவிக்கென அமெரிக்கா வழங் கியது. 1959ஆம் ஆண்டிற்குப் பின்னர், அபிவிருத்திக் கடன் நிதியமைப்பு ஏற்படுத்தியதால் ஓரளவிற்கு நிலைமை முன் னேறியது. இவ்வமைப்பானது நட்புறவுள்ள வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்குக் கடன்கள் வழங்கும். ஆனால், அந் நாடுகள் ஐக்கிய அமெரிக்காவுடன் இராணுவக் கூட்டுறவு வைத்துள்ளனவா, இல்லையா என் பதைக் கருதாது அவ்வமைப்பு கடன்கள் அளிக்கும். எனினும், இராணுவக் கூட்டுடன் இணைக்கப்பெறாது, பொருளாதார வளர்ச்சிக்குமட்டும் ஒதுக்கப்பெற்ற தொகை 1960ஆம் ஆண்டில் 550 மில்லியன் டாலர்கள்மட்டுமே என்பதும், நாடுகள் ஒன்றுக்கொன்று சார்புள்ள பாதுகாப்புத் திட்டத் திற்கு 3,218 மில்லியன் டாலர்கள் ஒதுக்கப்பெற்றன என் பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும். அபிவிருத்திக் கடன்

நிதிப் பகிர்வில் இராணுவக் கூட்டுள்ள நேசநாடுகளும் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டன; உண்மையில் அந் நாடுகள் கலந்துகொண்டன.

பொருளாதார வளர்ச்சிக்கு அமெரிக்கா உதவுகின்ற மற்று மோர் ஊற்று ஏற்றுமதி - இறக்குமதி பாங்கு (Export - Import Bank) வழங்கும் கடன்களாகும். ஐக்கிய அமெரிக்காவின் கருவூலத்திலிருந்து அதிகாரபூர்வமான பங்குகளைத் தனியாகப் பெற்று, ஏற்றுமதி - இறக்குமதி பாங்கு தனது நிதிகளைப் பெருக்கிக்கொள்கிறது. 1934ஆம் ஆண்டு நிறுவப்பெற்ற இந்த பாங்கானது இதுவரையில் 7,588 மில்லியன் டாலர்களைக் கடன்களாக வழங்கியுள்ளது. 1958ஆம் ஆண்டின் இடையில், 3,040 மில்லியன் டாலர்கள் கொண்ட கடனை அது அளித் துள்ளது. இரண்டாவது உலகப்போருக்குப் பிந்திய காலத்தில், வெளிநாடுகளில் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதி யர்க்கத் துறையில், இவ்வமைப்பானது செய்துள்ள பணியினை எடுத்துக்காட்டும் அறிகுறியாகப் பிந்திய புள்ளிவிவரம் துலங்கு கிறது. இதிலுங்கூட, உலக பாங்கினைப்போலவே, வளர்ச்சி குறைந்த நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்குமட்டிலுமே கடன்கள் வழங்கப்படவில்லை. உண்மையில், 1958ஆம் ஆண்டு, ஜுன் மாதத்தில் நிலவிய 3,040 மில்லியன் டாலர்கள் கொண்ட கடன்களில், 1,439 மில்லியன் டாலர்கள் அல்லது ஏறத்தாழ ஓர் பாதியளவு ஐரோப்பாவிற்கே சென்றடைந்தது. இலத்தீன் அமெரிக்காவுக்கு 1,030 மில்லியன் டாலர்கள் சென்றன. ஆசியாவிற்கும் ஆஃப்ரிக்காவிற்கும் 558 மில்லியன் டாலர்களே கிடைத்தன; அதாவது, மொத்தத்தில் 18 சத வீதமே கிடைத்தது. எனினும், அண்மைக் காலத்தில், ஏற்றுமதி - இறக்குமதி பாங்கு ஆசியாவில் அதிகக் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது; இப் போக்கு தொடர்ந் திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக பாங்கைவிட ஏற்றுமதி - இறக்குமதி பாங்கிற்கு ஓர் வசதியுள்ளது. ஏற்றுமதி - இறக்குமதி பாங்கானது தொழில் துறைத் திட்டங்களுக்கு வேண்டிய நிதியாக்கத்திற்குக் கட னளிக்கிறது. ஆனால், உலக பாங்கு, வளர்ச்சி குறைந்த நாடு களிலுள்ள பொதுத்துறை சார்ந்த தொழில்களுக்குக் கடன் அளிப்பதில்லை. எனினும், ஏற்கெனவே நாம் சுட்டிக்காட்டி யுள்ள உலக பாங்கின் குறைகளனைத்தும் ஏற்றுமதி-இறக்குமதி பாங்கினிடமும் உள்ளன. அதாவது, அபிவிருத்தித் திட்டத்தின் நேரடியான அன்னியச் செலாவணி சார்ந்த செலவுகளுக்கு மட்டுமே கடன் வழங்குதல், அதிக வட்டி விதித்தல், மிகவும்

குறைந்த காலத்தில் கடனைத் திரும்ப அடைத்துவிடவேண்டும் என்று வலியுறுத்தல் போன்ற குறைபாடுகள் இவ்விரு பாங்கு அமைப்புகளிலும் உள்ளன. ஏற்றுமதி - இறக்குமதி பாங் கானது, பாங்குக்குரிய கடன்களுடன் (bankable loans) உறுதி யாக இணைக்கப்படவில்லை என்பதும், தனித்த திட்டங்களுக் கல்லாமல் வேறு திட்டங்களுக்கும் சில வேளைகளில் கடனளிக் கிறது என்பதும் உண்மையே. ஆனால், அதன் கடன் திட்டம் அரசாங்க இலாக்காவுடன் நெருக்கமாக இணைக்கப்பட் டிருக்கிறது என்பதும், கடன் வேண்டும் நாடுகளின் கோரிக்கை களிலுள்ள நிதி சார்ந்த, பொருளாதார அம்சங்களைவிட அரசியல் உள்நோக்கங்களையே அது கவனிக்கிறது என்பதும் உண்மையே. மேலும், அதனுடைய கடன்கள் இணைக்கப் பெற்ற கடன்களாகும் (tied loans). அதன் வருமானங்கள் ஐக்கிய அமெரிக்காவிலேயே செலவிடப்படவேண்டும். கடனைத் திருப்பி அடைப்பதற்கு உள்நாட்டுச் செலாவணியைப் பயன்படுத்தக்கூடாது. ஆசியாவிற்கும் ஆஃப்ரிக்காவிற்கும் ஏற்றுமதி - இறக்குமதி பாங்கு வழங்கும் தொகையானது உலக பாங்கு வழங்கும் தொகையைவிடக் கணிசமான அள விற்குக் குறைவாகும் என்பதனையும் சுட்டிக்காட்டவேண்டும். இருந்தபோதிலும், இலத்தீன் அமெரிக்காவே மிகப் பெரும் பயனை அடைகிறது.

அண்மைக் காலத்தில், வெளிநாடுகளின் அபிவிருத்திக்கு வேண்டிய நிதியாக்கத்தினை வழங்க, அமெரிக்கா பயன்படுத்தும் கருவிகளுடன் மற்றொன்றும் சேர்ந்திருக்கிறது. ஆனால், இதன் உள்நோக்கம் முக்கியமாகத் தேசிய உணர்வு சார்ந்ததாகும்; அரசாங்கத்திற்குச் சொந்தமான விவசாயப் பண்டங்களின் உபரிகளை விநியோகிக்கும் பிரச்சினையுடன் இது இணைந் துள்ளது. விவசாயப் பண்டங்களின் உபரிகளை அன்னிய நேசநாடுகளுக்குக் குறைந்த விலையில் அந் நாடுகளின் செலா வணிகளையே மாற்றாகப் பெற்றுக்கொண்டு விற்பதற்குப் பொதுச்சட்டம் 480 (விவசாய, வர்த்தக வளர்ச்சி, உதவிபற்றிய சட்டம்—The Agricultural Trade Development and Assistance Act) அனுமதிக்கிறது. இப் பொதுச் சட்டம் 480 (Public Law 480), பி.எல். 480 (P.L. 480) என்ற செல்வாக்குள்ள பெயரால் அழைக்கப்படும். இவ்வாறாக, 1954 முதல் 1958 முடிய உள்ள ஆண்டுகளில், ஏறத்தாழ மூன்று பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள விவசாயப் பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன; இவற்றிற்கு டாலரில் விலையைச் செலுத்த வேண்டிய நிபந்தனை கிடையாது. பி.எல். 480 திட்டத்தின்கீழ்

கிடைக்கும் ஏற்றுமதிகள் இந்தியா போன்ற வளர்ச்சி குறைந்த நாட்டிற்கு மிகவும் முக்கியமாகும். இவ்வாருக, இந்தியா ரூபாய் நாணயத்தைச் செலுத்தி, மிகவும் தேவைப்படும் உணவுப் பண்டங்களைப் பெருமளவில் வாங்குகிறது. ரூபாய் நாணயத்தில் செலுத்தப்பட்ட தொகையின் பெரும்பகுதியை அமெரிக்கா மீண்டும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியாக்கத்திற்காக மானியங்களாகவும் கடன்களாகவும் தருகிறது. ஆக, இந்தியா அண்மைக் காலத்தில் ஐக்கிய அமெரிக்காவுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. அதன்படி, மூன்ருவது திட்டகாலத்தில், பி.எல். 480 திட்டத்தின்கீழ், சுமார் 1·3 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள விவசாயப் பண்டங்களின் உபரியை அமெரிக்கா இந்தியாவிற்கு வழங்கும். புதிதாக உருவாக்கப்பட்ட அபிவிருத்திக் கடன் நிதியமைப்பில் உள்ளதுபோலவே, இத் திட்டத்திலும் ஓர் தடை இருக்கிறது. அமெரிக்கா கணிசமான அளவிற்கு ரூபாய் நாணயங்களை எச்சமாகக் குவித்துக்கொள்ளும். அமெரிக்கா உபரி ரூபாய் நாணயங்களைத் திருப்பித் தந்து மாற்ற விரும்பினல், இந்தியாவிற்குப் பெரும் நெருக்கடி ஏற்படும். பி.எல். 480 திட்டத்தின்கீழும் அபிவிருத்திக் கடன் நிதியின் கீழும் அமெரிக்க உதவியைப் பெறும் ஏனைய வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கும் இதே நிலை பொருந்தும்.

இவ்வாருக, நிதியளவில், கணிசமான அளவிற்கு அன்னிய உதவியினை அமெரிக்கா பொருளாதார வளர்ச்சிக்கெனத் தருகிறது. மேற்கத்திய உலகிலுள்ள ஏனைய வளர்ச்சியுற்ற நாடுகளாகிய ஃபிரான்ஸ், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா, நெதர்லாண்ட்ஸ், இன்னும் அநேக நாடுகள் தங்களால் முடிந்த அளவிற்குச் சிறிய உதவிகளையும் அளிக்கின்றன. 1959ஆம் ஆண்டு 2,819 மில்லியன் டாலர்கள் உதவியாக அளிக்கப்பட்டனவெனில், அமெரிக்கா 1,708 மில்லியன் டாலர்களை வழங்கியது. 1958ஆம் ஆண்டில் 3,060 மில்லியன் டாலர்கள் உதவியாக அளிக்கப்பட்டனவெனில், அதில் அமெரிக்காவின் பங்கு 1,986 மில்லியன் டாலர்களாகும். தீவினைப் பயனுக, இவ் வுதவியின் பெரும் பகுதியினை இராணுவக் கூட்டுடனும், வெளிநாட்டுக் கொள்கையுடனும், கடல் கடந்த பிரதேச உடைமைகளுடனும் இணைத்துள்ளனர். எனவே, வளர்ச்சி குறைந்த உலகின் பொருளாதார அபிவிருத்தித் தேவைகளை அனுசரித்து இவ் வுதவி பகிர்ந்தளிக்கப்படவில்லை. பிரதேச வாரியாகப் பகிர்ந்தளிப்பதிலோ அல்லது திட்டம், குறிக்கோள் இவற்றினைச் சார்ந்தவாறு பகிர்ந்தளிப்பதிலோ, பொருளாதார

வளர்ச்சி குறித்த பொருளாதார ரீதியான நன்மைகளைப் பற்றியும் சமநிலைபற்றியும் தக்க அளவிற்கோ அல்லது நியாய மான அளவிற்கோ கவனம் செலுத்தப்படவில்லை. இதன் விளைவு என்னவெனில், மேற்கத்திய உலகின் வளர்ச்சியுற்ற நாடுகளின் அரசுகள் பகிர்ந்தளித்த பொருளாதார உதவியில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன என்பதே. இதற்கும் அபிவிருத்திப் பொருளாதார உண்மைக்கும் தொடர்பே இல்லை. 1954 முதல் 1957 முடிய உள்ள நான்கு நிதியாண்டுகளுக்குரிய கணக்கு கீழே தரப்படுகிறது :

நாடு	தலைவீத உதவி (டாலரில்)	நாடு	தலைவீத உதவி (டாலரில்)
இஸ்ரேயில்	94·9	எத்தியோப்பியா	12·2
லிபியா	82·5	லைபீரியா	6·9
வியட்நாம் ; லாவோஸ்	53·1	பிரேசில்	5·3
தென் கொரியா	48·0	பாகிஸ்தான்	4·6
டியூனிஷியா	43·1	தாய்லாந்து	4·6
ஃபார்மோசா	41·7	ஐக்கிய அரபுக் குடியரசு	2·7
ஜோர்டான்	36·3	இந்தியா	0·8
மொராக்கோ	30·6	ஆப்கானிஸ்தான்	2·6
பொலிவியா	22·3	பர்மா	1·2
கம்போடியா	21·0	இந்தோனேஷியா	0·5
ஈரான்	41·1		

மூலங்கள் ; (1) ஐ.நா. சபையின் புள்ளிவிவர ஆண்டு அறிக்கை நூல், 1958 ; (2) ஐக்கிய அமெரிக்காவின் ஒன்றுக்கொன்று உதவியான பாதுகாப்பு நிருவாகம் (U. S. Mutual Security Administration).

பின்னர் தொடர்ந்த ஆண்டுகளில், ஏதோ கொஞ்சம் முன் னேற்றம் ஏற்பட்டது ; அதிலுங் குறிப்பாக இந்தியாவிற்கு ஏற்பட்டது. ஆனால், அடிப்படை உண்மை நிலவரம் இன்னும் மாறாமலேயே இருக்கிறது. அதாவது, அபிவிருத்திபற்றிய பொருளாதாரத்தைவிடப் பொருளாதாரத் தொடர்பற்ற வெளி நாட்டுக் கொள்கையைக்கொண்டே மேற்கத்திய நாடுகளின் நேரடியான அரசாங்க உதவி நிருணயிக்கப்படுகிறது.

அண்மைக் கால ஆண்டுகளில், வளர்ச்சி குறைந்த உலகின் கம்யூனிசம் சாராத பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கென உதவி வழங்கும் துறையில் சோவியத் யூனியன் நுழைந்திருக் கிறது ; கணிசமான அளவிற்கு உதவியும் செய்துகொண் டிருக்கிறது. சோவியத் உதவி இராணுவக் கூட்டுடன் இணைக் கப்படவில்லை என்றபோதிலும், இவ் வுதவியைப் பகிர்ந்தளிப்ப தானது தூய பொருளாதார காரணங்களின் அடிப்படையில் அமையவில்லை எனலாம். உண்மையில், சோவியத் வெளி

நாட்டுக் கொள்கையின் புற ஒட்டுதான் சோவியத் உதவியாகும். பொருளாதார வளர்ச்சிக்கென வழங்கப்பெறும் மேற்கத்திய உதவியைப் புரிந்துகொண்டுள்ளதுபோலவே, இதனையும் புரிந்துகொள்ள முடியும். 1953-57 ஆகிய 5 ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சிக்கு சோவியத் யூனியன் தந்துதவிய கடன்களின் கணக்குக் கீழே தரப்பட்டுள்ளது :

நாடு	தலைவீத உதவி (டாலரில்)	நாடு	தலைவீத உதவி (டாலரில்)
சிரியா	45·0	நேபாளம்	1·5
யூகோஸ்லேவியா	25·2	லெபனுன்	1·4
ஆப்கானிஸ்தான்	9·6	பர்மா	1·1
பராகுவே (Paraguay)	9·4	அர்ஜென்டைனு	1·1
எகிப்து	9·3	இந்தியா	0·95
கம்போடியா	5·0	துருக்கி	0·9
இலங்கை	3·0	ஏமென் (Yeman)	0·4
இந்தோனேஷியா	1·4		

மூலம்: ஜே. சி. பெர்லினர் (J. C. Berliner) 'சோவியத் பொருளாதார உதவி.'

மேலே குறிப்பிட்டுள்ள காலத்தில் சோவியத் யூனியனிடமிருந்தும் அதன் நேசநாடுகளிடமிருந்தும் வந்துள்ள மொத்த உதவி 1,581 மில்லியன் டாலர்களாகும். கம்யூனிச சைனுவையும் சேர்த்தே சோவியத் பகுதிக்குள்ளாகவே பரிமாறிக் கொள்ளப்பெறுகின்ற உதவியினை இதில் சேர்க்கவில்லை என்பது உண்மையே. அதிகாரபூர்வமாக வழங்கப்பெற்ற சோவியத் உதவி பெருமளவு இருந்தபோதிலும், அதனை உண்மையாகவே பகிர்ந்தளிப்பதிலோ அல்லது பயன்படுத்துவதிலோ வேகம் காட்டப்படவில்லை; மேலே குறிப்பிட்ட காலத்தில், கடன் ஒப்பந்தங்களில் கண்டுள்ள கடன்களில் சுமார் 20 முதல் 25 சதவீதமே பகிர்ந்தளிக்கப்பட்டன அல்லது பயன்படுத்தப்பெற்றன..

1955 முதல் 1958 முடிய உள்ள நான்கு நிதியாண்டுகளில் ஆசியா, இலத்தீன் அமெரிக்கா, ஆஃப்ரிக்கா முதலான கண்டங்களுக்கு அமெரிக்கா சோவியத் யூனியனுக்கு இணையாக வழங்கிய அன்னியப் பொருளாதார உதவி ஐந்து பில்லியன் டாலர்களாகும்; இவற்றில் 4·3 பில்லியன் டாலர்களை மானியங்களாக வழங்கியது. ஆனுல், அமெரிக்காவின் எண்களை சோவியத் எண்களுடன் உறுதியாக ஒப்பிட முடியாது. ஏனென்றுல், அமெரிக்க எண்களில் பாதுகாப்பு உதவி சேர்ந்

துள்ளது; நடுநிலைக் கொள்கையினைக் கடைப்பிடிக்கும் நாடுகளை மாத்திரமன்றி நேசநாடுகளையும் அமெரிக்க எண்கள் சேர்த்துக்கொண்டுள்ளன. ஆனால், சோவியத் எண்கள் நடுநிலைக் கொள்கையினைக் கடைப்பிடிக்கும் நாடுகளைமட்டுமே பெரும்பாலும் சேர்த்துக்கொண்டுள்ளன; பொருளாதார வளர்ச்சியினைமட்டும் உறுதியுடன் சேர்த்துக்கொண்டுள்ளன. எனினும், ஒன்றுமட்டும் தெளிவாக உள்ளது. மேற்கத்திய நாடுகளுக்கும் சோவியத் தொகுதிக்கும் இடையிலே, கம்யூனிசம் சாராத உலகின் வளர்ச்சி குறைந்த பகுதிகளாகிய ஆசியா, ஆஃப்ரிக்கா, இலத்தீன் அமெரிக்கா முதலிய கண்டங்கள் பொருளாதார காரியங்களுக்காக ஆண்டொன்றுக்கு 3·5 முதல் 4 பில்லியன் டாலர்களை உதவியாகப் பெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. ஆனால், இவ் வுதவியின் பகிர்வானது வளர்ச்சிப் பொருளாதாரத்தினால் (Economics of Development) முக்கியமாகக் கட்டுப்படுத்தப்படவில்லை என்பதும், இவ் வுதவியின் பெரும் பகுதி பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படாமல் உண்மையில் இராணுவ உதவியினை நிரப்புவதாகவே உள்ளது என்பதும் இவ் வுதவியில் உள்ள தடைகளாகும்.

இறுதியாக, பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய அன்னிய நிதியாக்கத்தின் வழக்கமான கருவியாகிய தனியார் துறை சார்ந்த அன்னிய முதலீட்டினை எடுத்துக்கொள்வோம். இத்தகைய கருத்து சோவியத் மொழியில் கிடையாது. ஆனால், மேற்கு நாடுகளின் சிந்தனையில், சிறப்பாக அமெரிக்க சிந்தனையில், இக் கருத்தானது பொருளாதார வளர்ச்சிபற்றிய திறமுறையில் (strategy) மிகவும் முக்கியமான பங்கு வகிக்கிறது. உண்மையில், இக் கருத்து இப்படித்தான் அமையும் என்பது வியப்புக்குரியதன்று. ஏனெனில், வரலாற்று ரீதியாக, பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய அன்னிய நிதிகளையும் நுட்பத் திறனையும் இயக்குகின்ற மிக முக்கியமான பணியினைத் தனியார் அன்னிய முதலீடு மேற்கொண்டது. உண்மையில், இதுதான் ஐக்கிய அமெரிக்காவின் சரிதமாக இருந்திருக்கிறது; இதுதான் வளர்ச்சியுற்ற மேற்கு நாடுகளின் வரலாறும் ஆகும். உதாரணமாக, 1930ஆம் ஆண்டில், பல்வேறு நாடுகளில் முதலீடு செய்யப்பெற்ற அன்னிய மூலதனத் தொகைக்கும் அந் நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சியின் அளவிற்கும் நல்லவண்ணம் நெருக்கமான தொடர்பு உள்ளது. தக்க சில புள்ளி விவரங்களை நான் அடுத்த பக்கத்தில் தருகின்றேன்.

1930ஆம் ஆண்டு ஜனத்தொகையைப் பொறுத்தவரையில் தலைவீத அன்னிய மூலதனம்

நாடு	பவுண்டு ஸ்டர்லிங்	நாடு	பவுண்டு ஸ்டர்லிங்
நியூசிலண்டு	128	அர்ஜென்டைனு	55
கனடா	127	தென் ஆஃப்ரிக்கா	34
ஆஸ்திரேலியா	122	பிரேசில்	13
கியூபா	74	இந்தியா	2·9
சிலி (Chile)	64	சைனு	1·5

ஆகவே, தங்களுடைய பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் அன்னிய நிதிகளையும் தொழில்நுட்ப வினை முறைகளையும் பெறுவதற்கு, வளர்ச்சி குறைந்த நாடுகள் தனியார்துறை சார்ந்த அன்னிய முதலினையே முக்கியமாக நாடவேண்டுமென, ஐக்கிய அமெரிக்கா உறுதியாகவும் மற்ற மேற்கத்திய நாடுகள் ஓரளவிற்கும் நம்பிக் கருத்துத் தெரிவித்தன. தங்களுடைய சொந்த வரலாற்றுரீதியான அனுபவத்தின் அடிப்படையில் எழுந்த இக்கருத்துடன் ஓரளவிற்குக் கொள்கையும் சேர்ந்திருக்கிறது; தனியார் துறையின் அடிப்படையான நெறிகளின்மீதுள்ள நம்பிக்கையும் இக் கருத்துடன் இணைந்திருக்கிறது; இன்னும் ஜனநாயக அரசியல் அமைப்புகளை நிலைநிறுத்தும் காரியத்துடனும் இக் கருத்து ஒன்றியிருக்கிறது.[3] பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய உதவியினை அளிக்கும் திட்டத்தில் அமெரிக்காவின் கொள்கையை இக்

[3] பொருளாதார—சமூகக் கவுன்சிலில் 1949ஆம் ஆண்டில் அமெரிக்க அரசின் அன்றைய இராச்சியத் துணைச் செயலாளராகிய திரு. வில்லார்டு தோர்பே பின்வருமாறு கூறினுர்:

'அமெரிக்க பொருளாதார அமைப்பு முக்கியமாகத் தனியார்துறை சார்ந்த அமைப்பாகும். எனவே, அநேக பொதுத்துறைத் திட்டங்களிலும்கூட, பொதுத்துறைக் கட்டுப்பாடுகளும் உதவிகளும் இருந்த போதிலும்கூட, முதலீட்டினைத் தனியார்துறை சார்ந்த மூலதனச் சந்தை மூலமே மேற்கொண்டனர். இதனை நாங்கள் இயற்கையெனக் கருதுகிறோம். இத்தகைய தனியார்துறை சார்ந்த ஊற்றுகளே வெளிநாட்டுத் துறைகளிலும் பணிபுரிவது விரும்பத்தக்கது என்றும் கருதுகிறோம். கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்குப் பின்னர், செனெட்டின் அயல்நாட்டுத் தொடர்புகள்பற்றிய கமிட்டி முன்னர் உதவிச் செயலாளர் டில்லியன் (Dillian) பின்வரும் கருத்தினை வழங்கினுர்: 'தன்னுடைய சொந்த வரலாற்றில் ஐக்கிய அமெரிக்காவும், தங்களுடைய துவக்க கட்டங்களில் தென் அமெரிக்க நாடுகளும் வளர்ச்சி குறைந்த நாடுகளாக இருந்த பொழுது, தனியார்துறை சார்ந்த மூலதனத்தின் உதவியுடனேயே பொருளாதார வளர்ச்சி அடைந்தன என்பது வரலாருகும். இன்றுள்ள வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கும் இதே முறை தேவைதான் என்று நாங்கள் கருதுகிறோம்.............. இப் பகுதிகளின் பொருளாதார அபிவிருத்திக்கு அரசாங்க முதலீட்டினைவிட உண்மையில் தனியார் முதலீடு உயர்ந்தது என்பதை நிரூபிக்கவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.'

கருத்து உறுதியாக ஆதரித்துத் தூண்டுகிறது. எனவே, தனியார் துறையின் முக்கியத்துவத்தைக் குறைக்கின்ற காரியமோ அல்லது பொருளாதார வளர்ச்சியில் அதன் நியாய மான பங்கினைக் குறைக்கும் காரியமோ விரும்பத்தக்கது அன்று என எப்பொழுதும் வலியுறுத்தப்படுகிறது. உலக பாங்கிலும், ஐ.நா. அமைப்பிலும், அன்னியப் பொருளாதார உதவிபற்றிய தன் சொந்த அரசாங்கத் திட்டங்களிலும் அமெரிக்கா செலுத்தியுள்ள சிந்தனையை இக்கருத்து உருவாக்கி யுள்ளது.

தீவினைப் பயனுக, வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொரு ளாதார சூழ்நிலைகளின் உண்மை நிலைமைக்கும், அந் நாடுகளின் பெரும்பாலான மக்களின் உணர்வுகளுக்கும் எதிராகவே இந்த அமெரிக்க சிந்தனை உள்ளது. முதலில், ஐரோப்பிய மக்கள் வாழ்கின்ற நாடுகளுக்குத் தனியார்துறை சார்ந்த அன்னிய மூலதனம் எளிதாகச் சென்று அடைந்திருக்கும்பொழுது, ஆசிய, ஆஃப்ரிக்க நாடுகளுக்கு அவ்வாறு எளிய முறையில் சென்று அடையவில்லை. அப்படிச் சென்று அடைந்திருந் தாலும், மேற்கத்திய வல்லரசுகள் அரசியல் பொறுப்பதிகாரம் பெற்றுள்ள அன்னியப் பிரதேசங்களைத்தான் அம் மூலதனம் எளிதாகச் சென்று அடைந்திருக்கிறது. சுதந்திரம் அடைந்த நாடுகளுக்கும் புதிதாகச் சுதந்திரம் அடைந்த ஆசிய நாடுக ளுக்கும் தனியார் அன்னிய மூலதனம் சென்றபோதிலும்கூட, அது முக்கியமாக எண்ணெய்க் கிணறுகள், தாதுப்பொருள்கள் அல்லது கச்சாப் பொருள்கள் முதலானவற்றில் முதலீடு செய்யவே பயன்பட்டனவேயன்றி, வளர்ச்சியுற்ற நாட்டிற்கு வேண்டிய தொழில்துறைக்கோ அல்லது இயந்திரத் தொழில் உற்பத்திக்கோ முதலீடு செய்யப் பயன்படவில்லை. (புதிதாகச் சுதந்திரம் பெற்ற ஆஃப்ரிக்க நாடுகளைப்பற்றி இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை. பன்னூட்டு வளர்ச்சித் துறைக ளுக்குத் தனியார் முதல் கொடையாளி உணர்வில் செல்வ தில்லை. தனியார் மூலதனம் இலாபத்தையே நோக்கமாகக் கொண்டுள்ளது. பொருளாதார, சமூக மூலதனத் துறைகளை நிறுவியபின்னரே, பொருளாதார அமைப்பு ஓரளவு வளர்ச்சி யுற்ற பிறகே, பெருமளவு உற்பத்தியின் பொருளாதாரப் பயன் பாட்டினை அனுமதிக்கப் போதுமான அளவிற்கு வருமானங் களும் சந்தைகளும் பெருகிய பின்னரே, நவீன தொழில் துறையின் இத்தகைய அம்சங்கள் நிறைவேறிய பின்னரே, தொழில்துறையில் இலாபம் ஈட்ட முடியும். இத்துடன், நினைக்க முடியாத அளவிற்குத் தெரிந்துகொள்ள முடியாத

அம்சங்களும், தேசியமயமாக்குதலின் பயமுறுத்தல்களும், நிருவாகச் சுதந்திரத்தின்மீதும் இலாபங்களின் அளவின்மீதும், இலாபங்களை எடுத்துச் செல்லுதலின்மீதும் அருவருக்கத்தக்க தடைகளும் இருந்தன என்பது உண்மையே. இரண்டு தடவைகள் வரி செலுத்துவதில் இயற்கையான வெறுப்பும் ஏற்பட்டது. எனினும், இவை அவ்வளவு முக்கியம் அன்று. பெரும்பாலான வளர்ச்சி குறைந்த நாடுகளில், பொருளாதார அபிவிருத்தியின் துவக்க கட்டங்களில், பெருமளவுத் தொழில் துறைகள், ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, அவ்வளவு இலாபகரமானவையாக இருப்பதில்லை என்ற அடிப்படையான உண்மையின் காரணமாகவே, வளர்ச்சி குறைந்த நாடுகளைத் தொழில்மயமாக்கத் தனியார் முதல் பெருமளவில் அந் நாடுகளுக்குச் செல்லவில்லை.

போருக்குப் பிந்திய காலத்தில், பன்னாட்டுரீதியாகத் தனியார் அன்னிய மூலதனம் வெளிநாடுகளைச் சென்று அடைந்ததைப் பகுத்தாய்ந்தால் இது தெளிவாகும். இவ்வாறாக, 1950 முதல் 1958 முடிய உள்ள ஒன்பது ஆண்டுகளில், வெளிநாடுகளில் இருந்த அமெரிக்க தனியார் முதலீடு சுமார் 15·3 பில்லியன் டாலர்களாகும். எனினும், இவற்றில் பாதித் தொகை கனடாவிற்கும் மேற்கு ஐரோப்பாவிற்கும் சென்றது; இலத்தீன் அமெரிக்காவிற்கு நான்கு பில்லியன் டாலர்கள் சென்றன; ஜனத்தொகை மிகவும் பெருகியிருந்த ஆசிய நாடுகளுக்கும் ஆஃப்ரிக்க நாடுகளுக்கும் மூன்று பில்லியன் டாலர்களுக்குக் குறைவாகவே சென்றன. அறிவுக் கூர்மையுள்ள அமெரிக்கப் பொருளாதார நிபுணர் ஒருவர் குறிப்பிட்டுள்ளதுபோலவே, 'ஏழ்மை நிறைந்த நாடுகளில் அமெரிக்க முதலீட்டிற்கு ஏற்பட்டுள்ள மிகப் பெருந் தடை அந் நாடுகளின் வறுமையே......... நமது தொழில்துறை முதலாளியை வளர்ச்சியடைகின்ற நாடுகளே மிகவும் எளிதாகக் கவருகின்றன; ஆனால், இன்னும் தேக்கம் அடைந்துள்ள நிலையிலேயே உள்ள நாடுகள் அம் முதலாளியைக் கவரவில்லை.' வருமானங்கள் உயர்ந்திருக்கும் நாடுகளின் தொழில்துறை உற்பத்தியில் அமெரிக்காவின் அன்னிய முதலீடுகள் மிகவும் உயர்ந்துள்ளன என்றும், தொழில்துறை உற்பத்தியில் அமெரிக்க முதலீட்டினைப் பெற்றுள்ள நாடுகளை அவற்றின் தலைவீத வருமானத்திற்கு இணையாக வரிசைப்படுத்தலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதே உண்மையினை ஆங்கில நாட்டைச் சேர்ந்த இளம் பொருளாதார நிபுணர் ஒருவரும் ஆராய்ந்து எடுத்துக்காட்டியுள்ளார். அமெரிக்காவின்

அன்னிய முதலீட்டினையும் ஐரோப்பிய பொருளாதார ஒருமைப் பாட்டினையும் ஆராய்ச்சி செய்த அப் பொருளாதார நிபுணர், 'மொத்தத்தில், பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்கா முதலீடு செய்த மூலதனத் தொகைக்கும் அந் நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்தி மதிப்பிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது' என்று எடுத்துக்காட்டியுள்ளார். ஆக, 1950 முதல் 1958 முடிய உள்ள ஒன்பது ஆண்டுகளில், வெளி நாடுகளில் அமெரிக்கத் தனியார் முதலீடு 15.3 பில்லியன் டாலர் களாக உயர்ந்தபொழுது, இந்த அதிகரிப்பில் தொழில்துறை உற்பத்தியின் பங்கு 4.7 பில்லியன் டாலர்களாகும்; ஆனால், ஆஃப்ரிக்காவிற்கும், ஆசியாவிற்கும், ஆஸ்திரேலியாவிற்கும் கிடைத்த பங்கு 518 மில்லியன் டாலர்கள்மட்டுமே; அல்லது தொழில்துறை உற்பத்தி முதலீட்டில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பில் ஏழில் ஒரு பங்கிற்கும் குறைவேயாகும். (இதில் ஆஸ்திரேலியாவிற்குக் கிடைத்த பங்கு மிகவும் அதிகமாக இருக்கவேண்டும்.) மேலும், துரிதமான வளர்ச்சிப் பொரு ளாதாரத்தையும் திட்டமிட்ட தொழில்மயமாதலின் முதன்மை களையும் எண்ணிப் பார்க்காமல், தொழில்துறை முதலீட்டு உரிமைக்குத் தக்கவாறு அனுமதி வழங்க இன்று வளர்ச்சி குறைந்த நாடுகள் தயாராகவில்லை. இத்தகைய சூழ்நிலைகளில், பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண தனியார் முதலீட்டினைத் தொடர்ந்து எதிர்பார்ப்பதானது உண்மையில் 19ஆம் நூற்றாண்டின் அனுபவத்தைத் தற்காலத்து வளர்ச்சி குறைந்த உலகின் பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஓரளவிற்கு நன்னம்பிக்கையுடன் பொருத்திப் பார்த்துப் பயன்படுத்த முயலுவதாகும்.

வளர்ச்சி குறைந்த உலகின் ஆக்கத்திறனிலும் உற்பத்தி யிலும் துரிதமாக மிக உயர்ந்த அதிகரிப்பினை உண்டாக்கும் வகையில், பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதியாக் கத்தினை அரசாங்கங்களுக்கிடையே வழங்கப்பெறும் மானியங் களும், கடன்களும், தனியார் அன்னிய முதலீடும் போதுமான அளவிற்கு நிறைவேற்றமாட்டா என்பது நான் மேலே கூறி யிருப்பனவற்றிலிருந்து தெளிவாகும். மேலும், கட்டுப்பாடு களுக்கிடையே இயங்கவேண்டியிருப்பதாலும், கடனளிப்பதற் குரிய மூலவளங்கள் போதுமான அளவிற்கு இல்லாமை யாலும், உலக பாங்கும் இப் பணியினைப் போதுமான அள விற்கு மேற்கொள்ள முடியாது. வளர்ச்சி குறைந்த பகுதி களின் பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய நிதிகளை அளிக்கும் அமைப்பில் புகுந்துள்ள குறைபாடுகளையும் விடுபட்

டுள்ள குறைபாடுகளையும் துவக்கத்திலேயே எடுத்துக்காட்டிய பொருளாதார நிபுணர்களில் நானும் ஒருவன் என்பது என்னுடைய நல்வினையாகவும் இருக்கலாம்; தீவினையாகவும் இருக்கலாம். ஐ.நா. அமைப்பின் பொருளாதார வளர்ச்சி பற்றிய துணைக்கமிஷனின் மூன்றுவது கூட்டத்தின் தலைவனுக நான் பணியாற்றியபொழுது, பொருளாதார வளர்ச்சியின் தேவைகளையும் அனுபவத்தையும் மனத்தில் கொண்டு, தனியார் துறை சார்ந்த முதலீடு, அரசாங்கங்களுக்கிடையே நிலவும் முதலீடு, பன்னுட்டு மூதலீடு ஆகிய மூன்று வகைகளைச் சார்ந்த அன்னிய முதலீட்டினைப்பற்றித் தெளிவான முறையில் பகுத்தாய்ந்தேன். இவ்வாறு பகுத்தாய்வு செய்து, பொருளாதார வளர்ச்சிக்குமட்டும் புதிய பன்னுட்டு ஏஜென்சி தேவை என்ற முடிவு எடுத்தேன். இத்தகைய ஏஜென்சி அமையவேண்டிய விதத்தினையும், அதற்குத் தரவேண்டிய பெயரினையும்கூட நான் வெளியிட்டேன். 'ஐ.நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்பு' என்ற பெயரினையும் வழங்கினேன். என்னுடைய ஆலோசனைகளைப் பரிசிலனை செய்யவேண்டும் என்று துணைக்கமிஷன் கருத்துத் தெரிவித்து, தன்னுடைய அறிக்கையில் பின் இணைப்பாகச் சேர்த்து, பொருளாதார-வேலைக் கமிஷனின் பார்வைக்குக் கொண்டுவந்தது. என்னுடைய ஆலோசனைகள் முந்திய கட்டுரையில் விவரமாக விளக்கப்பட்டுள்ளன. இப்பொழுது அவற்றின் மதிப்பு வெறும் சரித்திர ரீதியானதே. தன்னுடைய சொந்த நிதி வளங்களைக் கொண்டு நிறைவேற்ற முடியாத பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி வழங்குதல், கடிய வியாபார விதிகளின் அடிப்படைமீது கடன்கள் பெற வியலாத வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி வழங்குதல், வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குமட்டிலுமே இவ் வுதவியை அளித்தல், இப் பகுப்பின்கீழ் வரும் நாடுகளின் அட்டவணையைப் பன்னுட்டு உடன்பாட்டின்மூலம் தயாரித்தல் முதலானவை என்னுடைய ஆலோசனைகளில் இடம்பெற்றுள்ளன.

உலக பாங்கினுல் நிதியளிக்கமுடியாத திட்டங்களுக்கு, அரசுகளுக்கிடையே நிலவும் நிதியத்திலிருந்து நிதியாக்கம் பெறமுடியாத திட்டங்களுக்கு அல்லது தனியார் அன்னிய முதலீடு கிடைக்கப்பெருத திட்டங்களுக்கு மட்டுமே இவ் வுதவி கிடைக்கும். ஆனுல், இத் திட்டங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்து, இறுதியில் நாட்டு ஆக்கத் திறனில் அதிகரிப்பினையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் உயர்வினையும் ஏற்படுத்துவதாக இருக்கவேண்டும்.

சாதாரணமாக இத்தகைய உதவி கடன்களாகக் கிடைத்தல்வேண்டுமேயன்றி, மானியங்களாகக் கிடைக்கக் கூடாது என்றும், கடனைத் திருப்பி அடைத்தல்பற்றிய விதிகள் தாராள முறையில் இருக்கவேண்டுமென்றும், செலுத்த வேண்டிய வட்டியும் பெயரளவிலேயே இருக்கவேண்டு மென்றும் நான் கருத்துத் தெரிவித்தேன். என்னுடைய ஆலோசனைகள், 1949ஆம் ஆண்டின் உலகிற்குப் பொருந்தி அமைய வில்லை என்றே தோன்றுகிறது. எனது ஆலோசனைகளைப் பொருளாதார—வேலைக் கமிஷன் மறுத்தொதுக்கிவிட்டது. கமிஷனின் நடவடிக்கையைப் பொருளாதார—சமூக கவுன்சில் ஆதரித்தது. எனது ஆலோசனைகளை உலக பாங்கும் தாக்கியது. உலக பாங்கின் நான்காவது ஆண்டு அறிக்கையில் எனது ஆலோசனைகளைக் கீழ்க்கண்டவாறு விமரிசனம் செய்துள்ளது:

'தங்களுடைய சொந்த மூலவளங்களையும் நடப்பில் உள்ள பன்னாட்டு மூலவளங்களையும்விட வேகமாகத் தங்களுடைய வளர்ச்சி துரித கதியில் செல்லவேண்டும் என்று வளர்ச்சி குறைந்த நாடுகள் விரும்புவதால், உலக பாங்கோ அல்லது வேறு ஏதேனும் புதிய ஏஜென்சியோ பெயரளவுக்குரிய குறைந்த வட்டி வீதத்தில் கடன்கள் அளிக்கவேண்டும் என்றும், நீண்டகாலத் தவணையில் கடன்களைத் திருப்பித்தர வசதியளிக்க வேண்டுமென்றும் அந் நாடுகள் சில வேளைகளில் கருத்துத் தெரிவிக்கின்றன. இத்தகைய கடனளிப்புகள் கணிசமான அளவிற்குப் பன்னாட்டு உதவித்தொகையை உள்ளடக்கி இருக்கும் என்பதனையும், அந்த அளவிற்கு அக் கடன்கள் கடன் வாங்கும் நாட்டிற்கு உருமறைந்த மானியத்தை அளிப்பதாகவே அமையும் என்பதனையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்ட வேண்டும். பன்னாட்டு உதவித்தொகையினை அளிக்கும் நிலையில் உள்ள இத்தகைய சில நாடுகளின் அரசுகள், பொருளாதார வளர்ச்சிப் படிமுறையை விரைந்து மேற்கொள்ள, சில காரியங் களில் துணைமானியங்கள் விரும்பத்தக்கன என்று கருதினால், இயல்பான பன்னாட்டு முதலீடுகளின் நேர்மையை பாதிக்கும் விதிகள் தளர்ந்த கடன்களை அளிப்பதைவிட நேரடியான மானியங்களை அளிப்பதே சரியானது என்று பாங்கு தீர்ப்பளிக் கிறது.'

பதினோர் ஆண்டுகள் கழித்து, பன்னாட்டு வளர்ச்சி சங்கம் (International Development Association—IDA) என்ற ஓர் புதிய பன்னாட்டு அமைப்பினை ஏற்படுத்துவதை உலக பாங்கு ஆதரித்துள்ளது என்பது ஓர் வரலாற்று விசித்திரமாகும். வளர்ச்சி குறைந்த நாடுகளின் அபிவிருத்திக்கு வேண்டிய

நிதியினை வழங்கும் வேலையை அவ்வமைப்பு மேற்கொண்டது. இப் பகுதியில் வரக்கூடிய நாடுகளின் அட்டவணையையும் அது தயாரித்தது. 'வருமான உற்பத்தி உடையதாக இருக்கிறதோ இல்லையோ, அல்லது நேரடியாக ஆக்கத்திறனைப் பெருக்குகிறதோ இல்லையோ, குறிப்பிட்ட பகுதியின் அல்லது பகுதிகளின் வளர்ச்சிக்கு முக்கியமாக உதவும் எந்தத் திட்டத்திற்கும் வேண்டிய நிதியினைப் பன்னாட்டு வளர்ச்சி சங்கம் வழங்கவேண்டும். (கொட்டை எழுத்துகள் என்னுடையவை). பொருளாதார—சமூக கவுன்சிலின் 29ஆம் கூட்டத்தில் இந்த ஆலோசனை பற்றி உலக பாங்கின் செல்வாக்கு நிறைந்த தலைவராம் திரு யூஜின் ஆர். பிளாக் (Mr. Eugene R. Black) தம்முடைய கருத்தினைத் தெரிவித்து, பன்னாட்டு வளர்ச்சி சங்கம் அமைப்பதையும், பன்னாட்டு நிதியாக்கத்தின் அதன் பங்கினையும் நியாயமென ஆதரித்துப் பின்வருமாறு மொழிந்தார்: 'வழக்கமான கடன் விதிகளின் அடிப்படையில், விரும்பத்தக்க வளர்ச்சி வீதத்திற்கு வேண்டிய நிதியினைத் திரட்டும் நிலையில் பல நாடுகள் இல்லை; ஏனெனில், இந் நாடுகள் மிகவும் ஏழ்மை நிறைந்த நாடுகள். வழக்கமான விதிகளின் அடிப்படையில் நீலையான அன்னிய கடனை வட்டியுடன் திரும்பவும் செலுத்தும் திறமையைவிட வெளிநாட்டு மூலதனத்தை ஈர்க்கின்ற வல்லமையினை அதிகமாகப் பெறுவதற்குரிய விரைந்த அபிவிருத்தி முயற்சியினை வேறு பல நாடுகள் பெற்றுள்ளன.' (தடித்த எழுத்துகள் என்னுடையவை).

பயனடையவிருக்கும் வளர்ச்சி குறைந்த நாடுகளையும் சேர்த்து, உறுப்பினர் நாடுகளனைத்தும் செலுத்தும் கட்டணமாகிய ஒரு பில்லியன் டாலர்களைக்கொண்டு பன்னாட்டு வளர்ச்சி சங்கம் தன் பணிகளைத் துவங்கும். கடன் வழங்கும் ஏனைய ஏஜென்சிகளுடன் இச் சங்கம் போட்டியிடாது. ஏனைய ஏஜென்சிகள் கடன் வழங்காதபோது அல்லது கடன் வழங்க இயலாதபோதுமட்டும் இச் சங்கம் கடனளிக்க முன்வரும். தகுந்த விதிகளின் அடிப்படையிலேயே இச் சங்கம் கடன்கள் அளிக்க முன்வரும். பல வழிகளில் நிதியினை அளிக்க இச் சங்கத்திற்கு அனுமதியுண்டு. உதாரணமாக, தாராளமான விதிகளின் அடிப்படையில் கடனைத் திருப்பித்தர இச் சங்கம் வசதியளிக்கும் (நீண்டகால முதிர்ச்சிக்குப் பின்னர் அன்னியச் செலாவணியில் கடன்களைத் திரும்ப அடைக்கலாம்; அல்லது நீண்ட கால சலுகைக்குப் பின்னர் கடன்களைத் திரும்ப அடைக்கலாம்; அல்லது நீண்டகால சலுகையையும் நீண்ட கால முதிர்ச்சியினையும் பெற்றுக் கடன்களைத் திரும்பவும்

அடைக்கலாம் ; அல்லது சொந்த உள்நாட்டு நாணயத்திலேயே கடன்களை முழுதும் அல்லது பகுதி பகுதியாகவும் அடைக் கலாம்). வட்டியில்லாக் கடனையோ அல்லது குறைந்த வட்டிக்குக் கடனையோ அல்லது இரண்டும் கலந்த கடனையோ வழங்க சங்கம் முயலும். உறுப்பினர் அல்லது உறுப்பினர் களின் அரசியல் தன்மை இச் சங்கத்தினைக் கட்டுப்படுத்தாது என்றும், தான் எடுக்கும் முடிவுகளுக்குப் பொருளாதார காரணங்களே ஆதாரம் என்றும் சிறப்பாகச் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளது. தன்னிடமுள்ள மூலவளங்கள் போதுமானவை களா என்பதனை இச் சங்கம் எப்பொழுதும் கவனத்தில் வைத்துக்கொள்ளும். நிதி நிலைமைபற்றிய முதல் பரிசீலனையை இச் சங்கம் முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் மேற்கொள்ளும். எந்த நேரத்திலும் கட்டணத்தில் பொது அதிகரிப்புகளையோ அல்லது தனித்த அதிகரிப்புகளையோ ஏற்படுத்தும் அதி காரத்தை வழங்கும் விதியும் உள்ளது. இச் சங்கம் உலக யாங்கின் உறுப்பாக அதன் நிருவாகத்தின்கீழ் இயங்கும். இருந்தபோதிலும், தன்னுடைய வேலைகளுக்குத் தேவைப் படும் கூடுதலான பணியாளர்களை நியமிக்க இச் சங்கத்திற்கு உரிமை உண்டு.

உலக பாங்கின் அனுபவத்தையும் நிதானத்தையும் இப் புதிய சங்கம் பெறுவதற்கும், அதே வேளையில் பாங்கிற்கு உள்ள அதிகாரத்தைவிட இன்னும் தாராள முறையில் இயங் கவும் இச் சங்கத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பதே இக் கருத்திலுள்ள உள்நோக்கமாகும். ஆனால், இக் கருத்தானது வழக்கத்திற்கு மாறானது என்றும், பொருளாதார அடிப் படையைவிட கொடையாளித்தன்மையுள்ள அடிப்படையே இக் கருத்தில் தொக்கி நிற்கிறது என்றும் சிலர் எண்ணலாம். பொருளாதார—சமூக கவுன்சிலில் திரு. பிளாக் குறிப்பிட்டது போல, இச் சங்கமானது இரக்க உணர்வுடன் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளுதலும் உதவுதலும் ஆகிய பெண்மைக்குரிய நெறிகளைப்பெற்று, தனது மூத்த சகோதரியைவிட தாராள மான விதிகளின் அடிப்படையில் பணிகளாற்றும்பொழுது, ‘தனது பொறுப்பில் விடப்பட்டுள்ள நிதிகளை முதலீடு செய்யும் பொழுது, தரத்தில் கூர்மையான கண்வைத்து, மனச்சான் றுள்ள நிருவாக அதிகாரிபோல இச் சங்கம் இயங்கவேண்டும்.’ இவ்வாறு தாம் எதிர்பார்ப்பதாக திரு. பிளாக் குறிப்பிட்டார். கடன் பெறும் நாட்டின் அயல்நாட்டுக் கொடுப்பல் நிலையில் பெருஞ் சுமை ஏற்படாத வகையில், இச் சங்கம் தாராளக் கடன்களை (soft loans) அளிப்பதைத் திரு. பிளாக் ஏற்றுக்

கொண்ட அதே வேளையில், இச் சங்கம் தாராள கடனீவோராக மாறிவிடக்கூடாது என்று எச்சரித்தார். உலக பாங்கு அளித்ததைவிட எண்ணிக்கையில் அதிகமான திட்டங்களுக்கு இச் சங்கம் நிதியுதவி செய்யும். ஆனால், அதே வேளையில் நாங்கள் நிதி வழங்கும் திட்டங்களின் உள்ளார்ந்த சிறப்புகளையும் தகுதிகளையும், நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்களின் நிறைவான முழுமையையும் அளக்கின்ற அளவு முறைகளைக் குறைத்திட நாங்கள் விரும்பவில்லை. எங்களுடைய உதவியினை உறுப்பினர் நாடுகள் பெறுவதற்குரிய முக்கியத் தகுதியாகிய உள்நாட்டுச் சாதனைகளையும் கவனிப்பதிலிருந்து பின்வாங்கமாட்டோம்.

நான் 1949ஆம் ஆண்டில் ஐ.நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்பு ஏற்படுத்துவதுபற்றிக் குறிப்பிட்டு எதிர்பார்த்தவைகளை எல்லாம் பன்னாட்டு வளர்ச்சி சங்கம் நிறைவேற்றவில்லை என்பது உண்மைதான். ஆனால், பேராசையுடன் நடந்துகொள்வது பிரயோசனமில்லை. ஒரு கருத்தைப் பொறுத்தவரையிலும்கூடப் பேராசையுடன் இருப்பதில் பலனில்லை. பொருளாதார வளர்ச்சி வரலாற்றில் பன்னாட்டு வளர்ச்சி சங்கம் அமைந்ததானது ஒரு பெரு நிகழ்ச்சியாகும். வளர்ச்சி குறைந்த உலகின் பொருளாதார அபிவிருத்தி வீதத்தைப் பெருக்க, இச் சங்கம் பெருந் துணை புரியும் என்று நான் கருதுகிறேன். இக்கட்டுரையின் இறுதியில் நான் குறிப்பிட்டுள்ளதுபோல, பொருளாதார வளர்ச்சியையும், நமது ஓர் உலகத்தினை இருவேறு பகுதிகளாகப் பிரித்து வைத்துள்ள தலைவீத வருமான வேற்றுமைகளையும், வாழ்க்கைத்தர வேற்றுமைகளையும் குறைத்திடும் இன்றியமையாத கருவியாகப் பன்னாட்டு வளர்ச்சி சங்கத்தை நான் நோக்குவேன்; வளர்ச்சி குறைந்த உலகின் மிகப்பெருந் தேவைகளைப் பூர்த்தி செய்யும் காரியத்திற்காகச் சீர்திருத்தப் பெற்ற, புத்தூக்கம் அளிக்கப்பெற்ற அமைப்பாக இச் சங்கம் அமைவதனை நான் நோக்குவேன்.

சமீப கால ஆண்டுகளில், பொருளாதார வளர்ச்சிக்குப் பன்னாட்டுதவியளிக்க இன்னும் இரண்டு உலக ஏஜென்சிகள் நிறுவப்பெற்றுள்ளன. ஒன்று, 'பொருளாதார வளர்ச்சிக்கான தனித்த ஐக்கிய நாடுகள் சபையின் நிதி அமைப்பு' (Special United Nations Fund for Economic Development) ஆகும்; இதனைச் சுருக்கமாக (SUNFED) என்பர். பொருளாதார வளர்ச்சிபற்றிய துணைக் கமிஷனின் அறிக்கையிலும், அவ்வறிக்கையில் ஐ.நா. சபையின் பொருளாதார வளர்ச்சி

பற்றிய நிருவாக அமைப்பினை நிறுவுவதுபற்றிக் கண்டுள்ள ஆலோசனையிலும் தன்னுடைய பரம்பரை மூலம் உள்ளது என்று தன்னறிவுடன் இப் புதிய அமைப்பு (SUNFED) உணர்ந்துள்ளது. இவ்வமைப்பு அளவான பட்ஜெட்டினை உடையது; ஆனால், இதன் நெஞ்சம் உறுதியானது. இதனைத் தலைமை தாங்குபவர் புகழும் பெருந்தன்மையும் நிறைந்த ஓர் அமெரிக்கர் ஆவார். இப் புதிய அமைப்பின் அளவான பட்ஜெட்டினால் தோன்றுவதைவிட அதிகமான சாதனைகள் புரியும் வாய்ப்பும் இப் புது அமைப்பிற்கோர் மதிப்பும் அந்த அமெரிக்கரின் தொடர்பினால் ஏற்பட்டதாகும். இவ்வமைப்பு, அவசியமான, 'முன் முதலீடு' வேலைக்கே (pre-investment work) பிரதானமாக மானியங்கள் அளிக்கும் வேலையை மேற் கொண்டுள்ளது. இக் குறிக்கோளுடன் மூன்று முக்கியத் துறைகளை இவ்வமைப்பு எடுத்துக்கொண்டது; அதாவது, அளவாய்வுகளும் (surveys) சாத்தியமானவைபற்றிய ஆய்வு களும் (feasibility studies), பிரயோக ஆராய்ச்சி (applied research), மனிதவாற்றல் பயிற்சியும் (manpower training), தொழில் நுட்பக் கல்வியும் ஆகிய மூன்று துறைகளையும் எடுத்துக்கொண்டது. எழுபத்து நான்கு நாடுகள் அளித்த 63 மில்லியன் டாலர்களைக் கொண்டு இவ்வமைப்பு பணி யாற்றத் துவங்கிவிட்டது; மொத்தத்தில் 135 மில்லியன் டாலர்களைச் செலவழிக்கவேண்டிய அநேக திட்டங்களையும் ஏற்றுக்கொண்டது. இத் தொகையில் (SUNFED) 55 மில்லியன் டாலர்களை அளிக்கும். இத் திட்டங்கள் எந்தப் பிரதேசங்களி லுள்ள அரசுகளின் வேண்டுகோளுக்கிணங்க ஏற்றுக்கொள்ளப் பெற்றனவோ, அப் பிரதேச அரசுகள் எஞ்சியுள்ள தொகையை அளிக்கும். ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பெற்ற திட்டங்களை வரிசைப்படுத்திக் காட்ட நான் விரும்புகிறேன். பல்கலைக் கழக மட்டத்திலும், பல்துறைப் பயிற்சி மட்டத் திலும், மேற்பார்வை மட்டத்திலும் மேற்கொள்ளப்பெற்ற தொழில் நுட்பக் கல்வி ஆய்வுகள், நீர்ப்பாசனம், மின்னியக்க மதிப்பீடுகள், விவசாயம், கால்நடை, மண் வளம்பற்றிய மதிப் பீடுகள், மண்ணால் பற்றிய மதிப்பீடுகள், வானிலை ஆராய்ச்சித் துறை முதலானவைபற்றிய அளவாய்வுகளும் சாத்திய மானவைபற்றிய ஆய்வுகளும், தொழில் துறை ஆராய்ச்சி நிலையம் அமைத்தல் ஆகிய திட்டங்கள் அனைத்தும் மேற்கொள் ளப்பட்டன. இத் திட்டங்களுக்கு (SUNFED) அளித்த தொகையில் 80 சதவீதம் நிபுணர்களையும் உபகரணத்தையும் சாரும். உண்மையான பொருளாதாரக் கட்டுள்ள பெருமித மான, மிக மதிப்புள்ள திட்டங்களை நோக்கும்பொழுது, மேலே

குறிப்பிட்டுள்ளது சோர்வூட்டுவதாகவும் எழுச்சியற்றதாகவும் தோன்றுகிறது. என்றாலும், பொருளாதார வளர்ச்சியின் எந்தப் பெருந் திட்டங்களுக்கும் மேலே குறித்துள்ளது முக்கியமான, அவசியமான பீடிகையாக இருக்கிறது. பெரு மூல வளங்களையும் பெருமிதமான இலட்சியங்களையும், ஆனால் நிருவாகத்தில் குறைந்த அனுபவத்தையும், இன்னும் எண்ணிக்கையில் குறைந்த நுட்பத் தொழில் வல்லுநர்களையும் கொண்ட புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகளுக்கு இது குறிப்பாக முக்கியத்துவம் உடையதாகும். இவ்வாறாக (SUNFED) பன்னாட்டு வளர்ச்சி சங்கத்திற்கு இன்றியமையாத பக்கத் துணையாக உள்ளது. வளர்ச்சி குறைந்த உலகின் மனித மூல வளங்களையும், மனிதவினம் சாராத மூல வளங்களையும் வளர்ச்சியுறச் செய்யும் பன்னாட்டு நடவடிக்கைகளின் புதிய அடிப்படையை, (SUNFED) பன்னாட்டு வளர்ச்சி சங்கத்துடன் சேர்ந்து வழங்குதல் வேண்டும்.

பன்னாட்டு நிதிக் கார்ப்பரேஷன் (International Finance Corporation—IFC) புதிதாக நிறுவப்பெற்ற மற்றோர் உலக அமைப்பாகும். உறுப்பினர் நாடுகளிலுள்ள தனியார் துறையினை வளர்ப்பதே இந்தக் கார்ப்பரேஷனின் நோக்கமாகும். உலக பாங்குடன் கார்ப்பரேஷன் நெருங்கி வேலை செய்கிறது; ஆனால், தனி நிருவாகம் உடையது. இக் கார்ப்பரேஷனில் செலுத்திய கட்டணம் 93·7 மில்லியன் டாலர்கள் கொண்ட முதலாகும். 1959ஆம் ஆண்டு, செப்டம்பர் 30 முடிய, கார்ப்பரேஷன் 25 மில்லியன் டாலர்களை முதலீடு செய்துள்ளது. இக் கார்ப்பரேஷன் முக்கியமாக முதலீடு செய்யும் அமைப்பேயன்றி கடனளிக்கும் அமைப்பன்று. எனவே, இதன் முதலீடுகள், வழக்கமான நிலையான வட்டிக்கு அளிக்கப்படும் கடன்களல்ல. ஆனால் இதன் முதலீடுகளில் கடன் அம்சமும் ஈக்விட்டி (equity) அம்சமும் இணைந்துள்ளன. ஆக, இம் முதலீடுகளில் துணிவு மூலதனக் கூறுகள் (Elements of Venture Capital) உள்ளன. இவை நீண்ட காலக் கடன்களாகும்; இக் கடன்களுக்கு வட்டியும், வியாபார வளர்ச்சியில் பங்கும், இலாபங்களில் பங்கும் பெறுகின்ற உரிமையும் உண்டு. இத்தகைய பங்குகள், வருமானங்களிலிருந்து ஓரளவு கூடுதலான தொகையைப் பெறும் உரிமையைச் சார்ந்ததாக இருக்கலாம்; அல்லது பங்கு மூலதனத்திற்குக் கட்டணம் செலுத்தும் உரிமையைச் சார்ந்ததாக இருக்கலாம்; அல்லது இவையிரண்டும் கலந்த ஒன்றினைச் சார்ந்ததாக இருக்கலாம். கார்ப்பரேஷன், மாற்றும் உரிமையினையும் தேர்வு

உரிமையினையும் பயன்படுத்த முடியாது; ஆனால், இப் பங்குகளைத் தனியார் துறை சார்ந்த முதலீடு செய்வோருக்கு விற்க முடியும். முதலீட்டின் விதிகளனைத்தும் ஒவ்வொன்றின் சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு பேரம் செய்வதைப் பொறுத்ததாகும். தொழில்கள் முதிர்ச்சி அடைய அடைய, தனது முதலீடுகளை விற்பதன்மூலம், தனது முதலீட்டுப் பட்டியலை (portfolio) கார்ப்பரேஷன் மாற்றிவிடுகிறது. 1959ஆம் ஆண்டு, செப்டம்பர் 30 முடிய கார்ப்பரேஷன் 13 நாடுகளில் 28 திட்டங்களை ஏற்றுக்கொண்டது; இவற்றில் பெரும் பங்கினை பிரேசில், சிலி, இந்தியா, பாகிஸ்தான், மெக்சிகோ ஆகிய நாடுகள் பெற்றன.

பன்னாட்டுத் துறையில் இந்தக் கார்ப்பரேஷன் ஒரு புதிய முயற்சியாகும். ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளின் தேசிய பொருளாதார அமைப்புகளில் நிலவிய முதலீட்டு பாங்கு அல்லது அபிவிருத்தி பாங்கு போன்ற ஒன்றே இந்தக் கார்ப்பரேஷனும். பொருளாதார அபிவிருத்திப் பிரச்சினையில் கார்ப்பரேஷன் ஒரு பெரு விளைவினை உண்டாக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், வளர்ச்சி குறைந்த நாடுகளின் தொழிற்றுறையில் வளர்ச்சியுற்ற நாடுகளின் தனியார் துறை சார்ந்த முதலீடு செய்வோர் கூடுதலான நாட்டம் செலுத்தும் விளைவினைக் கார்ப்பரேஷன் உண்டாக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை. சரியான உளவியல் சார்ந்த சூழ்நிலையை உண்டாக்குவதன்மூலம், இதுவரையில் நிகழ்ந்ததைவிட ஆசியாவிலும் ஆஃப்ரிக்காவிலும் உள்நாட்டு விருப்பத்திற்குத் துணையாக இயந்திர உற்பத்தித் தொழிற்றுறைக்குத் தனியார் மூலதனம் கூடுதலாகக் கிடைக்கும் விளைவினைக் கார்ப்பரேஷன் உண்டாக்கலாம். ஆகவே, பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் பன்னாட்டுக் கருவிக்கூடத்தில் இது ஒரு பயனுள்ள சேர்ப்பு என்பது தெளிவே.

நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தின் இறுதிக்கட்டத்தை இப்பொழுது அணுகுகிறோம். கடந்த பத்தாண்டுகளில், பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய பன்னாட்டு உதவிபற்றிய தேச ரீதியான, உலக ரீதியான சிந்தனையில் பெருமளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது; இப் பத்தாண்டுகளில் உதவியும் கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது. இதில் எள்ளளவும் சந்தேகமில்லை. கடந்த பத்தாண்டுகளில், ஆசியா, ஆஃப்ரிக்கா, இலத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களின் பொருளாதார வளர்ச்சியில் பன்னாட்டுதவி கணிசமான அளவிற்குப் பங்கு

பெற்றுள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், முன்னேற்றத்தில் விரைவு இல்லை; நிலைமைக்குத் தக்க தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்கும் முன்னேற்றம் போதுமானதாகவில்லை. கம்யூனிச உலகிலுள்ள வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, கம்யூனிசம் சாராத உலகிலுள்ள வளர்ச்சிகுறைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வீதங்கள் வேதனையூட்டும் அளவிற்குக் குறைந்துள்ளன. பதினைந்து ஆண்டுகளில் குறைந்தபட்சம் 250 டாலர்கள்கொண்ட தலா வருமானத்தை அடைகின்ற குறைந்தபட்ச இலக்கினைக் கொண்டு நோக்கும்பொழுது, இவ் வளர்ச்சி வீதங்கள் முழு அளவுகளிலும்கூட மெதுவாக ஊர்ந்துசெல்லும் தன்மை உடையனவாகவே உள்ளன. வளர்ச்சியுற்ற நாடுகளின் மிக உயர்ந்த வளர்ச்சி வீதத்தினை நோக்கும்பொழுது, வளர்ச்சி குறைந்த நாடுகளின் வளர்ச்சி வீதங்கள் உண்மையில் மிகவும் குறைவாகவே உள்ளன. இவ்வாறாக, ஏழ்மை நிறைந்த நாடுகளை மற்ற நாடுகளிலிருந்து பிரிக்கின்ற வருமான இடைவெளி, சீராகவும் துன்பத்தைத் தரும் முறையிலும் விரிந்துகொண்டே செல்கிறது. அதேவேளையில், வளர்ச்சியுற்ற நாடுகளின் சிந்தனையைக் கெடுபிடிப்போரினால் ஏற்பட்ட பனித்திரை இன்னும் மூடி மறைத்துள்ளதாகவே தோன்றுகிறது. தேசப் பாதுகாப்பு, அயல்நாட்டுக் கொள்கைகள் ஆகியவற்றின் புறஒட்டாகவே பொருளாதார அபிவிருத்தி உதவியானது தொடர்ந்து உள்ளது. பொருளாதார வளர்ச்சித் துறையில், அண்மைக் காலத்தில் நிறுவப்பெற்ற அல்லது இயங்கிக்கொண்டிருக்கின்ற உண்மையான பன்னாட்டு ஏஜென்சிகளிடத்தில் குறைவான நிதிகள்மட்டுமே உள்ளன. வளர்ச்சி குறைந்த நாடுகள் உரமற்ற முறையில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. தொழில் நுட்ப வளர்ச்சியையும் முதல் குவிப்பையும் உடைய விரைந்து செல்லும் இவ்வுலகில், வளர்ச்சி குறைந்த நாடுகளின் மக்கள் பின்தங்கிவிடாது இருக்கவேண்டுமெனில், இந் நாடுகள் எதனைக் குறிக்கோளாகக் கொள்ளவேண்டுமோ அதற்கும் குறைவான உற்பத்தி இலக்குகளையும் தலா வருமான அதிகரிப்பு இலக்குகளையும் இட்டுக்கொண்டுள்ளன. காலமும் தொடர் வட்டியும் வளர்ச்சி குறைந்த உலகிற்கு எதிராக வேலை செய்கின்றன. இவற்றுடன் வளர்ச்சியுற்ற உலகில் தொடர் வட்டியின் தீய முன்னேற்றத்தைத் தொடர்ந்து, விஞ்ஞானத்திலும் தொழில் நுண்ணியலிலும் ஏற்பட்டுள்ள உள்கட்டுடைய முன்னேற்றமும் வளர்ச்சி குறைந்த உலகிற்கு எதிராக வேலைசெய்கின்றன. செழிப்பின் காரணமாக எழுகின்ற பிரச்சினைகளுடன் வளர்ச்சியுற்ற உலகின் சில பகுதிகள் போராடிக்

கொண்டிருக்கின்றன. இந் நாடுகளைச் சுற்றிலும் பெரும் வறுமைப் பாலைவனங்களும், குறைந்த வாழ்க்கைத்தரப் பாலை வனங்களும், பொருளாதாரப் பிரச்சினையின் வருத்தமூட்டும் கொடுங்கோன்மையும் நிலவுகின்றன.

இன்றைய சூழ்நிலை நெருக்கடி நிறைந்து, நிலையற்றதாக உள்ளது. உலக சமாதானத்தைக் கெடுபிடிப்போர் இதுவரை யில் பாதித்ததைவிட அதிகமாகவே இன்றைய சூழ்நிலையை பாதிக்கிறது. இயற்கையான பாலைவன உலகில் தீங்கேது மின்றிச் சோலைகள் அமையலாம். ஆனால், வறுமையும் குறை வான வாழ்க்கைத்தரமும் உள்ள பெருமளவு மக்கள் வாழும் உலகில், செழிப்பும் கொழிப்பும் உள்ள சிறு அளவு மக்கள் வாழும் பகுதிகளுக்குப் பாதுகாப்புக் கிடையாது. இதுகுறித்து எனக்கு ஐயமில்லை. அண்மைக்காலத்தில் உற்பத்தித் துறை யிலும் போக்குவரத்து, செய்திப் போக்குவரத்துத் துறை களிலும் ஏற்பட்ட முன்னேற்றங்கள், மக்கள் சமத்துவம், மனித கௌரவம், வாய்ப்புகளில் சமத்துவம் கோரும் மனித உரிமை பற்றிய கருத்துகளை விடாது பரப்புதல் முதலான பணிகளை உலகப் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாத நடப்புத் தேசிய, அரசியல் கட்டமைவுக ளுடன் இணைத்துப் பார்க்கும்பொழுது, இக் கட்டமைவுகள் ஒன்றுக்கும் உதவாதன என்ற உணர்வே எனக்கு ஏற்படுகிறது. தடைப்பட்டுள்ள வளர்ச்சிப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும், வருமானம், துய்ப்பு ஆகியவற்றின் தேசிய மட்டங்களிலுள்ள விரிந்துசெல்லும்பிளவினைத் தடுத்து நிறுத்தவும் தேசிய எல்லைக் கோடுகளுக்குள்ளேயே வழிகள் கண்டுபிடிக்க முடியாதெனில், தேசிய எல்லைக்கோடுகள் ஒழியட்டும்; ஆனால், உற்பத்தி, விஞ்ஞானம், தொழில் நுண்ணியல் ஆகிய சக்திகளின் முன் னேற்றம் அழிந்துவிடக்கூடாது. கீன்ஸ் அவர்கள் ‘வாழ்க்கை, மனித உறவுகள், படைப்பு, நடத்தை, சமயம் முதலான பிரச்சினைகள்’ குறித்து நமது பேரக் குழந்தைகளின் நல்வாழ் விற்காகத் தமது பொருளாதாரத்தில் கனவு கண்டதுபோல, உற்பத்தியும், விஞ்ஞானமும், தொழில் நுண்ணியலும் மனித குலமனைத்திற்கும் பொருளாதாரப் பிரச்சினையை இரண்டாவது விஷயமாக்கி, மனிதகுலத்தை விடுவித்து, அவை தங்களுடைய வரலாற்றுச் சிறப்பான ஊழினை—கடமையை நிறைவேற்ற வேண்டும். தேசிய இராச்சியங்கள் (Nation States) நிறைந்த இவ் வுலகு இப் பிரச்சினையைப் பன்னாட்டு ரீதியாகத் தீர்க்க முடியவில்லையெனில், தேசிய இராச்சியம் அழியட்டும்; உலக அரசு அமையட்டும். ஆனால், நாம் அனைவரும் தேசிய அரசு

களில் வாழ்கின்றோம்; தேசிய எல்லைக்கோடுகள் நமது வாழ்க்கையிலும் சிந்தனையிலும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளன என்பதனை நாம் உணருகிறோம்; எனினும் அதேநேரத்தில், பல்வேறு நாடுகளில் நிலவும் வாழ்க்கையில் காணும் வேறுபாடுகளும், பல்வேறு வகைகளும், தனித்தன்மைகளும் நம்மைக் கவருகின்றன; ஆகவே, இப் பிரச்சினைக்குப் பன்னாட்டு ரீதியான தீர்வினைக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் கொள்ள வேண்டும். தேசியத் தீர்வுகள் பயனளிக்கமாட்டா. தேசிய வேறுபாடுகளின், பல்வகைத்தாய நிலைகளின் உயர்வையும், உரிமையையும் உலகரீதியான தீர்வு ஒழித்துவிடும் என்று அஞ்சுகிறோம். உதவிகளனைத்தையும் பன்னாட்டுமயமாக்கி, பன்னாட்டு வளர்ச்சி சங்கம் போன்ற ஓர் அமைப்பினிடத்தில் பன்னாட்டு உதவியினை வழங்கும் பொறுப்பினை ஒப்படைத்தலே இதற்கு விடையாகும் என்று நான் நம்புகிறேன். இவ் அமைப்பு இப்பொழுதுள்ள நிலையில் இப் பெரு வேலையினை ஏற்றுக் கொள்ள முடியாது என்றே நான் கருதுகிறேன்; குறிப்பாக, உலக பாங்கின் கிளையாக இருந்துகொண்டு, ஒரு மாதிரியான வாக்குரிமை உரிமைகளின் கட்டமைவினைப் பெற்ற நிலையில், மேலும் சோவியத் யூனியனையும் கம்யூனிஸ்ட் சைனாவையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளாத நிலையில், இவ் அமைப்பானது பெரு வேலையினை ஏற்றுக்கொள்ள முடியாது என்றே கருதுகிறேன். மேலும், அதனிடம் தற்பொழுதுள்ள குறைந்த நிதிகளைக்கொண்டு பெருமளவில் இவ்வமைப்பினால் இயங்கவும் முடியாது. எனவே, 1952ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தில் நான் எழுதிய 'பன்னாட்டு வளர்ச்சி நிருவாக அமைப்பு' என்ற கட்டுரையில் கண்டுள்ளது போல, இவ் அமைப்புப்பற்றிய திருத்தத்தை நான் வழங்கினேன். இக் கட்டுரையின் ஒரு பிரதி, ஐ.நா. சபையின் தலைமை அலுவலகத்தின் பொருளாதாரப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப் பட்டது. நான் குறிப்பிட்டுள்ள திருத்தத்தினை ஏற்றுக் கொண்டால், முழு நன்னம்பிக்கையுடனும் ஒத்துழைப்புடனும் இப் புது அமைப்பினை ஏற்படுத்தினால், பொருளாதார வளர்ச்சிக்குரிய பன்னாட்டுதவி ஒரு புதுத் திருப்பத்தினை அடையும்; பொருளாதாரப் பிரச்சினையை உலகரீதியாக வெற்றியுடன் சமாளிக்கும் வகையில் உலகம் முன்னேறிச் செல்லும்; உலகின் ஒரு பகுதிக்காகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்திற்காகவோ மட்டுமன்றி, உலகின் பகுதிகளனைத்திற்கும், மக்கள் அனைவருக்கும், சுருக்கமாக மனித இனத்திற்கே பயனளிக்கும் வகையில் பொருளாதாரப் பிரச்சினையை வெற்றியுடன் இவ்வுலகு சமாளிக்கும்.

இதுவரையில் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய பன்னாட்டுதவியின் குறைபாடுகளைப்பற்றி நான் ஒன்றும் உரைக்கவில்லை. முழுதும் தற்செயலாக நான் அவற்றை விட்டு விடவில்லை. ஏனென்றால், நான் குறிப்பிட்ட முறையில் பன்னாட்டுதவியினை நிறுவினால், நான் குறிப்பிட்டுள்ள தத்துவ முறையில் உளவியல் முறையில் அதன் பின்னணியை அமைத்தால், அதன் குறைபாடுகள் இயல்பாகவே நீங்கிவிடும்.

இத்தகைய குறைபாடுகள் யாவை? இவற்றைக் கீழ்க் கண்டவாறு சுருக்கமாக விளக்குகின்றேன்.

(i) மூலவளங்கள் (வளச் சாதனங்கள்) சார்ந்த குறைபாடுகள்.

(ii) திரும்பவும் செலுத்தும் வல்லமையினால் ஏற்பட்ட கட்டுப்பாடுகள்.

(iii) ஈர்க்கும் வல்லமையினால் ஏற்பட்ட கட்டுப்பாடுகள்.

(iv) உதவிபெறும் நாடுகள் தற்சார்பினை விட்டுவிட்டுப் பிறரை முழுதும் சார்ந்திருக்கும் அளவிற்கு நன்னெறி குன்றும் வாய்ப்புகள்.

கடைசி இனத்தை முதலில் எடுத்துக்கொள்கிறேன். ஏனெனில், அதுதான் எல்லாவற்றிலும் முக்கியமானது. உதவி அளிக்கும் நாடும் உதவி பெறும் நாடும் துணிவுள்ள மிகப் பெரு முயற்சி எடுத்துத்தான் கடைசி இனம் உண்மை நிலையாக மாறுவதைத் தடுக்கவேண்டும்; முக்கியமாக, உதவி பெறும் நாடுதான் இம் முயற்சியினை மேற்கொள்ளவேண்டும். ஓரளவிற்கு நான் குறிப்பிட்டுள்ள முறையே இந்த ஆபத்தினைத் தடுக்கும். அதாவது, உதவிபெறும் நாடு, செலவில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளவேண்டும் என நிபந்தனையிட்டுள்ள பன்னாட்டு உதவி முறையானது, இவ் ஆபத்தினைத் தடுக்கும். உதவிபெறும் நாட்டின் நிதியம் சார்ந்த அளவுகளில் அல்லாது, அதன் நடவடிக்கை, போக்கு சார்ந்த அளவுகளிலேயே இந்த நிபந்தனையை விளக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, வீணுக்கு தலைத் தவிர்த்தல்; பகட்டுள்ள துய்ப்பினைத் துணிவுடன் நிராகரித்தல்; பொதுத் துறையாயினும் சரியே, தனியார் துறையாயினும் சரியே ஆடம்பரமான துய்ப்பினை உறுதியுடன் மறுத்தல்; பொருளாதார ரீதியாக முன்னேறும் சமூகத்திற்குத் தேவைப்படும் 15 முதல் 20 சதவீதம் அளவிற்கு, தக்க கட்டங்களில், உள்நாட்டுச் சேமிப்பு வீதத்தை உயர்த்துதல்; எண்ணிக்கையிலும் தரத்திலும் உள்நாட்டுத் தொழிலாளரின் உள்ளிடுகையினை உச்சநிலைக்கு உயர்த்துதல்—இத்தகைய நிபந்தனைகளை உதவி ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக உதவிபெறும்

நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நிபந்தனைகளை எவ்வாறு செயற்படுத்துவது, இன்னும் சேர்க்கவேண்டிய கூடுதலான இனங்கள் யாவை என்பனபோன்ற கேள்விகளை ஆராய, நிபுணத்துவம் உள்ள பன்னாட்டு ஆராய்ச்சி முறையும் ஒப்புதலும் தேவையாகும். எனவே, பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய உதவியினைத் திறமையுடன் முழுதும் பயன் படுத்துவதற்காக மாத்திரமன்றி, அவ் வளர்ச்சிக்கு வேண்டிய தற்சார்பு உளவியலை ஊக்குவிப்பதற்காகவும் இறுதியில் தன் சொந்த காலிலேயே ஊன்றி நிற்பதை ஊக்குவிப்பதற்காகவும் வளர்ச்சி குறைந்த நாடுகள் மேற்கொள்ளவேண்டிய தேவையான, சாத்தியமான நடவடிக்கைகளைப்பற்றிய பிரச்சினையை ஆராயப் பன்னாட்டுக்கமிஷன் ஒன்றனை நிறுவவேண்டுமென நான் குறிப்பிடுவேன். இதனைப் பொறுத்தவரையில், உள் நாட்டையும் உலகினையும் சார்ந்த பொதுமக்கள் அபிப் பிராயமே நடைமுறைக்கேற்ற அனுமதியாகும் என்பதும் எனக்குத் தெளிவாகத் தெரியும். மதிப்பீடு செய்தலுக்கும் பொதுமக்கள் கருத்துப்பற்றிய அறிக்கை வெளியிடுதலுக்கும் நடுநிலை பிறழாத, சுதந்தரப் பன்னாட்டு அமைப்பு இருப்பின், தேசியப் பொருளாதார சாதனையின் வீச்சு, இயல்புபற்றிய அவசியமான பொதுமக்கள் கருத்தினை உண்டாக்குதலும், தேச ஒழுக்கத்திலும் பண்பாட்டின்மீது அது உண்டாக்கும் விளைவும் எளிதாகிவிடும். எனவே, ஏதோ ஒருவகையான பன்னாட்டுப் பொருளாதார உயர்முறை மன்றத்தினை ஏற்படுத்தி, அம் மன்றத்திற்குத் தனித்திறமை, நுட்பத்திறன், எதனையும் புரிந்துகொள்ளும் ஆற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் உதவிபுரியும் நாடுகள், உதவிபெறும் நாடுகள் ஆகியவற்றினைச் சார்ந்தோரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென நான் குறிப் பிடுவேன். இவ்வாறு தேர்ந்தெடுத்து நியமிக்கப்பட்டவர்கள், தங்களுடைய அரசாங்கங்களின் பிரதிநிதிகளாக நடந்து கொள்ளக்கூடாது. இத்தகைய பன்னாட்டுப் பொருளாதார உயர்முறை மன்றத்தை நிறுவி, அதன் அறிக்கைகளை நாட்டுப் பாராளுமன்றங்களிலும் பன்னாட்டுச் சபைகளிலும் விவாதித்தால், உதவிபெறும் வளர்ச்சி குறைந்த நாடுகள் பிறரையே எப்பொழுதும் சார்ந்திருக்கும் உளவியலையும் பழக்கத்தையும் பன்னாட்டு உதவியானது ஏற்படுத்துவதைத் தடுக்கும் என்று நான் நம்புகிறேன். மற்ற அரசுகளிடமிருந்தும் அரசுகளுக் கிடையேயுள்ள நிறுவனங்களிடமிருந்தும் மதிப்பீடு செய்தலும் அல்லது வழிகாட்டுதலும் உபதேச உரைகள் வருவதைவிடப் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து வழிகாட்டுதல் கிடைக்கப் பெறின், வளர்ச்சி குறைந்த நாடுகளின் அரசாங்கங்கள் ஏற்றுக்

கொள்ளத் தயாராகவே உள்ளன். இவ் அரசாங்கங்கள் இத்தகைய பன்னாட்டு நிறுவனங்களின் பாராட்டுதலைப் பெறக் கடுமையாக உழைக்கத் தயாராக உள்ளன.

ஏனைய கட்டுப்பாடுகள், குறைகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய உதவியினைப் பன்னாட்டு மயமாக்குதல்மூலமாகவும், மனித வறுமையை ஒழித்துக்கட்டி, மனித முன்னேற்றத்திற்கு வேண்டிய உண்மையான உலகரீதியான போக்கின் பின்னணியில் பன்னாட்டு உதவியினை மேற்கொள்வதன்மூலமாகவும் பிரச்சினையை எளிய முறையில் தீர்க்க முடியும். உதவிபெறும் நாட்டின் திரும்பச் செலுத்தும் வல்லமை, பொதுவாக ஏற்றுமதி வல்லமையையும், அன்னியச் செலாவணி வளங்களை ஈட்டும் வல்லமையையும் சார்ந்த ஒன்றாகும். என்னுடைய திட்டங்களில் கண்டுள்ளதுபோல, பன்னாட்டு வளர்ச்சி சங்கம் கடன்களாகவோ அல்லது மான்யங்களாகவோ கொடுத்துள்ள உதவியைப் பொறுத்தவரையில், உதவிபெறும் நாட்டின் திரும்பச் செலுத்தும் வல்லமைமீது விதிக்கப்பெற்றுள்ள கட்டுப்பாடுகள் சாதாரணமாக அச் சங்கம் வழங்கியுள்ள உதவிமீது பிரயோகமாவதில்லை. மானியங்களைப் பொறுத்தவரையில் இப் பிரச்சினை எழுவதில்லை. கடன்களைப் பொறுத்தவரையிலும் கூட, இப் பிரச்சினை அறிவுத்துறை சார்ந்த ஈடுபாட்டினையே கொண்டுள்ளது. நீண்ட நெடுங்காலங்களுக்குக் கடன்கள் வழங்கப்பெறும். குறைந்த வட்டிக்குக் கடன்கள் வழங்கப்பெறும்; அல்லது வட்டியே இல்லாது கடன்கள் வழங்கப்பெறும். கடன்களைத் திரும்ப அடைத்தல்பற்றிய விதிகள் தாராளமான முறையில் அமைந்திருப்பதுடன், தனித்த சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு ஒழுங்குபடுத்தப்பெறும். அதே வேளையில் கடன்கள் திரும்பச் செலுத்தப்படத்தான் வேண்டும் என்ற உண்மையானது நன்மை விளைவிப்பதுடன், தொழில் சீரமைப்பு அடையவும் உதவும்; பொருளாதார வளர்ச்சிக்குக் கிடைக்கும் அன்னிய நிதிகளைப் பயன்படுத்துவதிலிருந்து பெருமளவு மதிப்பினையும் இவ் உண்மையானது உருவாக்கும்.

ஈர்க்கும் வல்லமைமீது ஏற்பட்டுள்ள கட்டுப்பாடுகள் உண்மையானவை. பல்வேறு வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குத் தக்க அளவில் கொடுக்கப்படும் பன்னாட்டுதவியின் பருமமும் பரப்பும் துவக்கத்தில் வேற்றுமையைக் கொண்டனவாக இருக்கும் நிலையினையே அக்கட்டுப்பாடுகள் உண்டாக்கும். ஆனால், இத்தகைய கட்டுப்பாடுகள் நிரந்தரமானவையல்ல. வளர்ச்சி குறைந்த நாடுகளில் தக்க அளவிற்குப் போதுமான

முன் முதலீட்டு வேலையினை (pre-investment work) மேற்கொண்டால் இத் தடைகள் நீங்கும். இக் கட்டுப்பாடுகளை நீக்க 'SUNFED' போன்ற பன்னாட்டு அமைப்புத் துணையாக இருக்கும். உண்மையில் மிகப்பெருமளவில் 'SUNFED' பணி புரியவேண்டும். வளர்ச்சி குறைந்த நாடுகள் பலவற்றில், பன்னாட்டு வளர்ச்சி சங்கம் ஏதேனும் பெரும் பணிகளை மேற்கொள்ள, 'SUNFED' அளிக்கும் பன்னாட்டுதவி அவசியமான பீடிகையாகும். இதிலும்கூட ஒழுங்காக அறிக்கைகளைத் தயாரித்தால் பயனுடையதாக இருக்கும். பல்வேறு வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய உதவியினை ஈர்க்கும் வல்லமையை அதிகரிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள்பற்றியும், இத் திட்டங்களை நிறைவேற்றுதலைத் தொடர்ந்து ஏற்படும் சாதனைகளைப்பற்றியும் பொது விவாதங்கள் நடத்தினால் பயனுடையதாக இருக்கும்.

பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய உதவியினைத் தேடும் தனி நாடுகளின் மூல வளங்கள்மீதுள்ள கட்டுப்பாடுகளும் உண்மையானவையே. ஈர்க்கும் வல்லமைமீது எழும் கட்டுப்பாடுகளைப்போல இக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த முயல்வது அவ்வளவு எளிதன்று. ஆனாலும், இக் கட்டுப்பாடுகளை நீக்கவே வேண்டும். உண்மையில், மனித இனம் சார்ந்த வறுமை, செழிப்புப்பற்றிய உலக அமைப்பு, உலகநோக்கு ஆகியவற்றின் காரண விளக்கமானது, தேசிய எல்லைக் கோடுகளுக்குப் பின்னே வதியும் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு அந்த எல்லைக் கோடுகளே கடவுள் ஏற்படுத்திய தடை என்பதனை உறுதியாக மறுப்பதாக அமைகிறது. பணக்காரனின் மகன் தனக்கு மிக உயர்ந்த திறமை இருப்பதாக நினைத்துக்கொண்டு, தனக்குத்தானே புகழ்ந்துகொண்டு, ஆக்ஸ்ஃபோர்டுக்கோ அல்லது கேம்பிரிட்ஜிற்கோ அல்லது தொழில் நுண்ணியல் சகாப்தத்தில் லீட்ஸ் அல்லது மான்செஸ்டருக்கோ செல்லும் வசதியற்ற ஏழையின் மகனை விடத் தான் நல்ல அந்தஸ்தில் இருப்பதாக நினைத்துக்கொள்வது சரியல்ல. ஆனால், பெருமளவு இயற்கை வளங்களைப் பெறாத ஏழை நாடுகளுக்கு எதிராக, இயற்கை வளங்களை நிறையப் பெற்று, தனியார் சொத்துரிமைகளைத் தேச அளவில் வளர்த்துக்கொண்டு, தனது உயர்ந்த பொருளாதார அந்தஸ்தினை ஒரு நாடு நியாயமென நினைத்துக்கொண்டால் அது பெரும் மோசமாகும். பொருளாதார நிலையிலும், சடப் பொருள் சார்ந்த வாழ்க்கைத்தரங்களிலும் உள்ள ஏற்றத் தாழ்வினை, இயல்பான திறமையிலும் அறிவுக் கூர்மையிலும் உள்ள வேறுபாட்டினைக் கொண்டு நியாயமென அறுதியிட்டுக் கூறமுடியாது. ஏனெனில்,

திறமையும் அறிவும் உள்ளவர்கள் தாங்களே செய்த முயற்சியின் நேரடி விளைவாக அந்த ஏற்றத்தாழ்வுகள் ஏற்படவில்லை. நாடுகளுக்கிடையேயுள்ள இயற்கை வளங்களின் ஏற்றத்தாழ்வுகளை எடுத்துக்கொண்டு பார்த்தால், மனித வரலாற்றில் இத்தகைய தேசிய இராச்சியங்கள் அண்மைக் காலத்திலேயே உருவாயின என்பதனை ஒருவர் நினைவுபடுத்திக் கொண்டு பார்த்தால், இந்த நாடுகளின் எல்லைக் கோடுகளை நிர்ணயிக்கவும், இவற்றின் பொருளாதாரங்களைப் பலப்படுத்தவும் எத்தகைய சூழ்நிலைகள் ஏற்பட்டுப் பயன்பட்டன என்பதனை ஞாபகப்படுத்திக்கொண்டு பார்த்தால், தேசிய வளங்களிலுள்ள வேற்றுமைகளே தேசிய வாழ்க்கைத்தரங்களிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை நியாயமாக்கவில்லை என்பது தெளிவாகும்; உறுதியாகக் கூறின், வாழ்க்கைத்தரங்களிலுள்ள மிகப் பெரும் ஏற்றத்தாழ்வுகளை நியாயம் என்று ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே, குறைந்தபட்ச வாழ்க்கைத் தரத்தை அடைவதற்கு, அதாவது, நம்மில் பலர் குறிப்பிடும் குறைந்தபட்ச நாட்டு வாழ்க்கைத்தரத்திற்குப் பதிலாகக் குறைந்தபட்ச பன்னாட்டு வாழ்க்கைத்தரத்தை அடைவதற்கு, தேசிய எல்லைக் கோடுகளின் காரணமாகப் பல்வேறு நாடுகள் பெற்றுள்ள இயற்கை மூல வளங்கள், பொருளாதார வளர்ச்சியினைத் தடுக்கும் தடையாக அமையக்கூடாது என்று நான் கருதுகிறேன்.

எனவே, பன்னாட்டுதவியின் கட்டுப்பாடுகள் ஒரு பிரச்சினையன்று என்பது உங்களுக்கு விளங்கும். இத் தடைகளை நீக்க முடியும்; நீக்கவும் வேண்டும். பன்னாட்டுதவி வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. வளர்ச்சியுற்ற நாடுகளின் பொருளாதாரங்கள்மீது தாங்கமுடியாத சுமையினைப் பன்னாட்டு உதவி அளிப்பு ஏற்படுத்தாது. உண்மையில், தற்பொழுது போர்க் கருவிகள் செய்தலினால் ஏற்பட்டுள்ள சுமையைவிட, பன்னாட்டு உதவியினால் ஏற்படும் சுமை குறைவே. மேலும், உல்லாசத் தன்மையும் பாழாக்கும் தன்மையும் கொண்ட செலவுகள்மீது இச் சுமை எந்த வடுவினையும் ஏற்படுத்தாது. மனமாற்றமும், நாடுகளனைத்தும் உலகத்தின் உறுப்புகளே என்ற உணர்வும், வெவ்வேறு நாடுகளின் பிரஜைகளனைவரும் மனித இனத்தினைச் சார்ந்தோரே என்ற உணர்வும் வேண்டற்பாலன.

11. பொருளாதார வளர்ச்சிக்கு உபரி உணவுமூலம் பன்னாட்டு உதவி

இன்றைய உலகில் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை உள்ளது. உலக மக்கள் தொகையில் 60 சத வீதத்திற்குக் குறையாத தொகையினர், நாளொன்றுக்கு 2000 கலோரிக்கும் (calorie) குறைந்த அளவுள்ள உணவினையே ஒவ்வொருவரும் உட்கொள்கின்றனர் என்ற உண்மையை நோக்குவதிலிருந்து தெரியவருகிறது. போர்க் காலத்தில் கிரேட் பிரிட்டனில் 2800 கலோரிகளுக்குக் குறைவான உணவை உட்கொண்டு இளவயதினரும் குழந்தைகளும் தங்கள் எடை குறையக் கண்டனர் என்பதை உணர்ந்துள்ளோம். வளர்ச்சி குறைந்த நாடுகளின் வெப்பதட்ப நிலையின் காரணமாக உட்கொள்ளும் உணவில் கலோரி அளவு குறைவாக இருக்கும் என்பது உண்மையே. பொருளாதார வளர்ச்சி சார்ந்த கோணத்திலிருந்து நோக்குகையில், வறுமை, குறைந்த உணவினை உட்கொள்ளுதல், குறைந்த ஆக்கத் திறன், எனவே தொடர்ந்துள்ள வறுமை, குறைந்த உணவினை உட்கொள்ளுதல் என்று சுழன்றுவரும் சுழல் வட்டத்தினை உடைக்கவேண்டுமெனில், உணவுத் துய்ப்பிற்கும் உணவுத் தேவைகளுக்கும் இடையிலுள்ள தொடர்பினைப்பற்றிய வலுவான எண்ணத்தினை மேற்கொள்ளவேண்டும். மேலும், வளர்ச்சி குறைந்த உலகில், குறிப்பாக, தூரக் கிழக்கில், பெரும்பாலான மக்கள் இன்னும் குறைந்த கலோரி அளவுள்ள உணவையே உட்கொள்கின்றனர் என்ற உண்மையை இந்தச் சராசரிகள் மறைத்துவிடுகின்றன. இவ் உலகில் மொத்த ஜனத் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் உயிருடன் இருப்பதற்கு வேண்டிய உணவினையே உட்கொள்ளும் அதே வேளையிலேயே அவர்கள் பசி தீராதே வாழ்கின்றனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. உணவுத் துய்ப்பின் தரத்தை எடுத்துக்கொண்டு,

ஊட்டக் குறைவிற்குப் பதிலாக சத்துக் குறை உணவு ஊட்டத்தினை எடுத்துக்கொண்டால், நிலைமை இன்னும் மோசமாக உள்ளது. டாக்டர் ரைட் (Dr. Wright) அவர்களின் கூற்றுப் பின்வருமாறு: 'முக்கியக் கூல வகைகளும் (staple cereals) மாவுச்சத்துள்ள கிழங்குகளும் வட அமெரிக்க உணவில் 25 சதவீதமாகவும், பிரிட்டிஷ் உணவில் 31 சதவீதமாகவும், ஐரோப்பிய உணவில் 50 சதவீதமாகவும், இலத்தீன் அமெரிக்காவில் 54 சதவீதமாகவும், ஆப்பிரிக்காவில் 66 சதவீதமாகவும், தூரக் கிழக்கில் 73 சதவீதத்திற்கு மேலாகவும் உள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. எதிரிடையாக நோக்கின், பால், இறைச்சி, முட்டை, மீன்போன்ற விலங்கினப் பொருள்களின் அளவு, வட அமெரிக்க உணவில் 40 சதவீதமும், பிரிட்டிஷ் உணவில் 27 சதவீதமும், ஐரோப்பா முழுவதற்கும் 21 சதவீதமும், இலத்தீன் அமெரிக்காவில் 17 சதவீதமும், ஆப்பிரிக்காவில் 11 சதவீதமும், அண்மைக் கிழக்கில் 9 சதவீதமும், தூரக் கிழக்கில் 5 சதவீதமும் உள்ளன. இவ் வேற்றுமைகள் வளர்ச்சி குறைந்த நாடுகளின் உணவுகளில் புரத உணவின் பற்றுக்குறை இருப்பதை, அதிலும் குறிப்பாக விலங்கினப் புரதம் குறைந்திருப்பதைப் பிரதிபலிக்கின்றன.

நாளொன்றுக்குத் தலைக்கு இவ்வளவு கிராம்கள் எனக் கணக்கிடும்பொழுது, மொத்தப் புரதம் வட அமெரிக்காவில் 92 கிராம்கள் எனில், தூரக் கிழக்கில் 57 கிராம்களேயாம்; விலங்கினப் புரதம் வட அமெரிக்காவில் 66 கிராம்கள் எனில், தூரக் கிழக்கில் 7 கிராம்களேயாம். இது பத்து மடங்கு வேற்றுமையைக் காட்டுவதாகும். அதேவேளையில், வளர்ச்சி குறைந்த நாடுகளில், உணவுகளில் பல்வேறு வகைகள் இல்லாமையாலும், சிறப்பாக விலங்கினப் பண்டங்கள் குறைந்துள்ளமையாலும், இவ் உணவுகளில் வைட்டமின்களும் முக்கிய தாதுப் பொருள் கூறுகளும் போதுமான அளவிற்கு இல்லை. இதன் விளைவாக, தனித்த பற்றுக்குறை நோய்கள் (deficienc diseases) பரவுகின்றன; வளர்ச்சியுற்ற நாடுகளில் இ நோய்கள் தோன்றுவது அருமையே.

உலக உபரி உணவுகளைப்பற்றிய எந்த விவாதத்திலு இவரது முடிவு பெரிதும் கருதத்தக்கது. அதாவது, 'உ கத்திலுள்ள பாதி மக்கள் குறைவாக ஊட்டம் பெற்றுள்ளன என்பதும், சத்துக் குறைந்த உணவினையே உட்கொள்கி றனர் என்பதும் உண்மையே' என்ற கூற்றானது, கரு தக்கது.

உணவு, விவசாய அமைப்பு, ஐ.நா. சபை, அரசாங்கங்கள் ஆகியவை அனைத்தும் உலக மக்களனைவரையும் பசிப் பிணியிலிருந்து காக்க வேண்டுமென்றும், நியாய வரம்புள்ள மட்டத்திற்கு அவர்களின் ஊட்டத்தினை உயர்த்த வேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்துள்ளன. இவ் விருப்பத்தினை நிறைவேற்ற வேண்டுமெனில், உலக முழுதும், கூல வகைத் துய்ப்பினை சுமார் 8 முதல் 10 சதவீதம் உடனடியாக உயர்த்த வேண்டும்; கால்நடைப் பொருள்களின் துய்ப்பினையும் சுமார் 60 சதவீதம் உயர்த்த வேண்டும். உலகத்தின் மொத்தக் கூல வகைகளின் உற்பத்தி சுமார் 800 மில்லியன் டன்களெனில், இதில் தேவைப்படும் அதிகரிப்பு சுமார் 60 மில்லியன் டன்களாகும். ஆனால், உணவுத் தானியங்களின் உலக இருப்பு சுமார் 125 மில்லியன் டன்களாகும். எனினும், இவ் இருப்புகள் அனைத்தும் எச்சமாகாது. இதிலொரு பகுதி, ஏற்றுமதி செய்கின்ற நாடுகளின் தேசிய உணவு இருப்புகளாகும். மற்றுமொரு பகுதி தங்களுடைய ஏற்றுமதிக்கான வர்த்தக ஓட்டத்திற்கு வேண்டிய தேச வர்த்தக இருப்புகளாகும். இந்த இருப்புகளில் ஒரு பாதியை உண்மையான உபரியாக எடுத்துக்கொண்டால், இதில் கோதுமையும் மக்காச் சோளமும் கொண்ட தானியங்கள் சுமார் 60 மில்லியன் டன்கள் அடங்கும். எனவே, உலகின் பசிப் பிணியையும் சத்துக் குறைந்த உணவுப் பிரச்சினையையும் இத்தகைய உபரிகள்மட்டும் நிரந்தர அடிப்படையில் தீர்க்க முடியாது. உணவுப் பற்றுக்குறை மிகுந்த நாடுகளிலேயே உணவு உற்பத்திப் பெருக்கத்தினை மேற்கொள்வது ஒன்றே நிலையான, உறுதியான வழியாகும். உணவு உற்பத்திப் பெருக்கத்துடன், அல்லது இதனைத் தவிர்த்து, இந் நாடுகளின் பன்னாட்டு வாங்கும் சக்தியினைப் பெருக்குவதன் மூலமே, நியாயமான அளவிற்குத் துய்ப்பு மட்டங்களை உயர்த்துவதற்குத் தேவைப்படும் கூடுதலான உணவு இறக்குமதிகளைத் திறந்த போட்டிக்கான சந்தையிலே வாங்க வேண்டும். இவையனைத்தும் உணவுப் பற்றுக்குறை நாடுகளின் பிரச்சினையைப் பொருளாதார வளர்ச்சிமூலமே உண்மையில் தீர்க்க முடியும் என்பதனையே உணர்த்துகின்றன. எனவே, உலகின் பெரும் பகுதியின் உணவுத் துய்ப்பின் அளவையும் தரத்தையும் சார்ந்த பற்றுக்குறையானது, இப் பகுதியின் குறைந்த வளர்ச்சியினையே பிரதிபலிக்கிறது.

எனினும், பொருளாதார வளர்ச்சி ஏற்பட நீண்ட காலம் தேவைப்படும்; இவ் வளர்ச்சி இயல்பாகவும் நிகழாது. இந்த நாடுகள் தங்களிடமுள்ள வளச் சாதனங்களையும் தேவை

களையும் நன்குணர்ந்து வளர்ச்சிக்கான திட்டமிடல் வேண்டும்; திட்டமிட்டு, உறுதியான நடவடிக்கைகள் எடுத்து அதனை நிறைவேற்றவும் வேண்டும். இதனை நிறைவேற்றும்பொழுது, இடைநிலைக் காலத்தில், தங்களுடைய குறைந்தபட்சப் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய மூல வளங்களுக்கும், கிடைக்கக்கூடிய மூல வளங்களுக்குமிடையில் இடைவெளி நிலவும் என்பது உண்மையே. இந்த இடைவெளி பற்றிய விவரங்களை இவ் இடத்தில் ஆராய்வதற்கில்லை. வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்குரிய எத் திட்டமும் கணிசமான முதலீட்டு அதிகரிப்பினையும் வாங்கும் சக்தி அதிகரிப்பினையும் சார்ந்துள்ளது என்பதும், இதன் காரணமாக, உணவுத் தேவையில் கணிசமான அளவிற்கு உடனடியாகப் பெருக்கம் ஏற்படுவதைச் சார்ந்துள்ளது என்பதும், ஐயந்திரிபற்ற உண்மையாகும் என்பது தெளிவாகும். சாத்தியமான சூழ்நிலைகளில், இந் நாடுகளின் உணவுத் தேவை அதிகரிப்பினைப் பூர்த்தி செய்தல் வேண்டும் என்பது உறுதியாகும். தங்களுடைய உள்நாட்டு விவசாயத்தை வளர்த்து, அதிகரித்த ஆக்கத்திறனைப் பெருக்குவதன் மூலமே உணவுத் தேவை அதிகரிப்பினை நிறைவேற்ற இயலும் என்பதும் உறுதியே. எனினும், போதுமான மூலவளங்கள் கிடைக்காதபொழுது, உள்நாட்டு விவசாய உற்பத்தி பெருகாது. இத்தகைய சூழ்நிலைகள் உள்ள நாடுகளில் போதுமான ஏற்றுமதி வல்லமையை உண்டாக்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும். இவ் விரு நிலைகளிலும், பொதுவாகவே தடையாக இருப்பது காலம் எனும் காரணியாகும், உள்நாட்டு விவசாய உற்பத்தியில் கணிசமான அளவிற்கு உற்பத்தி பெருக நிரம்பக் காலம் பிடிக்கும்.

உள்நாட்டு ஏற்றுமதி வல்லமை பெருகவும் நிரம்பக்காலம் பிடிக்கும். இந்தக் கால இடைவெளியை நிரம்பத் தேவைப்படும் உணவு இருப்புகள் இல்லாதபொழுது, பிரச்சினைக்குரிய நாடுகள் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டத்தை மேற்கொள்ளும் துணிவினைப் பெறுவதில்லை. அல்லது, இந் நாடுகள் திட்டத்தினை மேற்கொண்டால், பணவீக்க நிலைமைக்குப் பலியாகின்றன; திட்டங்களும் தோல்வி அடைகின்றன. எனவே, தங்களுடைய நாட்டுப் பொருளாதார ஆக்கத்திறனைப் பெருக்க நடவடிக்கைகள் எடுக்கும்பொழுது, இடைநிலைக் காலத்தில், போதுமான அளவிற்கு, நியாயமான விதிகளின் அடிப்படையில் வளர்ச்சி குறைந்த நாடுகள் உணவு அளிப்புகள் பெறுதல் வேண்டும். இது அவசியமாகும். தனி விதிகளின்

அடிப்படையில் மான்யமாகவோ அல்லது கடனாகவோ உணவு அளிப்புகள் வழங்கப்பெறின், முக்கியமாக இத் தேவையின் தற்காலிகத் தன்மையை மீண்டும் வலியுறுத்த நாங்கள் விரும்புகிறோம். எனினும், வளர்ச்சித் திட்டத்தின் துவக்க கட்டங்களில், அபிவிருத்தி குறைந்த பகுதிகளில் பொருளாதார வளர்ச்சியைத் தூண்ட உணவு இறக்குமதிகள் அவசியம் தேவை என்று வலியுறுத்தவேண்டும்.

நல்வினையின் பயனாக, பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் இறக்குமதித் தேவைகளை அனுபவரீதியாக, அடுத்தடுத்துத் திட்டமிட்டு நிறைவேற்றத் தேவைப்படும் உபரிகள் தற்பொழுது போதுமான அளவில் கிடைக்கின்றன. எனினும், தங்களுடைய சொந்த நிதியினைக்கொண்டு இத்தகைய இறக்குமதித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் நிலையில், வளர்ச்சி குறைந்த நாடுகள் இப்பொழுது இல்லை என்பது நிச்சயமே. இல்லாவிட்டால், உபரிப் பிரச்சினையே எழாது. எனவே, பொருளாதார வளர்ச்சிப்படி முறையை எளிதாக்கிக் கொள்வதற்கு உபரி உணவினை நாம் பயன்படுத்த வேண்டுமெனில், எவ்வளவு குறைந்த செலவில் உணவை வழங்கமுடியுமோ அவ்வளவு குறைந்த செலவில் வழங்கவேண்டும். வழங்கும் உணவினை வட்டியற்ற, நீண்ட காலத் தவணைகளில் திரும்பச் செலுத்தக்கூடிய கடன் அடிப்படையிலாவது அல்லது மான்ய அடிப்படையிலாவது வழங்குதல் வேண்டும். இயல்பான வியாபாரத்தில், எந்த விலைக்கு விற்கின்றனரோ அந்த விலைக்கும் குறைவான விலையிலேயே, இத்தகைய உபரி உணவுகளை வழங்கவேண்டும் என்பதே இதன் கருத்தாகும். இத்தகைய இயல்பான வியாபாரத்தில் ஈடுபடும் நாடுகளனைத்தும் எச்ச உற்பத்தி நாடுகளல்ல. ஏற்றுமதிக்கு வேண்டிய பெருமளவு உபரி உணவுத் தான்யங்களைப் பெற்று, அதே வேளையில் ஏற்றுமதிகளையே முழுதும் நம்பியிராத முழு நாட்டுப் பொருளாதாரத்தைப் பெற்று, விதிவிலக்காக முன்னணியில் நிற்கும் தேசம் ஐக்கிய அமெரிக்காவாகும். அமெரிக்காவில் உபரிகள் குவிந்து கிடப்பதற்கு முக்கிய காரணம், விலை ஆதரிப்புக் கொள்கையாகிய (price support) உள்நாட்டுக் கொள்கையே ஆகும். கனடாவைத் தவிர, ஐக்கிய அமெரிக்காவிடமுள்ள உபரிகளைப்போல், ஏனைய உணவு ஏற்றுமதி நாடுகளிடம் உபரி இல்லை. இத்தகைய நாடுகள் தங்களுடைய தேசப் பொருளாதாரங்களைச் சீர்கேடு அடையாமல் பார்த்துக்கொள்வதற்கு உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டியது

அவசியமாகிறது. எனவே, வளர்ச்சி குறைந்த உலகின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவைப்படும் வகையில், உபரி உணவுப் பண்டங்களை வழங்கும் திட்டம் தங்களுடைய வர்த்தகச் சந்தைகளைக் கெடுத்துவிடும் என்று இத்தகைய நாடுகள் அதிர்ச்சியடைவது புரிகிறது.

இவ்வாருக, பொருளாதார வளர்ச்சி சார்ந்த தேவைகளுக்கும், தங்களுடைய சொந்தப் பொருளாதாரங்களைக் காத்துக்கொள்ளவோ அல்லது வளர்க்கவோ உணவு ஏற்றுமதியைச் சார்ந்திருக்கின்ற நாடுகளின் தேவைகளுக்கும் இடையே மோதுதல் இருப்பதாகவே தோன்றுகிறது. உபரி உணவினை வழங்குதலானது ஏற்றுமதிசெய்யும் நாடுகளுக்குத் தீங்கினைப் பயக்கும் என்பதனுல், தனித்த விதிகளின் அடிப்படையில் உபரி உணவினை வழங்கும் திட்டத்தைக் கைவிடுதல் மூலம் தீர்வுகாணமுடியாது. ஆக, இப்பொழுதுள்ள உபரி உணவினை உலகச் சந்தைகளிலே விற்க முன்வந்தால், தாராளமான முறையில் உபரி உணவினை வழங்கும் திட்டத்திஞல் எதிர்பார்க்கக்கூடிய விலை வீழ்ச்சியைவிட வர்த்தக விலைகள் மிகுதியான அளவிற்கு வீழ்ந்துவிடும் என்பது உறுதியே. ஏனைய ஏற்றுமதி நாடுகளின் நலன் கருதி, உபரி உணவுள்ள நாடுகள் தங்களுடைய உபரிகளைக் குவித்துக்கொண்டே செல்லும் என்றும் எதிர்பார்க்கக்கூடாது ; வளர்ச்சி குறைந்த நாடுகளில் உபரி உணவுகளின் தேவை மிகுந்திருக்கும் பொழுது, இப் பகுதிகளில் பொருளாதார வளர்ச்சிப்படி முறையைக் கடிதில் கடக்கவேண்டும் என்ற பொதுவான விருப்பம் நிலவும்பொழுது, உபரி நாடுகள் தங்களுடைய உபரி உணவினை வழங்காது, குவித்துக்கொண்டே செல்லும் என்று எதிர்பார்க்கக்கூடாது. எனவே, (அ) உணவு ஏற்றுமதி நாடுகளின் உடனடியான வர்த்தக நலன்களை வெகுவாகப் பாதிக்காத முறையிலும், (ஆ) உண்மையில் நீண்டகாலத்தில் ஏற்றுமதியாளர்களாக அந் நாடுகளின் நிலை வளர்ந்து உயருகின்ற முறையிலும், உபரி உணவு வழங்கும் திட்டத்தினை மேற்கொள்ளவேண்டும். அதிர்ஷ்டவசமாக, பொருளாதார வளர்ச்சிக்காக உபரி உணவுப் பண்டங்களைப் பயன்படுத்துதல் குறித்த திட்டமானது இவ்விரு விதிகளையும் பூர்த்தி செய்யும் தங்களுடைய பொருளாதாரத் திட்டங்களுக்குத் தேவைப்படுய கூடுதலான உணவு இறக்குமதிகளை வளர்ச்சி குறைந்த நாடுகள் மேற்கொள்ளவேண்டுமெனில், உபரியாக உள்ள உணவு வழங்கப்பெறுதல் வேண்டும். இல்லையெனில், வளர்ச்சி குறைந்த நாடுகள் தங்களுடைய பொருளாதாரத் திட்டத்தின் அளவினைக்

குறைத்துவிடுவர்; பொருளாதார வளர்ச்சியும் தடைபடும். ஆனால், உபரி உணவினை வழங்குதல்மூலம் வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியைத் தூண்டினால், இந் நாடுகளின் வாங்கும் சக்தி உயரும்; இவற்றின் தேவை பெருகும்; இதன் விளைவாக, ஏற்றுமதி சார்ந்த நலன்களை உடைய எல்லா நாடுகளிலும் (உணவு ஏற்றுமதி சார்ந்த நாடுகளாயினும் சரியே, உணவு சாராத ஏற்றுமதி நாடுகளாயினும் சரியே) முன்னேற்றம் ஏற்படும். எனவே, அமெரிக்காவைவிடக் கூடுதலான அளவிற்கு உணவு ஏற்றுமதிகளைச் சார்ந்து தங்களுடைய பொருளாதாரத்தைப் பேணும் நிலையிலுள்ள உணவு ஏற்றுமதி நாடுகளின் நலன்களுக்காகவும், ஐக்கிய அமெரிக்காவின் நலன்களுக்காகவும் உபரி உணவினை வழங்கும் திட்டத்தில் ஒத்துழைக்கவேண்டும்; இத் திட்டத்தினைப் பயன்படுத்திக்கொண்டு, தனது பொருளாதார வளர்ச்சிக்காக உபரி உணவுப் பொருள்களை நல்லவண்ணம் பயன்படுத்தும் வளர்ச்சி குறைந்த உலகின் நலன்களுக்காகவும் இத் திட்டத்தில் ஒத்துழைக்கவேண்டும் என்பது தெளிவே.

மற்றுமொரு கருத்தினையும் இங்கு எடுத்து இயம்ப வேண்டும். உபரிகளைக் குவிக்கவேண்டிய அவசியம் ஐக்கிய அமெரிக்காவிற்கு இல்லை என்றும் விவாதிக்கப்படுகிறது. பி. எல். 480 திட்டத்தின்கீழ்த் தற்பொழுது காரியமாற்றுவது போன்ற உபரி உணவு வழங்கும் திட்டம் எதனையும் மேற்கொள்ளாது, உள்நாட்டுப் பொருளாதாரத் திட்டத்தில் மாற்றத்தினை உண்டாக்கி உபரிசார்ந்த பிரச்சினையை ஐக்கிய அமெரிக்கா தீர்த்துவிடமுடியும். நிலவும் நிலைமையைப்பற்றி மேலெழுந்தவாரியான கருத்தினைக் கொண்டதாகவே இது உள்ளது. சமூகக் கோணத்திலிருந்தும் பண்பாட்டுக் கோணத்திலிருந்தும் பார்க்கும்பொழுது, தேசப் பொருளாதாரங்களில் விவசாயமும் கிராம சமூகமும் குறைந்தபட்சம் கணிசமான பங்கினைத் தொடர்ந்து வகிக்கவேண்டுமென்று இப்பொழுது உணரப்பட்டுள்ளது. ஜனத்தொகையில் மிகச் சிறிய எண்ணிக்கையினர் சமூக முழுவதற்கும் வேண்டிய உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்யும்பொழுது ஒவ்வொருவரும் பொறிவழி உற்பத்தி செய்து, பணிகளை விற்கின்ற நிலையிலுள்ள சமூகமானது நிச்சயமாக இலட்சிய சமூகமாகத் திகழமுடியாது. தங்களுடைய விவசாயத்துறையின் உற்பத்தி சாத்தியங்களை முழுதும் தூண்டிவிட பலமும் தொழில் நுட்பத்திறனும் உள்ள நாடுகள் முன்வரவேண்டும் என்பது குறுகிய பொருளாதார எண்ணங்களையும் மீறிய தேச

முக்கியத்துவம் உடைய செய்தியாகும். ஜனத்தொகையில் எதிர்பார்க்கும் அதிகரிப்பு ஏற்பட்டால் உணவின் தேவையும் பெருகும் என்பதனை நெஞ்சில் நிறுத்தினல், இந்த நிலையினைப் பொருளாதாரக் கருத்துகள்கூட ஆதரிக்கும் என்பதனையும் இங்குக் குறிப்பிடலாம். ஆக, 1980ஆம் ஆண்டிற்குள்ளாக, இப்பொழுது உள்ளதைவிட மேலும் நியாயமன உணவுத் துய்ப்பு மட்டத்தினை வளர்ச்சி குறைந்த உலகு அடைந்து விட்டால் (உறுதியான பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் மூலம் இது நிறைவேறும்), 1960 முதல் 1980 முடிய உள்ள ஆண்டுகளில் வளர்ச்சி குறைந்த உலகிலும் வளர்ச்சியுற்ற உலகிலும் மக்கள் எண்ணிக்கை பெருக்கத்தினல் விளையும் உணவுத் தேவைப் பெருக்கத்தினைக் கணக்கிற்கு எடுத்துக் கொண்டால், கூலவகைகளின் உணவு உற்பத்தியில் 33 சதவீத அதிகரிப்பு வேண்டும்; பால், இறைச்சி, முட்டை, மீன் ஆகியவற்றின் உற்பத்தி 100 சதவீதத்திற்குக் குறையாது பெருகவேண்டும். இம் மதிப்பீடுகளை கி. பி. 2000-க்கு மாற்றினல் (கி. பி. 2000 வெகு தொலைவில் இல்லை; இன்று வாழும் மக்கள் பெரும்பாலோரின் காலத்திலேயே கி. பி. 2000 வந்துவிடும்.), உற்பத்தியில் தேவைப்படும் பெருக்கம் மிகவும் அதிகமாகும்.

உற்பத்தியில் தேவைப்படுகின்ற இத்தகைய அதிகரிப்புகள் அனைத்தையும் தன்னிறைவு அடிப்படையில் உலகிலுள்ள பல்வேறு நாடுகள் உண்டாக்க முடியாது என்பது தெளிவே, எனவே, விரும்பத்தக்க அளவில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டால், இப்பொழுது பெருகும் வீதத்தைவிடக் குறைந்த வீதத்தில் ஜனத்தொகை பெருகினல், உணவைப் பொறுத்தவரையில் பன்னட்டு வர்த்தகம் பெருகும் என்பது கண்கூடு. குறுங்காலத்தில், உபரிநாடுகள் விவசாயத்தைக் குறைத்து, விவசாயத்துறையின் தூண்டுதல் சக்திகளை அழித்துவிட்டு, உச்ச உற்பத்திமூலம் நிறைவு பெறுதலைத் தூண்டினல், சில ஆண்டுகளுக்குப் பின்னர், தங்களுடைய உள்நாட்டுத் தேவைகளே அளிப்புகளில் கணிசமான அதிகாரிப்பு ஏற்படுத்துதலைக் கட்டுப்படுத்திவிடும் பொழுது, இந் நாடுகள் சிக்கலான சூழ்நிலையில் மாட்டிக் கொள்ளும் நிலையினை உணர்ந்துவிடலாம். எனவே, சமூக, கலாச்சார, நீண்டகாலப் பொருளாதாரக் கோணத்திலிருந்து நோக்கும்பொழுது, தங்களுடைய இன்றைய உபரியினைச் சார்ந்த உடனடிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உற்பத்தியைக் குறைப்பதைவிட இன்றுள்ள உற்பத்தியைப்

பெருக்கி, உபரி உணவு உற்பத்தியினை வழங்கும் நல்ல திட்டத்தை மேற்கொள்வதே, தற்பொழுது உபரியாக உற்பத்தி செய்யும் நாடுகளனைத்திற்கும் நன்மை பயப்பதாகும். ஆக, பொருளாதார வளர்ச்சிக்காகத் தற்காலிகமாகத் தனித்த விதிகளின் அடிப்படையில் உபரிகளைப் பயன்படுத்துதலைப் பொறுத்தவரையில், உபரி உற்பத்தி நாடுகள், வர்த்தக ரீதியான ஏற்றுமதி நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகள் ஆகியவற்றின் நலன்களில் ஓரிசைவான நிலையே நிலவுகிறது. திட்டத்தின் தற்காலிக அம்சமே மீண்டும் வலியுறுத்தப் படுகிறது. வளர்ச்சி குறைந்த உலகம் வளர்ச்சியுற்ற உலகின் மீது நிரந்தரமான சுமையாக இருக்காது. மாறாக, இக் கால இடைவெளி அடைக்கப்பட்ட பின்னர், தன்னுடைய உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தனது சொந்த வளச் சாதனங்களை வளர்த்துக்கொள்வதோடு மட்டும் அமையாது, வளர்ச்சியுற்ற உலகின் பண்டங்கள் அனைத்திற்கும், இவ்வுலகின் உணவிற்கும்கூடத் தேவைப்படும் பரந்த சந்தைகளையும் வளர்ச்சி குறைந்த உலகம் அளிக்கும். வெறும் மனிதாபிமான அடிப்படையிலன்றி, பொருளாதார அடிப் படை சார்ந்த இத்தகைய கருத்துகளை மனத்தில் கொண்டு தான் உபரி வழங்கும் பிரச்சினையை நாம் அணுகுகிறோம்.

உபரி வழங்குதல்பற்றிய விதிகள் அனைத்தும் முன்னரே தெரிந்தவையே. உணவு-விவசாய அமைப்பின் அறிக்கையில் இவ் விதிகள் இடம் பெற்றுள்ளன. அநேக நாடுகள் இவ் விதிகளை ஏற்றுக்கொண்டுள்ளன. கடந்த சில ஆண்டுகளாகத் தனது சொந்த முயற்சியிலேயே பி. எல். 480 திட்டத்தின்கீழ் உபரி உணவினை வழங்கும் திட்டத்தின்மூலம் உலகப் பொருளாதார வளர்ச்சிக்குக் கணிசமான அளவிற்கு அமெரிக்க நிருவாகம் உதவியுள்ளது. எனவே, உபரிகளை வழங்குதல் பற்றிய விதிகளில் புதிதாக ஒன்றுமில்லை. உபரிகள் வழங்குதல் குறித்த ஆலோசனைகளை முன்னரே அரசாங்கங்கள் ஏற்றுக் கொண்டன; அல்லது ஐ. நா. சபையின் சாசனத்தின்படி, பொருளாதார வளர்ச்சிக்கான பொறுப்புகளை இவ்வரசாங் கங்கள் ஏற்றுக்கொள்ளும்பொழுது இவ் ஆலோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்பெற்றன எனலாம். இந்த முன்னுரையுடன் உணவு உபரிகளை எக் காரியங்களுக்குப் பயன்படுத்தவேண்டு மென நான் எண்ணுகிறேனோ அக் காரியங்களைக் கீழே விளக்குவேன்; தங்களுடைய பொருளாதார, சமூக வளர்ச்சிக் காக இத்தகைய உபரிகளைப் பயன்படுத்துகின்ற உபரி பெறும் நாடுகள் கைமாறாக எக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் எனக் கருதுகிறேனோ அவற்றையும் கீழே விளக்குவேன்.

நிலையான தன்மையுள்ள பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய அவசியமான முன் நிபந்தனை என்னவெனில், உள்நாட்டு முதலீட்டினை உயர்த்துவதால் ஏற்படுகின்ற கூடுதலான உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய தேச உணவு இருப்புகளை அமைப்பதுதான். தேசத்திற்கு வேண்டிய உணவு இருப்புகளை அமைத்தலின் மூலமாகக் குறிப்பிட்ட நாட்டின் விலைக் கைக்கோளினை உருவாக்குதல் வேண்டும்; ஒருபுறத்தில் இவ்விலைக் கைக்கோளானது உள்நாட்டு விவசாய உற்பத்தியைத் தூண்டுதற்கு வேண்டிய அவசியமான விலைத்தூண்டுதலை உண்டாக்கவேண்டும்; மறுபுறத்தில், துய்ப்போரின் வாங்கும் சக்தியில் ஓரளவுக்கு நிலையான தன்மையையும் உண்டாக்கித் துய்ப்போரின் நலன்களைப் பாதுகாக்கவும் இவ் விலைக் கைக்கோள் பயன்படவேண்டும். உணவு உற்பத்தியாளர்களின் நலத்திற்கும் துய்ப்போரின் நலத்திற்கும் இடையில் அடிப்படை மோதுதல் உள்ளது என்று கருதுவது தவறாகும். திரும்ப வந்து தாக்கும் கருவிபோல் இயங்கக்கூடிய மிக உயர்ந்த விலையினைவிட, ஏறி இறங்கும் ஆபத்து இல்லாத விலையினையே உணவு உற்பத்தியாளர்கள் விரும்புகின்றனர். மறுதலையாக உணவு சாராத பண்டங்களை உற்பத்தி செய்யும் துய்ப்போர் தங்கள் பண்டங்களுக்கு நிலையான விலையினைப் பெற்று, சந்தைகள் பெருகுவதையே விரும்புகின்றனரேயன்றி, தங்களுடைய சந்தைகள் சுருங்குகின்ற விளைவினை உண்டாக்கும் அளவுக்குத் தாங்கள் துய்க்கும் உணவின் விலை குறைதலை விரும்பவில்லை. உணவினை உற்பத்தி செய்வோரும் துய்ப்போரும் நிலையான விலையேற்பட்டு, அவரவருக்குரிய சந்தைகள் விரிவடைவதனையே நாடுகின்றனர். விவசாயப் பண்டங்களுக்கேற்ற தேசிய விலைக் கைக்கோள் இயங்குதலை இந்த உண்மையே சாத்தியமாக்குகிறது.

இதுவரையில், மேலே எடுத்துக்காட்டப்பெற்ற குறிக்கோள்களை நிறைவேற்றத் தேவைப்படும் தேச உணவு இருப்பினை (National food reserve) உலகில் எந்த வளர்ச்சி குறைந்த நாடும் ஏற்படுத்தவில்லை. அண்மைக் காலத்தில், நெருக்கடிக் கட்டங்களையே பெரும்பாலும் சமாளிப்பதற்கே சில ஆண்டுகளாகத் தேச உணவு இருப்பினை உண்டாக்கிவந்த இந்தியப் பேரரசு நெருக்கடிக்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மாத்திரமன்றி, பொருளாதார வளர்ச்சிக்கேற்ற விலைக் கைக்கோளினை உருவாக்கி இயக்கவும் தேவைப்படும் தேச உணவு இருப்பு ஏற்படுத்தும் திட்டத்தினை ஏற்றுக்கொண்டுள்ளது. இக்குறிக்கோளுடன் பி. எல். 480 திட்டத்தின்கீழ் இந்திய

அரசாங்கம் அமெரிக்காவிடமிருந்து ஐந்து மில்லியன் டன்கள் கொண்ட உணவுத் தானியங்களைப் பெற்றது; இவற்றில் கோதுமை நான்கு மில்லியன் டன்களாகும்; அரிசி ஒரு மில்லியன் டன்களாகும். நான்கு ஆண்டுகளில் பி. எல். 480 திட்டத்தின்கீழ் இந்தியா மொத்தத்தில் 17 மில்லியன் டன்களைப் பெறுகின்ற இப் பெரும் பேரத்தில் மேலே குறித்துள்ளது ஒரு சிறு பகுதியே. எனவே, எந்த விதிகளின் அடிப்படையில் மேற்குறித்துள்ள ஐந்து மில்லியன் டன்கள் கிடைத்துள்ளன என்பதனைத் துல்லியமாக எடுத்து விளக்குவது கடினமே. எனினும், மொத்த இறக்குமதிக்காகும் செலவில் 40 சதவீதம் மான்யமாகக் கிடைக்கும் என்ற உண்மையை நெஞ்சில் நிறுத்திப் பார்க்கும்பொழுது, உணவு இருப்புகளை ஏற்படுத்த் வழங்கப்பெறும் தானியங்களின் செலவில் பெரும் பகுதி (முழுதும் இல்லையெனினும்) மான்யமாகவே கிடைக்கும் என்று நாம் கருதலாம். உள்நாட்டுக் கொள்முதல்மூலம் துவக்க இருப்புகளை உண்டாக்க வேண்டுமெனில், தேசிய உணவு இருப்புகளை எந்த வளர்ச்சி குறைந்த நாடும் ஏற்படுத்த முடியாது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இவ்வாறே, வர்த்தகம் சார்ந்த இறக்குமதிகள்மூலமும் தங்களுக்கு வேண்டிய துவக்ககால இருப்புகளை ஏற்படுத்தப் போதுமான மூலதனத்தை இவ்வளர்ச்சி குறைந்த நாடுகள் பெற்றிருக்கவில்லை. மேலும், தேசிய உணவு இருப்புகளின் முக்கியத்துவத்தையும் பொருத்தத்தையும் வளர்ச்சி குறைந்த நாடுகளின் அரசுகள் போதுமான அளவுக்கு உணரவில்லை.

உள்நாட்டு உணவு இருப்பினை உண்டாக்குவதில் தங்களுடைய மூலதனத்தின் ஒரு பகுதியை வளர்ச்சி குறைந்த நாடுகள் முடக்குவதற்கு வேண்டிய தனித்த தூண்டுதல் கிடைத்தாலன்றிப் பெருமளவு மூலதனப் பற்றுக்குறையுள்ள இந் நாடுகள் முன்வரமாட்டா. உணவு இருப்பு இல்லாது இந் நாடுகள் பொருளாதார வளர்ச்சித் திட்டத்தை மேற்கொண்டால், நாட்டினுள்ளும் நாட்டின் எல்லைக் கோடுகளுக்கப்பாலும் பணவீக்க விளைவுகள் ஏற்படும். இவ் விஷயங்கள் அனைத்தையும் நோக்கும்பொழுது, வளர்ச்சி குறைந்த நாடுகளில் தேசிய உணவு இருப்புகளை ஏற்படுத்த உலக உணவு உபரிகளைப் பயன்படுத்தித் திட்டமிடல் மிகவும் முக்கியம் என்பதில் சந்தேகமில்லை. உலக உணவு உபரிகளை வழங்கும் திட்டத்தினை ஒரு தடவை செயலாக்கிவிட்டால், உபரி நாடுகள் ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து இப் பொறுப்பினை நிகழ்த்த வேண்டியதில்லை என்பது ஆதரவான மற்றொரு கருத்தாகும்.

எனினும், நிறைவேற்றுதலுக்குரிய தேசிய உணவு இருப்புத் திட்டத்தினைக் குறிப்பிட்ட நாடுகள் நன்கு சிந்தித்து முடிவு எடுத்தாலொழிய, இக் குறிக்கோளுடன் இந் நாடுகளுக்கு உபரிகளை வழங்குவதில் பயனில்லை என்பதனையும் வலியுறுத்த வேண்டும். எனவே, வளர்ச்சி குறைந்த நாடுகளில் தேசிய உணவு இருப்புகளை உண்டாக்க உலக உணவு உபரிகளைப் பயன்படுத்தும்பொழுது ஒரு முக்கிய விதியினை வளர்ச்சி குறைந்த நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். பிரச்சினைக்குரிய வளர்ச்சி குறைந்த நாடுகளில் (அ) உணவு இருப்புகளைப் பாதுகாத்து வைக்கக்கூடிய வசதிகள் வேண்டும்; அதாவது கிடங்குகள் வேண்டும்; (ஆ) இத்தகைய இருப்புகளை நன்கு நிருவகிக்கத் தேவைப்படும் உள்நாட்டு நிருவாக இயந்திரம் வேண்டும்; (இ) பண்ணை உற்பத்தியைப் பெருக்க உதவும் வசதிகளையும் தூண்டுதல்களையும் கொடுக்கின்ற தக்க விலைக் கைக்கோள் ஒன்றினைப் பின்பற்றவேண்டும்.

தங்களுடைய மூல வளங்களைக்கொண்டு தேவையான கிடங்குகளை ஏற்படுத்த அநேக நாடுகளினால் முடியாது. தேசிய உணவு இருப்புகளை அமைக்கத்தேவைப்படும் வளர்ச்சியினையும் திட்டமிடுதலையும் நிறைவேற்றக்கூடிய நிருவாக அதிகாரிகளை நியமனம் செய்வதும்கூடப் பல நாடுகளுக்குக் கடினமே. எனவே, தேசிய உணவு இருப்புகளை ஏற்படுத்த வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு உதவவேண்டுமெனில், துவக்க கட்டங்களில் உணவு உபரிகளை வழங்கினால்மட்டும் போதாது; (அ) கிடங்குகளுக்காகும் செலவுகளை ஈடுகட்ட நிரப்பு நிதிகளையும் வழங்கவேண்டும்; (ஆ) இத்தகைய இருப்புகளைத் திட்டமிடுதலுக்குத் தேவைப்படும் தொழில் நுண்ணியல் சார்ந்த உதவியினையும் வழங்குதல் வேண்டும். இருந்தபோதிலும், இத்தகைய இருப்புகளை இயக்குவதற்காகும் அன்றாடச் செலவுகளை வளர்ச்சி குறைந்த நாடுகளே ஏற்றுக்கொள்ள வேண்டும். இச் செலவுகளில் நிருவாக அதிகாரிகளின் செலவும் விரயம், எடைக் குறைவு முதலானவற்றினால் ஏற்படும் இழப்புகளும் அடங்கும்.

இத் திட்டத்தின் எண்ணிக்கை சார்ந்த உள்நோக்கங்களைப்பற்றிய கருத்தினை இங்கு விளக்குவது பயனுடைத்தே. சுமார் 80 மில்லியன் டன்களைக்கொண்ட மொத்த உற்பத்தியுடன் கணிசமான அளவிற்கு வளர்ச்சி முதலீட்டுத் திட்டத்தையும் மேற்கொண்ட இந்தியா, 5 மில்லியன் டன்களைக் கொண்ட உணவு இருப்பினை ஏற்படுத்த முனைந்துள்ளது.

இந்தியாவைப்போலவே வளர்ச்சி குறைந்த உலகின் பிற பகுதிகளிலும் ஒரே மாதிரியான உணவு இருப்புத் தேவை உள்ளதாக எடுகோள் இட்டுக்கொண்டால், அதாவது, இந் நாடுகளின் துய்ப்பு மட்டங்களும் முதலீட்டுத் திட்டங்களும் மாறாது ஒரே மாதிரியாக இருப்பதாக எடுகோள் எடுத்துக்கொண்டால், வளர்ச்சி குறைந்த நாடுகளின் தேசிய உணவு இருப்புகளை ஏற்படுத்தத் துவக்கத்தில் தேவைப்படுவது சுமார் 20 மில்லியன் டன்களாகும்; இந்தியாவை விலக்கிவிட்டால், தேவைப்படுவது 15 மில்லியன் டன்களாகும். முன்னரே குறிப்பிட்டதுபோல, நிலவும் உணவுத் தானியங்களின் உபரி 60 மில்லியன் டன்களுக்குக் குறைவில்லை. இவற்றில் சுமார் 30 மில்லியன் டன்கள் கோதுமையாகும். மேலும், இத்தகைய உணவு எச்சங்களுடன் ஆண்டுதோறும் உணவு கூடுதலாகச் சேருகிறது. தேசிய உணவு இருப்புகளை உருவாக்கத் தேவைப்படும் உணவுத் தானியங்களின் அளவு ஒரே ஆண்டில் கிடைக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், கிடங்குகள் கட்ட நாட்களாகும்; நிறைவேற்றுதற்குரிய உணவு இருப்புத் திட்டத்தைச் செயல்படுத்தக் காலம் எடுக்கும். தேசிய உணவு இருப்புத் திட்டத்தினை உறுதியுடன் நிறைவேற்ற வளர்ச்சி குறைந்த உலகின் பெரும் பகுதிக்கு ஐந்து ஆண்டுகள் தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வைந்தாண்டுக் காலத்தில் உபரிகள் மேலும் பெருகும். துவக்க கால உணவு இருப்புத் தேவைகள் (stock requirements) 25 மில்லியன் டன்கள் என்றே எடுகோள் எடுத்துக்கொண்டபோதிலும், இப்பொழுதுள்ள உபரி இருப்புகளே போதும் எனலாம்; உபரி உற்பத்தி நாடுகளில் கிடங்குகள் காலியாகக்கூடிய பெரும் வசதியும் இதில் உள்ளது.

வளர்ச்சி குறைந்த நாடுகளிலுள்ள மூலதன முழுதும் இக் காரியத்திலேயே முடங்கிவிடுமாதலால், வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு இத் திட்டத்தின்கீழ் வழங்கப்பெறும் உணவு முழுதும் மான்ய அடிப்படையிலேயே வழங்கப்பெறுதல் வேண்டும் என நான் கருதுகிறேன். கிடங்குகள் அமைக்க நிதிகள் வழங்க வேண்டும் என்றும் நான் கருதுகிறேன். கிடங்குகள் கட்ட வழங்கப் பெறும் நிதி ஒரு முறையே கிடைக்கும்; தொடர்ந்து கிடைக்காது. சேமித்து வைக்க வேண்டிய உணவுத் தானியங்களின் மதிப்பில் சுமார் நான்கில் ஒரு பங்கு கிடங்கு அமைக்கும் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியாவின் உணவு இருப்பாகிய ஐந்து மில்லியன் டன்களையும் சேர்த்து 25 மில்லியன் டன்களாகக் கணக்

கொடுத்தால், டன் ஒன்றின் சராசரி விலை 60 டாலர்களெனில், இந்த அடிப்படையில் கிடங்கமைக்கும் செலவு 375 மில்லியன் டாலர்களாகும். இத் தொகை ஐந்தாண்டுக் காலத்திற்குத் தேவைப்படும்; அதாவது ஆண்டொன்றுக்கு 75 மில்லியன் டாலர்கள் முதலீடு செய்யவேண்டும். உணவுத் தானியங்களை வழங்கும் நாடுகள் இச் செலவினை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றும், உணவுத் தானியங்களில் உபரியினை விளைக்காத, வளர்ச்சியுற்ற நாடுகளே இச் செலவினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நான் கருதுகிறேன். குறிப்பாகக் கூறின், போருக்குப் பிந்திய துவக்க ஆண்டுகளில், மார்ஷல் உதவியின் கீழ், மான்ய அடிப்படையில், நிதிகள் பெற்றுத் தங்களுடைய பொருளாதாரங்களுக்குப் புத்துயிர் அளித்துள்ள மார்ஷல் உதவி பெற்ற நாடுகளே இச் செலவினை மான்ய அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும் என்று நான் ஆலோசனை கூற விரும்புகிறேன்.

பெருகிச் செல்லும் முதலீட்டுத் திட்டத்தின் பணவீக்கத் தவிர்ப்புத் தேவைகளைத் தேச உணவு இருப்புகள்மட்டுமே தீர்க்க முடியாது. தங்களுடைய உள்நாட்டு உற்பத்திக்கும் தேவைக்கும் இடையிலுள்ள இடைவெளியினை அடைக்கத் தேவைப்படும் உணவுப்பண்டங்களை ஓரளவிற்கு வர்த்தக அடிப் படையிலேயே இன்று வளர்ச்சி குறைந்த நாடுகள் இறக்குமதி செய்துகொண்டிருக்கின்றன. அடுத்த ஐந்து ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சித் திட்டத்தை இந் நாடுகள் துரிதப் படுத்தினால் (துரிதப்படுத்துதல் கட்டாயமே) ஆண்டு உணவுத் தேவையில் உடனடி அதிகரிப்பு நிகழும். ஆனால், இந்நாடுகளின் விவசாய உற்பத்தியில் தேவையான அதிகரிப்புகள் ஏற் படவோ அல்லது இந் நாடுகளுக்கு வேண்டிய வர்த்தக இறக்கு மதிகளின் அதிகரிப்பிற்கு நிதி வழங்கும் வல்லமையில் தேவை யான அதிகரிப்புகள் ஏற்படவோ காலம் பிடிக்கும். இந்த இடைவெளிக் காலம் 10 ஆண்டுகளுக்குமேல் இருக்காது. இக் கால அளவில், வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு நீண்ட காலத் தவணையில், வட்டியில்லாக் கடன் அடிப்படையில், உபரி உணவு களை வழங்கினால், பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் பண வீக்க விளைவுகள் தவிர்க்கப்படுவதுடன், பொருளாதார வளர்ச்சித் திட்டத்தை மேலும் தூண்டும் துணிவும் நம்பிக் கையும் இந் நாடுகளுக்கு ஏற்படும். உபரி உணவுத் தானியங்கள் மீது விதிக்கப்படும் ஆண்டு விலையினை இலக்கத்தில் குறிப்பது கடினமே. தனியார் முதலீட்டினையும் சேர்த்துள்ள பன்னாட்டு உதவியில் உணவின் வீதாசாரம்பற்றிய பழைய அனுபவ

அடிப்படையில் பார்க்கும்பொழுது, டாக்டர் ரோசன்ஸ்டீன் ரோடன் (Dr. Rosenstein Roden) குறிப்பிட்டதுபோல அடுத்த ஐந்தாண்டுகளில் உலகில் 60 சதவீதம் இது அதிகரிக்கும் என எடுகோள் இட்டுக்கொண்டால், ஐந்து ஆண்டுக் காலத்தில் கூடுதலான உணவுத் தேவை சுமார் 1·5 முதல் 2 பில்லியன் டாலர்கள் மதிப்புடையதாகும் என்றே தெரிகிறது ; அதாவது, ஆண்டொன்றுக்குக் கூடுதலாக 300 முதல் 400 மில்லியன் டாலர்கள் கொண்ட உணவு ஓட்டம் தேவைப்படும்t இந்திய அனுபவ அடிப்படையை எடுத்துக்கொண்டு, அடுத்த ஐந்து ஆண்டுகளில் உணவு உற்பத்தியினைப் பெருமளவு பெருக்கும் திட்டத்தின் ஈடு செய்யும் விளைவுகளையும் கணக்கிட்டால், (இது சுமார் 20-25 மில்லியன் டன்களாகும்.) வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குக் கூடுதலாகத் தேவைப்படும் உணவுபற்றிய புள்ளி விவரமும் ஓரளவிற்கு இவ்வாறே அமையும். வளர்ச்சி குறைந்த நாடுகளில் முதலீட்டினைப் பெருக்குவதைத் தொடர்ந்து தேசிய வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பினைப்பற்றிய புள்ளிவிவரத்தைக் கணக்கிடுவதன் விளைவாக ஏற்படும் உணவுத் தேவையின் பெருக்கத்தை சுமாராக கணக்கெடுத்தால் அதே புள்ளி விவரம் கிடைக்கும். எனவே, அடுத்த 5 ஆண்டுகளில், பொருளாதார வளர்ச்சியின் பணவீக்க விளைவுகளைச் சமாளிக்கக் கூடுதலாகத் தேவைப்படும் உணவு இறக்குமதி, 300-400 மில்லியன் டாலர்கள் மதிப்புடையதாக இருக்கும் என்று தற்காலிகமாக நாம் கணக்கிட முடியும்.

பொது முதலீட்டுத் திட்டங்களின் விளைவாகத் தேவைப்படும் உணவினை, உபரிகளைக்கொண்டு சமாளிக்கவேண்டும் என்பது உண்மையே. ஆனால், இந்தியாவைப்போலவே முழுமையான பொருளாதாரத் திட்டங்களை அநேக நாடுகள் தீட்டவில்லை என்பதனையும் நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும். இத்தகைய நாடுகளில், நிறையத் தொழிலாளர்களைக்கொண்டு சிறப்பாகவே பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைத் துவக்குவதற்கு உணவு உபரிகளைப் பன்படுத்தும் வாய்ப்புகள் நிரம்ப உள்ளன. இத்தகைய திட்டங்களில் நேரடியாகவே ஈடுபடுத்தப்பெற்ற தொழிலாளர்களுக்குத் தேவைப்பட்டால் உணவு உபரிகளையே பயன்படுத்தி அவர்களுக்குரிய கூலியினை ஈடுசெய்யலாம். இம்முறையிலே நிறைவேற்றப்படுகின்ற திட்டங்களுக்கு மற்றுமோர் வசதியும் உள்ளது ; அதாவது, இத் திட்டங்களை சிறு அளவு பாசன வேலைகள், சாலைகள் அமைத்தல், வரப்பிடுதல் (Coutour bunding) முதலான உள்நாட்டு விவசாய உற்பத்தி வளர்ச்சியுடன் இணைத்துவிடலாம்.

எனினும், உபரியினைப் பெறும் நாடுகள் இறக்குமதி செய்யப்பட்ட உபரி உணவினைத் தொழிலாளர்களுக்குக் கூடுதலான கூலியாக வழங்கும்பொழுது, உள்நாட்டில் உற்பத்தியான உணவுத் தானியங்களுக்குரிய உள்நாட்டுச் சந்தைகள் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில் எச்சரிக்கையுடன் திட்டமிடல் வேண்டும். இத்தகைய திட்டங்களில் உபரி உணவுகளைப் பெருமளவில் பயன்படுத்துதற்கு முன்னர், ஓரிரண்டு மாதிரித் திட்டங்களை வகுத்துச் செயல்படவேண்டியது அவசிய மெனலாம்.

இத்தகைய தொழிலாளர் செறிவுள்ள திட்டங்களின் (labour-intensive projects) முழுச் செலவினையும் உணவு உபரி மட்டுமே சரிக்கட்ட முடியாது. மொத்தச் செலவில் குறை நிரப்பான இனங்கள் 30 முதல் 50 சதவீதம் இருக்கும் என்று பொருளாதார வளர்ச்சிக்கு உணவு உபரியினைப் பயன் படுத்துவதுபற்றிய உணவு-விவசாய அமைப்பின் அறிக்கை கருதுகிறது. தொழிலாளர் செறிவுள்ள திட்டங்களை எடுத்துக் கொண்டால். செலவில் 50 சதவீதத்தை உணவைக்கொண்டு ஈடுசெய்தால், எஞ்சியுள்ள 50 சதவீதச் செலவினை ஏனைய மூல வளங்களைக்கொண்டு ஈடுசெய்ய வேண்டும்; இந்த மூல வளங்களில் சில உள்நாட்டிலேயே கிடைக்கலாம்; வேறுசில மூல வளங்களை இறக்குமதி செய்யவேண்டும். இத்தகைய உள் நாட்டையும் வெளிநாடுகளையும் சார்ந்த குறைநிரப்பான மூல வளங்கள் கிடைக்காதபொழுது, பொருளாதார வளர்ச் சிக்கான உள்நாட்டுத் திட்டங்களில் உணவு உபரிகளைப் பயன் படுத்தமுடியாது. எனவே, பொருளாதார வளர்ச்சிக்கான தொழிலாளர் செறிவுள்ள திட்டங்களில் நேரடியாகப் பயன் படுத்த வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு உணவு உபரிகளை வழங்கும்பொழுது, வழங்கும் நாடுகள் ஓரளவிற்குக் குறை நிரப்பான மூலவளங்களையும் (supplementary resources), ஓரள விற்கு இறக்குமதித் தேவைகளுக்கு வேண்டிய அன்னியச் செலாவணியையும் வழங்குதல் வேண்டும் என்று நாங்கள் ஆலோசனை கூறுகிறோம். உபரி உணவினை வழங்கும் ஏஜென் சியும் பன்னாட்டு வளர்ச்சி சங்கமும் அளிக்கும் உதவியினை இணைப்பது நல்லது என்று நாங்கள் கருதுகிறோம். வேறு வகையில் சொல்லவேண்டுமெனில், பாக்கேஜ் முறையினை (package deals) வளர்ச்சி குறைந்த நாடுகள் மேற்கொள்ளலாம். அதாவது, பொருளாதார வளர்ச்சிக்குவேண்டிய தொழி லாளர் செறிவுள்ள திட்டங்களுக்காகும் உணவுச் செலவுக்கும்

இறக்குமதிச் செலவுக்கும் உதவி பெறலாம். ஆனால், இத் திட்டங்களுக்கு வேண்டிய கூடுதலான உள்நாட்டு மூல வளங்களை இந் நாடுகள் திரட்டவேண்டும்.

இந்தியாபோன்ற நாடுகளில் இத்தகைய திட்டங்கள் ஓரளவிற்கு ஐந்தாண்டுப் பொருளாதாரத் திட்டங்களில் இடம் பெற்றுள்ளன. ஐந்தாண்டுத் திட்டத்திற்குரிய பொது நிதியாக்கத்தில் மேலே குறித்துள்ள திட்டங்களின் நிதித் தேவையும் இடம்பெற்றுள்ளது என்பது தெரிகிறது. வேறு பல நாடுகளில் இத்தகைய ஐந்தாண்டுத் திட்டங்கள் இல்லை. ஆனால், அந் நாடுகளில் தொழிலாளர் செறிவுள்ள திட்டங்களை மேற்கொள்ளப் பெரும் வாய்ப்பு உள்ளது. அந் நாடுகளில் பொருளாதார வளர்ச்சிக்கான தொழிலாளர் செறிவுள்ள திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தத் தொழில் நுண்ணியல் சார்ந்த உதவியளித்தல் அவசியமே. ஐந்தாண்டுத் திட்டத்தினை உருவாக்கியுள்ள இந்தியாவிலும்கூட, உபரி உணவுகளை இக் காரியத்திற்காக அளித்தால், பொருளாதார வளர்ச்சிக்கு என கிராமங்களில் தொழிலாளர் செறிவுள்ள திட்டங்களை மேற்கொள்ளும் வாய்ப்பினைப் பெருக்கமுடியும். நன்கு நிருவகிக்கப்படும் பொருளாதாரங்களைக்கொண்ட நாடுகளின் திட்டங்களிலும்கூட ஓரளவிற்குத் தளர்ச்சி எப்பொழுதும் நிலவுவது உண்டு. போதுமான அளவுக்குத் தூண்டுதல் அளிக்கப்பெறின், இந்தியாபோன்ற நாட்டிலுங்கூட இத்தகைய உபரி உணவுகளை நல்லவண்ணம் பயன்படுத்தக் கூடுதலான உள்நாட்டு மூலவளங்களைச் சேகரிக்கமுடியும்.

தொழிலாளர் செறிவுள்ள திட்டங்களுக்கு உணவு உபரிகளை வழங்கினால், இந்த உபரிகளை நேரடியாக ஆக்கபூர்வமான முதலீடாக மாற்றமுடியும். இத்தகைய தொழிலாளர் செறிவுள்ள திட்டங்களின் ஈர்க்கும் வல்லமையையும், இத் திட்டங்களில் பயன்படுத்தக் கிடைக்கும் உபரி உணவுகளின் அளவின் ஈர்க்கும் வல்லமையையும் வளர்ச்சி குறைந்த நாடுகளில் துல்லியமாகக் கணக்கிடுதல் இயலாது. குழப்பமூட்டும் எண்ணற்ற நிருவாகப் பிரச்சினைகள் எழும்; மேலும், உபரி உணவுகளைப் பயன்படுத்துதலினால் உள்நாட்டு விவசாயிகள் மீது ஏதேனும் கேடான விளைவு ஏற்படுவதைத் தடுக்கும் பிரச்சினையும் எழும். மாதிரித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டபோதிலும்கூட, இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்; தீர்வுகாண வேண்டும்.

தற்காலிகமாக நான் ஓர் ஆலோசனை கூறுவேன். இக் காரியத்திற்கு 50—100 மில்லியன் டாலர்கள் மதிப்புள்ள உணவினை அளித்தால், தேவையான அளவிற்குக் கூடுதலான அன்னியச் செலாவணியைப் பன்னாட்டு நிதியாக்க ஏஜென்சிகள் வழங்குவதற்கு உறுதியுடன் முன்வந்தால், பொருளாதார வளர்ச்சிக்கான இத் திட்டங்களை மேற்கொள்வதற்கு வளர்ச்சி குறைந்த நாடுகள் தூண்டுதல் பெற்று முன்வரும். உணவைப் பொறுத்தவரையில், ஐத்தாண்டுக் காலத்திற்கு 250—500 மில்லியன் டாலர்கள் மதிப்புள்ள உபரி உணவினைப் பயன் படுத்துதலையே இது குறிக்கும். இத்தகைய தொழிலாளர் செறிவுள்ள திட்டங்களைச் செயல்படுத்தவும், உபரி உணவு களைப் பயன்படுத்தவும் தேசிய நிருவாக இயந்திரம் ஒன்று அவசியம் வேண்டும் என்பதனையே வலியுறுத்தவேண்டும். என்னுடைய கருத்தின்படி, வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு உபரி உணவுகளை வட்டியில்லா, நீண்ட கால அடிப்படையில் கொடுக்கமுடியும்.

பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்புள்ள வேறு சில திட்டங்களில், வர்த்தகம் சாராத அடிப்படையில் உணவு இறக்குமதிகளைப் பெறுவதன்மூலமாகப் பொருளாதார வளர்ச்சியை மேலும் உயர்த்த முடியும். உதாரணமாக, விவசாயப் பொருளாதாரத்திற்குத் தேவைப்படும் சில அமைப்புரீதியான மாற்றங்கள் துவக்கத்தில் உற்பத்திமீது அடிக்கடி கேடு சூழும் விளைவினை ஏற்படுத்தாது என்ற போதிலும், நிச்சயமாகச் சந்தைக்கு எடுத்துச் செல்வதில் கேடான விளைவினை உண்டாக்கும். பெரும் எஸ்டேட்டுகளை உடைத்திடும் விளைவினையும், சிறு விவசாயிகளுக்கோ அல்லது விவசாயத் தொழிலாளர்களுக்கோ நிலத்தினைப் பகிர்ந்தளிக்கும் விளைவினையும் உண்டாக்கும் நிலச் சீர்திருத்தங்கள், உற்பத்தி செய்யும் வர்க்கத்தினரின் உணவுத் துய்ப்பை உயர்த்தும் விளைவினையும், நகரத்து வர்க்கத்தினருக்கும் தொழிற்றுறை வர்க்கத்தினருக்கும் வேண்டிய உணவு அளிப்பினைக் குறைக்கும் விளைவினையும் உண்டாக்கும்; உயர்ந்து செல்லும் முதலீட்டுச் சூழ்நிலைகளில் இது நிகழ்ந்தால், பணவீக்கம் ஏற்படலாம். ஆனால், பணவீக்கத்திற்குப் பயந்து நிலச் சீர் திருத்தங்களைத் தள்ளிவைத்தாலோ, அல்லது நிறைவேற்றாது ஒதுக்கினாலோ, விவசாய உற்பத்தியின் அமைப்புரீதியான அடிப்படை உற்பத்திப் பெருக்கத்திற்குத் தடையாகவே அமையும். எனவே, நிலச் சீர்திருத்தத் திட்டங்களை நிறை வேற்ற முனைகின்ற வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு ஆதரவாக,

5—10 ஆண்டுகளில் தற்பொழுது நிலவும் சந்தை அளிப்புகளுக்கும் துவக்கக் கட்டங்களிலுள்ள நிலச் சீர்திருத்தங்களின் விளைவாக ஏற்படக்கூடிய சந்தை அளிப்புக் குறைவுக்கும் இடையிலுள்ள இடைவெளியினை நீக்குகின்ற வகையில், குறைந்தபட்ச உபரி உணவுகளையேனும் வழங்குதல் வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. எந்த அளவிற்கு உபரி உணவினை வழங்கநேரிடும் என்று கணக்கிட்டுக் கூறமுடியாது. ஆனால், நிலச் சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை நோக்கும் பொழுது, அநேக வளர்ச்சி குறைந்த நாடுகளில் நிலச் சீர் திருத்தங்களை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஆவதை நோக்கும்பொழுது, இதன் விளைவாகத் தனித்த தூண்டுதல் அளிக்கப்படவேண்டிய அவசியத்தை நோக்கும்பொழுது, ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 50 மில்லியன் டாலர்கள் மதிப்புள்ள சுமார் 4 மில்லியன் டன்களை ஐந்து ஆண்டுகளுக்கு அளித்தால் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு வேண்டிய இறுதி நிலை அளிப்புகள் (marginal supplies) கிட்டும் என்றும், நிலச் சீர்திருத்தத் திட்டங்களை இவ் அரசாங்கங்கள் நம்பிக்கையுடன் நிறைவேற்றும் என்றும் நாங்கள் கருதுகிறோம். இத் திட்டம் குறித்திடும் உணவுத் தானியங்களை குறிப்பிட்ட நாடுகளின் தேச உணவு இருப்புகளுடன் இணைத்திடுதலும் பொருத்த முடைத்தே; ஏனெனில், சந்தை அளிப்புகளில் உள்ள ஏற்ற இறக்கப் பிரச்சினைக்கு நல்லவண்ணம் தீர்வு காணக்கூடிய அமைப்பு, தேச உணவு இருப்பு சார்ந்த அமைப்பு ஆகும். இப் பேரம் ஒரே ஒரு தடவைதான் நிகழும் என்பதனையும் இது தொடர்ந்து கிடைக்காது என்பதனையும் இங்கு எடுத்துக் காட்டுதல் வேண்டும்.

இதுவரையில் எடுத்தோதிய திட்டங்கள் அனைத்தும் பொருளாதார வளர்ச்சியுடன் நேரடியாக இணைக்கப்பெற்றுள்ளன. உபரி உணவுகளைப் பயன்படுத்துதலையே இத் திட்டங்கள் குறிக்கின்றன; ஆனால், அதே வேளையில் சலுகை அடிப்படையில் உபரி உணவுகளைக் குறுகிய காலத்திற்கு அல்லது இடை மாறுபாட்டுக் காலத்திற்குமட்டுமே பயன்படுத்துதலை இத் திட்டங்கள் குறிக்கின்றன. உணவுப் பற்றுக்குறை நாடுகள், பெருகிய உள்நாட்டு உற்பத்திமூலமாகவோ அல்லது வர்த்தக ரீதியான இறக்குமதி அதிகரிப்பின்மூலமாகவோ அல்லது இரண்டின்மூலமாகவோ தங்களுடைய பற்றுக் குறைகளைச் சமாளிக்கும் வல்லமைகளை இறுதியாகப் பெறுகின்ற விளைவினை இத் திட்டங்கள் குறிக்கின்றன. எனவே,

மேலே குறித்துள்ள குறிக்கோள்களை நிறைவேற்ற உலக உணவு உபரிகளைப் பயன்படுத்துவதில் மிகவும் உறுதியான பொருளாதார நியாயம் இருக்கிறது.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சிக்கு வழங்கப்பெறும் உபரி உணவின் அளவுகளை நான் இங்குக் குறித்திடுவேன். பொருளாதார வளர்ச்சிக்காக ஏற்கெனவே பயன்படுத்தப்பெறும் உபரி உணவுகளின் அளவுடன் இதனையும் சேர்க்கவேண்டும்.

	ஆண்டு சராசரி (மில்லியன் டாலர்களில்)
தேச உணவு இருப்புகள்	200
பணவீக்கத் தவிர்ப்பு இறக்குமதிகள்	300—400
தொழிலாளர் செறிவுள்ள திட்டங்கள்	50—100
நிலச் சீர்திருத்தங்கள்	50
மொத்தம்	600—750

ஐந்து ஆண்டுக் காலத்திற்கு, கூடுதலான உபரி உணவுகளைப் பயன்படுத்துவதற்கு 3,000—3,750 மில்லியன் டாலர்கள் மதிப்புள்ள உணவு தேவைப்படும் என்று தெரிகிறது. தற்பொழுது பயன்படுத்தப்படும் உபரி உணவின் அளவு சுமார் மூன்று பில்லியன் டாலர்கள் மதிப்புள்ளதாகும்; இதனையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். எனவே, மொத்தம் 6 முதல் 7·5 பில்லியன் டாலர்களாகும். உபரி உணவுகள் தேவைப்படும் வளர்ச்சித் திட்டங்களை நல்லவண்ணம் மேற்கொள்வதற்காகும் தவிர்க்கமுடியாத காலக் கூறினைக் கருத்தில் வைத்து, உணவு சாராத மூல வளங்களைப் பெறுவதற்காகும் காலத்தினையும் கருத்தினையும் கருத்தில்வைத்து நோக்கும்பொழுது அடுத்த ஐந்து ஆண்டுகளில் பயன்படுத்தவேண்டிய மொத்த உபரி உணவின் மதிப்பினை உண்மையாக, ஓரளவிற்குப் பிற்போக்கான முறையில் கணக்கிட்டால் **6·5** பில்லியன் டாலர்களாகும்.

இப்பொழுதுள்ள உபரிகளின் மதிப்பு 7·5 பில்லியன் டாலர்களாகும். இவற்றில் 4 பில்லியன் டாலர் மதிப்புள்ள உணவு, உபரி உணவினை வழங்குதல் (surplus disposal) என்னும் பணிக்குப் பயன்படும். ஆண்டொன்றுக்குக் குவியும் உபரிகள் ஒரு பில்லியன் டாலர் மதிப்புள்ளனவாகும்; இவையனைத்தையும் உபரி உணவினை வழங்குதலின் பயன்படுத்தவேண்டும். ஏனெனில், உபரி நாடுகளுக்கும் ஏற்றுமதி நாடுகளுக்கும் வேண்டிய தேச இருப்புகளையும், வர்த்தக இருப்புகளையும்

தற்பொழுதுள்ள இருப்பினைக்கொண்டே ஏற்படுத்த, முன்னரே போதுமான அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது. இவ்விரண்டையும் இணைத்துப் பார்க்கும்பொழுது, அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் உபரி வழங்குதலுக்குக் கிடைக்கும் உணவின் டாலர் மதிப்பு 9 பில்லியன் டாலர்களாகும்.

இவ்வாறு, உணவு உபரி அளிப்புகள் சுமார் 9 பில்லியன் டாலர்களாகும். ஆனால், உபரி வழங்குதலுக்குக் கிடைக்கக் கூடியது சுமார் 6 பில்லியன் டாலர்களே. எனினும், சுமார் 2.5 பில்லியன் டாலர்கள் இன்னும் உபரியாகவே உள்ளன. இவை, பொருளாதார வளர்ச்சிக்கு அல்லாமல் வேறு காரியங்களுக்குக் கிடைக்கும்.

எனவே, இக் காரியத்திற்குத் தேவைப்படும் உணவு அளவினைப் பரிசீலனை செய்யும்பொழுது ஒன்று தெரிய வருகிறது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய கூடுதலான உபரிகளுடன் ஏற்கெனவே உள்ள இருப்புகளிலிருந்து தற்பொழுது கிடைக்கும் உபரிகளைக் கூட்டினால் கிடைக்கும் மொத்த உபரி உணவுகள், மேலே குறித்துள்ள பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய உணவுத் தேவைக்கும் அதிகமாகவே உபரி உணவினை வழங்கும் என்று தெரிகிறது. உபரி உணவுகள் போதுமான அளவிற்குக் கிடைக்கவில்லை என்ற தொல்லையின் காரணமாகப் பொருளாதார வளர்ச்சிக்கு உபரி உணவினைப் பயன்படுத்தும் பிரச்சினை எழவில்லை; நிதி பற்றிய தொல்லையும் நிருவாக அமைப்புப்பற்றிய தொல்லையுமே உள்ளன. இத் தொல்லைகளை நான் ஆராய முனைவேன்.

நிதிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஐக்கிய அமெரிக்கா என்னும் மிகப்பெரும் உணவு (உபரி) உற்பத்தி செய்யும் நாடு, கடந்த ஆறு ஆண்டுகளாகத் தீர்வு காண உண்மையாகவே முனைந்துள்ளது. மானியங்கள்மூலமாகவோ அல்லது குறைந்த வட்டியுள்ள நீண்டகாலத் தவணையில் கடன் வழங்குதல்மூலமாகவோ அல்லது உள்நாட்டுச் செலாவணியில் விற்பதன்மூலமாகவோ உதவியளிப்புத் திட்டத்தின் கீழ் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு இப்பொழுது உபரி உணவுகள் அளிக்கப்படுகின்றன. அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில், உபரி உணவினைக் கூடுதலாகப் பயன்படுத்துகின்ற திட்டத்திலும் இதே விதிகளைப் பின்பற்றக்கூடும். வட்டியில்லாக் கடன்களாக இவை அமைதல் வேண்டும் என்று மட்டுமே நான் குறிப்பிடுவேன்; ஏனெனில், உணவு சாராத கடன்களின் மீதுள்ள வட்டிகளைச் செலுத்துவதற்கும்,

அசலினைத் திரும்பச் செலுத்துவதற்கும் வேண்டிய நிதியினை உருவாக்கும் வாய்ப்புள்ள ஏற்றுமதி வல்லமையினைப் பெருக்கு வதற்கு வளர்ச்சி குறைந்த நாடுகள் தொல்லைகளை மேற்கொண் டுள்ளன. இந்த நிலை, வளர்ச்சி குறைந்த நாடுகளின் மொத்த மாக உள்ள பொறுப்புகளில் மிகப்பெரும் பகுதியாகும். மேலும், உணவு உபரிகளானவை, கட்டுப்பாடற்ற டாலர் நிதி களுக்கும் மாறான பகுப்பினைச் சார்ந்தவையாகும். உபரி உணவுகளை வழங்குதலானது, உபரி உற்பத்தி நாடுகளுக்குரிய தொடர்ந்த செலவினை உள்ளடக்கிய நிலையான பொறுப்பாகும். எனவே, பொருளாதார வளர்ச்சிக்கு வழங்கப்பெறும் உபரி உணவுகளனைத்தும் வட்டியில்லாக் கடனடிப்படையில் இருக்க வேண்டும் என்றும், தேச உணவு இருப்புகளை உருவாக்க வழங்கப்பெறுகின்ற உபரி உணவுகளனைத்தும் மான்ய அடிப் படையில் இருக்க வேண்டும் என்றும் நான் குறிப்பிடுவேன்.

உள்நாட்டுச் செலாவணியில் உபரி உணவினை விற்பது குறித்து எனக்கு வேறு கருத்துகள் உண்டு. இத்தகைய உள் நாட்டுச் செலாவணி இருப்புகளை உருவாக்குதல், வளர்ச்சிப் பொருளாதாரத்தைக் குழப்பியதுபோல் வேறு எந்தப் பிரச்சி னையும் குழப்பவில்லை; அதுபோலவே, உபரியினை விற்கும் நாடுகளுக்கும் அதனை வாங்கும் நாடுகளுக்கும் இடையில் நிகழும் பேரங்களின்மூலமாக, கூடுதலான காரியங்களுக்கும் பயனுகக்கூடிய கூடுதலான வளங்களே இத்தகைய உள்நாட்டுச் செலாவணி இருப்புகளாகும் என்ற எண்ணம் வளர்ச்சிப் பொருளாதாரத்தைக் குழப்பியதுபோல் வேறு எதுவும் குழப்பவில்லை. மூலவளங்களைக் குறிக்காத அன்னியச் செலா வணிப் பிரச்சினை ஒரு தனிப் பிரச்சினையாகும். இதனை உபரி உணவு வழங்குதலுடன் சேர்த்துக் குழப்பிக்கொள்ளக் கூடாது. உபரி உணவினை வழங்குதல் உள்நாட்டுச் செலா வணியில் விற்பதன்மூலமே மேற்கொள்ளப்பட்டது என்பது வரலாற்று உண்மையே. வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொரு ளாதார அபிவிருத்திக்கு வழங்கப்பெறும் மூலவளங்களின் ஒரு பகுதியே உபரி உணவு எனக் கருதுவது பொருத்தமுடையதே என்று இந்திய அனுபவம் தெளிவாகக் காட்டுகிறது. இந்தி யாவில் உபரி உணவினைப் பயன்படுத்துதலானது, பொது வளர்ச்சித் திட்டத்துடன் இணைக்கப்பெற்றிருக்கிறதேயன்றி, தனித்த திட்டங்களுடன் அன்று. உணவுத் தானியங்களை இறக்குமதி செய்வதற்கு வேண்டிய அன்னியச் செலாவணி கிடைக்கப்பெறுது, தங்களுடைய சொந்தச் செலாவணி வளச் சாதனங்களைமட்டும் கிடைக்கப்பெற்றுள்ள நாடுகள் இருப்பின்,

இதன் காரணமாகவே பரிவர்த்தனைப் பிரச்சினைகளை உடைய நாடுகளாக இவை இருப்பின், உள்நாட்டுச் செலாவணிக்கே உபரி உணவுகளை விற்பதில் பொருளுண்டு. ஆனால், என்னுடைய கருத்தின்படி, இந்த நிலை விதிவிலக்கு நிலையேயன்றி, இயல்பான நிலையன்று.

நிருவாக அமைப்புப் பிரச்சினை இன்னும் தொல்லை நிறைந்தது. சிறப்பாக, வாங்குகின்ற நாடுகளில் நிருவாக அமைப்பு மிகவும் தொல்லையை உண்டாக்கவல்லது. தங்களுடைய பொருளாதார வளர்ச்சியைத் திட்டமிட்டு நிறைவேற்றுகின்ற வல்லமையைப் பொறுத்தவரையிலும், இன்னும் குறிப்பாக இக் குறிக்கோளினை நிறைவேற்ற உபரி உணவுகளைப் பயன்படுத்துதலிலும் வளர்ச்சி குறைந்த நாடுகள் பெருமளவிற்கு வேறுபட்டுக் கிடக்கின்றன. பல்வேறு நாடுகள் சார்புள்ள அடிப்படையைவிட இரு நாடுகள் சார்புள்ள அடிப்படையில் உபரி உணவுகளைப் பெறுகின்ற மனப்பான்மையைப் பொறுத்தவரையிலும் இந் நாடுகள் வேறுபட்டுக் கிடக்கின்றன. ஆனால், தற்பொழுதுள்ள உபரியின் பெரும்பகுதி ஒரே நாட்டினிடமே உள்ளது என்ற உண்மையையும், அந்த நாடுதான் வெளிப்படையாகவும் பெருந்தன்மையுடனும் உபரியினை வழங்குகின்றது என்ற உண்மையையும் அலட்சியம் செய்துவிடக் கூடாது. உபரி உணவினை உற்பத்தி செய்கின்ற ஏனைய நாடுகளும் பெரும் பொறுப்பு ஏற்கவேண்டும் என்றும், உபரி வழங்குதல் துறையில் பன்னாட்டு அமைப்பு அல்லது ஐக்கிய நாடுகள் அமைப்பு நுழைதல் வேண்டும் என்றும் அந்த நாடு கருதுவது உண்மையே. வர்த்தக நோக்குள்ள ஏற்றுமதியாளர்களும் வேறு காரணங்களுக்காக இக் கருத்தினை ஏற்றுக் கொண்டுள்ளனர். இரு நாடுகள் சார்ந்த அடிப்படையில், உபரி வழங்குதலை மேற்கொண்டுள்ள இன்றைய அமைப்பினைக் குலைத்துவிடக் கூடாது; குறிப்பாக, மிகச் சிறு நாடுகளுக்கும், பன்னாட்டு நுட்பத் தொழில் உதவியினைக் கோரும் நாடுகளுக்கும், உபரி உணவுகளைப் பயன்படுத்துதலைப் பொறுத்தவரையில் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டுவதில் ஆலோசனையைக் கோருகின்ற நாடுகளுக்கும் உபரி உணவினை வழங்குவதில் சம்மதம் தெரிவிக்கப்பெற்ற அளவினை நிருவகிக்க பன்னாட்டு ஏஜென்சியை உருவாக்க வேண்டும்; இதுவே நடைமுறைக்கேற்ற தீர்வாகும். உலகின் எப் பகுதியிலும் பஞ்சத்தினாலும், வறட்சியினாலும், வெள்ளப்பெருக்கினாலும் எழுகின்ற தேவைகளைப் பூர்த்திசெய்ய நெருக்கடி நிலைமை என்னும் அடிப்படையில் பன்னாட்டு நிவாரணம் அளிக்க மிகவும் பொருத்த

மான அமைப்பாக உபரி வழங்குதல் துறையிலுள்ள பன்னாட்டு ஏஜென்சி அமையும் என்ற உண்மையானது, இத்தகைய ஏஜென்சியை அமைக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தும். உபரி பெறும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியே இத் திட்டத்தின் அடிப்படையான குறிக்கோள் என்பதனைக் கவனத்தில் வைக்கவேண்டும். மேலும், அதிகரித்த உள்நாட்டு உற்பத்தி மூலமாகவோ அல்லது வர்த்தகம் சார்ந்த இறக்குமதிகளுக்கு வேண்டிய நிதியினை உருவாக்கும் வல்லமையைப் பெருக்குவதன் மூலமாகவோ அந்த நாடு தனது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் திறனை உண்டாக்குவதே இத் திட்டத்தின் அடிப்படையான குறிக்கோள் என்பதனையும் கவனத்திலிருத்த வேண்டும். குறிப்பிட்ட நாடு, உபரி பெறுதலை முடிவில் நிறுத்தி விட்டு, அதற்குப் பதிலாக உள்நாட்டிலேயோ அல்லது வெளி நாட்டிலேயோ இயல்பான வர்த்தகத்தை உண்டாக்குதலே உபரி வழங்கும் திட்டத்தின் வெற்றிக்கு இறுதியான அறிகுறியாகும். இத் திட்டத்தினைச் செயல்படுத்துவோர் இதனை நெஞ்சில் நிறுத்த வேண்டும். தீர்மானிக்கப்பெற்ற பன்னாட்டு ஏஜென்சியினை உபரி வழங்கும் ஏஜென்சி பின்பற்ற வேண்டியது கடமையாகும்.

உபரி உற்பத்தி நாடுகளும் அதனைப் பயன்படுத்தும் நாடுகளும் ஒத்துழைக்கவில்லை எனில், இந்த ஏஜென்சி நன்கு இயங்காது என்பது தெளிவே. குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கேனும் ஏற்றுக்கொள்ளப்பெற்ற உபரி உணவு அளவுகளை உபரி உற்பத்தி நாடுகள் ஏஜென்சிவசம் ஒப்படைக்கத் தயாராக இருக்க வேண்டும்; ஆனால், ஏஜென்சி ஒப்படைக்கப்பெற்ற உபரி உணவினை உடனே எடுத்து உடைமையாக்கிக் கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை. பல நாடுகள் சார்ந்த ஏற்பாடுகளுக்குப் பதிலாக, இரு நாடுகள் சார்ந்த ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்ட நாடுகள் தவிர ஏனைய உபரி பெறும் நாடுகள் உபரிகளைப் பெறுவதற்கும், பெற்ற உபரிகளை வளர்ச்சிக்குப் பயன்படுத்துதற்கும் ஏஜென்சியினை அணுகுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். உண்மையான உபரிகளுடன் கொஞ்சம் விதிகளற்ற நிதிகளையும் இந்த ஏஜென்சிக்கு வழங்க வேண்டியது அவசியமாகும். இல்லையெனில், இத் திட்டத்தினை ஏஜென்சி செம்மையாக நிறைவேற்ற முடியாது. மேலும், உலகில் வறட்சியினாலும், பஞ்சங்களினாலும், வெள்ளப் பெருக்கினாலும் ஏற்படுகின்ற நெருக்கடி கால உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பினையும் இந்த ஏஜென்சி ஏற்றுக் கொள்ளவேண்டும்; இதற்கு வேண்டிய இருப்பு, ஏஜென்சிக்குக்

கிடைத்தல் வேண்டும். இதிலும்கூட உணவு இருப்பினை ஏஜென்சி எடுத்துக் கைவசமாக்கி உடைமையாக்கிக்கொள்ள வேண்டியதில்லை. நாட்டின் அந்தஸ்தைப் பொறுத்தும், அதன் உணவு இருப்புகளின் அளவையும் தன்மையையும் பொறுத்தும், நெருக்கடியினைச் சமாளிக்கத் தேவைப்படும் அளவிற்குத் தக்கவாறு உறுப்பினர் நாடுகளின் தேச இருப்புகளிலிருந்து கடன் அல்லது மான்ய அடிப்படையில் உணவினைப் பெறும் உரிமை இந்த ஏஜென்சிக்கு வேண்டும். இந்த உரிமையினைப் பிரயோகிக்கும்பொழுது, செலவு, பாதிக்கப்பெற்ற நாடுகளுக்கு உணவினை எடுத்துச்செல்லும் வேகம் முதலானவற்றைச் சார்ந்த கடத்துப் பிரச்சினைகளையும் இந்த ஏஜென்சி எண்ணிப் பார்க்கும் என்பது தெளிவே. என்னுடைய கருத்தின்படி, இக் குறிக்கோளுக்காக ஒரு புதிய பன்னாட்டு ஏஜென்சியை நியமிக்கவேண்டிய அவசியமில்லை. தனது துவக்க காலத்திலிருந்தே உணவு-விவசாய அமைப்பு (FAO) இப் பிரச்சினையை ஏற்றுக்கொண்டு வந்துள்ளது. இத் துறையில் FAO பெரிதாக ஒன்றும் செய்யவில்லையெனில், அதற்குக் காரணம் உபரிகள் கிடைக்கவில்லை என்பதும், பன்னாட்டு ஏஜென்சிமூலம் உபரி உற்பத்தி நாடுகள் உபரியினை அளிக்க முன்வரவில்லை என்பதுமே ஆகும்.

இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. இப் பொறுப்பினை FAO ஏற்றுக்கொள்ளும் காலம் நெருங்கிவிட்டது. உண்மையில், துவக்கத்தில் இப் பொறுப்பு FAO-வைச் சார்ந்தது என்றே எண்ணித் திட்டமிடப் பெற்றது. தன்னுடைய மூலவளங்களைக் கொண்டே FAO இப் பெரும் பொறுப்பினை நிறைவேற்றுதல் இயலாது. கூடுதலான வளச்சாதனங்களை FAO பெறும்படி செய்வதோடு அமையாது, இதன் பொது ஆதிக்கத்தின்கீழ் உயர் அதிகாரம் படைத்த ஏஜென்சியை அமைத்து, உபரி வழங்கும் தனிச்சிறப்புள்ள பொறுப்பினை இதனிடம் கொடுக்க வேண்டும். கோட்பாடு ரீதியாக இவ் ஆலோசனையை ஏற்றுக் கொண்டால், உலகில் வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திபற்றிய பொதுப் பிரச்சினையில் ஈடுபட்டுள்ள பன்னாட்டு அமைப்புகளும், FAO-வின் உறுப்பினர் அரசுகளும் சிந்தித்துப் பார்க்க, விவரம் நிறைந்த ஆலோசனைகளை FAO வழங்க வேண்டும்.

12. பொருளாதார யுத்தோப்பியா குறித்துச் சில சிந்தனைகள்

யுத்தோப்பியா (Utopia) என்ற சொல் அண்மைக் காலத்திலேயே தோன்றியது. யுத்தோப்பியா ஓர் இலட்சிய சமூகத்தை அல்லது உத்தம சமூகத்தைக் குறிக்கும். ஆனால், இத்தகைய சமூகத்தை நாம் எதிர்காலத்தில் உண்மையில் உருவாக்கப் போகிறோமா என்பது விளங்கவில்லை; அல்லது இத்தகைய சமூகம் ஒருநாள் உண்மையாக வரும் என்ற தெளிவு ஏதுமின்றி, இத்தகைய சமூகத்தை அடையும் குறிக்கோளுடன் விடாது முயலவேண்டுமா என்பதும் விளங்கவில்லை. சுவர்க்கத்திற்கும் யுத்தோப்பியாவிற்கும் இடையிலுள்ள வேறுபாடு என்னவெனில், மரணத்திற்குப் பின்னரே சுவர்க்கத்தை அடையமுடியும்; ஆனால், உயிருடன் இருக்கும் பொழுதே ஒருவர் யுத்தோப்பியாவை அடையமுடியும் என்று சாதாரணமாக நம்புகிறார். சாதாரணமாக ஒருவர் யுத்தோப்பியாவைப்பற்றிப் பேசும்பொழுது, மனித அமைப்பிலும், மனிதத் தொடர்புகளிலும், மனித இயல்பிலும் ஆழமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ள சமூகத்தினையே யுத்தோப்பியாவாகக் கருதிப் பேசுவான்; மனிதன் முழுமையடைந்து, அன்பு செய்து, என்றுமுள சமாதானத்தைப் பேணும் சமூகத்தினையே யுத்தோப்பியாவாகக் கருதிப் பேசுவான்.

எனினும், சாதாரணமாகப் பொருளாதாரிகள் யுத்தோப்பியாக்களைப்பற்றிப் பேசுவதில்லை. கிடைப்பருமைப் பின்னணியில் தேர்ந்தெடுக்கும் பிரச்சினைகளிலேயே பொருளாதார நிபுணர்கள் கடின சித்தத்துடன் ஈடுபட்டுள்ளனர். பொருளாதார நடவடிக்கைமூலம் நிறைவேற்றுகின்ற விருப்பங்களைப் பொறுத்தவரையில், அநேக நிபுணர்கள் நடுநிலைமை வகித்தனர். உற்பத்தியினை உயர்ந்தபட்சம் பெருக்குவதற்குப் பயன்படுத்தப்பெறுகின்ற உற்பத்தி முறைகளைப் பொறுத்தவரையில், சில நிபுணர்கள் நடுநிலைமை வகித்தனர். தேவை என்பது உறுதித் தேவையிலிருந்து பிரித்துக் காட்டப்

பெற்றது; அறவியல் பொருளியலிலிருந்து பிரிக்கப்பெற்றது; இவை இரண்டின் பிந்திய பகுப்பினையே பொருளாதார நிபுணன் ஏற்றுக்கொண்டான். அண்மையில், செல்வத்தையும் நலனையும் இணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொன்மைப் பொருளாதார மரத்தில் நலன் சார்ந்த பொருளாதாரம் என்னும் புதுக் கிளையொன்று கிளம்பியுள்ளது. தொன்மைப் பொருளாதாரப் பாதையை விட்டுவிட்டு முன்னேறிவந்துள்ள சில பொருளாதார மாணவர்கள், பொருளாதாரத்தின் நடுநிலைமைக் கருத்தியலை ஏற்க மறுக்கின்றனர். நிலவும் நிலைமையினை ஏற்க விருப்பம் கொள்ளாது, நியாயமானதும் சமூக ரீதியானதுமான பொருளாதர அமைப்பினை ஏற்படுத்த, தெளிவான், திட்டமிட்ட பொருளாதார முயற்சியினை ஒழுங்குற அமைத்தல் வேண்டுமென அப் பொருளாதார மாணவர்கள் விழைந்தனர். இதே இடத்திலிருந்து துவங்கியுள்ள வேறு சிலர், பொருளாதார வரலாற்றுப் படிமுறையில் பொருளாதார வளர்ச்சிக்கான சில முழுமையான விதிகளைக் கண்டுள்ளனர்; வரலாற்றிற்குச் சடப்பொருள் சார்ந்த உலோகாயத முறையில் பொருள் கற்பித்தலை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்; முரண் நிலை ஆய்வுப் படிமுறையில் (dialectic process), மாற்றம், வளர்ச்சி ஆகியவற்றின் இயல்பான நுணுக்கமுறை அடங்கியுள்ளது என்பதனை அவர்கள் கண்டனர்; சரித்திரப் படிமுறையின் மாருத விளைவாக, சோஷலிச சமுதாயம் உருவாகித் தோன்றும் என்றும் அவர்கள் பிரகடனப்படுத்தியுள்ளனர். என்ருலும், தவிர்க்க முடியாத இவ் விளைவு இயல்பாக ஏற்படாது என்றும், தக்க வேளையில் புரட்சிமூலம் தொழிலாளர் வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றுவதன்மூலம் இவ் விளைவு நிகழும் என்றும், தொழிலாளர் சர்வாதிகாரத்தை அமைத்து உற்பத்திச் சாதனங்களை மீண்டும் திருத்தம் செய்து அமைத்து, வர்க்கமற்ற சமூகத்தை உண்டாக்க வேண்டிய சூழ்நிலைகளை ஏற்படுத்திஞல் இவ் விளைவு ஏற்படும் என்றும் அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். இவ்வாருக, முதலாளித்துவப் பொருளாதாரத்தின் துவக்ககாலத் தொன்மைப் பொருளாதார மரத்திலிருந்து, மூன்று முக்கியக் கிளைகள் தோன்றின; அதாவது, தனியார் துறையின்மீது கட்டப்பெற்ற சேமநல அரசாகிய மக்கள் முதலாளித்துவம், பொதுத் துறையும் தனித்துறையும் ஒன்றிணைந்த கலவையின் அடிப்படையில் எழுந்த சேமநல அரசாகிய சமூக ஜனநாயகம், தொழிலாளர் சர்வாதிகாரத்தின்மீதும் உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமைமீதும் எழுந்த சோஷலிச அரசு அல்லது மக்கள் ஜனநாயகம் ஆகிய மூன்று பிரதான கிளைகள்

தோன்றின. முதலாவது கிளையும் மூன்றாவது கிளையும் உற்பத்திமீதும் தூண்டுதல்கள்மீதும் கவனம் செலுத்தி வலியுறுத்தின. இரண்டாவது கிளை பகிர்வினையும், பொருளாதார நடத்தையின் சமூக விதிகளையும் வலியுறுத்தின. இம்மூன்று கிளைகளும் வளர்ச்சியுற்ற பொருளாதாரப் பின்னணியிலேயே நிலவ முடியும்.

தொன்மைப் பொருளாதார சிந்தனை என்னும் தாய் மரத்திலிருந்து கிளைகளாகப் பிரிந்த இம்மூன்று பொருளாதார சிந்தனைப் பள்ளிகளின் நன்மைகளையும் தீமைகளையும் இக்கட்டுரையில் விளக்குவது என் நோக்கமன்று. இவற்றின் ஆதரவாளர்கள் தாங்கள் எடுத்துக்கொண்டுள்ள சமூகப் பொருளாதார அமைப்புகள் முடிவான சமூக அமைப்பையே குறிக்கும் என எண்ணுவதைப் பொறுத்தவரையில், இவர்களுடைய அமைப்புகளில் யுத்தோப்பியா அம்சம் உள்ளது எனலாம். இங்கு நான் எடுத்துக்கொண்டுள்ளது பொருளாதார யுத்தோப்பியாவே; அதாவது, எந்தச் சமூகத்திலும் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நிலை நெருங்கி வரும்பொழுது என்ன நிகழ்கிறது என்பதனை ஆராய்வதுதான். வேறு முறையில் உரைப்பின், பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளுக்கு வளர்ச்சியுற்ற பொருளாதாரத்தில் அல்லது முதிர்ச்சி அடைந்த பொருளாதாரத்தில் என்ன நிகழ்கிறது? இத்தகைய சமூகத்தில் பொருளாதாரியின் (economist) பங்கு என்ன? சமூக அமைப்புத் தனியார் துறையினைச் சார்ந்ததாக இருப்பினும் சரியே, கலப்புப் பொருளாதாரத்தைச் சார்ந்ததாக இருப்பினும் சரியே, அல்லது சோஷலிசத்தைச் சார்ந்ததாக இருப்பினும் சரியே, இப் பிரச்சினை எல்லா சமூகங்களுக்கும் பொதுவாகவே இருக்கும். வளர்ச்சி குறைந்த பொருளாதாரம் நிலவும் உலகினைச் சேர்ந்த பொருளாதார நிபுணன் என்ற முறையில் இப் பிரச்சினையை அலசுவதற்கு நான் முன்வருகிறேன். பொருளாதார வளர்ச்சியின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டிய பொருளாதார நிபுணனொருவன் பொருளாதார முதிர்ச்சிபற்றிச் சிந்திப்பதும், பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பிறகு என்ன செய்யவேண்டும் என்பது பற்றிச் சிந்திப்பதும் சிறிது வியப்பிற்குரியதே. வளர்ச்சி குறைந்த நாடுகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விழையும் வளர்ச்சியுற்ற பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளின் பொருளாதாரிகளுக்கு, அவர்கள் காட்டும் கனிவிற்குக் கைமாருக நான் கனிவுடன் பிரச்சினைகளை அலசவேண்டும் என்பதே என் விருப்பமாகும். பொருளாதாரப் பிரச்சினைக்குத்

தீர்வு கண்டுள்ள அவர்களுடைய நாடுகளின் புதுப் பிரச்சினைகளை நானும் சிந்தித்து ஆலோசனைகள் வழங்கவேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

இக் கட்டுரையின் திட்டம் பின்வருமாறு: மேற்கத்திய பொருளாதாரிகள் இத் தலைப்பின்கீழ்க் கூறியிருப்பனவற்றை நான் சுருக்கமாக விளக்குகிறேன். முதலில், நவீன காலத்துத் தொன்மைப் பொருளாதார சிந்தனையின் தந்தையாகிய ஆல்ஃபிரடு மார்ஷல் அவர்களைப்பற்றி விளக்குகிறேன். அடுத்துத் தொன்மைப் பொருளாதாரத்தை நன்கு திறனாய்வு செய்து, அதற்குத் தீவிரமான புதுவாழ்வு அளித்துள்ள திரு. ஜே.எம். கீன்ஸ் அவர்களைப்பற்றி விளக்குகிறேன். கடைசியாக, அண்மையில் தங்களுடைய படைப்புகள்மூலமாக இன்றைய மேற்கத்திய சிந்தனையை இத் தலைப்பின்கீழ்த் தூண்டிவிட்டுள்ள ஜான் கால்பிரெய்த் (John Galbraith), வால்ட் ரோஸ்டோவ் (Walt Rostov) எனும் இரு நவீன அமெரிக்கப் பொருளாதார நிபுணர்களைப்பற்றி விளக்குகிறேன். பின்னர், இத் தலைப்பின் கீழ் காரல் மார்க்ஸ் என்ன உரைக்கிறார் என்பதனை விளக்குகிறேன். இறுதியில் இக் கேள்விக்கு எனது விடையினை வழங்குகிறேன்.

'தொழிலாளர் வர்க்கத்தின் எதிர்காலம்' பற்றி 1873-ல் ஆல்ஃபிரட் மார்ஷல் பேசினார். குறைந்த வருமானங்களைப் பெற்றும், கடினமான வேலை நியதிகளுக்கு அடங்கியும், தாழ்வான கலாசார வாழ்வினையும் குறைவான கல்வி வசதியையும் பெற்றும் வாழ்ந்த திறனற்ற தொழிலாளர்களே பாட்டாளி வர்க்கத்தின் பெரும்பகுதியினராக இருப்பதுகண்டு மார்ஷல் வேதனையுற்றார். இத்தகைய சமூக அமைப்பில் பலர் உழைத்தனர்; சிலர் அனுபவித்தனர். இந்த நிலை இயற்கையின் கட்டளை விதிபோல் தோன்றியது. மார்ஷல் இந்நிலையை எதிர்த்துப் புரட்சி செய்தார். அவர் பின்வருமாறு கூறுகிறார்:

'இளமைக் காலத்திலிருந்தே நமது எண்ணங்களைப் பழைய அடிமை முறைக்கிருந்த நம்பிக்கைக்கு முற்றிலும் மாறாத நம்பிக்கை ஒன்று ஆட்கொண்டிருந்தது. எண்ணற்ற மக்கள் சலிப்பூட்டுமளவிற்கு உழைக்கவேண்டும் என்றும், இவர்களுடைய உழைப்பு மற்றவர்களுக்கு நயத்தக்க நாகரிகச் சாதனங்களையும் போக வாழ்விற்கு வேண்டிய சாதனங்களையும் அளிக்கலாம் என்றும், ஆனால் உழைப்பாளிகளின் சிந்தனை ஆற்றல் வளரும் வாய்ப்புக் கிடைப்பது அரிது என்றும் ஓர் நம்பிக்கை நிலவியது. ஏனைய நம்பிக்கைகளை உடைத்தெறிந்

ததுபோல இந்த நம்பிக்கையையும் இவ்வுலகு உடைத்தெறிய முடியாதா? நமது உலகம் இந்த நம்பிக்கையை உடைத்தெறிய முடியும்; உடைத்தெரிய வேண்டும்.'[1]

மார்ஷல் ஒரு சமூகத்தை உருவாக்குவது குறித்து வருணிக்கிறார். (ஆனால், தான் வருணிக்கும் சமூகத்தை யுத்தோப்பியா என்று குறிப்பிடவில்லை.) இச் சமூகத்தில், 'மேலே குறிப்பிட்ட சூழ்நிலைகள் நீக்கப்படும்' என்றும், 'இச் சமூகத்தில் சடப் பொருள் சார்ந்த அல்லது அறவழியான சுபிட்சத்தை அழித்திடும் விதைகள் இருக்கமாட்டா' என்றும், 'இச் சமூகம் தீவிரம் உடையதாகவும், முழுமையான சுகாதார வாழ்வு உடையதாகவும் இருக்கும்' என்றும் கூறுகிறார். 'ஒருவன் நற்குணங்கள் நிறைந்த கனவானாக இருப்பதற்குரிய வேலையிலேயே அமர்தல் வேண்டும் என்பதே தேவைப்படுகிறது.'[2] பின்னர், தான் கற்பனை செய்துள்ள நாடு எப்படி இயங்க வேண்டும் என்பதனையும் அவர் விளக்குகிறார்.

'இந் நாட்டில் நல்ல அளவிற்குச் செல்வம் இருக்க வேண்டும்; இயல்பு மீறிய அளவிற்குப் பெரும் மக்கள்தொகை இருக்கக்கூடாது. இளம் வயதில் ஒவ்வொருவனுக்கும் முழுமையான கல்வியளித்தல் வேண்டும்; இக் கல்வி நெடுநாட்கள் அவனுக்குப் பயனளிக்க வேண்டும். மாலை நேரத்தில் அறிவார்ந்த இன்ப உலகில் திளைக்கவோ அல்லது கலையார்வப் பெருக்கில் மூழ்கவோ அவனுக்கிருக்கும் சுவைத்திறம் அல்லது நேரம் குறையும் வகையில், ஒரு நாளில் மிகுதியான உடல் உழைப்பினை அவன் மேற்கொள்ளக்கூடாது. தனி நபர் ஒருவன் முரடனாகவும் நாகரிகம் குறைந்தவனாகவும் மாறும் நிலை இருக்காது என்பதனால், சமூகமும் முரட்டுத்தனமாகவும் நாகரிகம் குறைந்ததாகவும் மாறும் நிலை ஏற்படாது.'[3]

மார்ஷல் அவர்களுடைய பொருளாதார யுத்தோப்பியாவில், உற்பத்திச் சாதனங்கள் பெருகி வளர்ந்து, உற்பத்தியில் பெருமளவு அதிகரிப்புகள் ஏற்படுவதோடு அமையாது, வேலை நேரமும் குறைந்து, அருவருக்கத்தக்கதும் கௌரவக் குறைவானதுமான வேலையின் வகைகள் அனைத்தும் முற்றிலும் ஒழிக்கப்படுவன. அவர் பின்வருமாறு எழுதுகிறார்:

'செயல் திறன்களை நலன் சூழும் வகையில் சுறுசுறுப்புடன் பயன்படுத்தி இயக்குதலைக் குறிக்கும் வேலை வாழ்க்கையின் குறிக்கோளாகும்; வாழ்க்கையே அதுதான்; வேலை

[1] ஆல்ஃபிரட் மார்ஷலின் வாழ்க்கைக் குறிப்புகள், பக்கம் 109.
[2] மேலே எடுத்துக்காட்டியுள்ள நூல், ப. 110.
[3] மேலே வரும் நூல், ப. 110-1.

என்ற சொல்லின் மிகச் சிறந்த பொருள் இதுவே. இக் கருத்தில், ஒவ்வொருவனும் தன்னுடைய மிக உயர்ந்த ஆற்றல்களை மழுங்கச் செய்யும் அளவுக்கு வெறும் உடல் உழைப்பை மேற்கொள்வதை நிறுத்திக்கொள்வான். வேலை என்ற சொல்லின் கெட்ட பொருள் என்னவெனில், வேலை என்பது மனிதனின் வாழ்க்கையை அழித்துவிடுகிறது; எனவே, இது கேடு சூழ்வதாகும். அடுத்தடுத்து வரும் தலைமுறைகளில் வேலையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மனிதனும் ஒரு கனவானே என்பது முற்றிலும் உண்மையாகும்.'[4]

எனினும், வேலை நேரத்தில் உண்மையான குறைப்பு ஏற்படுகின்ற அளவுக்கு உற்பத்தி சக்திகள் பெருகுவதுமட்டும் போதாது. பொருளாதார அமைப்பினைத் தொடர்ந்து கல்வியில் பெரும் செலவு செய்யக்கூடிய சமூக அமைப்பு உருவாக வேண்டும். மார்ஷலின் கருத்துப்படி, வேலை என்பதானது ஆழமான பொருள் உடையதாகவும், ஓய்வு என்பதானது உயர்ந்த பயனுடையதாகவும் இருப்பதற்கு மாத்திரமன்றி, தனது யுத்தோப்பியாவைத் தொடர்ந்து பாதுகாப்பதைப் பயமுறுத்தக்கூடிய ஜனத்தொகைப் பெருக்கத்தைத் தடுத்து நிறுத்தக்கூடியதாகவும் இருப்பதற்கு இத்தகைய சமூக வமைப்பு தேவைப்படுகிறது. எனவே, கல்வி எனும் பெரும் திட்டத்திற்குத் தேவைப்படும் நிதியினை வழங்க மறுப்போர் மீது மார்ஷல் பெரும் கோபம் அடைந்தார். சிறந்த பண்புடன் நாவடக்கமும் உடைய மார்ஷல் இத்தகைய தீவிரமுடைய, ஏளனம் நிறைந்த மொழியினைப் பயன்படுத்துவார் என்று நம்புவதே கடினம். இதனைப் பொறுத்தவரையில், தம்முடைய நாட்டு மக்கள் சிலரைப்பற்றி மார்ஷல் குறிப்பிட்டுள்ளதை நான் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்:

'பைபிளை போதிக்கவேண்டும் என்பதில் பெரும் ஆர்வம் கொண்டுள்ள ஒருசிலர், தந்திமீது முதலீடு செய்து பெரும் வெற்றியடைந்துள்ள அரசாங்கமே மக்கள்மீது மூலதனத்தை முதலீடு செய்ய முனைந்து நிற்பதைப் பெரிதும் விரும்பவில்லை என்பதனையும், இக் காரியத்தில் அவசரப்பட்டு முனைதல் கூடாது என்று தயாராக இவர்கள் வலியுறுத்துகின்றனர் என்பதனையும் காண இந் நாட்டில் நாம் அதிர்ச்சியடைகிறோம். இவர்கள் தங்கள் விருப்பப்படி நடக்கவேண்டுமெனில், பைபிளிலிருந்து பல பகுதிகளை நீக்கிய பதிப்பினைப் போதிக்கவேண்டும். மனிதனின் பண்பாட்டைவிட லௌகிகச் செல்வம் குறைந்த

[4] மேல் வரும் நூல், ப. 114-5.

மதிப்புடையது என்ற கருத்துத் தொக்கிநிற்கும் ஒவ்வொரு பக்கத்தையும் நீக்கவேண்டும். மனிதனின் உள்ளம் சிறக்கும் வாழ்க்கையின் வளர்ப்பே பண்பாடாகும். இவர்கள் பைபிளை போதிக்கவேண்டிய வேலை கடினமாகவிருக்காது; போதிக்கப் பட வேண்டிய பக்கங்கள் நிறைய இருக்காது.'[5]

இவ்விரண்டு விதிகளும் நிறைவேறியவுடன், அதாவது, வேலைநேரக் குறைப்பினைத் தொடர்ந்து உற்பத்தி பெருகுதலும், அருவருக்கத்தக்க வேலை நீங்குதலும், போதுமான அளவுக்கு ஆழமும் காலநீட்சியும் கொண்ட கல்வி பெருகுதலும் ஏற்பட்டுத் தொழிலாளருக்குக் கிடைத்தவுடன் தன்னுடைய யுத்தோப்பியா அனுபவ சாத்தியமாகி நிறைவேறுதலை மார்ஷல் காண்கிறார். இந்த நிலையில்,

'ஒவ்வொரு மனிதனின் நடவடிக்கைகளும் ஆற்றல்களும் முழுதும் வளர்க்கப்படும். இச் சூழ்நிலையில் மக்கள் இப்பொழுது வேலை செய்வதைவிடக் குறைவாக வேலை செய்யமாட்டார்கள்; அதிகமாகவே வேலை செய்வார்கள்; நல்ல, பழைய தொடர் ஒன்றினைப் பயன்படுத்தி விளக்கினால், மக்கள் மேற்கொள்ளும் அநேக வேலைகள் அன்புடைமை சார்ந்தனவாக அமைவன. பணத்திற்காக மேற்கொள்ளப்பட்டாலும் சரி, மேற்கொள்ளப் படவில்லை எனினும் சரி. இத்தகைய வேலையானது மக்களுடைய செயல்திறன்களை ஊக்குவித்து வளர்ப்பதாக அமையும். தன்னுடைய மிக உயர்ந்த குணத்தினைத் தன்னிச்சையாக வளர்க்கக்கூடிய வாய்ப்பினை மிகவும் குறைத்திடும் மனித உடல் உழைப்பு சார்ந்த வேலைமட்டும் இருக்காது. இத்தகைய மிகுதியான வேலையினைச் செய்பவர்களாகத் தொழிலாளர் வர்க்கம் இருக்கும்வரையில் இவ் வர்க்கம் அழிக்கப் பட்டுவிடும்.'[6]

ஏறக்குறைய 34 ஆண்டுகள் கழிந்த பின்னர், தமது பொருளாதார யுத்தோப்பியாபற்றி மார்ஷல் மீண்டும் சிந்திக்கத் தொடங்கினார். இந்தத் தடவை, அவர் தொழிலாளர் வர்க்கத்தை விட்டுவிட்டு, வேலை தரும் வர்க்கத்தினர்மீதும் நன்னிலையிலுள்ள ஏனைய வர்க்கத்தினர்மீதும் கவனத்தைத் திருப்பினார். 'பொருளாதார அருளாண்மையின் சமூக சாத்தியங்கள்' என்ற தலைப்பின்கீழ்ப் பேசும்பொழுது, மார்ஷல் பகட்டான செலவினையும், வீண் செலவையும் வெறுத் தொதுக்குகிறார். இச் செலவினைத் திறமைக்குத் தேவைப்

[5] மேலே வரும் புத்தகம், ப. 117-8.
[6] மேல் வரும் புத்தகம், ப. 118.

படும் செலவிலிருந்தும், பொறுப்புள்ள வேலைக்காகும் செலவிலிருந்தும் பிரிக்கின்றார். இவ்வாறாக, சமூக ரீதியாகப் பாழாகக் கூடிய பெரும் பகுதி செலவு ஒன்றிருக்கிறது. மக்களுடைய மிக உயர்ந்த வாழ்க்கையையும், பெருமளவிற்குப் பல்வேறு வகைகளையுடைய அறிவார்ந்த, கலையார்வம் மிக்க நடவடிக்கைகளையும் பேணுவதற்குரிய புதிய வாய்ப்புகளை ஏற்படுத்த கட்டுப்பாடற்ற முறையில் வளச் சாதனங்களைப் பயன்படுத்துவதில் வீணாகும் அச் செலவினைத் திருப்பிவிடலாம். எனவே, நமது சொந்த எண்ணங்களிலும் மற்றவர்களின் எண்ணங்களிலும் பொருளாதார ஆய்வுகளும் அருளாண்மை முயற்சியும் இணையவேண்டுமென மார்ஷல் கருதுகிறார். 'லௌகீக இலாபங்களைவிட லௌகீகமற்ற ஆத்ம இலாபங்களே உயர்ந்த மதிப்புடையவை எனக் குறிப்பிடும் அறம் சார்ந்த விதிதான்,' அருளாண்மை என்ற சொல்லாகும் என்று மார்ஷல் இலக்கணம் வகுக்கிறார். பொருளாதார அருளாண்மைக் கொள்கையைப் பரப்பவேண்டியது பொருளாதாரியின் கடமையென மார்ஷல் கருதுகிறார்.

'அருளாண்மையும் பெருந்தன்மையும் உடைய வேலையினை இவையிரண்டுமற்ற வேலையிலிருந்து பிரித்துக் காட்டுவதில் பொறுப்பு, நல்ல சிந்தனை, தரமுள்ள உழைப்பு ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும். இதனை நிறைவேற்றுவதே பொருளாதாரிகளின் முதல் கடமையாகும்.....தனிப்பட்ட முறையான கௌரவ நீதிமன்றம் எனத்தக்க பொதுமக்கள் அபிப்பிராயத்தை உருவாக்கும் முயற்சியினை எடுக்கவேண்டும். ஏமாற்றுதல் மூலமாகவோ, புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட செய்திகள்மூலமாகவோ, திருட்டுத்தனமான நடவடிக்கைகள் மூலமாகவோ அல்லது எதிரிகளைப் பழிவாங்குதல் மூலமாகவோ சேர்க்கப்படுகின்ற செல்வம் எவ்வளவு பெரிதாக இருந்தபோதிலும் சமூக வெற்றிக்கு அது நுழைவுச் சின்னமாக இருக்க முடியாது. மிகப் பெருமளவிற்கு இலாபத்தை ஈட்டாது போனாலும்கூட, உயர்ந்த குறிக்கோள்களையும், உயர்ந்த வழிமுறைகளையும் உடைய வியாபாரத் துறைக்குப் பொதுமக்களுடைய பாராட்டுதலும் நன்றியுணர்வும் கிட்டும் எனலாம். இப்பொழுது விஞ்ஞானம், இலக்கியம், கலை ஆகியவற்றில் முன்னேற்றக் கருத்துகளையுடைய மாணவனுக்குப் பொதுமக்கள் பாராட்டுதலும் நன்றியுணர்வும் கிடைத்திருப்பதுபோலவே உயர் குறிக்கோளும் வழிமுறையும் கொண்ட வியாபாரத் துறைக்கும் கிடைக்கும் எனலாம்.'[7]

[7] மேல் வரும் நூல், ப. 342-3.

பொதுநலத் துறையில் எழும் பெரும் பிரச்சினைகளில், நன்மையளிக்கும் பொது ஆலோசனைகளைச் சுதந்திரமாக வழங்கும் முயற்சியுள்ள தனியார் துறையில் ஈடுபட்டுள்ள பயிற்சியாளர்கள் தம்மிச்சையான அடிப்படையில் நிறைவேற்றும் வேலையில் தென்படும் அருளாண்மையைப் பாராட்டி ஆராய்ச்சி செய்வதற்குப் பொருளாதார நிபுணன் முன்வர வேண்டும் என்று மார்ஷல் விரும்புகிறார். 'அருளுணர்வுடன் நிகழ்த்தும் வேலையினைத் தொடர்ந்து செல்வத்திலும் அருளுணர்வு ஏற்படும்; தனிநபரும் பொருளாதார ரீதியான அருளுணர்வினைப் பேணுவான்; சமூகத்திலும் இதே மாதிரியான அருளுணர்வு தலையெடுக்கும்.' மார்ஷல் பின்வருமாறு முடிவு எடுக்கிறார்:

'இத்தகைய அருளுடைமையை நாம் மக்களுக்குப் போதித்தால், தனியார் துறையின்கீழ் நாடு தழைக்கும். மனித இயல்பு அருளுடைமையையே முழுதும் உறுதியாகச் சார்ந்திருக்கிறது என்றும், வன்முறை சார்ந்த ஆபத்துகள் ஏதுமின்றி இப் பெரு முயற்சியினை மேற்கொள்ள முடியும் என்றும் சமூகக் கூட்டுறவு உடைமையினர் (Collectivists) நிரூபித்து வெற்றியடைந்தால், நாம் இப்பொழுது உணர்ந்து உருவாக்கியுள்ள நாகரிக சமூக அமைப்பிற்குப் பதிலாக வேறோர் அமைப்பு உருவாகிவிடலாம். இப் புதிய நாகரிக சமூக வமைப்பு உயர்வு மிக்கதாக இருக்கலாம்.'[8]

ஆக, பொருளாதார யுத்தோப்பியாவைப்பற்றி மார்ஷலுக்குத் தெளிவான கருத்துகள் உள. உற்பத்தியும் ஆக்கத் திறனும் மிகவும் உயர்ந்த பிறகே பொருளாதார யுத்தோப்பியா நடைமுறைக்கு வரும் என்பது தெளிவு. விரும்பத்தக்க அளவிற்கு உற்பத்தி உயர்ந்த பின்னர், இன்னும் அதிக உற்பத்தி செய்வது இலட்சியமாகாது. ஆனால், விடுவிக்கப்பெற்ற மூலவளங்களைக்கொண்டு அருவருக்கத்தக்க, கொடிய வேலையினை அகற்றவேண்டும்; வேலைநேரத்தைக் குறைத்து ஓய்வினைப் பெறுதல் வேண்டும்; மனிதத் திறன்களை வெளிப்படுத்திப் பேணிப் பயன்படுத்தும் முறையில் வேலையின் தன்மையைத் திருத்திப் பொலிவுள்ளதாக்கவேண்டும்; கால நீட்சியும் போதுமான அளவிற்கு ஆழமும் உடைய நிறைந்த கல்வியை வளர்த்துப் பண்பாட்டையும் விளக்குமாற்றலையும் உயர்த்த வேண்டும்; பொருளாதார அருளுடைமையை வளர்த்து, சடப்பொருள் சார்ந்த லௌகீக இலாபங்களைவிட லௌகீகம் சாராத ஆத்மீக இலாபங்களே உயர்ந்த மதிப்

[8] மேல்வரும் நூல், ப. 342-3.

புடையன என்ற எண்ணத்தைத் தூண்டவேண்டும்; அறச் சார்புள்ள ஒழுக்க விதிகளைப் பரப்புதல் வேண்டும்; பொருளாதார நடவடிக்கையில் பொருளாதாரம் சார்ந்தனவற்றை அகற்றி, அறச்சார்புள்ள ஒழுக்க விதிகளைப் பேணுதல் வேண்டும்.

புத்துயிர் அளிக்கப்பெற்ற நவீன முதலாளித்துவத்தின் தீர்க்கதரிசியாகிய ஜே. எம். கீன்ஸ் அவர்களைப்பற்றி நாம் இப்பொழுது சிந்திப்போம். உற்பத்தி சக்திகள் தொடர்ந்து பெருகிப் பண்டங்களின் பற்றுக்குறை உலகிலிருந்து முழுதும் மறைகின்ற அளவிற்கு உற்பத்தியளவு அதிகரித்துவிடும் கட்டத்தினை அடையும்பொழுது என்ன விளைவு ஏற்படும் என்ற பிரச்சினையைக் கீன்ஸ் சிந்தித்தார். இந்த நிலை உருவாகி என்றே ஒரு நாள் பொருளாதார யுத்தோப்பியா அமையும் என்ற நம்பிக்கையைப் பொறுத்தவரையில், மார்ஷலைவிட எவ்விதக் கட்டுப்பாடுமின்றித் தீவிரமாகக் கீன்ஸ் முடிவு எடுத்துள்ளார். 'வசப்படுத்தி இணங்கச் செய்தல்பற்றிய கட்டுரைகளின்' (Essays in Persuasion) முகவுரையில், 'தேவை, வறுமை, வர்க்கங்களுக்கிடையே பொருளாதார மோதுதல், நாடுகளுக் கிடையே பொருளாதார மோதுதல் ஆகிய பிரச்சினைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடும் பொருளாதாரப் பிரச்சினையானது பயங்கரமான, தற்காலிகமான, தேவையற்ற குழப்பத்தையே குறிப்பதாகும்' என்று கீன்ஸ் கருதுகிறார். 'ஏனெனில், இன்று நம்முடைய அறவழியான, லௌகீக உழைப்புகள் அனைத்தையும் ஈர்க்கக்கூடிய பொருளாதாரப் பிரச்சினையைக் குறைவான முக்கியத்துவம் உடைய நிலைக்குக் கீழே தள்ளக் கூடிய திறனுள்ள அளவிற்கு மூலவளங்களையும் தொழில்நுட்ப வினையினையும் உடையதாக மேற்கத்திய உலகு உள்ளது; இந்த நிலையை உண்டாக்க, இவ் வளங்களையும் தொழில்நுட்ப வினையினையும் பயன்படுத்தத்தக்க நிருவாக அமைப்பினை நாம் உண்டாக்கினால் போதும்.' கீன்ஸ் மேலும் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'தனக்குரிய பின் இடத்தையே பொருளாதாரப் பிரச்சினையானது எடுத்துக்கொள்ளும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று இக் கட்டுரைகளின் ஆசிரியர் நம்புகிறார். நமது இதயமும் மூளையும் நமது இன்றியமையாத பிரச்சினைகளாகிய வாழ்க்கைப் பிரச்சினை, மனிதத் தொடர்புகள்பற்றிய பிரச்சினை, படைப்புப் பிரச்சினை, நடத்தைப் பிரச்சினை, சமயப் பிரச்சினை முதலானவற்றையே சிந்திக்கத் தொடங்கும்.'

தற்கால சமூகத்தில் அதற்கு உரியதான விஞ்ஞானம், தொழில் நுண்ணியல் ஆகியவற்றின் வளர்ச்சிகளுக்கு உற்பத்தி

சக்திகள் பயன்பட்டு வெற்றியினைத் தேடித்தருவதில் கீன்ஸ் அவர்களுக்கு நம்பிக்கையுண்டு; இதனுடன், நடப்பு எச்சத்தின்மூலமாக அல்லது முதல் குவிப்பின் கூட்டு அசல் மூலமாக உண்டாகும் புது உபகரணத்தின்மீது நிலையான முறையில் மீண்டும் முதலீடு செய்வதற்கு உற்பத்தி சக்திகள் பயன்பட்டு வெற்றியினைத் தேடித் தருவதில் கீன்ஸ் அவர்களுக்கு நம்பிக்கையுண்டு. 'இவையனைத்தும் நீண்ட காலத்தில் பொருளாதாரப் பிரச்சினைக்கு மனித இனம் தீர்வு காண்பதையே குறிக்கும்' என்று கீன்ஸ் வலியுறுத்தி உரைக்கிறார்.[9] இந்த நிலையினை அடைந்தவுடன், அல்லது வேறு முறையில் உரைப்பின், பொருளாதார யுத்தோப்பியா தோன்றியவுடன், உற்பத்தியின் இறுதியான தூண்டுதலாகத் துவங்கும் விருப்பங்களின் முக்கிய இயல்பினைத் திரும்பவும் ஆராயவேண்டியது அவசியமென கீன்ஸ் கருதுகிறார். இதனைப்பற்றிக் கீன்ஸ் என்ன கூறுகிறார் என்பதனை எடுத்துக்காட்டுவது மிகவும் நலம் பயக்கும்.

'மனிதனின் தேவைகளைத் திருப்திப்படுத்த முடியாதது போலத் தோன்றுவது உண்மையே. இத்தேவைகள் இரண்டு வகைகளைச் சார்ந்தவை. நம்முடன் வாழும் மனிதர்களின் நிலைமை எப்படி இருந்தபோதிலும் நாம் முழுமையாக விரும்புகின்ற தேவைகள் ஒரு வகை; நம்முடன் வாழும் மனிதர்களின் நிலைமையைவிட நம் நிலையை உயர்த்தி, அவர்களைவிட நாம் மிகவும் உயர்ந்தவர்கள் என்று நாம் உணரும் வண்ணம் வாய்ப்பினை உண்டாக்கும் ஒப்பிட்டு நோக்குதற்குரிய தேவைகள் மற்றொரு வகை.'[10]

இத்தகைய தேவைகளை அடிப்படையான தேவைகள் என்றும், பின்பற்றுதலுக்குரிய தேவைகள் (basic and emulation needs) என்றும் நான் குறிப்பிடுவேன். பின்பற்றுதலுக்குரிய தேவைகளை முழுதும் திருப்தி செய்ய முடியாது என்று கீன்ஸ் ஒப்புக்கொள்கிறார்; திருப்தி செய்ய முடியாத காரணத்தினால், இத்தேவைகள் பெருகும் வாய்ப்பும் உற்பத்தி பெருகும் வாய்ப்பும் ஏற்படுகின்றன. ஆனால், அடிப்படையான (அத்தியாவசியமான) தேவைகளில், அதாவது, முழுமையான தேவைகளில் திருப்தி செய்யமுடியாமை எனும் இயல்பு (தன்மை) இல்லை என்றும் கீன்ஸ் கூறுகிறார். இத் தேவைகளின் அதிகரித்த உற்பத்தி இத்தேவைகளின் எல்லைகளை நெருங்கி,

[9] ஜே. எம். கீன்ஸ், 'வசப்படுத்தி இணங்கச் செய்தல்பற்றிய கட்டுரைகள்.'

[10] மேலே வரும் புத்தகம், பக்கம் 365.

இவற்றை நிறைவேற்றும். 'நாம் உணர்ந்துகொள்வதற்கு முன்னரே இத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய காலம் விரைவில் வந்துவிடலாம்; அப்பொழுது நமது சக்திகளைப் பொருளாதாரச் சார்பற்ற குறிக்கோள்களை நிறைவேற்றப் பயன்படுத்த விரும்புவோம்'[11] என்று அவர் கருதுகிறார். பின்னர் அவர் கீழ்வரும் திடுக்கிடும் முடிவுகளை எடுக்கிறார்:

'முக்கியமான போர்கள் நிகழமாட்டா என்றும், ஜனத்தொகையில் முக்கியம் எனக் கருதத்தக்க அதிகரிப்பு நிகழாது என்றும் எடுகோள் இட்டுக்கொண்டால் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்; அல்லது குறைந்தபட்சம் 100 ஆண்டுகளுக்குள்ளாகத் தீர்வு காணும் வாய்ப்பு ஏற்படலாம். இதன் பொருள் என்னவெனில், எதிர்காலத்தை ஊடுருவி நோக்கினால் பொருளாதாரப் பிரச்சினை மனித இனத்தின் நிரந்தரப் பிரச்சினை அன்று என்பதேயாம்.'[12]

இவ்வாறு நேரின், பிழைப்பிற்காகப் போரிடும் வழக்கமான நோக்கம் மனித இனத்தைவிட்டு நீங்கிவிடும் என்றும், புதிய சூழ்நிலைக்குத் தக்கவாறு மனிதனின் பழக்க வழக்கங்களும் உள்ளார்ந்த இயல்புகளும் தூண்டுதல்களும் மாறி இசைவாக அமைந்திடும் பிரச்சினைகள் தோன்றும் என்றும் கீன்ஸ் குறிப்பிடுகிறார். 'அறிவுடன் வாழவும், ஒத்து வாழவும், நன்கு வாழவும் விஞ்ஞானமும் கூட்டு முயற்சியும் வெற்றியுடன் தேடித்தந்துள்ள ஓய்வினை மனிதன் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்' என்ற பிரச்சினைக்கு அவன் தீர்வுகாணவேண்டும்.

கீன்ஸ் ஓய்வுப் பிரச்சினையைக் கிளப்பினாரேயன்றி, அதற்கு விடை காணவில்லை என்றாலும், பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு வெற்றியடைந்தால், மிகவும் அருவருக்கத்தக்க மனித இயல்புகள் சிலவற்றை மிகவும் உயர்ந்த ஒழுக்கங்களாக உயர்த்தியுள்ள பொய்மை நிறைந்த அறக்கோட்பாடுகளைப்பற்றிப் பொருளாதார நிபுணர் மாறான கருத்து ஒன்றினை மேற்கொள்வார் என்று கீன்ஸ் கூறுகிறார்.

'செல்வம், பொருளாதார இலாபங்கள் ஆகியவற்றைப் பகிர்ந்தளித்தலைத் தடுத்திடும் எல்லாவிதமான பழக்கவழக்கங்களையும் பொருளாதார நடைமுறைகளையும் நாம் இறுதியில் நீக்கிவிடும் உரிமையுடையவர்களாவோம். அருவருக்கத்தக்கதாகவும் நியாயமற்றதாகவும் இருந்தபோதிலும், முதல்

[11] மேலே வரும் புத்தகம்.
[12] மேலே வரும் புத்தகம், பக்கம் 367.

குவிப்பில் மிகப் பெரும் பயனுடைய தண்டங்களை, நாம் இப்பொழுது முழு மூச்சுடன் மேற்கொண்டுள்ள தண்டங்களைத் தடுத்திடும் எல்லாவிதமான பழக்கவழக்கங்களையும் பொருளாதார நடைமுறைகளையும் நாம் இறுதியில் நீக்கிவிடும் உரிமையுடையவர்களாவோம்.'[13]

இதன் விளைவாக, மனித இனம் சமயத்துறையை நாடும் என்றும், பாரம்பரிய ஒழுக்கத்தைப் பின்பற்றும் என்றும், பேரவாவினைக் குற்றமாகக் கருதும் என்றும், கடிய வட்டி பெறுதலினைத் தவறான நடத்தையாகக் கருதும் என்றும், பண ஆசையினை வெறுத்தொதுக்கத்தக்கதாகவே கருதும் என்றும் கீன்ஸ் குறிப்பிடுகின்றார். பயனுடையவற்றிற்குப் பதிலாக நல்லனவற்றையே மனித இனம் நாடும். ஆனால், பொருளாதார நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று கீன்ஸ் முடிவுகட்டவில்லை. 'பொருளாதார நடவடிக்கை தனக்கு நியாயமானது என்ற கட்டம் முடிவுற்றபின்னர், ஏனையோருக்கு நியாயமான குறிக்கோள் உடையதாகவே அது நிலவும்' என்று கீன்ஸ் குறிப்பிடுகிறார்.

வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசியத் தேவைகள் அனைத்தும் குறைந்த முயற்சியில் கிடைக்கின்ற அளவுக்குக் கிட்டத்தட்ட ஆக்கத்திறன் பெருகிய பின்னர் எழுகின்ற பொருளாதாரப் பிரச்சினையில் பேராசிரியர் கால்பிரெய்த் அவர்களும் கவனம் செலுத்தினார். ஆனால், மார்ஷல், கீன்ஸ் கருதியது போல, இவர் அதனை எதிர்காலப் பிரச்சினையாகக் கருதவில்லை. நிகழ்காலத்திலேயே இப் பொருளாதாரப் பிரச்சினை எழுந்துள்ளதாகவே இவர் கருதுகிறார். கால்பிரெய்த் பிரதானமாகத் தம்முடைய சொந்த நாட்டைப்பற்றியே பேசுகிறார். ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரத்தில் பண்டங்கள் நிறைய உற்பத்தியாகியுள்ளனவென்றும், உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாய நிலை இல்லையென்றும், எனினும் அமெரிக்க மக்களின் உளவியலில் உற்பத்தியே ஆட்சி செலுத்துகிறது என்றும் அவர் கருதுகிறார். பின்வருமாறு அவர் மொழிகிறார்:

'உணவின் குறைந்த துய்ப்பைவிட அதிகத் துய்ப்பினால் ஐக்கிய அமெரிக்காவில் அநேக மக்கள் சாகின்றனர். ஒரு காலத்தில் ஜனத்தொகை உணவு அளிப்பின்மீது நெருக்கடியினை உண்டாக்கியது எனில், இப்பொழுது உணவு அளிப்பு ஜனத்தொகைமீது விடாது நெருக்கடியினை உண்டாக்கியுள்ளது. நமது கார்களில் முழுதும் ஒப்பனைக்காகவே நான்கு

[13] மேலே வரும் புத்தகம், பக்கம் 369—70.

அல்லது ஐந்து அடிகள் கொண்ட கூடுதலான நீளத்திற்கு எஃகினைப் பயன்படுத்துதல் அவசியம் என்று எவரும் தீவிரமாகக் கருத்துத் தெரிவிக்கமாட்டார்கள். அநேக பெண்மணிகளுக்கும் ஆடவர்களுக்கும் உடலினை வெளிக் காட்டாது மறைத்துக்கொள்வதற்கே ஆடையணிதல் வேண்டும் என்ற நிலை மாறி, முழுதும் காம (காதல்) உணர்வு வெளிப்படும் அளவுக்கு இறகுத் தொகுதிகள் தொங்குவதுபோன்ற ஆடை அணியும் நாகரிகம் ஏற்பட்டுள்ளது. சூரிய ஒளியைப்போல, நீரினைப்போல, அதனை அப்படியே ஏற்றுக்கொள்ளும் போக்கு இல்லை. மாறாக, நவநாகரிக உடையணிதல் போன்ற காரியங்கள் நமது நாகரிக மேம்பாட்டின் தரத்தை அளப்பனவாகக் கொள்ளப்படுகின்றன.'[14]

வளங் கொழிக்கும் சமூகத்தில் உற்பத்தியினையே எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கும் இக் குழப்ப நிலைக்குக் காரணம், மக்கள் ஏழ்மையில் வதங்கி வாடிக் கிடந்தபொழுது, கிடைப்பருமை உண்மையாகவே நிலவியபொழுது, உற்பத்தியினைப் பெருக்குதலே மனித இனத்தின் மிக முக்கியமான பிரச்சினையாக இருந்தபொழுது, தோன்றிய பாரம்பரிய மனப்பான்மைகள் தொடர்ந்து நிலவியமையே எனலாம். அவருடைய அருமையான வாசகம் பின்வருமாறு:

'பொருளாதாரத்தின் குறைபாடுகள், திருத்தப்படாத, ஆனால், கொஞ்சங் கொஞ்சமாக மறைகின்ற பழைய வழக்கங்களைச் சார்ந்துள்ளனவேயன்றி, மூலமான எவ்விதத் தவறுகளையும் அல்ல......ஏழ்மை சூழ்ந்த காலத்தில் நிலவிய விதிகளின்படி தன்னுடைய காரியங்களை நிறைவேற்றுகின்ற செழிப்புள்ள சமூகம் தனக்குரிய புதிய வாய்ப்புகளையும் இழந்துவிடுகிறது.'[15]

அதிகரித்த உற்பத்திக்குரியதும் அதிகரித்த ஆக்கத்திறனுக்குரியதுமான, சிறிது சிறிதாக வழக்கத்திலிருந்து மறைகின்ற நிறுவனமானது, விளம்பரத்தின் மூலமாகவும், மரபுவழி அமைந்துள்ள சந்தையின் தன்னிச்சையான போக்கு, துய்ப்போர் இறைமை ஆகியவற்றின் மூலமாகவும் தூண்டப்பெற்றுள்ள இயற்கைக்கு மாறான தேவையினைக் கொண்டு இயங்குகிறது. தேச அளவில் பார்க்கும்பொழுது, தேசப் பாதுகாப்பினைப் பொறுத்தும், தொடர்ந்து புதிதாகவும் அதிகமாகவும் உருவாகியுள்ள பாதுகாப்பு உபகரணத்தைப்

[14] ஜான் கென்னத் கால்பிரெய்த், 'வளங் கொழிக்கும் சமூகம்,' பக்கம் 97.

[15] மேலே வரும் புத்தகம், ப. 3-4.

பொறுத்தும், தேவையில்லாமல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனம் இயங்கவேண்டியது நியாயமாகியுள்ளது. உற்பத்தியைச் பூசிக்கின்றபொழுது, சீர்திருத்தப்பெற்று நமது மதிப்பினைப் பெறத் துடிக்கும் சடப்பொருள் சாரா தேவைகள் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளன. ‘மதுவகைகள், நையாண்டிப் புத்தகங்கள், வாய் கழுவுதல் ஆகியவையனைத்தும் சந்தையில் உயர்செல்வாக்குடன் உள்ளன. கல்வி நிலையங்கள், நீதிபதிகள், நகராட்சி நீச்சல் குளம் ஆகியவையனைத்தும் கேடு சூழ்வோரின் தீய செல்வாக்கில் அடங்கிக் கிடக்கின்றன.’[16]

உற்பத்தி, சடப்பொருள் சாராத முதலீடு ஆகியவற்றின் மீதே முழு ஈடுபாடு கொள்ளும் அளவுக்கு அண்மை நோக்கு நோய் நம்மை ஆட்கொண்டுள்ளது. நம்முடைய மூலவளங்களை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பது போன்ற மிகவும் அவசியமான பிரச்சினைகளில் கவனம் செலுத்தவேண்டியதை இந் நோய் தடுத்துவிட்டது. குறிப்பாக, மனிதர்கள் மீதே முதலீடு செய்யவேண்டியதன் முக்கிய அவசியத்தையும் வாய்ப்பினையும் நாம் கவனிக்கவேண்டிய தேவையினை இந் நோய் தடுத்துவிட்டது. அவர் பின்வருமாறு முடிவு கூறுகிறார்:

‘காலியாக உள்ள அறைக்கு ஒப்பனை செய்வது வேறு. ஆனால், அடித்தளம் நொரிந்து விழும் அளவிற்குத் தட்டுமுட்டுச் சாமான்களைப் போட்டு அந்த அறையினை அடைப்பது வேறு. பண்டங்களை உற்பத்தி செய்யும் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தவறுதல், மிகப் பழைய, வேதனையூட்டும் தீவினையில் மனிதன் தொடர்ந்து வதியும் நிலையை உண்டாக்கும். ஆனால், பிரச்சினைக்குத் தீர்வு கண்டுள்ளதை நோக்கத் தவறுவதும், பின்னர் அடுத்து வரும் கடமையை நிறைவேற்றத் தவறுவதும் துயரத்தை அளிப்பனவாகும்.’[17]

பிரச்சினைக்கு அவரது தீர்வு என்ன? உற்பத்திப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டபிறகு, சமூகம் எவ்வாறு முன்னேற வேண்டும் என்று அவர் விரும்புகிறார்? கால்பிரெய்த் அவர்களுடைய விடை அதிர்ச்சியூட்டக்கூடியதாக இல்லை. கடிய உழைப்பு நீங்கிய பொருளாதார அமைப்பே தேவையானது என்று அவர் விரும்புகிறார். வேலையில் தொல்லை, களைப்பு அல்லது மற்ற மூளைத்தொடர்புள்ள, உடல் தொடர்புள்ள வசதியின்மை எதுவும் இருக்கக்கூடாதென அவர் விரும்புகிறார். உண்மையில், அவருடைய எண்ணப்படி, இந்த நிலை முன்னரே

[16] மேலே வரும் புத்தகம், ப. 106, 258.
[17] மேலே வரும் புத்தகம், ப. 277.

உருவாகிவிட்டது ; ஓர் புது வர்க்கம் தோன்றிவிட்டது ; இவ் வர்க்கம் எண்ணிக்கையிலும் கடிதில் பெருகிச் செல்கிறது ; இதற்கு வேலை இன்பமூட்டக்கூடியதாகவும் உள்ளது. வர்க்கங்கள் அனைத்தின் ஒற்றொருமை பற்றிய உயர்கோட் பாட்டின் காரணமாக இப் புதுவர்க்கம் தோன்றியிருப்பதை நாம் கவனிக்கத் தவறிவிட்டோம். இக் கோட்பாட்டினை முதலாளிகளும் கம்யூனிஸ்டுகளும் முழுதும் ஏற்றுக்கொண்டுள்ளனர். முதலாளித்துவ சமூகத்திலும் கம்யூனிச சமூகத்திலும் தங்களை உடலுழைப்பு செய்யும் மக்களுடன் ஒன்றாகவே இணைத்துப் பாவித்துக்கொள்ளும் முன்னேறியுள்ள வர்க்கத்தினரின் ஜனநாயக உணர்வினை இது காட்டுகிறது. இனிமை ஊட்டுவதும், ஏற்றுக்கொள்ளத்தக்கதும், இலாபகரமானதுமான வாழ்க்கையைப்பற்றி மறைவாக உள்ள குற்ற உணர்வினைத் தணித்துக்கொள்ளும் வகையில் 'நானும் தொழிலாளியே' என்று மேல்மட்டத்திலுள்ளோர் குறிப்பிடுவர். இவ் வர்க்கத்திற்குரிய நயம் எதுவெனில், இவ் வர்க்கத்தை விட்டு ஒருவரும் விலகவில்லை எனினும், ஒவ்வோர் ஆண்டும் ஆயிரக்கணக்கானவர்கள் இவ் வர்க்கத்தில் சேருகின்றனர். இதற்கு ஆதரவாக விஞ்சி நிற்கின்ற தகுதி எதுவெனில் கல்வியே. எனவே, 'சமாதானமாக வாழ்வதற்கு அடுத்த படியாக சமுதாயத்தின் மிகப்பெரும் இலட்சியம் எதுவெனில், மேலும் இவ் வர்க்கம் கடிதில் வளர்ந்து பெருகுதலே' என்று கால்பிரெய்த் கருதுகிறார். 'இவ் வர்க்கப் பெருக்கத்தின் இயக்கு காரணி கல்வியாக இருப்பதால், எண்ணிக்கைவாரியாகவும் தரவாரியாகவும் கல்வியில் முதலீடு செய்தல் கிட்டத்தட்ட சமூக முன்னேற்றத்தின் அடிப்படையான குறியீட்டெண் ஆகிறது' என்றும் அவர் கருதுகிறார். வழக்காற்றில் அருவருக்கத்தக்கதாகவும் கடுமையானதாகவும் உள்ள வேலைகளனைத்தையும் நீக்கும் முயற்சிகளையும் அதேவேளையில் உடன்பெருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். வேலையின் இயல்பினை மாற்றி, மனித ஆளுமையினை முழுதும் உருவாக்குவதற்கு உதவியாக ஏற்றதாக்கிவிடுதலே இலட்சியமாம். இவ்விலட்சியத்தினை நிறைவேற்றும் வழிமுறையாகக் கல்வி அமைந்துள்ளது.

பொருளாதார யுத்தோப்பியா எழுப்பும் பிரச்சினைகளுக்கு ஜான் கால்பிரெய்த் தரும் விடை இதுவே. நாம் துவக்கிய பகுதிக்கு இப்பொழுது திரும்பச் செல்வோம். எண்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர், 'தொழிலாளர் வர்க்கத்தினரின் எதிர்காலம்' என்ற தலைப்பில் மார்ஷல் நிகழ்த்திய சொற்பொழி

விலும் இதனையே குறிப்பிட்டுள்ளார். ஆனல், மார்ஷல் இதனைச் சற்று மாற்றி உரைத்துள்ளார். மார்ஷல் அவர்களின் யுத்தோப்பியாவில், கடிய உடல் உழைப்பில் மட்டும் ஈடுபட்டுள்ள தொழிலாளர் வர்க்கம் ஒழிக்கப்படும்; வேலைகளனைத்தும் அன்புடைமை சார்ந்தனவாக இருப்பன. ஒவ்வொரு மனிதனும் தான் மேற்கொள்ளும் தொழிலைப் பொறுத்தவரையில் பண்பாளனுக இருப்பான். ஆழமானதும், காலநீட்சியுடையதும், அனைவருக்கும் கிடைக்கக்கூடியதுமான கல்வியினை மார்ஷல் அவர்களும் மேலே குறிப்பிட்ட இலட்சியத்தினை அடைவதற்குரிய வழிமுறையாகவே கருதுகிருர். தன்னுடைய ஆய்வினைத் தீவிரமாக வழங்கியமையாலும், அதனைத் தொடர்ந்து எடுத்துக்காட்டுகளையும் பகுத்தாய்தலையும் நிரம்ப வழங்கியமையாலும், கூர்மையானதும் குழப்பமூட்டக்கூடியது மான சொற்ருெடர்த் தொகுதியினை நன்கு பயன்படுத்தியுள்ளமையாலும் நிச்சயமாக கால்பிரெய்த் அவர்களுக்கு முழுச் சிறப்புண்டு. ஆனல், இந்த ஆய்வு புதிதன்று. இத்தகைய கருத்துகளை முதன்முதலில் வெளிப்படுத்தியதோடன்றி, இவற்றை முழு அளவில் தெளிவாக உருவாக்கிய பெருமை மார்ஷல் அவர்களையே சாரும். இக் கருத்துகள் நடைமுறையில் எப்பொழுது சாத்தியமாகும் என்பதில்தான் மார்ஷல் திட்டவட்டமாகக் கருத்து வழங்கவில்லை; எனவே, அவர் தம்முடைய பொருளாதார யுத்தோப்பியாவில் இக் கருத்துகளைப் பொருத்தினுர். அநேக ஆண்டுகளுக்குப் பின்னர் எழுதிய கால்பிரெய்த், அன்றிலிருந்து தம்முடைய காலம் வரையில் ஆக்கத்திறனிலும் உற்பத்தியிலும் ஏற்பட்டுள்ள பெருமளவு அதிகரிப்புகளைக் கண்ட நிலையில், அவ்விலட்சியக் கருத்துகளின் நடைமுறை சாத்தியத்தைப்பற்றி மிகுந்த தெளிவுடனும் நம்பிக்கையுடனும் பேசுகிருர்.

அடுத்து, வால்ட் ரோஸ்டோவ் அவர்களைப்பற்றி எண்ணுவோம். தம்முடைய கேம்பிரிட்ஜ் சொற்பொழிவுகளில், 'பொருளாதார வளர்ச்சியின் கட்டங்கள்' என்ற தலைப்பினை அவர் எடுத்துக்கொண்டு, அதனைக் 'கம்யூனிஸ்ட் சாராத அறிக்கை' என்று வருணித்தார். இவ்வறிக்கை இன்றைய பொருளாதார சிந்தனைமீது உறுதியான விளைவினை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார விடுபடுநிலைபற்றிய (take-off) அவருடைய கருத்தியலையோ (concept), பொருளாதார வளர்ச்சி முன்னேற்றத்தில் அவர் காணும் பல்வேறு கட்டங்களையோ நாம் இங்கு ஆராயவில்லை. ஐக்கிய அமெரிக்கா அடைந்துள்ள உயர் பெருமளவுத் துய்ப்புக் கட்டமாகியதும், நீடித்துழைக்கும்

துய்ப்புப் பண்டங்களின் துய்ப்புக் கட்டமாகியதுமான இறுதிக் கட்டத்தைப் பற்றியே நாம் இக் கட்டுரையில் சிந்திக்கிறோம். இவ்வாறாக, 1958-ல், 73 சதவீத அமெரிக்கக் குடும்பங்கள் சொந்தக் கார்களை வைத்திருந்தனர். மின்னியக்க வசதி பெற்ற அமெரிக்க வீடுகளில் 96 சதவீதம் மின்னியக்கக் குளிர் பதனப் பாதுகாப்புப் பெட்டிகளைப் பெற்றிருந்தன. ஏனைய மின்னியக்க இயந்திரங்களைப் பயன்படுத்தும் வாய்ப்புகளும் இவ்வாறே. உதாரணமாக, சுத்தம் செய்யும் மின்னியக்கப் பொறி, சூனியத் துடைப்பம் (vacum cleaner) முதலானவற்றினைப் பயன்படுத்தினர். இவ் வீடுகளின் 86 சதவீத அளவில் 1956-ல் டெலிவிஷன் பொருத்தப்பட்டுள்ளது. பனிக்கட்டியாக உறையவைத்தல், குளிர்பதன அறைகளமைத்தல் முதலானவை அமெரிக்க வீடுகளில் இப்பொழுதுதான் துவங்கியுள்ளன என்றாலும், சமூகத்திலுள்ள மிகப் பெரும்பாலான மக்களுக்கு நகர்ப்புறத்து வீட்டினையும், காரினையும், மின்னியக்கப் பொறிகளையும் மேலும் மேலும் அளித்துக்கொண்டே போவதில் அமெரிக்க வளர்ச்சி தொடர்ந்து ஈடுபடாது என்பது தெளிவு என்று ரோஸ்டோவ் குறிப்பிடுகிறார். பெருமளவு துய்ப்புக் காலம் முடிவுறும்; அதற்குப் பதிலாகக் கிடைப்பருமைப் பிரச்சினை ஒழிந்த காலம், உற்பத்திப் பிரச்சினை ஒழிந்த காலம், பொருளாதார யுத்தோப்பியா உருவாகும் காலம் வரும். இக் காலம் வருதலைப் போர் அச்சம் ஒழித்துவிடாது எனினும், தடைசெய்துகொண்டேயிருக்கும் என்று ரோஸ்டோவ் ஒப்புக்கொள்கிறார். போர்க்கருவிகளிலுள்ள போட்டியினையும் போர் அச்சத்தினையும் ஒதுக்கிவிட்டு, ரோஸ்டோவ் ‘இதற்கப்பால் என்ன உள்ளது?’ என்ற கேள்வியை எழுப்புகிறார்.

‘வருமானங்கள் பெருகி நல்ல உணவினை எல்லோருக்கும் அளிக்கும்பொழுது, நல்ல உணவு கிடைத்தமையால் பொது சுகாதாரப் பிரச்சினைகள் எழும்பொழுது, மேலும் வசதியாக்க வேண்டிய அளவிற்குக் குடியிருப்புப் பிரச்சினை மக்களுக்கு எழாதபொழுது, இவ்வாறு போதுமான அள்விற்கு உடையும் கிடைக்கும்பொழுது, எல்லோருக்கும் லாம்பிரட்டா (Lambretta) அல்லது ஒல்க்ஸ்-வாகன் (Volks-Wagen) கிடைத்துவிட்டபொழுது, இரண்டு வாலுள்ள அமெரிக்க பிசாசுபோன்ற கார் கிடைக்கவில்லை எனினும் மேலே குறிப்பிட்டன அனைத்தும் கிடைத்திடும்பொழுது, சமூகங்களுக்கு என்ன நேரிடும்? இக் கட்டம் முழுதும் வரவில்லை. அடுத்த கட்டத்தின் இயல்பு பற்றிய மிக முக்கியமான பிரச்சினையைக் கவனிக்கும் அளவிற்கு

அமெரிக்க மக்களுக்கும் வட ஐரோப்பிய மக்களுக்கும் ஒரு நிலை ஏற்பட்டுள்ளது; இவர்கள் இக் கட்டத்தினை அடைந்துள்ளனர்.' [18]

இப் பிரச்சினைக்கு விடை காணும் முகத்தான், அமெரிக்காவில் குழந்தைப் பெருக்கம் ஏற்படும் வகையில் பிறப்பு வீதம் உயருவதற்குரிய கடின வாழ்வினை மீண்டும் உண்டாக்கும் முயற்சி மேற்கொள்ளப்படவிருக்கிறதா அல்லது உற்பத்திப் பெருக்கத்திற்குப் பதிலாக மூலவளங்களையும் பேரவாவினையும் ஆர்வத்தைக் கிளர்ந்தெழச் செய்கின்ற வான்வெளி ஆராய்ச்சியில் ஈடுபடுத்தும் நிலை உருவாகப்போகிறதா என்று ரோஸ்டோவ் அதிசயிக்கிறார்; அல்லது, 18ஆம் நூற்றாண்டின் கிராமியக் கனவான் காணும் நகர்ப்புறத்துக் காட்சிக்கு மனிதன் மாறி, வேட்டையாடுதல், குறிபார்த்துச் சுடுதல், மீன் பிடித்தல் முதலானவற்றை மேற்கொண்டு, மனம் சார்ந்த ஆத்மீக வாழ்க்கையினை மேற்கொள்வானா? மனித இனத்தை முன்னேற்றி வாழ்க்கை மணம் வீசும் எல்லைகளைப் போதுமான அளவிற்குக் கண்டு நிறுவுவானா? அல்லது, எதிர்காலம் சோர்வு பற்றிய மயக்க மூட்டாத உறுதி மொழியை அளிக்குமா?

ரோஸ்டோவ் அவர்களுக்கு விடை தெரியவில்லை என்பது இயற்கையே. செழிப்புள்ள புது சமூகங்களுக்குரிய அம்சங்கள் அனைத்தும் மேற்கத்திய உலகில் தோன்றிக்கொண்டிருக்கின்றன என்று அவர் கருதுகிறார். அதே வேளையில், பொருளாதார வளர்ச்சியினை அடைந்துள்ள காரணத்தினால் ஏற்பட்டுள்ள ஒரு பிரச்சினையை இப்பொழுது நோக்கிக் கொண்டுள்ள தனது சமூகம் அடைந்துள்ள அதே மாதிரியான பொருளாதார வளர்ச்சியை அடைய உலகின் ஏனைய பகுதிகள் போரிட்டுக்கொண்டிருப்பதையும் அவர் காண்கிறார். ஜப்பானில் மீண்டும் தோற்றுவிக்கப்பட்டுள்ள மீஜி ஆட்சியுடன் (Meiji Regime), துருக்கியில் அட்டாடர்க் (Ataturk) ஆட்சியுடன் கம்யூனிச ஆட்சியும் தோன்றியுள்ளது என்பதனையும், இந்த ஆட்சிகள் வளர்ச்சி குறைந்த உலகில் வளர்ச்சிப் படிமுறையினைத் துவக்கி, நிலைநிறுத்தி, இயக்கக்கூடிய மனிதாபிமானமற்ற அரசியல் அமைப்பினை ஏற்படுத்தியுள்ளன என்பதனையும் அவர் காண்கிறார். ஆனால், இதனை அவர் விரும்பவில்லை. கம்யூனிஸ்டுகளைச் சாராத அரசியல்வாதிகளுடனும்,

[18] வால்ட் ரோஸ்டோவ், 'பொருளாதார வளர்ச்சிக் கட்டங்கள்', ப. 91.

துவக்கத்தில் பொருளாதார விடுபடு நிலையை அடைந்த பிரதேச மக்களுடனும் ஒன்றுசேர்ந்து, அரசியல், சமூக அடிப்படையில் நிலைபெறும் வளர்ச்சியின் மூலமாக முன்னேற்ற ஜனநாயக வளர்ச்சியின் சாத்தியங்களை உண்டாக்கும் முயற்சியே இக் காலத்தின் முக்கிய சவாலாகும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.

தம்முடைய சொற்பொழிவுகளில் கம்யூனிசம் சாராத அறிக்கையை உருவாக்குவதுபற்றி ரோஸ்டோவ் விளக்குகிறார். மனித உரிமையை அழித்துவிடாமல், பொருளாதார வளர்ச்சியினைப் பல்வேறு வகைகளுடைய சமூகங்கள் மேற்கொள்வதை வலியுறுத்திப் பொருளாதார வளர்ச்சிக் கட்டங்களை ரோஸ்டோவ் அவர்கள் பகுத்தாய்தலானது, வளர்ச்சி குறைந்த நாடுகளில் பொருளாதார அபிவிருத்தியினை ஜனநாயக ரீதியாக மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தினையுடையாருக்கு ஆதரவு நல்கும் என்று அவர் நம்புகிறார். அவரது பொருளாதார வரலாறு எளிதான ஆய்வினை உடையதாகும். தற்காலத்து அளவுகோலினால் சுதந்திர சமூகமென்றோ அல்லது ஜனநாயக சமூகம் என்றோ வருணிக்க முடியாத சூழ்நிலைகளையுடைய நாடுகளில் நடந்து நிறைவேறிய பொருளாதார வளர்ச்சிபற்றியே அவர் பேசுகிறார். இவையனைத்தும் வெகு நாள்களுக்கு முன்னரே நடைபெற்றன என்பது உண்மையே. கம்யூனிச உலக வரலாற்றில் இவை இப்பொழுதே நிகழ்ந்தன. உண்மையில், பெருநிலப் பிரதேசமாம் சைனாவில் இவை நமது காலத்திலேயே நிகழ்கின்றன. மேற்கத்திய உலகின் பெரும் பகுதிகள் பொருளாதார விடுபடு கட்டங்களைக் கடந்த பின்னரே ஜனநாயக உரிமை ஏற்பட்டது என்பது உறுதி. சில நல்ல காரணங்களினாலேயே இந்த நிலை ஏற்பட்டது. பொருளாதார வளர்ச்சியின் துவக்க கட்டங்களில் சுரண்டலற்ற கூட்டு நலன் நிலவவேண்டியதை அனுமதிக்கும் அளவிற்கு உற்பத்தி சக்திகள் போதுமான அளவிற்குக் கிடைக்கவில்லை. அண்மைக் காலத்தில் கம்யூனிஸ்ட் நாடுகளிலும் இது நிகழ்ந்தால், அதே காரணத்தினால்தான் நிகழ்ந்தது எனலாம்; அதாவது, சுரண்டலில்லாது குவிப்பினை மேற்கொள்ளும் அளவிற்குத் தனித்த நாடுகளில் உற்பத்தி சக்திகள் போதுமான முதிர்ச்சி அடையவில்லை. உபரியினை உதவக்கூடிய வளர்ச்சியுற்ற மேற்கத்திய உலகு, தனக்குரிய பெருமளவு துய்ப்பினையும் நீடித்துழைக்கக்கூடிய துய்ப்புப் பண்டங்களையும் பெருக்கும் சகாப்தத்தை உருவாக்குவதில் முயன்று நின்றனவேயன்றி, உபரியினை அந் நாடுகளுக்குக் கொடுக்க முன்வரவில்லை.

ஆனால், தங்களுடைய சொந்த முயற்சியினாலேயே வளரும் நிலையிலிருந்த நாடுகளை அவ்வுலகு கேலி செய்தது. மேற்கத்திய நாடுகள் உதவியபொழுதெல்லாம், எடுத்துக்காட்டாக பிரிட்டிஷ் காமன்வெல்த்திலுள்ள வெள்ளைக்காரப் பகுதிகளுக்கு உதவியபொழுதெல்லாம், வளர்ச்சி, ஜனநாயக உரிமையினைப் பெருமளவிற்குப் பாதிக்கவில்லை என்பது உண்மையே. இவ்வாறே, சோவியத் யூனியனைவிடக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வளர்ச்சி குறைந்த அளவு சோர்வினையே உண்டாக்கியிருப்பதற்குக் காரணம் சோவியத் யூனியன் நேசக்கரம் நீட்டியமையே எனலாம்.

உள்நாட்டில் ஜனநாயகத்திற்குப் புறம்பான சூழ்நிலைகளினாலும், வெளிநாட்டில் காலனி சூழ்நிலைகளினாலும் சாத்தியமாகும் அடிப்படையான சுரண்டல் அம்சம் மேற்கத்திய பொருளாதார வளர்ச்சியில் இருப்பதைக் காண ரோஸ்டோவ் தவறினார். நடப்பிலுள்ள வளர்ச்சிப் படிமுறையினை எளிதாக இயக்குவதற்கு மேற்கத்திய பொருளாதார உதவி முக்கியம் என்பதனையும் அவர் கண்டுள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்வது நலமே. ஏனெனில், கீழே வரும் கூற்றுடன் தம்முடைய சொற்பொழிவுகளை அவர் முடிக்கிறார்:

'ஜனநாயகம் சார்ந்த வடக்குப் பகுதியினைச் சார்ந்த நாம், நம்முடைய அறக்கடமையையும், சக்தியையும், மூலவளங்களையும் முழுதும் பயன்படுத்தி, உலகில் இன்று நிலவியுள்ள வளர்ச்சிக் கட்டங்களின் உள்ளார்ந்த சவாலினை ஏற்றுச் சமாளித்தாலொழிய நாகரிகத்தைக் காப்பாற்ற முடியாமல் போகலாம்.'[19]

ஒரு குறிப்பிட்ட பகுதியினை ஈர்க்கக்கூடிய கெடுபிடிப்போர்ச் சூழமைவில் இப் பிரச்சினையைக் கிளப்பியிருப்பது மட்டுமே நமது வருத்தமாகும். எவ்வளவுதான் நல்ல முறையில் நடந்து கொண்டாலும், ஓர் குறிப்பிட்ட பகுதியினரையே கவருவதைவிட மனித இனத்தையே உலகளவில் கவரும் முறையில் இப் பிரச்சினையை நல்லவண்ணம் எழுப்பியிருக்க முடியும்.

இப்பொழுது, பொருளாதார யுத்தோப்பியாவைப்பற்றிக் கம்யூனிச ஆசிரியர் காரல் மார்க்ஸ் என்ன சொல்கிறார் என்று சற்றுச் சிந்திப்போம். 'சொத்துரிமைகளையும் பூர்ஷ்வா உற்பத்தி நியதிகளையும் சர்வாதிகார ஊடுருவல்கள்மூலம்' அகற்றுதலே உற்பத்தி முறையினை முழுதும் புரட்சி மயமாக்கத் தவிர்க்க முடியாத வழிமுறையாகும் என்று காரல் மார்க்ஸ்

19 மேலே வரும் புத்தகம், ப-167.

கருதினர். பின்னர் வர்க்கமற்ற சமூகம் தோன்றும் என்றும் கருதினர். 'ஒவ்வொரு தனி மனிதனின் சுதந்திரமான வளர்ச்சியே அனைவரின் சுதந்திர வளர்ச்சிக்கு வழிகோலும் எனும் வாய்ப்பினை அளிக்கும் அமைப்பே' வர்க்கமற்ற சமூக அமைப்பாகும்.[20] எனினும், உற்பத்தி சக்திகள் முதிர்ச்சியடைந்தவுடன், இவரது தருக்க முறைக் கோட்பாடு இந்தப் பொருளாதார யுத்தோப்பியாவில் இயங்கத் தொடங்குகிறது. சிட்னி ஹூக் (Sidney Hook) பின்வருமாறு கூறுகிறார்: 'உலகம் முழுமை அடையும் என்று மார்க்ஸ் நம்பவே இல்லை. இவரது வர்க்கமற்ற சமூகத்தில், சமூக வாழ்வுக்கான போர் முடிந்துவிடும். ஆனால், உயர் பிரச்சினையாகிய தனியார் ஆளுமைப் பிரச்சினை இருக்கும்.'[21] ஆனால், ஹூக் குறிப்பிட்டுள்ளது போல, 'பிழைப்பின் லௌகீகப் பிரச்சினைகளினால் மக்களுக்கு எந்தவிதத் தடையும் ஏற்படாது; அறிவு வளர்ச்சியின் போதும் ஆத்மீக வளர்ச்சியின்போதும் எழும் பிரச்சினைகளையே மக்கள் சமாளிக்கவேண்டும்.' மனித இனம் பொருளாதாரப் பிரச்சினையை வெற்றி கொண்டு அமைக்கும் பொருளாதார யுத்தோப்பியாவின் காட்சியை, ஆர்வத்தைத் தூட்டி எழுப்பும் தமது எழுத்துப் படைப்பில் மார்க்ஸ் சுருக்கமாக விளக்கியுள்ளார்.

'உயர்நிலையடைந்துள்ள கம்யூனிச சமூகவமைப்பில், வேலைப் பகுப்பின்கீழ்த் தனிநபர்களை அடிமைபடுத்துதல் ஒழிந்த பின்னர், இதன் காரணமாக மூளை உழைப்பிற்கும் உடல் உழைப்பிற்கும் இடையிலுள்ள பூசல் ஒழிந்த பின்னர், வாழ்க்கையின் வெறும் வழிமுறையாகவிருந்து வாழ்க்கையின் பிரதான தேவையாக உழைப்பு மாறிய பின்னர், தனிநபரின் முழு வளர்ச்சியுடன் உற்பத்திக்குரிய வளச்சாதனங்களும் பெருகிய பின்னர், கூட்டுறவுச் செல்வத்தின் ஊற்றுகள் அனைத்தும் நிரம்பி வழிந்த பின்னர், பூர்ஷுவா சட்டத்தின் குறுகிய வீச்சுப் பின்தள்ளப்பட்டுவிடும்; திறமைக்குத் தக்கவாறு ஒவ்வொருவனிடமிருந்தும் பெற்று, தேவைக்குத் தக்கவாறு ஒவவொருவனுக்கும் வழங்கப்பெறும் என்று சமூகம் தனது கொடியில் பொறித்துக்கொள்ளும்.'[22]

தம்முடைய யுத்தோப்பியாவில் தொழிலாளர் உழைப்பின் இயல்பு மாறுதலைப்பற்றி மார்க்ஸ் குறிப்பிடுகிறார். மார்ஷல்

[20] காரல் மார்க்ஸ், எஃப். ஏங்கல்ஸ், 'கம்யூனிஸ்ட் அறிக்கை' (நூற்றாண்டுப் பதிப்பு), ப. 20.

[21] சிட்னி ஹூக், 'காரல் மார்க்ஸ்பற்றித் தெளிதல்.'

[22] மார்க்சும் ஏங்கல்சும்.

அவர்களுடைய யுத்தோப்பியாவில் மக்கள் நிறைய வேலை செய்வரேயன்றிக் குறைவாக அன்று ; ஆனால், ஊதியத்திற்காக வேலை செய்யாது அன்பிற்காக அன்புடன் செய்வர். மார்க்ஸ் அவர்களது யுத்தோப்பியாவிற்கும் மார்ஷல் அவர்களது யுத்தோப்பியாவிற்கும் ஒரு தொடர்பு இருத்தலைக் காணலாம். தம்முடைய யுத்தோப்பியாவில் பூர்ஷுவா சட்டம் ஒழிந்து, ‘ திறமைக்கேற்ப வழங்கி, தேவைக்கேற்பப் பகிர்ந்தளித்தல்’ எனும் கோட்பாடு நடைமுறைக்கு வரும் என்று மார்க்ஸ் கூறுகிறார். மிகவும் அருவருக்கத்தக்க மனித இயல்புகள் சிலவற்றை மிகவும் உயர்ந்த ஒழுக்கங்களாக உயர்த்தியுள்ள பொய்மை நிறைந்த அறக்கோட்பாடுகளை, 200 ஆண்டுகளாக நிலவியுள்ள அறக்கோட்பாடுகளை ஒழித்தபிறகே தம்முடைய யுத்தோப்பியா உருவாகி அமையும் என்று கீன்ஸ் கருதுகிறார் ; பொருளாதார நடவடிக்கை தமக்கு நியாயமானது என்ற கட்டம் முடிவுற்று, ஏனையோருக்கும் நியாயமான குறிக்கோள் உடையதாக அது நிலவும்பொழுதே தமது யுத்தோப்பியா அமையும் என்று கீன்ஸ் கருதுகிறார். இதிலும்கூட, மார்க்ஸின் யுத்தோப்பியாவிற்கும் கீன்சின் யுத்தோப்பியாவிற்கும் நெருங்கிய ஒற்றுமை உள்ளது என்பதைக் காணலாம். எனவே, முதலாளித்துவ உலகிற்கும் கம்யூனிச உலகிற்கும் இடையில் பெருந் தொலைவு இருப்பதாகத் தோன்றவில்லை. ஆனால், மனிதஇனம் இப் பொருளாதார யுத்தோப்பியாவை அடைந்த பின்னரே இவ்விரு உலகங்களுக்கிடையேயுள்ள தொலைவு நீங்கும். இதற்கிடையில், சண்டையும் கெடுபிடிப் போரும் ஏற் பட்டுள்ளன. முதலாளித்துவச் சிந்தனைக்கும் கம்யூனிச சிந்தனைக்கும் பொதுவாகத் தோன்றுகின்ற பொருளாதார யுத்தோப்பியாவின் காட்சியினை அழித்திடும் வகையில் எழுந் துள்ள உலகப் போர்நிழலின்கீழ் மனிதஇனம் நடுங்கிக்கொண் டிருக்கிறது.

என்னுடைய கட்டுரையின் முடிவுப்பகுதிக்கு இப்பொழுது நான் வந்துள்ளேன். வளர்ச்சி குறைந்த நாட்டைச் சேர்ந்த பொருளாதார நிபுணனாகிய எனக்கு, 400 மில்லியன் பிரஜை களின் வறுமைக்கு இடையில் பொருளாதாரப் பிரச்சினை கொடூரமான உண்மையாகத் தோன்றுகிறது. பொருளாதாரப் பிரச்சினைக்கு முழுத் தீர்வு காணாத நிலையில் பொருளாதார யுத்தோப்பியாவானது நிறைவேற்ற முடியாத காட்சியாகவே தோன்றுகிறது ; சோம்பேறித்தனமான, தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளும் வெறும் பிதற்றலாகவே தோன்றுகிறது. இந்த நிலையில் பொருளாதார யுத்தோப்பியா பற்றி நான்

என்ன சொல்வது? என்னுடைய விடை தெளிவானது, திட்டவட்டமானது. பொருளாதார யுத்தோப்பியாமீது எனக்கு நம்பிக்கை உண்டு. இதனை உருவாக்க முடியும் என்று நான் அறிவேன்; ஆனால், இது தானாகவே அமையாது. ஏதோ ஒரு நாடு பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். உலகின் பகுதிகளனைத்தும்கூடப் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். ரோஸ்டோவ் அவர்களின் வடபுறத்து உலகு இன்று தீர்வுகண்டு வெற்றியடையலாம்; குருஷ்சேவ் அவர்களின் சோவியத் உலகு அடுத்த நாள் வெற்றியடையலாம்; அல்லது நாளை மறுநாள் வெற்றியடையலாம். பொருளாதார வளர்ச்சியின் தவிர்க்க முடியாத விதி என்ற முறையில், உலக முழுதும் பொருளாதார வளர்ச்சியில் வெற்றி காண முடியாது. நீடித்துழைக்கக்கூடிய துய்ப்புப் பண்டங்களின் பகட்டினை அமெரிக்கர்கள் அனைவரும் அனுபவிக்கலாம். சந்திரனுக்கு ராக்கெட்டுகளை அனுப்புவதில் ரஷ்யர்கள் அனைவரும் பெருமை அடையலாம். ஆனால், இன்றைய வளர்ச்சி குறைந்த உலகில் பொருளாதாரப் பிரச்சினை தொடர்ந்து நிலவும். ஏனெனில், இந் நாடுகள் வேதனையூட்டும் கீழ்நிலையிலிருந்து மேலேறிவந்து கொண்டுள்ளன. இந் நாடுகள் காலம் தாழ்த்தியே முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்துள்ளன; இவற்றின் முன்னேற்றப் போக்கும் மெதுவாகவே உள்ளது. இதற்கிடையில் பொருளாதார யுத்தோப்பியாவை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் ஏனைய நாடுகளின் சகோதரர்கள் பெற்றுள்ள வாழ்க்கைத்தரத்திற்கும் வளர்ச்சி குறைந்த நாட்டினரின் வாழ்க்கைத்தரத்திற்கும் இடையிலுள்ள இடைவெளி விரிந்து கொண்டே செல்கிறது. பொருளாதாரப் பிரச்சினையின் கொடுங்கோன்மையிலிருந்து மனித இனத்தை விடுதலை செய்யும் தவிர்க்கமுடியாத வளர்ச்சிக்கான பொருளாதார விதி (சட்டம்) ஒன்றும் இல்லை. மனித இனம் பொருளாதார யுத்தோப்பியாவை நெருங்கி அடைய வேண்டுமெனில், மனித இனம் முழுதும் உறுதியான, திட்டமிட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். வளர்ச்சி குறைந்த உலகும் வளர்ச்சியுற்ற உலகும் இக் காரியத்தில் சேரவேண்டும்; பொருளாதார விடுபடு நிலைக்கு முந்திய பொருளாதாரங்களும் முதிர்ந்த பொருளாதாரங்களும் இதில் சேரவேண்டும். முதிர்ச்சி அடைந்த அல்லது ஏறத்தாழ முதிர்ச்சி அடைந்த பொருளாதாரங்களில், பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் உற்பத்தி சக்திகள் வளர்ந்துள்ள நிலையில் எழுகின்ற பிரச்சினைகளைப் பொறுத்த அளவில், வெறும் கருத்தியலில் மட்டுமன்றி நடைமுறை இயலிலும் பொருளாதார யுத்தோப்பியாவே

எனது திட்டமாகும். பொருளாதாரப் பிரச்சினை தனது வழக்கமான கொடூரத்தை அழித்துக்கொண்டிருக்கும் பிரதேசங்களைப் பற்றியே நான் பேசுவேன்.

இத்தகைய நாடுகளில் பொருளாதாரப் பிரச்சினை மறையத் தொடங்குவதால், அலீஸ் விந்தை உலகில் (Alice's Wonderland) உள்ள செஷயர் பூனைபோல (Cheshire cat) மீண்டும் தோன்ற மாட்டாது என்று கருதக்கூடாது. எப்பொழுதுமே மால்தஸின் பயமுறுத்தல் ஒன்று இருக்கிறது. ஜூலியன் ஹக்ஸ்லி சொல்வது சரியெனில், மால்தஸின் அச்சுறுத்தல் உள்நுழைய மூலையில் நின்றுகொண்டிருக்கிறது. விஞ்ஞானத்தில் நம்பிக்கை இருக்கலாம்; மனித இன உற்பத்தி ஆற்றலுக்கு எதிராக மனிதக் கண்டுபிடிப்பைப் பொருத்திப் பார்க்கலாம். மேற்கத்திய நாடுகளின் வளமிக்க சமூகங்களுக்கு ஏற்பட்டுள்ள உடனடி ஆபத்தினை நோக்கும்பொழுது திருப்தி ஏற்படவில்லை. போர் அச்சம் எப்பொழுதும் நிலவும் உலகில் பொருளாதார யுத்தோப்பியா தோன்றும் என்றோ, தோன்றி வெகுகாலம் நிலவும் என்றோ நினைக்கமுடியாது என்பதனை நெஞ்சிலிருத்திக் கொள்ளவேண்டும். போர் நிகழ்ந்தால், பொருளாதார யுத்தோப்பியா மறைவதுடன் மனிதனும் அழிந்துவிடுவான். உலகில் வளர்ச்சி குறைந்த நாடுகள் இருக்கும்வரையில், கெடுபிடிப்போரில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நாடும் தனது பிரச்சாரத்தின் மூலமாகவும், தன்னுடைய சொற்ப வளச்சாதனங்களைப் பயன்படுத்துவதன்மூலமாகவும் வளர்ச்சி குன்றிய நாடுகளின் மக்களைத் தூண்டிக்கொண்டிருக்கும் வரையில், போர் அச்சம் இருந்துகொண்டே யிருக்கும். கெடுபிடிப்போரின் தூண்டுதலின் காரணமாக வளர்ச்சி குறைந்த நாடுகளில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படலாம். பெரிய நாடுகளின் அளவு மீறிய பரிவினைக் கண்டு சில வளர்ச்சி குறைந்த நாடுகள் மகிழ்ச்சி அடையலாம். ஆனால், இதனால் உண்மையான அன்பு ஏற்பட்டுவிடாது. கெடுபிடிப்போரில் ஈடுபட்டுள்ள நாடுகளிலிருந்து எவ்வளவுக்கெவ்வளவு நடுநிலை நாடுகள் உதவி பெறுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு உண்மையான நடுநிலைமையினைக் காத்துக்கொள்ள முடியாது. எனவே, பிளவு இன்னும் விரிவடையும்; உலகம், விரோத மனப்பான்மை கொண்ட இருபெரும் பகுதிகளாகப் பிரிந்துவிடும்; கெடுபிடிப்போர் சூடுமிக்க உண்மைப் போராக மாறிவிடும். எனவே, முதிர்ச்சியடைந்த பொருளாதாரங்கள் பொருளாதார யுத்தோப்பியாவை அடையவேண்டுமெனில், அந் நாடுகளில் மட்டும் உற்பத்தி சக்திகள் வெற்றியடைந்தால் போதாது. வளர்ச்சி

குறைந்த பகுதிகளிலும் உற்பத்தி சக்திகள் முதிர்ச்சியுற்றுப் பொருளாதாரப் பிரச்சினையை வெல்லவேண்டும் என்பதும் அவசியமாகும். இந்த நிலை ஏற்படும்வரையில், பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டவுடன் தங்கள் நாடுகளில் எழும் புதுப் பிரச்சினைகளைப்பற்றி மேற்கத்திய உலகின் பொருளாதார மேதைகள் பேசுவது குறுகிய மனப்பான்மை மட்டுமன்று; வெம்பிய மனப்பான்மையும்கூட. கெடுபிடிப்போர்ச் சூழமைவில், உதவி வழங்குதல்மூலம் வளர்ச்சி குறைந்த உலகின் பொருளாதார அபிவிருத்தியினை மேற்கொள்வது மட்டும் போதாது. தற்காலத்து அரசியல், தற்காலத்துப் பொருளாதாரம் ஆகியவற்றின் பன்னுட்டு இயல்பினைத் தெரிதலும் அவசியமே. கடந்த அரை நூற்றாண்டில், பெருமளவு உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிச் சூழமைவில், தேசிய எல்லைக் கோடுகள் வரலாற்றில் வழக்கொழிந்துவிட்டன. கால்பிரெய்த் பிறிதோரிடத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல, மூலத்தவற்றை விடத் திருத்தப்படாத 'வழக்கொழிதல்' இன்னும் மோசமே. அவர் குறிப்பிட்டுள்ளதுபோல, வழக்கொழிதலானது பொருளாதாரப் பிரச்சினையைப்பற்றித் தொடர்ந்து கவலை கொள்ளவில்லை; உற்பத்தியைப்பற்றியே கருதுகிறது.

உலகின் பெரும் பகுதியில் பொருளாதாரப் பிரச்சினை நிலவுகிறது. உற்பத்தியைப் பெருக்குவது குறித்தே பெரும்பாலான மக்கள் கவலை கொண்டுள்ளனர். பெரும்பாலான மக்கள் வறுமையில் வாடி வதங்கிக் கீழான நிலையில் வாழ்கின்றனர்; இவர்கள் தங்களுடைய முன்னேற்றத்திற்காக வேதனையூட்டும் முயற்சிகளை மேற்கொண்டபோதிலும், ஏனைய நாடுகளிலுள்ள அதிருஷ்டமிக்க சகோதரர்களுக்கும் தங்களுக்குமிடையில் இருக்கும் இடைவெளியினை அகற்றமுடியவில்லை; ஏனென்றால், பொருளாதார வளர்ச்சியினைத் தனியே அனுபவித்து, நிலைத்திருந்து, உலக சமாதானத்தை நுகரும் முறையில் தெய்வாதீனமாகச் சில சமூகங்கள் அமைவதற்குத் தேசிய எல்லைக் கோடுகள் வழிவகுத்திருக்கும் அதே வேளையில், வளர்ச்சி குறைந்த நாட்டினர் தீவினையின் காரணமாக இவ்வெல்லைக்கோடுகளுக்குள் பிறக்கவில்லை; இது ஒரு பழைய கருத்தாகும்; வழக்கொழிந்த கருத்தாகும். எனவே, செழிப்பைப்போலவே சமாதானமும் பகுத்துப் பிரிக்கமுடியாத ஒன்றாகும். உலகின் பெரும்பகுதி, பொருளாதாரப் பிரச்சினையின் கொடுங்கோன்மையில் சிக்கிக் கிடக்கும்பொழுது, பொருளாதார யுத்தோப்பியாவை அனுபவிக்கும் தனிப் பகுதிகள் நிலைத்து நிற்கமுடியாது. மேற்கத்திய நாடுகள் பொரு

ளாதார யுத்தோப்பியாவை மறத்தல் வேண்டும் என்பதுதான் இதன் பொருளா? அல்லது பொருளாதார யுத்தோப்பியாவைப் பாதுகாப்பதற்காகவேண்டி இராணுவக் கோட்டையினை எழுப்பி, அக் கோட்டையிலிருந்து தனது சோலைவனத்தைச் சுற்றியுள்ள பாலைவனத்தை நோக்குதலே இதன் பொருளா? பொருளாதார யுத்தோப்பியாபற்றிய நம்பிக்கைகளை இழந்துவிடவேண்டும் என்று நான் கருதவில்லை. சோவியத் பகுதியுடன் சேர்ந்து வாழ்வதற்கான ஒப்பந்தம் ஏற்படாவிட்டாலுங்கூட, இராணுவ அரண் எவ்விதப் பாதுகாப்பினையும் அளிக்காது என்றே நான் கருதுகிறேன். ஏனென்றால், வளர்ச்சி குறைந்த உலகில் வாழும் பெரும்பாலான மக்கள் உலக சமாதானத்திற்குப் பேரிடராகவே உள்ளனர். உலக சமாதானம் நிலவாத நிலையில், பொருளாதார யுத்தோப்பியா நிலைத்து நிற்காது.

பொருளாதார யுத்தோப்பியாவினைத் தனித்து நிறுவ முடியாது. பொருளாதாரப் பிரச்சினையைப் பன்னாட்டு அடிப்படையில் வென்ற பின்னரே, மனித இனத்திற்குக் கிடைப்பருமை ஏற்படாத உச்சத்தினை உற்பத்தி சக்திகள் அடைந்த பின்னரே, பொருளாதாரப் பிரச்சினை உண்மையாகவே மறைந்தொழியும்; கடிய உழைப்பினைச் சாராது, அன்புடைமையையும் தன்வெளிப்பாட்டினையும் தன்நிறைவேற்றத்தினையும் உண்டாக்கும் வேலையினை மனித இனம் மேற்கொள்கின்ற உச்சத்தினை உற்பத்தி சக்திகள் அடைந்தபின்னரே, பொருளாதாரப் பிரச்சினை மறைந்தொழியும். இதனை எவ்வாறு நிறைவேற்றுவது?

நன்கொடை, இலஞ்சம் அல்லது கெடுபிடிப்போருக்கு வேண்டிய யுத்த தளவாடங்களில் ஒரு பகுதி ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்பெற்ற இரு நாடுகள் சார்ந்த பொருளாதார உதவிமூலம், யுத்தோப்பியா பற்றிய குறிக்கோளினை உடைய உலகப் பொருளாதார வளர்ச்சியினை மேற்கொள்ள முடியும் என்று நான் கருதவில்லை. உதவி போதவில்லை என்பது பிரச்சினை அன்று; அல்லது அரசியல் நோக்குடையது என்பதுமன்று; அல்லது ஆண்டு அடிப்படையில், வாய்க்கும் கைக்கும் இழுத்துப் பறித்துக்கொண்டிருக்கும் அடிப்படையில் உதவி கொடுக்கப்படுகிறது என்பதும் பிரச்சினையன்று. இவற்றையெல்லாம் மீறிக் காலம் எனும் பிரச்சினை உள்ளது. வளர்ச்சி குறைந்த உலகம் முன்னேறும்பொழுது, வளர்ச்சியுற்ற உலகம் முன்னேறாது இருந்த இடத்திலேயே இருப்பதில்லை. இவ்விரு உலகுகளுக்கிடையேயுள்ள பிளவு சுருங்காது மேலும் விரிவடைகிறது. எனவே, உலக சமாதானத்திற்கோ

அல்லது உலக சகோதரத்துவத்திற்கோ ஏற்ற மனப்பான்மை உருவாகவில்லை. பொருளாதார யுத்தோப்பியாவில் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான மனப்பான்மையும் உருவாகாது. குறைந்தபட்சம் மேலும் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதைப் பொறுத்தவரையிலாவது, மேற்கத்திய உலகில் காலம் முன்னேருது நிலைத்து நிற்கவேண்டியதே அவசியமாகும். இதற்கிடையில், மேற்கத்திய உலகம் அடைந்திருக்கும் உயர்விற்கு ஏனைய பகுதிகளையும் உயர்த்துவதற்குப் பன்னாட்டு ரீதியில் முயற்சி எடுக்கவேண்டும். இவ்வாறு முயற்சி எடுத்தால்தான், பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் உலக ரீதியான தாக்குதல் ஏற்படும்; இன்னும், பொருளாதார யுத்தோப்பியாவை நிறுவுவதற்கான உலக அடிப்படை தோன்றும். மேற்கத்திய உலகில் உள்ள எனது தோழர்கள் இக் கருத்தினை ஜீரணிக்கமாட்டார்கள் என்பதை நான் அறிவேன். அதே வேளையில், தங்களுடைய நாடுகளில் குழந்தைப் பெருக்கத்தை ஆர்வத்துடன் ஆதரித்து மேற்கொண்டுள்ளவர்கள் குழந்தைகளை அளவோடு பெறுகவென எனது உலகத்து நண்பர்களுக்கு அறிவுரை வழங்குதலை விரும்பி ஏற்பது எளிதன்று என்பதனையும் நான் அறிவேன். வயிற்றினை இறுகக் கட்டிக்கொண்டு, வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யாது வாழுங்கள் என்று எனது பிரதேச நண்பர்களுக்குச் சொன்னல், அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; ஏனெனில், இந்த உபதேசத்தை அளிப்பவர்கள், குறைந்துள்ள பசியினை இயற்கைக்கு மாருகத் தூண்டி விடுவதிலும், தங்களுடைய உற்பத்தி வளச்சாதனங்களை உச்ச அளவிற்குப் பயன்படுத்துவதற்காகப் புதிய, தேவையற்ற விருப்பங்களை உண்டாக்குவதிலும் தங்களுடைய பொருளாதார மூலவளங்களைப் பயன்படுத்திக்கொண்டுள்ளனர். நாட்டு எல்லைக் கோடுகள் நாடுகளின் வாழ்க்கைத்தரங்களிலே வேறுபாட்டினை உண்டாக்கக்கூடாது. எனவே, தங்களுடைய உயர் தொழில்நுணுக்கத் திறன்களும் மிகப்பெரு விசைத்திறனும் மட்டுமன்றி, வரலாற்றின் கோளாறுகளும் எல்லைக் கோடுகளின் மாற்றங்களும் பொருளாதார வளர்ச்சியில் ஏற்றத் தாழ்வுள்ள மட்டங்களுக்குக் காரணங்களாக அமைவன என்பதனை மேற்கத்திய உலகம் உணர்தல் நலமே.

தாங்கள் அனுபவித்துவரும் வளமிக்க வாழ்க்கைக்குத் தாங்களே தகுதி படைத்தவர்கள் என்றும், ஏழை மக்களே வறுமைக்குக் காரணம் என்றும் பணக்காரர்கள் கருதுகிருர்கள். சோஷலிசம் சில பகுதிகளிலும் சேமநல இராஜ்

ஜியம் வேறு சில பகுதிகளிலும் ஏற்படுகின்றவரையில், மேலே குறிப்பிட்ட சித்தாந்தத்தினை அவர்கள் குறைந்தபட்ச அளவிற்கேனும் ஒதுக்கி, ஒவ்வொரு நாட்டிலும் இத்தகைய இரண்டு உலகுகள் ஏற்படுவதற்கான சூழ்நிலைகளைக் குறைந்தபட்ச அளவிற்கேனும் அகற்றுதல் வேண்டும். இதனைச் சார்ந்த தர்க்க வாதத்தினைக் கொஞ்சம் உயர்த்தி விளக்க வேண்டும். குன்னர் மிர்டல் கூறியுள்ளதுபோல, மேற்கத்திய உலகு தேச சேமநல இராஜ்ஜிய அமைப்பிற்கும் அப்பால் சென்று முன்னேற்றத்திற்கு உதவவேண்டும்; சேமநல இராஜ்ஜியத்தினைக் காத்து நிற்கும் அதே வேளையில், நாட்டு எல்லைகளுக்கப்பாலும் சென்று அதன் வளர்ச்சிக்கு உதவவேண்டும். இதனைச் செய்து முடிக்க வேண்டியது அவசர அவசியமாகும்; காலம் தாழ்த்துவதில் பயனில்லை. ஏனெனில், நீடித்துழைக்கும் துய்ப்புப் பண்டங்களை அனுபவித்து வாழும் அமெரிக்க மக்களுக்கு இணையாகச் சென்று அடைவதற்காக, யூனியன்களையும் சமூகப் பகுப்புகளையும் உண்டாக்கியுள்ள மேற்கு ஐரோப்பிய உலகினை உயர்ந்த, மிக உயர்ந்த வாழ்க்கைத் தரங்கள்பற்றிய தேச ரீதியாகப் 'பின்பற்றும் நிலை' கவர்ந்துள்ளது. சோவியத் யூனியனின் தலைமையில் இயங்கும் கிழக்கு ஐரோப்பிய உலகும் உயர்ந்த வாழ்க்கைத் தரங்களை ஏற்றுப் பின்பற்ற முனைகின்றன. நீடித்துழைக்கும் துய்ப்புப் பண்டங்களை நிரம்பப் பெற்று அனுபவித்து வாழும் முதலாளித்துவ உலகின் சித்தாந்த ரீதியான எதிரிகளுக்கு இணையாக முன்னேற சோவியத் யூனியனும் கிழக்கு ஐரோப்பிய உலகும் முனைகின்றன. எனவேதான், 1970ஆம் ஆண்டிற்குள்ளாக, வாழ்க்கைப் பண்டங்களைப் பெறுவதில் அமெரிக்கர்களுக்கு இணையாகிப் பின்னர் அவர்களையும் விஞ்சவேண்டும் என்பதற்காக மிக உயர்ந்த, ஆனால், பகட்டான இலக்கினைத் தம் மக்கள்முன் உணர்ச்சி மிக்க குருஷ்சேவ் வைத்துள்ளார். பொருளாதார யுத்தோப்பியாவைச் சில பகுதிகளில் நிறுவ மேற்கொள்ளப்படும் லௌகிகப் போட்டியில், வளர்ச்சி குன்றிய நாடுகளின், மக்களின் நிலை என்ன? இவர்களுக்குச் சிறு துண்டுகள் கிடைக்கும் என்பது உறுதியே; இச் சிறு துண்டுகள் எப்பொழுதும் உதவுவன. ஆனால், மனச்சான்று தூண்டுதலினால் உதவி வழங்கும் பணக்காரர்களுக்கு ஏழைகள் மதிப்பளிக்கும் நாள்கள் ஓடி மறைந்துவிட்டன. அதிர்ஷ்ட வாய்ப்புள்ள நாடுகள் பொருளாதார யுத்தோப்பியாவினை அடைய நெருங்கும்பொழுது, குறுகிக்கொண்டு செல்லும் இவ்வுலகில், முந்திய வசதி நிலையைவிடக் குறைந்த வசதி நிலையில் ஏழை நாடுகள் தளர்ச்சியுற்றுத் தள்ளாடி நடந்து வாழ விரும்பவில்லை.

உலகின் பல்வேறு பகுதிகளின் வாழ்க்கைத் தரங்களில் நியாயமான அளவிற்குச் சமநிலை ஏற்படாமல் இருக்கும் பொழுது, உலக சமாதானம் நிலவ முடியாது. எனவே, தங்களுடைய பிராந்திய எல்லைகளுக்குள்ளாகவே பொருளாதார யுத்தோப்பியா அமைப்பதைப்பற்றி மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரிகள் பேசுவதை நிறுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். எனவே, உண்மையில், தங்களுடைய துய்ப்பு சார்ந்த பொருளாதாரங்களின் நியாயத்தை மேற்கத்திய பொருளாதார நிபுணர்கள் விவாதிக்கத் துவங்குவது அவசியமாகும்; அத்தியாவசியத் தேவைகள் நிறைவேருமல் இருக்கும் சூழ்நிலையுடைய, பெரும்பாலான மக்கள் வாழ்ந்து தீரவேண்டியதற்காக கடிய உழைப்பினை மேற்கொள்ளும் சூழ்நிலையுடைய உலகின் சூழமைவில், இத்தகைய செழிப்புள்ள சமூகங்களின் தேவைகள்பற்றிய அறவழியான அடிப்படைகளைப்பற்றி மேற்கத்திய பொருளாதார மேதைகள் ஐயங்களைக் கிளப்பி விடை காணல் அவசியமாகும். சில ஆண்டுகளுக்கு முன்னர் கீன்ஸ் வெளியிட்ட கருத்து அவர் காலத்தைவிட இன்று வெகு பொருத்தமாக உள்ளது. அவர் கூற்றை நான் முன்னரே எடுத்துக்காட்டியுள்ளேன். கீன்ஸ் பின்வருமாறு கூறுகிருர்: 'நம்முடைய அறவழியான, சடப்பொருள் சார்ந்த முயற்சித் திறன்களனைத்தையும் இன்று ஈர்த்துள்ள பொருளாதாரப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை இரண்டாந்தர நிலைக்குக் கீழிறக்கிவிடக்கூடிய திறமையை மேற்கத்திய உலகின் மூலவளங்களும் தொழில் நுண்ணியலும் ஏற்கெனவே பெற்றுள்ளன; ஆனால், இவற்றைப் பயன்படுத்துதற்குரிய நிருவாக அமைப்பினை உண்டாக்க வேண்டும்.' அதற்குப் பிறகு, மேற்கத்திய உலகில் மூலவளங்களும் தொழில் நுண்ணியலும் பெருமளவு பெருகியுள்ளன. மேலும், பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவத்தை இரண்டாந்தர நிலைக்குக் கீழிறக்கிடும் அளவிற்கு இன்று மூல வளங்களையும் தொழில் நுண்ணியல்களையும் சோவியத் உலகு பெற்றுள்ளது. ஆனால், பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவத்தை இரண்டாந்தர நிலைக்குத் தள்ளிடும் அளவிற்கு மூலவளங்களையும் தொழில் நுண்ணியல்களையும் உலகின் பெரும் பகுதி இன்னும் பெறவில்லை. பன்னாட்டு அடிப்படையில் மூலவளங்களையும் தொழில் நுண்ணியல்களையும் பன்னாட்டு ரீதியாகப் பயன்படுத்துதலே அவசியமாகும். தங்களுடைய நாடுகளின் பொருளாதாரப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை மாத்திரமன்றி, ஏனைய உலக நாடுகளின் பொருளாதாரப் பிரச்சினையின் முக்கியத்துவத்தையும் இரண்டாந்தர நிலைக்குத் தள்ளிடும் முறையில், மேற்கத்திய

உலகு, இன்றைய சோவியத் உலகு ஆகியவற்றின் மூல வளங்களையும் தொழில் நுண்ணியல்களையும் பயன்படுத்த வேண்டுமென்பதே இதன் கருத்தாகும். இவ் விளைவினை உண்டாக்க நிருவாக அமைப்பு ஒன்றினை ஏற்படுத்தினுல் மட்டும் போதாது. செழிப்புள்ள சமூகத்தின் மனப்பான்மையில் ஆழமான பெரு மாற்றம் ஏற்படவேண்டும். செழிப்பான கட்டத்தை உலக முழுதும் அடையும்வரையில் ஒருவர் காத்திருக்கலாம் என்பது அர்த்தமற்றது. ஏனெனில், செழிப்புள்ள சமூக அந்தஸ்தினை நெருங்கிக்கொண்டிருக்கிற நாடுகளின் மனப்பான்மையில் ஆழமான, முன்மாறுதல் நிகழாதவரையில், உலகம் முழுதும் இக் கட்டத்தினை அடைய முடியாது. குறைந்தபட்ச வாழ்க்கை வாழ்வதற்கே தேவைப்படும் அத்தியாவசியப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கே உலகில் பல பகுதிகள் போராடிக் கொண்டிருக்கும்பொழுது, நீடித்துழைக்கும் துய்ப்புப் பண்டங்களைப் பெருமளவு துய்க்கும் கட்டத்தினை அடைந்துகொண்டிருக்கும் காரணத்தினுலோ அல்லது அடைந்துவிட்ட காரணத்தினுலோ உலகில் வளங் கொழிக்கும் சமூகங்களைக் கொண்ட நாடுகள், பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட்டதாக நினைக்கும் மாயைக்குப் பலியாகியுள்ளதை உணர வேண்டும். பொருளாதாரப் பிரச்சினையை வென்றுவிட்டதாக நினைத்துக்கொண்டு, குறைந்த வேலைநேரம் பெறுவதற்கும், ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துவதற்கும், மின்னியக்கக் கருவிகளைப் பெருமளவு பயன்படுத்துவதற்கும், பகட்டும் நன்னடத்தையும் உள்ள பண்பாளர்களைக்கொண்ட நகர்ப்புறத்துச் சமூகத்தை உருவாக்குவதற்கும் வேண்டிய மூல வளங்களைப் பெருக்குவதற்கும் முயற்சி எடுப்பதற்கு முன்னர், உலகின் ஏனைய பகுதிகளிலுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்கு ஒன்று சேர்ந்து, திட்டமிட்டுத் தீர்வுகாண வளங் கொழிக்கும் நாடுகள் முன்வரவேண்டும். இதனை நிறைவேற்ற வேண்டுமெனில், தங்களுடைய நாட்டுப் பொருளாதாரங்களின் நடப்பு முறையிலுள்ள பொருளாதாரப் போக்கின் அடிப்படைகள் அனைத்தையும் உடைத்து நொறுக்குவதற்கு அப் பொருளாதார நிபுணர்கள் முன்வரவேண்டும்.

உற்பத்தியை நிறுத்துவதற்கு முன்னர், உலகம் முழுதும் உற்பத்தி குறிப்பிட்ட ஒரு மட்டத்திற்கு உயருவதற்குத் தன்னுடைய நாட்டு மக்கள் உதவவேண்டும் என்று கால்பிரெய்த் குறிப்பிட்டுள்ளார். உறுதித் தேவைக் கோட்பாடு கைவிடப்பெற்று, நாட்டிலும் நாட்டிற்கு வெளியிலும் தேவைக் கோட்பாடுமட்டும் மேற்கொள்ளப்படவேண்டும். உள்நாட்டிலும்

வெளிநாட்டிலும் சந்தையின் ஆதிக்கம் ஒழிதல் வேண்டும். தேசத் தேவைகளைக் கைவிட்டு, உலகத் தேவைகளைக் கணக்கெடுத்து, அவற்றிற்குத் தக்கவாறு முதலீடு செய்தல்வேண்டும். வரிவிதிப்பிலும் பொதுச் செலவுப் பகிர்விலும் தேசத் தேவைகளைமட்டும் பொது நிதியம் கவனிக்கக்கூடாது. பொருளாதாரத்தில் முந்துரிமை பெறும் விருப்பங்களையும், பொறுத்திருக்கத்தக்க விருப்பங்களையும் பிரித்து நோக்கப் பொருளாதார அறிஞர்கள் முன்வருதல் வேண்டும். இவ்வாறு பிரித்து நோக்கும்பொழுது, நிபுணர்கள் தங்களுடைய நாட்டு மக்களை மட்டும் கருதாது, உலக மக்களனைவரையும் கருதவேண்டும். இவையனைத்தும் உயர்ந்த அறிவுரைகளே; ஆனால், நடைமுறைக்குக் கொண்டுவருதல் எளிதன்று.

எனினும், இவ் வேலையினைத் துவக்கிவைக்கவேண்டியதே; பொருளாதார மேதைகளே இதனைத் துவக்கிவைக்க முடியும். உலகப் பொருளாதாரத்தில் அதிகக் கவனம் செலுத்தி, நிபுணர்கள் இவ் வேலையைத் துவக்கிவைக்கலாம்; அல்லது தேவை, அளிப்பு குறித்த பிரச்சினைகள், முதல் குவிப்பு, தொழில் நுண்ணியல் மாற்றம், வாழ்க்கைத்தரங்கள், வளர்ச்சி வீதங்கள், பண்ட உற்பத்தி, ஆக்கத்திறன் உற்பத்தி, வரி விதிப்பு, பொதுச்செலவு, கடிய உழைப்பு அம்சத்தையும், அருவருப்பு அம்சத்தையும் பொறுத்தவரையில் வேலை நியதிகள் ஆகிய வற்றைப்பற்றிப் பன்னாட்டு ரீதியாகவே கவனம் செலுத்தி, நிபுணர்கள் இவ் வேலையைத் துவக்கி வைக்கலாம். இதுவரையில் இவ் ஆராய்ச்சிகள் ஐ.நா. சபையில் புத்தகங்களிலேயே பெரும்பாலும் தென்படுவன; ஐ. நா. சபையின் குழுக்களிலேயே விவாதங்கள் நிகழ்வன. ஆனால், இத்தகைய விவாதங்களில் உலக மணமோ அல்லது உலக மனப்பான்மையோ தோன்றுவதில்லை. இவ்வாறே, அநேக மேற்கத்திய பொருளாதார நிபுணர்கள் எழுதிய புத்தகங்களில் தேசிய உணர்வுதான் தட்டுப்படுகிறதேயன்றிப் பன்னாட்டுணர்வு அன்று. எனவே, உலகக் கண்ணோட்டத்திலிருந்து பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராய்ச்சி செய்து மேற்கத்திய பொருளாதாரிகள் வெளியிடத் தொடங்குவார்களேயானால், அவர்களுடைய மக்கள் உலக அளிப்புகள், உலகத் தேவைகள் பற்றியும் நினைக்கத் தூண்டப்பெறுவர்: உலகின் ஏனைய பகுதிகளில் அத்தியாவசியத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்ய முடியாதிருக்கும் நிலையில், தங்களுடைய சொந்தப் பொருளாதாரத்தில் மேலும் மேலும் தேவைகளை உண்டாக்கி நிறைவேற்றிக் கொண்டிருக்கும் தங்கள் உயர்நிலையின் நியாயத்தையும் புரிந்து

கொள்வர். இதனைத் தொடர்ந்து உலகப் பொருளியலில் அடிப்படையான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டால், தேச நலத்தையன்றி உலக நலத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்தால், சந்தைத் தேவையையும் மேற்கத்திய தொழிலாளரின் வேலையி லுள்ள கடிய உழைப்பு சார்ந்த அம்சத்தின் குறைப்பையும் பற்றியல்லாமல் தேவையின் அறவழிக் கூறுகளைப்பற்றி ஆராய்ச்சி செய்தால், மனித உழைப்பு அனைத்தின் உண்மைச் செலவினைப்பற்றி ஆராய்ச்சி செய்தால், இவ் ஆராய்ச்சிகளின் பயனால் உருவாகும் தேசப் பின்னணியில், செழிப்புள்ள சமூகங் களிலும் ஓரளவு செழிப்புள்ள சமூகங்களிலும் நிலவும் மனப் பான்மையில் தேவைப்படும் மாற்றத்தை உண்டாக்க முடியும். என்னுடைய கருத்தின்படி, வளர்ச்சி குறைந்த நாடுகளின் தனித்த பிரச்சினைகள்பற்றிய ஆய்வுகளைவிட மேற்கத்திய பொருளாதார நிபுணர்கள் மேற்கொள்ளும் இத்தகைய ஆய்வுகளே மிக உயர்ந்தவை. வளர்ச்சி குறைந்த நாடுகளின் தனித்த பிரச்சினைகளைப்பற்றி இந் நாடுகளின் பொருளாதார நிபுணர்களே ஆராயவேண்டும்.

வளர்ச்சியுற்ற மேற்கத்திய நாடுகளின் பொருளாதார நிலை செழிப்பினை நோக்கி நெருங்கிக்கொண்டிருக்கும்பொழுது, பொருளாதார நிபுணன் மேற்கொள்ளவேண்டிய வேலையில் ஒரு மாற்றம் தேவை என்று நான் குறிப்பிட்ட ஆலோசனைகளை அவசரமாக நிறைவேற்றவேண்டும். மாறாத உலக நிலைமூல மாகவும் உலக சமாதானம்மூலமாகவும் வளர்ச்சியுற்ற நாடு களில் செழிப்புள்ள சூழ்நிலைகளைக் காக்கவேண்டியதனைமட்டும் என்னுடைய ஆலோசனைகள் குறிப்பிடவில்லை; இந் நாடுகளின் செழிப்பான சூழ்நிலைகளினால் எழுகின்ற உள்நாட்டுப் பிரச் சினைகளுக்குத் தீர்வு காண, இப் பொருளாதாரங்களைத் தயா ரிக்கவும் என்னுடைய ஆலோசனைகள் பொருத்தமாக உள்ளன. பொருளாதார யுத்தோப்பியாவைப்பற்றி மேற்கத்திய பொரு ளாதார நிபுணர்களுடன் நான் உரையாடியுள்ளேன். பொரு ளாதார யுத்தோப்பியாவை நிறுவ, மரபுவழி சார்ந்த மனப் பான்மையையும் சிந்தனைப் போக்குகளையும் அடிப்படையில் தகர்த்தெறிய வேண்டும் என்றும், சமூக நடத்தையிலும் பொரு ளாதார நடத்தையிலும் புரட்சிகரமான மாற்றம் வேண்டும் என்றும் அவர்கள் ஒத்துக்கொண்டுள்ளனர். இத்தகைய மாறுதல் ஓரிரவில் வந்துவிடாது என்று நான் உணர்வேன். இதற்கு எச்சரிக்கையும் தயாரிப்பும் தேவை; இதனைத் திட்டமிடல் வேண்டும்; இம் மாறுதல், அடுத்தடுத்த கட்டங் களிலேயே வரும். என்னுடைய ஆலோசனைகளைச் செழிப்புள்ள

அல்லது ஓரளவு செழிப்புள்ள சமூகங்களில் நிறைவேற்றினால், இவை மனப்பான்மையில் மாற்றத்தினை உண்டாக்க உதவும் என நான் நம்புகிறேன். கால்பிரெய்த் விரும்புகின்ற அளவிற்கு, செழிப்புள்ள சமூகம் உற்பத்தியின் கொடுங்கோன்மையை ஒழிக்க வேண்டுமெனில், உலகின் ஏனைய பகுதிகள் அனைத்தும் பொருளாதாரச் செழிப்பினைப் பெறவில்லை எனினும், குறைந்த பட்சம் அத்தியாவசியத் தேவைகளையேனும் பெற்றுப் பொருளாதாரத் தெவிட்டுதல் அடையும் முறையில், செழிப்புள்ள சமூகம் அமித உற்பத்தியினைப் பயன்படுத்துதலே சாலச் சிறந்ததாகும். செழிப்புள்ள சமூகத்தில் நிலவும் தவிர்க்க முடியாத மனப்பான்மை மாற்றம்பற்றிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்குத் தயாராகும் வகையிலும், கால்பிரெய்த் குறிப்பிடுகின்ற மரபுவழி அறிவினைக் கைவிடும் வகையிலும் இத்தகைய செழிப்புள்ள சமூகங்களின் தேசியப் பொருளாதாரத் திட்டங்களின் ஒன்றிய பகுதியாக உலகப் பொருளாதார வளர்ச்சியினைச் சேர்த்தல் பயனுடைத்தே. ஏனெனில், பொருளாதார ரீதியாக ஏனையோருக்குப் பயனுடையவராக இருத்தல் நியாயமானதே என்று நினைக்கத் தொடங்கினால், தனக்கு நியாயமானது என்று கருதுவது நின்றுவிட்டது என்று ஒருவர் உணரலாம். ஆகவே, பொருளாதாரப் பிரச்சினையில் முக்கியத்துவம் இரண்டாந்தர நிலைக்குக் கீழிறங்கிவிடும். மனித இனம், மனம்பற்றிய விஷயங்களிலும் ஆத்மீகத் துறையிலும் ஈடுபாடு கொள்ளும்; அழகுணர்விலும் சமூகப் பிரச்சினைகளிலும் ஈடுபாடு கொள்ளும்; துணிகர வாழ்வினை மேற்கொள்ளும்; முடிவிலாக் கண்டுபிடிப்பினை மேற்கொள்ளும். தமது பேரப் பிள்ளைகளுக்குரிய பொருளாதாரத்தில் கீன்ஸ் இக் காட்சியினையே கண்டார். அதேபோல, தனது வர்க்கமற்ற சமூகத்தில் மார்க்ஸ் இக் காட்சியினையே கண்டார். செழிப்பு நெருங்கி வந்துற்றபொழுது, மக்களிடத்திலும் சமூகங்களிடத்திலும் இதே காட்சி உருவாகுதலைப் பண்டைய பாரதத்தின் மஹறிஷிகளும் தீர்க்கதரிசிகளும் எடுத்து விளக்கிக்காட்டினர். பகவத் கீதையில் அர்ச்சுனனுக்குக் கிருஷ்ணபரமாத்மா எடுத்தோதிய அறக்கோட்பாட்டுத் தொகுப்பினைவிடச் சிறந்த ஒன்றினைப் பொருளாதார யுத்தோப்பியாவினை அடையும் மனித இனத்திற்கு யாரே வழங்கவல்லார்!

நீ எதனைச் செய்தாலும்,
எதனைப் புசித்தாலும்,
எதனைத் தியாகம் செய்தாலும்,
எதனை வழங்கினாலும்,
எந்த நோன்பினை மேற்கொண்டாலும்,

ஏ! குந்தி தேவியின் திருக்குமாரனே!
நீ எனக்கே வழங்குதல்போல்,
உனது கடன்களை நிறைவேற்று.'

மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அனைத்தும் தொண்டு களாக மலரும். வேலை என்பது அன்புடைமையைச் சாரும். திறமைக்கேற்ப ஒவ்வொருவரும் வழங்குதலிலிருந்து தேவைக் கேற்ப ஒவ்வொருவருக்கும் அளித்தல் என்ற கோட்பாடு சமூகத்தை ஆளும் வளர்ச்சியானது, மனித இனத்தின் ஆட்சியில், உற்பத்தி சக்திகளாகப் பொருளாதார ஆற்றலை வழங்கியிருத்தலை நாம் நன்கு பயன்படுத்தினால், பொருளாதார யுத்தோப்பியா உண்மை யுத்தோப்பியாவாக நிச்சயம் மாறும்.

கலைச்சொல் அகராதி

(ஆங்கிலம்—தமிழ்)

A

Acceleration principle — வேகவளர்ச்சிக் கோட்பாடு
Advanced economies — முன்னேறிய பொருளாதாரங்கள்
Agencies — ஏஜென்சிகள்
Aggregate demand price — மொத்தத் தேவை விலை
Aggregate supply price — மொத்த அளிப்பு விலை
Allocation — ஒதுக்கீடு
Analytical conception of economics — பொருளாதாரத்தினைப் பகுத்துணரும் கருத்து
Apparatus of thought — சிந்தனைக் கருவித் தொகுதி
Art element in work — வேலையின் கலையார்வக் கூறு
Aspect — கூறு, அம்சம்
Assumption — எடுகோள்
Attitude — மனப்பான்மை

B

Bottlenecks — நெருக்கடிகள்
Bounties — அரசாங்கக் கொடைகள்
Budgetary deficits — பட்ஜெட்டின் பற்றாக்குறைகள்
Built-in-tendency — உள்ளீடான போக்கு

C

Capital equipment — மூலதன உபகரணம்
Capital formation — முதலாக்கம்
Capital goods — முதற்பொருள்கள்
Charter — சாசனம்
Character-forming element in work — வேலையின் ஒழுக்கம்பேணும் கூறு
Cheap money — மலிவுப் பணமுறை
Chivalry — அருளாண்மை

Classical theory of economics	—	தொன்மைப் பொருளாதாரக் கோட்பாடு
Classificatory conception of economics	—	பொருளாதாரத்தினை வகைப் படுத்திப் பிரிக்கும் கருத்து
Coldwar	—	கெடுபிடிப்போர்
Collectivists	—	சமூகக் கூட்டுறவு உடைமையினர்
Commodities	—	பண்டங்கள்
Comparability	—	ஒப்புமை
Comparison	—	ஒப்பிடுதல்
Complementary resources	—	நிறைவுசெய் வளங்கள்
Composition	—	கூட்டமைவு
Computation	—	கணிப்பு
Conjuncture	—	சூழ்நிலை இணைவு
Content	—	உட்கிடை
Context	—	சூழமைவு
Core	—	கருவுள்
Cost inflation	—	செலவுவழிப் பணவீக்கம்
Created money	—	சிருட்டிக்கப்பெற்ற பணம்
Creative instinct	—	படைப்புத்திறன்சார் உள்ளார்ந்த உந்துணர்வு
Criteria	—	ஆய்வுமுறைகள்
Curve	—	வளைகோடு ; கோடு
Cyclical unemployment	—	வாணிகச் சுழல்சார் வேலையின்மை

D

Deductions	—	கழிப்புகள்
Deficiency diseases	—	பற்றுக்குறை நோய்கள்
Deficit financing	—	பற்றுக்குறை நிதியாக்கம்
Demonstration effect	—	செயல்விளக்க விளைவு
Dependent variable	—	சார்புமாறி
Development-employment curve	—	வளர்ச்சி-வேலை வளைகோடு
Diagram	—	வரைபடம்
Dialectic process	—	முரண்நிலை ஆய்வுப் படிமுறை
Dignity	—	கௌரவம்
Dignity and pride element in work	—	வேலையின் கௌரவமும் பெருமையும் நிறைந்த கூறு
Disguised unemployment	—	உருமறைந்த வேலையின்மை
Duration	—	காலநீட்சி ; காலவரையறை

E

Economic activity — பொருளாதார நடவடிக்கை
Economic and Employment Commission — பொருளாதார-வேலைக் கமிஷன்
Economic policy — பொருளாதாரக் கைக்கோள்
Economic and Social Council — பொருளாதார-சமூக கவுன்சில்
Economic theorists — பொருளாதாரக் கருத்தியலார்
Economist — பொருளாதார நிபுணன்; பொருளாதாரி
Element — கூறு
Employment-disutility curve — வேலை - பயன்பாட்டின்மைக் கோடு
Ends — இலட்சியங்கள்
Entrepreneur — தொழில்முயல்வோர்
Equilibrium — சமநிலை
Equity investments — ஈக்விட்டி முதலீடுகள்
Establishment — தொழிற்கூடம்
Estimation — மதிப்பீடு
Excess capacity — எச்ச வல்லமை
Existing capacity — நிலவும் வல்லமை
Expenditure — செலவு

F

Factor — காரணக்கூறு
Factory — தொழிற்சாலை
Fees — கட்டணங்கள்
Financial intermediaries — நிதிசார்ந்த இடையீட்டாளர்கள்
Financing — நிதியை உருவாக்கல்
Finished goods — முற்றுப்பெற்ற பொருள்கள்
Firm — நிறுவனம்
Fluctuations — ஏற்ற இறக்கங்கள்
Frictional unemployment — பிறழ்ச்சிக் காரண வேலையின்மை
Full employment — வேலை நிறைவு
Furniture — தட்டுமுட்டுச் சாமான்கள்

G

General Assembly — பொதுச் சபை
Generalisations — பொதுமைகள்

General level of prices — பொது விலை மட்டம்
Grants-in-aid — உதவி மான்யங்கள்
Grossness — மொத்தத் தன்மை

H

Hold the price line — விலையேற்றக் கோட்டினைத் தடுத்து நிறுத்தல்
Household enterprises — இல்லத் தொழில்கள்
Hours of labour — வேலை நேரங்கள்
Human element — மனித அம்சம்
Human personality — மனித ஆளுமை
Hypothesis — கருதுகோள்

I

Identity — முற்றொருமை
In any case — எது எவ்வாறாயினும்
Income — வருமானம்
Increment — அதிகரிப்பு விகிதம்
Independent variable — இயல்பு மாறி
Inflationary potential — பணவீக்க உள்ளார்ந்த ஆற்றல்
Inflationary spiral — பணவீக்கச் சுழலேறி
Initiative — முனைப்பு ; முந்தும் துணிவு
Input — உள்ளிடுகை
Item — இனம் ; உருப்படி
International Development Authority — பன்னாட்டு வளர்ச்சியமைப்பு
International Finance Corporation — பன்னாட்டு நிதிக் கார்ப்பரேஷன்
Inventories — கண்டுபிடிப்புகள்
Inventors — புத்தமைப்பாளர்கள்
Investment — முதலீடு
Investment outlay — முதலீட்டுச் செலவு
Invisible hand — புலனாகாத கை
Involuntary unemployment — கட்டாய வேலையின்மை

L

Labour-intensive projects — தொழிலாளர் செறிவுள்ள திட்டங்கள்
Laissez-faire — தலையிடாமை
Level — மட்டம்
Liberal arts — பரந்த கலைகள்
Loan finance — கடன் நிதி

Location — இட அமைவு
Location of industry — தொழிலின் தலநிலைப்பாடு

M

Macro-aspect — மேக்ரோ கூறு ; தொகுதிக்கூறு
Macro-economics — மேக்ரோ பொருளாதாரம் ; தொகுதிப் பொருளாதாரம்
Man-hours — உழைப்பு மணிகள்
Manpower planning — மனிதவாற்றலைத் திட்டமிடுதல்
Man-years — ஆள் ஆண்டுகள்
Malnutrition — சத்துக் குறைவான உணவு ஊட்டம்
Marginal disutility of employment — வேலையின் இறுதிநிலைப் பயன்பாட்டின்மை
Marginal propensity to consume — இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம்
Materiality — சடப்பொருண்மை
Material need — சடப்பொருள்சார் தேவை
Material welfare — சடப்பொருள்சார் நலன்
Means — சாதனங்கள் ; வழிமுறைகள்
Micro-aspect — மைக்ரோ கூறு ; பகுதிக் கூறு
Micro-economics — பகுதிப் பொருளாதாரம்
Model — மாதிரியம்
Multiplier — பெருக்கி

N

National bundles of commodities and services — பண்டங்கள், பணிகள்பற்றிய தேசியத் தொகுப்புகள்
National dividend — நாட்டு ஆக்கத்தொகை
National food reserve — தேச உணவு இருப்பு
National income — நாட்டு வருமானம் ; தேசிய வருமானம்
Negative — எதிர்மறையான
Net addition — நிகரச் சேர்ப்பு
Netness — நிகரத்தன்மை
Net quantities — நிகரக் கணியங்கள்
Non-monetary income — பணச்சார்பற்ற வருமானம்
Non-self-governing and trustterritories — சுயாட்சியற்ற ; பொறுப்பாட்சிக் குழு சார்ந்த பிரதேசங்கள்
Nuclear reactors — அணு எதிரியக்கிகள்

O

Optimum use — உத்தமப் பயன்பாடு
Optimal society — உத்தம சமூகம்
Order of preference — விருப்ப தராதரங்கள்
Ordinary business of life — வாழ்க்கையின் அன்றாட சாதாரண அலுவல்கள்
Orthodox projects — மரபுவழாத் திட்டங்கள்
Outlay — செலவீடு
Over estimation — மிகை மதிப்பீடு
Overheads, economic — பொருளாதாரப் பொதுச் செலவுகள்
Overheads, social — சமூகப் பொதுச் செலவுகள்
Overtime work — மிகைநேர வேலை

P

Partners in progress — முன்னேற்றத்தில் கூட்டாளிகள்
Patent — உரிமைக்காப்பு
Payments — செலுத்துகைகள்
Payments in kind — பண்டங்களில் தரும் செலுத்துகைகள்
Performance — செயல் நிறைவேற்றம்
Personality-killing element in work — வேலையில் ஆளுமையை அழிக்கும் கூறு
Personal interest — தன்னார்ந்த ஊக்கம்
Physical conditions — நிலவியல் சூழ்நிலைகள்
Physical science — பருப்பொருள் சார்ந்த அறிவியல்
Piece wages — வேலையளவுக் கூலிகள்
Point Four Programme — பாயின்ட் நான்கு திட்டம்
Policy — கைக்கோள்
Positive — நேரிடையான
Postulate — முற்கோள்
Prejudices — முற்சாய்வுகள்
Price behaviour — விலை இயங்கும் முறை; விலைப் போக்கு
Price margins — விலை இறுதி நிலைகள்
Price mechanism — விலை மெக்கானிசம்
Price policy — விலைக் கைக்கோள்
Price stability — விலை நிலைபேறு
Price support — விலை ஆதரிப்புக் கொள்கை

Pride — பெருமை
Primitive accumulation — பூர்வீகக் குவிப்பு
Priorities — முந்துரிமைகள்
Private marginal net product தனித்த இறுதிநிலை நிகர உற்பத்தி
Propensity to consume — நுகர்ச்சி நாட்டம்
Public expenditure — அரசாங்கப் பொதுச் செலவு
P. L. 480 — பி.எல். 480 திட்டம்
Public Revenue — அரசாங்கப் பொது வருவாய்
Public utilities — பொதுப் பயன்பாட்டுத் துறைகள்

Q

Qualification — வரையறை ; விலக்கு
Quotas — கிடைப்புப் பங்குகள்

R

Rate of exchange — மாற்றுவீதம்
Rationale — அடிப்படை நியாயம்
Rationalise — தொழில் சீரமைப்பில் ஈடுபடுத்து
Rationalisation — தொழில் சீரமைப்பு
Ratio of exchange — மாற்று விகிதம்
Real National Income — நாட்டு உண்மை வருமானம் ; தேசிய உண்மை வருமானம்
Recommendations — பரிந்துரைகள் ; சிபாரிசுகள்
Re-distributive taxation — வரிவிதிப்பில் மறுபகிர்வு
Resources — மூலவளங்கள்

S

Saving — சேமிப்பு
Scarcity — பற்றாக்குறை ; கிராக்கி
Seasonal unemployment — பருவகால வேலையின்மை
Secretariat — செகரடேரியட் ; தலைமை அலுவலகம்
Self-consumption — தன் துய்ப்பு
Self-employees — சுயமுயற்சித் தொழிலாளிகள்
Self-expression — தன் வெளிப்பாடு
Self-fulfilment — தன் நிறைவேற்றம்
Self-liquidating projects — தன் கரைப்புத் திட்டங்கள் ; தனக்காகும் செலவினைத் தன் உற்பத்திமூலம் கரைக்கும் திட்டங்கள்

Services — சேவைகள்; பணிகள்
Sinking fund — கரைப்பு நிதி
Skill — நுட்பத்திறன்
Social marginal net production — சமூக இறுதிநிலை நிகர உற்பத்தி
Stage — கட்டம்
Sub-commission — துணைக் கமிஷன்
Subsidies — உதவிக் கொடைகள்
Subsistence income — பிழைப்பு வருமானம்
Substitution — பதிலி
Surplus disposal — உபரி உணவு வழங்கல்; உபரியினை வழங்குதல்
Surplus value — எச்ச மதிப்பு
Sweated industries — கடின உழைப்புத் தொழில்கள்

T

Take off stage — பொருளாதார விடுபடு கட்டம்
Tariffs — சுங்க வரிகள்
Technical Assistance Board — தொழில் நுட்ப உதவிக் குழு
Technical knowledge — நுட்பத் தொழில் அறிவு
Technique — நுட்ப வினைமுறை
Technological unemployment நுட்பத் தொழில்சார் வேலையின்மை
Theory of Economic Dynamics பொருளாதார டைனமிக்கின் கோட்பாடு
Time lag — காலப் பின்னீடு

U

Under-developed economy — வளர்ச்சி குறைந்த பொருளாதாரம்
Under-employment — வேலைக் குறைவு
Under-nutrition — ஊட்டக் குறைவு
Uniqueness — தனித்தன்மை
Unit cost in terms of money — ஓர் அலகுப் பணச் செலவு
United Nations Economic Development Administration ஐ.நா. சபையின் பொருளாதார வளர்ச்சிபற்றிய நிருவாக அமைப்பு
Unpaid services — பணம் பெறாத பணிகள்
Utopia — யுத்தோப்பியா; யுட்டோப்பியா

V

Valuation — மதிப்பீடு
Value — மதிப்பு
Variable — மாறி
Variety — நானாவித வகையருக்கள்
Volume — பருமம்
Voluntary unemployment — தன்னிச்சை வேலையின்மை
Voting stock — வாக்குரிமையுள்ள பங்கு

W

Wage units — கூலி அலகுகள்
Wants in the abstract — புலனாகாத விருப்பங்கள்
War finance — போர் நிதியம்
Well-off — நன்னிலை
Window display — சாளரக் காட்சி
Working capital — நடைமுதல்; நடைமுறை மூலதனம்
Worse-off — தீய நிலை

பொருட்குறிப்பு அகரவரிசை

தே

தொ

தோ

ந

நி

தமிழ் வெளியீட்டுக் கழகம்

சென்னை-9

1966 வரை வெளியிட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

*1.	பொருளாதாரம்-II	சி. வேலாயுதம்	9—00
2.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	திருமதி ஆர். தாமரஜாட்சி	12—00
3.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்-I	தி. சி. மோகன்	12—00
4.	,, II	எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன்	10—75
5.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	க. முத்தையன்	7—00
*6.	பணவியலும் பாங்கியலும்-II	சி. வேலாயுதம்	11—50
7.	நவீன பாங்கு இயல்	க. வெற்றிவேல்	7—50
*8.	இந்தியச் செலாவணியும் பாங்குமுறையும்	பி. வி. ஸ்ரீநிவாசன்	5—50
*9.	அரசாங்க நிதி இயல்	அர. சேஷாசலம்	4—75
10.	இந்தியப் பொருளியல்-I	எம். பாலசுப்பிரமணியன்	10—00
11.	,, II	எம். லூர்துநாதன்	4—25
12.	நமது பொருளாதாரப் பிரச்சினை-1	சி. சுந்தரராஜன்	10—75
13.	,, II	எஸ். குழந்தைநாதன்	10—50
14.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு-I	கி. சீ. இராமசாமி	6—00
15.	,, II	,,	6—00
16.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி	தி. சி. மோகன்	5—00
17.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு–I	மு. க. சுப்பிரமணியம்	11—00
18.	,, II	பி. வி. ஸ்ரீநிவாசன்	6—00
19.	,, III	,,	6—50

*மூல நூல் (Original Book)

20.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்-I	மா. குமாரசாமி	10—00
21.	,, II	அர. சேஷாசலம்	9—50
22.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி-I	தே. வேலப்பன்	10—00
23.	,, II	ஜி. சிதம்பரம்	8—00
24.	பணம்—சிறு விளக்கம்	கோ. இராதாகிருஷ்ணன்	10—00
*25.	வணிக இயலின் தத்துவங்கள்	கு. ஆளுடைய பிள்ளை	9—50
26.	பத்தொன்பதாம் நூற்றுண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில் வாணிபப் புரட்சி	சூ. ரா. கறுப்பண்ணன்	11—00
27.	பென்ஹாம் பொருளாதாரம்–I	ஏ. குழந்தை	11—00
28.	,, II	எஸ். குழந்தைநாதன்	7—00
*29.	வரவுசெலவுத் திட்டம்	ஆர். ரங்காச்சாரி	6—00

வரலாறு

*30.	பிரிட்டன் வரலாறு–I	கி. ர. அனுமந்தன்	10—00
*31.	,, II	,,	9—75
*32.	ஐரோப்பிய வரலாறு–I	டி. வி. சொக்கப்பா	4—50
33.	ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றுண்டு காலச் சரித்திரம்	வை. விருத்தகிரீசன்	15—00
34.	இங்கிலாந்து வரலாறு–I	இரா. அண்ணுமலை	13—00
35.	,, II	பா. மாணிக்கவேலு	13—00
36.	,, III	என். ஜே. ராஜகோபால்	8—00
37.	,, IV	,,	8—00
38.	இங்கிலாந்தின் வரலாறு–I	க. த. திருநாவுக்கரசு	15—00
39.	,, II	எம். எக்ஸ். மிராண்டா	8—00
40.	,, III	,,	5—00
41.	இந்தியாவின் சிறப்பு வரலாறு–I	தி. வெ. குப்புசாமி	7—50
42.	,, II	ஏ. உஸ்மான் ஷெரீப்	9—00
43.	,, III	அ. பாண்டுரங்கன்	11—00

44.	கிரேக்க நாட்டு வரலாறு–I	சைமன் ஐ. எஸ். பாக்கியநாதன்	7—50
45.	,, II	,,	7—00
46.	,, III	பி. இராமானுஜம் தேவதாஸ்	7—75

அரசியல்

*47.	இந்திய அரசியலமைப்பு	வீ. கண்ணையா	4—75
48.	அரசியலுக்கு ஓர் அறிமுகம்	டி. செல்லப்பா	8—50
49.	தற்கால அரசியல் அமைப்புகள்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	8—50
50.	பன்னாட்டு அரசியல்–I	திருமதி நூர்ஜஹான் பாவா	16—00
51.	பொதுத்துறை ஆட்சி இயல்–I	வீ. கண்ணையா	9—00
52.	,, II	அ. ஜெகதீசன்	7—25
53.	பொதுத்துறை ஆட்சியியலுக்கு ஓர் அறிமுகம்-I	வீ. கண்ணையா	7—50
54.	,, II	டி. செல்லப்பா	7—50

உளவியல்

55.	குழந்தை உளவியல்-I	கி. ர. அப்புள்ளாச்சாரி	8—00
56.	,, II	,,	7—00
57.	உட்கவர் மனம்	சி. ந. வைத்தீஸ்வரன்	7—00
58.	இளையோர் உளவியல்–I	தி. இரா. அரங்கராசன்	12—00
59.	,, II	,,	9—00
60.	சமூக உளவியல்	என். வேதமணி மானுவேல்	9—25
61.	பிறழ்நிலை உளவியல்	அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ்	11—00
62.	பித்தரின் உள்ளம்	,,	3—00
*63.	குமர உள்ளம்	டாக்டர் மு. அறம்	6—25

*மூலநூல் (Original Book)

தத்துவம்

64.	இந்து சமயத் தத்துவம் ...	... ஞா. ராஜாபகதூர்	...	5—50
*65.	அறிவு ஆராய்ச்சி இயல் ...	... ஆர். இராமானுஜாச்சாரி	...	3—50
*66.	மேலைநாட்டுத் தத்துவம் ...	... ஆர். எஸ். தேசிகன்	...	3—50
67.	அத்துவித தத்துவம் ...	... கோ. மோ. காந்தி	...	6—50
68.	ஆங்கிலேயப் பயன்வழிக் கொள்கையினர்...	மோ. வள்ளுவன் கிளாரன்சு	...	5—50
69.	இந்தியத் தத்துவம் ...	... வ. அ. தேவசேனபதி, பா. நா. சண்முகசுந்தரம்	...	3—50

அறவியல்

70.	அறவியல்—ஓர் அறிமுகம் ...	... கோ. மோ. காந்தி	...	8—50

அளவையியல்

71.	அளவை இயல்—தொடக்க நூல்	... கி. ர. அப்புள்ளாச்சாரி	...	2—50

மானிடவியல்

*72.	மானிடவியல் ...	... ம. சு. கோபாலகிருஷ்ணன்	...	4—75
73.	பண்பாட்டுக் கோலங்கள் ...	... கி. பூ. சுப்பிரமணியன்	...	5—50
74.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை	... எஸ். இலட்சுமி	...	3—50

சமூகவியல்

75.	சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	ஜெ. நாராயணன்	...	10—00

புவியியல்

76.	ஆசியா–I ...	... கொ. சேஷ. நரசிம்மன்	...	9—50
77.	,, II ...	... ,,	...	8—75
78.	ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	... ஏ. எஸ். நாராயணன்	...	8—50
*79.	தென்கிழக்கு ஆசியா ...	... ஜி. கிருஷ்ணமூர்த்தி	...	8—50
*80.	வட அமெரிக்கா ...	... குமாரி இரா. அலமேலு	...	8—25

*81.	தென் அமெரிக்கா	எம். என். பத்மநாபன்	9—00
*82.	தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா	திருமதி எச். நியூமன்	4—00
*83.	,, —ஆப்பிரிக்கா	எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர்	3—25
*84.	புவிப்புறவியல்-II	நா. அனந்தபத்மநாபன்	6—00
*85.	செய்முறைப் புவியியல்	சு. ஜெயச்சந்திரன்	9—00
*86.	மக்கட் பரப்பியல்	வி. எஸ். அனந்தபத்மநாபன்	6—25
*87.	சமுத்திரவியல்	கோ. இராமசாமி	6—50
88.	காலநிலை இயல்-I	கொ. சேஷ. நரசிம்மன்	10—00
89.	,, II	,,	5—00
90.	வளியியலுக்கு ஓர் அறிமுகம்	கோ. இராமசாமி	11—00
*91.	புவி அமைப்பு இயல்	சி. விசுவநாதன்	4—75

புள்ளியியல்

*92.	புள்ளியியல்—அறிமுகம்	சு. வைத்தியநாதன்	10—00
93.	புள்ளியியல் முறைகள்-I	கோ. சண்முகசுந்தரம்	10—00
94.	,, II	கே. ஆர். இராஜகோபாலன்	14—00
95.	நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	தி. வி. லட்சுமிநரசிம்மன்	6—50

உயர் கணிதம்

*96.	ஆயத்தொலை வடிவகணிதம்	டி. கே. மாணிக்கவாசகம் பிள்ளை	12—50
*97.	வகை நுண்கணிதம்	,,	8—00
*98.	தொகை நுண்கணிதம்	தி. கோவிந்தராசன்	9—00

விலங்கியல்

*99.	விலங்கியல்	பெ. மா. அண்ணாமலை, இரா. முருகேசன்	12—00

பௌதிகவியல்

100.	ஒளி நூல்	ச. சம்பத்து	10—00

* மூல நூல் (Original Book)

விஞ்ஞானம்

*101.	வானவெளி வெற்றி ...	... டாக்டர் எம். ஏ. தங்கராஜ் ...	6—00
*102.	ரேடியோ ...	... ,, பி. திருஞானசம்பந்தம் ...	4—75
*103.	எக்ஸ்-கதிர்கள் ...	... பெ. நா. அப்புசாமி, ஜே. பி. மாணிக்கம்	4—50
104.	பாம்புகள் ...	... பெ. மா. அண்ணுமலை ...	3—50
105.	தாவரம்—வாழ்வும் வரலாறும்	... டாக்டர் கு. சீனுவாசன் ...	8—00
*106.	கரும்பு ...	... கு. பெரியசாமி ...	4—00

மருத்துவம்

*107.	நீரிழிவு-க்ஷயரோகம் ...	... டாக்டர் ஜி. வேங்கடசாமி, டாக்டர் ஏ. கதிரேசன் ...	2—50
108.	மகப்பேறும் மாதர் நோயும்	... டாக்டர் (குமாரி) மணிமேகலை ...	8—25
*109.	பாக்டீரியா ...	... சு. சுந்தரம் ...	2—50

பொறியியல்

110.	நீங்களே வீட்டைக் கட்டலாம்	... கே. வி. கிருஷ்ணராஜ், சி. ஆர். சுப்பிரமணியம், ஆர். இராமசாமி, கே. வேணுகோபால் ...	8—50

சட்டம்

*111.	குற்றவியல் சட்டம் ...	... எம். சண்முகசுப்பிரமணியம் ...	10—00

பொது நூல்கள்

112.	மகாத்மா காந்தி ...	... சரஸ்வதி தங்கையன் ...	3—25
113.	விவசாயப் புரட்சி ...	... வி. கார்த்திகேயன் ...	8—00
114.	சேமக் கை-நூல் ...	... ஆ. சுப்பிரமணியம் ...	2—50
*115.	முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்	... எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ...	9—00
*116.	உணவும் ஊட்டமும் ...	... தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார் ...	4—50

* மூல நூல் (Original Book)